நமது தமிழ்நாடு

இராமநாதபுரம்

மாவட்டம்



'சோமலெ'

நமது தமிழ்நாடு வரிசை - 9

இராமநாதபுர மாவட்டம்

"சோமலெ"

பாரி நிலையம்
59, பிராட்வே - சென்னை-1.

முதற் பதிப்பு—மே, 1972
உரிமை ஆசிரியர்க்கே.

விலை ரூ. 12.

படையல்

25 ஆண்டுகள் 'குமரன்' என்னும் சிறந்த
வார இதழை நடத்தியவர்களும் என்பால்
பேரன்பு கொண்டவர்களுமான

சொ. முருகப்பா
(1893 – 1956)

அவர்களுக்கு இந்நூலைப் படைக்கிறேன்.

'சோமலெ'

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை–14.

இராமநாத சகாயம்

S. Ramanatha Sethupathy,

RAJAH OF RAMNAD.

HEREDITARY TRUSTEE AND CHAIRMAN
RAMESWARAM DEVASTHANAM AND
HEREDITARY TRUSTEE RAMNAD SAMASTHANAM
DEVASTHANAMS AND CHATRAMS.

சிறப்புரை

உலகஞ்சுற்றிய தமிழன் என்ற ஊன்றிய புகழுடையவரும், தண்டமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரும், அரும் பெரும் நூல்கள் பல படைத்த அறிவுச் செல்வரும் ஆகிய எனது அன்பிற்குரிய நண்பர், 'சோமலெ' அவர்கள், தங்கத் தமிழ்நாட்டின் தனிச்சிறப்புக்களையெல்லாம், மாவட்டம் வாரியாக, சகலவிதமான புள்ளி விவரங்களோடும், நேரில் சென்று கண்டறிந்த வரலாற்று உண்மைகளோடும், எளிய நடையில் எல்லோரும் படித்து இன்புறத்தக்க வகையில் எழுதியுள்ள மாவட்ட நூல் வெளியீட்டு முயற்சியை மனதாரப் பாராட்டுகிறேன். அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டில் எங்கள் மாவட்டமாய் விளங்குகிற இராமநாதபுரம் மாவட்ட நூல், எல்லா வகையிலும் சிறப்புடையதாக அமைந்துள்ளது. ஆசிரியரின் சொந்த மாவட்டமாகவும் இருப்பதால், சமீப காலம் வரை வெளிவராத பல வரலாற்றுண்மைகளையெல்லாம் அவர்கள் சேகரித்து எழுத முடிந்தது போலும்!

இராமநாதபுரம் சீமை என்றும் சேது நாடு என்றும் பேசப் பெறும் இம்மாவட்டம், இராமாயண காலத்திலிருந்தே தமிழும் சமயமும் வளர்த்த தார்வேந்தர் சேதுபதி மரபினரின் ஆட்சியால், பல முன்னேற்றங்களைக் கண்ட நாடு. சேதுபதி மரபில் தோன்றிய நானே இன்றுவரை அறிந்திராத பல வரலாற்றுண்மைகளை, ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியது. பாரத நாட்டில், உலகமெங்கும் புகழ்பெற்ற ஒரு மாவட்டம் உண்டெனில், அது நமது முகவை மாவட்டமே யாகும். இராமநாதபுரம் என்ற சொல்லுக்கு, வீரமறவர் "படைவீடு" என்ற விளக்கம் புதுமையும் சிந்தனையும்

பொருளாழமும் உள்ளது. இம்மாவட்டம் தொன்மையான வரலாற்றுப் பெருமை உடையது என்பதை ஆசிரியர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். என்னே அவரது ஆராய்ச்சித் திறன்!

வட்டம் வாரியாக, ஒவ்வொன்றின் பூகோள நிலை, வரலாற்றுப் புகழ், இயற்கை வளங்கள், சமுதாய நிலை, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், கல்விச் சாலைகள், மருத்துவச் சாலைகள், ஆலயங்கள், சுற்றுலாச் சிறப்புப் பெற்ற இடங்கள் முதலியவற்றையெல்லாம் நேரில் சென்று விசாரித்தறிந்தும், ஆங்காங்கு வழங்கிவருகின்ற தொன்மை யான பாடல்களைக் கொண்டும், அரசியலார் தரும் சரியான புள்ளி விவரங்களைக் கொண்டும், பல செய்திகளைச் சேகரித்து இம்மாவட்ட நூலை வெளியிட்டுள்ளார்கள்.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவர் வீட்டிலும் இந்த நூலின் பிரதி ஒன்று அவசியம் இருத்தல் வேண்டும். ஆண், பெண், மாணவ மாணவியர் அனைவரும் இந்நூலைப் படிக்கவும் வேண்டும்; பரப்பவும் வேண்டும். தான் வாழு கின்ற மாவட்டத்தைப் பற்றித் தெரியாத நிலையில் மற்ற நாடுகளைப் பற்றித் தெரிந்துகொள்வதால் என்ன பயன்? இம்மாவட்டத்திலுள்ள கல்விச்சாலைகள் அனைத்திலும் இந்த நூலைக் கட்டாயத் துணைப் பாடமாக வைக்கக் கல்வித்துறை ஆவன செய்தால் இம்மாவட்ட மாணவர் அனைவரும் நல்ல பயனடைவர் என்பது திண்ணம். மேலும், வட்டம் வாரி யாகச் சொல்லப் பெறும் வளர்ச்சித் திட்டங்கள், நீர்ப் பாசனம், போக்கு வரத்து, தொழில் துறை முதலிய துறை களில், ஆங்காங்கு ஆசிரியரவர்கள் சில ஆக்க ரீதியான யோசனைகளையும் கூறியுள்ளார்கள். உதாரணமாக சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், பாம்பன் ரஸ்தாப் பாலம் அமைத்தல், மானாமதுரை தூத்துக்குடி இருப்புப் பாதை யமைத்தல் முதலிய யோசனைகளைச் செயல்படுத்தினால், இம் மாவட்டத்தின் பின் தங்கிய பகுதிகள் எல்லாம் வளமான முன்னேற்றமடையும் என்பது உறுதி.

இந்நூல், மாணவர்க்கு மட்டுமன்றி அரசியலார்க்கும் மிகவும் பயன்தரத் தக்க நூலாக அமைந்துள்ளது. இம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் யாவரும் இந்நூலைப் படித்தறிந்து அவரவர்கள் தொகுதியில் மக்கள் முன்னேற்றத்திற்கு ஆக்க ரீதியாக என்னென்ன நன்மைகள் செய்யக் கூடுமென்பதை உணர்ந்து செயல்படுவ ராயின், இம்மாவட்டம் எல்லாத் துறைகளிலும் சிறந்த முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு வட்டத்திலும் எந்தச் சிற்றூரையுங்கூட விடாமல், எல்லா ஊர்களையும் பற்றிய குறிப்பும், அவற்றின் பெயர்க் காரணமும், ஆராய்ச்சியறிவால் ஆசிரியர் ஆங் காங்கே விளக்கமாகத் தந்துள்ளனர்.

நகரத்தார் பெருமக்களுள் ஒருவராகத் தோன்றிய அன்பர் 'சோமலெ' அவர்கள் தமது கூர்த்த மதியாலும், சிறந்த தமிழ்ப் புலமையாலும், விரிந்த சுற்றுப்பிரயாண அநுபவத்தாலும், தமிழ்த் தாய்க்குச் செய்துள்ள அரும்பெரும் தொண்டுகளுள், தமது சொந்த மாவட்ட நூலையும் பல வகைச் சிறப்புக்களுடன் வெளியிட்டமை குறித்து, எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழ்நாடு பயன்பெறும் வகையில், இன்னும் பல நூல்களை ஆக்கித்தர எங்கள் குல தெய்வமாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.

மாவட்ட மக்கள் இந்நூல் மலரை நுகர்ந்து மணம் பெறுவராக!

இங்ஙனம்

S. இராமநாத சேதுபதி
பர்வத வர்த்தினிதாசன்
இராமநாதபுரம் மன்னர்

இராமநாதபுரம்,
22-4-'972.

முன்னுரை

தமிழ்நாடு மாவட்ட வரிசை நூல்களை யான் 1958இல் எழுதத் தொடங்கினேன். 1964வரை எட்டு மாவட்டங் களைப்பற்றி நூல்கள் வெளிவந்தன. பின்னர் மாவட்டங்களைத் திருத்தியமைப்பதாக அரசினர் அடிக்கடி கூறினர். அவ்வாறு அவர்கள் அமைக்கட்டும் என்று பொறுத்தேன். அலை நிற்பது எப்போது? நீச்சுப் பழகுவது எப்போது? என்பதே என் நிலை.

பயணஞ்செய்தும் நூல்களைப்படித்தும் முதிர்ந்த வயதின ரான பெருமக்களிடம் பேசியும் தமிழ் நாடெங்கும் சுற்றிய தால் உற்று நோக்கியும் ஒப்பிட்டுப் பார்த்தும் யான் குறித்து வைத்தவை பல துளி பெரு வெள்ளமாகப் பெருகின. இவ்வாறு தொகுந்துக் கொண்டே போனால் காகித மூட்டை கள் குப்பைத் தொட்டிக்கே உதவும் என்ற எண்ணமும் இடை யிடையே ஏற்பட்டது. எலிக்கும் பாச்சைக்கும் அவை இரை யாகும் நிலையை அடைந்துவிட்டன. என்னைத் தவிர யாருக் கும் அக்குறிப்புக்கள் புரியா! பல்வகையான பல அளவான தாள்கள்,வேறுபட்ட எழுதுகோல்கள், பறக்கும் பயணங்களில் கிறுக்கியன, பகலுணவுக்கு ஊடேயும் நள்ளிரவில் தூக்கத் துக்கு இடையேயும் குறிப்பாக எழுதிவைத்த மலர்களை யானே மாலையாகத் தொடுக்க முடியும்!

சில வட்டங்களைப் பற்றிச் செய்திகள் குறைவாக இருக்க லாம். கிடைத்த விவரங்களை வெளியிட்டிருக்கிறேன்.

நூலின் பல இடங்களில் ஆங்கிலச் சொற்களையும், தமிழ் நாட்டுக்குப் புறம்பானவை எனத் தவறாகக் கருதப்படும் ஸ, ஹ, ஷ போன்ற எழுத்துக்களையும் பயன்படுத்தியுள்ளேன். கருத்துக்களைத் தெரிவிப்பதும் படிப்பவர்களுக்கு எளிதில் புரிய வைப்பதுமே என் குறிக்கோள்.

பல செய்திகளை எனக்குக் கூறிய நண்பர்கள், புலவர்கள். அறிஞர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள் ஆகியோருக்கு என் வணக்கம் உரியது. அவர்களுடைய அக்கறையும்

ஒத்துழைப்பும் இன்றேல் இவ்வளவு விவரங்களைப் பலரும் அறிய வாய்ப்பு ஏற்பட்டிராது.

தமிழ் நூல்களின் விற்பனை மங்கியிருக்கும் இந்நாளில் விரிவான பெரிய நூலை அச்சிட முன்வந்த அருமை நண்பர், பாரிநிலைய உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பன் அவர்களுடைய துணிவைப் போற்றுகிறேன். மாருதி அச்சக உரிமையாளர் திரு. விநாயகம் அவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் என்\ நன்றி. நூல் அச்சாகுங்கால் யான், அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியதாயிற்று; அப்போது அச்சு வேலையை மேற்பார்த்தவர் என் இனிய நண்பர் சண்முக நாதபட்டணம் திரு. சுப. நல்லகருப்பன் அவர்கள் ஆவார்கள். நூல் உருவாவதற்கு உதவிய ஏனைய பலருடைய உதவிகளையும் பாராட்டுகிறேன்.

80 கோவில்களையும் 200 சத்திரங்களையும் இவை தவிர 400 அற நிறுவனங்களையும் நடத்திவருகின்ற சேதுபதிகள் பரம்பரையில் உதித்து, அந்தக் குடும்பத்துக்கு மேன் மேலும் புகழும் பெருமையும் சேர்த்து வரும் இராமநாதபுரம் அரசர் எஸ். இராமநாத சேதுபதி அவர்கள் இந்நூலுக்குச் சிறப்புரை தந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்த்து என்னை இத்தொண்டில் ஊக்குவிக்கும். சேதுபதி அவர்கட்கு என் பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னரே வெளி வந்திருக்க வேண்டிய இந்நூல் இப்போதுதான் அச்சு வடிவம் பெறுகிறது. ஆவலுடன் இந்நூலை எதிர்பார்த்த வாசகர்களின் பொறுமைக்கு நன்றியன்.

"அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா"

சென்னை
தமிழ்ப்புத்தாண்டு, 1972 } 'சோமலெ'

உள்ளுறை

பகுதி-1

1.	தோற்றுவாய்	...	9
2.	வரலாறு	...	29
3.	வாழும் மக்கள்	...	49
4.	வேளாண்மை	...	53
5.	சமய நிறுவனங்கள்	...	72
6.	போக்குவரத்து	...	109
7.	வாணிகம்	...	135
8.	தொழில் வளர்ச்சி	...	138
9.	ஆட்சி முறை	...	161
10.	விடுதலை இயக்கம்	...	173
11.	தமிழ்ப் பணி	...	186
12.	கல்வி நிலை	...	211
13.	இசைக்கலை	...	135
14.	மருத்துவ வசதிகள்	...	239

பகுதி-2

ஊர்களைப் பற்றிய குறிப்புக்கள்

1.	இராமநாதபுரம் வட்டம்		...	247
2.	முதுகுளத்தூர்	,,	...	304
3.	சிவகங்கை	,,	...	314
4.	பரமக்குடி	,,	...	347
5.	திருவாடானை	,,	...	354
6.	திருப்பத்தூர்	,,	...	380
7.	சாத்தூர்	,,	...	438
8.	ஸ்ரீவில்லிபுத்தூர்	,,	...	480
9.	அருப்புக்கோட்டை	,,	...	519
	பிற்சேர்க்கை		...	536

கவியரங்கத்தில் இராமநாதபுர மாவட்டம்		537
மக்கள் தொகை	...	545
சில முக்கிய நிகழ்ச்சிகள்	...	546

பழனி
திண்டுக்கல்
கொடைக்கானல்
பெரியகுளம்
மேலூர்
மதுரை
திருமங்கலம்
திருப்புவனம்
சிவகங்கை
தேவகோட்டை
விருதுநகர்
அருப்புக்கோட்டை
முதுகுளத்தூர்
இராமநாதபுரம்
இராமேஸ்வரம்
கோவில்பட்டி
சங்கரநயினார்கோவில்
எட்டயபுரம்

இராமநாதபுர மாவட்டம்

1. தோற்றுவாய்

இராமநாதபுர மாவட்டம் இந்தியாவெங்கும் புகழ் பெற்றது. இராமநாதபுரம் சீமை என்ற பெயர் இம் மாவட்டத்தின் பெரும் பகுதிக்கு உண்டு. இராமநாத புரம் சீமையுடன் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்த இரு வட்டங்களைச் சேர்த்து இம்மாவட்டம் உண்டாக் கப்பெற்றது.

இராமநாதபுர மாவட்டத்திற்குப் பெருமை தருவன இங்குள்ள கோவில்களும் இங்கு வாழும் மக்களின் ஆற்றலும் எனலாம். இயற்கையமைப்பாலும், இராமா யண வரலாற்றாலும், இராமேசுவரம் தீவு இந்தியா வெங்கும் இந்தியாவுக்கு அப்பாலும் புகழ் பெற்றிருக் கிறது. திரை கடலோடித் திரவியம் தேடும் மக்களும் வாணிகத்தாலும் வலிமையாலும் தொன்றுதொட்டுச் சிறப்புப் பெற்றுள்ள மக்களும் இந்த மாவட்டத்திற்குப் புகழைத் தந்திருக்கின்றனர்.

'தமிழ் கண்டதோர் வைகை'யாறு கடலைமுகப்பது இந்த மாவட்டத்தில்தான். இதனால் இம்மாவட்டத்திற்கு

'முகவை மாவட்டம்' என்ற பெயரும் நிலவி வருகிறது. தமிழிலக்கியங்கள் குறிப்பிடும் ஐவகை நிலமும் உடையது இராமநாதபுர மாவட்டம். இம் மாவட்டத்தின் எண்ணற்ற பல பெருமைகளையும் தனிச் சிறப்புக்களையும் இந்த முதற் கட்டுரையில் சுட்டிக் காட்டுவோம்.

ஐவகை நிலம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தைப் பழந்தமிழர் ஐவகைப் படுத்தினர்.

குறிஞ்சி:—இம்மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலும் வடகிழக்குப் பகுதியிலும் உயர்ந்த மலைகள் உள்ளன. ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை விரிந்து பரந்து உளது. இது தமிழ் நாட்டிற்கும் கேரளத்திற்கும் எல்லையாக உளது. மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த சில குன்றுகள் அப்பகுதியில் உள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்த சதுரகிரி சுந்தர மகாலிங்கமலை இம் மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற யாத்திரைத் தலங்களுள் ஒன்றாகும். மேற்குத் தொடர்ச்சி மலை 3500 அடி (ஏறத்தாழ 1100 மீட்டர்) உயரம் வரை உளது.

திருப்பத்தூர் வட்டத்தில் பாரி வள்ளலால் புகழ் பெற்ற பரம்புமலை, பிரான் மலை என்னும் பெயருடன் விளங்குகிறது. இதன் உயரம் 2000 அடி (ஏறத்தாழ 600 மீட்டர்) அளவினது. இந்த மலையின் தொடர்ச்சி எனச் சொல்லத் தக்க வகையில் சில மைல் இடைவெளி விட்டு காஞ்சாத்து மலை, திருக்கோளக் குடி மலை, வேலங்குடிக் குன்றுகள், குன்றக்குடி மலை, குடைவறைக்

கோவில் உள்ள பிள்ளையார்பட்டி மலை ஆகியவை உள்ளன.

பறம்பு மலை, இராமநாதபுர மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் மதுரை மாவட்டத்திற்கும் எல்லையாக அமைந்திருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள ஐயனார் அருவி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நிலத்தின் இயல்பைக் குறிப்பிடும் வகையில் வற்றாயிருப்புக்கு அருகேயுள்ள திருவண்ணாமலை, குருவிப் பாறை, குன்னூர், சதுரகிரி, சிறுமலை, வழுக்குப்பாறை, தாணிப்பாறை என்னும் ஊர்களும் திருப்பத்தூர் வட்டத்தில் பிரான்மலை, அரளிப் பாறை, பூலாங் குறிச்சி, செட்டி குறிச்சி, குன்றக்குடி போன்ற ஊர்களும் இருக்கின்றன.

முல்லை :—முல்லை நிலத்திற்கு மேற்கோளாகத் திருப்பத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டங்களில் மலையோரமாகக் காடுகள் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தைச் சேர்ந்த தீவுகளிலும் காடுகள் உள்ளன. பொதுப் படையாகக் கூறுமிடத்து இம்மாவட்டத்தில் காட்டு வளம் குறைவு.

தீவுப்பகுதிகளிலும் கடலோரங்களிலும் ‘காடாரம்பம்’ எனப்படும் புதர்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளுக்குமுன் இம்மாவட்டத்தில் காடுகள் நிறைந்திருந்தன என்பது கானாடுகாத்தான், கானப்பேர் (காளையார் கோவில்) என்ற ஊர்ப் பெயர்களாலும், ‘காடு வெட்டி நாடாக்கிக் கடிய நிலந்திருத்தி’ என்ற பாடுவார் முத்தப்ப செட்டியார் பாடலாலும் தெரியவரும்.

திருவாடானை வட்டத்தில் கடலோரப் பகுதிகளில் எப்பக்கம் திரும்பினாலும் உடை மரங்கள், முட்செடிகள்,

மானின் குளம்பன்ன பிளவுகொண்ட இலையுடைக் கடலாரைக் கொடிகளையும் நரிகள் ஓடித்திரியும் காட்சி யையும் காணலாம்.

மருதம் :— இராமநாதபுர மாவட்டம் வளம் குறைந்த மாவட்டம். தமிழ் நாட்டின் இராயல சீமை யாக இது இருந்து வருகிறது. மழை மிகக் குறைவாக உள்ள இடங்களிலேயே செய்யப் படக்கூடிய தீப்பெட்டி, பட்டாசு, வெடி மருந்துத் தொழிற்சாலைகள் இம்மாவட் டத்தில் உள்ளன. காய்ந்து விளையக்கூடிய மல்லியும் மிளகாயும் இம்மாவட்டத்தின் முக்கிய விளைபொருள் களாக உள்ளன. இதனால்,

"பேய்ந்து விளைகிறது மலையாளம்சீமை
பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர் சீமை
காய்ந்து விளைகிறது இராமநாதபுரம் சீமை"

என்று நாட்டுப் பாடல் கூறுகிறது. எனினும், வற்று யிருப்பு ஒன்றியத்திலும் திருப்பத்தூர் ஒன்றியத்திலும் இராமநாதபுரம் பெரிய கண்மாய், இராஜ சிங்க மங்கலம் கண்மாய்ப் பாசனப் பகுதிகளிலும் நெல் விளைகிறது. வைகை நீர் பாய்வதாலும் மின்சார வசதியுடன் கூடிய கிணற்று நீராலும் மாவட்டமெங்கும் ஆங்காங்கே சில இடங்களில் நெல் வேளாண்மை பெருகி வருகிறது.

நெய்தல் :—தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங் களில் இராமநாதபுர மாவட்டம் பல வகைகளில் சிறப் புடையது. நீண்ட கடற்கரையும் கோவிலாலும் இலங் கைத் தொடர்பாலும் புகழ்பெற்ற இராமேசுவரம் தீவும் இம்மாவட்டத்திற்கு உரியன. மண்டபம், பாம்பன் முதலிய சிறு பட்டினங்கள் நெய்தல் நிலத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

நல்ல தண்ணீர்த் தீவு, உப்புத்தீவு, தலையாரித் தீவு, வெள்ளித்தீவு, முள்ளித்தீவு, முயல்தீவு, மண்ணளித்தீவு, குருசடைத் தீவு, பூமரிச்சான் தீவு, சிங்களத்தீவு, புல்லித் தீவு, கச்சத்தீவு ஆகிய பலசின்னஞ்சிறு தீவுகள் உள்ளன. இவையாவும் மண்டபத்திலிருந்து 100 கி.மீ. சுற்றளவுக்கு உட்பட்டவை. இத்தீவுகளில் சில இயற்கை வளத்தால் சிறப்புடையன; வேறு சில தாவர ஆராய்ச்சியால் புகழ் பெற்றவை; இன்னுஞ் சில, பவளக் கல் தொழிலால் ஏற்றம் பெற்றவை: வேறு சில கள்ளக் கடத்தலால் செழிப்பவை. இலங்கை அரசு உரிமை கொண்டாடுவதால் விளம்பரம் பெற்றிருப்பது கச்சத்தீவு.

இத்தீவுகளைப் பற்றியே தனி நூல் எழுதலாம். அம் முயற்சியில் தக்கார் யாரேனும் ஈடுபடுவாராக.

இராமநாதபுர நகர் மூன்று திக்குகளில் கடல் சூழ அமைந்து பருவ மழைக் காலத்தில் அதனுடைய நலம் தீங்குகளைப் பெறுகிறது. இவ்வட்டத்தில் தருவை என்னும் நீர் நிலைகளைக் காணலாம்.

இந்நீர் நிலையின் இயல்பு வாலாந்தருவை என்னும் ஊர்ப் பெயரிலும் நிலைத்து நிற்கிறது. தருவை என்பது தண்ணீர் தேங்கும் இடத்தைக் குறிக்கும் சொல்.

இம்மாவட்டத்தில் உள்ள இராமேசுவரம், இலங்கைக்குக் கப்பல் செல்லுவதால் ஒரு துறைமுகமாக இருந்து வருகிறது. பாம்பன், மண்டபம், தொண்டி ஆகிய சிறு துறைமுகங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

நெய்தல் நில மக்களுக்குரிய உப்புக் காய்ச்சுதல் முத்துக் குளித்தல், சங்கு எடுத்தல், மீன் பிடித்தல் ஆகிந் தொழில்கள் இராமநாதபுரம் வட்டத்தில் சிறந்து விளயு

குகின்றன. இதனால் இத்தொழில்களில் ஈடுபட்டிருப்ப வர்கள் செல்வத்தில் திளைக்கின்றனர். இப்பகுதி தூத்துக் குடித் துறைமுகத்திலிருந்து 100 கி மீ. தொலைவினதே.

ஒரு காலத்தில் இலங்கை, தமிழ்நாட்டோடு சேர்ந்த நிலப்பரப்பாக இருந்தது. பிற்காலத்தில் கடல் நீர் புகுந்து, இரு பகுதிகளாயிற்று. இதனால் இலங்கைத் தீவு உண்டாயிற்று என்பர். இலங்கைக் கரையோரத்தில் 7 கி. மீ. தொலைவுக்கு கடலின் ஆழம் ஓர் ஆள் மட்டமே இருப்பதால் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

பாலை :—இராமேசுவரம் தீவு, பாலை நிலப் பகுதி யாகும்.

> 'முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
> பாலையென்பதோர் படிவங் கொள்ளும்'

என்று சிலப்பதிகாரம் (காடு காண் காதை) கூறுமா யினும் அவை திரியாது ஏற்பட்ட பாலைவனம் உண்டு என்பதற்கு இப்பாலை ஓர் எடுத்துக் காட்டாய் அமைந் துள்ளது.

பழமைப் பெருமை

இராமநாதபுரம் சீமையின் தொன்மையும் வரலாறும் பாரிவள்ளலின் வரலாறும் மாவட்டத்திற்கே அழியாப் புகழ் தருவன.

பிள்ளையார் பட்டியும் இராமேசுவரமும் திருவுத்தர கோச மங்கையிலுள்ள மரகத நடராசர் திருவுருவமும் பல்வேறு அரசர்கள் சிற்றரசர்களின் கலையார்வத்தை யும், தமிழ் மக்களின் கலைத்திறனையும் உலகுக்கெல்லாம் உணர்த்துவன.

அமைப்புச் சிறப்பு

இராமநாதபுர மாவட்டம் மேற்கேயும் வடகிழக்கேயும் மலைகளையும், கிழக்கிலும் தென்கிழக்கிலும் வங்காளக் குடாக் கடலையும் இயற்கையான எல்லைகளாக உடையது.

இந்த மாவட்டம் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல பகுதிகளைக் கொண்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை ஓரத்திலும், விருதுநகர்ப் பகுதி மதுரை மாவட்டத்தின் எல்லையிலும் இருக்கின்றன. சாத்தூர் வட்டத்தின் ஏனைய பகுதிகள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு அண்மையில் உள்ளன. திருவாடானை, காரைக்குடிப் பகுதிகளின் சில ஊர்கள் தஞ்சை மாவட்டத் தொடர்பு மிகுதியாக கொண்டவை. திருப்பத்தூர் வட்டத்தில் பல ஊர்களுக்குத் திருச்சி மாவட்டத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். சிலைமான், திருப்பூவணம் போன்ற ஊர்களில் உள்ள மக்களின் வாழ்க்கை மதுரை மாநகருடன் ஒன்றியது. இத்தகைய பல ஊர்கள் அடங்கிய கதம்பமே இராமநாதபுர மாவட்டம்.

வடகோடியில் உள்ளவர்கள் மாவட்டத்தின் தென் பகுதிகளுக்குச் செல்ல மதுரை மாநகரின் வழியாகச் செல்லுவதே எளிதாக இருக்கிறது. வட எல்லையிலும் தென் எல்லையிலும் வாழும் மக்கள் பழக்க வழக்கம், பேச்சு, தொழில் ஆகியவற்றில் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

இம்மாவட்டத்திற்கு உரிய தலைமை அலுவலகங்கள் மதுரை மாநகரில் உள்ளன. மாவட்டத்திற்கு வெளியே அதன் தலைநகரம் இருக்கும் சிறப்பு (சிறப்பின்மை) இராமநாதபுரம் மாவட்டத்திற்கே உண்டு. இவ்வாறு

ஏற்பட்ட வரலாறும் அதன் விளைவுகளும் இந்நூலின் பிறிதொரு பகுதியில் கூறப்பெறும்.

நாடும் மொழியும்

நாட்டுணர்ச்சி இம்மாவட்டத்தில் பல்கிப் பெருகி யிருப்பது கண்கூடு. மருது பாண்டியனைப் பெற்றெடுத்தது சிவகங்கைச் சீமை. 'மானம் பொழியுது பூமி விளையுது' என்று வீரபாண்டியக் கட்டபொம்மன் முழங்கியது இராமநாதபுரத்து மண்ணில். காந்திய இயக்கங்களிலும் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் திரட்டிய இந்திய தேசியப் படையிலும் இம்மாவட்டத்தின் பங்கு மிக முக்கியமானது. பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், காமராஜ், விருதுநகர் முத்துசாமி ஆகியோரை வழங்கியது இம்மாவட்டம்.

மொழி வளர்ச்சியில் இராநாதபுர மாவட்டம் பெரும் பணி புரிந்திருக்கிறது. கணியன் பூங்குன்றனார் காலம் தொட்டு, பண்டிதமணி கதிரேசனார் காலம் வரை பெரும் புலவர்கள் தோன்றியிருக்கின்றனர். இன்றும் தோன்றி வருகின்றனர். பாரிவள்ளல் தமிழ் வளர்த்த சேதுபதிகள், பாண்டித்துரைத் தேவர், அண்ணாமலை அரசர், அழகப்ப வள்ளல், முறையூர் வள்ளல் சண்முகனார், கருமுத்து தியாகராாசர், கவிஞர் கண்ணதாசன், வெளி நாடுகளிலும் தமிழ் பரப்பும் எண்ணற்ற தொண்டர்கள் ஆகியோரால் இம்மாவட்டம் தமிழ் கூறும் நல்லுலகின் பாராட்டிற்கு உரியதாய் இருக்கிறது.

தமிழ்க் கல்வெட்டுக்களில் மிகப் பழமையான கல்வெட்டுக்களில் ஒன்றாகிய பிள்ளையார் பட்டிக் கல்வெட்டு இம்மாவட்டத்தில் இருக்கிறது. கம்பன் சமாதியுடையது இம்மாவட்டமே.

எல்லைகள்:

வடக்கேயும் வடமேற்கேயும் மதுரை மாவட்டம், வடக்கேயும் வடகிழக்கேயும் திருச்சி மாவட்டம், வட கிழக்கில் தஞ்சாவூர் மாவட்டம் கிழக்கேயும் தென்கிழக் கேயும் கடல், தெற்கே நெல்லை மாவட்டம், மேற்கே மேற்கு தொடர்ச்சிமலை ஆகியவை இராமநாதபுர மாவட்டத்தின் எல்லைகளாக உள்ளன.

இம்மாவட்டம் குறுக்கே 9°5'க்கும் 10° 25'க்கும், நெடுக்கே 77°20'க்கும் 79°28'க்கும் இடைப்பட்டது.

மாவட்டத்தின் பரப்பு 4,825 சதுர மைல் ஆகும். (ஏறத்தாழ 13.000 சதுர கி. மீ) இம்மாவட்டம் தமிழ் நாட்டின் பரப்பளவில் 12-ல் ஒரு பகுதிக்குச் சற்று கூடுத யாகும். சேலம், கோவை, திருச்சி, மதுரை மாவட்டங் களுக்கு அடுத்தபடி இது தமிழ் நாட்டின் பெரிய மாவட்டமாக இருந்து வருகிறது.

ஆட்சிப் பிரிவுகள்.

நில வருவாய்த்துறையின் ஆட்சி வசதிக்காக இராமநாதபுர மாவட்டம் ஒன்பது வட்டங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வட்ட ஆட்சியை மேற்பார்வை யிட நான்கு கோட்ட அலுவலகங்கள் உள்ளன. இவை இருக்கும் நகரங்களும் இந்தக் கோட்டங்களுக்குட்பட்ட வட்டங்களும் வருமாறு:

இராமநாதபுரம் —இராமநாதபுரம், முதுகுளத்தூர்
சிவகங்கை—சிவகங்கை, பரமக்குடி,
தேவகோட்டை—திருவாடானை, திருப்பத்தூர்,
சிவகாசி—சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக் கோட்டை

இராமநாதபுரம் வட்டம் தவிர ஏனைய 8 வட்டங்களிலும் உள் வட்டங்கள் உள்ளன. இவை தனி வட்டங்களைப் போல் இயங்கி வருகின்றன. இவையாவன:

கமுதி உள் வட்டம் (முதுகுளத்தூர்)
மானாமதுரை உள் வட்டம் (சிவகங்கை)
இளையாங்குடி உள் வட்டம் (பரமக்குடி)
தேவகோட்டை உள் வட்டம் (திருவாடானை)
காரைக்குடி உள் வட்டம் (திருப்பத்தூர்)
விருதுநகர் உள் வட்டம் (சாத்தூர்)
இராசபாளையம் உள் வட்டம் (ஸ்ரீவில்லிபுத்தூர்)
திருச்சுழி உள் வட்டம் (அருப்புக்கோட்டை)

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற இம்மாவட்டம் வட இராமநாதபுரம், தென் இராமநாதபுரம் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை ஒவ்வொன்றிலும் பல ஊராட்சி மன்ற ஒன்றியங்கள் உள்ளன. இவை பற்றிய விவரங்களை நூலின் பிற்பகுதியிலும் ஒன்றியப்பட்டியலைப் பிற்சேர்க்கையிலும் தருவோம்.

ஆட்சிப் பிரிவுகளின் வரலாறு

இராமநாதபுர மாவட்டம் 1910ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளில் ஏற்பட்டது. மதுரை மாவட்டம் பெரிய நிலப்பரப்பு உடையதாக இருந்தது. நிர்வாக வசதிக்காக இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன் பகுதிகள் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு இராமநாதபுர மாவட்டத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தின் பரப்பையும் குறைப்பது நன்று, என்ற கருத்து நிலவியது. அதனால் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் வட்டங்கள் திருநெல்வேலி

யிலிருந்தும் பிரிக்கப் பெற்று இராமநாதபுர மாவட்டத்துடன் இணைக்கப் பெற்றன.

இம்மாவட்டத்தின் பரப்பளவில் முக்காற்பங்கு அதாவது 3,708 சதுரமைல் இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்களின் பரப்பாகும்.

இயற்கை அமைப்பு

மலைகள் : இம்மாவட்டத்திலுள்ள மலைகளைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கின்றோம். மேற்குத் தொடர்ச்சி மலையில் இராமநாதபுர மாவட்டத்தில் ஏறி, மதுரை மாவட்டத்தின் பெரிய குளம் பகுதியில் இறங்குவது உடலுக்கு உரம் தரும் சிறந்ததொரு சுற்றுலாவாக அமையும்.

இந்த மலைத் தொடரினின்றும் ஏற்படும் நீர்வளம் இம்மாவட்டத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையைக் குடைந்து கேரளத்தின் சிற்றாறுகளின் சிலவற்றைத் திருப்பிவிட்டால் வறண்ட இராமநாதபுர மாவட்டம் வளம் சுரக்கும்.

ஆறுகள்

வைகை : இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க ஆறு வைகை ஆறு. பெரிய குளம் வட்டத்தில் ஆண்டிப்பட்டி மலையில் தோன்றி, மதுரை வட்டம் வழியாக இம்மாவட்டத்திற்குள் சிவகங்கை, பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களில் பாய்ந்து வைகை ஆறு, உச்சிப்புளி அருகே உள்ள ஆற்றங்கரை என்னும் ஊர் ஓரமாக கடலில் கலக்கிறது. பெரும்பாலான ஆண்டுகளில் இவ்வாற்றின் நீர் வீணாகாமல், முழுவதும் இராமநாதபுரம் பெரிய கண்மாயை நிரப்பிவிடுகிறது.

இந்த ஆறு இராமநாதபுர மாவட்டத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. திருப்பூவணம் என்னும் தலமும், மானா மதுரை என்னும் சிறு நகரும் இவ்வாற்றின் கரையில் இருக்கின்றன. பரமக்குடியும், எமனேசுவரமும் வைகைக் கரையில் எதிர் எதிரே அமைந்துள்ளன. வைகை ஆற்றின் குறுக்கே விரகனூர் அருகேயும் பார்த்திபனூர் அருகேயும் சிறு அணைகளும், மானா மதுரையிலும் பரமக்குடியிலும் பெரிய பாலங்களும் இம்மாவட்டத்தில் கட்டப் பெற்றுள்ளன.

குண்டாறு : இது மேற்குத் தொடர்ச்சி மலையில் உண்டாகிறது. அருப்புக் கோட்டை, முதுகுளத்தூர் வட்டங்களின் வழியாக ஓடி மன்னார் வளைகுடாவில் கீழக் கரைக்கு அருகே கடலுடன் கலக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே கமுதிக்கு அருகே சிறு அணை ஒன்று கட்டப் பெற்றிருக்கிறது.

விரிசலையாறு : இது மதுரை மாவட்டத்தில் தோன்றி திருப்பத்தூர், திருவாடானை வட்டங்களின் வழியாக ஓடி வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இவ்வாற்றுக்கு வீரசுழி என்றும் பெயர் உண்டு. இதன் கிளை பாம்பாறு. விரிசலையாற்றின் குறுக்கே, தேவகோட்டைக்குத் தென் மேற்கேயுள்ள எழுவன் கோட்டை யருகே 1964 அளவில் ஓர் அணை கட்டப்பெற்றுள்ளது.

வைப்பாறு : இது, திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி, ஸ்ரீவில்லி புத்தூர், சாத்தூர் வட்டங்களின் வழியாக மீண்டும் திருநெல்வேலி மாவட்டத்தில் நுழைந்து மன்னார் வளைகுடாவில் கலக்கிறது.

அர்ச்சுனா ஆறு : இது மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி சாத்தூர் வட்டத்தின் வழியாக ஓடி,

வைப்பாற்றில் கலக்கிறது. சாத்தூர், இவ்வாற்றின் கரையிலிருக்கிறது.

சருகணியாறு : சிவகங்கை வட்டத்திலுள்ள குன்று ஒன்றில் தோன்றி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

உப்பாறு : மதுரை மாவட்டத்தில் திருமணி முத்தாறு என்னும் பெயருடன் தோன்றும் இவ்வாறு ஏரியூர், கல்லல் ஆகிய ஊர்களின் வழியாக தேவகோட்டை அருகே கடலுடன் கலக்கிறது.

பாலாறு : நத்தம் பகுதியிலிருந்து சிங்கம்புணரி, முறையூர் வழியாக திருப்பத்தூர்க் கண்மாயை நிரப்பி இந்த ஆறு உப்பாற்றுடன் ஒன்றிவிடுகிறது.

மணிமுத்தாறு : வாராப்பூர் ஜமீன் பகுதியில் தோன்றி திருமெய்யம் வட்டத்து ஊர்கள் வழியாய் இராமநாதபுர மாவட்டத்து நெற்குப்பைக்குள் நுழைந்து மகிபாலன்பட்டித்தீவை உண்டாக்கும் இச்சிற்றுறு, கல்லல் ஆறு எனப்படும் உப்பாற்றுடன் கலந்து விடுகிறது.

சீவலப்பேரி, விஜய நதி, மன்னூர் கோட்டை நதி, கிருதமால் ஆறு, கானல் ஓடை, தேனாறு என்னும் சிற்றுறுகள் இம்மாவட்டத்தில் உள்ளன.

மரம், செடி, கொடிகள்

மன்னூர் வளைகுடாவிலும், பாக்ஜல சந்தியிலும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த தீவுகளிலும் மிகப் பெரிய அளவில் பல வகையான பவளப் பாறைகள் உள்ளன. இவை ஜெல்லி முதலிய உணவுப்பொருள்கள் செய்ய உதவுகின்றன. சிமெண்ட், உரம், கால்சியம் கார்பேடு முதலியன செய்வதற்கும் இவை உதவுகின்றன. இவற்றைப்பற்றி பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

பிரான் மலைக் காடுகளில் 6, 7 அடி உயரமுள்ள ஜோதி மரம் இருப்பதாயும், இருள் நிறைந்த இராக் காலங்களில் அது பிரகாசிப்பதாயும், அம்மரத்தினடியி லிருந்து ஒரு நூலைப் படிப்பதற்கு வேண்டும் அளவு அந்த மரம் ஒளி தருவதாயும் அமாவாசை நாட்களில் அம்மரம் வெகு தூரம் வரை வெளிச்சம் தெரியச் செய்வதாயும் என் சிறிய தந்தையார் கூற, இளமையில் கேள்விப்பட் டிருக்கிறேன். இத்தகைய மரங்கள் ஐரோப்பாவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள காடுகளில் இருப்பதாக நூல்கள் கூறுகின்றன.

அரசமரம் : இராமநாதபுர வட்டம் திருப்புல்லணை யில் இருக்கிற தல விருட்சம், அரசமரம். இம்மரத்தின் இலை ஏனைய அரசிலைகள் போலின்றிக் குட்டையாக இருக்கிறது. ஆனால் நுனியும், காம்பும் அனுமார்வால் போல் உள்ளன. பழம் பாடல் ஒன்று இந்த அரச மரத்தில் ஆலின் விழுதுகள் போல விழுதுகள் இருந்த தாகக் கூறுகிறது. இப்போது விழுதுகள் இல்லை.

வேப்பமரம் : காரைக்குடி அழகப்பர் கல்லூரி மாணவர் விடுதியிலுள்ள வேப்ப மரம் ஒன்றின் இலைகள் கசப்பதே இல்லையாம். மாணவர்கள் வேடிக்கையாக இதன் இலைகளைச் சுவைத்தபோது இதனை அறிந்தனர்.

தென்னை மரம் : அதிசயமான ஒரு தென்னைமரம் இராஜபாளையத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணாபுரிக் கண்மாய் அருகே மருங்கூர்த் தோப்பில் இருக்கிறது.

மழை

இராமநாதபுர மாவட்டத்தின் சாரசரி மழை ஓர் ஆண்டுக்கு 35 அங்குலம் (1000 மில்லி மீட்டர்). இது

மிகவும் குறைந்த அளவாகும். திருநெல்வேலி, கோவை மாவட்டங்களில் இந்த அளவுகூட மழை பெய்யவில்லை.

இராமநாதபுர மாவட்டத்தில் பெய்யும் மழை வட கிழக்குப் பருவக்காற்ருல் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெய்கிறது. வட கிழக்குப் பருவக்காற்றுத் தவறி விட்டால், அவ்வாண்டில் இம்மாவட்டத்தைக் காப்பாற்றக்கூடியது வங்கக் கடலில் தென்பகுதியிலோ மன்ஞர் வளைகுடாவிலோ உருவாகும் புயல்தான். புயல் மழையும் இல்லாவிட்டால், சாவி அல்லது ராசி காணுமற்போவது தான் இம்மாவட்டத்தின் நீண்ட நெடுங்கால வரலாறு.

இம்மாவட்டத்திலேயே மழை மிகுந்தது இராஜபாளையம் பகுதி; மழை குறைந்தது சாத்தூர்—சிவகாசி நகர்கட்கு இடைப்பட்ட பகுதி.

பாம்பனில் இந்திய அரசின் வானிலை ஆய்வு நிலையம் செயல்படுகிறது. சேது சமுத்திரத்தில் புயல் அறிகுறி ஏற்படின், அதை முன்கூட்டி இவ்வலுவலகம் அறிவிக்கிறது.

இம்மாவட்டத்தில் சரிபாதி தரிசாக இருக்கிறது. எஞ்சிய பாதியிலும் மூன்றில் ஒரு பகுதியில் புன்செய்ப் பயிர்களே பயிராகின்றன.

புவியியல் வளம்

இராமநாதபுர மாவட்டம் புவியியல் வளம் இல்லாத மாவட்டம் என்று நெடுங்காலமாகக் கருதப்பட்டது. அக்கருத்து, தவருனது என்று அண்மையில் தெரியவருகிறது.

ஊரிப் பெயர்கள் சிலவற்றிலிருந்து இம்மாவட்டத்தின் இயற்கை வளத்தை உணரலாம். சான்று: பசும்பொன் (முதுகுளத்தூர் வட்டம்); செம்பொன்னூர்

(கல்லல் ஒன்றியம்) செம்பொன் மாரி (சண்முகநாதபுரம் அருகே, திருவாடானை வட்டம்), இவை பொன்வகைகளைக் குறிப்பன. பைம்பொன்—பயிம்பொன்—பசும் பொன் (பச்சைப்பொன்).

சுண்ணும்புக் கல் : சிமிண்டுத் தொழிலுக்கு உதவும் சுண்ணும்புக் கற்கள். ஆலங்குளத்திலும் கள்ளம நாயக்கப்பட்டியிலும் அருப்புக்கோட்டை வட்டத்துப் பாலநந்தம், பாண்டங்குடியிலும் இரண்டு கோடி டன் இருப்பதாக மதிக்கப்படுகிறது. முதுகுளத்தூர் வட்டம் பேரையூர், அவத்தாண்டை, கோக்கடிப் பகுதிகளில் சிறு அளவில் ஜிப்சம் கிடைக்கிறது. கீழக்கரை, வாலிநோக்கம் ஆகிய ஊர்களிலும் ஜிப்சம் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இதுவும் சிமிண்டுத் தொழிலுக்குப் பயன்படும் பொருளாகும்.

சுண்ணும்புக் கற்கள் கிடைப்பதால் துலுக்கப்பட்டியிலும் ஆலங்குளத்திலும் சிமிண்டு ஆலைகள் தொங்கப் பெற்றுள்ளன. சுண்ணும்புக் கற்கள் பிளீச்சிங் பவுடர், கால்சியம் கார்பைடு ஆகியவற்றின் உற்பத்திக்கும் உதவுகின்றன.

மஞ்சள் காவி: சிவகங்கைக்கும் மானுமதுரைக்கும் இடைப்பட்ட முட்காடுகளில், காட்டூரணி போன்ற பகுதிகளில் வெள்ளைக் களிமண் இருப்பதாகத் தெரிகிறது. பூவந்திப் பகுதியில் ஒருவகை 'Lead' உளது. சிவகங்கை நகர் எல்லையில் 28 லட்சம் டன் மஞ்சள் காவி முதலியன உள்ளன. இவை Indian Red, yellow Distemper, Maroon Distemper முதலிய எண்வகை வண்ணங்களில் 'பெயிண்டு' செய்ய உதவுமென ஜெர்மன் அறிஞர் கூறியுள்ளனர்.

கிராபைட்: பூவந்தி அரசனூர் சிவகங்கை சிவகிரி சேத்தூர்ப் பகுதிகளில் கிராபைட் கிடைக்கிறது.

சிவகங்கையிலிருந்து மேற்கே 21 கி. மீ. தொலைவிலுள்ள கீரனூரில் லெட்பென்சில்களும் பெயிண்டுகளும் செய்ய உதவும் கிராபைட் படிவமுள்ள பாறைகள் உள்ளன.

பெட்ரோல்: தொண்டி தேவகோட்டைப் பகுதிகளில் பெட்ரோல் இருக்கக்கூடுமென, பூர்வாங்க ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.*

இல்மனைட்: கடற்கரையூர்களில் இல்மனைட்டுச் சத்துள்ள மணல் உளது. இராமேசுவரத் தீவின் வடகரையில் 400 டன் இல்மனைட்டும் 1200 டன் கார்னட்டும் இருப்பதாக ஆராய்ச்சியாளார் கூறுகின்றனர்.

இரும்புக்கனி: காளுடு காத்தானிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ள வாடிக்குடிப்பட்டியில் இரும்புக் கம்பிகள், கடப்பாறைகள் முதலியன செய்ததாகவும் அங்கு இரும்புக் கனிகள் சிறிதளவு இருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது.

மக்னீசைட்டு: மக்னீசைட்டிலிருந்து மங்கனீசியத்தை பிரித்து எடுக்கும் தொழிற்சாலை காரைக்குடியில் உளது.

நிலககரி: காரைக்குடிக்கு அருகே மாநகரியில் நெய்வேலியில் கிடைப்பதைவிட உயர்ந்த தரமான பழுப்பு நிலக்கரி 1963-இல் கண்டுபிடிக்கப்பட்டது. பல

---

* It is also possible that a narrow belt stretching from Tondi (near Devakottai) to Cuddalore in South Arcot may possess oil-bearing marine rocks or non-marine rocks that may contain oil.

—Geological and Magnetic
Survey Studies,
THE HINDU, Nov. 3 1963.

கோடி ரூபாய் முதலீடு போட்டுத் தோண்டியெடுப்ப தற்கு வேண்டும் அளவுக்கு, கையிருப்பு இல்லை என்ற காரணத்தால் அதை எடுக்கும் வேலை மேற் கொள்ளப் படவில்லை.

செந்நிறக் கற்பாறைகள்: அருப்புக் கோட்டை அருகே இவ்வகைப் பாறைகள் இருக்கின்றன.

கல் தூண்கள் : கோவில்களில் தூண்களாக நிறுத்து வதற்குரிய கற்களும் விக்கிரகங்கள் செய்வதற்கு ஏற்ற கற்களும் பிள்ளையார்பட்டியில் கிடைக்கின்றன.

ப்ளம்பாகோ : திருச்சுழிக்கு அருகே யுள்ள பந்தல் குடியில் கிரிஸ்டலைன் லைம்ஸ்டோனில் 'ப்ளம்பாகோ' என்னும் அரிய பொருள் இருப்பதாகத் தெரிகிறது.

வியப்பான பாறைகள் : திருப்பத்தூர் வட்டம் பூலாங்குறிச்சியிலுள்ள காஞ்சாத்து மலை இராமநாதபுர மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் முன்னுள் புதுக் கோட்டைத் தனி அரசுக்கும்) எல்லையாக அமைந் திருக்கிறது. இங்கு விதவிதமான பாறைகள் 40 ச.கி.மீ. பரப்பில் இருக்கின்றன. பாறைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு (Petrologists) இது ஏற்ற இடம். பாறைகள் ஒன்றுக்கொன்று வழுக்கி அப்படியே இருந்திருக்கக்கூடிய அடையாளங்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர்.

கடற்பாறை (Coral Reefs) : தீவுகளைச் சுற்றியும் கடலோரத்திலும் இப்பாறைகள் உண்டாகின்றன (formed). இவை உண்டாவதற்கு 68° முதல் 74°F வெப்பம், தெளிந்த நீர் ஆறுகள் வந்து சேரா இடம், படிவங்கள் (Sediments) சேரா இடம் முதலிய நிலைகள் வேண்டும்.

இவ்வகைப் பாறை இருக்கும் இடத்தைக் கண்டு, முற்காலத்தில் இந்த இடம் இன்னவாறு இன்ன சூழலில் இருந்திருக்கும் என (Paleo-climate) ஊகிக்கமுடிகிறது. மண்டபத்துக்கு அருகே இப்பாறை இருக்கிறது. இது உடைப்பதற்குக் கடினமானது. கப்பல் செல்லும் வழிகளில் இருந்தால், இது பேராபத்தை உண்டாக்கும்.

பவளச்சுண்ணும்புக் கல்: இராமேசுவரம் தீவில் பவளச் சுண்ணும்புக்கல் சில இடங்களில் 100 மீட்டர் அகலத்துக்குக் கிடைக்கிறது. இதன் அளவு 50 லட்சம் டன் என்று மதிப்பிடப் பெற்றிருக்கிறது. சாதாரணச் சுண்ணும்புக் கல்லாக இதையும் பயன்படுத்தலாம்.

இவற்றை இப்பகுதி மக்கள் நுரைக்கல் என்றும் சுழி என்றும் குறிப்பிடுகின்றனர். இராமேசுவரத்திலிருந்து தூத்துக்குடி வரையுள்ள தீவுகளில் சுண்ணும்புக் கல் எடுத்து விட்டால், இந்தத் தீவுகள் கடலால் அழிக்கப்பட்டு விடும் என்று ஆராய்ச்சியறிஞர் கூறுகின்றனர்.

பிற பொருள்கள்: பல கோடி ஆண்டுகளுக்கு முன் தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, ஆஸ்திரேலியா இவையாவும் ஒன்ருக இருந்தன என்று பேரறிஞர்கள் நம்புகின்றனர். அப்பரப்புக்கள் பிரிந்து சென்றபோது அப்போக்கில் ஆங்காங்கு சில தீவுகள் தோன்றியிருக்கக்கூடும். இவ்வாறு தோன்றிய இராமேசுவரம் முதலிய தீவுகள் மண் அரிப்பாலும் பிற காரணங்களாலும் பல வகைப் புவியியல் செல்வங்கள் மறைந்து கிடப்பதற்கு வாய்ப்பு உண்டு.

நீரூற்றுக் கிணறுகள் (Artersion wells) : காரைக்குடிப்பகுதியில் இக்கிணறுகள் உள்ளன. இப்பகுதி நீர் வளம் நிறைந்திருப்பதை இது காட்டுகிறது.

களிமண்: சூடு, உலோகக் கசடு ஆகியவற்றைத் தாங்கும் செங்கற்கள், எஃகு ஆலைக்குத் தேவைப்படுகின்றன. இவற்றைச் செய்வதற்கு ஏற்ற களிமண் வகைகள் நாட்டரசன் கோட்டையிலும், சிவகங்கைக்கு அருகேயுள்ள கங்கைச்சுரங்கரத்திலும். குசவனுடைப்பு, பழைய மாங்குடி, ,சங்கிலிப் பட்டி, புதுப்பட்டி முதலிய ஊர்களிலும் இருக்கின்றன.

மண்ணெண்ணெய்: தேவிபட்டினத்திலும் கீழக் கரை—ஏர்வாடி கிராமங்களுக்கு இடையே யுள்ள கடற் கரைப் பகுதிகளிலும் மண்ணெண்ணெய் ஊற்றுக்கள் இருக்குமென நம்பப்படுகிறது.

2. வரலாறு

இராமநாதபுர மாவட்டம் தொன்மையான வரலாற்றுப் பெருமை உடையது. முற்காலப் பாண்டியரின் வரலாற்றில் இப்பகுதிக்குச் சிறப்பான இடம் உண்டு. தமிழர் வீரத்தின் எடுத்துக் காட்டாக இருக்கும் மறவர்களும், தமிழர் வாணிபத்தின் தூதுவர்களாக விளங்கும் பலவேறு சமூகங்களும் இம் மாவட்டத்தில் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர்.

தொண்டி முதலிய துறைமுகங்கள் நெடுங்காலமாக கடல் வாணிபத்தில் ஏற்றம் பெற்றிருக்கின்றன. இம் மாவட்டத்தின் கடற்கரையில் முத்துக் குளித்தலைப் பற்றி மார்க்கோ போலோ எழுதியுள்ளார். Batala என்னும் இடத்தில் பெரிய அளவில் மீன்கள் பிடிக்கப் பட்டதைக் குறித்து ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் பலர் எழுதியுள்ளனர்.

இராமாயண காலம் தொட்டு இந்தியா இலங்கை இரு நாடுகளின் வரலாற்றிலும் இம்மாவட்டம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

பல்லவர்

பல்லவர் தொடர்பு இம்மாவட்டத்திற்கு இருந்தது என்பது பல கல்வெட்டுக்களிலிருந்து உறுதிப்படுகிறது. குன்றக்குடியிலும் பிள்ளையார் பட்டியிலும் நெற்குப்பை —மகிபாலன்பட்டிச் சாலையிலுள்ள பூங்குன்றத்திலும் குடைவறைக் கோவில்களும், பல்லவர் கல்வெட்டுக்களும்

உள்ளன. மூவாயிரம் ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் நடைபெற்ற வெளி நாட்டு வாணிபமே பல்லவர் தொடர்புக்கு காரணமாகும்.

சோழர்

இலங்கைக்கும் சோழ நாட்டுக்கும் இராமநாதபுர மாவட்டத்து வழியாகத் தொடர்பு ஏற்பட்டது சோழர் இலங்கையை ஆண்டபோது, இராமநாதபுர மாவட்டத்தில் சோழர் செல்வாக்குப் பரவியது. சோழருக்கும் பாண்டியருக்கும் போர் மூண்டபோது பாண்டிய அரசர் சிலர் இலங்கை அரசர்களின் உதவியைப் பெற்றதால், சோழர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த இராமநாதபுர மாவட்டத்தைப் பிடித்துக் கொண்டனர்.

இராஜராஜ சோழனின் ஆட்சியில் இராமநாதபுரம் சீமை சோழர் வசப்பட்டது.

சோழர் ஆட்சியின் அறிகுறியாகப் பல ஊர்கள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளன. சான்று : சிவகங்கைக்கு அருகேயுள்ள சோழபுரம், திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சோழன் பட்டி (இப்போது சோளகன் பட்டி என்று மருவி வழங்கி வருகிறது), கண்டவராயன் பட்டியை அடுத்த பையூர் முதலியன. பையூர் எனும் பெயர் சோழ ஆட்சியில் பல ஊர்களுக்கு வழங்கிற்று.

பரமக்குடி வட்டத்தில் போகலூர்ப் பகுதியில் கங்கைகொண்டான் என்னும் ஊரும், திருப்பத்தூர் வட்டத்தில் ஏரியூர்ப் பகுதியில் ஜெயங்கொண்டான் (நிலை) என்னும் ஊரும் உள்ளன.

சோழர்—பாண்டியர் போராட்டங்களில் பல சாதியார் இடம் பெயர்ந்தனர். இவ்வாறு இராமநாதபுர மாவட்டத்திற்குக் குடியேறியவர்களுள் காவிரிப் பூம்பட்

டினத்திலிருந்து வந்த நகரத்தார்களும், வல்லம் பகுதியிலிருந்து பள்ளத்தூர் முதலிய பகுதிகளுக்கு வந்து 'வல்லம்பர்' என்ற பெயரால் இன்றளவும் விளங்கும் முக்குலத்தோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கையர் 'ஆட்சி'

கி. பி. 1170-இல் இலங்கை வேந்தனாகிய பராக்கிரமப் பாகு, பாண்டிய அரசனான பராக்கிரமனுக்கு உதவுவதற்காக இலங்கையிலிருந்து பெரும் படை ஒன்றை அனுப்பினான். அப்படை வருவதற்குள் மதுரை அரசின் உரிமை தனக்கே என்று கோரிய குலசேகரப் பாண்டியன் ஆட்சியிலிருந்த பராக்கிரமப் பாண்டியனையும் அவன் குடும்பத்தையும் சிறை வைத்துப் பிறகு அவர்கள் அனைவரையும் கொன்று பட்டத்தை அடைந்தான். இராமேசுவரம் தீவில் கந்தமதான பருவதத்திற்கு அருகே புலியடிச் சாலை என்னுமிடத்தில் இலங்கைப் படை இறங்கியது. அங்கு ஒரு சிவன் கோவில் கட்ட இலங்கை அரசன் ஏற்பாடு செய்தான் என்பதும் பௌத்த கோவில் ஒன்றையும் அமைக்கச் சிங்களப் படை வீரனான லங்காபுர தண்ட நாயகா அடிகோலினான் என்பதும் ஆதாரத்துடன் கூறப்படுகிறது.

இலங்கைப் படை சிவகங்கை அருகேயுள்ள அரண்மனைச் சிறுவயல் வரை வெற்றி நடைபோட்டுச் சென்றது. தொண்டி, பாசிப்பட்டணம், குன்றக்குடி ஆகியவற்றையும் அப்படை கைப்பற்றியது.

குலசேகரப் பாண்டியன் தோல்வியடைந்து திருச்சி மாவட்டப் பொன்னமராவதியில் ஒளிந்துகொண்டான். அங்கு அவனது ஆதரவாளர்களின் கட்டடங்கள் யாவும் இலங்கை வீரர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. பிறகு

அவர்கள் மதுரை சென்று வீரபாண்டியன் என்பவனை மதுரை அரசனாக்கி வெற்றி கொண்டாடினர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப் படை இலங்கைக்குத் திரும்பிற்று.

இலங்கைப் படை இங்கு இருந்தபோது புதுப் பட்டினம் என்று இப்போது குறிப்பிடப்படும் கடலோரைச் சிற்றூர் உண்டாக்கப்பட்டது. அது அந்நாளில் பராக்கிரமப் பட்டினம் என்று பெயரிடப்பட்டிருந்தது. இராமநாதபுரம், இராமேசுவரம் பகுதிகளில் அக்காலத்து ஈழ நாட்டு நாணயங்கள் இன்றும் கண்டெடுக்கப்படுகின்றன. கோவில்களைப் பழுது பார்த்தும் சாலைகளைப் போட்டும் ஏரி குளங்களைப் பேணியும் இலங்கைப் படை இராமநாதபுரம் சீமைக்குப் பணியாற்றியுள்ளது.

மாலிக் காபூர்

அலாவுதீன் கில்ஜியின் படை வீரனான மாலிக்காபூர் பாண்டிய நாடு சீர்குலைந்ததை அறிந்து இராமநாதபுரம் சீமைக்கு வந்து இராமேசுவரம் கோவிலைக் கொள்ளையடித்ததாக வரலாற்று ஆசிரியர் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்கள் இவ்வாறு குறிக்கும் 1310க்கு ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பிறகு கி. பி. 1331-இல் மதுரையைத் தலைநகராகக் கொண்டு முஸ்லீம் ஆட்சி ஒன்று ஏற்பட்டது. கி. பி. 1371-இல் மதுரை சுல்தான்களின் ஆட்சி சரியத் தொடங்கி 1393-இல் அது முற்றிலும் அழிந்தது. அதன் பிறகு நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது.

சேதுபதிகள்—தோற்றம்

நாயக்கர் ஆட்சிக் காலத்திலிருந்து சேதுபதிகள் வரலாறு முறையாகத் தொடங்குகிறது. சேதுபதிகள் மறவர் தலைவர் ஆவர்,

சேதுபதிகள் எப்போது தோன்றினர்கள் என்பதைப் பற்றி ஒன்றும் உறுதியாக தெரியவில்லை. சேதுபதிகள் ஸ்ரீராம பிரானால் நியமிக்கப் பெற்றதாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. நாயக்கர் ஆட்சிக்கு ஓராயிரம் ஆண்டு முன்னரே சேதுபதிகள் இருந்து வந்ததாக ஆங்கிலேய அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

பாண்டியப் பேரரசர் காலந் தொடங்கி, இரோமேசுவரத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதி தமிழகத்தோடு கடல் வாணிக உறவு கொண்டிருந்த அயலவர் கையில் இருந்தது. இங்கு எப்போதும் குழப்பமே நிலவியது. கொள்ளைக் கூட்டத்தினர் வைத்ததே இங்கு சட்டமாக இருந்தது. இவர்கள் இராமேசுவரத்திற்கு செல்லும் யாத்திரீகர்களைத் துன்புறுத்தினர்.

மதுரை நாயக்க மன்னர்கள் யாத்திரீகரின் நலம் கருதி காடு வெட்டியும், சாலைகள் அமைத்தும், சத்திரங்கள் நிறுவியும் பாதுகாப்புக்காகக்கோட்டைகள் கட்டியும், காவலர்கள் நியமித்தும் வந்தனர். மறவர் தலைவர் ஒருவரின் பொறுப்பிலேயே மறவர் நாட்டின் ஆட்சியை ஒப்படைப்பதென முத்துகிருஷ்ண நாயக்கர் என்ற மதுரையை ஆண்ட மன்னன் முடிவு செய்தான். 1605-இல் சடைக்கத் தேவர் என்ற தலைவனுக்கு உடையான் சேதுபதி என்ற பட்டம் வழங்கப் பெற்றது. இதற்கு முன் இருந்த மறவர் தலைவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பு இல்லை.

சேதுபதி—பொருள்

சேது என்னும் சொல் பாலம் என்று பொருள்படும்.

இராமபிரான் தம் பெரும்படையுடன் இலங்கை செல்லவேண்டி, வானரத்தலைவர்களைக் கொண்டு கட்டு

வித்த திருவணையே 'சேது' எனப்படும். இந்தச் சேதுவைக் காவல் புரிவதற்கு இராமபிரான் நியமித்த மறவர் தலைவன் வழி வந்தவரே சேதுபதிகள் என்று கூறப்படுகிறது.

சேது யாத்திரை என்பது இராமேசுவரத்தில் போய்க் கடவுளை வழிபடுவது மட்டுமன்று. சேதுபதியையும் நேரில் சந்தித்து வணங்கினால்தான் அந்த யாத்திரை இனிது நிறைவேறியதாகக் கருதப்படும். அனுமார், பாலம் (Adam,s Bridge) அமைத்தபோது அதைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படியும், அங்கு ஒரு கோவில் அமைக்கும்படியும் இராமர், சேதுபதியைக் கேட்டுக் கொண்டதாகப் புராண வரலாறு. இராமனால் நியமிக்கப்பட்ட முதல் சேதுபதியின் வழித் தோன்றல்களே பிற்கால சேதுபதிகள் என்றும் கூறுவர். சோழ மண்டலத்தை நிறுவிய பெரிய போர் வீரர்கள் சேதுபதிகளே என்றும் கூறுவர். இலங்கையின் வரலாற்றோடு சேதுபதிகளுக்கு எப்போதும் நெருங்கியதொடர்பு உண்டு.

சேதுபதிகளில் பலர் தங்களுடைய திறமையாலும், செல்வாக்காலும், அவர்கள் செய்த பெரும் செயல்களாலும் தமிழ்நாட்டு வரலாற்றில் நிலையான இடத்திற்கு உரியவர்கள். 1380இருந்து அவர்கள் மதுரை அரசர்களிடமிருந்தும் வேறுபட்டு, தனி உரிமையோடு வாழ்ந்தனர் என்பர்.

சேதுபதிகளின் பெருமை

காசியிலிருந்து இராமேசு வரத்திற்குப் புனித நீராடுவதற்காகச் செல்லும் மக்கள் கள்வர் பயமும், கடும்பசியும் இன்றி மன அமைதியோடு செல்வதற்கான வசதிகளைச் சேதுபதிகள் பல நூற்றாண்டுகளாகச் செய்து

தந்திருக்கின்றனர். வழி நெடுக அன்ன சத்திரங்கள் கட்டித் தந்திருக்கின்றனர். அந்த அறச்சாலைகள் செம்மையாக நடைபெற பல சிற்றூர்களை மானியமாக வழங்கினர். இயல் புலவர்களையும், இசைப் புலவர்களையும், கலைஞர்களையும் நூற்றுக்கணக்கில் ஆதரித்துள்ளனர்.

பாண்டிய அரசர்கள் காலந் தொட்டே இவர்கள் அவ்வப்போது மதுரையை ஆண்ட மன்னர்களுக்கு பெரும் படையை அனுப்பும் ஆற்றல் பெற்றிருந்தனர். இந்நாளில் இந்திய அரசுக்கு தேவைப்பட்டால் உடனே பல்லாயிரம் சீக்கிய வீரர்களைத் திரட்டி பஞ்சாப் அரசு அனுப்பி வருவது போல் ஈராயிரம் ஆண்டுகளாக மறவர் தலைவர்கள் மதுரை மன்னர்கள் செய்தி யனுப்பியதும் வேண்டிய போர் வீரர்களை அவர்கள் குறிப்பிடும் இடங்களுக்கு அனுப்பினர். மறவர் தலைவர்களால் இவ்வாறு அனுப்பப்பட்ட போர் வீரர்கள் தங்கும் இடங்கள் யாவும் இராமநாதபுரம் என்று பெயர் பெறும். இவ்வாறு பெற்ற இராமநா தபுரங்கள் தமிழ் நாட்டில் ஏராளமாக உள்ளன. மலாயா நாட்டிலும் இராமநாதபுரம் உள்ளது. முன்னாளில் இராமநாதபுரம் என்னும் சொல் 'கன்டோன்மென்ட்' என்னும் பொருளில் வழங்கி வந்தது. இராமநாதபுரம் என்னும் பெயரில் வழங்கி வரும் ஊர்களைப் பற்றி நூலின் பிறிதொரு பகுதியில் குறிப்பிடுவோம்.

தளவாய் சேதுபதி

நாயக்க மன்னர்களால் நியமிக்கப் பெற்ற சடைக்கத்தேவர் என்ற முதல் சேதுபதி, திருவாடானைக் கோவிலுக்கு ஏராளமான சொத்துக்களை வழங்கினார்.

தளவாய் சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் அவருடைய குடும்பத்தாருக்குள் பூசல் மூண்டது. தளவாய்

சேதுபதி தந்திரமாகக் கொலை செய்யப்பட்டார். இதனால் திருமலை நாயக்கர் இராமநாதபுரம் சீமையை இராமநாதபுரம் சிவகங்கை திருவாடானை என்ற மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்றுக்கும் தனித் தனிச் சிற்றரசர்களை நியமித்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு இச் சிற்றரசுகள் இணைந்தன.

திருமலைச் சேதுபதி

இராமநாதபுரத்து மன்னராக, திருமலை நாயக்கர் இவரை நியமித்தார். இவர் 25 ஆண்டுக் காலம் சேதுபதியாக இருந்தார். இவர் காலத்தில் சேது நாட்டின் எல்லை மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர் வரை பரவிற்று.

மைசூர் மன்னரான ஐதர் அலி, 1659-இல் திருமலை நாயக்கருடன் போர் புரியத் தன் படைகளை மதுரைக்கு அனுப்பினார். திருமலை நாயக்கர், திருமலைச் சேதுபதியின் உதவியை நாடினார். அவர் ஒரே நாளில் 25,000 போர் வீரரைத் திரட்டி, தம் படையுடன் மதுரை சென்று மைசூர்ப் படையை முறியடித்தார். மதுரை நகரினின்றும் அவர்களை விரட்ட திருமலை நாயக்கருக்கு உதவினார். அதற்கு நன்றி கூறும் முகமாக 'தாலிக்கு வேலி' [அரசியின் உயிரைக் காத்தவர்] என்ற பட்டமும் அரிமுகப் பல்லக்கு என்ற பரிசிலும் திருப்பூவணம், திருச்சுழி, பள்ளிமடம் ஆகிய பகுதிகளையும், நவராத்திரி விழா கொண்டாடும் உரிமையையும் திருமலை நாயக்கர், திருமலைச் சேதுபதிக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் வழங்கினார். சேதுபதிகள் கட்டவேண்டிய கப்பத்தையும் விட்டுக் கொடுத்தார். தங்கத்தில் துர்கை விக்கிரகம் ஒன்றையும் திருமலை நாயக்கர் சேதுபதிக்கு வழங்கினார். விவரம் இந்நூலின் பிறிதொரு பகுதியில் காண்க.

திருமலை நாயக்கருக்கு எதிராகத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். திருமலைச் சேதுபதியின் உதவியைத் திருமலை நாயக்கர் மீண்டும் நாடினார். இவர் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று பாளையக்காரர்களின் கிளர்ச்சியை அடக்கினார். இராமநாதபுரத்தின் புகழ் ஓங்கி வளர்ந்தது. 'திருவணை காவலன்', 'சேது மூலரக்ஷா துரந்தரன்' 'ராமநாதஸ்வாமி கார்யதுரந்தரன்' 'வைகை வளநாடான்' 'பரதநாடக பிரவீணன்' 'தொண்டியன் துரைக்காவலன்,' 'தேவை நகரதியன்' (தேவை—இராமேசுவரம்) என்ற பட்டங்களும் திருமலைச் சேதுபதிக்கு இருந்ததாகக் கல்வெட்டு வாயிலாகத் தெரிகிறது.

கிழவன் சேதுபதி

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதிகளில் கிழவன் சேதுபதி குறிப்பிடப்பட்டவர். இவர் 1674 முதல் 1710 வரை ஆண்டார். நாயக்க மன்னர்களிடத்தில் கட்டுண்டு கிடந்த மறவர் சீமையை மாற்றாரிடமிருந்து மீட்டு மாநிலம் மெச்சச் செங்கோலோச்சினார் கிழவன் சேதுபதி. மதுரைமீது படையெடுத்து வந்த ருஸ்தம்கான் என்ற முகம்மதியனை முறியடித்து மதுரையைக் காப்பாற்றினார். இப்பெரு மன்னர். அதனால் இவருக்குப் 'பரராஜகேசரி' என்ற சிறப்புப் பெயர் கிட்டியது.

ஆர்க்காட்டு நவாபின் படைத்தலைவரான அந்த ருஸ்தம் கான் மதுரை நாயக்க மன்னர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தார். அடிக்கடி பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து மக்களைத் துன்புறுத்தி வந்தார். மதுரை மன்னர், கிழவன் சேதுபதியின் உதவியை நாடினார். கிழவன் சேதுபதி, தம் படையுடன்

மதுரைக்குச் சென்று முசுலிம் படையைத் தோற்கடித்தார்.

கிழவன் சேதுபதி மதுரை, தஞ்சை மன்னர்களின் படைகளையெல்லாம் முறியடித்தான். டச்சுக்காரர்களுடன் சேர்ந்து முத்துக் குளிப்புபற்றி உடன்படிக்கைகள் செய்து சிறப்புற்ருன். புதுக்கோட்டை ஒரு தனி ஆட்சியாக அமைத்தவன் அவனே என்றும், தான் மணந்துகொண்ட ஒரு கள்ளர் சமூகப்பெண்ணின் தம்பிக்கு அந்தப் பகுதியை எழுதிக் கொடுத்தான் என்றும் கூறுவர். கிழவன் சேதுபதி காலத்தில்தான் இராமநாதபுரம், சேதுபதிகளின் தலைநகராயிற்று என்றும் அதற்கு முன்னர் போகளூர் என்னுமிடத்தில் அவர்கள் ஆண்டு வந்தனர் என்றும் கூறுவர். கிழவன் சேதுபதி காலத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

கிழவன் சேதுபதி தஞ்சை மன்னனை வென்று அவன் ஆட்சியிலுள்ள சில பகுதிகளையும் கைப்பற்றினான். கிழவன் சேதுபதியின்மீது பொருமை கொண்டு இராணி மங்கம்மாள் ஒரு படையை இராமநாதபுரத்திற்கு அனுப்பினார்.

கிழவன் சேதுபதிக்கு 47 மனைவியர் இருந்தனர். அவன் இறந்தபோது எல்லோரும் உடன் கட்டை ஏறினர். அந்த இடத்தை இன்னும் இராமநாதபுரத்தில் காணலாம்.

ஜான் டி பிரிட்டோ என்ற கத்தோலிக்கப் பாதிரியார் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதும் ஓரியூரில் அவர் தூக்கிலிடப்பட்டதும் கிழவன் சேதுபதியின் ஆட்சி காலத்தில்தான். கிறத்தவ மதமாற்றம் 17-ஆம் நூற்ருண்டின் இறுதியில் இராமநாதபுரம் சீமையில் புளியால், சருகணி முதலிய சில பகுதிகளில் காட்டுத் தீ

போலப் பரவிற்று. இதைத் தடுக்கும் முயற்சிகளை மேற் கொண்டபோது, சேதுபதியின் நாட்டில் அருளானந்தர் தலையும் உடலும் வெவ்வேருயின. இதைக் குறித்து இரு கொள்கைகள் நிலவுகின்றன.

கிழவன் சேதுபதி சமயக் காழ்ப்பு இல்லாதவன், சைவ சமயப்பற்று மிக்கவன், வழி வழியாக இராமே சுவரம் கோவிலில் ஈடுபாடும் கடமை உணர்ச்சியும் உடையவன், எனவே பிற மதங்களை ஆதரிக்க வேண்டு மென்று கிழவனிடமோ வேறு சேதுபதியிடமோ எதிர் பார்க்கக்கூடாது. பிறிதொரு சமயம் தம் நாட்டில் கால் கொள்ள வாய்ப்பு நல்காதது சேதுபதிகளின் குற்ற மாகாது, இது சேதுபதிகளுக்கு ஆதரவாகக் கூறப்படும் கருத்து.

சேதுபதிகள் பல மனைவியரை மணந்து வந்தனர். மறவர் தலைவர் பலரிடமும் இவ்வழக்கம் நிலவிற்று. கிறித்தவம் பரவினல் இவ்வழக்கத்தைக் கைவிட நேரிடும். மந்திரங்காளலும் புதிய மருத்துவ முறை காளலும் கிறித்தவ சாமியார்கள் மக்களிடம் செல்வாக் குப் பெற்று வந்தனர். இதை விட்டு வைத்தால், சேதுபதிகளின் செல்வாக்கு ஆட்டங்கண்டு விடும். இவ்விரு காரணங்களைக் குறித்தே, கிழவன் சேதுபதி கிறித்தவ சமயம் பரவுவதைத் தடுக்க முயன்ருன். இது கிறித்தவர்கள் எழுதி வைத்திருக்கும் கருத்து.[3]

இவ்விரு கருத்துக்களிலும் ஓரளவு உண்மை உண்டு.

கிழவன் சேதுபதிக்குப்பின் பட்டத்திற்கு வந்த விஜயரகுநாத சேதுபதி என்பான் இராமேசுவரம் கோவிலில் உள்ளப்பற்று உடையவனுக இருந்தனன். இராமேசுவரத்திற்குச் செல்லும் யாத்திரீகர்கள் பாம்ப னைக் கடப்பதற்குப் படகில்செல்லும்போது அவர்களுக்கு

ஒரு சிறு படகுவரி விதித்தான் என்பதற்காகத் தன் மருமகனையே கொல்லும்படி இந்தச் சேதுபதி ஆணையிட்டானும்.

இந்தச் சேதுபதி உண்டாக்கிய ரகுநாத சமுத்திரம் என்னும் ஏரியும் ஊரும் தஞ்சை மாவட்டத்து எல்லையிலிருந்து 5 கி. மீ. தொலைவிலுள.

சேதுபதி ராக்கத்தேவர்.

இவர் ஓராண்டுக் காலந்தான் ஆட்சி புரிந்தார். இவருடைய சேனைத்தலைவரின் பெயர் தளவாய் வெள்ளையன் சேர்வை. இவர் சிறந்த போர்வீரர். இவர் காலத்தில் தஞ்சாவூர் மன்னர் இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தார். தளவாய் வெள்ளையன் சேர்வை தஞ்சாவூர் மன்னரின் சேனையை முறியடித்தார். இன்னும் மதுரை மன்னரின் உதவிக்காகத் திருநெல்வேலிக்குச் சென்று, அங்கு கிளர்ச்சி செய்த பாளையக்காரர்களை அடக்கினர்.

செல்லமுத்து விசய ரகுநாத சேதுபதி

1754இல் டச்சுக்காரர்கள் கீழக்கரையில் ஒரு பண்டக சாலையைக் கட்ட அனுமதி வேண்டினர். சேதுபதி மன்னர். இவ்வனுமதியளித்தார், ஆனல் இப்பண்டக சாலையை ஒரு படைத்தளமாகச் செய்ய சேதுபதி மன்னருக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்தனர். சேதுபதி மன்னர் தம் படையை அனுப்பி டச்சுக்காரர்களுடன் போர் புரிந்து அவர்களைக் கைதிகளாக்கினர். டச்சுக்காரர்கள் மன்னிப்பு வேண்டவே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவருக்குப் பிறகு முத்துராமலிங்கச் சேதுபதி என்பவர் பட்டத்திற்கு வந்தார்.

முஸ்லீம் ஆட்சி

கர்நாடக நவாப்பாக இருந்த முகமதுஅலி கிழக்கு இந்தியக் கம்பெனி தனக்கு இருந்த செல்வாக்கால் இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைக்காக வலிய தஞ்சை அரசர்களுடன் போர் தொடுத்து வெற்றி பெற்றான். அதன் பயனாய் 1772 முதல் 1780 வரை 8ஆண்டுக் காலம் இராமநாதபுரம் முஸ்லீம் ஆட்சிக்குட்பட்டது. மக்கள் கொதிப்படைந்தனர். இந்த நிலையில் இராமநாதபுரம் சீமை நவாப்புகளுக்குக் கப்பம் கட்டி அடிமை நாடா யிற்று. திரும்பி ஆங்கிலேயர் இதை ஒரு ஜமீனாக்கி ஓர் ஆண்டுக்கு இராமநாதபுரம் ஜமீன்தார் 2,20,000 ரூபாய் கப்பம் கட்டவேண்டும் என்று முடிவு செய்தனர். கிழக்கு இந்தியக் கம்பெனியார் ஓர் உயர் அலுவலரை இங்கு அனுப்பி வைத்தனர். அவருடைய சூழ்ச்சியாலும் திறமையாலும், இராமநாதபுரம் பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சிக்கு மாறியது. மதுரை மாவட்டம் ஏற்படும் முன்பே இராமநாதபுரத்தில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற் பட்டது. ஆனால் அது கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சியில் இருந்தது. திருநெல்வேலியிலுள்ள பாளையப் பட்டுகளை இராமநாதபுரம் கலெக்டரின் அதிகாரத்திற் குச் சேர்த்தனர். இது இராமநாதபுரத்திற்கு ஒரு கௌரவம் என்று பிஷப் கால்டுவெல் குறிப்பிட்டுள் ளார். இதற்குப் பின்னரே மதுரை ஜில்லா என்று தனி ஜில்லா ஏற்படுத்தப்பட்டது.

1797-ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தில் பெரிய கலகம் ஏற்பட்டது. அவ்வாண்டில் ஜாக்சன் என்ற வெள்ளைக்காரரை கலெக்டராக கிழக்கிந்தியக் கம்பெனி யார் நியமித்தனர். அப்போழுது பாளையக்காரர்களி லேயே மிகவும் பலம் வாய்ந்தவர் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் ஆவார். இவர்

கம்பெனியாரின் ஆட்சிக்குட்படவும் வரி செலுத்தவும் மறுத்துவிட்டார். கம்பெனியார் இவருடன் போர் செய்து, இவரைத் தோற்கடித்துக் கொன்றனர். ஏனைய பாளையக்காரர்களெல்லாம் பயந்து கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டனர். இப்பாளையக்காரர்களுக்குக் குறுநில மன்னர்ப்பட்டம் கொடுக்கப்பட்டது. 1801-ஆம் ஆண்டில் கர்நாடக நவாபுடன் ஆங்கிலேயர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு தென்னாடெங்கும் ஆளும் உரிமை பெற்றனர்.

பாஞ்சாலங்குறிச்சிப் போரும் சிவகங்கையும்

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்குச் சிவகங்கையை ஆண்ட சின்ன மருதுவும் பெரிய மருதுவும் உயிர் நண்பராயிருந்தனர். எல்லா வகையாலும் அவர்கள் ஒன்றுபட்டு ஆங்கிலேயரை எதிர்த்தனர். காளையார் கோவிலில் அவர்கள் நடத்திய போரில் அவர்கள் காட்டிய வீரத்தை மெச்சி, ஆங்கிலேயத் தளபதிகள் விரிவாக எழுதியுள்ளனர்.

இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் ரஷ்யர்கள் தங்களுடைய நகரங்களும் தொழிற்சாலைகளும் எதிரிகளுக்குப் பயன்படக்கூடாது என்பதற்காகத் தாங்கள் வெளியேறும் பொழுது தம் கையால் அவற்றைச் சேதப்படுத்தித் தரைமட்டம் ஆக்கினர். அதுபோல் வெள்ளையர்களிடம் சிறுவயல் நகரம் சிக்கியிருந்த நிலையில் சிவகங்கை மறவர்கள் தாம் வாழ்ந்த நகரத்தைத் தங்கள் கையாலேயே தீயிட்டுச் சாம்பலாக்கினர். அதன் பிறகு சிறுவயல் காட்டில் ஒரு மாதம் கடும்போர் நிகழ்ந்தது. சிறுவயலிலிருந்து காளையார் கோவிலுக்குப் படைகளைத் திரட்டிக்கொண்டு செல்வதற்காக வெள்ளையர்கள் போட்ட பாதையை சிவகங்கை மக்கள் பாழாக்கினர்.

சிவகங்கைச் சீமையின் சுதந்திரப் போரின் கடைசிக் கட்டம் 180 ஆம் ஆண்டின் இறுதியில் கீழவளவு, பிரான் மலை, சிங்கம்புணரி, நத்தம் ஆகியஇடங்களில் நிகழ்ந்தது. ஏராளமான ஒற்றர்களைச் சுதந்தர உணர்ச்சியுள்ள வீரர்கள் வெட்டி வீழ்த்தினர். இறுதியாக ஊமைத்துரையும் மருது சகோதரர்களும் துரோகிகளின் துணையால் கைதியாகித் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர்.

இவ்வாறு ஆங்கிலேயர் அடைந்த வெற்றிகளுக்குப் பிறகு, 1801 டிசம்பர் 31-ஆம் நாள் திண்டுக்கல், இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் இருந்த கோட்டைகள்யாவும் தகர்க்கப்பட்டன. அனைவரிடமும் இருந்த துப்பாக்கிகளும் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. வீரபாண்டியக் கட்டப் பொம்மன் தொடர்புடைய கோட்டைகளில் திருமெய்யம் கோட்டை மட்டும் தப்பிப் பிழைத்து இன்றும் நின்று நிலவுகிறது.

முதல் ஜமீன்தாரணி

நாயக்க மன்னர்களிடமிருந்து விடுதலை பெற்று, சுதந்தர நாடுபோல இருந்த இராமநாதபுரம் சீமை 1803-இல் வெறும் ஜமீன் ஆயிற்று. ஆண்டு தோறும் ஆங்கிலேயர்களுக்கு ரூ 3, 24, 404-3-10 கப்பம் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை ஏற்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிகோலிய கிளைவ்பிரபு—ராணி மங்களேசுவரி நாச்சியாரை ஜமீன் தாரணியாக நியமித்தார். அவள் பிராமணர்களுக்கு 90 கிராமங்களை வழங்கினாள். மதுரைத் திருஞான சம்பந்தர் மடத்துக்குப் பெரும் பொருள் கொடுத்தாள்.

1845 க்குப்பின் கப்பமாகக் கட்ட வேண்டிய பணம் சில ஆண்டுகள் கொடுபடாமல் இருந்ததாலும் ஏராள

மான வழக்குகளில் வீண் செலவு ஏற்பட்டதாலும் இராமநாதபுரம் ஜமீனின் நிதி நிலைமை மோசமடைந்தது. இந்த நிலை திருந்த 1889 ஆகிவிட்டது.

பாஸ்கர சேதுபதி

இவர் 1889 முதல் 14 ஆண்டுகள் சேதுபதியாக இருந்தார். இந்திய வரலாற்றில் அழியாப் புகழ் பெற்றவர் பாஸ்கர சேதுபதி. 'ராஜா' என்ற பரம்பரைப் பட்டத்தை ஆங்கிலேயர் அவருக்கு வழங்கினர். ஆங்கிலக்கல்வி பெற்ற முதல் சேதுபதி இவரே.

தமிழ், வடமொழிப் புலவர்களையும் இசை முதலிய கலைவல்லாரையும் பாஸ்கர சேதுபதி ஆதரித்தார். அதற்காக நவராத்திரி விழாவைப் பெரிய அளவில் கொண்டாடினர்.

சுவாமி விவேகானந்தரை, அமெரிக்காவில் நடைபெற்ற உலகச் சமயங்களின் பாராளு மன்றத்துக்குப் பாஸ்கர சேதுபதி அனுப்பிவைத்த விவரம் இந் நூலின் பிறிதொரு பகுதியில் காண்க.

பிற்காலம்

பாஸ்கர சேதுபதிக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவர்களுள் முத்துராமலிங்க சேதுபதி, தமிழறிஞர்களைப் போற்றும் புரவலராக விளங்கினர். இவர் உண்டாக்கிய முத்துராமலிங்கபட்டினம் என்னும் ஊர் தொண்டிக்கும் வட்டாணத்திற்கும் இடையே கடற்கரையிலுளது.

ஷண்முக ராஜேஸ்வர நாகனுத சேதுபதி, ராஜாஜியின் அமைச்சரவையில் அமைச்சராகவும் விளையாட்டுக்களின் வளர்ச்சியில் ஆர்வலராகவும் இருந்தார். இவர் காலத்தில், தமிழ் நாடெங்கும் ஜமீன் முறை ஒழிக்கப் பட்டது.

1967முதல் சேதுபதியாக இருந்து வரும் இராமநாத சேதுபதி இராமேசுவரம் கோவில் திருப்பணியிலும் சமூக நலச் செயல்களிலும் ஈடுபட்டு மக்களின் நன் மதிப்பைப் பெற்று வருகிருர்.

சிவகங்கையின் வரலாறு

ஒக்கூருக்கு தென் மேற்கே நாலு கோட்டை என்னும் ஊர் இருக்கிறது. அங்கு 17-ஆம் நூற்ருண்டில் சேதுபதிகள் ஒரு பிரதிநிதியை நியமித்து அவன் மூலமாக காளேயார்கோவில், சிவகங்கைப் பகுதிகளே ஆண்டு வந்தார்கள். கிழவன் சேதுபதிக்குப் பிற்காலத்தில் அங்கு சேதுபதிகளுடைய பிரதிநிதியாக விளங்கியவர் கன்று மேய்த்த உதயதேவர் என்பவர். அவர் நவராத்திரி விளேயாட்டுகளில் கலந்து கொண்டு பல பந்தயங்களில் வெற்றி பெற்ருர். அவருக்கு முத்து விசய ரகுநாத சேதுபதி தன் மகளேத் திருமணம் செய்து கொடுத்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு 3000 காலாட் படைகளுடன் பாளேயக்காரராக காளேயார்கோவிலில் வாழும் உரிமை பெற்ருர்.

உதயத்தேவர் மகன் சசிவர்ணத்தேவர் சிறந்த வீரராக விளங்கினுர். பிரான்மலே, திருப்பத்தூர், சோழபுரம், திருப்பூவணம், முதலிய ஒன்பது கோட்டைகள் சசிவர்ணத் தேவரிடம் ஒப்புவிக்கப் பெற்றன. சேதுபதி பட்டத்திற்குரிய வாரிசு உரிமையில் குழப்பம் ஏற்பட்ட பொழுது சசிவர்ணத்தேவர் ஆதரவுடன் காத்தையா என்பவர் சேதுபதியானுர். காத்தையா சேதுபதி, தம் நன்றியைத் தெரிவிக்க சிவகங்கையை ஒரு தனிச் சீமையாக்கி அதன் அரசராக சசிவர்ணரை நியமித்தார். இராமநாதபுரம் சீமை ஐந்து பங்குகளாகப் பிரிக்கப் பெற்றது. அதில் இரண்டு பங்குகள் அடங்கிய பகுதி

சிவகங்கைச் சீமையாக விளங்குகிறது. இதனுள் அடங்கியவை சிவகங்கை, திருப்பத்தூர் ஆகியவை.

பிறகு சிவகங்கை அரசியாக இருந்த வெள்ளை நாச்சியாரிடம் அதிகாரம் பெற்று மருது சகோதரர்கள் சிவகங்கையை ஆண்டனர். ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கலகஞ்செய்ததாலும், கட்டபொம்மனுக்கும் பாதுகாப்பு அளித்தாலும், இறுதியில் மருது சகோதரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் தூக்கிலிடப்பட்டனர்.

சிவகங்கைச் சிற்றரசுக்குத் தலைவராயிருப்பதற்கு உரியவர் கௌரி வல்லபதேவர் என்பதை ஆங்கிலேயர் அறிந்தனர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியார் 1801-இல் அவரைச் சிவகங்கையின் சிற்றரசராக ஆக்கி முத்துவிசய ரகுநாத கௌரி வல்லபதேவர் என்ற பட்டத்தையும் சூட்டினர். அதுமுதல் சிவகங்கை ஆங்கிலேயருடைய ஆலோசனைப்படி, ஜமீன் ஒழிப்பு வரை இயங்கி வந்தது. இடையிடையே இதைக் குத்தகைக்கு எடுத்து வெள்ளைக்காரர்கள் ஆண்டனர். 1908-வரை P. Orr & Sons என்ற வெள்ளைக்காரக் கம்பெனியார் ஆளுகையில் சிவகங்கை ஜமீன் இருந்து வந்தது. இதை ஆர்துரை ஆட்சி என்று பாமர மக்கள் குறிப்பிடுவர்.

19˘0-இல் தம்புதுரை என்ற யாழ்ப்பாணத்தார் ஐ. சி. எஸ். அலுவலர், கோர்ட் ஆப் வார்ட்ஸ் கலெக்டராக இருந்தார். இவரே சிவகங்கை ஜமீனை நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தார். இவர் காலத்திலேயே நல்ல விளைவு ஏற்பட்டு, களஞ்சியங்கள் கட்டப்பட்டன. இதன் பயனாக சமஸ்தானம் அமைந்து திவான்கள் நியமனம் ஆயினர். இவர் காலத்தில் ஜமீன் எங்கும் நிலம் சர்வே செய்யப்பட்டது. வரி விதிப்பு முறை செட்டில் செய்யப்பட்டது. புதிய அரண்மனைக்கு அடிகோலப்பட்டது.

ஆங்கிலேயரின் ஆட்சி முறையைப் பின்பற்றி தாலூகாக்கள் அமைக்கப் பெற்றன. சிவகங்கை, சோழ புரம், திருப்பத்தூர், சாக்கோட்டை, திருவேகம்புத்தூர், இளையாங்குடி, திருப்புவனம், மானாமதுரை ஆகிய ஊர் களில் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டார்கள். வாசன் உட், குடுவா, R. M. சுந்தரம் ஆகியோரின் ஆட்சியில் 1680 சதுரமைல் பரப்புள்ள இந்த ஜமீன் நல்ல வருவா யுடன் விளங்கிற்று. 8-ல் ஒரு பகுதி பெரியாறு, வைகை பாசனத்தில் இருந்ததால், நிதி நிலை நன்றாக இருந்தது. 15 லட்சம் ரூபாய் வரியை குடிகளிடம் இருந்து வசூலித் தனர். பிரிட்டீஷ் அரசாங்கத்திற்கு 'பீஷ்குஷ்' (Peish kush) ஆக 3 லட்சம் ரூபாய் கட்டி வந்தனர். எஞ்சிய பணத்தில் மூன்றில் ஒரு பகுதி கோவில்களுக்கும், 3-ல் ஒரு பகுதி சத்திரங்களுக்கும், 3-ல் ஒரு பகுதி அரசர் களின் சொந்தச் செலவுகளுக்கும் செலவழிக்கப்பட்டது.

சத்திரங்கள் அனைத்துமே மருது சகோதரர்களால் கட்டப் பெற்றவை. அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு மட்டும் சிவகங்கை அரசர்களுக்கு உண்டு. சத்திரக் கட்டிடங்களிலோ, அவற்றின் பணங்களிலிலோ சிவகங்கை அரசர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

பிற பகுதிகள்

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இராமநாத புர மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளில் மல்லி நாடு, வில்லி நாடு என்பவை குறிப்பிடத்தக்கவை. இவை இரு வேடர்களால் உண்டாக்கப்பட்டவை என்று கூறப் படுகிறது. வில்லியின் தலைநகர் இன்றைய ஸ்ரீ வில்லிபுத் தூர் என்றும் மல்லி நாட்டின் தலைநகரான மல்லி, (சிவ காசியிலிருந்து 13 கி. மீ. தொலைவிலும் ஸ்ரீ வில்லிபுத்

தூரிலிருந்து 6 கி. மீ. தொலைவிலும் உள்ள ஊரி என்றும் சொல்லுவர்.

நாயக்கர் ஆட்சியில் ஸ்ரீவில்லிபுத்தூர் மிகவும் புகழ் பெற்றிருந்தது.

சிவகாசி, 1420 முதல் 1462 வரை, அரிகேசரி பராக் கிரமப் பாண்டியன் என்ற அரசனால் சிறப்புப் பெற்றது. அவன் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். அவன் காசியிலிருந்துகொண்டு வந்த ஒரு சிவலிங்கம் ஒரு உடங்காட்டில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. அந்தக் காட்டில் அக்கோவிலைச் சுற்றி உருவான ஊரே இன்றைய சிவகாசி நகரம்.

1659-இல் திருமலை நாயக்கர் தன் தம்பியான முத்து வீரப்ப நாயக்கரை சிவகாசிச் சீமைக்கு ஜாகீர்தார் (கவர்னர்) ஆக நியமித்தார்.

சேத்தூர், நெடுங்காலம் ஒரு குறுநில மன்னரின் ஆட்சியில் இருந்திருக்கிறது.

3. வாழும் மக்கள்

இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1961-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 24,21,7ɜ8. தொழில் வளம் நிறைந்த சிவகாசி, சாத்தூர் வட்டங்களிலும், பிறவட்டங்களில் வைகைக் கரையிலும் மக்கள் நெருக்கம் மிகுதியாக இருக்கிறது. இராமேசுவரம் தீவிலும், திருவாடானை வட்டத்திலும் மக்கள் நெருக்கம் குறைந்துள்ளது.

தமிழ் நாட்டில் சதுர மைலுக்குச் சராசரி 638 பேர் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் சராசரியாக 455 பேரே வாழ்கின்றனர். வேறு எந்த மாவட்டத்தையும் விட இங்குதான் மக்கள் நெருக்கம் குறைவு. காரணங்கள்—நீர்வளமின்மை, தொழிலின்மை, கடல்கடந்த நாடுகளுக்குக் குடியேற்றம்.

செங்கற்பட்டு, கன்னியாகுமரி, தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் மட்டுமே இராமநாதபுரத்தைவிட மக்கள் தொகை குறைந்தவை.

ஒரு லட்சத்தை எட்டிய நகரம் ஒன்றேனும் இல்லை. மிகப் பெரிய நகராக இம்மாவட்டத்தில் விளங்கும் இராஜபாளையத்தின் மக்கள் தொகை 71,003. அடுத்தடுத்த நகரங்கள்—விருதுநகர் (54,827), அருப்புக்கோட்டை (50, 200), ஸ்ரீ வில்லிபுத்தூர் (46,816), காரைக்குடி (43,698).

இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தோ-சீனா, மொரிசுத்

தீவு முதலிய பல நாடுகளுக்கு இம்மாவட்டத்தார் சென்றுள்ளனர். ஒரு சிலர் அங்கே நிலைத்தும் உள்ளனர்.

குறிப்பாக, இலங்கைக்கும் இம்மாவட்டத்திற்கும் தொடர்பு மிகுதி. இலங்கைக்குச் செல்லுவதை இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் சேர்ந்து தடுத்த போதிலும் கள்ளத்தனமாகச் செல்ல மக்கள் முயன்றனர். 1952—1960இல் இந்நிலை இருந்தது. படகுகளில் கள்ளத்தனமாக மக்களை ஏற்றிச் சென்று இலங்கைக் கரையருகே அவர்களை இறக்கி விட்டுச் சில பட கோட்டிகள் பெரும் பணம் சம்பாதித்தனர். நீரில் குதித்து நீந்தத் தெரிந்தவர் மட்டுமே கரையேறினர். இவ்வாறு படகில் செல்லுவதற்கு ஏற்பாடு செய்யும் தரகர்களும் உருவாயினர். தரகர்களை எதிர்பார்த்த மக்கள் கரையோரமாகக் காடாரம்பங்களில் புதர்களின் மறைவில் ஒளிந்து மழையாலும் தக்க உணவின்றியும் தவித்தனர். சிலர் போலீசாரிடம் சிக்கிக் கொண்டனர்

1941 டிசம்பர் ஏழாம் நாள் இரங்கூன் மாநகர் மீது ஜப்பானியர் குண்டு மாரி பொழிந்தனர். அதைத் தொடர்ந்து பர்மாவில் ஜப்பானியர் ஆட்சி ஏற்பட்டது. பர்மாவிலிருந்து 1942 ஏப்ரல்—மே மாதங்களில் இம்மா வட்டத்தார் பல்லாயிரம் பேர் கால்நடையாக அரிக்கன்—சட்டி காமம் வழியாவும் இம்பால்—மணிப்பூர் வழியாயும் மலைச்சரிவுகளிலும் அடர்ந்த காடுகளினூடேயும் வந்தனர். விலங்குகளுக்கும் நோய்களுக்கும் இரையானவர் தவிர எஞ்சியவரே தாய்நாட்டை அடைந்தனர். ஜப்பானிய ஆட்சியில் தொடர்ந்து தங்கியவர்களும் பலவாறான தொல்லைகளுக்கு ஆளாயினர்.

1961க்குப் பிறகு இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் சில நூறாயிரம் மக்கள் இம்மாவட்டத்திற்குத் திரும்பியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் எல்லா சமூகத்தாரும் வாழ்கின்றனர். எனினும் பல காரணங்களால் ஆங்காங்கே குறிப்பிட்ட சில சமூகத்தினர் செல்வாக்குப் பெற்றுள்ளனர்: இராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடானை, சிவகங்கை வட்டங்களில் மறவர்கள் செல்வாக்குடன் வாழ்கின்றனர். விருதுநகர்—சிவகாசிப் பகுதிகளில் நாடார்கள் பெருஞ் சிறப்புடன் வாழ்கின்றனர். எல்லா வட்டங்களிலும் சில சிற்றூர்களிலும் இவர்கள் ஏற்றம் பெற்றிருக்கின்றனர். எல்லா நகரங்களிலும் நாடார் பேட்டைகள் உள்ளன. இராஜபாளையம் பகுதியில் ராஜாக்கள் வாணிபத்திலும், தொழில்களிலும் முக்கியமாக விளங்குகின்றனர். ஸ்ரீ வில்லிபுத்தூரிலும், சாத்தூர் வட்டத்தின் சிற்றூர்களிலும் நாயக்கமார் குறிப்பிடத் தக்கவர்கள். அருப்புக் கோட்டையில் தேவாங்கர் சிறப்பான சமூகமாக உள்ளனர். வற்றுயிருப்பு, சிவகங்கைப் பகுதிகளில் பிராமணர்கள் ஓரளவு உள்ளனர். இராமநாதபுரம். முதுகுளத்தூர், பரமக்குடி வட்டங்களில் முஸ்லீம்கள் செல்வச் செழிப்புடன் திகழ்கின்றனர். அருப்புக் கோடை வட்டத்தின் சில பகுதிகளில் ரெட்டியார் சமூகத்தினர் தொகுப்பாக உள்ளனர்.

பரமக்குடியருகே நெசவாளராகிய சௌராஷ்டிரர் குறிப்பிடத்தக்க அளவு இருக்கின்றனர். திருப்பத்தூர் வட்டமும் தேவகோட்டை நகரும் சிவகங்கை வட்டத்தின் சில பகுதிகளும் 'செட்டிநாடு' என்ற பெயர் பெற்று நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் தாயகமாக உள்ளன.

வளமின்மையால், இம்மாவட்டத்திலிருந்து முக்குலத்தோர் அறுவடைக் காலத்தில் தஞ்சை மாவட்டத்திற்குப் பெருவாரியாகச் சென்று அறுவடை வேலைகளில்

ஈடுபட்டு வயிறு வளர்த்துத் தலைச்சுமை நெல்லுடன் திரும்புகின்றனர். வெளிமாவட்டத்து மக்கள் தஞ்சையில் அறுவடை வேலைகளில் ஈடுபடுவதற்கு 1965 முதல் அங்கு ஓரளவு எதிர்ப்பு இருந்து வருகிறது.

இந்தச் சமூகங்களைப்பற்றித் தெரிந்து கொள்வது, இம்மாவட்டத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளைப் புரிந்து கொள்ள இன்றியமையாதது ஆகும்.

4. வேளாண்மை

மழை, மண் வளம், மக்கள் உழைப்பு மூன்றும் சேர்ந்தால் வேளாண்மை சிறக்கும்.

இராமநாதபுர மாவட்டத்தில் பல இடங்களில் ஓராண்டுக்கு 5 அங்குலம் அளவுதான் மழை பெய்கிறது. 20 அங்குலம் மழை பெய்யும் இடங்களும் உள்ளன. இவை மிகவும் வளமான பகுதியாகக் கருதப்படுகின்றன

மண்வளம் வட்டத்துக்கு வட்டம் மாறுபடுகிறது. பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடானைப் பகுதிகளில் களர் நிலம் மிகுதி. இங்கு, அமிலச்சத்து நிறைய இருக்கிறது. சிவகங்கை வட்டத்தில் வைகைப் பாசனம் நீங்கிய பகுதி செம்மண் சரளை நிலமாக உள்ளது. இங்கு முந்திரியைத்தான் பயிரிட இயலுகிறது. சாத்தூர்; ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்கள் கரிசல் மண்பூமி அங்கே பருத்தி விளைந்து பொன் கொழிக்கிறது. அடிப்படை உரமோ வண்டலோ இம்மாவட்டத்து நிலங்களில் இல்லை. கடலோர வட்டங்கள் புயலாலும் கடலரிப்பாலும் பாதிக்கப்படுகின்றன.

இந்த மாவட்டத்து மக்கள் தஞ்சை மாவட்டத்தையும் பர்மா நாட்டின் தென் பகுதியையும் தங்கள் உழைப்பால் வளப்படுத்தி அவற்றை வேளாண்மைச் செல்வம் செழிக்கும் பகுதிகளாக ஆக்கியுள்ளனர். எனினும் மழையின்மையாலும் மண்வளத்தின் குறையாலும், இவர்கள் தங்கள் மாவட்டத்தை வளம்பெறச்

செய்ய இயலாதவர்களாக உள்ளனர். இவ்வகையில் இவர்களை இராஜஸ்தான் மாநிலத்து மக்களுடன் ஒப்பிடலாம்.

தமிழ்நாடு அரசினர் 1964-ஆம் ஆண்டளவில் வெளியிட்ட விவரப்படி, ஓராண்டுக்கு வேளாண்மை வருமான வரியாக மதுரை மாவட்டத்தில் 12 லட்சம் ரூபாயும் இராமநாதபுர மாவட்டத்தில் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாயும் அரசினர்க்குக் கிடைக்கிறது. இதிலிருந்து இம்மாவட்டத்தின் நிலையை அறிக.

பெய்யும் மழையும் ஒரு சீராகவோ குறித்த காலத்திலோ பெய்வதில்லை. மழையை உறுதியாக நம்ப இயலாததால், மழை பெய்த பிறகே நாற்றுப் பாவுவது வழக்கம். இவ்வாறு காலங்கடந்து நாற்றுப்பாவும் போது, சாகுபடி முடிவதற்குள் கண்மாய்களில் நீர் வற்றி விடுகிறது. கிணற்று வசதியிருந்து நாற்றுப்பாவி, மழை பெய்ததும் நடத் தொடங்குபவர்களுக்கு மட்டுமே வேளாண்மையில் வருவாய் கிடைக்கிறது.

மழை மிகுதியாகத் தேவைப்படாத பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவையாவன மல்லி, மிளகாய், பருத்தி, வரகு, குதிரைவாலி முதலியன. இவ்வாறே ஈரமில்லாச் சூழலில் சிறக்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் பட்டாசுத் தொழிற்சாலைகளும் இம்மாவட்டத்தில் பெரிய அளவில் உள்ளன.

கிணறு

திருவாடானை, இராமநாதபுரம், முதுகுளத்தூர் வட்டங்களில் பெரும்பாலும் உப்பு நீர்தான் கிடைக்கிறது. எனவே இங்கு, கிணறு வெட்டுவதற்கு வாய்ப்புக் குறைவாக உள்ளது.

கண்மாய்கள்

பெய்யும் மழை குறைவாக இருப்பதால், பெய்த அளவாவது அதை வீணாக்காமல் சேமித்து வைப்பதற்காக இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளில் ஐயாயிரம் கண்மாய்கள் உள்ளன. தமிழ்நாட்டின் வடபகுதியில் ஏரி, குளம், தாங்கல் என்று சொல்லப்படும் நீர் நிலைகளுக்கு இங்கே கண்மாய் என்ற பெயர் வழங்கிவருகிறது. பெரும்பாலும்மூன்று நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை புயலால் பெய்யும் பெருமழையைப் பயன்படுத்திக் கொள்ளவும் சங்கிலிப் பின்னல்போல அமைந்த இந்தக் கண்மாய்கள் உதவுகின்றன. இதை உணராமல், ஒன்பதரை ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த ஒரு பெருமான், 'இராமநாதபுர மாவட்டத்தில் கண்மாய்களின் பரப்பு விளை நிலத்தின் பரப்பைவிடக் கூடுதலாக இருக்கிறது; ஆகையால்தான் கண்மாய்களில் போதிய அளவு நீர் தங்கவில்லை. இவ்வளவு கண்மாய்கள் தேவையில்லை' என்று ஒரு முறை கூறினார்!

கடலோர மாவட்டமாக இருப்பதால், தண்ணீர் விரைந்து கடலுக்குச் சென்று விடுகிறது. ஆங்காங்கே கண்மாய்களும் ஊரணிகளும் இல்லாவிட்டால் வெள்ளத்தினால் ஏற்படும் சேதம் இன்னும் கூடுதலாக இருக்கும். இவற்றில் தங்கும் நீரும் கடலில் வீணாகிவிடும்.

இம் மாவட்டத்திலுள்ள பெரிய கண்மாய்கள்: பாண்டிக் கண்மாய், அபிராமம் கண்மாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய், ராஜசிங்கமங்கலம் கண்மாய் முதலியன.

இராஜசிங்கமங்கலம் கண்மாய் 21 கி. மீ. (13 மைல்) நீளம் உடையது. இதன் கொள்ளளவு 57 கோடி கன அடி. எனினும் இது ஆழமாக இல்லை. இதே நீளமுள்ள

வீராணம் ஏரி, ஆழமாக இருப்பதால் 40,000 ஏக்கர் நிலத்திற்குப் பாய்கிறது. இராஜசிங்கமங்கலம் ஏரி 4,900 ஏக்கருக்குத்தான் உதவுகிறது.

ஒவ்வொன்றும் 5,000 ஏக்கருக்குப் பாய்கிற எட்டுப் பெரிய ஏரிகள்—வளவனூர் ஏரி, பெருமாள் ஏரி முதலியன தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளன. அவை சுற்றளவில் குறைவாக இருப்பதால் அவற்றைப் பெரிய நீர் நிலைகளாக அரசினர் கணக்கில் குறிப்பதில்லை.

புகழ் பெற்ற இராஜசிங்கமங்கலம் ஏரியை ஆழப் படுத்துவதும் வைகை நீர் இந்த ஏரிக்குத் தங்குதடையின்றிப் பாய வழிவகுப்பதும் அரசினர் கடமை.

பாசன வசதிகள்

வைகை ஆற்றின் நீரால் தொன்றுதொட்டு இம் மாவட்டம் பயனடைந்து வந்திருக்கிறது. மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடையேயுள்ள பகுதி வெற்றிலைக் கொடிக்கால்களாலும் தென்னந் தோப்புக்களாலும் வளம் பெற்று, ஒரு காலத்திலும் பஞ்சம் அறியாப் பகுதியாக இருந்துவருகிறது.

வைகையின் குறுக்கே பேரணை கட்டப் பெற்ற பிறகு மதுரை மேலூர் வட்டங்களுக்கு வைகை நீர் 1920 அளவில் விடப்பட்டது. அதன் பிறகு இராமநாதபுர மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு வழக்கமாக வந்த வைகை நீர் வாராமல் தடைப்படுகிறது. ஆடி, ஆவணியில் தண்ணீர் வருவதில்லை. இதனால் ஆடிப்பட்டத்திலேயே உழவு வேலைகளை ஆரம்பிக்க இயலுவதில்லை.

திருமங்கலம் வட்டத்திற்கு நீர் வழங்க, ஆண்டிப்பட்டியில் பெரியதொரு அணை கட்டியபோதும், இராமநாதபுர மாவட்டத்தின் பாசன வசதி பாதிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில் திருப்பத்தூர் வட்டத்தில் கண்டவராயன்பட்டி அணை, தேவகோட்டைக்கு அருகே அனுமந்தக்குடி அணை, முதுகுளத்தூர்ப் பகுதியில் மலட்டாறு, ரெகுநாத காவேரி திட்டங்கள், ஏழாயிரம் பண்ணை அருகே சங்கரநத்தம் அணை, வற்றுயிருப்பு அருகே பிளவுக்கல் தேக்கம் ஆகியவற்றை அரசு நிறைவேற்றியிருக்கிறது. இராஜசிங்க மங்கலம் கண்மாயும் ஆழப்படுத்திச் சீர் செய்யப் பெற்றிருக்கிறது.

இராமநாதபுர மாவட்டத்தின் நலங்கருதி இரு புதிய திட்டங்களையேனும் அரசு நிறைவேற்ற வேண்டும். ஒன்று மேல் பெரியாறு திட்டம், மற்றொன்று பம்பை ஆறு திட்டம்.

பெரியாறு உற்பத்தியாகும் மலையுச்சியில் மேல் பெரியாறு என்ற இடத்தில் அணைகட்டித் தண்ணீரைச் சுரங்கத்தின் மூலம் திருப்ப வேண்டும். இவ்வாறு செய்தால், மதுரை—இராமநாதபுர மாவட்டங்களில் மூன்று லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் வசதியும் ஒரு லட்சம் கி. வா. மின்சார உற்பத்தியும் ஏற்படும்.

கேரளத்திலுள்ள பம்பையாற்று நீர் அரபிக் கடலில் வீணாகிறது. பெரியாறும் பம்பையாறும் அருகருகேயுள்ள இடங்களிலேயே உற்பத்தியாகின்றன. பம்பையாற்று நீரை மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதிக்குத் திருப்பிவிடலாம். 12 மைல் நீளத்துக்குச் சுரங்கப் பாதைகள் அமைத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியும், அதற்குத் தகுந்தாற்போல 2,450 அடி உயரத்திலிருந்து 1,77,000 கி.வா. மின்சார உற்பத்தியும் கிடைக்கும். வைப்பாற்றின் துணையாறான ரெசிங்க ஆற்றில் வந்து சேரும் இந்த நீர் வைப்பாற்றின் வழியாக இராமநாதபுர மாவட்டத்துக்கும் உதவும்.

மேற்கு முகமாக ஓடும் முல்லையாறு, நகரையாறு இரண்டையும் கிழக்கு முகமாகத் திருப்பிவிடுவதும் நன்று.

மாறு மதுரைக்கு மேற்கே, வைகைப் பகுதியில், அலுமினியத்தாதுப் பொருள்களில் ஆன படிகங்கள் உள்ளன. அவற்றினூடே மணித்துளிக்கு 750 லிட்டர் தண்ணீர் கொடுக்கும் குழாய்களைப் போடலாம்.

இத்தகைய படிகங்களிலிருந்து நீரை வெளிக் கொணர வேண்டும்.

தண்ணீரைச் சிக்கனமாகச் செலவிடவும் இசுரேல் நாட்டில் போல் இரவு நேரத்திலேயே பாசனத்திற்கு நீர் பாய்ச்சவும் மக்களைப் பழக்குவது அரசினர் கடமை.

கண்மாய்களில் நீர் உறிஞ்சும் கிணறுகளையும் போடலாம்.

காற்றியக்கி (Windmill)

காற்றியக்கி மூலம் இம்மாவட்டத்தில் வேளாண்மையை ஊக்குவிக்க அரசினர் முயலவேண்டும்.

பயிர்கள்

நெல்: வைகை பாயும் பகுதியிலும், பெரியாற்று நீர் பாயும் ஏரியூர் முதலிய சிறு பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள வற்றுயிருப்புப் பகுதியிலும் மழைவளத்தோடு கிணற்று வசதியும் உள்ள சின்னஞ்சிறு பகுதிகளிலும் நெல் பயிரிடப்படுகிறது.

உற்பத்தி போக மேற்கொண்டு தேவையான நெல்லுக்குத் தஞ்சை மாவட்டத்தையே இம்மாவட்டத்தினர் எதிர்பார்க்கின்றனர்; தஞ்சை மாவட்டத்தின்

எல்லையிலுள்ள புதுவயலில் நெல் அறைக்கும் ஆலைகள் ஏராளமாக உள்ளன.

பிற: கம்பு, கேப்பை, கேழ்வரகு, நெல் தவிர ஏனைய உணவுப் பொருள்கள் மாவட்டமெங்கும் ஓரளவு பயிரிடப் படுகின்றன.

கடலை: மாவட்டத்தின் பெரும்பகுதியில், குறிப்பாகச் சிங்கம்புணரிப் பகுதியில் மணிலாக் கடலை வேளாண்மை பெரிய அளவில் நிகழுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் கடலை விதை ஆராய்ச்சி நடைபெறுகிறது. Zonal Nucleus Seed Farm என்ற பெயரில், கிருஷ்ணன்கோவில் அருகே 50 ஏக்கர்ப் பரப்பில் ஒரு மாதிரிப் பண்ணை செயல்படுகிறது. திண்டிவனத்திலிருந்து வரவழைத்த விதைகளை இங்கு பொறுக்கி, இனவாரியாகப் பிரித்து, உழவர்களுக்கு வழங்குகின்றனர்.

சூரியகாந்திப் பூ எள்: இந்த எண்ணெய் வித்தினை இம்மாவட்டத்தில் பயிரிட அரசினர் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

கரும்பு: மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் சர்க்கரை ஆலை ஏற்பட்ட பிறகு, ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகங்கை வட்டங்களில் சிறு அளவில் கரும்பு பயிரிடப் படுகிறது. சில இடங்களில் வெல்லம் காய்ச்சுவதற்காகவும கரும்பு பயிரிடுகின்றனர்.

பருத்தி: இம்மாட்டத்தின் முக்கிய பயிர்களுள் ஒன்று, பருத்தி.

மென்மையான துணிகளையே மக்கள் இந்நாளில் விரும்புகின்றனர். இவற்றை உற்பத்தி செய்ய, ஆலைகள் வெளிநாடுகளிலிருந்து நீண்ட இழைப் பருத்தியை வரவழைக்கின்றன. நம் நாட்டிலும் இவ்வகையான உயர்

ரகப் பஞ்சு உற்பத்தி செய்ய இந்திய அரசு 1945-இல் முடிவு செய்தது.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தின் தட்பவெப்ப நிலை நீண்ட இழையும், மென்மையான திண்மையும், கூடுதலாக நூற்கும் திறமையும் கொண்ட பஞ்சு உற்பத்தி செய்ய ஏற்றதாக இருக்கிறது. இவ்வட்டத்து பெரியகுளம் பகுதியிலும் இனும் நாச்சியார் கோவில் பகுதியிலும் ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்பட்டன. இவற்றில் உற்பத்தியான M. C. U. 1 என்ற உகண்டாப் பருத்தி விதை விவசாயிகளுக்கு வழங்கப் பெற்றது. இதை ராஜபாளையம் பருத்தி என்று பொதுமக்கள் சொல்லுகிறார்கள். ஐந்து மாதங்களில் மகசூல் கிடைக்கிறது. 4 முதல் 8 பொதி வரை பருத்தி விளைகிறது. ஒரு பொதிக்கு (கம்போடியா பருத்தியைவிட) 25 ரூபாய் கூடுதலாக விலை கிடைக்கிறது.

M C U-1 மேலும் ஆராயப்பட்டு M C U-2 என்ற விதை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப் புதிய ரகம் 1 1/16" இழை நீளமும் 44-ஆம் நம்பர் வரை நூற்கும் தகுதியும் பெற்றிருக்கிறது.

13/16" இழை நீளமும் 50-ஆம் நம்பர் நூல் நூற்கும் தகுதியும் உள்ள பருத்தி ரகங்களும் உற்பத்தி செய்யப் பெற்றுள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் வட்டங்களிலும் அருப்புக் கோட்டை வட்டத்தின் ஒரு பகுதியிலும் பருத்தி சாகுபடியாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். குறிப்பாக, தெலுங்கை, வீட்டு மொழியாக உள்ள சமூகத்தினர் பருத்திச் சாகுபடியிலும், நாடார்கள் பருத்தி விற்பனையிலும் சிறந்து விளங்குகின்றனர்.

சாத்தூர், இராஜபாளையம், விருதுநகர் ஆகிய நகரங்களில் பருத்தி அறைக்கும் ஆலைகள் நெடுங்கால

மாக, ஆலை அரசரிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில ஜப்பானியராலும் ஆங்கிலேயராலும் 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கப் பெற்றவை.

சிலைமானில் சிறு அளவில் எகிப்திய நீண்ட இழைப் பருத்தி பயிரிடப்படுகிறது.

மிளகாய்: சாத்தூர், இராமநாதபுரம் வட்டங்கள் மிளகாய்க்குப் புகழ் பெற்றவை. ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி வட்டங்களிலும் மிளகாய் பயிராகிறது.

இம்மாவட்டத்து உழவர், மிளகாய்ச் சாகுபடியில் உப்பு உரத்தையும் புண்ணாக்கையும் நன்கு பயன்படுத்துகின்றனர்.

மிளகாய், பஞ்சு, புளி முதலிய பொருள்களுக்கு விருதுநகர் ஒரு பெரிய சந்தை.

கடற் பாசி: இம்மாவட்டத்தின் தீவுகளிலும் கடலோரப்பகுதிகளிலும் கொத்துக் கஞ்சிப் பாசி, தட்டைக் கஞ்சிப் பாசி, தட்டைக் கொத்துக் கஞ்சிப் பாசி, கருப்புப் பாசி, பவளக் கஞ்சிப் பாசி எனப் பல வகைப் பாசிகள் கிடைக்கின்றன. இவற்றைப் பலமுறை கழுவிக் காய வைத்து, காற்றோட்டமுள்ள கூடைகளில் போட்டிருந்து பிறகு சுத்தப்படுத்தி வெள்ளையாக்கப் பட்ட பாசிகளை மறுபடியும் மும்முறை தண்ணீரில் அலசி ஆட்டுக்கல்லில் அறைக்க வேண்டும்.

பின்னர் இரவு முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து; மாவாக அறைத்து வடிகட்டி பல வகையான ஜெல்லிகளைச் செய்யலாம். கடற் பாசிகளுடன் வனில்லா; ஸ்டிராபெரி, அன்னாசிப் பழம் முதலிய பொருள்களும் கேசரிப் பவுடரும் சர்க்கரையும் எலுமிச்சம்பழச் சாறும்

சேர்த்து விதவிதமான ஜெல்லி உணவுகளைச் செய்ய லாம்.

மீன்: கடலிலிருந்து கிடைக்கும் மற்றொரு முக்கிய உணவுப் பொருள் மீன். இராமநாதபுர மாவட்டத்து மீன்கள் இந்தியாவெங்கும் புகழ் பெற்றவை. 'போட் மெயிலில்' செல்லும் முக்கியப் பொருள் இதுவே! மீன் ஏற்றுமதிப் பொருள் என்ற சிறப்பும் உடையதாயிருப்ப தால், பாண்டிய மன்னர்கள் மீனைத் தங்கள் விருதாகக் கொண்டனர்; மீன் உருவத்தைத் தங்கள் கோவில்களில் பொறித்தனர். திராவிட நாகரிகம் எக்காலத்தும் மீனைச் சிறப்பாகக் கருதி வந்திருக்கிறது.

இம்மாவட்டத்தில் மீன் பிடிக்கப்படும் இடங்களை யும் இங்கே கிடைக்கும் மீன்களையும் பற்றிக் கூற வேண்டும். இராமேசுவரம், தனுஷ்கோடி, மண்டபம், பாம்பன், கீழக்கரை, பெரியபட்டினம் ஆகிய இடங் களில் மீன் பிடிப்பவர் ஏராளமாக உள்ளனர். அவர் கள் வீச்சுவலை, படிவலைகளை வீசி மீன் பிடிக்கிறார்கள். கடலூரிலும் சென்னையிலும்போல, கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கும் பழக்கம் இம்மாவட்டத்தில் இல்லை. மீன் பிடிக்கப் படகுகளில் செல்லுவது, படகு நிற்கும் இடத்திலிருந்து வலையை வீசுவதற்கே.

நூற்றுக்கணக்கான மீன் வகைகள் இம்மாவட்டத் தில் பிடிக்கப்படுகின்றன. அவை குறித்து, சுவையான நூல் எழுதலாம். ஐந்தாறு வகைகளைமட்டும் கூறுவோம்.

'வாவலை' என்பது ஒரு வகை மீன். இட்டிலி போன்ற உருவமும் மென்மையும் உடையது. ஆவலைப் போக்க வாவலைச் சாப்பிடு என்பது பழமொழி.

'உள்ளான்' என்பது மற்றொரு மீன் இனம். அதன் சுவை கருதி, உள்ளதை எல்லாம் விற்றுவது உள்ளான் வாங்கிச் சாப்பிடு என்ற சொல் வழக்கு உண்டு.

'வெள்ளி வயிறு' எனப்படும் எலும்பு நிறைந்த மீன் வகையும் இம்மாவட்டத்தில் பிடிக்கப்படுகிறது. இதில் கொழுப்புச் சத்து 2%. தான். இது சமைப்பதற்கு ஏற்றது.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் 'மம்மூலியா' இனத்தைச் சேர்ந்த ஆவுகரியா மீன்கள் இம்மாவட்டத்தில் குருசடை தீவில் நெடுங்காலமாகப் பிடிக்கப்பட்டுள்ளன. இவைபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

பாம்பன் கடலில் 7 அடி நீளமும் 2 அடி அகலமும் உள்ள கடற்கன்னிகள் அகப்படுகின்றன. இவை 60 ஆண்டுவரை வாழும். இவை முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்காமல், குட்டி போட்டுப் பால் கொடுக்கும். கடற் கன்னிகளைக் கடவுளராகக் கருதுவதால், தமிழ் நாட்டு மீனவர் இவற்றைச் சாப்பிடுவதில்லை. கடற் கன்னியின் தோல் பணப்பை (மணி பர்ஸ்) செய்ய உதவுகிறது.

தனுஷ்கோடியருகே இராட்சசச் சுராமீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவை 16 அடி நீளம் கூட இருக்கும். ஒரு மீனின் விலை ரூ 500. வலையைக் கரைக்கு இழுத்துவர இயலாமல், மீனவர் திணறும்போது, பொது மக்களும் கைகொடுத்து உதவுவர்.

மீன் ஆராய்ச்சி

உள்நாட்டில் பிடிபடும் மீன்களைப்பற்றி ஆராய கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பரக்பூரிலும், ஆழ்கடல் மீன்களைப்பற்றி ஆராயப் பம்பாயிலும் இந்திய அரசு ஆராய்ச்சி நிலையங்களை நிறுவியுள்ளது.

கடலோரத்தில் பிடிக்கப்படும் மீன்களைப்பற்றி ஆராய, கொச்சியிலும் கோவாவிலும் மண்டபத்திலும் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இவற்றுள் காலத்தரலும் ஆராய்ச்சியாலும் முக்கியமானது மண்டபத்திலுள்ள மத்திய கடலோர மீனின ஆராய்ச்சி நிலையம். (Central Marine Fisheries Research Institute, Mandapam Camp.) சுருக்கமாக இதை CMFRI என்று கூறுவர்.

இந்த நிலையம் 1947-இல் சென்னை மாநகரில், சென்னைப் பல்கலைக்கழகத்து உயிரின ஆராய்ச்சிப் பகுதியில் தொடங்கப் பெற்றது. பிறகு, மண்டபத்தில் கடற்படை மருத்துவ நிலையத்தில் இருந்து வந்தது. பல லட்சம் ரூபாய்ச்செலவில் இந்த நிலையத்திற்கெனச் சிறந்த கட்டிடங்கள் கட்டப் பெற்றுள்ளன. இந்தியாவெங்குமிருந்து ஏராளமான அறிஞர்கள் இங்கு ஆராய்ச்சி செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மலையாளிகளாக உள்ளனர். அதனால் இந்த நிலையத்தை Central Malayalee Fisheries Research Institute என்று கேலியாகக் குறிப்பிடுவது உண்டு.

இந்த நிலையத்தையே கொச்சிக்கு மாற்றவும் அவ்வப்போது முயற்சிகள் நடந்த வண்ணமாக உள்ளன. இந்நிலையத்தை மதுரைப்பல்கலைக்கழகத்தார் ஏற்று, உயிரின ஆராய்ச்சித் துறையின்கீழ் நடத்தி இந்தியப் பல்கலைக்கழகங்களின் மானியமும் பெறலாமென்று இந்நூலாசிரியர் பலமுறை மதுரைப் பல்கலைக்கழகத்துப் பேரவையில் எடுத்துரைத்துள்ளார். கேட்பார் ஒருவரும் இல்லை! 1970-இல் இந்த நிலையத்தில் பல முக்கிய பகுதிகள் கொச்சிக்கு மாற்றப்பெற்றுவிட்டன. இதைத் தடுக்க தமிழக அரசு தக்க முயற்சி செய்யவில்லை.

மண்டபம் நிலையத்துக்குட்பட்ட சிறு ஆராய்ச்சி நிலையங்கள் கள்ளிக்கோட்டை, காரிவார், பம்பாய்,

சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா, கொல்லம், காக்கிநாடா, பரங்கிப்பேட்டை, விஜயநகரம் ஆகிய இடங்களில் உள்ளன.

சார்டைன்ஸ், மக்கேரல், பட்டர்பிஷஸ், பிரான்சி, ஷெல்பிஷ், சீவீட்ஸ் ஆகிய மீனினங்கள் பற்றி ஆராய்ச்சி நடைபெறுகிறது. இந்தியக் கடல்மீன் அளங்களில், மீன் இன்னும் நிறையக் கிடைக்க என்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய்கின்றனர். அதற்காகச் சயாம், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளின் கடற்பகுதிகளில் அகப்படும் மீன்களை வரவழைத்து ஆராய்கின்றனர்.

மீன் எண்ணெய் செய்யும் தொழிற்சாலை ஒன்றை இங்கு அமைப்பது நலம்.

கடற்பாசியிலிருந்து உணவுப்பொருள்கள் செய்யும் முறையை இந்த ஆராய்ச்சி நிலையம் பரப்பிவருகிறது.

சங்கெடுத்தல்

சங்கெடுப்பது இம்மாவட்டத்தில் முக்கியமான ஒரு தொழிலாகும். மூவாயிரம்பேர் இதில் ஈடுபடுகின்றனர். சில நூறுபேர் ஹிந்துக்களும் கிறித்தவரும். ஏனையோர் முஸ்லீம்கள். இவர்களுக்குச் சம்பளம் அல்லது அகப்படும் சங்கில் பங்குகொடுத்து, இவர்களைக்கொண்டு தொழில் நடத்தும் முதலாளிகள் உள்ளனர்.

கீழக்கரை, பெரியபட்டினம், திருப்பாலக்குடி, மண்டபம், வெடாலைப்பகுதி மீனவர் பருவகாலத்தில் தூத்துக்குடியில் சங்கு எடுக்கின்றனர்.

இராமநாதபுரம் கடலோரப் பகுதிகளில் சங்கு எடுப்பது பலநூற்றுண்டுகளாகச் சேதுபதிகளின் தனி உரிமையாக இருந்தது. 18-ஆம் நூற்றுண்டின் இறுதியில்

முத்துக்குளிக்கும் உரிமை பிரிட்டிஷாருக்கு மாறிய போதும், சங்கு எடுப்பது சேதுபதிகளிடமே இருந்தது. ஜமீன் ஒழிப்புக்குப்பிறகே, இவ்வுரிமை அரசினர்க்குக் கிடைத்தது.

பட்டி, இருபிறவி, இராமேசுவரம் என்னும் மூவகைச் சங்குகள் இம்மாவட்டத்துக் கடற்பகுதிகளில் கிடைக்கின்றன. இந்தச் சங்குகளுக்கு வங்காளத்தில் நல்ல 'கிராக்கி' உண்டு. பூகம்பம் ஏற்பட்டால் சங்கு எடுத்துக்கொண்டு ஊதும் வழக்கம் வங்கப்பெண்களிடம் நிலவுகிறது.

நோய் தீர்க்கும் ஆற்றல் சங்குக்கு உண்டு. அதனாலேயே பால், மருந்து முதலியனவற்றைத் தாய்மார்கள் சங்கில் ஊற்றிக் கொடுக்கின்றனர். இந்நாளில் 'மெத்தப் படித்தவர்கள்' கப் சாசரிலும், 'புதுப்பணக்காரர்கள்' வெள்ளி, தங்கம், முதலியவற்றாலான பொருள்களிலும் பாலும் மருந்தும் குழந்தைகட்கு ஊட்டுகின்றனர்.

வளையல், மோதிரம் ஆகியவை செய்யவும் சங்கு அறுக்கப்படுகிறது, இவ்வாறு சங்கு அறுத்துக் கீழக் கரையில் செய்யப்படும் வளையல்கள் வங்காளத்தில் விற்பனையாகின்றன.

இராமேசுவரத்தில் ஜனவரி முதல் மார்ச்சுவரை சங்கு எடுக்கிறார்கள். நல்ல சாதி (சங்கிலும் சாதி இருக்கிறது!) சங்குகள் கிடைக்கின்றன்.

மண்டபம் காம்பிலிருந்து 3 கி. மீ. தொலைவிலுள்ள தென்வெட்டலையில் ஆகஸ்டுமுதல் டிசம்பர்வரையும் பெரிய பட்டினத்திலும் கீழக்கரையிலும் செப்டம்பர் முதல் ஜனவரி வரையும் சங்கு எடுக்கிறார்கள்,

அமாவாசை; முழுநிலா நாட்களில் தீவுகளுக்குச் செல்லும் வலையர் சமூகத்துப் பெண்கள் தண்ணீர் வடியும்போது சங்கு எடுக்கின்றனர்.

வலம்புரிச் சங்கு

தேவிபட்டினம், திருப்பாலக்குடி, மோரியனை; கரங்காடு ஆகிய ஊர்களின் எதிரிலுள்ள கடல்களில் வலம்புரிச்சங்கு கிடைக்கிறது.

சங்கு வகைகள் பல. அவற்றுள் சிறந்தது வலம்புரிச் சங்கு. இது, கடவுளர்க்கு நீராட்டப்பயன்படும். வலம்புரிச்சங்கு கிடைத்தால் சைவர்கள் அதனைத் தங்கப் பூண்போட்டுப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வர். மதுரை, இராமேசுவரம், திருச்செந்தூர்க் கோவில்களில் இவ்வகையாக வலம்புரிச் சங்குகளைப் பேணி வைத்திருக் கின்றனர். விழாநாட்களில் 108 வலம்புரிச் சங்குகளைக் கொண்டு அபிடேகம் செய்வர்.

தஞ்சைமாவட்டம் திருக்கடையூரில் கார்த்திகைச் சோமவாரங்களில் 1008 சங்குகளில், உள்ளுறையும் தெய் வத்திற்குத் திருமுழுக்குச் செய்கின்றனர்.

வலம்புரிச்சங்கை வைணவர்களும் பெரிதும் போற்றுவர்.

வலம்புரிச் சங்கு இலக்குமியின் இயல்புடையது. அது இருக்கும் வீடு, செல்வப் பெருக்கோடு விளங்கும் என்பது அனுபவம். அதன் விலை ஓராயிரம் ரூபாய்க்கு மேற்பட்டது.

வலம்புரிச் சங்கை 'லெட்சுமி' விக்கிரகத்தின் கால் ஓரத்தில் அடுக்கி வைக்கும் மரபு வங்காளத்தில் உண்டு.

இசை ஒலி எழுப்பி, பேசுவதுபோலக் கேட்கும் தன்மையது வலம்புரிச்சங்கு. வலம்புரிச் சங்கை

எடுக்கும் மீனவர்க்கு அதன் மதிப்பில் ஒரு பங்கைக் கொடுப்பது வழக்கம். கீழக்கரை, சங்குத்தொழிலுக்கு ஒரு பெரிய சந்தையாக உள்ளது. இவ்வூர்ச் செல்வர்கள் இல்லங்களில் வலம்புரிச் சங்குகளைக் காட்சிப் பொருளாகவும், விற்பனைப் பொருளாகவும் காணலாம்.

காடுகள்

இந்த மாவட்டத்தில் 500 சதுர கி. மீ. பரப்புக்குக் காடுகள் உள்ளன. இது மாவட்டத்தின் அளவில் 1 0-க்கு நான்கு பங்கு. 100-க்கு 30 பங்கு காடுகள் உள்ள மாவட்டங்களில்தான் பொருளாதார வளர்ச்சியும் மழையும் இருக்கும்.

இம்மாவட்டத்துக் காடுகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சிமலைக் காடுகளே வருவாய் தரும் காடுகள். இவற்றின் பரப்பு 250 ச கி.மீ.

இராமநாதபுர மாவட்டம் ஏற்பட்ட பிறகும், திருநெல்வேலி மாவட்டத்துக் காடுகள் நிர்வாக அலுவலரே இராமநாதபுரத்துக்கும் பொறுப்பாக இருந்தார். 'மலபார்' மாவட்டம் பிரிந்து காடுகளைப்பேண வேண்டியநிலை தமிழக அரசுக்கு ஏற்பட்டபின் 1957-இல் இராமநாதபுர மாவட்டத்திற்கெனத் தனியே காட்டிலாகா அலுவலர் ஒருவர் நியமிக்கப்பெற்றார்.

மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் மரங்கள் 70 அடி (21 மீட்டர்) உயரம்வரை வளர்கின்றன. தேக்கும் தோதகத்தியும் உள்ளன. இங்கே கிடைக்கும் தேக்கு, மலையாளத்துத் தேக்கைப் போன்று உயர்ந்தது அன்று; எனினும் இது சிறு வீடுகள் கட்டவும் வண்டிச் சக்கரம் செய்யவும் உதவுகிறது. சந்தனமரம் ஆண்டு தோறும் பத்து டன் கிடைக்கிறது; இது, வ. ஆ. மாவட்டத்துத்

திருப்பத்தூரிலுள்ள அரசாங்க விற்பனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கே தரம் பிரித்து விற்கப்படுகிறது.

இக்காடுகளினூடே, 800 அடி (250 மீட்டர்) உயர முள்ள மலைப் பகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து 13 கி. மீ. தொலைவில் அழகர்கோவில் இருக்கிறது. வாரத்தில் இரு நாட்கள் வழிபாடு நடப்பதும் வற்றாத சிறு தீர்த்தம் இருப்பதும் இதன் சிறப்புக்கள். ஜீப்பில், கோவில்வாயில்வரை செல்லலாம்.

இம்மலை உச்சியில் தவளை போன்ற உருவில் ஒரு பெரிய கல் இருக்கிறது. இது ஓர் அசுரனின் உருவம் என்றும், இந்த அசுரன் மரம் செடி கொடிகளை அழித்துக் காட்டுவளத்தைப் பாழ்படுத்தி வந்தான் என்றும், மதுரையிலிருந்து அழகர் இக்காட்டுக்கு வந்து தம் காலால் அசுரனை மிதித்தார் என்றும், இந்தக் காடு நாளும் வளர்ந்துவர அழகர் வழி வகுத்தார் என்றும், இதனாலேயே இங்கு அழகர்கோவில் அமைந்தது என்றும் கர்ணபரம்பரைக் கதை வழங்கி வருகிறது.

இம்மலையில் 4,000 அடி உயரத்தில் முதலியார் ஊற்று என்னுமிடத்தில் காட்டிலாகாவினர் ஒரு விடுதி கட்டியுள்ளனர். அழகர்கோவிலிலிருந்து கால்நடையாகச் செங்குத்தான மலை மீது மூன்று கி.மீ. தூரம் ஏறி இந்த இடத்தை அடையலாம். இந்த விடுதியில் பொது மக்களும் தங்கலாம். விடுதியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் வரையாடு, கடுவாய், சிறுத்தை, மான், காட்டெருமை, யானை ஆகியவை வாழ்கின்றன.

மலைச் சரிவு, பள்ளத்தாக்கு ஆகியவற்றின் எழிலைக் காணவும், நடை பாதையாக 11 கி.மீ. சென்று கேரள எல்லையை அடையவும் இந்த விடுதியைப் பயன்படுத்தலாம்.

திருவாடானை வட்டத்தில் சவுக்கு, கர்ப்பூர மரத் தோட்டங்களை அரசினர் உண்டாக்கி வருகின்றனர்.

பிரான்மலைக் காடுகளில் வெறும் சருகும் ஒடை மரங்களுமே உள்ளன. ஆத்திக்காடு, வேலங்குடி, கோவிலூர், மணச்சை, செஞ்சைக் காடுகளிலும் திருப் பத்தூர் சிவகங்கை வட்டங்களின் பிற காடுகளிலும் 10,000 ஏக்கரில் முந்திரி பயிரிடப்பட்டிருக்கிறது.

சிவகங்கை வட்டத்தில் அடர்த்தியான காடுகள் 18-ஆம் நூற்றூண்டின் இறுதிவரை இருந்தன. மருது சகோதரர்களை எதிர்த்த ஆங்கிலப்படை விரைந்து செல்ல அவையே தடையாக இருந்தன.

இராமேசுவரம் தீவிலும், இராமநாதபுரம் வட்டத் தின் பிற பகுதிகளிலும் கடல் அரிப்பைத் தடுக்க அர சினர் பல்லாயிரம் ஏக்கரில் சவுக்கு மரங்களைப் பயிரிட் டிருக்கின்றனர். 1952-க்குப் பின் இலங்கை அகதி களுக்கு உதவ, அரசினர் துணையுடன் பல்லாயிரம் ஏக்கரில் தென்னை பயிரிடப் பெற்றிருக்கிறது. உச்சிப் புளியிலும் சிங்கம் புணரியிலும் அரசினர் தென்னை நாற்றுப் பண்ணைகள் உள்ளன,

சதுரகிரிமலையில் சாதிலிங்கம் என்ற உயர் சாதி மரம் இருக்கிறது. இது தொட்டில் செய்யப் பயன் படுகிறது. இதைக் குறித்து,

> 'சதுரகிரி மலையேறிச்
> சாதிலிங்கக் காட்டை வெட்டிச்
> சேர்த்துப் பணிப்படுத்திச்
> சித்திரத்தில் ஒப்பமிட்டு'

என்ற நாட்டுப் பாடல் வழங்குகிறது.

பழங்கள் :

இம்மாவட்டத்தில் எலுமிச்சம் பழம், பேரிக்காய், கொய்யாப் பழம், சப்பட்டை (பங்கனப்பள்ளி) பஞ்ச வர்ணம் என்ற இருவகை மாம்பழங்களும் கிடைக்கின்றன. இவைபற்றி 'இராஜ பாளையம்' நகர்பற்றிய விவரங்களில் இந்நூலின் பிற்பகுதியில் கூறுவோம்.

கால் நடைப் பண்ணை :

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஒசூர், மைசூர் மாநிலத்துடன் இணைந்து விடக்கூடும் என்ற நிலை 1955 முதல் 1956 வரை இருந்தது. மொழி வழி மாநில அமைப்புப்பற்றிய எல்லைப் பிரச்சினையும் கிளர்ச்சியும் அந்நாளில் நிலவின.

இதனால் அரசினர் ஒசூர்ப் பண்ணையை மேலும் விரிவாக்காமல், 1956-இல் செட்டிநாடு விமான நிலையம் இருந்த இடத்தில் 1970 ஏக்கர்ப் பரப்பில் புதிய மாட்டுப் பண்ணை ஏற்படுத்தினர். தமிழ் நாட்டில் இதுவே பெரிய கால்நடைப் பண்ணையாகும். காங்கேயம், தார்ப்பார், முரா முதலிய பலவகை மாடுகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. பால் விற்பனையும் நடைபெறுகிறது. கோழிப் பண்ணையும் இருக்கிறது.

பலவகை மரங்களும் இங்கு உள்ளன. இப் பண்ணையினர் புல் வளர்ச்சியில் கருத்தூன்றி, பலவகைப்புற்களை வளர்த்து வருகின்றனர்.

ஆடுகள் :

இராமேசுவரம் தீவில் செம்மறியாடு வளருகிறது. இவற்றை, தமிழ் நாடெங்கும் ஓட்டிபோய் வயல்களில் உரம் போடுவதற்காகக் கிடையமர்த்திப் பலர் தொழில் நடத்துகின்றனர்.

5. சமய நிறுவனங்கள்

இந்திய நாட்டின் சமய வரலாற்றில் இம்மாவட்டம் சிறந்த இடம் பெற்றிருக்கிறது. 'இமயம் முதல் சேது வரை', 'காசி இராமேசுவரம்' என்ற சொற்றொடர்களிலிருந்து இச்சிறப்புத் தெரியவரும்.

சைவ சமயம்

சைவ சமயத்தினர் உச்சிமேல் வைத்துப் போற்றும் காசி, இராமேசுவரத்துடன் பலவகைத் தொடர்புடையது. மேலும் காசி விசுவநாதருக்கு நாள்தோறும் முக்காலமும் அபிடேகம் செயயும் உரிமை பெற்றிருப்பவர்கள் இம்மாவட்டத்திலேயே பெருமபாலும் வாழும் நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆவர்.

தேவாரம் பெற்ற பாண்டிநாட்டுத்தலங்கள் 14-இல் எட்டுத் தலஙகள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவையாவன: 1. கொடுங்குன்றம் (பிரான்மலை), 2. திருப்புத்தூர் (இவ்விரண்டும் திருப்புத்தூர் வட்டத்தில் உள). 3. திருப்புனல் வாயில் 4. திருஆடானை (இவ்விரண்டும் திருவாடானை வட்டத்தில் உள) 5. திருக்கானப்பேர் (காளையர் கோவில்) 6. திருப்பூவணம் (இவ்விரண்டும் சிவகங்கை வட்டத்தில் உள.) 7. இராமேசுவரம் 8 திருச்சுழியல் (அருப்புக்கோட்டை வட்டம்).

"பார்மேல் சிவபுரம் போல் கொண்டாடும் உத்தரகோச மங்கை ஊர்" என்று மணிவாசகப் பெருமானால் திருவாசகத்தில் பாடப்பெற்ற தலம் இம்மாவட்டத்தின் கண் அமைந்திருக்கிறது; 'மண் முந்தியோ மங்கை

முந்தியோ' என்ற பழஞ் சொற்றொடரிலிருந்து திரு வுத்தரகோச மங்கையின் பழமை தெரிகிறது. இது நடராசர் நடனமாடிய இரத்தின சபையையுடைய தலம்; ஆதி சிதம்பரம் எனப்படுவது. இத்தலம் அருண கிரிநாதர் திருப்புகழும் உடையது. 64 திருவிளையாடல் களில் ஒன்றாகிய 'வலைவீசிய லீலை' நடந்த, பரதவர் மிகுந்த கடற்கரைப் பகுதி உத்தரகோச மங்கைக்கு அருகே உள்ளது.

தேவார வைப்புத் தலமாகிய ஐயபுரி என்னும் வெற்றியூரும் திருப்புகழ் பெற்ற குன்றக்குடியும் முறையே நாட்டரசன்கோட்டைக்கும் காரைக்குடிக்கும் அருகேயுள்ளன.

பிள்ளையார் பட்டியிலும் குன்றக்குடியிலும் குகைக் கோவில்கள் காணப்படுகின்றன. இவை பல்லவர் காலத் தியன.

குறிப்பிடத்தக்க பிற கோவில்கள் கோவிலூர், இளையாத்தக்குடி, நேமம், வன்னியர் சூரக்குடி, நகர சூரக்குடி, சிவகாசி ஆகிய ஊர்களில் உள்ளன. இராம நாதபுரத்தில் தாயுமானவர் சமாதிக் கோவில் இருக் கிறது.

அம்மன் கோவில்களுள் சிறப்பாகச் சொல்லத் தக்கவை நாட்டரசன் கோட்டை கண்ணகி (கண்ணுத் தாள) கோவில், காரைக்குடி கொப்புடைய அம்மன் கோவில், விருதுநகர் மாரியம்மன் கோவில், சாத்தூர்ப் பகுதியிலுள்ள இருக்கன்குடி மாரியமமன் கோவில். இராமநாதபுரத்தில் இராஜராஜேசுவரி கோவில்.

இம்மாவட்டத்திலுள்ள கோவில்கள் அரசாங்கக் கோவில்கள், தனிப்பட்டவர் கோவில்கள், இராமநாத புரம் அரசர் ஆட்சியிலுள்ள கோவில்கள், சிவகங்கை

அரசர் ஆட்சியிலுள்ள கோவில்கள், நகரத்தார் கோவில்கள் எனப் பலவகைப்படும். நகரத்தார் பிற மாவட்டங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் கோவில் கட்டியும் திருவிழா நடத்தியும் சைவ சமயத்துக்குச் செய்துள்ள தொண்டு இணையற்றது.

தத்புருஷ தேசிகர் பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார் அவர்கள் சமயத் தத்துவங்களைப் பற்றிச் சீரிய கட்டுரைகள் எழுதியும் அரிய சொற்பொழிவுகளும் பாடவகுப்புக்களும் நடத்தியும் உபதேசம் செய்து வைத்தும் தென்கிழக்காசிய நாடுகளிலெல்லாம் சைவ சமயத்தைப் பரப்பி வருகின்றார்கள்.

வைணவம் :

வைணவ தலங்களுக்கும் இங்கே குறைவில்லை. இராமேசுவரம், திருப்புல்லாணி (இராமநாதபுரம் அருகே) அரியக்குடி (காரைக்குடியருகே), திருக்கோட்டியூர் (திருப்பத்தூர் அருகே), ஸ்ரீவில்லிபுத்தூர், திருத்தங்கல் (சிவகாசி அருகே) ஆகிய தலங்கள் தொன்மைப் புகழுடையன. இவைபற்றி இந்நூலின் பிற்பகுதியில் விரிவாகக் கூறுவோம்.

முஸ்லிம் ஆட்சியில் ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறிய வைணவர்கள் இம்மாவட்டத்தில் காளையார் கோவிலில் தஞ்சம் அடைந்தனர். காளையார் கோவில் அவர்களுடைய அரசரின் புகலிடமாக விளங்கிற்று. இரண்டாம் குமார கம்பணன் என்ற அரசனின் தளபதியான கோபண்ணா, ஸ்ரீரங்கத்தை முஸ்லிம்களிடமிருந்து மீட்டு அங்கு மீண்டும் ஸ்ரீரெங்கநாதரைப் பிரதிஷ்டை செய்த பிறகு அவர்கள் காளையார் கோவிலிலிருந்து ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பினர்.

ஸ்ரீ இராமாநுஜர் வாழ்க்கையோடு ஒட்டிப் பெரும் புகழ் பெற்ற புனிதமான திவ்வியதேசம் திருக்கோட்டியூர். வைணவ தத்துவம் பயின்றவர்கள் அனைவர்க்கும் தெரிந்த ஊர். இத்தலத்தில் சேவிக்காதவர்கள் நாயாய்ப் பிறப்பார்கள் என்பது வைணவர் நம்பிக்கை.

தாய்லந்து நாடுவரை பரவியுள்ள திருப்பாவை பாடிய ஆண்டாள் பெரியாழ்வாரின் மகளாக அவதரித்துத் திருக்கோவில் கொண்டதுமாகிய தலம் இம்மாவட்டத்து ஸ்ரீவில்லிபுத்தூர்.

சமணம் :

இம்மாவட்டத்தில் ஒரு காலத்தில் சமண மதம் பரவியிருந்தது என்பது குன்றக்குடி அருகேயுள்ள சமணர் குகைகளாலும் தேவகோட்டை—வட்டாணம் சாலையிலுள்ள அநுமந்தக்குடி என்னும் ஊர்ச் சமணர் கோவிலாலும் தெரிகின்றது.

இஸ்லாம் :

கடலோரப் பகுதிகளில் இஸ்லாமிய சமயம் பரவியுள்ளது. இராமேசுவரம் தீவில் பல மசூதிகள் உள்ளன; இராமநாதபுரம், தொண்டி, தேவிபட்டினம், கீழக்கரை, இளையான்குடி, கமுதி, மண்டபம், திருப்பாலைக்குடி, சுந்தரபாண்டியன் பட்டினம், நம்புதாளை, அபிராமம், கீழக்கரைப் பகுதியிலுள்ள பெருநாழி மணல்மேடு கொந்தக் கருணையப்பா தர்கா என்ற ஊர்களிலுள்ள மசூதிகள் குறிப்பிடத்தக்கன.

குணங்குடி என்னும் ஊரினரான மஸ்தான் சாகிபு (1800—1847) குர்ஆன் வேதத்தை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர்களில் ஒருவர். இவரது பாடல்கள் எளிய சொற்களும் ஆழ்ந்த பொருள்களும் உடையவை.

சீதக்காதி வள்ளல் 17-ஆம் நூற்றுண்டில் கீழக்கரையில் பிறந்தார். நவரத்தின வாணிகத்தில் அளவிடற்கரிய செல்வம் ஈட்டி, மன்னரி போல வாழ்ந்தார். தாம் அணிந்திருந்த ஆபரணங்களை, இறந்த பிறகு புலவருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததால் 'செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி' என்று புகழ் பெற்றுர். இந்துக்களின் கோவில் போல அமைந்த பள்ளி வாசல் ஒன்றை இவர் கீழக்கரையில் கட்டினுர். அதனுள் இவர் சமாதி இருக்கிறது.

இவ்விருபதாம் நூற்றுண்டில் இஸ்லாமியச் சமூகத்தின் பெரியாராகவும் சமயத் தலைவராயும் பெரிதும் மதிக்கப்படுபவரும் மேதகு அல்லமா தைக்கா அஹமது அப்துல் காதர் வால்லியுல்லா அவர்கள் இம்மாவட்டத்தில் அவதரித்தவர்களே. இவர்களுடைய அருமையும் பெருமையும் ஆற்றலும் தெய்வீக சக்தியும் 1967-இல் வெளிவந்த இவர்களுடைய எண்பதாம் பிறந்தநாள் மலரிலிருந்து தெரியவரும்.

கிறித்தவம்

கத்தோலிக்க சமயப் பெரியாராகிய அரிச் அருளானந்தர் அழியாப் புகழ் பெற்றது இம்மாவட்டத்தில். இவர் டி-பிரிட்டோ என்ற பெயருடன் 1647இல் போர்ச்சுக்ல் நாட்டில் பிறந்தார். 1675-ஆம் ஆண்டளவில் சோழ நாட்டிலும் 1680 முதல் இடையிடையே மறவர் நாடாகிய இராமநாதபுரம் திருவாடனை முதலிய வட்டங்களிலும் கிறித்தவ வேதத்தைப் போதித்தார். திரளான மக்கள் கிறித்தவராயினர். இதைச் சேதுபதி விரும்பவில்லை. சேதுபதியின் அலுவலர்கள் அருளானந்தரைக் கொடுமைப்படுத்தினர். கசையால் அடித்தனர். கல்லிலும் முள்ளிலும் உருட்டினர், உயிரோ

டிருக்கிருரா என்று தெரிந்துகொள்ள, தீ மூட்டி மாட்டை எழுப்புவதுபோல எழுப்பினர். 1693 பிப்ரவரி 4-ஆம் நாள் புதன்கிழமையன்று ஓரியூரில் அருளானந்தர் தலை வெட்டப்பெற்றது. இன்றும் அதன் நினைவாக ஒரு திருவிழா நடைபெறுகிறது.

அருளானந்தர் நினைவாக அர்ச் ஆரோக்கிய மாதா கோவில்கட்ட முடிவாயிற்று. 1734-இல் சேதுபதி இசைவு ஆணையில் கையொப்பமிட்டார். சேதுபதியின் மைத்துனன் ஒருவன் கிறித்தவஞகி, தானே தன் தோளில் செங்கற்களைச் சுமந்து வந்து, கோவில் கட்ட உதவினுன்.

அருளானந்தர் நினைவாக ஓரியூரில் அவர் தலை வெட்டப்பட்ட இடத்தில் இந்தக் கோவிலும் கொலை செய்யப்படுமுன் அவர் செபித்த இடத்தில் அர்ச் அருளானந்தர் சிற்றுலயமும், போப்பாண்டவரால் அவருக்கு அர்ச்சிஷ்யப்பட்டம் 1947-இல் வழங்கப்பெற்ற பிறகு அவர் பெயரால் ஒரு பேராலயமும் கட்டப்பெற்றிருக்கின்றன.

ஆங்கில ஆட்சியின் பயனுகவும் கடலோர வணிகர் தொடர்பாலும் கிறித்தவ சமயம் இம்மாவட்டத்தில் ஓரளவு பரவியுள்ளது. இராமேசுவரம் தீவில் சில தேவாலயங்கள் உள்ளன. பிற வட்டங்களைவிட, இராமநாதபுரம் வட்டத்தில் கிறித்தவம் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. தேபிரித்தோ பெருமகனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளால் திருவாடானை வட்டத்துச் சருகணியும் ஓரியூரும் கத்தோலிக்கருக்கு மிகப் புனிதமான தலங்களாகி விட்டன. இவை பற்றி, பிறிதோரிடத்தில் கூறுவோம்.

சுவிடிஷ் மிசன் ஏற்படுத்திய மருத்துவ மனையையொட்டித் திருப்பத்தூரில் உண்டான தேவாலயம் இப்போது தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயமாக விளங்குகிறது.

இம்மாவட்டத்தில் கிறித்தவத்தை வளர்த்த பெரு மக்களுள் முக்கியமானவர் (தஞ்சை சரபோஜி மன்னரின் நண்பருன) ஸ்குவார்ட்ஸ் (1726-1798) பாதிரியார்.*

கத்தோலிக்க 'விகார்' ஒருவர் சருகணியில் உள்ளார்.

கீழ்க்கண்ட ஊர்களில் கத்தோலிக்கர் தொகுப்பாக உள்ளனர். திருவாடானை வட்டத்தில் ஓரியூர், ஆனகடா வூரணி, புளியால், இருதயபுரம் (ராஜ சிங்க மங்கலம்), சருகணி, இராமநாதபுரம்வட்டம் இராமநாத புரம், புதுப்பட்டினம், தங்கச்சி மடம், (திருப்பத்தூர் வட்டம் திருப்பத்தூர், கூத்தனூர், காரைக்குடி, சிவ கங்கை வட்டம் மைக்கேல்புரம் (வேம்புத்தூர்), சூசையப் பர் பட்டினம் (காளையார் கோவில்), இடைக்காட்டூர், சவேரியர் பட்டினம் (மானமதுரை) பரமக்குடி வட்டம் சாலைக்கிராமம், சூரணம், சுத்து மூன்றடைப்பு, இவ்வூர் களிலெல்லாம் கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளன. ஓரியூரிலும் புளியாலிலும் சருகணியிலும் உள்ள தேவா லயங்கள் மிகப் புகழ் பெற்றவை.

குறிப்பிடத்தக்க பிற கத்தோலிக்க ஆலயங்கள் செஞ்சை, Church of Child Jesus, காரைக்குடி R. C. church, இடைக்காட்டூர் st. James church, எம். சவேரி யார் பட்டினம் Church of our lady of Assumption, புளியால் Church of our lady of Lourdes, ராஜகம்பீரம் Holy Rosary Church.

தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த கோவில் கள் நெடுங்காலமாக ஸ்ரீவில்லிபுத்தூரிலும் இராமநாத புரம் வட்டத்தின் பல பகுதிகளிலும் திருப்பத்தூரிலும் இயங்கி வருகின்றன.

திருவிழாக்கள்

சித்திரை முதல்நாள் (புத்தாண்டுப் பிறப்பு) காரைக்குடியில் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. வைகாசி விசாகம் குன்றக்குடியிலும் வைகாசி முழு நிலா அரியக்குடி கோவிலும் வைகாசி விசாகத்தில் கண்ணுடைய நாயகி திருவிழா நாட்டரசன் கோட்டையிலும்; ஆனி மாதத்தில் இராமலிங்கம் பிரதிட்டை இராமேசுவரத்திலும், ஆடிப்பூரம் ஸ்ரீ வில்லிபுத்தூரிலும், ஆடி அமாவாசை முன்பு தனுஷ்கோடியிலும் இப்போது இராமேசுவரத்திலும் குறிப்பிடத்தக்கன. ஆவணியில் விநாயக சதுர்த்தி பிள்ளையார் பட்டியிலும் புரட்டாசியில் நவராத்திரி இராமநாதபுரத்திலும் ஐப்பசியில் கந்தர்சஷ்டி தேவகோட்டையிலும் திருக்கோட்டியூரில் வைகுண்ட ஏகாதசியும் குறிப்பிடத்தக்கன.

மார்கழியில் திருப்பாவை விழா ஸ்ரீவில்லிபுத்தூரிலும் திருவாதிரை விழா திருவுத்தரகோசமங்கையிலும், தையில் திருக்கோட்டியூரில் தெப்பமும், மாசி சிவன் ராத்திரி இராமேசுவரத்திலும். பங்குனியில் உத்தரம் குன்றக்குடியிலும்; மாரியம்மன் கோயில் உற்சவம் விருது நகரிலும் பெருஞ்சிறப்புடன் நிகழ்கின்றன.

சேக்கிழார் திருநாள் தேவகோட்டை சேக்கிழார் கழகத்தாரால் ஆண்டுதோறும் இனிது நடாத்தப் படுகிறது.

மசூதிகளிலும் தேவாலயங்களிலும் அவ்வச் சமயங்களுக்குரிய விழாக்கள் நிகழ்கின்றன. ஓரியூர் கத்

*இவரைப்பற்றி, தஞ்சாவூர் மாவட்டம் என்ற என் நூலில் (முதல் பதிப்பு பக்கம் 52-இல்) காண்க.

தோலிக்கத் தேவாலயத்தில் நிகழும் திருவிழாவுக்கு ஆண்டு தோறும் பிற மாவட்டங்களிலிருந்தும் திரளான மக்கள் வருகின்றனர்.

சருகணி மாதாகோவிலும் நரிக்குடி மசூதியும் மருது சகோதரரால் கட்டப்பெற்று, அவர்களது சமயப் பொது நோக்கின் சின்னங்களாக அவை விளங்குகின்றன.

சத்திரங்கள்

இராமேசுவரம் யாத்ரீகர்களுக்கு வசதியாக இம் மாவட்டத்தில் தொன்று தொட்டுச் சேது ரஸ்தா என்ற சாலையும் ஏராளமான சத்திரங்களும் நிலவி வருகின்றன. இராமேசுவரத்துக்குச் செல்லுபவர்கள் நேரே இரயிலில் அல்லது மண்டபத்துக்குக் காரில் சென்று பிறகு இரயிலில் செல்லுகின்றனர். சேது ரஸ்தா நூறு ஆண்டுக் காலமாகப் பயன்படவில்லை. இப்போது அதுவே கிழக்குக் கடற்கரை யோரத்தில் தேசிய நெடுஞ்சாலையாக திருத்தி யமைக்கப் பெற்று வருகிறது. இந்நாளில் சத்திரங் களைப் பயன்படுத்துவோர் தொகை அருகியிருக்கிறது. பல சத்திரங்கள், தனிப்பட்டவர் உடைமையாகி விட்டன.

இராமேசுவரம், குன்றக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய தலங்களில் பல சத்திரங்கள் இன்றளவும் நன்கு நடைபெற்று வருகின்றன.

ஆதீனங்கள்

கோவிலூர் மடமும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும், காளையார் கோவில் வேதாந்த மடமும் தேவிப்பட்டினத்திலுள்ள சிருங்கேரி சங்கர மடமும் முதுகுளத்தூர்ப் பகுதியிலுள்ள கோளரி மடமும் இம் மாவட்டத்தில் இயங்கி வரும் ஆதீனங்கள். இராமேசு

வரத்தில் பல்வேறு மடங்கள் சமய நிறுவனங்கள் ஆகிய வற்றின் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

காஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் பட்டத்தில் 19-ஆம் நூ. இறுதியில் 65-வது பீடத்தை அலங்கரித்த பெரியவர்கள் இளையற்றக்குடியில் பரி பூரணம் ஆனார்கள்.

சமயப் பெருமக்கள்

திருவாசகம் அருளிய மணிவாசகர் இம்மாவட்டத்து எல்லையில் (வைகையின் எதிர்க்கரையிலுள்ள) திருவாத வூரில் பிறந்து, இம்மாவட்டத்து எல்லையில் (தஞ்சை மாவட்டத்திலுள்ள) திருப்பெருந் துறைக் கோவிலை அடைந்த புகழுடையார். அவர் இம்மாவட்டத்தின் வழியே பல முறை நடந்து சென்றதும், உத்தரகோச மங்கையைப் பாடியதும் இம்மாவட்டத்தின் சிறப்புக்கள்.

நாயன்மார்களில் ஒருவரான இளையான்குடி மாற நாயனார் தோன்றிய தலம் இம்மாவட்டத்தில் உள்ளது.

வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் சமரசச் சுடராக விளங்கிய தாயுமானவர் (1705-1742) இராமநாத புரத்தில் தங்கிச் சீடர்களுக்கு அறவுரை வழங்கியும் மௌன நிட்டைகூடி அரிய பாடல்களைப் பாடியும் இங்கு சிவபதவி அடைந்தார். இந்நாளில் அவரது கோயில் காட்சி தருகிறது.

ஆண்டாள் அவதரித்த பதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயாச்சாரியாராகிய இராமானு நுஜர் திருக்கோட்டியூர் நம்பியிடம் சமயக் கல்வி கற்க 11ஆம் நூற்றுண்டில், பல முறை திருக்கோட்டியூர்க்கு வந்திருந்தார் என்பது இம்மாவட்டத்திற்குப் பெருமை தருகிறது.

இனி, இவ்விருபதாம் நூற்றுண்டிற்கு வருவோம். பாம்பன் சுவாமிகள் செய்த அருட்செயல்கள் என்றும் நினைவு கூரத்தக்கவை. மேனாட்டாரும் புகழும் வண்ணம் இந்து சமயப் பெருமையை உணர்த்தியவர்கள் விவேகானந்தரும் (1862-1901)ரமணமஹரிஷியும் (1871-1950).

சிக்காகோவில் நடை பெற்ற உலகச் சமயப் பாராளுமன்றத்தில் தம்புகழை நிலை நிறுத்தினார் விவேகானந்தர். அவரை அம்மாநாட்டுக்கு அனுப்பி வைத்தவர் இராமநாதபுரம் சேதுபதி ஆவார். செல்லுமாறு யோசனை சொல்லியவரும் அமெரிக்காவுக்கு போய் வருவதற்குரிய செலவை ஏற்றவரும் அவ்வரசரே. அமெரிக்காவில் வாகை சூடி பிறகு இந்திய மண்ணில் அவர் முதலில் காலெடுத்து வைத்தது இந்த இராமநாதபுர மாவட்டத்தில் தான். 1897 இல் பாம்பனில் கடற்கரையில் படகிலிருந்து இயங்கியதும் அவருக்குக் கொடுக்கப் பெற்ற வரவேற்பில் அவரை ஓர் அழகிய வண்டியில் வைத்து, குதிரைகளுக்குப் பதிலாகச் சேதுபதியும் மற்றவர்களும் அவ்வண்டியை இழுத்தனர். அவ்வரவேற்புக்கு நன்றிகூறி, விவேகானந்தர் ஆற்றிய உரை (From Colombo to Almora என்ற நூலில்) அச்சிடப் பெற்றிருக்கிறது.

இராமநாதபுரத்தில் விவேகானந்தரை வரவேற்ற காட்சியும் ஊர்வலச் சிறப்பும், வாண வேடிக்கையோடு மரியாதைக் குண்டுகள் பொழிய ஏற்பாடு செய்திருந்ததும் குறிபிடத்தக்கவை.

இராமநாதபுரத்தில் விவேகானந்தர் தங்கிய சங்கர விலாசம் என்னும் அரச மாளிகையில் விவேகானந்தர் மண்டபம் உள்ளது.

திருவண்ணுமலையில் ஆசிரமம் அமைத்துப் பிற நாட்டாரையும் நமது பண்பாட்டிலும் சமய தத்துவக்

கருத்துக்களிலும் ஈடுபடச் செய்த ரமண மஹரிஷி பிறந்த ஊர் இம்மாவட்டத்து அருப்புக் கோட்டை வட்டத்துத் திருச்சுழி அங்குள்ள வடக்குக் கார்த்திகை வீதியில் உள்ள ஒரு வீட்டில் வெங்கட்ராமன் என்ற பிள்ளைத் திருநாமத்தோடு அவர் பிறந்தார். இக் காரணத்தால் திருச்சுழியைப் பற்றி, 'திரிசூலபுர மகாத் மியம்' என்ற நூலை ரமண ஆசிரமத்தார் வெளியி யிட்டுள்ளனர். ரமணமஹரிஷி அத்துவைத நெறியை வற்புறுத்தி உலகம், உய்ய வழிகாட்டியவர்களுள் ஒருவர் ஆவார். இவரது சீடர்கள் பல நாடுகளில் உள்ளனர்.

முக்குலத்தோர்

முக்குலத்தோரே இம்மாவட்டத்தில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் இனத்தார் ஆவர் நகரத்தார் தஞ்சை மாவட்டத்திலிருந்தும், நாயடு—ராஜா—ரெட்டி யார் சமூகத்தினர் விஜய நகர ஆட்சிக் காலத்தில் ஆந்திர நாட்டிலிருந்தும், குடியேறியவர்கள். நாடார்கள் வாழும் பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிய்த்து, இராமநாதபுரத்துடன் இணைக்கப் பெற்றது.

மறவர்

முக்குலத்தோரில் நடு நாயகமாக வைத்து எண்ணப் படுபவர் மறவர் ஆவர். இவ்வினத்தார் தொகை பத்து லட்சம் இருக்கலாம் இவர்கள் இராமநாதபுரம், பரமக் குடி, முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சிவகங்கை, திருவாடானை வட்டங்களில் பெருந்தொகையாக உள் ளனர். பொதுவாக இராமநாதபுர மாவட்டத்துக்கு 'மறவர் நாடு' என்று பெயர் வழக்குகிறது.

புறநானூறு 'போரெனிற் புகலும் புனைகழல் மறவர்' எனவும் "புட்பகைக் கேவானலிற் சாவோம் யாமென—

நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப" எனவும் கூறுகிறது.

"செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந் தீக்கண்
மறவர்கள்"

என்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார், இவர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

"மனத்திண்மை வாய்ந்த வீரரை மறவர் என்று அழைத்தனர் பழந்தமிழர். அவர் கல்லெனத் திரண்ட தோளர்; கட்டமைந்த மேனியர்; முறுக்கு மீசையர்; தருக்கு மொழியினர்; வீறிய நடையினர்; சீறிய விழியினர்" என்கிறார் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை.

மறவர், வீரம் செறிந்தவர்கள். குஸ்தி, சிலம்பம், வாள் வீச்சு, வில்லடி, வேட்டையாடல், விளரிக் கம்பு வீச்சு, மால்கம்பம் போன்ற உடற்பயிற்சிகளில் மறவர் சிறந்தவர். சோழ, பாண்டியர் படைகளில் இவர்கள் பணியாற்றி அவ்வரசுகளுக்கு உறுதுணையாய் இருந்து எல்லைகளைக் காத்தனர்; எதிரிகளை அழித்தனர். தமிழ் நாடெங்கும் பல பகுதிகளில் இவர்கள் குடியேற்றப்பட்டு, காவல் புரியும் படையினராக வைக்கப்பட்டிருந்தனர். ஏன் எனில், இவர்கள் 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்.'

(புறநானூறு—'உண்டாலம்ம')

'மறவர் கொடுப்பது வளரிப் பிரசாதம்' என்று ஒரு பழமொழி உண்டு. வளரி என்பது வயிர மரத்தால் செய்த ஈட்டிக்கம்பு அல்லது அரிவாள். ஒருவன் வளரியால் கொல்லப் பெற்றால், வளரியை வீசியவனைப் பிடித்துக் கொல்ல வேண்டுமென்று விரையாச்சிலைக் கல்வெட்டில் தெரிவிக்கப் பெற்றிருக்கிறது.

சோழ மன்னர்களின் பெயரிலும் சில பாண்டிய மன்னர்களின் பெயரிலும் தேவர் என்ற இறுதிப் பெயர் இருந்தது. இம்மன்னர்களோடு திருமண உறவு கொண்டவர்களும் இவர்களுடைய படைத்தலைமையை ஏற்றவர்களும் தேவர் என்ற பட்டத்தைப் பெற்றனர்.

பந்தய மாடு பிடிப்பது போன்ற ஆற்றல் மறவர் பெண்டிர் சிலரிடமும் இருந்து வந்திருக்கிறது. புலியை முறத்தால் விரட்டியது மறவர் பெண்மை.

வீர மரபினராதலால் இவர்களுக்கு அஞ்சியே பிற இனத்தார் நெடுங்காலமாக வாழ்ந்து வந்துள்ளனர். பல ஊர்களில், தாழ்த்தப்பட்ட மக்கள் மறவர் முன்னிலையில் மேல் துண்டு, செருப்பு, ரவிக்கை முதலியன பயன்படுத்துவதில்லை. அரசியலில் மறவர் செல்வாக்குப் பெருகியிருக்கிறது.

மறவர் தொழில் வேளாண்மை, வேட்டையாடுதல் முதலியன.

தன்மானம் மிக்க இனமாக இருந்து வந்தமையால் அயலவர் ஆட்சியை, மறவர் ஒரு போதும் ஏற்றதில்லை. 19-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட பெருமைக்கு உரிய மறவர்களுடைய வரலாறுகளும் வீரச் செயல்களும் கேட்பார்க்கு மயிர்க் கூச்சல் தருவன; வீர உணர்ச்சியை ஊட்டுவன.

இராமநாதபுரம் சேதுபதிகள் செம்பி நாட்டு மறவர். செம்பியன் மாதேவியார் என்ற சோழ குலப் பேரரசியும் மறவருள் இப்பிரிவினரே. இவர்கள் தஞ்சை மாவட்டத்திலிருந்து இராமநாதபுரத்திற்குக் குடியேறியிருக்க வேண்டும். இராம பிரான் 'செம்பி நாட்டான்' என்று பிள்ளையந்தாதியில் ஒரு பாடலில் குறிக்கப் பெறுகிறுர்.

கொண்டையன் கோட்டை, வல்லம்பர், சிறு தாலி கட்டி மறவர் என்ற பிரிவுகளும் மறவரில் உண்டு. பலர் 'பாண்டியன்' என்ற இறுதிச் சொல்லைப் பெயருடன் போட்டுக் கொள்ளுகின்றனர்.

மறவர் நாடு வளமற்றது. அங்கு, தொழில் எனப் படுவது வேளாண்மை மட்டுமே; அதுவும், மழை பெய்தாலேயே செய்யக் கூடியது வான் பொய்த்த ஆண்டுகளில், சோழ வளநாட்டுக்குச் சென்று வேலை செய்து சோறுண்ண வேண்டிய நிலையில் இருப்பவர்கள் இம் மாவட்டத்து மறவர். இவருள் சிலர், வன் செயல்களிலும் ஈடுபட்டதுண்டு. எனவே, ஆங்கில அரசாங்கமும் உரிமை பெற்ற சுதந்தர இந்திய அரசாங்கமும் இவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தன. மறவர் அனைவரும் குற்ற பரம்பரைச் சட்டப்படி அறிவிக்கப்பட இனத்தார் ஆயினர். இதனால் இவர்கள் பல வகையான கேவலங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். ஏராளமான போலிசுப் படையை வைத்தே, இவர்கள் வாழும் பகுதிகளில் அரசின் ஆணைகளைச் செயல்படுத்த நேரிட்டது. இவர்கள் போர்ப்படையில் சேர்ந்து, இந்திய நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பெருங் குழுவினர் தொன்று தொட்டு மேன்மை வாய்ந்திருந்ததற்குச் சான்றாக, சேதுபதிகள் உள்ளனர். ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்த மறவர் குலத்தவரான குகனுக்கு, இராமபிரான் முதல் சேதுபதி என்ற பட்டத்தைச் சூட்டியதும், பாண்டிய மன்னன் சேதுபதிக்குக் கடற்கரையோரத்திலிருக்கும் காடுகளையெல்லாம் வழங்கியதும் இங்கு கருதத்தக்கன. புண்ணிய சேதுவின் காவலராய், சேதுபதிகள் இருந்து வருகின்றனர். அவர்கள் கொடியில் கருடன், அநுமனின், உருவங்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இராமேசுவரம் கோவி

வில் வாசிக்கப் பெற்று வரும் சேதுபதி பட்டயங்களி லிருந்து இவர்களுடைய வீரமும் புகழும் தெளிவாகத் தெரிகின்றன. தமிழ் மொழியைப் பேணியும், கோவில் களைக் கட்டியும், எண்ணிறந்த அறங்களைச் செய்தும் சேதுபதிகள் பெருமை பெற்றுள்ளனர்.

சேதுபதிகளின் உறவினராய் ஆங்காங்கு உள்ளவர் கள், செல்வாக்குப் பெற்று அவ்வப் பகுதியில் மறவர் சமூகத் தலைவர்களாக விளங்கி வந்திருக்கின்றனர். இவர் களுக்கு 'அம்பலம்' என்ற பட்டங்கள் உண்டு.

தூவல் சாமி, பாண்டிக் கண்மாய்ச்சாமி, பட்டினம் காத்தான்சாமி என்பவர்கள் இராமநாதபுரம் வட்டத் தில் குறிப்பிடத்தக்க சமூகத்தலைவர்கள் ஆவர். இவர்கள் இராமநாதபுரம் அரச குடும்பத்துடன் கொள்வினை, கொடுப்பினை உறவு பெற்று இப்பட்டத்துடன் விளங்கு கின்றனர்.

மறவர் தம் இனத்தைச் சுட்ட, பெயருக்குப் பின்னால் 'தேவர்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்து கின்றனர். இப்பொதுப் பெயர், இருபதாம் நூற் றாண்டில் சிறப்புப் பெயராக விளங்கி வருகிறது. பெயர் கூறுது 'தேவர்' எனின் அச்சொல் அரசியல் தலைவராக வும் நாவன்மை மிக்காராயும் விளங்கிய பசும் பொன் உ. முத்துராமலிங்கத் தேவரையே குறிக்கும். 1930 முதல் அவர் இறந்த 1964-ஆம் ஆண்டு வரை, மறவர் குலத் தலைவராய், தளபதியாய் முடிசூடா மன்னராய் அவர் விளங்கினார்.

விழாக் காலங்களில் அம்பலப்பட்டம் பெற்றவர்கள் சிறப்பு மரியாதை பெறுவார்கள். அம்பலம் என அழைக் கப் பெற்ற சிறப்பு உடையவர்கள் அவ்வூரில் ஏற்படும் வழக்குகளுக்கு நீதிபதி போல் நின்று அறம் உரைப்பர்.

அதற்காகவே பொது இடங்களில் மந்தை அல்லது கூடம் அல்லது சவுக்கம் அல்லது அம்பலக்கல் என்ற இடங்களில் இருந்து நீதி வழங்கினர் இவர்களது சமூகத்தினரும் இவர்களைச் சார்ந்துள்ள பிற சமூகக் குடிமக்களும் இவர்களது கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டு நடப்பர்.

ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒரு அம்பல காரரும், பல சிற்றூர்கள் அடங்கிய ஒவ்வொரு நாட்டிற்கு சில அம்பல காரர்களும் சிறப்புப் பெற்று நிற்பதோடு, தேர்தல் காலங்களில் பெருஞ் செல்வாக்குடன் திகழ்கின்றனர்.

கள்ளர்:

கள்ளர் தங்களைப் பல்லவர்களின் வழித் தோன்றங்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர். மதுரை மாவட்டம திருமங்கலப் பகுதியில் கள்ளர்கள் ஏராளமாக இருக்கின்றனர். கொள்ளை, கொலை வழக்குகளில் ஈடுபட்டதாக இவர்களைப் பற்றி சில வழக்குகள் நடைபெற்றன. கள்ளர்களைத் திருத்துவதற்காக அரசாங்கத்தார் பெரும் பணம் செலவிட்டு இருக்கிறார்கள். கள்ளர்களுக்குள் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் குற்றச் செயல்களில் அவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்காகவும் அரசாங்கத்தார் ஆவன செய்கின்றார்கள். அவர்களுடைய நலத்தைப் பேண, பல பொது நிதிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. வேளாண்மையில் ஈடுபடும் கள்ளர்களுக்கு அரசாங்கத்தார் உதவிகளைச் செய்து வருகின்றனர். தஞ்சை மாவட்டக் கள்ளர்களைப் போல பாண்டி நாட்டுக் கள்ளர்களும் உழவுத் தொழிலில் சிறக்க வேண்டும் என்பது அரசாங்கத்தாரின் விருப்பமாகும். பாண்டி நாட்டுக் கள்ளர் சைவ சமயிகளாக இருந்த போதிலும் வைணவக் கடவுளாகிய அழகரைத் தான் அவர்கள் குலதெய்வமாக வழிபடுகின்றனர்.

புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் இவ்வினத்தவரே. கள்ளர் சரித்திரம் என்றும் நூலை, பேராசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதியுள்ளார்.

கள் தல்—பறித்தல்; கள்ளன்—பறிப்பவன். கள்ள அறை—இரகசிய அறை. எனவே, கள்ளன்—பிறர் அறியா வகையில் அவரைப் பற்றிய உண்மைகளை அறிந்து அரசாங்கத்திற்குத் தெரிவிப்பவன் (C. I. D) ஒற்றன் எனக் கொள்ளலாம். தமிழரசரிடம் இருந்த "ஒற்றர்" என்ற அரசாங்க அலுவலரே கள்ளர் ஆயினர். ஒற்றர் கூட்டம் தொன்று தொட்டு அரசர்க்குத் தேவைப் பட்ட ஓர் இனமாகும். கள்ளர் மரபினர் அஞ்சா நெஞ்சினராயும் வீரராயும் இன்றும் உள்ளனர். இவர்களின் முன்னோரும் வீரத்தில் சிறந்து விளங்கினர்.

அகம்படியர் :

கடவுளின் கோவிலுள் தொண்டு செய்தாற் போலவே அரசர் கோவிலுள் (அரண்மனையுள்) தொண்டு செய்தவர் அகம்படியர் எனப்பட்டனர். சேர நாட்டில் திருமணத்தின் போது நம்பூதிரி மணமகன், பெண் வீட்டுக்குச் செல்லுகையில், வேல், வாள் முதலிய போர்க் கருவிகளைத் தாங்கிய நாயர்கள் அவனுக்கு முன்பு ஊர் வலமாகச் செல்வர். அவர்கள் அவனுடைய அகம்படியர் (மெய் காவலர்) எனப்படுகின்றனர். எனவே மன்னனின் மெய் காவலரும் அகம்படியர் என்பது அறியப் பெறும்.

பண்டைக் காலத்தில் இம்மூவினத்தவரும் அரசனுக்கும் அரசாங்கத்துக்கும் உயிர் போன்ற தொண்டராயிருந்தனர். இவர்களுக்குச் சேர்வைக்காரர் என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர்களுள் சிறப்புப் பெற்றவர், சிவகங்கைப் பகுதியில் மிகுதி.

நாடார்

உள்நாட்டு வாணிகத்திலும்—குறிப்பாகவும் சிறப்பாகவும் உணவுப் பொருள் விற்பனையில்—1930-க்குப் பிறகு தீப்பெட்டி, வாண, கவின் அச்சுத் தொழில்களிலும் புகழ் பெற்றிருப்பது நாடார் சமூகம் ஆகும். தமிழ்நாடு முழுவதும் வாழும் நாடார் தொகை 10 லட்சம் இருக்கலாம். இவர்களுள் சில நூறுயிரம் நாடார் 18, 19-ஆம் நூற்றுண்டுகளில் கிறித்தவர் ஆயினர்; அவ்வாறு சமயம் மாறியவர்கள் தம் இனப் பெயரையோ; திருமணம் முதலியவற்றில் தம் இனத் தொடர்பினையோ கைவிட்டு விடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இம்மாவட்டத்தில் சாத்தூர் வட்டமே இவர்களுடைய தாயகம் ஆகும். தம் கடும் உழைப்பாலும் முயற்சியாலும் அரசியல் செல்வாக்காலும் இன ஒற்றுமையாலும் கல்விப் பெருக்கத்தாலும் இவர்கள் தமிழ்நாடெங்கும் பரவியிருக்கின்றனர். இம்மாவட்டத்திலும் எல்லாப் பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்து உயிர்நாடியான பொருள்களை விற்று வருகின்றனர். பொருளாதரத்தின் அச்சாணியாக இவர்கள் விளங்குகின்றனர்.

ஆதியில் பனைமரம் ஏறுதல் போன்ற தொழில்களில் சிலர் ஈடுபட்டிருந்ததால் இவர்கள் கோவில்களுக்குள் சென்று வழிபட, நெடுங் காலமாக தடை இருந்து வந்தது. இதுபோன்ற காரணங்களால் தேவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே கைகலப்பும் கலகமும் நடைபெற்றன. இவற்றை அடக்கக் கமுதி சிவகாசி போன்ற நரகங்களுக்கு 1910-ம் ஆண்டு அளவில் வந்த ஆயுதம் தாங்கிய படைகள் இன்றும் தங்கி நிலைத்திருப்பதை அங்கே காணலாம்.

15-ஆம் நூற்றுண்டிலேயே திருமங்கலம்,விருதுநகர், சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை, பாளையப்பட்டி ஆகிய இடங்களில் இவர்கள் பேட்டைகள் அமைத்திருக்கின்றனர். இவர்களுடைய பொது நிதி, இவர்களுக்குள் விற்பனைவரி போன்று வசூலித்துக்கொள்ளப் படுகிறது. இதற்கு மகமைப் பணம் என்று பெயர். மகமைப் பணத்தைப் பற்றி 1782-இல் எழுதப்பெற்ற ஓர் ஓலைச்சுவடியிலிருந்து இவர்கள் எந்தெந்தப் பொருள்களில் வியாபாரம் செய்து வந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

"கச்சைப் பொதி, வேர்ப்பொதி, நூல்பொதி, கெம்புப்பொதி, புகையிலை தென்பொதி, பஞ்சு தென்பொதி, சவரிப்பொதி—இந்த வகைக்கு பொதி க, பணம் க. பாக்கு, மிளகு, பஞ்சு சின்னப்பொதி, பலசரக்கு, மணிவெட்டி, கொழு இந்த வகைக்கு பொதி க, பணம்—இ.

பருத்திப் பொதி, எள்ளுப் பொதி, இந்த வகைக்குப் பொதி க, பணம்—வ.

முத்துப் பொதி, பயறு பொதி, வெத்திலை, நாரத்தங்காய், மிளகாய், மற்றவகை.

மலைப் பொருள்கள் விற்பனையிலும், தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியையொட்டி, ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்திலும் நாடார் பலர் ஈடுபட்டுள்ளனர். சென்னை மாகரிலும் இவர்கள் தொகை குறிப்பிடத்தக்க அளவினது. ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட நகரில் இவர்கள் சமூக மாநாடும், கல்வி மாநாடும் கூட்டுகின்றன.

இவர்களுக்குள் பூர்விக, புராண காரணை குல கோத்திரங்கள் பல உண்டு. இவற்றுக்குரிய கோவில்கள் உள்ளன. சான்றுக சிவகாசி நாடார்களுக்குள் உள்ள

பிரிவுகளைக் கூறுவோம். சிவனடியான், பாவாலியன், முண்டைக் கண்ணன், அரசன், வன்னிகுட்டி, மாயன் பூசாரி, ஏனுதிநாதன், சிரசு, கட்டி, வாத்தியார், ஆதி நாடான், வெள்ளைப்பொட்டு, நெருப்பாக்கி, காவடிக் காரன், அரிசிக்கொள்ளுவான் முதலிய பல. அந்தந்தப் பெயருக்கு உரிய வேலைகளை, கோவில் தேர் இழுக்கும் போது இவர்கள் செய்து வருகின்றனர்.

இறந்தவர் உடலை எரிக்கும் வழக்கம் சிலரிடம் உளது. நாடார் இனத்தார் பலர், இறந்தவர்களைப் புதைத்தே வந்திருக்கின்றனர் என்று தெரிகிறது. கணவன் சமாதிக்கு அருகே பல ஆண்டுகளுக்குப்பின் இறக்கும் அவர் மனைவியின் உடலைப் புதைப்பர். இச்சமாதிகளை அவர்கள் வழியினர் வழிபடுவர். இவ்வாறு வழிபடும் இடம் 'மாலைக்கோவில்' 'இளமையில் —அதாவது பூப்பு எய்துமுன்—உயிர் நீக்கும் பெண் குழந்தைகளை 'கன்னித் தெய்வம்' எனக் கருதி வழிபடுவர்.

ஒரு நூற்றுண்டுக்கு முன்வரை நாடார்கள் பனங் கருப்பட்டி முதலிய பொருள்களை பொதிமாட்டின் உதவி கொண்டு 150 மைல் வரையும் சுமைகளோடு சென்று அந்தந்த இடங்களில் தங்கிப் பேட்டைகள் அமைத்து பண்டமாற்று வியாபாரங்கள் செய்தனர். நாளடைவில் சந்தை கூடும் இடங்களில் சந்தைப் பொருள்களை, அப் பொருள்கள் உற்பத்தியாகும் காலங்களில் மொத்த மாகக் கொள்முதல் செய்தனர். அடுத்த கட்டமாக அந்தந்த ஊர்களில் குடும்பத்துடன் குடியேறிச் சிறு கடைகளைத் தொடங்கினுர்கள்.

பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வருவாய் இல்லாத மாதங்களில் கடன் கொடுத்து, பல மாதங்

களுக்குப் பின்னர் அவர்களுடைய விலை பொருள்களை வாங்கிக் கொண்டனர். இன்னுஞ் சிலர், சிற்றூர்க் கடைகளில் நெல் அல்லது மணிலாக் கடலையை அவ்வப்போது பெற்றுக்கொண்டு பண்ட மாற்றாக நவதானியங்களையும் மளிகைப் பொருள்களையும் கொடுத்து வந்தனர். ஒவ்வோர் ஊரிலும் சமூகத்துக்கு என இவர்கள் தங்களுக்குப் பொதுவான தோப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். காலை நேரங்களில் குளிக்கவும் தொழில் நிலைமைகளை ஒருவர்க்கொருவர் அறிவிக்கவும் இத் தோப்பு, பயன்படுகிறது. வணிகர்களுள் தொலை பேசியை மிகுதியாகப் பயன்படுத்தும் இயல்பு இவர்களிடம் நிலவுகிறது.

மதுரை, சிவகாசி, விருதுநகர், திருநெல்வேலி 18-ஆம் நூற்றாண்டில் பெரிய அளவில் இவர்களுடைய வியபார நகர்களாக இருந்தன. இந்நகர்களில் வியாபாரம் செய்த அனைவரும் தங்களுக்குள் திருமணம் செய்து கொண்டதாயும் கூறப்படுகிறது. ஆங்கிலேயே ஆட்சியில் இவர்களில் பலர் ஆங்கிலேயர்களின் பெரு மதிப்பைப் பெற்று வெளி மாநிலங்களுக்கும் தங்கள் தொழிலை விரித்தனர். இன்று, வணிகத் துறையில் ஈடு இணையற்று விளங்குகிறார்கள். காப்பிக்கொட்டை, ஏலக்காய், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், மிளகு, மிளகாய் வத்தல், விறகு, கரி, மரவாடி, பெயிண்டு வாணிகம் இவர்களுக்குக் கை வந்த கலை. சென்னை நகரில் இவர்கள் பெருந் தொகையாக உள்ளனர். தோட்டத் தொழில்களிலும் இயந்திரத் தொழில்களிலும் இவர்களில் பலர் முன்னேறியுள்ளனர். தீப்பெட்டி, மத்தாப்பு, கவின் அச்சுக்கலை ஆகிய தொழில்களில் இவர்கள் இந்தியாவிலேயே ஒரு ‘சக்தி’யாக விளங்குகிறார்கள்.

இவர்களுடைய முன்னேற்றத்துக்குக் காரணம்—கடும் உழைப்பு, ஒற்றுமை, கல்விப் பெருக்கம், அரசியல் செல்வாக்கு.

ஹிந்து நாடார், கிறித்தவ நாடார் என்ற வேறுபாட்டை இவர்கள் மிகவும் வற்புறுத்துவதில்லை. கிறித்தவத்தில் சேர்ந்த நாடார்கள் தொழிலிலும் அனுபவமும் பெற்றனர். அவர்களைப் பார்த்து ஹிந்து நாடார்களும் கல்வி வளர்ச்சி பெற்றனர்.

நாள்தோறும் பிடி அரிசி எடுத்தும், தொழில்களில் மகமை வசூலித்தும் கல்வி நிலையங்களை உருவாக்கியுள்ளர். அரசினர் உயர்நிலைப்பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி இருக்கும் ஊர்களிலும் இவர்கள் தங்களுக்காகத் தனியே இத்தகைய கல்விக் கூடங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆண்டுதோறும் கல்வி மாநாடு கூட்டி, சமூகத்துக் கல்வியாளர்களைப் போற்றியும் ஊக்கியும் வருகின்றனர். மருத்துவர்களாகவும் வெளிநாடுகளில் உயர் துறைகளில் மேற்படிப்பும் படித்தவராகவும் நாடார் ஆடவரும் பெண்டிரும் பெருந் தொகையினர் உள்ளனர்.

ஹார்ட்கிரேவ் என்ற அமெரிக்கப் பேராசிரியர் Nadars of Tamil Nad என்ற ஆராய்ச்சி நூல் எழுதியிருக்கிறார்.

ஆங்கில ஆட்சியும் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியும் நாடார் வணிகர்கட்கு ஆதரவு தந்தன. காங்கிரஸ் ஆட்சியில் ஒன்பதரை ஆண்டுகள் காமராஜ் முதலமைச்சராக இருந்தார். அக்காலத்தில் கன்னியாகுமரிப் பகுதி திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து பிரிக்கப்பட்டுத் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பெற்று 'கன்னியாகுமரி மாவட்டம்' உருவாயிற்று. விருதுநகரைத் தலைநகராகக்

கொண்ட ஒரு மாவட்டமும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் பரவிற்று. திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுதியான பற்றும் நீண்ட நாட் தொடர்பும் கொண்ட பலர் நாடார் இனத்தில் இருக்கின்றனர்.

20-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நாடார் இனத்தவர் பலர் பொதுச் செயல்களிலும், அறச் செயல்களிலும், அரசாங்க வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றர். இப் பெரு மாறுதலுக்கு வழிகாட்டிகளாக வே. வ. இராமசாமி, கே. காமராஜ், சி. பா. ஆதித்தன் ஆகிய பெருமக்களைக் கூறலாம்.

நகரத்தார்

காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார் நகரிலிருந்து இங்கே குடியேறியவர்கள் நகரத்தார். இவர்களைப் பற்றி, 'இராமநாதபுரம் மாவட்டம்—ஐந்தாண்டின் சாதனைகள் 1951-56' என்ற தமிழ் நாடு அரசாங்க வெளியீடு பின்வருமாறு கூறுகிறது:

> 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற ஔவை மூதாட்டியின் அணிமொழிக்கிணங்க, சாவகம், சீனம், ஈழம், இந்தோசீனம், பர்மா சிங்கப்பூர் போன்ற கடல்கடந்த நாடுகளுக்கெல்லாம் சென்று வாணிபம் செய்யும் பெருங்குடி வாணிக மக்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். பண்டைக் காலத்தில் கிரேக்க ரோம நாடுகளுடன் வாணிபம் செய்து தண்டமிழ் நாட்டின் சீர்த்தியை எண்டிசையும் பரப்பிய பெருங்குடி வணிகர்களின் வழித்தோன்றல்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்று கூறுவர், இவர்களது சலியாத உழைப்பாலும் திறம்பட்ட செயலாலும் இலங்கை

இந்தோசீனு, பர்மா போன்ற அயல்நாடுகளில் காடு மேடாய்க் கிடந்த இடம் எல்லாம் இன்று ரப்பர்த் தோட்டங்களாயும், தேயிலைத் தோட்டங்களாயும், நெல் வயல்களாயும் வளம் கொழிக்கின்றன.

இவர்கள் இம்மாவட்டத்தின் பல சிற்றூர்களில் திருப்பத்தூர், சிவகங்கை திருவாடானை வட்டங்களில் வாழ்கின்றனர். இவர்கள் தொகை இம்மாவட்டத்தில் 75,000ம் புதுக்கோட்டை—திருமெய்யம் வட்டத்தில் 20,000-ம் ஆகும். இவர்களுக்கு உரிய இளையாற்றக்குடி முதலிய ஒன்பது நகரக் கோவில்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

நகரத்தார் அனைவரும் சமயத்தால் சைவர் ஆவடி. சிவப்பற்றால் இவர்கள் மேற்கொண்ட திருப்பணிகளாலேயே தமிழர் கலைக்கு நிலைக்களமாக விளங்கும் கோவில்கள் நின்று நிலவுகின்றன. பாடல் பெற்ற தலங்களில் இவர்கள் நிறுவியுள்ள அறக்கூழ்ச்சாலைகள், விடுதிகள், பசுமடங்கள், தேவாரப் பள்ளிகள் எண்ணிறந்தன, இவர்களின் தொழில் திறமையும், முயற்சிகளும் காந்தியடிகளாலும் ஜவஹர்லால் நேருவாலும் அவரவர் நூல்களில் புகழ்ந்து எழுதப்பெற்றுள.

தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் இவர்கள் செய்து வரும் பணிகளைப் பாராட்டிக் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார். தமிழ் இசையின் மறுமலர்ச்சியில் இவர்கள் பங்கு போற்றுதற்குரியது.

இந்திய நாட்டு விடுதலை பெற நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் நிறுவிய ஆஜாத் ஹிந்த்லீக், இந்திய தேசிய இராணுவம் ஆகியவற்றில் இவ்வினத்தார் கலந்து கொண்டு பெருமளவில் ஈடுபட்டனர்.

பட்டினத்தடிகள் சொக்கலிங்க ஐயா போன்ற சமய ஞானிகளும், பாடுவாய் முத்தப்பர், பண்டிதமணி கதிரேசனார் போன்ற புலவர்களும், பல்கலைக் கழகங் கண்ட அண்ணாமலையரசர் தம்செல்வமேயன்றிக் கடனும் பட்டுக் கல்வி நிலையங்கள் கண்ட அழகப்பர் போன்ற தொழில் அரசர்களும் இம்மரபினரே.

இரண்டாம் உலகப்போரால் தென்கிழக்காசியாவில் ஏற்பட்ட அரசியல் மாறுதலால், இவர்களில் பெரும் பாலோர் பொருள் வளம் குன்றியுள்ளனர். பொன்னி னும் மணியினும் முத்தினும் இயன்ற நகைகளையும், ஏனைய பயன்படு பொருள்களையும் விற்று, உண்டு வாழும் நிலைக்குப் பலர் தாழ்ந்துள்ளனர். நாடெங்கும் புது நகரங்களும் குடியிருப்புப் பகுதிகளும் தோன்றும் இந்நாளில் இவர்களில் சிலர் பூவையர்களை மணம் முடிக் கவும், கடன் தொல்லை நீக்கவும், தம் மாடமாளிகை களை இடித்துச் சன்னலாகவும் மரமாகவும் விற்கும் இழி நிலையிலும் காணப்படுகின்றனர்.

இவர்கள் ஆதரவால் வாழ்ந்து வந்த கொல்லர், தச்சர், கொத்தர், ஸ்தபதி ஆகிய பல சிறந்த தொழி லாளர்கள் இப்போது இந்திய நாடெங்கும் பல்வேறு இடங்களில் பணி புரிகின்றனர்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் பழக்க வழக்கங்களும் மண முறைகளும் நகரத்தாரிடையே இன்னும் நின்று நிலவு வருகின்றன.

இவ்வினத்தவர் சில ஆயிரம் பேர் வெளிநாடுகளில்—குறிப்பாக சிங்கப்பூரிலும் மலேசியாவிலும்—குடி உரிமை பெற்று வாழ்ந்தனர்.

நகரத்தார்களைப் பற்றி விரிவான ஆதாரமான நூல்கள் முழுமையாக இன்னும் வெளி வந்தில. தமிழ்ப் பணிகளைப் பற்றி இந்நூலாசிரியார் எழுதிய 'செட்டிநாடும் தமிழும்' என்ற நூலும், இந்தியாவில் இவர்கள் செய்துள்ள அறப்பணிகளைப் பற்றி, (மேயர்) ஆர். இராமநாதன் செட்டியார் அவர்கள் வெளியிட்ட நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற நூலும் வந்திருக்கின்றன.

நாயக்கர்

விஜயநகர ஆட்சிக் காலத்தில் ரெட்டியார்கள். ராஜாக்கள், தெலுங்குப் பிராமணர் முதலிய சில இனத்தவர் ஆந்திர நாட்டிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறினர். இவ்வாறு தமிழ் நாட்டிற்கு வந்தவர்களுள் கம்மவர் நாயுடுக்களும், கம்பளத்து நாயுடுக்களும் பிற நாயுடு இனத்தவரும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுக்கு நாயக்கர் என்றும் பெயருண்டு.

மதுரையை நாயக்கர்கள் ஆண்டபோது இராமநாதபுர மாவட்டத்து ஸ்ரீ வில்லிபுத்தூர், அருப்புக் கோட்டை வட்டங்களில் கம்மவர் நாயுடுகள் பெரிய அளவில் குடியேறினர். இவர்கள் அரசாங்க அலுவலராகவும் போர் வீரர்களாயும் அமர்ந்து செல்வாக்குடன் இருந்தனர். சில இடங்களில் இவர்கள் நாயக்க மன்னர்களின் பிரதிநிதியாகவும் விளங்கினர். புதிதாக இவர்கள் உண்டாக்கிய ஊர்கள், அந்தக் குடியேற்றத்திற்குக் காரணமான நாயக்கர் தலைவரின் பெயரைப் பெற்றுள்ளன. இம்மாவட்டத்தில் இவ்வாறு குறிப்பிடத் தக்கன: கல்லம நாயக்கன் பட்டி, அப்பய நாயக்கன் பட்டி, முத்தால நாயக்கர்பட்டி, காமய நாயக்கன்பட்டி, வெங்காள நாயக்கர் பட்டி, பேரி நாயக்கன் பட்டி

பாப்பைய நாயக்கர் பட்டி. மல்லைய நாயக்கர் பட்டி, என்னும் ஊர்களும் சாத்தூருக்குக் கிழக்கேயுள்ள பெத்தாளு நாயக்கர் அணையும்.

நாயக்கர்களைக் குறுநில மன்னர்களாகக் கொண்ட சேத்தூர் ஜமீன், மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள வளமான பகுதி.

விஜயநகர மன்னர்களுடன் தொடர்பு கொண்டு இம்மாவட்டத்தில் வாழ்ந்த நாயுடுக் குலங்கள் பல. பூபதி குலத்தைச் சேர்ந்த ஓரகண்டி, கனகய்யா நாயுடு; நாயக்கர் மன்னர் காலத்து வேல் துப்பாக்கி முதலிய போர்க்கருவிகளையும் நாயக்க வீரர்கள் வேட்டையாடிச் சேகரித்த விலங்குகளின் கொம்பு முதலியவற்றையும் அக்காலத்திய மைச்சிமிழ்கள், பாக்கு வெட்டிகள், சிக்கு வாரிகள், குறவைக்கூத்து வளைதாடிகள், வாய்கட்டு மந்திரம்—பில்லி சூனியம் பற்றிய சுவடிகள் ஆகியவற்றைச் சேகரித்துள்ளார். விஜய வேங்கட வணங்கா முடி ஓரகண்டி கனகய்யா நாயுடு என்று கையெழுத்து இடுவார். இந்த அடைமொழி இவருடைய தொன்மை இயல்பை உணர்த்தும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் நாயுடு சமூகத்தார் போலீஸ் வேலையிலும் படையிலும் சேர்ந்திருந்தனர்.

வேளாண்மைத் துறையில் பருத்தி, மிளகாய், சேனைக்கிழங்கு பயிரிடுவதில் இவர்கள் வல்லவர்கள். இந்திய விடுதலைக்குப் பிறகு இவர்கள் கல்வித்துறையிலும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இவர்கள் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தவர், சிறந்த அரசியல் தலைவராகவும் இராமநாதபுர மாவட்டக் கழகத் தலைவராக இருந்த எஸ். இராமசாமி நாயுடு ஆவார்.

ரெட்டியார்கள்

ரெட்டியார்கள் ஆந்திராவிலிருந்து விஜயநகரப் பேரரசின்போது தமிழ் நாட்டிற்கு வந்து இராமநாதபுர மாவட்டத்தில் சாத்தூர், அருப்புக்கோட்டை வட்டங் களில் பரவலாக உள்ளனர்.

கரிசல் நிலப் பகுதியில் குடியேறி விவசாயம் செய் தனர். இவர்களது எண்ணிக்கைமிக்க கரிசல் குளம் என்ற ஊர் இதை வலியுறுத்துகிறது. புன் செய்ப் பயிர் களுள் கம்பு, வரகு, பருத்தி, ஆகியவை இவர்களது முக்கிய விளைபொருள்கள். தாய்மொழி தெலுங்கு. ஆனால், இன்று தமிழுடன் கலந்து, கொச்சைத் தெலுங் கில்தான் பேசுகின்றனர். ரெட்டியார் என்ற பெயருள்ள ஊர்கள் வருமாறு: M. ரெட்டியபட்டி, சென்னப்ப ரெட்டி பட்டி, குமார் ரெட்டிபட்டி, குமார் ரெட்டியார் புரம். குறிப்பிடத்தக்க பிற ஊர்கள் இராமலிங்கபுரம், இராமசாமிபுரம், இராமச்சந்திரபுரம்.

ராஜாக்கள்

ராஜாக்கள் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள தெலுங்கு பேசும் மக்களுள் எண்ணிக்கையால் குறை வாக இருந்தாலும் வரலாற்றாலும் உழைப்பாலும் குறிப்பிடத்தக்கவர்கள். அரசர்களை இந்திய அரசு ஒழித்தாலும் இராமநாதபுர மாவட்டத்தில் ராஜாக்கள் என்றும இருப்பார்களென்று வேடிக்கையாகச் சொல்லு வது உண்டு.

ராஜாக்களின் தாயகம் இராஜபாளையம் இவர்கள் 1565-இல் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குண்டூர் மாவட்டத்திலிருந்து இராஜபாளையத்தில் குடியேறியவர் கள். வெளியூர்களில் வேலைபார்க்கவும் தொழில் செய்ய வும் ஒரு சிலர் தங்கியிருக்கின்றபோதிலும் இராஜபாளை

யத்தில்தான் இவர்கள் தொகுப்பாக வாழ்கிறார்கள். இவர்களுக்கு இராஜுக்கள் என்றும் பெயர் உண்டு என்று சிலர் கூறுவர். இராஜாக்கள் என்பதே இவர்களுடைய சரியான பெயர் என்று சொல்பவர்கள் இவர்கள் விஜயநகர மன்னர்களின் வாரிசு என்றும் ஆகையால் அவ்வாறு பெயர் ஏற்பட்டிருப்பதாயும் கருதுகிறார்கள்.

வர்ணாச்சிரமத் தருமப்படி ராஜாக்கள் சத்திரியர். அதற்கேற்ப இவர்கள் உடற்கட்டும் வீரமும் மிக்கவர்களாக இருக்கிறார்கள். நிறையச் சாப்பிட்டுப் பலசாலியாக இருக்க வேண்டுமென்பது இவர்களுடைய பரம்பரைக் கொள்கை. திருமணம் செய்து கொடுத்த பிறகு மருமகனுக்கு நிறையச் சாப்பாடு போட்டு அவன் பலசாலியாகும் வரை தம் வீட்டில் வைத்திருக்கும் பழக்கமும் நிகழ்கிறது. பூணூலும் அணிவர்.

அரசியல் விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பெருந்தலைவர்களுள் ஒருவராக விளங்கிய பூ. ச. குமாரசுவாமி ராஜா அவர்களைத் தந்தது இந்த இனம்.

பெற்ற சுதந்திரத்தைக் காக்கவும் இராஜபாளையம் ஏராளமான வீரர்களை இந்திய இராணுவத்திற்குத் தந்திருக்கிறது. அவர்களுள் ஒருவர் ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோவுக்குச் சென்ற இந்தியப் படைக்குத் தலைமை தாங்கினார். பின்னர் காங்கோவிலிருந்த ஐக்கிய நாடுகள் படையின் தளபதியாகவும் புகழுடன் பணிபுரிந்தார். இவ்வாறு பெருமையடைந்தவர்தான் இப்போது இந்தியப் படையின் தென்பிராந்தியத் தலைமைத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் கே. ஏ எஸ். ராஜா அவர்கள்.

போர்த் தொழிலில் போல வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் ராஜாக்கள் ஏற்றம்

பெற்றிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையில் நானூறு ஆண்டுகளாக இவர்கள் — குறிப்பாக, பருத்தி வேளாண்மையிலும் ஏலக்காய் பயிரிடுவதிலும் பழத் தோட்டம் போடுவதிலும் சிறப்படைந்திருக்கிறார்கள். தேனி முதல் அம்பா சமுத்திரமவரை மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதி முழுவதிலும் இவர்கள் மரவாணிபத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். காட்டு மரங்கள் வெட்டுவதில் இவர்கள் வல்லவர்கள். பஞ்சு ஆலைத் தொழிலில் நுணுக்கமான சில துறைகளில் முன்னேறியுள்ளனர். புத்தம் புதிய பல தொழில்களையும் இவர்கள் இராஜபாளையம் பகுதிக்குத் தந்திருக்கிறார்கள். முன்னேறிய வகுப்பு என்று அரசினர் கருதுவதால் கல்வித்துறையில் இவர்கள் அரசினரின் சலுகைகளைப் பெற இயலாது இருக்கிறார்கள்.

ராஜாக்களுடைய வீட்டு மொழி தெலுங்கு. ஆனால், இவர்களில் தமிழ் ஆர்வமும் தமிழ் அறிவும் நிரம்பியவர் இருக்கின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்குப் பேராசிரியக் கட்டில் இல்லாதிருந்த குறையைப் போக்கியவர் குமாரசுவாமி ராஜாதான். அதற்கு அவர் தம் பொருளையும் கொடுத்து உதவியுள்ளார். புரட்சிக் கவிஞர் என இன்று நாடும் ஏடும் போற்றிப் புகழும் புதுச்சேரி பாரதிதாசனாரை வரவழைத்துப் பாராட்டிப் பொற்கிழி வழங்கியவரும் குமாரசுவாமி ராஜா அவர்களேயாவர்.

ராஜாக்கள் சமூகத்தில் பெண் மக்களிடம் இன்னும் 'பர்தா' (முகமூடி) முறை இருந்து வருகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் போல, ராஜாக்களும் திருமணமான பிறகு ஒவ்வொருவரும் தாய் தந்தையரிடமிருந்து பிரிந்து தனிக் குடித்தனம்

நடத்துகிறார்கள். புதுமை என்ற ஒரு சடங்கு ராஜாக்கள் சமூகத்தில் உண்டு. சாமைக் கதிரை அறுத்து, எல்லா ராஜாக்களும் மாரியம்மன் கோவிலுக்குச் சென்று அங்கிருந்து ஊரெங்கும் தங்கள் சாதியார் வீடுகளுக்குப் போகவேண்டும். இவ்வாறு ஊர்வலமாகச் செல்லும் போது, தங்கள் பகைவராக இருந்தாலும் அவர்கள் வீட்டுக்கும் ஒவ்வொருவரும் போய்த்தான் ஆகவேண்டுமாம். இது புதுமைதானே:

தேவாங்கர்:

கன்னடமொழி பேசுபவர்களும் இராமநாதபுர மாவட்டத்தில் இருக்கிறார்கள்.

ஆதிசிவனுக்கு ஆடை செய்து கொடுத்ததால் தே+அங்க என்று பெயர்பெற்ற இவ்வினத்தாரின் தாயகம் மைசூர் மாநிலம். இவர்கள் பட்டு நெசவுத் துறையில் சேலம், கோவை, மதுரை நகர்களின் அச்சாணியாக விளங்குகிறார்கள்.

பூணூல் இவர்களுக்குக் கட்டாயமான அணிகலன். எல்லாச் சடங்குகளுக்கும் இவர்களிலேயே புரோகிதர் உள்ளனர். பெண்கள் மறுமணம் செய்துகொள்கின்றனர்.

பெரும்பாலோர் ஒவ்வொருநாளும் காலையில் நூல் வாங்கி பகலில் நெய்து மாலையில் துணி விற்று, இரவில் உணவு ஆக்குகின்றனர்.

இம்மாவட்டத்தில் இவர்கள் வாழும் ஊர் அருப்புக் கோட்டை. அங்கு ஸ்ரீ ராமலிங்க சந்திர சௌடேசுவரி கோவிலைக் கட்டியிருக்கிறார்கள்.

ஸ்தபதிகள்:

கோவில் திருப்பணி வேலைகளிலும் கோபுர வேலையிலும் சிறந்து விளங்கும் ஸ்தபதிகள், திருப்பணியாளர்களாகிய நகரத்தார்களின் ஆதரவால் பல தலை முறைகளாக இம்மாவட்டத்தில் வாழ்கின்றனர். காசிமுதல் இராமேசுவரம் வரை முக்கியமான கோவில்களிலெல்லாம் இவர்களுடைய கைவண்ணத்தைக் காணலாம். கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை உருவாக்கிக் கொடுத்தவர் தேவகோட்டை ஸ்தபதி திரு. S. K. ஆச்சாரி என்பவர். சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தைக் கட்டிக் கொடுத்தவர்களும் செட்டி நாட்டு ஸ்தபதிகளே. நாடெங்குமுள்ள அணைக் கட்டுககள் பலவற்றிலும் அவர்களுடைய கைத்திறனைக் காணலாம்.

கல் தச்சர்கள்:

கல் வேலையிலும் கல் விக்கிரக வேலையிலும் வல்லவர்கள் பலரி இம்மாவட்டத்தில் உள்ளனர்.

மரத் தச்சர்கள்:

நுண்ணிய மரத் தச்சர்களும் உள்ளனர். செட்டி நாட்டு வீடுகளில் இவர்களுடைய திறமையைக் காணலாம். இவர்களில் பலர் பாமாவிலும் மலாயாவிலும் சீனத் தச்சர்களுடன் சேர்ந்து தொழில் செய்திருக்கின்றனர்.

கொத்தனார்கள்:

இம்மாவட்டத்துக் கொத்தனார்களின் வேலைப் பாட்டைப் பற்றி, பொறியியல் கல்லூரிகளில் சொல்லிக் கொடுக்கிறார்கள். கோழி முட்டைகளைச் சுவர்களில் தேய்த்து முகம் பார்க்கும் கண்ணாடிபோல சுவர்

அமைக்கும் கலை கண்டவரெல்லாம் மயங்கி நிற்கும் தகுதியது. இதற்கு Chettinad Plaster என்றும் Madras Plaster என்றும் பெயர் நிலவுகிறது.

நாவிதர்கள்:

சிகை அலங்கரிக்கும் கலையில் இராமநாதபுர மாவட்டத்து இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகிய மும்மதத்தினரும் புகழ் பெற்றிருக்கிறார்கள். மிகப் பெரிய ஹோட்டல்களெல்லாம் வெளி நாடுகளில் இவர்களுடைய பணியை விரும்பி வரவேற்கின்றன.

குறுவன்கள் :

குடும்பத்துப் பெண்களைக் கோவிலுக்குப் பொட்டுக் கட்டி கல்யாணத்திற்கு அறிகுறியாக கையில் ஒரு வளையல் போடுவது இவர்களது வழக்கம். அதன் பிறகு அந்தப் பெண் யாருடன் வேண்டுமானாலும் உறவு வைத்துக்கொள்ளலாம்.

நரிக்குறவரும் குருவிக்குறவரும் விலை கொடுத்து மனைவியை வாங்குகின்றனர்.

பள்ளியர்கள் என்ற மலைச்சாதியினரும் இருக்கின்றனர். ஆண்களும் பெண்களும் வரைமுறையின்றிக் கூடிக்கலந்து வாழ்கின்றனர்.

நாடோடிகள்:

ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு அருகேயுள்ள மலைப் பகுதிகளிலும் வேறு சில இடங்களிலும் பலவகையான நாடோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் குருவர்கள், நரிக்குறவர், குருவிக் குறவர், கல் ஒட்டர், மகாராஷ்டிரிகள், குறுவன்கள், ஆண்டிபண்டாரம் ஆகியோர்.

குருவர் தென்னிந்தியாவில் வேறிடங்களிலும் இருக்கின்றனர். பிச்சை எடுத்தும் குரங்காட்டம் காட்டியும் இவர்கள் வாழ்கிறார்கள்.

மகாராஷ்டிரிகள்: நாடோடி வாழ்க்கையிலேயே இவர்களுக்கு ஆசை. ஊர் ஊராகப் போய்க்கொண்டிருப்பார்கள். இவர்களில் இந்துக்களும் இருக்கின்றனர் முஸ்லிம்களும் இருக்கின்றனர். இந்த மலைச் சாதியினர் குடும்பம் ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ 30 பேர் இருப்பார்களாம்.

அந்தணர்

இம்மாவட்டத்தில் அந்தணர் எண்ணிக்கை குறைவு. வளமான பகுதியான வற்றாயிருப்பு, அரசர்கள் ஆட்சி செலுத்திய இராமநாதபுரம் சிவகங்கை நகர்கள், நகரத்தார் வாழும் ஊர்கள் ஆகியவற்றில் மட்டுமே இவர்கள் உள்ளனர்.

தாய்லந்து நாட்டில் திருப்பாவை திருவெம்பாவை பாடி அந்நாட்டு அரசர்களுக்குப் புரோகிதராக உள்ள அந்தணர்கள் தாங்கள் இராமநாதபுர மாவட்டத்திலிருந்து வந்தவர்களின் வழித் தோன்றல்கள் என்று கூறுகின்றனர். இசைப் புலவர் அரியக்குடி இராமாநுஜ அய்யங்கார், அறிவியல் மேதை டாக்டர் சர் கே. எஸ். கிருஷ்ணன், ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தவரும் சாகித்திய அகடமியின் துணைத் தலைவருமான டாக்டர் கே. ஆர். சீனிவாச ஐயங்கார் ஆகியோர் இம்மாவட்டத்தினருள் பெரும் புகழ் பெற்றவர்கள்.

முஸ்லிம்கள்:

கடல் கடந்த நாடுகளுடன் பெரிய அளவில் தொடர்புள்ள முஸ்லிம்கள் இம்மாவட்டத்தில் இராம

நாதபுரம் வட்டத்திலும் அதனை யடுத்த கடலோரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களில் பலர் பெருஞ் செல்வராக உள்ளனர். சென்னை முதலிய மாநகரங்களில் இவர்கள் சீரிய தொழில்களை நடத்தி வருகின்றனர். குடகுப் பகுதியில் காப்பித் தோட்டங்களில் உரிமையாளராயும் உள்ளனர்.

இராமநாதபுரம் வட்டத்தின் மக்கள் தொகையில் ஏறத்தாழ ஐந்தில் இரு பங்கினர் முஸ்லிம்கள் ஆவர். மண்டபம் மரக்காயர், சித்தார் கோட்டை சுல்தான், பனைக்குளம் சுல்தான் முதலிய பலரும் கீழக்கரைச் செல்வர்களும் இராமநாதபுரம் சேதுபதிகளுடன் தலை முறை தலை முறையாகக் கொண்டிருந்த நெருங்கிய உறவால் முத்துக் குளிக்கும் உரிமைகள் பெற்றுப் பெருஞ் செல்வாக்குப் பெற்றுள்ளனர். சில தீவுகளை இவர்களுக்குச் சேதுபதிகள் தானமாகவே கொடுத்து விட்டனர். அத்தீவுகளில் வாணிபம் செய்தும், மீன் பிடித்தும், தென்னை பயிரிட்டும் இவர்கள் வளமாக வாழ்கின்றனர். உப்பளத் தொழில், வலையல் ஏற்றுமதி, சங்கு விற்பனை, தங்கம் வெள்ளி வாணிகம், தோல் பதனிடுதல் இன்ன பிற துறைகளிலும் இராமநாதபுரத்து முஸ்லிம்கள் புகழ் பெற்றுள்ளனர். சிறு கப்பல்கள் ஓட்டுவது, மீன் ஏற்றுமதி செய்வது, அரிய பொருள்களை வெளி நாடுகளிலிருந்துகொண்டு வருவது ஆகிய ஆற்றல்களும் இவர்கள்பால் மிக்குள்ளன. இத்தொழில்களில் இவர்களுள் முதலாளிகளும் உள்ளனர், தொழிலாளிகளும் உள்ளனர். சான்றாக, சிறு கப்பல்களை உடைமையாக உடைய மரக்கல ராயர்கள் (மரக்காயர்கள) தங்கள் கப்பலைப் பிறருக்கு வாடகைக்கு விடுவர். மரக்கலங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்துக் கடல் வாணிகம் செய்வதிலும் மீன் பிடிப்பதிலும்

முஸ்லிம்களில் பல்லாயிரம் பேர் ஈடுபட்டிருக்கின்றனர்.

மீன் பிடி தொழிலில் முதலாளிகளும் தொழிலாளிகளும் உள்ளனர். மீன் பிடிக்கப் படகுகளும் கரைவலையும் வைத்து, கூலிக்கு ஆட் சேர்த்து, செல்வர்கள் பெரிய அளவில் தொழில் நடத்துகின்றனர்.

கரைவலை 2 கி. மீ. நீளமும் 200 மீட்டர் அகலமும் 5 மீட்டர் உயரமும் உடையது. கரையிலிருந்து கிளம்பிய படகுக்காரர்கள் கடலில் வெவ்வேறு திக்குகளில் நின்று கொண்டு அவற்றின் ஊடே கரைவலையை விரித்து பலவாறு குரல் கொடுத்து மீன்களை விரட்டி ஆறு மணி நேரத்தில் பலலட்சம் மீன்கள் பிடித்துவிடுவார்கள். மீன்களைப் பிடிக்க, கரைவலை ஒரு பொறி போன்று இருக்கும். அதில் தேங்காய்த் துண்டுகளும் பொருத்தப் பட்டிருக்கும். கரையிலிருந்து கரைவலையை இழுத்து மீன்களைக் கரை சேர்ப்பர். கணவாய் (Sepio) போன்ற சில மீன் வகைகளில் அவற்றின் கடல் நுரை வந்ததும் பிறகு சில பொருள்களை எடுத்து 'இந்தியன் இங்க்' என்னும் ஒருவகை அழுத்தமான மை செய்தும் சிலர் வாழ்கின்றனர்.

6. போக்கு வரத்து

சாலைப் போக்கு வரத்து:

இம்மாவட்டத்தில் 95 மைல்களுக்கு தேசிய நெடுஞ் சாலைகள் உள்ளன. கன்னியாகுமரியை இணைக்கும் நெடுஞ்சாலை இராமேசுவரத்தை இணைக்கும் நெடுஞ் சாலை ஆகிய இரண்டுமே இம்மாவட்டத்திற்குப் பயன் படுகின்றன.

மாநில அரசின் நெடுஞ்சாலைகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ளன. மாவட்டச் சாலைகள் பல வற்றை அரசினர் ஆண்டுதோறும் ஒப்புக் கொண்டு அவற்றை அகலப்படுத்தியும் உறுதிப்படுத்தியும் அவற் றின்மீது புதிய பாலங்களைக் கட்டியும் வருகின்றனர்.

ஊராட்சி ஒன்றியங்கள் சிற்றூர்களை இணைக்கும் சாலைகளைப் போட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியங் கள் ஏற்படுமுன், சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் யாத்திரைத் தலங்களுக்கும், செல்வர்கள் தங்கள் பகுதிச் சிற்றூர்களுக்கும், அரசினர் வணிக நகரங்களுக்கிடையே யும் சாலைகள் அமைத்தனர். எவ்விதப் போக்குவரத்து வசதியும் இல்லாத முதுகுளத்தூர் வட்டத்தில் கலகங் களுக்குப் பின்னர், 1958-இல் சாலைகள் போடுவதில் அரசினர் ஆர்வம் காட்டினர்.

தொன்மையாக இம்மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை சேது ரஸ்தா என்பது. இது கடலோரமாக அமைந்தது. காசியிலிருந்து இராமேசுவரத்திற்கு வருபவர்களுக்காக ஏற்பட்டது. அமெரிக்காவில் நெடுஞ்சாலைகளில் பத்து மைலுக்கு ஒரு Motel (மோட்டார் ஹோட்டல்) இருப்பது

போல சேது ரஸ்தாவில் யாத்திரீகர் வசதிக்காக இரண்டு அல்லது மூன்று மைல்களுக்கு ஒரு சத்திரம் இருந்தது. சத்திரங்களின் சிதைந்த பகுதிகளை இன்றும் காணலாம். இந்தச் சாலையைச் சோழ அரசர்களும் பாண்டிய அரசர் களும் அமைத்தனர். பிற்காலத்தில் சரபோஜி போன்ற தஞ்சை மன்னர்கள் இதை நன்கு பேணினர். சேதுபதி கள் இம்மாவட்டத்தின் பல பகுதியிலிருந்தும் மதுரை மாநகரிலிருந்தும் சேது யாத்திரை வருபவர்களுக்கு சாலைகளும் சத்திரங்களும் பல தலைமுறைகளுக்கு முன்னரே அமைத்தனர்.

ராணி மங்கம்மாள் காலத்தில் சிறந்த சாலைகள் இம் மாவட்டத்தின் பல பகுதிகளில் போடப்பட்டு அவை இன்றளவும் மங்கம்மாளின் புகழ் மங்காதபடி நின்று நிலவுகின்றன.

இவற்றுக்குப் பின்னர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதி யில் கடல் கடந்த நாடுகளில் பெரும் பொருளீட்டியவர் கள் தாங்கள் வாழும் பகுதிகளிலும் தாங்கள் திருப்பணி செய்த தலங்களிலும் பல சாலைகளைத் தங்கள் செலவில் அமைத்தனர். பல பாலங்களும் கட்டினர் அவற்றைப் புதுப்பிக்கும்போது, பொதுப் பணித்துறையினர் நன்கொடையாளர் பெயர்க் கற்களை அகற்றிவிடுகின் றனர். புதுப்பிக்கப் பெற்ற பாலங்கள் அரசியல் தலைவர் கள் பெயரைப் பெறுவதும் இந்நாளில் நடை முறை.

வைகையாற்றுக்குக் குறுக்கே மானா மதுரையிலும் பரமக்குடியிலும் மாநில நெடுஞ்சாலைத் துறையினர் சிறந்த முறையில் பாலங்கள் கட்டியுள்ளனர்.

பெரும் பாலும் சேது ரஸ்தாவை ஒட்டி இப்போது இந்திய அரசு East Coast Highway அமைத்து வருகிறது

பல பாலங்கள் கட்டப்பட்டு விட்டன. இன்னும் ஐம்பது பாலங்கள் கட்டி முடித்த பிறகு இச்சாலை வழியாகச் சென்னையிலிருந்து இராமேசுவரத்திற்குச் செல்லலாம்.

பாம்பன் கால்வாயின்மீது சாலைப்பாலம் கட்ட இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு ஆறு கோடி ரூபாய் செலவாகும். 1975-குள் இப்பாலம் முடிவடையக் கூடும்.

ஐக்கிய நாடுகள் அவையின் ஆதரவில் உலகெங்கும் புதிய சாலைகள் போடப் பெற்று வருகின்றன. இவற்றிற்கு International Highways என்று பெயர். இதில் ஒரு பகுதி The Pan Asia Highway என்பது. இது ஈரானிலுள்ள டெகரானில் தொடங்கி சிங்கப்பூர் வரை செல்லும். 31, 200 மைல் நீளமுள்ள இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையை விடத்தரம் சிறந்ததாயும் ஆசியாவிலுள்ள எல்லா நாடுகளையும் இணைப்பதாயும் இருக்கும். உலகின் ஈடு இணையற்ற சாலையாக ஆசிய நெடுஞ்சாலையை ஆக்க ஆசிய நாடுகளும் ஆசிய—நெடுந்தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் கழகமும் (ECAFE) உதவுகின்றன.

இந்தச் சாலை இலங்கையையும் இணைக்கும். தென்னிந்தியாவில் பெங்களூரிலிருந்து இராமேசுவரம் வரை இந்தச் சாலை போடப்படும். இந்தச் சாலையைப் பயன்படுத்துபவர்கள் இராமேசுவரத்திலிருந்து கப்பலில் இலங்கைக்குச் செல்வர்.

இம்மாவட்டத்தில் இதுவே சிறந்த சாலையாக அமையும். இச்சாலையில் ஆங்காங்கு ஹோட்டல்களும் மோட்டல்களும் சிறு விடுதிகளும் உலகச் சுற்றுப் பயணிகளுக்கு ஏற்றவாறு கட்டப்படும்.

பஸ் போக்குவரத்து:

இம்மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் பேருந்து திருச்சி—தேவகோட்டை மெயில் பஸ். (1905)

சிறந்த முறையில் இம்மாவட்டத்தில் பஸ் போக்குவரத்தை அமைத்து, குறித்த நேரத்தில் நடத்திய பெருமை, தனியார் துறையைச் சேரும். டி. வி. எஸ் கம்பெனியார் இவ்வகையில் திறமையாக வழிகாட்டினர். அவர்களைப் பார்த்தும் அவர்களிடம் பஸ்களை வாங்கியும் அவர்களிடம் கடன் உதவி பெற்றும் பல சிறிய கம்பெனிகள் பஸ் போக்குவரத்துத் தொழிலை நன்கு நடத்தி வருகின்றன.

1969 முதல் அரசாங்க பஸ்கள் இம்மாவட்டத்தில் பெரிய அளவில் இயங்குகின்றன. இராமநாதபுரத்தில் இதற்கு ஒரு பெரிய அலுவலகம் ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரத்திலிருந்து சென்னைக்கும் தமிழ் நாட்டின் பிற நகரங்களுக்கும் விரைவு வண்டிகள் செல்லுகின்றன.

ஏற்கெனவே தனியார் துறையில் நன்கு இயங்கிய மதுரை—தேவகோட்டை, மதுரை—விருதுநகர் பஸ்களில் சில இப்போது அரசு உடைமையாக உள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப் பெறுகின்றன.

பத்துக்கு மேற்பட்ட நகரங்களில் உள்ளூருக்குள் (டவுன் பஸ்) பேருந்துப் போக்குவரத்து நடைபெறுகிறது.

இராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு யாத்திரீகர் சென்று கோடிக்கரையில் தீர்த்தமாட வசதியாக ஒரு புதிய சாலை 1972-இல் போடப்பட்டிருக்கிறது. (1964-க்குப் பிறகு தனுஷ்கோடிக்கு படகில் மட்டுமே மக்கள் போய் வருகிறார்கள்) இராமேசுவரம் தேவ

ஸ்தானத்தார் தங்கள் விடுதிகளில் தங்குபவர்களுக்குக் கோடிக் கரைக்குப் போய்வர வசதி (Van Service) செய்து கொடுக்கிறார்கள்.

லாரி போக்குவரத்து:

லாரி போக்குவரத்து இம்மாவட்டத்தில் பெருகி யிருக்கிறது. தூத்துக்குடித் துறைமுகத்துக்கு இம் மாவட்டத்தின் வழியாகவே லாரிகள் செல்லுகின்றன.

இந்தியாவின் தலை சிறந்த லாரி நிறுவனங்களுள் ஒன்றான S P T இம்மாவட்டத்தாரால் நடத்தப்படு கிறது.

துறைமுகங்கள்:

இம்மாவட்டத்துக்கு 160 மைல் (272 கி. மீ) நீளத் துக்குக் கடற்கரை இருக்கிறது. தமிழ் நாட்டில் வேறு எந்த மாவட்டத்திற்கும் இவ்வளவு நீண்ட கடற்கரை இல்லை.

தொண்டி, மண்டபம், தேவிப்பட்டினம், கீழக்கரை, பாம்பன் ஆகிய சிறு துறைமுகங்கள் உள்ளன.

தொண்டி:

படகு கட்டுவதிலும் மீன் பிடிப்பதிலும் சிறந்து விளங்கும் இச்சிறு துறைமுகத்தைப்பற்றி நூலின் பிற் பகுதிகளில் விரிவாகக் கூறுவோம். வெளிநாட்டார் பலர் இத்துறைமுகத்தைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதி வைத்துள்ளனர். சங்ககாலத் தொண்டி இதுதானா என்பதுபற்றி, கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆனால், இது ஒரு பழமையான நகர் என்பது உறுதி. சிவகங்கை அரசர்களுக்கு இத்துறைமுகத்தைக் காக்கும் பொறுப்பும் 'தொண்டியன் துறையன்' என்ற பட்டமும் இருந்தன.

இலங்கை வாணிபமே இன்று இத்துறைமுகத்தின் உயிர் நாடி. 1 30-க்கு முன் பர்மாவுக்கும் இத்துறை முகத்துக்கும் பாய்மரக் கப்பல்கள் போய் வந்து கொண்டிருந்தன. அரண்மனையன்ன செட்டிநாட்டு வீடுகள் கட்ட, கவினுறு பர்மியத் தேக்குத் தொண்டித் துறைமுகத்தில்தான் வந்து இறங்கிற்று. ஒவ்வொரு வீட்டுக்கும் தனியே ஒரு சிறு கப்பலில் தேக்கு வந்ததாகக் கூறுவர்.

தனுஷ்கோடி:

இச்சிறு துறைமுகம் 1964வரை உயிரோடு இருந்தது. அந்நாளில் மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள் களும் எழுபது ஆயிரம் பயணிகளும் ஆண்டுதோறும் இத்துறைமுகத்தைப் பயன் படுத்தினர். இப்போது இதில் சிறு பகுதி இராமேசுவரம் துறைமுகம் வழியாக நடைபெறுகிறது.

பாம்பன், கீழக்கரைத் துறைமுகங்களின் வாணிபம் ஓர் ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கும் குறைந்தது. அமெரிக்காவிலிருந்து திரும்பிய விவேகானந்த சுவாமி களின் புனிதப் பாதங்கள் இந்தியாவில் முதலில் பட்டது பாம்பன் துறைமுகத்தில்தான்.

சேது சமுத்திரத் திட்டம்:

சேது சமுத்திரம் என்பது இராமநாதபுர மாவட் டத்தின் நாக்குப்போல் நீண்டிருக்கும் இராமேசுவரம் தீவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ளது. இக்கடற் பகுதி வடக்கில் பாக் விரிகுடாவும் (Palk Gulf) தெற்கே மன்னார் விரிகுடாவும் சேர்ந்தது. இப்பகுதியில் கடல் ஆழமாக இல்லை. இதனால் பெரிய கப்பல்கள் இவ்வழியில் செல்ல இயலவில்லை,

தூத்துக்குடியிலிருந்து புறப்படும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி, மொத்தம் 750 மைல் சென்று சென்னைத் துறைமுகத்தை அடைகின்றன. இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்குச் செல்லும் கப்பல்களும் இவ்வாறே இலங்கையை வலம் வருகின்றன. கடலுள் திட்டு இருக்கும் காரணத்தால் தூத்துக்குடிக்கு வரவேண்டிய இக்கப்பல்கள் அங்கு வராமல் கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன.

சேதுக் கடலை ஆழப்படுத்திஞல் பெரிய கப்பல்கள் செல்ல இயலும். இதற்குக் கால்வாய் வெட்டவேண்டும். இந்தக் கால்வாய் இந்தியாவுக்குச் செல்வம் தரும் கருவூலமாக இருக்கும்.

மண்டபத்துக்கும் உச்சிப்புளிக்கும் இடையே 5,400 அடி நீளம், 150 அடி அகலம், 32 அடி ஆழத்தில் ஒரு கால்வாயை வெட்டலாம். இந்தக் கால்வாய்தான் சேதுசமுத்திரக் கால்வாய் என்று குறிப்பிடப்படுகிறது.

சேதுசமுத்திரம் கால்வாயிலிருந்து தூத்துக்குடித் துறைமுகம் 82 மைல். இக் கால்வாய் வெட்டப் பெற்ருல் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்குச் செல்லும் கப்பல் களுக்கு 434 மைல் (700 கி. மீ) குறையும். இவ்வாறே கீழ்க்கண்ட துறைமுகங்களுக்குச் செல்லுவதற்கு 500 கி. மீ. முதல் 65 கி. மீ. வரை குறையும்.

விசாகபட்டினம்	500 கி. மீ.
கல்கத்தா	427 கி. மீ.
சிட்டகாங் (பங்களாதேஷ்)	350 கி. மீ.
இரங்கூன்	250 கி. மீ.
சிங்கப்பூர்	65 கி. மீ.

சேதுசமுத்திரம் கால்வாயின் தெற்கு வாயிலாகத் தூத்துக்குடித் துறைமுகம் அமையும். அத்துறைமுகத்

துக்கு உலகக் கப்பல்கள் யாவும் வருவதற்கு வழி பிறக்கும். இதுவே சேதுசமுத்திரத் திட்டத்தின் குறிக்கோள்,

கால்வாயை வெட்டுவது பற்றி நிலத்திலும் கடலிலும் 1950 முதல் பொறியியல் அறிஞர்களும் கடற்படையினரும் ஆராய்ந்தனர். கடலுக்கு அடியிலிருக்கும் பாறை அவ்வளவு கனமாக இல்லையென்றும் புலனாகியிருக்கிறது. மணல் இடம் பெயருவது பற்றி அணுசக்தி நிறுவனம் ஆராய்ந்துள்ளது; மண்மேடிடுவது கால்வாயை வெட்டுவதற்குத் தடையாக இராது என்று அக்குழு கூறியிருக்கிறது. நீரியல் ஆய்வு, பருவக் காற்றுப் பற்றிய ஆய்வு ஆகியனவும் செய்யப் பெற்றுள்ளன. பிரிட்டிஷ் அரசு அனுப்பிய கேப்டன் ஜே. ஆர். டேவிஸ் என்பவர் 1860-இல் இங்கு விரிவான ஆராய்ச்சிகளைச் செய்துள்ளார்.

கால்வாயை வெட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட இந்திய அரசு ஒரு குழுவை நியமித்தது. குழுவின் தலைவர் சர். ஏ. இராமசாமி முதலியார். செயலாளர் ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. சி. எஸ் இக்குழுவின் அறிக்கை 1956-இல் அரசினருக்குக் கொடுக்கப் பெற்றது. இராமேசுவரத்திலிருந்து மன்னார் வரையிலுள்ள மணற் பாறைகளை (இராமபிரான் தொடர்புடைய ஆதிசேது அல்லது Adam's Bridge) வெட்டலாமென்றும் தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் என்ற திருமறைக் காட்டிலிருந்து வட இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பருத்தித்துறை வரை (Point Calemore to Point Pedro) உள்ள மணற் பாங்கான கடற்பகுதியில் மணலைத் தோண்டி 13 மீட்டர் ஆழப்படுத்தி, பெரிய கப்பல்கள் செல்ல வகை செய்யலாமென்றும் அந்த அறிக்கை கூறியிருக்கிறது.

இத்திட்டத்திஞல் கொச்சி, தூத்துக்குடி, நாக பட்டினம், கடலூர், சென்னை. விசாகபட்டினம் துறை முகங்களுக்கிடையே வர்த்தக இணைப்பு ஏற்படும்.

தூரக் கிழக்கு நாடுகள் மற்றும் வெளி நாட்டுக் கப்பல்கள், நம் துறைமுகங்களுக்கு வந்து நிலக்கரியை யும் தண்ணீர் வசதியும் பெற்றுப் போகும். புதிய கால்வாய்ப் பாதையில் சென்ருல் பத்து நாட் (Knot-Nautical mile-6080 ft) வேகமுள்ள சரக்கு ஏற்றிச் செல் லும் கப்பல்களுக்கு ஒன்றரை நாள் பிரயாணம் குறை கிறது. இதஞல் ஒரு கப்பலுக்கு, செலவில் ரூ 10,000 மீதப்படுகிறது. சிக்கனமான டீசல் எண்ணெயில் இயங்கும் மிகப் பெரிய கப்பலுக்குக் கூட ரூ. 5,000 வரை மீதப்படும். விரைவான போக்கு வரத்தால் சரக்கு ஏற்றுபவர்களும் கப்பல் சொந்தக்காரர்களும் அடை யும் லாபம் மிகப் பெரிது. இக்கால்வாயை உபயோகப் படுத்தும் கப்பல்களுக்குக் கட்டணம் விதித்து கால்வாய் வெட்ட ஏற்படும் செலவை 25 ஆண்டுகளில் ஈடுகட்ட லாம். இந்தத் தொகை வெளிநாட்டுச் செலாவணியாகக் கிடைக்கும்.

இத்திட்டத்தால் இராமநாதபுர மாவட்டத்தின் பிற்போக்குத் தன்மை மாறும். இலங்கையில் குடி யுரிமை மறுக்கப்பட்டுத் தாயகம் திரும்பியுள்ளவர் களுக்குப் புது வாய்ப்பு ஏற்படும். கால்வாய் வெட்டும் போது தோண்டி எடுக்கப்படும் மண், பாறை ஆகிய வற்றைக் கொண்டு இராமேசுவரம் தீவின் கரைகளைக் கெட்டிப்படுத்தி இராமேசுவரத்தையும் தனுஷ்கோடியை யும் கடல் அரிப்பினின்றும் காப்பாற்றலாம்.

இத்திட்டத்திற்குப் பத்துக்கோடி ரூபாய்ச் செலவு ஆகுமென்று இராசாமி முதலியார் குழு கருதிற்று

முப்பது கோடி ரூபாய்க்குக் குறைந்து இந்தக் கால் வாயை வெட்ட இயலாது என்றும் அவ்வளவு தொகை செலவிடக்கூடியவாறு நிதி நிலைமை திருந்தும் வரை கால்வாய்த்திட்டம் காத்திருக்க வேண்டு மென்றும் இந்திய அரசு அப்போது அறிவித்தது. இப்போது (19 2-இல்) செலவு இன்னும் கூடுதலாக இருக்கும். எனினும் இத்திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண் டும். நம் நாட்டின் கடல் வாணிபமும் கடற்படையும் பெருகிவருவதால் சேது சமுத்திரத் திட்டத்தை நிறை வேற்றுவதும் கடற்படைத் தளமாக மண்டபத்தை அமைப்பதும் நம் நாட்டிற்கு நலம் பயக்கும்.

இத்திட்டத்துக்கு இலங்கை அரசு எதிர்ப்புத் தெரி விக்கும் என்ற கருத்து இந்திய அரசுக்கு இருந்திருக்கக் கூடும். ஐக்கிய நாடுகள் அவையில் பங்களாதேஷ் பிரச்சினையில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை வாக் களித்திருப்பதாலும், இந்தியாவுக்கு எதிராகச் சீனு வுடன் இலங்கை நெருங்கிய உறவு கொண்டிருப்ப தாலும் இலங்கையின் கருத்தை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. தம் நாட்டின் நலனுக்கேற்பத் திட்டங்களை நிறைவேற்றுவதே ஒரு நாட்டின் வளர்ச் சிக்கு ஏற்றது.

இக்கால்வாயை வெட்டலாமென்று முதலில் கருத் துத் தெரிவிக்கப்பட்டு 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதை முதலில் கூறியவர் ஆர். சி. பிரிஸ்டோ (Bristow) என்ற துறைமுகப் பொறியியல் அறிஞர். அவருக்குப் பிறகு இத்திட்டத்தை ஆய்ந்த Mr. Townshend of Plymouth என்பவர் இதற்கு 14 லட்சம் பவுன் செல வாகுமென்று கணக்கிட்டார். பின்னர் 1862 இல் Sir J. D. Elphinstone வேண்டுகோளுக்கு இணங்க பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதைப் பற்றி ஆராய ஒரு

குழுவை நியமித்தது 1863-இல் சென்னை இராசதானி யின் கவர்னரும் பொறியியல் அறிஞருமான Sir William Denison என்பவரும் Sir John Stoddart (Chief Assistant to the Surveyor General of the Ceylon Government) சேர்ந்து பாம்பனுக்கு அருகே ஓர் இடத்தைக் கால்வாய் வெட்டத் தேர்ந்தெடுத்தனர். 1872 இல் இந்தத் திட்டத்தைப் பற்றிப் பிரிடிஷ் அரசு மிகவும் சிந்தித்தது. 1884 இல் 865 பவுன் செலவு செய்த பிறகு திட்டம் ஒத்திப் போடப் பெற்றது.

1902-இல் தென்னிந்திய இரயில்வே கம்பெனி ஒரு திட்டம் தீட்டி 50 லட்சம் ரூபாய்ச் செலவில் கால்வாய் வெட்டி ஆண்டுக்கு ஏழரை லட்சம் வருவாய் பெறலா மென்று கூறிற்று. திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புக்கொண்ட சர். பிரிஸ்டோ, கொச்சி துறை முகத்தை விரிவாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தால் சேது சமுத்திரத் திட்டம் செயற்படவில்லை.

இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகு இத் திட்டத்தைப் பற்றிப் பொதுமக்களின் ஆர்வமும் நம்பிக்கையும் மிகுதியாக இருந்து வருகிறது. இத் திட்டம் உலகின் முக்கியமான கால்வாய்களுள் ஒன்றாக அமையும்.

உலகப் புகழ் பெற்ற சூயசுக்கால்வாய், எட்டாம் நூற்றாண்டில் திட்டமிடப்பெற்று 19-ஆம் நூற்றாண்டில் நிறைவேற்றப் பெற்றது; ஐரோப்பாவிலிருந்து இந்தியா விற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி வராமல் சூயஸ் கால்வாய் வழியாகக் குறுக்குப் பாதை ஏற்பட்டது.

பசிபிக் அட்லாண்டிக் ஆகிய பெருங்கடல்கள் இரண்டினையும் இணைக்கும் பனமாக் கால்வாயும்

வெட்டப் பெற்றிருக்கிறது. இதனால் தென் அமெரிக்கா வும் வட அமெரிக்காவும் பொருளாதார வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இருபத்தைந்து நாட்கள் சுற்றிய கப்பல்கள் இப்போது எட்டு மணி நேரத்தில் தாம் போய்ச் சேரும் இடங்களை அடைகின்றன,

ஜெர்மனியில் கீல் கால்வாய் வெட்டப்பெற்று வடகடலையும் பால்டிக் கடலையும் இணைத்து. டென்மார்க் கடலைச் சுற்றுமல் கப்பல்கள் குறுக்கே செல்லுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவும் கனடா வும் கூட்டாகச் சேர்ந்து செயின்ட்லாரன்ஸ் கால்வாயை வெட்டியிருக்கின்றன. இதற்கு நூறு கோடி டாலர் செலவாயிற்று. சுபபீரியர், மிச்சிகன், ஒன்டாரியோ போன்ற பல பெரிய ஏரிகளை இணைத்து உள் நாடடுக் குள் ஓராயிரம் மைலுக்குள் துறைமுகம் உண்டாக்கி யிருக்கிறார்கள். நியூயார்க்கு நகரில் எழுதி உருவாகும் நாளிதழ்களைச் சிக்காகோ நகரில் அச்சிடும் வசதியும் இந்தக கால்வாயால் ஏறபட்டிருக்கிறது:

மெக்சிகோவில் டெகுவன்டெபெக் பூசந்தியில் ஒரு கால்வாய் வெட்டி, பசிபிக் பெருங்கடலை மெக்சிகோ வளைகுடாவுடன் இணைத்திருக்கிறாகள்.

ரஷ்யாவில் ஏரல் கடல், காஸ்பியன் கடல் இரண்டை யும் சேர்த்து வால்கா, டான் பேராறுகள் வாயிலாகக் கருங்கடலை இணைக்க வேலை நடைபெறுகிறது. பால்டிக் கடல், வெண் கடல் இரண்டையும் லடோக், ஒலிகோ ஏரிகள் வழியாகக் கால்வாய் வெட்டி இணைக்கவும் வேலை மேற்கொண்டிருக்கிறார்கள்.

தாய்லந்து நாட்டில் கிரா பூசந்தியில் கால்வாய் அமைத்து வங்காள விரிகுடா—சயாம் வளைகுடா இணைப்

புக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். மலேயா தீபகற்பத்தைக் கப்பல்கள் சுற்றுவது இதனால் தவிர்க்கப்படும்.

இந்தப் பட்டியலில் சேது கால்வாய் விரைந்து இடம் பெறுவதாக.

இரயில் போக்குவாத்து

இம்மாவட்டத்தில் 268 மைல் அல்லது 432 கி. மீ. தொலைவுக்கு இரயில் பாதைகள் உள்ளன. இப்பாதைகள் யாவும் மீட்டர் கேஜ் பாதைகளே. அதாவது இவற்றின் அகலம் மூன்று அடி, மூன்றே முக்காலே அரைக்கால் அங்குலம்.

மொத்தம் 54 இரயில் நிலையங்கள் உள்ளன இவற்றுள்.

(1) விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் வழியாக சென்னை—திருவனந்தபுரம் இரயில் பாதையும்.

(2) மானா மதுரை, பரமக்குடி, இராமநாதபுரம், பாம்பன் வழியாக மதுரை—இராமேசுவரம் இரயில் பாதையும்.

(3) செட்டி நாடு, காரைக்குடி, சிவகங்கை வழியாக திருச்சி—மானா மதுரை இரயில் பாதையும்.

(4) விருதுநகர், சாத்தூர் வழியாக மதுரை—தூத்துக்குடி இரயில் பாதையும்

(5) கண்டனூர் புதுவயல் வழியாக காரைக்குடி—அறந்தாங்கி இரயில் பாதையும்

(6) அருப்புக் கோட்டை, திருச்சுழி வழியாக விருதுநகர்—மானா மதுரை இரயில் பாதையும் செல்லுகின்றன.

இரயில் பாதைகள்

(யாவும் மீட்டர் கா்ஜ் —அகலம் 3' 3-3/8")

பிரிவு	திறக்கப்பட்ட தேதி	மைல்	கி. மீ.
மதுரை—மானாமதுரை—மண்டபம்	1-8-1902	89·48	144
மண்டபம்—பாம்பன் பாலம்	1-1-1914	3·12	5
பாம்பன்பாலம்—இராமேசுவரம் ரோடு	15-10-1927	6 77	11
இராமேசுவரம் ரோடு—தனுசுகோடி	10-12-1908	10·64	17
தனுசுகோடி பியர்—தனுசுகோடி	1-12-1913	0·07	0·1
மதுரை—தூத்துக்குடி	1-1-1876	98·00	158
விருதுநகர்—தென்காசி	30-6-1927	76·06	122
பாம்பன்—இராமேசுவரம்	1-9-1906	6·92	11
புதுக்கோட்டை—மானாமதுரை	1-7-1930	60·26	97
காரைக்குடி—அறந்தாங்கி	1952	17	28
விருதுநகர்—மானாமதுரை	5-9-1963	41	66
ஆலங்குளம் சிமிண்டு ஆலைச்சாலை (சரக்கு ஏற்ற மட்டும்)	1970	10	16

பாம்பன்—தனுசுகோடி இரயில் பாதை புயலால் அழிக்கப்பட்டு விட்டது.

22 மைல் தொலைவுக்கு இரயில்வேத் துறையினர் நடத்திய ஸ்டீமர் சர்வீசு நாள் தோறும் தனுசுகோடியிலிருந்து தலைமன்னாருக்கு 1-3-1914 முதல் ஐம்பது ஆண்டுகள் சென்று வந்தது. 1956 முதல் இது வாரம் ஒரு முறை இராமேசுவரத்திலிருந்து தலைமன்னாருக்குச் சென்று வருகிறது.

பாம்பனுக்கும் தனுசுகோடிக்கும் போடப் பெற்ற இரயில் பாதை புயல் காற்ருலும் கடல் கோளாலும் அழிந்துவிட்டது.

வணிக நகரங்களாகத் திகழும் விழுதுநகர், சாத்தூர், சிவகாசி, இரா்ஜபாளையம், காரைக்குடி, இராமநாதபுரம் ஆகியவற்றுக்கு இரயில் வசதி இருக்கிறது. முக்கிய இடங்களான கமுதிக்கும் முதுகுளத்தூருக்கும் இரயில் தொடர்பு இல்லை. மாஞு மதுரையிலிருந்து தூத்துக்குடித் துறைமுகத்திற்கு இரயில் பாதை போடப்பட்டால் இந்நகர்கள் இரயில் வசதி அடைந்து இப்பகுதி வளர்ச்சியடையும். திருப்பத்தூரும் சிங்கம் புணரியும் பல துறைகளில் வளர்ச்சி பெற்று வருவதால் காரைக்குடி திண்டுக்கல் இரயில் இணைப்பும் இம்மாவட்டத்தின் தேவையாகும்.

இரயிலில் அனுப்பப்படும் சரக்குகளை வைத்திருப்பதற்கும் இரயில் பெட்டி மாற்றி அனுப்புவதற்கும் பயன்படும் மார்ஷெல்லிங் யார்டு (Marshalling yard) விருதுநகரில் 1963 அளவில் முப்பது லட்சம் ரூபாய்ச் செலவில் ஏற்பட்டது. விருதுநகர்—மாஞு மதுரை இரயில் பாதையின் விளைவாக திருச்சிக்கும் விருதுநகருக்கும் உள்ள தொலைவு 13 மைல் குறைந்திருக்கிறது. இதனுல் திருச்சிக்கு வடக்கேயிருந்து (1) தூத்துக்குடித் துறைமுகம் (2) நெல்லை மாவட்டம் (3) கேரளம் ஆகியவற்றுக்குச் செல்லும் எல்லாப் பொருள்களும் திருச்சி—மாஞு மதுரை—விருதுநகர் இரயில் பாதையிலேயே செல்கின்றன. விருதுநகர் மார்ஷெல்லிங் யார்டு, மதுரை மார்ஷெல்லிங் யார்டைவிடப் பெரிது.

அருப்புக்கோட்டையிலிருந்து முதுகுளத்தூருக்கு இரயில் பாதை போட வேண்டுமென்ற எண்ணம்

முதுகுளத்தூர் கலகங்களுக்குப் பின்னர் ஏற்பட்டது. அருப்புக்கோட்டையிலிருந்து கீழக்கரை வரை 60 மைலுக்கும் மானா மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை 75 மைலுக்கும் இரயில் பாதை போட வேண்டுமென்று 1958 இல் தமிழக ஆளுனர் இந்திய இரயில்வே அமைச்சுக்கு எழுதியுள்ளார். கடலோரப் பகுதி தவிர ஏனைய பகுதிகள் பருத்தி வேளாண்மைக்கு ஏற்றவை என்றும் கடற்கரைப் பகுதிகளில் இரசாயனத் தொழிற்சாலைகள் தொடங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தூத்துக்குடித் துறைமுகம் வழியாக கருப்புக் கட்டியையும் கருவாட்டையும் இலங்கைக்கு அனுப்பவும் தாளையூத்து, துலுக்கப்பட்டி சிமெண்டு ஆலைகளுக்கு சுண்ணும்புக்கல் அனுப்பவும் இந்த இரயில் பாதை பயன்படும்.

மானா மதுரை—தூத்துக்குடிப் பாதையைக் கமுதி விளாத்திகுளம் வழியாகப் போட 1931-இல் அப்போதைய 'சவுத் இந்தியன் ரயில்வே கம்பெனி' திட்டமிட்டது. 1955-இல் இந்திய அரசினர் அத்திட்டத்தை நிறைவேற்ற விரும்பினர். மானா மதுரை—விருதுநகர் இரயில் பாதை போடுவது அதைவிட அவசரம் என்று கருதி, இத்திட்டம் கைவிடப்பட்டது.

இந்தியா—இலங்கை இரயில் தொடர்பு:

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் நடைபெற்ற கப்பல் போக்குவரத்து மட்டுமே சென்ற நூற்றுண்டில் இந்தியாவையும் இலங்கையையும் தொடர்பு படுத்திற்று. நாள்தோறும் வந்த இக்கப்பலில் இலங்கையிலிருந்து இந்தியத் த'பால்கள் வந்தன. இந்தக் கப்பலை எதிர்பார்த்து தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் புறப்படுவதாக இருந்தது. இக்காரணத்தால் இன்றும் நெல்லை மாவட்டத்

தார் தூத்துக்குடி எக்ஸ்பிரஸை 'போட் மெயில்' என்று சொல்லுகிறார்கள்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இரயில் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் 1876-இல் ஆங்கிலேயர்க்கு ஏற்பட்டது. பல மாற்றுத் திட்டங்கள் பரிசீலிக்கப் பெற்றன. பாம்பனுக்கும் மண்டபத்திற்கும் இடையே கீழே கப்பலும் மேலே இரயிலும் செல்லக் கூடிய ஒரு பாலத்தைக் (A viaduct With Schtrzer lift-bridgc orer the Palk Strait) கட்டுவதென்று முடிவு செய்தனர். இப்பாலத்தைப் பற்றிய விவரங்களைத் தனியே தருவோம்.

இலங்கைக் கரையிலுள்ள தலை மன்னார் என்னுமிடம் தனுசுகோடியிலிருந்து 22 மைல் தொலைவுதான். இந்த இரண்டு கரைகளுக்கும் இடையே ஒரு சிறு கப்பலை (Ferry) இரயில்வே கம்பெனியே நடத்துவதென்றும் முடிவு செய்யப் பெற்றது. 1914-இல் இந்தப் போக்குவரத்துத் தொடங்கி, நாள்தோறும் இலங்கை செல்லும் வாய்ப்பு எளிதில் ஏற்பட்டது. இலங்கைக்கு பல நூறாயிரம் தமிழர்கள் செல்லத் தொடங்கினர். இதன் விளைவு இலங்கையின் செழிப்பு. அதே நேரத்தில் உழைக்கக்கூடியவர்களின் உழைப்பு இராமநாதபுர் மாவட்டத்திற்குக் கிடைக்காமல் போயிற்று.

மிகப் பெரிய அளவில் இந்தியர் இலங்கைக்கு வந்ததை இலங்கை அரசு விரும்பவில்லை. அதனால் இந்தியர், இலங்கைக்குள் நுழைவதற்குப் பல கட்டுப்பாடுகளை அவர்கள் விதித்தார்கள். எனவே 1959 முதல் தனுசுகோடி—தலைமன்னார் கப்பல் போக்குவரத்து ஒரு வாரத்திற்கு மூன்று நாட்களாகவும் பின்னர் வாரத்திற்கு ஒரு நாளாகவும் குறைக்கப் பெற்றிருக்கிறது.

தள்ளுக்காற்று அடித்தால் இந்தச் சிறு கப்பலில் ஒரு மணி நேரத்தில் இலங்கைக் கரையை அடையலாம்; எதிர்க்காற்று அடித்தால் இரண்டரை மணி நேரம் ஆகும். இக்கப்பலின் கீழ்த் தளத்தில் பயணம் செய்பவர்களுக்கு 1914-இல் ஒன்றரை ரூபாய் கட்டணம் வசூலிக்கப் பெற்றது. இப்போது இதைப்போல பதினாறு பங்கு வசூலிக்கப் பெறுகிறது.

இக்கப்பலிலிருந்தவாறு, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பேச தொலைபேசி வசதி செய்யப் பெற்றிருக்கிறது.

இயற்கையின் சீற்றத்தால் 1964-இல் தனுசுகோடி இரயில் நிலையமும் அதை அடுத்து கடலுக்குள் அமைத்திருந்த பாலமும் அழிந்து விட்டதால், இப்போது இராமேசுவரத்திலிருந்து கப்பல் போக்குவரத்து நடை பெறுகிறது.

இந்திய—இலங்கைப் பயணிகளுக்கு வசதியாக, சென்னையிலிருந்து புறப்பட்டு இந்திய எல்லையில் கப்பல் ஏறும் இடம்வரை செல்ல போட்மெயில் என்றும் இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் என்றும் சொல்லப்படும் இரயில் 1915-இல் விடப் பெற்றது. இது இப்போது 'சென்னை இராமேசுவரம் எக்ஸ்பிரஸ்' என்று பெயர் பெற்றிருக்கிறது,

இதைப்போலவே இலங்கை அரசின் இரயில் தலைமன்னாரிலிருந்து கொழும்புக் கோட்டைக்குச் செல்லுகிறது. இதற்கு 'இந்தியா கோச்' என்று பெயர்.

தீவுப்பகுதியில் இரயில் போக்கு வரத்து :

இரமேசுவ்ரம் தீவில் இரயில் பாதையைப் பேணுவது தென் இரயில்வேயின் முக்கியமான தொல்லையாக இருந்து வருகிறது. பாதைகளை மணல் மூடிவிடாமல் இருப்பதற்காகப் பெரும் பணம் செலவு செய்கிறார்கள்

அதற்காக பலநூறு கூலிகளை வேலையில் வைத்துக் கொள்கிறார்கள். மண்டபத்திலிருந்து நாள்தோறும் இந்தத் தொழிலாளிகள் போய் வருவதற்காக 'கூலி டிரயின்'களை ஓட்டுகிறார்கள். இதுபோல, 'தண்ணீர் டிரயின்'களும் போய் வருகின்றன. இராமேசுவரம் தீவில் நீர் கிடைக்காது. உப்பில்லாத் தண்ணீர் மண்டபத்திற்கு வடக்கேயிருந்துதான் தீவுக்குச் செல்ல வேண்டும்.

தனுசுகோடிக்கு முதலில் இரயில் வசதி செய்யத் திட்டமிட்டபோது பாம்பனிலிருந்து இராமேசுவரத்திற்கும், இராமேசுவரத்திலிருந்து கரையோரமாக தனுசுகோடிக்கும் இரயில் பாதை போடப்பெற்றது கடல் காற்றால் இராமேசுவரம்—தனுசுகோடி பாதை பாதிக்கப்பட்டபோது இராமேசுவரத்திலிருந்து இராமேசுவரம் ரோடு என்ற இரயில் நிலையத்திற்கும் அங்கிருந்து தனுசுகோடிக்கும் இரயில் பாதை போடப் பெற்றது. பிறகு பாம்பனும் இராமேசுவரம் ரோடு இரயில் நிலையமும் இணைக்கப் பெற்றன. இந்த இணைப்புப் பாதை, பல்லாண்டுகளுக்குமுன் புயலால் அழிந்தது.

பாம்பன் கால்வாய்:

மண்டபத்துக்கும் பாம்பனுக்கும் இடைப்பட்டது இந்தக் கால்வாய். இது பாம்பைப்போல் நெளிந்து ஓடுவதால் இவ்வாறு பெயர் பெற்றிருக்கிறது. இதைத் தாண்டித்தான் இராமேசுவரம் தீவுக்குப் போக வேண்டும். எந்தச் செயலிலாவது ஈடுபடும்போது ஒரு தடை ஏற்பட்டால், "இராமேசுவரத்துக்குப் போகும் போது பாம்பன் ஆறு குறுக்கிட்டாற்போல்" என்ற பழமொழி வழங்கி வருகிறது.

பல நூற்றாண்டுகளுக்குமுன் இராமேசுவரம் தீவு இந்தியாவுடன் சேர்ந்த நிலப்பரப்பாக இருந்து கடல் கொந்தளிப்பால் பிரிந்து தீவாயிற்று என்பர்.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக் கால்வாயில் படகுகள் செல்லவில்லை. ஐரோப்பிய நாடுகளில் டச்சுக்காரர் கப்பல்கள் செல்லும் கால்வாய்களை அமைப்பதில் அனுபவம் உள்ளவர்கள். அவர்களைக் கொண்டு 1828-இல் லூசிங்டன் என்ற கவர்னர் பாம்பன் கால்வாயை அகலப்படுத்தினர். ஆழத்தையும் மேலும் 15 அடி கூடுதலாக வெட்டினர். 1837 முதல் படகுகளும் சிறு கப்பல்களும் இக் கால்வாயில் செல்லுகின்றன.

இக்கால்வாய் மணற் பாறைகளின்மீது அமைந்தது. இதன் நீளம் பன்னிரண்டு மைல். இந்தப் பன்னிரண்டு மைல் தொலைவில் சில இடங்களில் தண்ணீரின் அளவு ஒன்றரை ஆள் மட்டமே.

பாம்பன் பாலம் :

இரயில் நிர்வாகத்தார், ஒவ்வொன்றும் நாற்பது அடி நீளமுள்ள 145 கணவாய்களைக் கொண்டு இப்பாலத்தைக் கட்டியிருக்கிறார்கள். இதற்கு வேண்டிய கல்லும் காங்கிரீட்டுக்குச் சிறு கற்களும் 170 மைலுக்கு அப்பால் மலைப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டன. கான்கிரீட் கலவைக்கு மணல் 70 மைல் தொலைவிலிருந்து தனி இரயில்களில் வந்தது. 1911-ஆம் ஆண்டு சூன் மாதம் வேலை தொடங்கி 1913-ஆம் ஆண்டு சூலை மாதம் வேலை முடிந்தது. இடையில் வட கிழக்குப் பருவக் காற்றால் ஏற்பட்ட புயல்களால் ஆறு மாதங்களுக்கு வேலை நிறுத்தி வைக்கப் பெற்றது.

4,000 டன் சிமெண்டு, 1,36,000 c.ft களிமண், 1,80,000 c.ft. கல், 1,03,000 c.ft, மணல், 80,000 c.ft

boulders, 2,600 டன் எஃகு ஆகியவை இந்தப் பாலத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. பாலத்தின் நீளம் 6,750 அடி. (இரண்டு கி. மீ. க்கு சற்று கூடுதல்)

பாலத்தின் நடுவே, கப்பல்கள், பாலத்தைத் தட்டாதபடி செல்ல இடைவெளி விடும் தூக்கும் பகுதி 1913-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப்பெற்று டிசம்பர் மாதத்தில் முடிக்கப் பெற்றது.

பாலத்தைப் புதுப்பித்தல் :

1964-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ஆம் தேதி கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனால் இந்தப் பாலத்தின் பெரும் பகுதி சேதப்பட்டது. இராமேசுவரம் தீவுக்குப் படகு மூலம் மட்டுமே போக்குவரத்து நடைபெற்றது. எல்லா இரயில்களும் மண்டபத்துடன் நின்று விட்டன.

அப்போது தட்சிண இரயில்வே (சதர்ன் இரயில்வே) தலைமை அலுவலராக பி. சி. கங்கூலி என்ற பொறியியல் அறிஞர் இருந்தார். அவர் இந்திய அரசிடம் வற்புறுத்தி உடனடியாகப் பாலத்தைப் புதுப்பிப்பதற்கு ஆணை பெற்றார். 1965 ஜனவரி 17-ஆம் நாள் பாலத்தைப் புதுப்பிக்கும் வேலை தொடங்கிற்று. 24 மணி நேரமும் வேலை நடைபெற்றது. பாலத்தின் அமைப்பில் எவ்வித மாறுதலும் செய்யப்பெறவில்லை. 35 லட்சம் ரூபாய் செலவில் 42 நாளில் கங்கூலியின் நேர் பார்வையில், இந்திய நாடே மூக்கின்மேல் விரல் வைத்து வியப்படையும் வண்ணம் பாலம் கட்டி முடிக்கப் பெற்றது. மார்ச்சு 1-ஆம் தேதி மஹா சிவராத்திரிக்கு மக்கள் இராமேசுவரத்திற்குப் போய்ச் சேருவதற்கு வசதியாக, நின்று போயிருந்த "இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்" பிப்ரவரி 28-ஆம் தேதி சென்னையிலிருந்து சென்னை—இராமேசு

வரம் எக்ஸ்பிரஸ் என்ற பெயருடன் புறப்பட்டு மறுநாள் இராமேசுவரத்தை அடைந்தது.

இதே கங்கூலிதான் பாகிஸ்தான் பிரிவினையால் வடகிழக்கு இந்தியாவில் துண்டிக்கப் பெற்ற பகுதிகளுக்குத் திறமையாக புதிய இரயில் பாதைகளை அமைத்து இந்தியாவின் போக்குவரத்தையும் பொருளாதாரத்தையும் காப்பாற்றியவர். 1971-இல் இரயில்வே அமைச்சர் அநுமந்தையாவுக்கும் (அப்போது இரயில்வே போர்டின் தலைமைப் பதவி வகித்த) கங்கூலிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கங்கூலி பதவியைவிட்டு நீக்கப் பட்டார்.

கப்பல் பழுதுபார்க்கும் பட்டறை:

மண்டபத்தில் கப்பல் பழுது பார்க்கும் வசதியை இரயில்வேத் துறையினர் செய்திருக்கிறார்கள். இதற்கு Railway's Dry Dock என்று பெயர். இராமேசுவரம்— தலைமன்னார் கப்பலைப் பழுது பார்ப்பதற்காக இது ஏற் பட்டது. பிற கப்பல்களையும் இங்கு பழுது பார்த்துக் கொடுக்கிறார்கள்.

இந்த நிலையத்தைப் பற்றிய விவரங்கள்:—

நீளம்	264 அடி.
நுழைவாயில் அகலம்	50 அடி.
ஆழம்	
O er all at low water	6. 50 அடி
Over all at high water	9. 08 அடி

1,000 டன் (deadweight including the weight of ballast coal and water) எடைக்கு உள்பட்டதும் 260. அடிக்குக் குறைந்த நீளமுடையது மாகிய கப்பல்களை இங்கு பழுதுபார்த்துக் கொடுக்கிறார்கள். பழுது பார்ம

பதற்கு 875 ரூபாய் கட்டணமும் ஒவ்வொரு நாளுக்கும் 187-50 ரூபாய் வாடகையும் வசூலிக்கின்றனர். இந்தத் தளத்தை மேற்பார்வை செய்ய மண்டபத்தில் ஒரு Marine Superintendent இருக்கிறார்.

விமானப் போக்கு வரத்து:

இந்தியாவில் ஆகாய விமானப் போக்கு வரத்தை வளர்த்ததில் இம்மாவட்டத்தாருக்கு முக்கியப் பங்கு உண்டு.

ஆகாயவிமானம் ஓட்டும் லைசென்சை முதலில் பெற்ற இந்தியர் கானாடு காத்தான் சா. அ. அ. அண்ணாமலைச் செட்டியார் ஆவார். ஜே. ஆர். டி டாட்டாவிற்கு முன்னரே இவர் லைசென்ஸ் பெற்றார். சென்னை ஆகாயவிமான நிலையம் வளர்ச்சி அடைந்த வரலாற்றிலும் சென்னை—கொழும்பு விமானப் போக்கு வரத்து ஏற்பாட்டிலும், சென்னையில் விமானம் ஓட்டிகள் சங்கம் நிறுவியதிலும் இவருக்குப் பங்கு உண்டு. இவருக்கு ஏரோப்பிளேன் அண்ணாமலை செட்டியார் என்று பெயர். கானாடு காத்தானில் இவர் வீட்டிலேயே ஓர் ஆகாய விமானத்தை நிறுத்தி வைத்திருந்தார்.

1948 இல் ஹைதராபாத்தில் ரஜாக்கர் கலகம் ஏற்பட்டது. அதனால் இந்தியாவுக்குள் உள்நாட்டு விமானப் போக்கு வரத்துப் பாதிக்கப்படாதவாறு செய்தவர் டாக்டர் அழகப்ப செட்டியார். 'ஜுப்பிட்டர் ஏர்லைன்ஸ்' என்ற விமானக் கம்பெனியையும் அவர் நடத்தினார்.

விமானி லைசென்ஸ் பெற்ற செட்டியார்கள் பலர் இருந்ததாலும் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் பேராதரவாலும் செட்டி நாடு விமான நிலையம் 1930 இல் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்

போருக்குப் பிறகு அது மூடப் பெற்றது. அந்த இடத்தில் இப்போது கால் நடைப் பண்ணை இருக்கிறது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் கடற்படையை "ரோந்து' பார்க்கும் ஆகாய விமானிகள் இறங்க வேண்டியது ஏற்பட்டால், அப்போது பயன்படுவதற்காக இராமநாதபுரம் நகருக்கும் மண்டபத்திற்கும் இடையே உச்சிப் புளி (வாலாந்தறுவை) என்னுமிடத்தில் ஒரு சிறு விமான நிலையம் அமைக்கப்பட்டது. அது இப்போது பயன்படுத்தப்பட வில்லை. எனினும் அது கடற்படை வளர்ச்சி கருதி ஓரளவு பேணப்பட்டு வருகிறது.

மதுரை விமான நிலையம், இராமநாதபுர மாவட்ட எல்லையிலிருந்து (அருப்புக் கோட்டைச் சாலையிலுள்ள காவியூரிலிருந்து) 12 கி. மீ. தொலைவிலுள்ளது.

அஞ்சல் நிலையங்கள்:

இம்மாவட்டத்தின் பெரும் பகுதி 1956 வரை மதுரை போஸ்டல் டிவிசனில் இருந்தது. 1956 இல் இராமநாதபுரம் போஸ்டல் டிவிசன் உண்டாக்கப் பெற்றது. இந்த டிவிசனின் தலைநகர் இராமநாதபுரம். ஒரு முது நிலைக் கண்காணிப்பாளர் (S. S. P) இதன் தலைவராக உள்ளார். புதுக்கோட்டை போஸ்டல் டிவிசனில் இருந்து வரும் சில அஞ்சல் நிலையங்களை இராமநாதபுரம் டிவிசனுக்கு மாற்ற ஏற்பாடு நடந்து வருகிறது.

1970 செப்டம்பரில் இராமநாதபுரம் போஸ்டல் டிவிசனின் ஒரு பகுதியான சாத்தூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்கள் பிரிக்கப்பட்டு விருதுநகர் டிவிசன் தோன்றியது. ஏறத்தாழ 1,000 அஞ்சல் நிலையங்கள் இரண்டு டிவிசன்களிலும் உள்ளன. முது

குளத்தூர், சிவகங்கை வட்டங்கள் பிற்பட்ட பகுதிகளாய் இருப்பதால் அங்கு அஞ்சல் நிலையங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. விருதுநகர், இராஜபாளையம், இராமநாதபுரம், காரைக்குடி நகர்களில் தலைமை அஞ்சல் நிலையங்கள் உள்ளன. தேவகோட்டை, மானாமதுரை, சிவகங்கை நகர்களிலும் தலைமை அஞ்சல் நிலையங்கள் நிறுவ வாய்ப்பு இருக்கிறது.

இலங்கைக்கும், இலங்கையிலிருந்தும் அஞ்சல்கள் இராமேசுவரம் துறைமுகம் வழியாக ஓர் ஆண்டில் பதினொரு மாதங்களில் அனுப்பப்படுகின்றன.

இந்திய அரசைச் சேர்ந்த Shipping Corporation of India வின் கப்பல்களில் அஞ்சல் பைகள் செல்லுகின்றன.

புதுக்கோட்டையிலிருந்து இம்மாவட்டத்திலுள்ள நெற்குப்பைக்கு மெயில் வேன் வசதியிருப்பது குறிப்பிடத்தக்கது,

தந்தி, தொலைபேசி வசதிகள்:

மாவட்டத்தின் பல இடங்களில் தந்தி நிலையங்கள் உள்ளன. சில ஊர்களில் Phono-com அலுவலகங்கள் இருக்கின்றன.

நூறு ஊர்களில் அஞ்சல் நிலையங்களில் தொலைபேசி வசதி இருக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள தொலைபேசி இணைப்பகங்களின் முழுப் பட்டியல் கிடைக்கவில்லை சிலவற்றை மட்டும் இங்கே தருகிறோம்.

காரைக்குடி	கீழைச் சிவற்பட்டி
தேவகோட்டை	திருப்பத்தூர்.
செட்டிநாடு	கண்டமாணிக்கம்
புதுவயல்	நெற்குப்பை,

ஆத்தங்குடி
சிவகங்கை
பாகனேரி
மானுமதுரை
பரமக்குடி
இராமநாதபுரம்
விருதுநகர்
ஸ்ரீ வில்லிபுத்தூர்
சிங்கம்புணரி.
மண்டபம்
இளையாங்குடி
அருப்புக்கோட்டை
கமுதி
கீழக்கரை
சாத்தூர்
இராஜபாளையம்

இராமேசுவரம் தீவில் ஒரு Micro—Wave Transmitting Station இருக்கிறது. இதன்மூலம் கம்பியில்லாச் செய்திகள் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே அனுப்பப் பெறுகின்றன.

இம்மாவட்டத்துத் தொலைபேசி நிலையங்களில் பல பாளையங்கோட்டையிலுள்ள D. E. T. அலுவலகத்திற்குக் கட்டுப்பட்டவை. ஒரு சில மதுரையிலுள்ள D, E. T. யின் ஆட்சி எல்லையில் உள்ளன. இவை அனைத்தையும் ஒன்றுக்கி மதுரையிலேயே இராமநாதபுர மாவட்டத்திற்கு ஒரு D. E. T. அலுவலகம் அமைப்பது நன்று.

7. வாணிகம்

இம் மாவட்டத்தில் கடலோரத்தில் உப்பளங்கள் உள்ளன. அவற்றில் ஓரளவு உப்புக் காய்ச்சுகிறார்கள். தஞ்சை, நெல்லை மாவட்டங்களில் போல பெரிய உப்பளங்களோ ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உப்புக் காய்ச்சும் தொழிலோ இல்லை.

மீன், சங்கு ஆகிய கடலோரப் பொருள்களுக்கு இம்மாவட்டம் பெயர் பெற்றது. இராமேசுவரத்து மீன் வங்காளம்வரை செல்லுகின்றது. சங்கு எடுப்பதற்கும் சங்கிலிருந்து வளையல் முதலிய பொருள்கள் செய்வதற்கும் இம்மாவட்டம் நெடுங்காலமாகப் பெயர் பெற்றிருக்கிறது.

பனைமரங்கள் கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் ஏராளமாக உள்ளன. பனை ஓலைகளுக்கு வர்ணம் தீட்டி பெட்டி, கூடை, விசிறி, பாய் போன்ற பொருள்கள் அழகாகச் செய்யப்பெற்று வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி யாகின்றன.

தென்னை பயிரிடும் தொழில் பெருகியிருப்பதால் அதையொட்டிய பல தொழில்கள் வளருவதற்கான தொடக்கநிலை உருவாகி வருகிறது. வைகைக் கரையில் இம் மாவட்டத்திலுள்ள தென்னந் தோப்புகளுக்கு மதுரைமாநகரம் ஒரு பெரிய சந்தையாக இருந்து வருகிறது.

மளிகைப் பொருள்கள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றுக்குத் தமிழ்நாட்டுக்கே பெரிய விற்பனை நிலையமாக விருதுநகர் விளங்குகிறது. காப்பிக் கொட்டையும் ஏனைய தோட்டப் பொருள்களும் பிற மாவட்டங்களில்

விளைந்தாலும் அவற்றிற்கு விலை வைக்கும் உரிமை, விருது நகர் வணிகரின் தனி உரிமையாக இருந்து வருகிறது.

பஞ்சு, பருத்தி உற்பத்தியைப் பற்றி இந்நூலின் பிறிதொரு பகுதியில் ஏற்கெனவே குறிப்பிட்டிருக் கிறோம். இராஜபாளையம், விருதுநகர், சாத்தூர் நகர் கள் இவ்வகையில் ஏற்றம் பெற்றிருக்கின்றன. பஞ்சு பருத்தி விலைகளைப்பற்றி, நாளிதழாக ஓர் அறிக்கை இம்மாவட்டத்தில் அச்சிடப்பெறுகிறது.

மல்லியும் மிளகாயும் இம்மாவட்டத்திற்குரிய அடிப் படைப் பொருள்கள். தமிழ் நாடெங்கும் இவை விற்பனையாகின்றன.

மணிலாக்கடலை உற்பத்தியில் தென் ஆர்க்காடு வட ஆர்க்காடு மாவட்டங்களுடன் ஒப்பிடக் கூடிய நிலை இராமநாதபுரத்திற்குச் சிறிதும் இல்லை. ஆயினும் மழை குறைவாயிருப்பதால், இதுவரை தரிசாகக் கிடந்த நிலங்களில் புன்செய்ப் பயிராக மணிலாக்கடலை பயிரிடப் பெற்று வருகிறது. சிங்கம்புணரியும் அருப்புக்கோட்டை யும் கடலை உடைக்கும் இயந்திரங்களைப் பெற்று, கடலை ஏற்றுமதியிலும் கடலை எண்ணெய், கடலைப் பிண்ணாக்கு, கடலைப் பொட்டு வாணிபங்களிலும் செல்வம் கொழிக் கின்றன.

கைத்தறிகளில் நெய்த சேலை முதலியனவற்றுக்கு அருப்புக்கோட்டை, பரமக்குடி, ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய பகுதிகள் குறிப்பிடத்தக்கன. தேவாங்கரும் சௌராஷ்டிரரும் தொன்றுதொட்டு, இத்தொழிலில் அனுபவம் பெற்றிருக்கின்றனர்.

செட்டிநாட்டுப் பாத்திரங்கள் உறுதிக்குப் பெயர் பெற்றவை. வெண்கலத்திலும், எவர்சில்வர் என வழங் கும் Stainless Steel யிலும் பாத்திரங்கள் செய்யும் தொழில் காரைக்குடியைச் சுற்றி வளர்ச்சியடைகிறது.

அன்றாட உபயோகத்திற்கும் ஆடம்பர வாழ்வுக்கும் வெளிநாட்டுப் பொருளைப் பயன்படுத்தும் பழக்கம் இம் மாவட்டத்தில் வெளிநாட்டுத் தொடர்புடைய எல்லாச் சமூகங்களிலும் அளவு கடந்து பரவியிருக்கிறது. வாணிகத்திற்காக இவற்றை வரவழைப்பதில் கீழக்கரை, அபிராமம், இளையாங்குடி, கமுதி முஸ்லிம்கள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்றநிலையை அடைந்துள்ளனர். இவ்வாறு வெளிநாட்டுப் பொருள்கள் கிடைப்பதால் தஞ்சை மாவட்டத்திலுள்ள சில ஊர்களைப்போல இவ்வூர்களும் சின்னச் சிங்கப்பூர் என்று பெயர் பெற்றிருக்கின்றன. இவர்களில் பலர் 1942-க்கு முன் இரங்கூனிலும் பின்னர் சென்னை மாநகரிலும் கைலி வாணிகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டுப் பொருள்கள் வகை வகையாகவும் அடுக்கடுக்காகவும் திருமணங்களில் மணமக்களுக்கு அன்பளிக்கப்பெற்று திருமணத்திற்கு முதல் நாள் பொருட் காட்சிகளாகப் பலருக்கும் பார்வையில் வைக்கப் பெறுகின்றன. இம்மாவட்டத்தின் சில பகுதிகளில் இது காணவேண்டிய ஒரு காட்சி.

இவ்வாறு தேவைப்பட்டாலும் படாவிட்டாலும் பொருள்களை வாங்குவதால் வாழ்ந்த வீடுகளையே பிரித்துக் கட்டிடப் பொருள்களாகிய சன்னல், கதவு, மரநிலைகள், கம்பிகள் போன்றவற்றை விற்பனை செய்யும் சூழ்நிலை இம்மாவட்டத்தில் நிலவுகிறது.

வெள்ளி, தங்கம், வைரம் வியாபாரங்களுக்கும் இம் மாவட்டம் புகழ்பெற்றது.

சென்னை ஸ்டாக் எக்சேஞ்ச் என்னும் பங்கு மார்க்கெட்டில் பேரம் நடைபெறும் தொழிற்சாலைப் பங்குகளை விற்பதும் வாங்குவதும் காரைக்குடியில் நடைபெறுகிறது.

8. தொழில் வளர்ச்சி

இயந்திரத் தொழில்கள்—பழைய கருத்தும் புதிய கருத்தும் :

தொழில் என்று குறிக்கும்போது இந்நாளில் சில எண்ணங்கள் நமக்கு ஏற்படுகின்றன. பல ஆயிரம் தொழிலாளர், பல கோடி ரூபாய் முதலீடு. வெளிநாடு களிலிருந்து இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும் என்றெல்லாம் நினைக்கிறோம்.

இவ்வகைத் தொழிற்சாலைகள் இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகத்தான் ஓரளவு உருவாகி வருகின்றன. ஆனால், இத்தகைய தொழில் கள் இராமநாதபுர மாவட்டத்தார்க்குப் புதியன அல்ல. பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இவைபோன்ற பெரிய தொழில் களை இராமநாதபுர மாவட்டத்தார் தொடங்கிச் சிறப் பாக நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் தங்கள் மாவட்டத்திலேயே தொழிற் சாலைகளை ஏன் தொடங்கியிருக்கக் கூடாது?

ஒரு தொழிலை எங்கு நடத்தினால் அதற்கேற்ற மூலப் பொருள்கள் கிடைக்கும்? எங்கு நடத்தினால் உற்பத்தி யான பொருளை விற்பது எளிது? எங்கு நடத்தினால் தண்ணீர் வசதி, இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற் கான வாய்ப்பு ஆகியவை இருக்கும்? சுருங்கச் சொன்னால் இலாபம் கூடுதலாகக் கிடைக்கக் கூடிய இடம் எது?

என்ற அடிப்படையில்தான் தொழிற்சாலைகள் நிறுவப் பெற்றன.

எல்லா மாவட்டங்களிலும் எல்லாத் தொழிற்சாலைகளும் இருக்கவேண்டும். இலாபம் கிடைக்காவிட்டால் என்ன? நஷ்டம் வந்தாலும் அரசாங்கப் பணம்தானே? என்பன புதிதாக நாட்டில் உருவாகி வரும் கருத்துக்கள்;

வேளாண்மைச் சார்புத் தொழில்கள் :

(1) பஞ்சு: உழவு, இம்மாவட்டத்தின் உயிர் நாடியான தொழில். சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டங்களும், அருப்புக்கோட்டை வட்டத்தின் ஒரு பகுதியும் பருத்தி பயிரிடுவதற்கேற்ற கரிசல் மண் பூமியாக இருக்கின்றன. தெலுங்கு பேசும் நாயுடு. ரெட்டியார், ராஜா ஜாதியினர் பருத்தி பயிரிடுவதில் தலைசிறந்து விளங்குகிறார்கள். பருத்தியை வாங்கித் தரம் பிரிப்பதிலும் கொட்டையை நீக்குவதற்காக அறைப்பதிலும் அவர்களுக்கு ஒருவரும் இணையில்லை. இந்தத் தொழிலில் சாத்தூர், இராஜபாளையம், விருதுநகர் நகரங்கள் மிகவும் முன்னேறியுள்ளன.

இம்மாவட்டத்தில் பருத்தி அறைக்கும் தொழிற்சாலைகள் (Ginning Factoreis) நாற்பது உள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு முன் ஆங்கிலேயரும், ஜப்பானியரும் இவற்றில் சிலவற்றைத் தொடங்கினர். அந்நாளில் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து இராமநாதபுர மாவட்டத்துப் பஞ்சு அனுப்பப் பெற்று இங்கிலாந்திலும் ஜப்பானிலும் துணி ஆக்கப் பெற்று விற்பனைக்கு இந்தியாவுக்கு வந்தது.

இப்போது இராமநாதபுர மாவட்டத்துப் பஞ்சு இம்மாவட்டத்து நூல் ஆலைகளுக்கும் பயன்படுகிறது. மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களிலுள்ள ஆலைகளும்

விலைக்கு வாங்குகின்றன. அந்த ஆலைகளுக்கே வழக்கமாக விற்கும் உழவர் குழுக்களும் தொழிற்சாலைகளும் உள்ளன.

(2) அறவைத் தொழில் : இம்மாவட்டத்தின் உற்பத்திப் பொருள்களில் மணிலாக் கடலை முக்கியமானது. கடலை அறைக்கும் ஆலைகள் நூற்றுக்குமேல் உள்ளன இதில் சிங்கம் புணரியும், எள் அறைப்பதில் விருதுநகரும் சிறந்து திகழ்கின்றன. தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் வரவழைத்து அறைப்பது புதுவயலில் ஒரு பெரிய தொழிலாக வளர்ந்திருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து வரும் பலவகைப் பருப்புக்களை விருதுநகரில் உடைக்கிருர்கள்.

(3) தென்னை : இராமநாதபுர மாவட்டத்தின் கரையோரப் பகுதி, தென்னை பயிரிட ஏற்றது. உச்சிப் புளியிலும் பாம்பனிலும்!சிங்கம் புணரியிலும் பல ஆண்டுகளுக்கு முன் அரசினர் தென்னை நாற்றுப் பண்ணைகளைத் தொடங்கினர். விற்பனைக்காக இவற்றில் தேர்ந்தெடுக்கப் பெற்ற நெற்றுக்களிலிருந்து உயர் ரகக் கன்றுகள் உற்பத்தி செய்யப் பெறுகின்றன.

இலங்கையிலிருந்து வரும் அகதிகள் தென்னை பயிரிட்டு வாழ்வதற்கு அவர்களுக்கு அரசினர் நிலம் ஒதுக்கியும் தென்னைப் பண்ணை உருவாக்குவதற்கு சில வசதிகள் செய்தும் ஊக்குவிக்கின்றனர்.

(4) கடலோரத் தொழில்கள் : கடலோரமாக உள்ள 45 ஊர்களில் மீன் பிடித்தால் பெரிய தொழில். ஆத்தங்கரை, மூக்கையூர் என்ற ஊர்களில் மீனைப் பாடம் செய்யும் தொழில்கள் இயங்குகின்றன.

கடற்பாசியிலிருந்து பல பொருள்களைச் செய்யலாம். 'அகர்' என்று சொல்லப்படும் பாகு போன்ற

பொருள், மாத்திரைகள் செய்தல், பழம், மீன், இறைச்சி இவைகளைப் பதப்படுத்தும் துறையிலும் பயன்படுகிறது. அகர் கெல் (Agar-gel) என்ற பொருளை தூரியப் பொடி (Powdered Graphite)யுடன் சேர்த்தால் டங்ஸ்டன் வயர்கள் (Tungsten Wire) செய்யலாம். ஆல்கினேட் என்ற பொருளானது, ஜெல்லிகள் பழச்சாறு (Fruit-Squash) செய்ய உதவுகிறது. மண்டபம் பகுதியில் கிடைக்கும் கடற்பாசியைக் கொண்டு மதுரையில்; குஜராத்தியர் உணவுப் பொருள்களைச் செய்து வருகிறார்கள். இத்தொழிற்சாலையைப்பற்றி மதுரை மாவட்ட நூலில் கூறுவோம்.

சிறு கப்பல்களைப் பழுது பார்க்கும் தொழிற்சாலை மண்டபத்தில் இயங்கி வருகிறது.

மண்டபம், தொண்டிப் பகுதியில் சிறு படகுகளும் மீன் பிடிப்பதற்குரிய படகுகளும் பல தலைமுறைகளாகக் கட்டப்பட்டு வருகின்றன.

(5) பனை ஓலைப் பொருள்கள் : இது பனைமரங்கள் நிறைந்த மாவட்டம். பனை ஓலையிலிருந்து பொம்மைகளையும் ஓலைப் பெட்டிகளையும் இம்மாவட்டத்தார் கவர்ச்சியாகச் செய்கின்றனர்.

இன்னொரு வகையான பொம்மைகளும் இம்மாவட்டத்தில் செய்யப் பெறுகின்றன. காப்பிப் பொடி, மிளகாய்ப் பொடி, நல்லெண்ணெய் ஆகியவற்றை அடைக்க விருதுநகரில் தகர டப்பாக்கள் செய்கின்றனர். அவற்றை வெட்டும்போது மீதமாகும் தகரத் துண்டுகளால், விளையாட்டாகப் பொம்மைகள் செய்தனர். பொழுது போக்குக்காகச் செய்த இப்பொம்மைகள் இப்போது தொழில் முறையில் செய்யப் பெறுகின்றன.

இவ்வாறே சிவகாசியில், தாளிலிருந்து விசிறிகள் செய்யப் பெறுகின்றன.

நூல் ஆலைகள்:

இம்மாவட்டத்தில் ஏராளமான நூல் ஆலைகள், பெரும்பாலும் பருத்தி விளைவிலும் ஆராய்ச்சியிலும் சிறந்த இராஜபாளையத்தில் உள்ளன. இந்த ஆலைகளின் பெயர்கள் வருமாறு:

ஜானகிராம் மில்ஸ்,
இராஜபாளையம் மில்ஸ்,
அழகப்பா காட்டன் மில்ஸ்,
ஜெயராம் மில்ஸ்,
ஸ்ரீஷண்முகர் மில்ஸ்,
ஸ்ரீபாரதி காட்டன் மில்ஸ்,
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ்.

இவற்றுள் மிகப் பெரியது தொழிலரசர் பி. ஏ. சி. இராமசாமி ராஜா தொடங்கிய இராஜபாளையம் மில்ஸ் முரட்டு நூல்கள் முதல் மிக மெல்லிய நூல்கள் வரை இங்கு நெய்யப் பெறுகின்றன.

இதே குழுவின் ஆட்சியில் 1942 முதல் நடைபெற்று வரும் இராமராஜு சர்ஜிக்கல் காட்டன் மில்ஸ் என்பது 1939இல் என். கே. இராமராஜு என்பவரால் இராஜ பாளையத்தில் தொடங்கப் பெற்றது. புண்களுக்குக் கட்டு வதற்கு உதவும் பேண்டேஜ் துணி முதலியன (Anti septic Surgical Dressings like Absorbent Cotton wool, Absorbent Gauze, Surgical Bandages and Plaster of Paris) செய்யப் பெறுகின்றன. தென்னிந்தியாவில் இத்தகைய ஆலை இது ஒன்றே.

இந்த ஆலை இப்போது புதிய இயந்திரங்களுடன் இராஜபாளையத்திற்குத் தெற்கே 13 கி. மீ. தொலைவில்

பெருமாள்புரத்தில் நடைபெற்று வருகிறது. தமிழ் நாடு அரசுக்கும் ஆந்திரப் பிரதேச அரசுக்கும் இந்த ஆலையில் பங்கு உண்டு.

தென்னிந்தியாவில் நூல் ஆலையை முதலில் நிறுவியவர்கள் ஆங்கிலேயர். அவர்களுக்கு அடுத்தபடி இத்தொழில் ஈடுபட்டவர் தேவகோட்டை திவான்பகதூர் பி. எஸ். சோமசுந்தரம் செட்டியார். இவர் கள்ளிக்கோட்டையிலும் கோயமுத்தூரிலும் 19-ஆம் நூற்றுண்டில் ஆலைகளைத் தொடங்கினர். அந்நாள் தொட்டு நாட்டுக் கோட்டை நகரத்தார் பலர் தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பிற மாவட்டங்களிலுள்ள ஆலைகளின் கிளைகளாக இவர்கள் இராமநாதபுர மாவட்டத்தில் சில ஆலைகளைத் தொடங்கியுள்ளனர். சிலர் புதிதாக இத்தொழிலில் இறங்கி இராமநாதபுர மாவட்டத்திலேயே ஆலை நிறுவினர். மாவட்டத்தின் பின் தங்கிய பகுதிகளில் ஆலைகள் அமைக்க திரு. காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராகவும், திரு. வெங்கட்ராமன் அவர்கள் தொழில் அமைச்சராகவும் இருந்த பொழுது திட்டம் வகுக்கப்பட்டது. அந்நாளில் ஏற்பட்ட ஆலைகளாவன; ஜவஹர் மில்ஸ், செட்டி நாடு. ருக்மணி மில்ஸ், சிலைமான். ஸ்ரீகற்பகாம்பாள்மில்ஸ், சோழபுரம். காளீசுவரர்மில்ஸ், காளையார் கோவில். சோமசுந்தரா மில்ஸ், முத்தநேந்தல். நித்திய கல்யாணி டெக்ஸ்டைல் மில்ஸ், சின்னக்கீரமங்கலம் (திருவாடானை).

அரசினர் மேற்கொண்ட திட்டப்படி இராமநாதபுரம், பரமக்குடி வட்டங்களிலும் அருப்புக்கோட்டை வட்டத்து மல்லாங்கிணறு என்னும் ஊரிலும் நூல் ஆலைகள் தொடங்கப் பெற்றன.

கைத்தறி நெசவாளர்க்கு உதவ, கூட்டுறவுத் துறையில் நூல் ஆலைகள் அமைக்கும் திட்டமும் காமராஜ் ஆட்சியில் உருவாகித் தமிழ் நாட்டில் பல மாவட்டங்களிலும் ஆலைகள் நிறுவப் பெற்றன. அவற்றுள் ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்துள்ளது.

இம்மாவட்டத்து ஆலைகளில் ஒரு சிலவற்றில் மட்டுமே விசைத்தறி உண்டு. அவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவு.

விதிவிலக்காக விருதுநகரில் உள்ள விருதுநகர் டெக்ஸ்டைல் மில்ஸ் நெசவு ஆலையாக மட்டுமே இருந்து வருகிறது. இதற்கு ஒரு வரலாறு உண்டு. 1946இல் இந்த ஆலை தொடங்கப் பெற்றது. அப்போது சென்னை இராஜதானியின் முதலமைச்சராக ஆந்திர கேசரி டி. பிரகாசம் இருந்தார். நூல் நூற்பது ஏழை மக்களின் தனி உரிமை என்பதும் நூல் ஆலைகள் திறக்க அரசு இசைவு வழங்கக் கூடாதென்பதும் அவர் கொள்கை, அதனால் நெசவு ஆலையாக மட்டுமே இந்த ஆலை அனுமதிக்கப் பெற்றது. தொழிலரசர் கருமுத்து தியாகராச செட்டியார் அவர்களுடைய ஆட்சியில் இந்த ஆலை பல வண்ணங்களில் கவர்ச்சியும் மென்மையும் உடைய பூப்போட்ட சேலைகளையும் துணிகளையும் உற்பத்தி செய்கிறது.

நூல்களைச் சுற்றி வைக்கப் பயன்படும் Cone என்ற அட்டைக் குழாய்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்று விருதுநகரில் இருக்கிறது. வணிகப் பெருமக்களாகிய ஹார்வி குடும்பத்தாரால் மதுரை மில்லுக்காகத் தொடங்கப் பெற்ற இந்த நிறுவனம் பலவகை தனிச் சிறப்புக்களை உடையது. இந்தியாவில் இத்தகைய தொழிற்சாலை இது ஒன்றே. இதே முதலாளிகளுக்குச்

சொந்தமான புனலூர்க்காகித ஆலையிலிருந்து அட்டை வரவழைத்து, இங்கே குழாய் செய்கிறார்கள்.

மிகக் குறைந்த எண் நூல்களைக் கொண்டு காடாத் துணி செய்தும் ஜமக்காளம் முதலிய பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கு ஏற்ற நூல் நூற்றும் சில சிறு ஆலைகள் நடைபெறுகின்றன.

கழிவுப் பஞ்சு, கோணிச் சாக்குகளிலுள்ள கழிவுப் பொருள்கள், சென்னா இலைகள் ஆகியவற்றை பேலாக்கி ஏற்றுமதி செய்யும் 'காட்டன் பிரசிங் பாக்டரி'களும் இம்மாவட்டத்தில் இருக்கின்றன.

சிமெண்டு ஆலைகள்

சிமெண்டு உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்கள் இம்மாவட்டத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இம்மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் சிமெண்ட் ஆலை 'மெட்ராஸ் சிமெண்ட்ஸ்' என்பது. இதன் அலுவலகம் இராஜபாளையத்திலும் தொழிற் சாலை சாத்தூருக்கு அருகேயுள்ள துலுக்கப்பட்டியிலும் உள்ளன. 1961இல் இங்கு உற்பத்தி தொடங்கிற்று நாள் தோறும் உற்பத்தி அளவு 600 டன். இக்கம்பெனியில் தமிழக அரசுக்கும் ஓரளவு பங்கு இருந்து வருகிறது.

இந்த ஆலை ஏற்பட்ட பிறகு இராமநாதபுர மாவட்டத்தில் சிமெண்டு செய்வதற்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள் இருப்பதை ஆராயும் வேலை விரிவாக நடந்தது. மண்டபம் பகுதியிலும் இராமேசுவரம் தீவிலும் அள்ள முடியாத அளவுக்குச் சுண்ணாம்புக் கல் முதலியன குவிந்து கிடக்கின்றன. இதைப் பயன்படுத்துவதென்றும் மானாமதுரை அருகே சிமெண்ட் ஆலையைப் பெரிய அளவில் அமைப்பதென்றும் தமிழகத்தின்

தொழில் தந்தை ஆர். வெங்கட்டராமன் ஏற்பாடு செய்தார். அவ்வாறு சுண்ணும்புக் கற்களை அப்புறப் படுத்திவிட்டால் இராமேசுவரத் தீவின் அமைப்பு மாறி அதுவும் கடலாகி விடுமென்று புவியியல் அறிஞர் கூறி னர். அதனுல் அத்திட்டம் கைவிடப் பெற்றது.

பிறகு, இராஜபாளையம் பகுதியில் ஆலங்குளம் என்ற ஊரில் அரசுத் துறையில் சிமெண்ட் ஆலை அமைப்பதென்றும் நாள் ஒன்றுக்கு 1200 டன் உற் பத்தி செய்வதென்றும் முடிவு செய்யப் பெற்றது. திரு. வெங்கட்டராமன் போட்ட இத்திட்டமே முழு நிறைவு பெற்று 'தமிழ் நாடு சிமெண்ட்ஸ்' என்ற பெயரில் ஏழுகோடி ரூபாய் மூலதனத்தில் ஏற்பட்டு 1970 முதல் சிமெண்ட் உற்பத்தியாகிறது. இந்த ஆலைக்காக 16 கி. மீ. தொலைவுக்கு இரயில் பாதை போடப் பெற்றிருக்கிறது. தமிழக அரசுக்குச் சொந்த மான தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இந்த ஆலையை நிறுவியுள்ளது. போர்ட்லண்டு கிரே சிமெண்ட் மட்டும் இப்போது செய்யப் பெற்று வருகிறது. சிமெண்ட் குழாய்கள் செய்யவும் திட்டமிடப் பெற்றி ருக்கிறது.

தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கு:

மாவட்டத்திலுள்ள எல்லா நூல் ஆலைகளிலும் சேர்ந்து மொத்தம் இரண்டு லட்சம் கதிர்கள்தான் உள்ளன என்றும், இது மதுரை ஹார்வி ஆலை அள வினதே என்றும் புதிய நூல் ஆலைகள் மாவட்டத்தில் நிறுவ அரசினர் இசைய வேண்டுமென்றும் மாவட்டத் திலுள்ள செல்வர்கள் விரும்பினர். குறிப்பிட்ட ஒரு தொழிலையே மேலும் விரிப்பது நல்லதல்ல என்றும், இயந்திரத் தொழில்கள் நிறுவவேண்டு மென்றும்

காமராஜ் அமைச்சரவை முடிவு செய்தது. எத்தகைய தொழில்களை இராமநாதபுர மாவட்டத்தில் தொடங்கலாம் என்பதற்குத் திட்டம் தீட்ட ஏற்பாடுகள் தொடங்கின. திரு. காமராஜரின் 61-ஆவது பிறந்த நாள், மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி பெருகும் நாளாக அமையவேண்டுமென எண்ணி 15-7-1963 இல் காரைக்குடியில் இராமநாதபுர மாவட்டத் தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கு அரசினரால் மின்-ஆராய்ச்சி ஆய்வுக்கூடத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றது.

முதலமைச்சரும் தொழிலமைச்சரும் மாநில அலுவலர்களும் இந்திய அரசின் அலுவலர்களும் பொறியியல் மேதைகளும் அறிவியல் அறிஞர்களும் மாவட்டத்தைச் சேர்ந்த எல்லாத் தொழில் முதலாளிகளும் ஆராய்ச்சியாளர்களும் பொருளாதாரப் புலவர்களும் கலந்து கொண்டனர்.

அப்போது காரைக்குடி அருகே மானகிரியில் ஒரு வகைப் பழுப்பு நிலக்கரி கண்டு பிடிக்கப் பெற்றது அது, நிலக்கரியைவிட தரம் சிறந்ததாயும் இருந்தது. அதன் விளைவாகப் பொறியியல் தொழில்கள் மாவட்டத்தில் பெருக வாய்ப்பு இருக்குமென்று கருதபபெற்றது. எதிர்பார்த்த அளவிற்கு நிலக்கரி இல்லாததால் அதைத் தோண்டும் வேலை 1965 இல் கைவிடப் பெற்றது.

சிவகங்கைப் பகுதிக் களிமண்ணைக் கொண்டு சூடு தாங்கும் செங்கல் (Refractory Bricks) செயவதற்கு தொழிற்சாலை நிறுவ, கருத்தரங்கில் முடிவு செய்யப் பெற்று அவ்வாறே இயங்கி வருகிறது.

புதிதாக நூல் ஆலை இம்மாவட்டத்தில் தேவையில்லை என்றும் Textile Calendaring plant and Bleaching house and Screen print plant மாவட்டத்திற்

குள்ளேயே அமைக்கலாமென்றும் கருத்தரங்கு முடிவு செய்தது.

கரும்பு ஆலை ஒன்று அமையலாமென்றும் கருதப் பெற்றது.

பத்துக் கோடி ரூபாய் மூலதனத்தில் ஜப்பானியர் உதவியுடன் சோடா ஆஷ் தொழிற்சாலை அமைக்கும் திட்டமும் வரையப் பெற்றது.

கடற்கரை மிகுந்த இம்மாவட்டத்தில் இரசாயனத் தொழில்களுக்கு நிறைந்த வாய்ப்பு இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் The Bitterns Limited என்ற குழு, கருத்தரங்கின் விளைவாகப் பதிவு செய்யப் பெற்றது. கடல் நீரை இயந்திரங்களால் சுத்தப்படுத்தி உர உற்பத்திக்கு உதவும் இரசாயனப் பொருள்கள் சில வற்றை இத் தொழிற்சாலை செய்யும். இராமநாதபுரம் வட்டத்திலுள்ள ஆற்றங்கரை, அழகன் குளம், கழுகு ஊரணிப் பகுதியில் இத்தொழிற்சாலை அமைகிறது.

முதுகுளத்தூர் வட்டத்திலும் கீழக்கரையிலும் உள்ள ஜிப்சத்தை சிமெண்ட் செய்வதற்கும் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் செய்வதற்கும் உபயோகிக்கலாமென்றும் கருத்தரங்கில் முடிவு செய்யப் பெற்றது.

வைகை, உப்பாறு ஆகிய ஆறுகள் கடலுடன் கலக்கும் இடங்களில் இரும்புத்தாது இருப்பதைத் தக்க வாறு பயன்படுத்த வாய்ப்பு உண்டு

தொண்டியில் படகுகள் கட்டுவது, இளையாங் குடியில் பாய் நெசவு ஆகிய சிறு தொழில்களுக்கு அரசினர் ஊக்கம் அளிக்க வேண்டுமென்றும் கருத் தரங்கு அறிக்கையில் குறிப்பிடப் பெற்றது, புதுவயலில் இயங்கி வந்த Photographic sensitive paper செய்யும்

தொழிற் சாலைக்கும் அரசினர் ஆதரவு கோரப் பெற்றது.

பின்வரும் தொழிற் சாலைகள் அமைய இராம நாதபுர மாவட்டம் பொருத்தமானது என்றும் விளக்கப் பெற்றது:

விருதுநகர்: பம்பு செட்டு, புல்லி (Pulley), எடைக் கருவிகள் (Cast iron weights), மாவு ஆலைக் கருவிகள், சிலவகை உருளைகள் (Mhote wheels).

இராஜபாளையம்: நூல் ஆலைக் கருவிகள், எண்ணெய் ஆலைக் கருவிகள், லேத்துப் பட்டறைகள்.

திருத்தங்கல்: தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கருவிகள். காகிதம் வெட்டும் இயந்திரங்கள், புகையிலை வெட்டும் இயந்திரங்கள், நூல் சுற்றிவைக்க உதவும் இயந்திரங்கள்.

சிவகாசி: வித்தோ அச்சகங்களுக்குத் தேவையான அச்சுமை, தீக்குச்சித் தொழிலுக்கு இன்றியமையாத வெடி மருந்துகள்.

சிவகங்கை, மானாமதுரை: ஓடு, செங்கல் தொழிற் சாலைகள்.

காரைக்குடி: மின்சார இரசாயன ஆராய்ச்சியைப் பயன்படுத்தும் தொழில்கள்.

மின்சார இரசாயனத் தொழில்கள்:

கருத்தரங்கு அன்று மக்னீசியம் செய்வதற்கான ஒரு சிறு ஆலைக்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. இந்த ஆலை காரைக்குடியில் மத்திய மின் இரசாயன ஆய்வுக்கூட வட்டத்தில் அமைந்திருக்கிறது. இங்கு சேலம் மக்னீ சைட்டிலிருந்து மக்னீசியம் பிரித்து எடுக்கப் பெறுகிறது

இத்தகைய அபூர்வமான ஆராய்ச்சி செய்யும் நாடுகள் ஒன்றிரண்டே. அவர்களுடைய அறிவு வெளி நாட்டாருக்குப் பயன்பெற அவர்கள் விரும்பவில்லை. சிதம்பர ரகசியமாக அவர்கள் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். எவ்வித வெளிநாட்டுக் கூட்டுறவும் இன்றி, காரைக்குடியில் இந்தத் தொழிற்சாலை இயங்குகிறது. மூன்று லட்சம் ரூபாய் மூலதனத்தில் சோதனைத் தொழிற்சாலையாக, திரு. காமராஜ் இதைத் தொடங்கி வைத்தார்.

இந்த ஆலை இப்போது விரிவாக்கப் பெற்று முப்பது லட்சம் ரூபாய் மூலதனத்தில் வணிக நிறுவனமாக மாற்றம் பெறுகிறது.

ஜாம்ஷெட்பூரில் ஏற்கெனவே மக்னீசியம் தயாரிப்பு ஆலை உள்ளது. அங்கே தயாரிப்பு முறை வேறு. ஜாம்ஷெட்பூர் ஆலை தேசிய உலோகப் பொருள் பரிசோதனைக் கூடத்தாரால் நடத்தப்படுகிறது. அங்கு உற்பத்தி ஓராண்டுக்கு 250 டன்.

காரைக்குடி மின் இரசாயன ஆய்வுக் கூடத்தினர் மின் இயல் இரும்புத்தூள் தயாரிப்பு முறையைக் கண்டு பிடித்துள்ளனர். இவ்வாறு தயாரிக்கும் தொழிற்சாலை காரைக்குடி தொழிற்பேட்டையில் உள்ள செட்டிநாடு எலக்ட்ரோ கெமிக்கல்ஸ்.

பொறியியல் தொழில்கள் :

விருதுநகரில் 1960-ஆம் ஆண்டு அளவில் எஃகு உருட்டு ஆலை (Steel Rolling Mills) தொடங்கப் பெற்றது. அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருளாகிய Billets கட்டுபடியான விலையில் கிடைக்கவில்லை. Re-rollable Scraps விலையும் வட இந்தியாவிலுள்ள விலையைவிட ஒரு டன்னுக்கு 120 ரூபாய் கூடுதலாகக்

கொடுத்து வாங்க வேண்டியதிருக்கிறது. சென்னைக்கு வடக்கே அகல இரயில் பாதையும் தெற்கே குறுகிய இரயில் பாதையும் இருப்பதால் நேர் பெட்டியில் மூலப் பொருள்களை வருவிக்க முடியவில்லை. போக்குவரத்துச் செலவு கூடுதலாவதுடன் பொருள்கள் வந்து சேருவதும் சுணங்குகிறது.

இராஜபாளையத்தில் கௌரி மெட்டல் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் மர ஆணி முதலிய பொருள்கள். (Wood Screws and Wire Nails) செய்கிறது. தென்னிந்தியாவில் இத்தகைய தொழிற்சாலை இன்னும் ஒன்றுதான் உளது. கௌரி மெட்டல்ஸ் பொருள்கள் பெங்களூர் இந்துஸ்தான் ஏர்கிராப்ட், விசாகப்பட்டினத்திலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை, இந்திய இரயில்வேக்கள் ஆகியவற்றிற்கு விற்பனை செய்யப்படுகின்றன.

தொழிற்பேட்டைகள் :

இம்மாவட்டத்தில் முதல் தொழிற்பேட்டை, விருதுநகர் அருகே சூலக்கரையில் தொடங்கப் பெற்றது. தகர டப்பாக்கள் செய்தல், தகர டப்பாக்களில் அச்சிடுதல், இயந்திரத்திற்கான திருகாணிகள் செய்தல், உலோகத் தகடுகள் செய்தல், ஜெம் கிளிப்கள், குண்டூசிகள் செய்தல், பாலித்தீன் பைகள் செய்தல், எவர்சில்வர் பாத்திரங்கள் செய்தல், எஃகுக் குழாயிலான பர்னிச்சர் செய்தல், டூல்ரூம் சர்வீஸிங் முதலியன இங்கு நடைபெறுகின்றன.

காரைக்குடிக் கருத்தரங்கின் பயனாகச் சிவகங்கையிலும் காரைக்குடியிலும் தொழிற்பேட்டைகளை அரசு ஏற்படுத்திற்று. சிவகாசியில் ஸ்ரீ வில்லிபுத்தூர் சாலையில் கூட்டுறவு முறையில் தொழிற்பேட்டை ஏற்பட்டிருக்கிறது.

காரைக்குடியிலும் சிவகங்கையிலும் தொழிற் பேட்டைகளை, வணிகர்கள் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவில்லை. பல இடங்கள் காலியாக உள்ளன. உற்பத்தியான பொருள்களை உள்ளூரில் விற்க இயல வில்லை. இயந்திரக் கருவிகள், அருகேயே கிடைப்பதில்லை; இதனால் இயந்திரங்களைப் பழுது பார்ப்பது தொல்லை யாக இருக்கிறது. மூலப் பொருள்கள் வரவழைப்பதில் கூடுதலாகச் செலவு ஏற்படுகிறது. இந்நிலையில் அரசின ரின் தொழிற்சாலைகளை, இந்தப் பேட்டைகளில் வைப்பதே சாலச் சிறந்தது.

இராஜபாளையத்தில் தமிழக அரசு, ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக ஜெனரல் பர்ப்போஸ் எஞ்ஜி னீயரிங் ஓர்க்ஷாப் நடத்தி வருகிறது. இதில் சைக்கிள் சாமான்கள், வாழைத்தண்டு விளக்கு மூடிகள் (Tube Light Fitting Shadsr), எஃகு மேசை, நாற்காலிகள், வேளாண்மைக் கருவிகள், மருத்துவ மனைகளுக்குத் தேவையான தளவாடங்கள், (Electric Line Construction Materials) முதலியன மிக நன்ருகச் செய்யப படுகின்றன.

திரைப்படத் தொழில்

திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு அடைந்திருக் கும் முன்னேற்றம் பேரளவு இமமாவட்டத்தினரால் எனலாம். புகழ்பெற்ற ஏ. வி. எம். காரைக்குடி ஊரினர். ஏ. வி. எம். ஸ்டுடியோ, தேவகோட்டை ரோடு இரயில நிலையத்துக்கு அருகே பல ஆண்டுகள் நடைபெற்றுப் பின்னர் சென்னைக்கு மாற்றப்பெறறது.

இந்தியத் திரைப்படத் தொழில் கழகத் தலைவர் ஏ. எல். சீனிவாசன் இம்மாட்டத்துச் சிறுகூடற்பட்டி யினர்.

பிற தொழிற்சாலைகள் :

இராஜபாளையத்தில் மெட்ராஸ் சிப்போர்டு பாக்டரி, செக்கோசுலவகிய உதவியுடன், மரத்தூள்களி லிருந்து பலகைகள், தள்ளு கதவுகள், உத்தரப் பலகை கள் (False ceilings), மேசையின் மேற்பகுதிகள் (Table Tops) செய்கிறது.

பாரத் இன்சுலேசன் டேப் கம்பெனியில் (Black Adhesive, Low Tension Electric Insulation Tapes) முதலியன செய்கின்றனர்.

சாத்தூரில் முப்பதுக்கு மேற்பட்ட 'நிப்' தொழிற் சாலைகள் உள்ளன. 1948-ஆம் ஆண்டு அளவில் குடிசைத் தொழிலாக இது ஏற்பட்டது. பவுண்டன் பேனா நிப் உற்பத்தியில் சாத்தூர் சிறப்பிடம் பெற்றுவிட்டது.

பர்மா, மலேசிய நாடுகளிலிருந்து திரும்பி வந்தவர் கள் இளையாங்குடியில் 1943-இல் தோல்பை முதலியன செய்யலாயினர். முப்பதுக்கு மேற்பட்ட தோல் பொருள் தொழிற்சாலைகளும், கான்வஸ்—ரப்பர் பொருள்கள் செய்யும் பதினைந்து தொலைற்சாலைகளும் கொண்ட நகராக இளையாங்குடி வளர்ந்திருக்கிறது. பிளாஸ்டிக் குடைகளையும் இங்கு செய்கிறார்கள்.

தீப்பெட்டித் தொழில்:

தீப்பெட்டி, அன்றாட வாழ்க்கைக்கு அனைவர்க்கும் தேவையான ஒரு பொருள். இதன் உற்பத்தியில் இந்தி யாவில் முதலிடம் வகிப்பது இராமநாதபுர மாவட்டம். சிவகாசி இத்தொழிலின் தலைநகரம். சாத்தூரிலும் வேறு பல ஊர்களிலும் இத்தொழில் பரவியிருக்கிறது. 800க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. பெரிய தொழிற் சாலைகளின் தொகை 75, சிவகாசியில் இத்தொழில்

வளரக் காரணமான பெரு மக்கள் அய்ய நாடார், சண்முக நாடார் ஆவர்.

பல்லாயிரம் பெண்களும் சிறுவரும் வீட்டிலிருந்தே வருவாய் பெற இத்தொழில் வழி வகுத்திருக்கிறது. வேலையில்லாமல் ஊர் வம்பு பேசும் பழக்கம் இப்பகுதியில் போய்விட்டது. பெண் குழந்தைகளின் எண்ணிக்கை மிகுதியானால் அந்தக் குடும்பத்துக்கு வருவாயும் கூடுதலாகக் கிடைக்கும் நிலையைக் காணுகிறோம். 'ஐந்து பெண்ணுக்குமேல் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்ற பழமொழியைப் பொய்ப் பித்திருப்பது சிவகாசித் தீப்பெட்டித் தொழில். காலிருந்தால் காஞ்சிபுரத்தில் பிழைக்கலாம்; கையிருந்தால் சிவகாசியில் பிழைக்கலாம்.

வீதிகளிலும் வீடுகளிலும் குழந்தைகளும் தாய்மார்களும் தீப்பெட்டி சட்டங்களில் குச்சுகளை அடுக்குதலும் தீப்பெட்டிக்கான மேல் பெட்டி அடிப்பெட்டி இவைகளை ஒட்டுவதும் சித்தரிக்கும் படத்துக்கு மேலாக அடுக்கிய கட்டைகளை ஒழுங்கு படுத்தும் முறையில் கட்டை தட்டுதலும் ஆகிய வேலைகளைச் செய்கிறார்கள். கீழாக உள்ள தட்டிய கட்டைகளை தீ அடுப்பில் மெழுகு முக்குதல், தீக்குச்சிக்கான மருந்தை அறைத்தல் அறைத்தமருந்தை கட்டையோடு குச்சிக்கு மருந்து முக்குதலும், நிகழ்கின்றன பெட்டியின் பக்கங்களில்படேசல் மருந்து தடவுதலும், மருந்து தடவிய கட்டைகளை உலர வைத்தலும், பின் குச்சிகளை பெண்கள் எடுத்து பெட்டியில் அடைத்தலும் சைடு மருந்து அடித்த பெட்டிகளை உலரவைத்தலும் பெட்டிக்கு பண்ட்ரோல் ஒட்டுதலும், லேபிள் ஒட்டுதலும், பெட்டிகளை டஜனாக பேக் செய்தலும், அவைகளை பின் குரோஸாக பேக் செய்து

பண்டலாக உருவாக்குதலும் சிவகாசியில் அன்றாடக் காட்சிகள்.

பட்டாசுத் தொழில் :

தீபாவளி முதலிய விழா நாட்களில் வெடிச்சுட உதவுவது பட்டாசுத் தொழில். இத்தொழில் சிறு குடிசைகளில் தொடங்கி, பல இன்னல்களையும் இடையூறுகளையும் தாண்டி வியக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. சிவகாசிப் பட்டாசு இந்திய நாடெங்கும் விற்பனையாகிறது.

இந்தியாவின் பட்டாசு உற்பத்தியில் மூன்றில் இரு பங்கு சிவகாசியைச் சேரும். இத்தொழிலுக்குத் தேவையான அலுமினியப் பவுடர் செய்ய மதுரை அருகே ஒரு தொழிற்சாலையை தீப்பெட்டித் தொழில் முதலாளிகள் நிறுவியுள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சலைகள் உள்ளன. இந்திய அரசுக்கு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பட்டாசுத் தொழிற்சாலைகள் வாயிலாக இம் மாவட்டத்தில் பத்துக் கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

கவின் அச்சுக்கலை :

வண்ணங்கள் நிறைந்த சுவரொட்டிகள் முதலியன லித்தோ என்னும் அச்சுக்கலையின் உதவியால் அச்சிடப் பெறுகின்றன. இவ்வகை அச்சகங்கள் சிவகாசியில் 40 உள்ளன. இந்தியாவெங்கும் இந்த அச்சங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கண்ணைக் கவரும் காலண்டர்கள், வியாபார லேபிள்கள், இறை உருவங்கள், அரசியல் தலைவர்கள் படங்கள், சுவரொட்டிகள், பொங்கல் வாழ்த்து தீபாவளி வாழ்த்து போன்ற அட்டைகள்

இங்கு அச்சிடப் பெறுகின்றன. அச்சு இயந்திரங்கள் மேலை நாட்டிலிருந்து வரவழைக்கப் பெறுகின்றன. இந்தத் தொழிலின் தந்தை திரு. அருணகிரி ஆவார்.

இத்தொழிலை ஒட்டிச் சித்திரக்கலை பெரிதும் வளர்ந்திருக்கிறது.

பெரிய அளவில் வார்னிஷ் பூசும் பாலிகிராப் ஆப்செட் அச்சகத்தைத் தமிழக அரசு சிவகாசியில் நிறுவியுள்ளது.

அச்சு வார்ப்புத் தொழில் :

சிவகாசியிலும் திருத்தங்கலிலும் பவுண்டரித் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. திருத்தங்கல் காகா இந்தியன் பவுண்டரியில் அச்சு ஆலைகளுக்கும் நூல் ஆலைகளுக்கும் வேண்டிய கருவிகளும் வேளாண்மைத் தொழிலுக்கு இரும்பு உருக்குப் பொருள்களும் பலவகை ஆட்டங்களுக்குரிய விளையாட்டுக் கருவிகளும் செய்யப்படுகின்றன.

சிவகாசி 'மாடர்ன் இண்டஸ்ட்ரீஸ் மேகசின்' என்ற தொழிற் சாலையில் வார்னிஷ், டிஸ்டம்பர், லப்பம், பிரஞ்ச் பாலிஷ் முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

புதிய தொழில்களுக்கு வசதிகள்:

1971 முதல் தி. மு. க. அரசு இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியில் கருத்துச் செலுத்தத் தொடங்கியிருக்கிறது. இம்மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மாதவன் தொழில் அமைச்சராய் உள்ளார். பல வட்டங்கள் பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்கப் பட்டிருக்கின்றன. எனவே இங்கு அமையும் தொழிற் சாலைகளுக்கு மூலதனத்தில் இந்திய அரசிடமிருந்து பத்து சதம் மானிய

மும் மாநில அரசிடமிருந்து இருபத்தைந்து சதம் வரையும் வட்டியில்லாக் கடனும் கிடைக்கும்.

திருப்பத்தூர் அருகே ரப்பர் டயர் தொழிற் சாலை தொடங்க ஏற்பாடு நடை பெற்று வருகிறது. மலேசியா விலிருந்து ரப்பர் வரவழைத்து, அமெரிக்கத் தொழில் நுட்ப உதவியுடன் கார், ஸ்கூட்டர், சைக்கிள் ஆகிய வற்றுக்கு வேண்டும் டயர்களைச் செய்வது இத் தொழிற் சாலையின் குறிக்கோள் என்று கூறுகின்றனர்

சிங்கம் புணரிக்கு அருகே ஆனைக்கரைப் பட்டியில் சென்னை என்பீல்டு இந்தியா லிமிடெட் ஒரு கிளை தொடங்கவிருக்கிறது என்றும் 90 லட்சம் மூலதனத்தில் கிளை அமையும். 1973-முதல் இங்கு மோட்டார் சைக்கிள் உற்பத்தி தொடங்கும் என்றும் சொல்லுகிறார்கள்.

மின்சார வசதி:

1900-ஆம் ஆண்டிலேயே இம்மாவட்டத்தில் செல்வர் சிலர், வீட்டு உபயோகத்திற்குச் சிறிய மின்சார இயந்திரங்கள் மூலம் மின்விளக்குப் போட்டுக் கொண்டனர்.

இம்மாவட்டத்தில் தனியார் துறையில் மின்சாரக் கம்பெனிகள் தொடங்கப் பெற்றன. கானாடுகாத்தான் மின்சாரக் கழகம், தென்னிந்தியாவில் உண்டான மின் வழங்கும் நிலையங்களுள் பழமையானது. பல ஊர்களில் சவுத் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேசனின் உடன்பாட்டுடன் தனி நிறுவனங்கள் ஏற்பட்டன. அந்தக் கார்ப்பரேசன் உருவாவதற்கும் வளருவதற்கும் இம்மாவட்டத்தார் பலர் பெரிதும் காரணம் ஆவர்.

தமிழ் நாட்டில் அரசு உடைமையாக்கப் பெற்ற முதல் மின்சாரக் கழகம் நெற்குப்பை எலக்ட்ரிக் சப்ளை

கம்பெனி. தமிழக அரசு மின்சார நிறுவனங்களைத் தேசிய மயமாக்கிய பிறகு சிற்றூர்களுக்கும் உழவர்களுக்குப் பம்புசெட் வைத்துக் கொள்ளவும் மின்வசதி செய்து வருகிறது.

தனியார் துறையில், இராமேசுவரம் தீவில் ஆயில் இஞ்சின்கள் மூலம் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்திற்கு மட்டும் மின்சாரம் வழங்கப் பெற்றது. அரசினர் மின் வினியோகத்தை மேற்கொண்ட பிறகு, கடலினுள் கம்பிகள் போட்டு, 24 மணிநேரமும் மின்சாரம் வழங்கப் பெறுகிறது.

வங்கித் தொழில்

தென்னிந்தியாவில் வங்கித் தொழில் வளர்ச்சியில் இந்த மாவட்டத்தின் பங்கு பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கது. ரிசர்வு பேங்கு, ஸ்டேட் பேங்கு ஆகியவை தொடங்கிய காலம் முதல் இம்மாவட்டத்தார் ஒரு சிலர் இவற்றில் இயக்குநராகப் பணி புரிந்துள்ளனர். இன்றைய ஸ்டேட் பேங்கின் முன்னோடியான இம்பீரியல் பேங் ஆப் இந்தியா, அதற்கு முற்பட்ட பிரசிடென்சி பேங் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் செட்டியார்களின் பங்கு பெரிது, கணிசமானது, முக்கியமானது. இந்தியாவில் வங்கித் தொழில் வளர்ச்சி பற்றிய ஆய்வு நூல்கள், அரசாங்க அறிக்கைகள் ஆகியவற்றிலிருந்து இதை உணரலாம்.

இந்தியன் பேங், இந்தியன் ஓவர்சீஸ் பேங், பேங் ஆப் மதுரை என்பன இம்மாவட்டத்தாரால் தொடங்கப் பெற்றவை. இவை தவிர இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இவர்கள் ஆரம்பித்த பல பேங்குகளும், நூல் ஆலைகளும், இரும்பு ஆலைகளும், சிமிண்டு ஆலைகளும் திரைப்பட ஸ்டுடியோக்களும், ஆயுள் இன்சூரன்சு

நெருப்பு இன்சூரன்சு நிறுவனங்களும் தேயிலை, ரப்பர்த் தோட்டங்களும் நூற்றுக் கணக்கின. எக்ஸ்சேஞ்சு பேங்காகச் செயற்பட்ட உண்டியல் கடைகள் 1941 வரை இம்மாவட்டத்தில் இயங்கி வந்தன.

நெடுங்கலாமகவே திருப்பத்தூர் வட்டத்தில், பேங் கிளைகள் ஏராளமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன.

1906 - இல் சென்னை நகரில் அர்பத் நாட் பாங்கு முறிந்தது. பணம் போட்டவர்கள் போட்டிருந்த் பணத்தை இழந்தனர். அதன் பிறகு நகரத்தார் களின் முயற்சியால், இந்தியன் பேங்கு 1907-இல் ஏற்பட்டது. தென்னிந்திய மக்களுக்கு பேங்குத் தொழிலில் நம்பிக்கை உண்டானதற்கு, நகரத்தார்கள் அதில் முன்னணியில் இருந்ததே காரணம்.

வணிகக் கழகங்கள்

சென்னையிலுள்ள சதர்ன் இந்தியா சேம்பர் ஆப் காமர்சின் வளர்ச்சியில் நகரத்தார் பங்கு பெரிது. அனைத் திந்திய வணிகர் பெரு மன்றத்தின் தலைவர்களாக (President, Federation of Chambers of Commerce and Industry) ராஜா சர் முத்தைய செட்டியார், தொழில் மேதை அ. மு. மு. முருகப்ப செட்டியார் ஆகியோர் இருந்திருக்கின்றனர்.

தொழிலாளர் இயக்கம்:

I N T U C என்னும் இந்திய தேசிய டிரேட் யூனியன் காங்கிரசின் கிளை 1950 இல் இராஜபாளையத் தில் ஏற்பட்டுப் பஞ்சாலைத் தொழிலாளர்க்குப் பணி பரிந்துவருகிறது. ஸ்ரீ வில்லிபுத்தூர் சங்கரன்கோவில் வட்டங்களில் தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர் இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ளனர். இச்சங்கத்தின் பதிவு எண் 1655—இராஜபாளையம்.

1959 - இல் இராஜபாளையத்தில் தமிழ் நாடு INTUC -யின் ஏழாவது மாநாடு சிறப்பாக நடை பெற்றது. இப்போது இந்தியாவின் தலைமை அமைச்ச ராக இருந்து வரும் திருமதி இந்திரா காந்தி அம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

தமிழ் நாட்டில் INTUC-ஐ நிறுவிய தோழர் ஜி. இராமாநுஜம் இம்மாவட்டத்துக் கீழ ராஜகுலராமன் ஊரினர்

9. ஆட்சி முறை

வரலாறு :

1910-ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் தேதி இராமநாதபுர மாவட்டம் புதிதாக உருவாக்கப் பெற்றது. இராமநாதபுரம், சிவகங்கை என்ற இரு ஜமீன் பகுதிகளும் ஏற்கெனவே மதுரை மாவட்டத்தில் இருந்தன. அவற்றை ஏழு வட்டங்களாகப் பிரித்து ஆங்கிலேயர் ஆட்சி செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம் பரப்பிலும் அளவிலும் பெரிய மாவட்டமாக இருந்ததால் அதன் வடகோடியிலுள்ள சாத்தூர், ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டங்கள் அந்த மாவட்டத்திலிருந்து பிரிக்கப் பெற்று இராமநாதபுர மாவட்டம் உருவானபோது அவை அந்த மாவட்டத்துடன் சேர்க்கப் பெற்றன.

இந்த இணைப்பு செயற்கையாக ஏற்பட்டது. வரலாற்று அடிப்படை கிடையாது. நெல்லை மாவட்டத்திலிருந்து பிரிக்கப் பெற்ற பகுதியினர் தங்கள் பகுதியிலேயே தலைநகர் அமைய வேண்டுமென்று இன்றும் விரும்பி வருகின்றனர். இதைப்பற்றி இக்கட்டுரையின் பின் பகுதியில் தலைநகர்ப் பிரச்சினை என்ற தலைப்பில் கூறுவோம்.

இராமநாதபுர மாவட்டம் உருவாக்கப் பெற்றபோது, ஏழு வட்டங்கள் ஏற்கெனவே மதுரை மாவட்டத்தில் இருந்த காரணத்தால் தொடர்ந்து மதுரையிலேயே அலுவலகங்கள் இருந்தன. மதுரை கலெக்டரின் அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதியில் இராமநாதபுர மாவட்டக் கலெக்டரின் அலுவலகம்

இருந்து வந்தது. ஐம்பது ஆண்டுகள் ஆன பிறகும் இராமநாதபுர மாவட்டத்துக்குள்ளேயே அலுவலகத்தை வைப்பதற்கு, எல்லாப் பகுதி மக்களும் உடன்படவில்லை. அதனால் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குத் தனிக் கட்டிடம் மதுரையிலேயே கட்ட தமிழக அரசு 1960-இல் முடிவு செய்தது. இக்கட்டிடம் 1963-ஆம் ஆண்டு மார்ச்சு 28-ஆம் நாளில் திறந்து வைக்கப் பெற்றது.

ஜமீன்கள் :

பல ஜமீன்கள் இருந்த போதிலும் இராமநாதபுரமும் சிவகங்கையும்தான் முக்கியமானவை. அவற்றின் வரலாறே இம்மாவட்டத்தின் வரலாறு ஆகும்.

இராமநாதபுரம் ஜமீனில் வாரப் பத்து முறை நிலவியது. உழவர்கள் வேளாண்மையில் கிடைத்த வருவாயில் பாதியை தாங்கள் வைத்துக்கொண்டு மற்றொரு பாதியை நில உடைமையாளருக்குக் கொடுத்து வந்தனர். இது தவிர நில உடைமையாளருக்கு கங்காணம், மகமை முதலியனவும் கொடுக்கப்பெற்றன. சிவகங்கை ஜமீனிலும் ஏறத்தாழ இதே நிலை நிலவியது.

ஜமீன்தார்கள், நில வரியை நெல்லாகவோ, ரொக்கமாகவோ பெற்றுக் கொண்டார்கள். நன்செய்க்கு ஏக்கருக்கு இருபது ரூபாய் வரையும் புன்செய்க்கு நான்கு ரூபாய் வரையும் வரி விதித்தனர்.

தானியமாக வரி செலுத்த விரும்பிய உழவர்கள், நெல் பயிரிட்டால் கண்ட முதலில் பாதியையும் புன் செய்த் தானியங்கள் பயிரிட்டால் அதில் மூன்றில் ஒரு பகுதியையும் ஜமீனுக்குக் கொடுத்தனர்.

வரி வசூலைத் திறமையாகச் செய்வதற்கும் ஜமீனை நிர்வகிக்கவும், இந்த ஜமீன்கள் பிரிட்டிஷ் இந்திய

அரசினரிடமிருந்து ஐ சி. எஸ். அதிகாரிகளை வேலைக்குச் சேர்த்துக் கொண்டனர். பொதுவாக ஜமீன்கள் நன்கு நடத்தப்பெற்றன. ஆனால், ஜமீன்தார்களின் பெயரை வைத்து ஆங்காங்கு சில சிறு கூட்டங்கள் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. இராமநாதபுரம் ஜமீனில் வரி வசூலில் எந்தவிதமான கண்டிப்பும் காட்டப்படவில்லை.

ஜமீன் ஒழிப்பு :

சுதந்திர இந்தியாவில் ஜமீன்கள் ஒழிக்கப்பட்டன. 1949-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. முதல் கட்டமாக அந்த ஆண்டில் இராமநாதபுரம், சிவகங்கை உள்பட சில ஜமீன்கள் அரசினரால் ஒப்புக் கொள்ளப்பட்டன.

பின்னர் மேஜர் இனாம்களும் அரசு வசமாயின இப்போது மாவட்டம் எங்கும், ரயத்துவாரி முறையே பெரும்பாலும் இருந்து வருகிறது.

அரசியல் கட்சிகள் :

இம்மாவட்டத்தில் அரசியல் உணர்ச்சி எப்போதுமே மிகுதியாக இருந்து வந்திருக்கிறது. கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையால் தூத்துக்குடிப் பகுதியிலும் அதை அடுத்த சாத்தூர் வட்டத்திலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் புரட்சிக் கனல் தெறித்தது. அதில் உருவானவரே தலைவர் காமராஜ்.

அதே நாட்களில் நகரங்களில் ஜஸ்டிஸ் கட்சி மிக வலுவாக இருந்தது. விருதுநகர்தான் ஜஸ்டிஸ் கட்சியின் தாயகம். நாடார்கள் கோவில்களுக்குள் செல்வதற்குப் பல தடைகள் இருந்த காரணத்தால், பிராமண எதிர்ப்பு இயக்கமாக விளங்கிய ஜஸ்டிஸ் கட்சியில் அவர்கள் பெரும் பங்கு கொண்டார்கள். விருது

நகரிலிருந்து ஜஸ்டிஸ் கட்சி இம்மாவட்டம் எங்கும் பரவிற்று. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூண்டுதலால் ஜமீன்தாரிகள் இக்கட்சியை ஆதரித்தனர். 1917-க்குப் பிறகு ராஜா சர் அண்ணுமலை செட்டியார் முயற்சியால் செட்டிநாட்டுப் பகுதிகளில் தேர்தல் காலங்களில் இக் கட்கியின் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப் பெற்றுர்கள்.

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியைப் பற்றி விடுதலை இயக்கம் என்ற தலைப்பில் கூறுவோம். பொதுவாகச் சொல்லுமிடத்து தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி கால் கொண்ட மாவட்டங்களுள் இராமநாதபுரம் முக்கிய மானது. சுதந்திரத்திற்குப் பிறகு எல்லா மாவட்டங் களிலுமே காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குக் குறைந் தது. இராமநாதபுர மாவட்டத்தில் சற்று வேகமாகச் சரிந்தது. இதற்கு ஒரு முக்கியமான காரணம் முதுகுளத்தூரில் கலகங்கள் நடைபெற்றதும் அதை ஒடுக்க காமராஜ் அமைச்சரவை கடுமையாக நடவடிக்கை எடுத்ததும் எனலாம். முக்குலத்தோர் பெரு மக்களின் முடிசூடா மன்னராக விளங்கிய பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் காங்கிரஸ் கட்சியி லிருந்து விலகினுர். அதனுல் இம் மாவட்டத்தின் மக்கள் தொகையில் பெரும் பகுதியினரின் ஆதரவை காங்கிரஸ் இழந்தது. பல இனத்தார்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத் தின் மீதும் அதில் பிறந்த தலைவரி மீதும் வெறுப்புக் காட்டத் தொடங்கினர்.

முத்துராமலிங்கத் தேவர் பார்வர்டு பிளாக் கட்சியை தமிழ் நாட்டில் பரப்பி அதன் ஒப்பற்ற தலைவ ராக விளங்கினுர். அக்கட்சியின் வேட்பாளராக நிறுத்தப் பெற்ற எவரும் இதுவரை தோல்வி அடைந்ததில்லை. தேவரும் அவருக்குப் பிறகு அனைத்து இந்திய பார்வர்டு

பிளாக்கின் தலைவர் பதவி ஏற்ற பி. கே. மூக்கையா தேவரும்தான் நாடாளுமன்றம் சட்டமன்றம் இரண்டுக்கும் ஒரே காலத்தில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டு அரசியலில் 1962 முதல் இக் கட்சி ஒரு சக்தியாக இயங்கி வருகிறது.

ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகி சுதந்திரா கட்சி தொடங்கியபோது இம்மாவட்டத்திலுள்ள ராஜாஜி ஆதரவாளர்கள் அக்கட்சியைப் பரப்பினர். காரைக்குடி திரு. சா. கணேசன், தமிழ்நாடு சுதந்திரா கட்சியின் தலைவராகப் பணியாற்றினார். 1967 தேர்தலில் இக் கட்சி இம்மாவட்டத்தில் தேர்தலுக்கு நின்ற எல்லா இடங்களிலும் வெற்றி பெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் இராஜபாளையம் பகுதியிலும் திருப்பத்தூர் வட்டத்திலும் பல ஆண்டுகளாக வேலை செய்து வருகின்றன. அவர்கள் ஆதரித்த, தனி வேட்பாளர்கள் சில தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். கட்சிச் சின்னத்தில் நிறுத்தப் பெற்றவர்கள் வெற்றி பெறவில்லை.

திராவிடக் கழகம் இம்மாவட்டத்தில் சிவகங்கையில் பிறந்தது. பிராமணர் அந்நகரில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அதனால் பிராமண எதிர்ப்பு இயக்கம் அங்கு வேரூன்றிற்று. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் கால்கொண்டது. சிவகங்கையையும் விருது நகரையும் தலைமை இடங்களாகக் கொண்டு; தி. மு. க. பரவிற்று. சிவகங்கை வழக்கறிஞர் திரு. மாதவன் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளராக நின்று 1962-இல் வெற்றி பெற்றார். இராமநாதபுர மாவட்டத்தில் தி. மு. க. கட்சி அடைந்த முதல் வெற்றி இதுவே, 1967-இல் தி. மு. க.;

பிற கட்சிகளின் ஆதரவுடன் மேலும் பல இடங்களைப் பிடித்தது. 1971-இல் கூட்டணி அமைத்து தி. மு. க. நிறுத்திய எல்லா வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர்.

இம்மாவட்டத்தில் தி. மு. க.வை வளர்த்த பெருமை தேவகோட்டை திரு. இராம. வெள்ளையன், திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன், திரு. எஸ். எஸ். தென்னரசு ஆகியோர்க்கும் சிவகங்கையிலுள்ள பிராமணரல்லாத வழக்கறிஞர்களுக்கும் உண்டு.

அமைச்சர்கள்:

1936-இல் பொப்பிலி ராஜா முதலமைச்சராக இருந்த ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரவையில் இம்மாவட்டத்தினரான ராஜா (அப்போது குமாரராஜா) முத்தையா செட்டியார் அமைச்சராக இருந்தார். 1937-இல் சர் கே. வி. ரெட்டி அமைத்த இடைக்கால அமைச்சரைவையிலும் இவர் அமைச்சராக இருந்தார். ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் அமர்ந்தபோது முத்தையா செட்டியார் எதிர்க் கட்சித் தலைவரானார்.

இம்மாவட்டத்தவரான. திரு. பூ. ச. குமாரசாமி ராஜா, தமிழ் நாட்டு முதல் அமைச்சராக 1949 முதல் 1952 வரை இருந்தார். அதற்கு முன் இவர் பிரகாசம் அமைச்சரவையில் 1946—47-இல் அமைச்சராக இருந்தார். முதல் அமைச்சர் பதவியை விட்டு விலகிய பிறகு இவர் ஒரிஸா மாநிலத்தின் கவர்னராக இருந்தார்.

1954 முதல் 1963 வரை திரு. காமராஜ் தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக இருந்தார். அதற்கு முன் அவர் பதினைந்து ஆண்டுகள் தமிழ் நாடு

காங்கிரசின் நிகரற்ற தலைவராகவும், அமைச்சர்களை ஆக்குபவராகவும் அழிப்பவராகவும் இருந்தார். தமிழ் நாட்டு முதல் அமைச்சர் பதவியிலிருந்து அவராகவே விலகிக்கொண்டு காங்கிரஸ் கட்சியின் அனைத்து இந்திய தலைவர் பதவியை ஏற்றார். காங்கிரஸ் கட்சியின் நீண்ட நெடுங்கால வரலாற்றில் இப்பதவி தமிழ் நாட்டில் சேலம் விஜயராகவாச்சாரியார், சென்னை எஸ். சீனிவாச ஐயங்கார், காமராஜ் ஆகிய மூவருக்குமே கிடைத்தது.

காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், நேருவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரியையும் இந்திரா காந்தியை யும் தலைமை அமைச்சர்களாகத் தேர்ந்தெடுத்ததற்கு காமராஜ் ஒரு முக்கிய காரணர் ஆவார் காங்கிரஸ் கட்சி பிளவு பட்டதிலும் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. 1971-இல் நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் (ஸ்தாபன) காங்கிரஸ் கட்சியின் சார்பாக தமிழ் நாட்டில் காமராஜ் ஒருவரே தேர்ந்தெடுக்கப் பெற்றார். தம் மாவட்டத்திற்கு வெளியேயுள்ள தொகுதிகளால் தோந்தெடுக்கப் பெற்ற சிறப்பும் காமராஜுக்கு உண்டு. 1954-இல் முதல் அமைச்சர் பதவியை ஏற்ற பிறகு அவர் வட ஆர்க்காடு மாவட்டம் குடியேற்றம் பகுதியிலிருந்து சட்டமன்றத் திற்கும் 1969-இல் இடைத் தேர்தலில் நாகர்கோவில் தொகுதியிலிருந்து இந்திய நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஜவஹர்லால் நேருவின் ஆதரவுடன் இவர் போட்ட காமராஜ் திட்டத்தின்படி, இந்திய அரசியலில் பல மூத்த தலைவர்கள் பதவியை இழந்தனர்.

1967-இல் திரு சி. என். அண்ணாதுரையும் 1969-இலும் 71-இலும் திரு. மு. கருணாநிதியும் அமைத்த தி. மு. க

அமைச்சரவைகளில் இம் மாவட்டத்தினரான திரு. மாதவன் இடம் பெற்ருர்.

இம்மாவட்டத்தார் ஒருவரும் இந்திய அரசில் அமைச்சராகவோ துணை அமைச்சராகவோ இருந்த தில்லை.

நகராண்மைக் கழகங்கள்:

இராஜபாளையம். விருதுநகர், அருப்புக் கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், காரைக்குடி, பரமக்குடி, சிவகாசி, தேவகோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சாத்தூர் ஆகிய பதினொரு நகரங்களில் நகராண்மைக் கழகங்கள் உள்ளன. இவற்றுள் இராஜபாளையமும் விருதுநகரும் முதல் நிலை நகராண்மைக் கழகங்கள்.

நகரியம் (Township) இராமேசுவரத்தில் இருக் கிறது. காரைக்குடி அழகப்பர் கல்லூரி வட்டத்துக்கு ஒரு நகரியம் ஏற்படுத்துவதாக 1969-ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் உறுதி கூறப்பட்டது. ஆனல் இன்னும் அரசினர் நடவடிக்கை எடுக்கவில்லை.

இம் மாவட்டத்தார் பலர் வெளி மாவட்டங்களில் நகராண்மைக் கழகங்களின் தலைவர்களாக இருந்திருக் கின்றனர்:

வி. வி. தனுஷ்கோடி நாடார் — தூத்துக்குடி
எம். எஸ். பி. ராஜா — ஏர்க்காடு
திவான்பகதூர் இராமசாமி செட்டியார்-சிதம்பரம்
வள்ளல் பெத்தாச்சி செட்டியார்— கரூர்
இராஜ சர் முத்தையா செட்டியார்—சென்னைமேயர்
ஆர். இராமநாதன் செட்டியார் — சென்னை மேயர்
எம். ஏ. சிதம்பரம் செட்டியார் — சென்னை மேயர்
எம். சுப்பையா செட்டியார் — டிப்டிமேயர் கொழும்பு

மாவட்டக் கழகம்:

தாலுகா போர்டுகள் என்ற வட்டக் கழகங்கள் ஒவ்வொரு வட்டத்திலும் இயங்கி வந்தன. விரல் விட்டு எண்ணத் தக்க சிலர் மட்டுமே இந்தத் தேர்தல்களில் கலந்து கொள்ள உரிமை பெற்றிருந்தனர். சிறு பான்மைச் சமூகத்தினரான கிறித்தவர்களும் முஸ்லிம்களும் இவற்றில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 1920-ஆம் ஆண்டில் மாவட்டக் கழகங்கள் ஏற்பட்டன. சில ஆண்டுகளுக்குப் பின்னர் தாலுகா போர்டுகள் ஒழிக்கப்பட்டன.

இராமநாதபுர மாவட்டக் கழகம் பல்லாண்டுகள் சிறந்த பணி செய்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் சிறந்த பரம்பரையினரான இராமநாதபுரம் சேதுபதிகள் இக்கழகத்தின் தலைவர்களாக இருந்ததே. விடுதலை இயக்கம் பரவிய பிறகு, அப்பொறுப்பை பி. எஸ். குமாரசாமி ராஜா திறமையுடன் ஏற்று நடத்தினார். அவர் இங்கு பெற்ற அனுபவமே பிற்காலத்தில் ஆட்சிப் பொறுப்பைச் செம்மையாக நிறைவேற்ற அவருக்கு உதவியது.

"ஜில்லா போர்டு உட்கார்ந்தது" என்ற தலைப்பில் ஆனந்த விகடனில் கல்கி கிருஷ்ணமூர்த்தி ஒரு தலையங்கம் பின் வருமாறு எழுதியிருந்தார்.

> "தேசிய மயமாக்கிய தொண்டில் ஸ்ரீ கருமுத்து சிவலிங்கத்துக்கு முக்கியமான பங்கு உண்டு. இராமநாதபுரம் ஜில்லாபோர்டு ஸ்தானங்களைக் காங்கிரஸ் வாதிகள் பெருவாரியாக கைப்பற்றியதும் மேற்படி போர்டின் முதலாவது கூட்டத்தைப் பார்ப்பதற்குப் பொது மக்கள் பலர் வந்திருந்தார்கள். நம்மை இந்த இடத்துக்கு அனுப்பிய

நம் எஜமான்களாகிய வோட்டர்கள் இத்தனைபேர் நிற்கும் போது, நாம் மட்டும் நாற்காலிகளில் உட்காருவது சரியல்ல, எல்லாரும் தரையில் விரிப்பு விரித்துச் சரிசமமாக உட்காருவோம், என்றார் ஸ்ரீ கருமுத்து சிவலிங்கம். அவ்வாறே நடந்தது!

தங்கள் கட்சி இழந்த செல்வாக்கினை மீண்டும் நிலை நாட்ட விரும்பி, ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரவை மாவட்டக் கழகங்களை இரண்டாகப் பிரித்து, நியமன உறுப்பினர்களின் ஆதரவுடன் கட்சியின் செல்வாக்கை உறுதிப் படுத்திற்று. இராமநாதபுர மாவட்டக் கழகம் மூன்றரைத் தாலூக்காக்களைக் கொண்ட தெற்கு இராமநாதபுர மாவட்டக்கழகமும் ஐந்தரைத் தாலுகாக்களைக் கொண்ட வடக்கு இராமநாதபுர மாவட்டக் கழகம் என இரண்டாக்கப் பெற்றது. ராஜாஜி முதலமைச்சரான பிறகு இவை இணைக்கப் பெற்றன. காமராஜ் ஆட்சியின் இறுதிக் காலத்தில் மாவட்டக் கழகங்கள் ஒழிக்கப் பெற்று அவற்றின் அதிகாரங்கள் 1961-இல் புதிதாக ஏற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப் பெற்றன.

இராமநாதபுர மாவட்டக் கழகத்தின் கடைசித் தலைவராக இருந்த எஸ். இராமசாமி நாயுடு காலத்தில் மாவட்டமெங்கும் ஏராளமான உயர் நிலைப் பள்ளிகள் ஏற்பட்டன.

போலீஸ் ஆட்சி:

பல ஆண்டுகளுக்கு முன் நடை பெற்ற கலகங்களால், சிவகாசி, கமுதி, முதுகுளத்தூர் பகுதிகளில் தமிழக அரசு ஆயுதம் தாங்கிய படைகளை நிலையாக வைத்திருக்கிறது.

தி.மு.க, ஆட்சியில் போலீசு நிலையங்கள் பெருகின. தொழில் அமைதியின்மை நிலவுகிறது. கள்ளுக்கடைகள் திறக்கப்பெற்றிருக்கின்றன.

தலைநகர்

மாவட்ட ஆட்சித் தலைவர், போலீஸ் தலைவர், மாவட்ட நீதிபதி ஆகியோர் அலுவலகங்கள் மதுரையில் இருக்கின்றன. ஏனைய துறைகளில் மாவட்ட அலுவலர்களின் அலுவலகங்கள் மதுரையில் இருந்தன. காமராஜ் ஆட்சியில் பல துறைகளுக்கு இது இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப் பெற்று விருதுநகரிலும் சிவகங்கையிலும் அவ்வத்துறைகளுக்கு மாவட்ட அலுவலகங்கள் ஏற்பட்டன. புதிதாக மாவட்ட மாஜிஸ்ட்ரேட் அதிகாரமுள்ள செஷன்சு ஜட்ஜின் நீதிமன்றம் தேவகோட்டையில் ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட மருத்துவர் (D.M.O.) இராமநாதபுரத்திலும் மாவட்ட சுகாதார அலுவலர் (D.H.O.) மதுரையிலும் உள்ளனர். மாவட்ட காட்டியல் அலுவலகம் காரைக்குடியில் இருந்து வருகிறது. மாவட்டத்தின் சில பகுதிகள், புதுக்கோட்டை பதிவுத் துறை அலுவலகத்தில் இருந்துவருகின்றன.

மாவட்டத்தின் தலைநகரம் மாவட்டத்திற்குள்ளேயே இருக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நெடுங்காலமாக இருந்து வருகிறது. 1952-இல் ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது இதற்கு ஒரு முடிவு கட்ட இம்மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற; மேலவை உறுப்பினர்கள் பெரிதும் முயன்றனர். புதிய அலுவலகங்கள் கட்டுவது வீண் செலவு, தொடர்ந்து அலுவலகங்கள் மதுரையிலேயே இருக்கட்டு மென்று ராஜாஜி கூறிவிட்டார்.

புதிய கட்டிடங்கள் எதையும் கட்டாமல் புதுக்கோட்டையைத் தலைநகரமாகக் கொண்ட ஒரு

மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் இராம நாதபுர மாவட்டத்தின் பெரும்பகுதியை புதிதாக ஏற்படும் புதுக்கோட்டை மாவட்டத்தில் சேர்த்துவிடலா மென்றும் பலர் கருத்துத் தெரிவித்தனர். புதுக் கோட்டையில் அரண்மனைகள், நீதிமன்றத் தலைமைக் கட்டிடம், பழைய திவானின் அலுவலகம், தலைமை மருத்துவ மனை, சிறை, அரசாங்க அச்சகம், காட்சிக் கூடம், கருவூலம் யாவும் இருப்பதைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப் பெற்றது. அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தொடர்ந்து தேர்தல் காலங்களில் உறுதி மொழிகள் கொடுத்தும், அரசினர் அதை நிறைவேற்றவில்லை. 1953-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சட்டமன்றத்தில் இதைப் பற்றி விவாதங்கள் நடந்தன.

1970-இல் தி. மு. க. அரசு, மானாமதுரை அருகே சிவகங்கைச் சாலையில் புதிதாக ஒரு நகரை அரசினர் செலவில் உருவாக்கவும் இராமநாதபுர மாவட்ட அலுவலகங்கள் எல்லாவற்றையும் அங்கு மாற்றிவிடவும் திட்டமிட்டது. விருதுநகர், இராஜபாளையம் பகுதி மக்கள் இவ்வேற்பாட்டை எதிர்த்தனர். விருதுநகரி லேயே மாவட்டத் தலைநகர் இருக்க வேண்டுமென்பது விருதுநகர்ப் பகுதியில் பரவியுள்ள கருத்து. மதுரையி லேயே தொடர்ந்து இருக்கட்டுமென்பது இராஜபாளை யத்தாரின் ஆர்வம். இதன் விளைவாக தி. மு. க. அரசு, திட்டத்தைக் கைவிட்டது.

ஒரே தலைநகரைப் பெறுவதற்கு இம்மாவட்டத்தின் நீண்டு வளைந்த அமைப்பு ஏற்றதாய் இல்லை. எங்கு புதிதாகத் தலைநகர் அமைத்தாலும் சில பகுதியினருக்கு அதனால் இன்னல்கள் ஏற்படத்தான் செய்யும்.

10. விடுதலை இயக்கம்

சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்ற தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டத்திற்குச் சிறப்பான பங்கு உண்டு. இம்மாவட்டத்தில் எண்ணற்ற விழுச்சியுற்ற தேசபக்தர்களும், அவர்களை எழுச்சியுறச் செய்த ஏன், தமிழகத்தையே தட்டி எழுப்பிய தென்னகத் தலைவரும் தோன்றினர். எனவே இம்மாவட்டம் ஆங்கிலேயர்களால் புறக்கணிக்கப்பட்டது; குறுநில மன்னர்களுக்குப் பிரிக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் பெரும்பான்மையான மக்கள் குற்ற பரம்பரையினர் என ஒதுக்கி வைக்கப்பட்டனர். அடிமைத் தளைகளை எதிர்த்து, விட்டுக் கொடுக்காத வீரமிக்க போர்புரிந்ததால்! இங்ஙனம் எல்லாத் துறைகளிலுமே தள்ளி வைக்கப்பட்டது இந்த மாவட்டம்.

மருது சகோதரர்கள்:

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிவகங்கைச் சீமையைப் பெரியமருது, சின்னமருது என்ற இரண்டு சகோதரர்கள் தமிழ் மணம், தெய்வநெறி, தேசிய வெறி, நிறைந்த இலட்சிய வாழ்க்கை மூலம் ஆட்சி நடத்தினர். அவர்கள் ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்த்து காளையார்கோவிலில் போராடினர். அப்போரில் ராணி வேலுநாச்சியம்மையார் காட்டிய வீர உணர்ச்சி தமிழ் மக்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கது. வடநாட்டில் ஜான்சி ராணி என்னும் வீரமங்கை தோன்றுவதற்கு 50 ஆண்டுகளுக்கு

முன்னரே தமிழகம் பெற்றெடுத்த புகழ்மங்கையே ராணி வேலுநாச்சியார்.

அடிக்கடி சிவகங்கைச் சீமைக்கு ஆர்க்காடு நவாப் தொல்லை கொடுத்தான். ஓயாமல் கிஸ்தி கேட்டவண்ண மாக இருந்தான். 1783-இல் கிழக்கிந்திய கம்பெனியாரிடம் சொல்லி சிவகங்கைச்சீமையை அழிக்க புல்லர்ட்டனை படையெடுக்கச் செய்தான். இவ்வாறு இடையிடையே பல குழப்பங்கள் நடைபெற்றன. பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப்பின் அங்கிருந்து வெளியேறிய ஊமைத்துரை சிவகங்கைச் சீமையில் அடைக்கலம் புகுந்த செய்தியை அறிந்த சீமைத்துரைகள் 1801இல் கமுதிக் கோட்டையில் கடும்போர் தொடங்கினர். பின்னர் அந்தப்போர் திருப்பாச்சேத்தி, மானமதுரை, பார்த்திபனூர், பரமக்குடி, நத்தம், ஒக்கூர், சிறுவயல் முதலிய இடங்களுக்கெல்லாம் பரவியது. அந்த விடுதலை உணர்ச்சி இன்றும் இம்மாவட்டத்தில் குன்றவில்லை.

கட்டபொம்மு:

"வானம் பொழியுது பூமிவிளையுது
கும்பினிக்கேது வரிப்பணம்?"

என்று கட்டபொம்மு பதில் சொல்லியது, இராமநாதபுரத்து மண்ணில்.

இராமநாதபுரத்தில் சேதுபதிக்குச் சொந்தமான 'இராமலிங்க விலாசம்' என்னும் மாளிகையில் கலெக்டர் ஜாக்ஸனைக் கட்டபொம்மு சந்தித்தபோது, அந்தக் கலெக்டர் 'உம்மைச் சிறை செய்திருக்கிறேன். இது கும்பினியாரின் உத்திரவு' என்று சொன்னான். கட்டபொம்முவோ தம் உடைவாளை உருவி வீசி, அங்கிருந்த படைவீரர் சிலரை வெட்டித்தள்ளிக் கலெக்டர்

துரையைக் கையால் ஒருபக்கம் தள்ளிவிட்டு அம் மாளிகையிலிருந்து, ஊமைத்துரை பின்தொடர, வெளிப் பட்டார். உதவித் தளபதி சில படைவீரர்களுடன் வந்து வழிமறிக்க, அவனையும் கட்டபொம்மு வெட்டித் தள்ளிவிட்டார். கும்பினிப்படை வீரரைக் கட்டபொம்மு வின் வாள்களும் வேல்களும் வென்றுவிட்டன,

வ. உ. சி:

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார், சுதேசி ஸ்டீம்ஷிப் நாவிகேஷன் கம்பெனியைப் பதிவு செய்த போது, பாண்டித்துரைத் தேவர் ஒரு லட்சம் ரூபாய்க் குப் பங்குப் பணம் செலுத்தி அவருடைய முயற்சியை ஆதரித்தார். நகரத்தார்களில் இலங்கைத் தொடர்பு டைய ஒரு சிலர் ஓரளவு பங்கெடுத்துக் கொண்டனர்.

பூ. ச. குமாரசாமி ராஜா:

அரசியல் விழிச்சியை இந்த நூற்றுண்டில் இம் மாவட்டத்தில் பரப்பிய முதல்வர் குமாரசாமி ராஜா. அன்னை பெசண்டு அம்மையார் ஹோம்ரூல் இயக்கத்தை தொடங்கியபோது; குமாரசாமி ராஜா அதற்கு உறு துணையாக இருந்தார். அவர் 1916-இல் இராஜபாளையத் தில் தொடங்கிய மீனாட்சி சகாய விவேக வித்யானந்த சங்கம், ஹோம்ரூல் இயக்கத்தை ஆதரிப்பதை அதன் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. குமாரசாமி ராஜாவுக்கு அரசியலில் ஏற்பட்ட ஆர்வத்தாலும் செல் வாக்காலும் 1920, 1927, 1934 ஆம் ஆண்டுகளில் மகாத்மாகாந்தி இராஜபாளையத்துக்கு வருகை புரிந் தார். தொடர்ந்து, அனைத்திந்தியப் புகழ்பெற்ற தேசி யத் தலைவர்கள் பலரும் இராஜபாளையத்துக்கு வந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் தேசியக் கோட்டையாயிற்று,

அந்நாளில் இம்மாவட்டத்துக்கு கலெக்டர்களும் உயர் போலீசு அதிகாரிகளும் பொறுப் பேற்கும்போது, "இராஜபாளையம் தேசிய சக்திகள் நிறைந்த ஊர்; எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்று சென்னை யிலுள்ள உயர் அலுவலர்கள் பாடம் சொல்லிக் கொடுத் துப் பிறகுதான் அவர்களை இந்த மாவட்டத்துக்கு அனுப்புவார்களாம்.

காங்கிரஸ் இயக்கம் இந்தியாவில் ஏற்பட்டதன் பொன்விழா 1934-இல் கொண்டாடப் பெற்றது. அதன் நினைவாக இராஜபாளையத்தில் தலைவர் இராஜேந்திரப் பிரசாத், ஒரு மைதானத்தைத் திறந்து வைத்தார்.

காந்திய இயக்கம் என்றும் மக்கள் நினைவில் இருக்க வேண்டுமென்பதற்காகவும் காந்தியத் தத்துவங்களைப் பரப்ப வேண்டுமென்பதற்காகவும் குமாரசாமி ராஜா தாம் வாழ்ந்த வீட்டையே பொது மக்களுக்கு வழங்கி அதில் காந்தி கலைமன்றத்தை 1965-இல் நிறுவினார். அதுவே தம் வாழ்நாளில் பெருமிதம் அடைந்த நாள் என்றும் அவர் கூறினார். மகாத்மாகாந்தியும் ஜவஹர் லால் நேருவும் இராஜேந்திரப் பிரசாத்தும், குமாரசாமி ராஜாவின் விருந்தினராகத் தங்கிய இடமாதலால் இந்த இடம் புனிதம் பெற்றுள்ளது.

காந்தி கலைமன்றத்தில் பாஞ்சாலங் குறிச்சியி லிருந்து கொண்டு வரப் பெற்ற, கட்டமொம்மனின் சிலை காட்சியில் வைக்கப் பெற்றிருக்கிறது.

விருதுநகர்ப் பகுதி:

சாத்தூர் வட்டம்; திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியாக இருந்த காலத்திலிருந்தே தேசிய உணர்ச்சியைப் பெற்றது. இளைஞராக இருந்த

காமராஜும், திரு. கே. எஸ் முத்துச்சாமியும் திரு ஜெயராம ரெட்டியாரும் அல்லும் பகலும் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டனர். விருதுநகர், தேசியத்துக்கு முற்றிலும் மாறுபட்டவர்களின் கோட்டையாக இருந்தது. அதிகாரமும் வணிகரிடையே செல்வாக்கும் இருந்தவர்களுடைய ஏச்சையும் பேச்சையும் பொருட்படுத்தாமல் தேசிய இயக்கத்தை வளர்ப்பதிலேயேஇவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். காமராஜும் முத்துச்சாமியும் வெள்ளைக்கார கவர்னர் ஒருவர்மீது குண்டுவீசினர் என்று அவர்கள்மீது குற்றம் கூறப் பெற்றது. அந்த நிகழ்ச்சியே அவர்களுடைய வாழ்க்கையின் திருப்பமாக அமைந்தது.

இப்பகுதியில் தேசிய இயக்கம் வளர்ந்த வரலாற்றை திரு. நமச்சிவாயம் எழுதிய 'காமராஜ் வரலாறு' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

முத்துராமலிங்கத் தேவர்:

நிறைந்த தமிழ் அறிவாலும் அளவு கடந்த தேசிய உணர்ச்சியாலும் ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தி மேடைகளில் வீர முழக்கம் செய்து தமிழ் நாட்டு மக்களிடையே புத்துயிர் ஊட்டியவர் பசும்பொன் தேவர். இம்மாவட்டத்தில், அடுத்த ஊர் எது என்று தெரியாத மக்களிடம்கூட தேசியத்தை இவர் வித்திட்டார். ஆங்கிலேய ஆட்சியும் அதற்குப் பிறகு காங்கிரஸ் அமைச்சர்களும் தேவர் என்ற பெயரைக் கேட்ட அளவில் அஞ்சும் அளவுக்கு அவர் செல்வாக்கும் சொல் வாக்கும் பெற்றிருந்தார். அவர் நா அசைந்தால் நாடு அசையும் என்ற நிலை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தது.

சுப்பிரமணிய சிவா:

தேசிய இயக்கம் பெரிதும் பரவுவதற்கு சுப்பிரமணிய சிவா காரணமாய் இருந்தார். இம்மாவட்டத்துக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை, தேசபக்தர் சா. கணேசன், இந்து மதாபிமான சங்கப் பொன்விழா மலரில் பின் வருமாறு விவரிக்கிறார்;

> "1920-ஆம் ஆண்டு தென்னகத்தில் கொழுந்து விட்டெரியத் தொடங்கிய தேசபக்திக்கனல், காந்தியத்தால் வெம்மை குறைந்து நேர்மை அரும்பிய காலம். அந்தக் காலந்தான் காரைக்குடியின் தேசிய எழுச்சிக்கு வித்திட்ட காலம். வித்திட்டவர் சிவாதான். வித்திட்ட இவர் காரைக்குடியையே தமது முகாமாகவும் ஆக்கிக் கொண்டார். தேசப் பணிக்குத் தாம் இட்ட வித்து, முளைத்துத் தழைத்துக் கிளைக்க நீர்பாய்ச்சி, உரமிட்டும் வந்தார்."

> "எங்கெல்லாம் கூட்டம் சேருமோ அங்கெல்லாம் சிவா எழுந்தருளியிருப்பார். தேர்த்திரு விழாக்கள் இவர் பிரசங்கத்திற்குக் கூட்டம் சேரப் பேருதவியாயிருந்திருக்கின்றன."

அவருடைய உரையில் நெஞ்சம் குமுறும். குருதி கொதிக்கும். நாடி துடிக்கும்.

> "இந்த உரையை நான் அரியக்குடித்தெப்பத் திருவிழாவில் வடமேற்கு மூலையில் சிவா பேசிக் கொண்டிருந்தபோது கேட்டேன். சில ரூபாய்க்குத் திலகர் சுயராஜ்யநிதி-காந்தி நோட்டுக்களையும் வாங்கினேன். 1942-இல் போலீசார் என் வீட்டைச் சூறையாடியதற்கு முன்வரை அந்நோட்டுக்கள் என்னிடம் பத்திரமாயிருந்துவந்தன."

"சிவா சில தொண்டர்களுடனேயே காரைக்குடி வந்தார். வந்ததும் பாரதமாதா ஆச்ரமம் தோன்றி விட்டது. மேலே ஊரணிக்கும் கல்லுக்கட்டிக்கும் இடையேயுள்ள மீனீச்வரன் கோவில் தெருவில் அந்த ஆச்ரமம் இடங்கொண்டது, எல்லாப் பணி களையும் ஆச்ரமவாசிகளே செய்வர். அவர்களுள் இன்று என் நினைவில் இருப்பவர்கள் திருவாளர்க ளான ஸ்ரீநிவாச வரதன், தியாகராஜ சிவம், கல்கி சதாசிவம் ஆகிய மூவருமே. தேசிய பஜனைகளும் நிகழ்ந்தன."

இந்து மதாபிமான சங்கம்:

தேசியத்தைப் பரப்பியதில் காரைக்குடியில் 1917-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற இந்து மதாபிமான சங்கத்துக்கும் தொடர்பு உண்டு. பாரதியாரின் பாடல் பெற்ற இச்சங்கம் குமரன் ஆசிரியராக இருந்த சொ. முருகப்பா, தமிழ்க்கடல் ராயசொ ஆகியோரால் வளர்ந்து தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெற்றிருக் கிறது. வேதாந்தமும் தேசத்தொண்டும் ஒன்று என்று கருதிய தேசபக்தர்களை இச்சங்கம் வரவேற்று ஊக்குவித் திருக்கிறது.

நகரத்தார்கள்:

தேசிய இயக்கத்தில் 1920க்குப் பிறகு நகரத்தார் களில் படித்த சிலர் ஈடுபடலாயினர். வணிகத்துறையில் மட்டும் கவனம் செலுத்தி ஆங்கில அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் இதை விரும்பவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்படுமுன் செட்டிநாட்டில் குடிசை வீடுகளே இருந்தன என்றும் ஆங்கில ஆட்சியில் தான் நகரத்தார்கள் செல்வம் ஈட்டினர்' என்றும் சுட்டிக்காட்டி தேசிய இயக்கத்தை எதிர்த்தனர்.

"இங்கிலீஷ் கொடி பறக்கவே இனியாத்தக்குடி கிறங்கவே" என்ற பாடுவார் முத்தப்பர் பாடலையும் சான்று கூறினர்.

எனினும் நகரத்தார் இளைஞர் இதனைப் பொருட் படுத்தவில்லை. அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிர மணியம், சொ. முருகப்பா, ராயசொ, சா. கணேசன் ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் ஆகிய பெருமக்கள் தேசிய இயக்கத்துக்கு வித்திட்டனர்.

சாதி வேறுபாடின்றிப் பலரும் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு, ஒன்றாக உழைத்தனர். பொ. திரிகூட சுந்தரனார், அமராவதி புதூர் என். பரமசிவம், அமராவதி புதூர் நாராயண ஐயங்கார், திருப்பத்தூர் கிட்டுவையர், காரைக்குடி என். எஸ். கணபதி, டாக்டர் எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் குறிப்பிடத்தக்க வர்கள்.

காரைக்குடி மாவட்டம்

காரைக்குடிப் பகுதியில் காங்கிரசுக்கு மிகுதியான ஆதரவு இருந்ததால் திருப்பத்தூர், திருவாடானை சிவகங்கை வட்டங்கள் அடங்கிய ஒரு தனி மாவட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியால் அமைக்கப் பெற்றது. இது காரைக்குடி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரில் 1943 வரை இருந்தது. தமிழ் நாட்டில் அதிகமான காங்கிரஸ் உறுப்பினர்களைச் சேர்த்து அதற்குரிய கேடயத்தையும் இந்த மாவட்டம் பெற்றது.

1927-இல் காந்தியடிகள் காரைக்குடியில் நகரத்தார் களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கதர் விற்பனையில், காரைக்குடி தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றது.

மாவட்டக் கழகத் தேர்தல்களில் பெரும் எதிர்ப்பை இக்கமிட்டி சமாளித்து, அனைத்திந்தியா விலும் புகழ் பெற்றது. பள்ளத்தூர், நெற்குப்பைத் தொகுதிகளில் 1936-இல் நடைபெற்ற தேர்தல்களில் போட்டி கடுமையாக இருந்தது. அவற்றில் போட்டி யிட்ட காங்கிரஸ் வேட்பாளர்கள் நாகப்பாவும் வள்ளியப்பாவும ஆவர். அவர்கள் தொடுத்த வழக்கு களும் அவ்விருவராலும் தேசிய இயக்கம் பரவியதும், தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு பகுதியாக இடம் பெற்றுள.

நிர்மாண இயக்கம்:

பதினான்கு அம்சங்கள் கொண்ட ஆக்கவேலைத் திட்டத்தை காந்தியடிகள் வற்புறுத்தினார். அதைப் பரப்ப இந்திய நாடெங்கும் காந்தி ஆசிரமங்கள் தோன்றின. பிற்காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவராக விளங்கிய ப. ஜீவானந்தம், செட்டிநாட்டு அரண்மனை சிறுவயலில் ஒரு காந்தி ஆசிரமம் நிறுவினார். இதைப் பார்த்து மகாத்மா காந்தியே பெரிதும் உள்ளம் நெகிழ்ந்தார்.

காந்தியடிகளின் கொள்கைகளில் ஈடுபட்டவர் களில் செக்காலை, காந்தி மெய்யப்பர் (1886—1957) முக்கியமானவர். இவர் காரைக்குடியில் நடைபெற்ற தமிழ் மாகாண அரசியல் மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராயும் சர்வோதய சமாஜத்தலைவராயும் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்கு நிதி திரட்டும் குழுவின் தலைவராயும் இருந்தார்.

திரைப்படங்கள்:

திரைப்படங்கள் மூலம் தேசியக் கனலை வளர்த்த தொண்டில் இம்மாவட்டத்தார் பங்கு பெரிது. தமிழ்

நாட்டில் திரைப்படத் தொழில் வரலாறு நகரத்தார்களுடன் பின்னிப் பிணைந்தது. எனவே இதில் வியப்பு ஒன்றுமில்லை. திரைப்படங்களில் தேசியப்பாடல்களைப் புகுத்தியவர் ஏ. வி. எம்.

காந்தியடிகள் வாழ்க்கையை வரலாற்றுப்படமாக எடுப்பதற்காக உலகெங்கும் சுற்றுப்பயணம் செய்தவர் திரு. ஏ. கே. செட்டியார். இவர் 1936-ஆம் ஆண்டில் சுபாஷ் சந்திர போஸ் ஆஸ்திரியாவில் தங்கியிருந்த போது ஒருசெய்திப்படமும் எடுத்தார்.

திரைப்படங்களிலும் மேடைகளிலும் காந்திகதை நடத்தி தேசிய உணர்ச்சியைப் பரப்பி வருபவர் இம் மாவட்டத்துக் கொத்தமங்கலம் சுப்பு. இவர் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர்.

இதழ்கள்:

குமரன், ஊழியன் போன்ற வார இதழ்களையும் எண்ணற்ற பல தேசிய இதழ்களையும் இம்மாவட்டத்தார் நடத்தியுள்ளனர். தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பல இதழ் ஆசிரியர்கள் இம்மாவட்டத்தில் இளமையில் தங்கித் தேசிய உணர்ச்சி பெற்றவர்களே.

சமஸ்தான இணைப்பு:

புதுக்கோட்டைத் தனி அரசை இந்திய நாட்டுடன் இணைத்ததிலும் இம்மாவட்டத்துக்குப் பங்கு உண்டு.

1942

1942-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளையனே வெளியேறு என்ற போராட்டத்தில் மிகப்பெரிய கிளர்ச்சி நடைபெற்றது, இராமநாதபுர மாவட்டத்தில்தான். தொன்றுதொட்டு தேசிய இயக்கங்களிலே முன்நின்ற இராஜபாளையம் 1942-இலும் மிகவும் ஈடுபட்டு பெரும்

புகழ் அடைந்தது. காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற கிளர்ச்சிகளில் போலீசார் சுட்டுப் பலர் உயிரிழந்தனர். தேவகோட்டையில் நீதி மன்றக் கட்டிடத்தில் தீ வைக்கப்பட்டது. திருவாடானையில் ஏராளமான அரசாங்க அலுவலகங்கள் தீயிடப்பட்டன, கருவூலம் உடைக்கப்பட்டது. நடராஜபுரம் இரயில் நிலையம் மண்ணோடு மண்ணாயிற்று. பூலாங்குறிச்சி அஞ்சல்நிலையமும் தபால் பைகள் வந்த பஸ்ஸும் கொள்ளையடிக்கப்பட்டன. மலைமீதேறி வந்தேமாதரம் என்று முழங்கியவர்களை, இயந்திரச்சுடல் துப்பாக்கியால் போலீசார் சுட்டனர். பல இடங்களில் தபால் தந்தி ரயில் போக்குவரத்து யாவும் தடைப்பட்டது. பாலங்கள் உடைக்கப்பட்டன. அரசாங்க அலுவலர்கள் அச்சுறுத்தப்பட்டனர். இரண்டு லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் தண்ட வரியாக அரசாங்கத்தாரால் இந்த மாவட்டத்தில் வசூலிக்கப்பட்டது. தேசியத் தலைவர்கள் வீடுகளைப் போலீசார் சூறையாடினர். ராஜபாளையத்தில் தொண்டர்கள் கேவலப்படுத்தப்பட்டனர்.

1942 இயக்கத்தில் உருவான இளைஞர்களுள் ஒருவர் "தமிழ் ஹரிஜன்" ஆசிரியராக இருந்தவரும் நகைச்சுவை நிறைந்த சொற்பொழிவாளருமான திரு. சின்ன அண்ணாமலை.

கடல் கடந்த நாடுகள்:

இந்தியாவுக்கு வெளியே வாழ்ந்த தமிழர், தேசிய இயக்கத்துக்கு எப்போதும் பெரிதும் உதவி செய்து வந்திருக்கிறார்கள். இந்தப் புனிதமான கடமையில் இராமநாதபுர மாவட்டத்தார் முன்னணியில் இருந்து வந்திருக்கிறார்கள்.

இந்திய தேசிய இராணுவம்:

1942-இல் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த இந்திய தேசிய இராணுவத்திற்கு, இருபது கோடி நிதி திரட்டியும், இராணுவத்தில் பல்லாயிரக் கணக்கில் சேர்ந்தும் மலேசியாவிலும் பர்மாவிலும் இம்மாவட்டத்தினர் இந்திய விடுதலைக்கு ஒல்லும் வகையால் உதவியுள்ளனர். நகரத்தார்களை நேத்தாஜி, 'செட்டியார் பாபுக்கள்' என்று அன்புடன் குறிப்பிட்டுப் பெரிதும் மதித்தார். அவர் தொடங்கிய ஆஜாத் ஹிந்த் லீகில் இம்மாவட்டத்தார் பலர், பொறுப்பான பதவிகளை வகித்தனர்.

நேத்தாஜி பர்மாவுக்கு வருவதற்குப் பல ஆண்டுகள் முன்பு, தனவைசியர் கல்விக்கழகம் பர்மாவின் தலைநகரான இரங்கூனை அடுத்த கம்பையில் மகாத்மா காந்தியடிகளால் திறந்துவைககப்பெற்றது. இரண்டாம் உலகப்போர்க்காலத்தில், அது இந்திய தேசிய இராணு வத்தின் உபயோகத்துக்குக் கொடுக்கப்பெற்றது.

நேத்தாஜி பர்மாவுக்கு வருவதறகுப் பல ஆண்டுகள் முன்பு, தனவைசிய கல்விக் கழகம் பர்மாவின் தலைநகரான இரங்கூனை அடுத்த கம்பையில் மகாத்மா காந்தியடிகளால் திறந்து வைக்கப் பெற்றது. இரண்டாம் உலகப் போர்க்களத்தில், அது இந்திய தேசிய இராணு வத்தின் உபயோகத்துக்குக் கொடுக்கப் பெற்றது.

"இந்தியர் காங்கிரஸ்"

இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற நிறுவனம் ஏற்பட்டபோது, நகரத்தாராகிய வ. ராம. இலக்குமணச் செட்டியாரை (வலையபட்டி, திருச்சி மாவட்டம்) ஜவஹர் லால் நேரு அதன் தலைவராக நியமித்தார். அவரைத் தொடர்ந்து, இம்மாவட்டத்து திரு. எஸ். தொண்டைமான் பல்லாண்டுகள் அப்பதவியை வகித்து வருகிறார்.

மலாயா இந்தியர் காங்கிரசைப் பெரியதொரு அமைப்பாக ஆக்கி அதன் தலைவராகவும் இருந்தவர்; பள்ளத்தூர் 'அட்வகேட்' கா. இராமநாதச் செட்டியார் ஆவார்.

வெளி நாடுகளின் சுதந்தர இயக்கங்கள்

இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைக்கு இணங்க, ஸ்பெயினில் சர்வாதிகாரக் குழுக்களுக்கு விரோதமாக உள் நாட்டுக் கலகத்தில் மக்களாட்சி இயக்கத்தில் இம் மாவட்டத்து விமானி ஸ்பெயின் வீரப்பா ஈடுபட்டார்.

1961-இல் ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டின் சுதந்திரத்தைப் பேண, ஐக்கிய நாடுகள் அவையின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியா அனுப்பிய 3,000 வீரர் அடங்கிய படையில் தளபதியாகவும் பின்னர் ஐ. நா. படைகளின் தலைவராகவும் விளங்கிய இராஜபாளையம் கோட்டிமுக்குல அழகராஜ சிங்கப்ப ராஜாவைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

11. தமிழ்ப் பணி

சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்கும் அயராது உழைத்த, உழைத்து வருகிற பெருமக்கள், தொண்டர்கள், புலவர்கள், புரவலர்களை இம்மாவட்டம் தந்திருக்கிறது.

வள்ளல்கள்:

பாரிவள்ளல் காலம் தொட்டு வாழையடி வாழையாக வள்ளல்கள் வாழ்ந்து வரும் மாவட்டம் இது. இத்தகைய வள்ளல்களுள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளுள் குறிப்பிடத்தக்கவர் பலர்.

சேதுபதிகள்:

சேதுபதிகள் தமிழ் வளர்ப்பதையே தங்களுடைய முக்கிய பணிகளுள் ஒன்றாகக் கொண்டிருந்தார்கள். முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி ஆகியோரின் தொண்டும் தமிழ்ப்பற்றும் தமிழ் இருக்கும் வரை நினைத்துப் போற்றப்படும்.

1785-இல் காலமான பெரும் புலவர் சிவஞான சுவாமிகள். அவருடைய மாணவரான, இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை சேது சமஸ்தான வித்துவானாக இருந்தார். அவரிடம் பயின்று தமிழ் வளர்த்த பெரும் புலவர்கள் அஷ்டாவதானம் பெரிய சரவணக் கவிராயரும் இயற்றமிழ் ஆசிரியர் முகவை இராமநுசக் கவிராயரும் ஆவர். பின்னவர்களிடம் பயின்றவர்களே திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திருத்தணிகை சரவணப் பெருமாளையர், டாக்டர் ஜி. யு. போப் ஆகியோர்.

சேதுபதிகள் ஆதரித்த புலவர்கள் நூற்றுக்கணக்கினர். ஒரு சிலரை மட்டும் இங்கே கூறுவோம்;

யாழ்ப்பாணம் மகா வித்துவான் ஆறுமுக நாவலர்.

யாழ்ப்பாணம் குமாரசாமிப் புலவர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

வித்துவான் தியாகராசச் செட்டியார்.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்.

திருப்பூவண உலா இயற்றிய கந்தசாமிப் புலவர்.

தேவபா இயற்றிய சொக்கநாதப் புலவர்.

திருச்செந்தூர்க் கோவை இயற்றிய சர்க்கரைப் புலவர்.

மாம்பழக்கவிராயர்.

திருவாடானை அந்தாதி இயற்றிய வேம்பத்தூர் பிச்சுவ ஐயர்.

வின்சுலோ அகராதியைப் பதிப்பதில் வின்சுலோ துரைக்கு உதவி செய்த இராமாநுசக் கவிராயர்,

பணவிடுதூது ஆசிரியர் முதுகுளத்தூர் பெரிய சரவணக் கவிராயர்.

கிருஷ்ண ஐயங்கார்.

நூற்றி எட்டுத் திருப்பதி பதிகங்கள் பாடிய முத்துச்சாமி ஐயங்கார்.

பாரிகாதை ஆசிரியர் மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார்.

செந்தமிழ் ஆசிரியர் திருநாராயண ஐயங்கார்.

பரிதிமாற் கலைஞர் சூரிய நாராயண சாஸ்திரியார்

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த மு. இராகவ ஐயங்கார்,

கடைசியாகக் குறிப்பிட்ட மு. இராகவ ஐயங்கார் 'சேது நாடும் தமிழும்' என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில் சேதுபதிகளின் தமிழ்த்தொண்டு விவரமாகக் கூறப் பெற்றிருக்கிறது.

சேதுபதிகள் குடும்பத்தில் ஒருவர் பொன்னுச்சாமித் தேவர், சேதுநாடான இராமநாதபுரச் சீமையின் மேலாளராக இருந்து, அந்நாட்டை வளமுறச் செய்தவர்; அருங்கலை விநோதர்; திருந்திய செந்தமிழ் நாவலர்; பெருங்கொடை வள்ளல். இவருக்குப் பிறந்த செல்வ மக்களுள் மூன்றுமவர் பாண்டித்துரைத் தேவராவர்.

"பேச்சிலே பெரியசாமி
பெருமையிலே சீமைச்சாமி
அழகிலே பாண்டித்துரை
அமைந்தார் பொன்னுச்சாமி மக்கள்"

என்னும் நாட்டுப் பாடல் பொன்னுச்சாமி தேவருக்குப் பிறந்த புதல்வர் மூவரையும் பாராட்டியிருப்பதைக் காணலாம்.

பாண்டித்துரைத் தேவர், நான்காம் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் 1901-இல் நிறுவினார். 1971 முதல் இச்சங்கத்தின் தலைவராக இராமநாத சேதுபதி இருந்து வருகிறார்.

சிவகங்கை அரசர்கள்:

மருது பாண்டியர்கள் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார்கள். அவர்களுடைய அவையில் 21 புலவர்கள் இருந்தனர் என்பர். மருது அரசர் விருப்பப்படியே சாந்துப்புலவர் 'மயூரகிரிக்கோவை' பாடினார்.

சென்ற தலை முறைகளில் சிவகங்கை அரசர்கள் புலவர் பலரை ஆதரித்தனர். இதைப்பற்றி, சுவையான ஒரு செய்தி மட்டும் கூறுவோம்.

கடிகை முத்துப் புலவர் ஒருநாள் முத்து விசய ரகுநாத கௌரி வல்லபர் என்ற சிவகங்கை அரசரைக் காணச் சென்றார். வழக்கத்துக்குமாறாக, அன்று அரசர் புலவரைத் தக்கவாறு வரவேற்கவில்லை. பொறுப்பாரா புலவர்? சினந்தார். புலவர் சினம் வசைபாடலாக இன்று வழங்கி வருகிறது:

"கள்ளா அகம்படியா
காராளா கம்மாளா
வள்ளா ஒட்டா தொட்டியா
வாணியா—உள்ளன்
புலையா நாம தாதா
புன்க வடுகா
கௌரி வல்லபா"*

கள்ளா—முக்குலத்தினருள் ஒரு சமூகம்
காராளா—காரைக்காட்டு வெள்ளாளன்
வள்ள—வள்ளுவச் சாதியன்
ஒட்டன்—கிணறு வெட்டும் குலத்தோன்
தொட்டியன்—குடுகுடுப்பைக்காரன்
வாணியன்—வாணிபச் செட்டி
உள்ளன், புலையன்—பள்ளர் சமூகப் பிரிவுகள்
நாமதாதா—நாமத்தைப் போட்டுக் கொண்டு தப்பபடிப்பவன்

* தொடர்ச்சி
புன்கவடுகா—அற்பமான வடுகர் சாதி,

பிற்பட்ட சாதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு ஏளனம் செய்கிறாயா? என்று அரசர் புலவரைக் கடிந்ததும், கடிகை முத்துப் புலவர் தம் சொற்களுக்கு இனிய விளக்கம் கூறி அவரை மகிழ்வித்ததும் இலக்கிய நயத்துக்குச் சான்றாக நிலவி வருகின்றன.

கள்ளா—தேன் போன்ற சொற்களை உடையவனே; அகம்படியா—செருக்குப் படியாதவனே; காராளன்—யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அவ்வாறு கொடுப்பவன் ஆதலின் "கார்" ஆகிய மேகத்தையும் ஆள்பவன்; கம் ஆளன்—தலையுடன் கூடியவர்களாகிய மக்களை ஆள்பவன்; வள்ள—வள்ளலே; ஒட்டா தொட்டிய—சேராதவனையும் சேர்த்து வைத்து ஆட்சி செய்யும் ஆற்றல் படைத்தோய்; வாணியா—அறிவில், நீ, சரசுவதியையும் மிஞ்சியவன் என்று சொல்லலாமா?; உள்ளன் புலையன்—உள் அன்பு உலையாதவனே; நாமதாதா—மிகு புகழுடன் கூடிய கொடையாளியே; புன்கவடுகா—(புல் கவடுகா) அற்பமாகிய வஞ்சகத்தை உள்ளத்தில் அடக்கிவிடும் வன்மை நிறைந்தோய் ஆகிய கௌரி வல்லப அரசே என்று புலவர் ஏற்ற முறச் சொன்னதும் அரசர் உச்சி குளிர்ந்து உள்ளம் பூரித்து உவகையோடு பரிசில்களை வாரி வழங்கிப் புலவரை வழியனுப்பி வைத்தது வரலாறும் இலக்கியமும் வழங்கி வரும் செய்தி.

சேற்றூர்க் குறுநில மன்னர்:

சுந்தரராச பாண்டியன் என்ற சேற்றூர் மன்னர் தமிழார்வம் மிக்கவராகத் திகழ்ந்திருந்தார். தானே கவியெழுதும் வல்லமையும் இவருக்கு உண்டு. இராமசாமிக் கவிராயரும் முகவூர் கந்தசாமிக் கவிராயரும் இவரது அவையில் பல காலம் வாழ்ந்து தமிழை வளர்த்தனர்.

சீதக்காதி வள்ளல்:

ஷெய்கு அப்துல் காதர் மரக்காயர் என்பது இவரது பெயர். இவர் பெயரை உச்சரிக்கை இயலாமலே சீதக்காதி வள்ளல் என்று குறிக்கலாயினர். இவர் கிழவன் சேதுபதியின் அமைச்சராக இருந்தார் என்பர். தமிழ்ப் புலவர் பலரை ஆதரித்த இவ்வள்ளலின் நினைவாகச் சென்னைத் துறைமுகப் பகுதி சீதக்காதி நகர் என வழங்கி வருகிறது.

செட்டிநாட்டு வள்ளல்கள்:

ஆண்டிப்பட்டி குறுநில மன்னரான மு. சித. பெத்தாச்சி செட்டியார், முறையூர் பழ.சி. சண்முகம் செட்டியார், தமிழ் வள்ளல் தேவகோட்டை சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் ஆகிய பலர், தமிழ்ச் சங்கங்களையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்துள்ளனர். "செட்டிநாடும் தமிழும்" என்னும் நூலில் விவரம் காண்க.

தமிழ்ப் பல்கலைக் கழகமாகிய, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய ராஜா சர் அண்ணுமலை செட்டியார் ஏராளமான தமிழ்ப்புலவர்களை ஆதரித்தும்; பலவழிகளில் தமிழுக்கு ஏற்றம் தந்தும், தமிழ் இசை இயக்கத்தைத் தொடங்கிப் பெரும் எதிர்ப்புக்கிடையே அதை நிலைநாட்டியும் தமிழ் வரலாற்றிலும் தமிழர் வரலாற்றிலும் பெருவள்ளல் எனப் பெயர் பெற்றுள்ளார்.

டாக்டர் அழகப்பச் செட்டியார் திருவாங்கூர்ப் பல்கலைகழகத்தில் தமிழுக்குப் பேராசிரியக் கட்டில் ஏற்படுத்தியும், தமிழில் கலைக் களஞ்சியம் வெளிவர முதல் நன்கொடை வழங்கியும் தமிழ் வளர்த்த வள்ளல்களுள் இடம் பெற்றிருக்கிருர்.

கலைத்தந்தை கருமுத்து தியாராசச் செட்டியார் மதுரையில் தமிழுக்கு ஏற்றம் தரும் தியாகராசக்

கல்லூரியை நிறுவியும் மகாமகோபாத்தியாய பண்டித மணி கதிரேசச் செட்டியார், புலவர் வரத நஞ்சயப்ப பிள்ளை போன்ற புலவர்களை ஆதரித்தும் உள்ளார், தூய தமிழ் நடையில், 'தமிழ் நாடு' என்ற நாளிதழை இவர்கள் மதுரையில் நடத்தினார்கள்.

நாட்டார் சமூகப் பெருமகனும் மாவட்டக் கழகத்தின் தலைவராக இருந்தவருமான பாகனேரி சி. உ. சுப. உடையப்பா, நாவலர் வேங்கடசாமி நாட்டாருக்குப் பேராதரவு கொடுத்தார். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அமைய இவரும் இதே பாகனேரி ஊரினரான காசி விசுவநாதன் செட்டியாரும் பெரிதும் உதவியுள்ளனர்.

மடங்கள் :

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் தொன்று தொட்டு ஈழநாட்டிலும் இந்தியாவிலும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்திருக்கிறது. இப்போது தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் இதழ்கள் நடத்தியும், சங்கங்கள் நிறுவியும் பாரிவிழாக் கொண்டாடியும் நாடெங்கும் மேடைதொறும் நல்ல தமிழில் முழங்கியும் தமிழ்ப் புலவர் சிலரை ஆதரித்தும் வருகிறார்.

கோவிலூர் மடம் நூறு ஆண்டுகளாக வேதாந்த நூல்களை வெளியிட்டு வந்திருக்கிறது. இப்போது இம் மடத்தின் தலைவராக உள்ள இராமநாத ஞானதேசிகர் ஏற்கெனவே திருவண்ணாமலையில் அருணகிரி நாதர் விழாவை மூன்றுநாட் பெருவிழாவாகஆக்கிய சிறப்புக்கு உரியவர்கள். கோவிலூர் மகாசந்நிதானமாக இவர்கள் பதவி ஏற்ற பிறகு கோவிலூர் மடத்தில் தமிழ்ப் புலவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்திருக்கிறார்கள்.

திருப்பூவணம் வேதாந்த மடாலயம் நிறுவி 1970-இல் பரிபூரண மடைந்த காசிகாநந்த ஞாநாச்சார்ய சுவாமிகள் தமிழிலும் வடமொழியிலும் பல அரிய நூல்களை ஆக்கியுள்ளார்கள்.

புலவர்கள்:

சங்கால முதல் பெரும் புலவர்கள் இங்கு இருந்திருக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடிய கனியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்ற நாடு திருப்பத்தூர் வட்டத்தில் மகிபாலன்பட்டிப் பகுதியாகும்.

நல்லிசைப் புலமை மெல்லியலாராகிய மாசாத்தியார் என்னும் பெண் பாற் புலவர் சிவகங்கைப் பகுதியிலுள்ள ஒக்கூர் ஊரினர்.

பரிமேலழகர் இதே ஒக்கூரில் தலைவராக வாழ்ந்தவர் என்றும் பாண்டிய நாட்டு அரசரால் சிறப்புச் செய்யப் பெற்றவர் என்றும் கருதப்படுகிறது.*

நற்றிணையில் பாடியுள்ள நால்லந்தையார் திருக்கோட்டியூர் ஊரினர்.

தமிழ் இனத்துக்குப் பெருமை தரும் சிலப்பதிகாரக் காவியத்தின் தலைவியாகத் திகழும் கண்ணகி, தமிழ்ப் புலமை உள்ளவள் என்பது 'கண்டகம் பற்றி' எனத் தொடங்கும் யாப்பருங்கல விருத்தியிலுள்ள பாடலால் தெரியும். கண்ணகிக்கு நாட்டரசன் கோட்டையில் கோவில் உள்ளது.

---

* ஆதாரம்—மு. அருணாசலம்; தமிழ் இலக்கிய வரலாறு 13-ஆம் நூற்றாண்டு—பக்கம் 67.

கம்பரி சமாதி நாட்டரசன் கோட்டையில் இருக்கிறது. கம்பன் காவியத்தை எரிக்க வேண்டுமெனக் கிளர்ச்சி நடந்துங்கூட, அதை நிலைநாட்டி இந்துக்கள் அல்லாத பிற சமயத்தாரும் அந்த இலக்கியத்தைப் பயிலவும் பாராட்டவும் செய்த பெருமை காரைக்குடி கம்பன் கழகத்துக்கு உண்டு. காரைக்குடி அருகே கம்பனூர் என்னும் ஊர் இருக்கிறது.

இராசசிங்கமங்கலத்துக்கு அருகே ஒட்டக்கூத்தர் பிறந்த மலரி இருக்கிறது. இவ்வூரில் புகழ் பெற்ற காளி கோவில் ஒன்று இருக்கிறது. 'காளி ஒட்டக் கூத்தன்' என்ற வழக்கு உண்டு,

கீழக்கரை உமறுப் புலவர் 17-ஆம் நூற்றாண்டில் அத்தர் வியாபாரிகளின் குடும்பத்தில் பிறந்தார். இவர் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளும் கலந்த சீறாப்புராணம் என்னும் நூலைச் செய்தார்; அன்றியும் நொண்டி நாடகங்கள், முதுமொழிமாலை என்னும் நூல்களையும் இயற்றினார்; இவரது கல்லறை எட்டைய புரத்தின் தென்கோடியில் உள்ளது.

ஆசாரக்கோவை ஆக்கிய புலவர் முள்ளியார் பிறந்த பெருவாயில் என்ற ஊர், தேவிபட்டினத்திற்கு அருகே உளது.

மழவராயனேந்தலில் பிறந்த மழவை மகாலிங்க ஐயர் மாகவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாருடன் நட்புள்ளவர். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் 1847-இல் சென்னையில் அச்சிற் பதிப்பித்தார். அருணசல புராணத்திற்கு உரை எழுதினார். இலக்கணச் சுருக்கம் என்னும் நூலை 1879-ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

மீனாட்சி சுந்தரக் கவிராயரின் ஊர் முகவூர். சேற்றூர் மன்னரிடம் புலவராக இருந்த கந்தசாமிக் கவிராயரின் மகனார் இவர். தந்தையாரிடத்தில் கல்வி பயின்றார். எட்டையபுரம் அரசரிடத்தில் வித்துவானாக இருந்தார். காவடிச்சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் இவருடைய மாணவர்.

முருகனைப்பற்றிச் சிறந்த பாடல்களைப் பாடித் தமிழ் இலக்கியத்தில் நிலைத்த இடம் பெற்றுள்ள பாம்பன் குமர குருதாச சுவாமிகள் இம்மாவட்டத்துப் பாம்பன் ஊரினர்.

முதுகுளத்தூர் சரவணப் பெருமாள் கவிராயர் முத்துராமலிங்க சேதுபதியின் அவைப் புலவராக இருந்தார். சேதுபதியமைச்சர் முத்திருளப்பப்பிள்ளைமீது காதல் பிரபந்தம் பாடினார். பணவிடு தூது, அசுவமேத யாகபுராணம், விநாயகர், திருமுக விலாசம் என்னும் நூல்களை இயற்றினார், இவர் பாடிய "ஆரடி வீதியில்" என்னும் பாட்டு இனிமையுடையது என்பர்,

இந்நூற்றாண்டில் வாழ்ந்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரிலிருந்து இன்று வாழும் நாமக்கல் கவிஞர் வரை தமிழ் நாட்டுப் பெருங் கவிஞர் அனைவரும் இம்மாவட்டத்தில் செட்டி நாட்டுப் பகுதியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களே. விவரம் 'செட்டி நாடும் தமிழும்' என்னும் நூலில் காண்க.

பாடுவார் முத்தப்பர், வன்றொண்டர், சொக்கலிங்க ஐயா, மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்ற பண்டிதமணி கதிரேசச் செட்டியார் ஆகிய புலவர்கள் இம்மாவட்டத்தினர்.

இன்று தமிழ் நாடு போற்றும் பெரும் கவிஞரான கவியரசு கண்ணதாசன், தமிழ்க் கடல் ராயசொ, கம்பன்

கழகம் சா. கணேசன் ஆகியோரும் இம்மாவட்டத் தினரே.

புதுமைப் பதிப்பகம், தமிழ்ப் பண்ணை, புக்ஸ் இந்தியா, தமிழ்ப் புத்தகாலயம், ஸ்டார் பிரசுரம், சாநதி நூலகம், வானதி பதிப்பகம், பாரதி பதிப்பகம், இன்ப நிலையம் அருணோதயம், செல்வி பதிப்பகம் முதலிய பல பதிப்பாளர்கள் இம்மாவட்டத்தினரே.

தமிழ் இதழ்களைத் தொடங்கி இம்மாவட்டத்தார் பலர் தமிழுக்கு ஏற்றம் தந்திருக்கின்றனர். சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை, விபுலாநந்த அடிகள் ஆகியோர் கட்டுரைகளை முதலில் வெளியிட்டது இம்மாவட்டத்துக் குமரன்.

தலைசிறந்த தமிழ் எழுத்தாளர் பலர் இம்மாவட்டத்தினர். சுத்தானந்த பாரதியார், கவிஞர் முடியரசன், இளையாங்குடி அப்துல் ரஹ்மான், சென்னை இலயோலாக் கல்லூரியில் வீரமாமுனிவர் கழகங் கண்ட இராச கம்பீரம் தவத்திரு வி. எம், ஞானப்பிரகாசம் பாதிரியார் ஆகியோரும் 1972-ஆம் ஆண்டில் சாகித்திய அக்கடமியின் பரிசை 'சமுதாயவீதி' என்ற தமது நாவலுக்காகப் பெற்ற 'தீபம்' ஆசிரியர் நதிக்குடி நா. பார்த்தசாரதியும் இம்மாவட்டத்தினரே. லெனின் வாழ்க்கை வரலாற்றை எழுதி 'சோவியத் நாடு' பரிசுபெற்ற எழுத்தாளர் அ. லெ. நடராசன் முதியோர் கல்வித் திட்டப் பரிசுகள் பல பெற்ற கவிஞர் நாக முத்தையா ஆகியோரும் இம்மாவட்டதினரே.

சேற்றூரிக் குறுநில மன்னரான சிவப்பிரகாச திருவநாதத்துரையின் வள்ளன்மையைப்பற்றி, சுவையான நிகழ்ச்சிகளை டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர், நினைவு மஞ்சரியில் குறிப்பிட்டுள்ளார். இந்த மன்னரின்

அவைக்களப்புலவரான சேற்றூர் அருணாசலக்கவிராயர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து கொண்டு, தமிழ்ப் பணி புரிந்தார்.

பிரயாண இலக்கியத்தின் தந்தையான ஏ. கே. செட்டியார், இந்தியாவில் வேறு எந்த இதழ்களையும்விடக் கூடுதலாக விற்கும் 'குமுதம்' ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை ஆகியோர் முறையே கோட்டையூர், கானாடுகாத்தான் ஊரினர்,

இலங்கையில் 'வீரகேசரி' என்னும் நாளிதழைத் தொடங்கிய வீரகேசரி என்னும் சுப்பிரமணியன் செட்டியார் ஆவணிப்பட்டியைச் சேர்ந்தவர்.

'சுதேசமித்திரன்' நாளிதழ் வளர்ச்சியிலும் இம்மாவட்டத்தாருக்கு முக்கியமான பங்கு உண்டு.

இலக்கியக் கழகங்கள்:

சாத்தூர்த் தமிழ்ச் சங்கம்

1920-ஆம் ஆண்டில் திரு. டி. எஸ். கந்தசாமி முதலியார் முயற்சியால் சாத்தூர்த் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டது. இத்தமிழறிஞர் சிவஞானபோதம், திருக்குறள் வகுப்புக்களை நடத்திவந்தார்.

கம்பன் கழகம், காரைக்குடி

மொழி, கலை, பணியை இலட்சியமாகக் கொண்டு 1939ல் தோன்றியது கம்பன்கழகம். சாதி, மதம், கட்சி வேறுபாடு இன்றிச் செயல்படுவது. "கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்" என்பது கழகத்தின் தலையாய குறிக்கோள்.

ஆண்டுதோறும் கம்பன் திருநாள் முறையாகக் கொண்டாடப் பெறுகிறது. ஒவ்வோராண்டும் பங்குனி

மாதம் குறிப்பிட்டநாளில் விழா நிகழும். பங்குனி மகம், பூரம், அஸ்தம் ஆகிய மூன்று நாட்களில் விழா காரைக்குடியில் நடைபெறும். இராமவதாரம் என்னும் கம்பராமாயணம் அரங்கேற்றிய அஸ்த நட்சத்திரத் தன்று நாட்டரசன் கோட்டையிலுள்ள கம்பன் சமாதிக் கோயிலில் நான்காம் நாள் விழா நடைபெறும்.

எல்லா நிகழ்ச்சிகளிலும் எவ்வித வேறுபாடுமின்றி அறிஞர்கள் பங்கு பெறுகின்றார்கள். இயல், இசை நாடகம் ஆகிய முத்தமிழ்த்துறை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இந்நிகழ்ச்சிகளை உள்நாட்டு வெளிநாட்டு ரேடியோக்கள் அஞ்சல் செய்கின்றன.

சென்ற முப்பத்து நான்கு ஆண்டுகளாக வெளி யிடங்களில் கொட்டகை போட்டு இத்திருநாள் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. இவ்வாண்டுமுதல் பல லட்சரூபாய் செலவில் அமைந்துள்ள கம்பன் மணி மண்டபத்தில் திருநாள் நடைபெறும்.

கம்பன் கழகத்தின் குறிக்கோள் பலவும் சிறப்புற நிகழ 'கம்பன் அறநிலை' என்ற பெயரில் ஒரு நிறுவனம் தொடங்கப் பெற்றுள்ளது. அதன் தண்ணிழலில் கம்பன் கழகமும், அதன் பழைய, புதிய பணிகளும் வளம்பெறும்.

கம்பன் மணிமண்டபம் எழும்பவும், அதனைச் சார்ந்து நூலகம், ஆராய்ச்சிக்கூடம், கல்விமுதலியன மலரவும் அறவுணர்வுடைய நல்லன்பர்கள் பேராதரவு காட்டி வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் இஃதோர் இனிய தமிழ்ப் பண்ணையாய்ப் பயன் சுரக்கத் தொடங்கிவிடும்.

கம்பன் மணிமண்டபம் 200×130 அடி அளவின தாகும். சுமார் 5000பேர் அமர்ந்து கம்பன் புகழ் பருகி மகிழலாம்.

இதுவரை செய்த ஆராய்ச்சியின் பயன்கள் பல புத்தகங்களாக விரைவில் வெளிவரக்கூடும்.

தமிழ்த்தாய் திருக்கோயில், தமிழியல் கல்லூரி ஆகிய இரண்டின் கட்டட வேலை அடுத்த ஆண்டில் தொடங்கும்.

இக்கழகத்தை நிறுவி இதன் உயிர்நாடியாக இருந்து வருபவர், இதன் செயலாளர் திரு. சா. கணேசன் ஆவார்.

விருதைத் தமிழ்க் கழகம்

இது 1946—இல் 'தமிழ்த் தென்றல்' ஆசிரியர் திரு. வே. வ. இராமசாமியால் அவரது வணிக நிலையத்தில் ஏற்படுத்தியுள்ள தமிழ் வளர்ச்சி மகமையில் சேரும் தொகையை உருபொருளாகக் கொண்டு நிகழ்ந்து வருகிறது.

காந்தி கலை மன்றம்

இராஜபாளையம் காந்திகலை மன்றம் திருக்குறள் வகுப்பும் தமிழ்ப் புலவர் புகுமுக வகுப்பும் நடத்தி வருகிறது.

காரைக்குடித் தமிழ்ச்சங்கம்

9-11-1969இல் தோற்றம் பெற்றது.

சங்கத்தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கம். சங்கச் செயலாளர் மா. அ. ஞானசேகர பாண்டியன். உறுப்பினர்கள் அறுபதின்மர். புரவலர்கள் முப்பத்தைவர்.

திங்களுக்கு ஒரு சொற்பொழிவு என்ற முறையில் சங்க இலக்கியம் பற்றியும் சீவகசிந்தாமணி பற்றியும் இதுவரை 23 தலைப்புக்களில் பல தமிழறிஞர் சொற்பொழிவு செய்துள்ளனர். இவை நூல்வடிவில் வெளியிடப் பெறும். பல்வேறு கடைகளில் உள்ள விற்பனைப் பொருள்களுக்கு எளிதான நல்ல தமிழ்ச் சொற்களைக் கழகம் தொகுத்தும் ஆக்கியும் வருகின்றது. தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்கு ஆத்திசூடி; கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலான முழு நூல்களைப் போட்டி நடத்திப் பரிசு வழங்குகின்றது. இவ்வகைப் போட்டிகளைக் கல்லூரிகள்வரை நாடு முழுதும் நடத்தத் திட்டமிடுகின்றது.

இந்தியப் பல் தமிழ்க் கழகம்:

தலைவர்: டாக்டர் வ. சுப. மாணிக்கம்

செயலர்: இராம பெரிய கருப்பன்.

இக்கழகத்தின் சார்பில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப் பெற்ற இராமசாமி தமிழ்க் கல்லூரி 1968 முதல் நடைபெற்று வருகின்றது. இலக்கிய வகுப்புக்கள் நடைபெற்றன. இளமணி, பெருமணித் தேர்வுகள் எழுதியவர்கட்கு அந்தப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. நற்பயிற்சி என்ற வகுப்பு நடைபெற்றது. அப்பயிற்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

திருக்குறள் கழகம்

காரைக்குடி திருக்குறள் கழகம் 1953 முதல் திருக்குறளைப் பெரிதும் பரப்பி வருகிறது.

காரைக்குடிப்பகுதியில் பல ஆண்டுகளாகப் பட்டி மன்றங்களும் கவியரங்கங்களும் பல்கிப் பெருகியுள்ளன. இன்று தமிழ் நாடெங்கும் பரவிக் காணப் பெறும் இத்தகைய தமிழ் உணர்ச்சிக்கு இம்மாவட்டம் வித்திட்டது என்று சொல்வது மிகையாகாது.

இலக்கியம் பெற்ற ஊர்கள்:

திருப்பூவணம் ஓர் உலாவையும், நாட்டரசன் கோட்டை ஒரு பள்ளுவையும், குன்றக்குடி ஒரு கலம்பகத்தையும், பல ஊர்கள் தக்க புலவர்களின் புராணங்களையும் பெற்றுள்ளன.

கல்வெட்டுக்கள்:

தமிழ்க் கல்வெட்டுக்களை அரசினர் பெருஞ் செலவு செய்து, படி எடுத்த பிறகு மூன்று தொகுதிகளை மட்டும் வெளியிட்டு அந்தப் பணியை நிறுத்தினர். அப்போது சென்னை இராசதானியின் சட்ட மேலவையின் துணைத் தலைவராய் இருந்த இராமநாதபுரம் சேதுபதியின் முயற்சியால் கல்வெட்டுக்களின் படிகள் (விளக்கம் இன்றி மூலம் மட்டும்) அரசினரால் அச்சிடப் பெற்றன.

மிகப் பழமையானத் தமிழ்க் கல்வெட்டு, பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர் கோவில் கருவறையில் உள்ளது. இதைப்பற்றி இதுவரை நடந்த உலகத்தமிழ் மாநாடு மூன்றிலும் ஆராயப் பெற்றிருக்கிறது.

ஊர்ப் பெயர்கள்:

இம்மாவட்டத்தில் பல ஊர்களின் பெயர்கள் பழந் தமிழர் வீரத்திற்குச் சான்றாக உள்ளன.

இந்நாளில் மகாவீரச் சக்கரம் முதலிய சிறப்புக்களும் நிலக்கொடையும் போர் வீரர்களுக்கு வழங்கப் பெறுகின்றன. சங்க கால அரசர்கள் படைத்தலைவர்

களுக்கு ஏனாதி, எட்டி என்ற பட்டங்களை நல்கினர். அவர்களுக்கு முற்றூட்டாக விடப்பட்ட ஊர்கள் இப்பட்டங்களால் வழங்கின. இம்மாவட்டத்தில் தொன்று தொட்டு வீரர் இருந்ததற்குச் சான்று பகரும் ஊர்களாவன;

ஊர்ப் பெயர்	வட்டம்
ஏனாதி	முதுகுளத்தூர்
ஏனாதி	பரமக்குடி
ஏனாதி ஏனாதி கோட்டை }	சிவகங்கை
எட்டிச்சேரி	முதுகுளத்தூர்
எட்டிச்சேரி எட்டி வயல் }	பரமக்குடி
எட்டிக்குடி	சிவகங்கை
எட்டியார் ஏந்தல்	சிவகங்கை
எட்டியார்குடி	திருவாடானை

இராமநாதபுர மாவட்டத்தில் இசையும் கூத்தும் புலமையும் இலங்கும் திறமும் ஊர்ப் பெயர்களில் தெரிகிறது.*

அம்பலத்தாடி	அருப்புக்கோட்டை
குறையற வாசித்தான் மருதன்குடி }	,,
கூத்தனேந்தல்	,,
கூத்திப்பாறை	,,
பாடுவானேந்தல்	,,

---

*ஆதாரம் : டாக்டர் ந. நஞ்சீவி எழுதிய கட்டுரை Annals of Oriental Research, University of Madras, Volume XXII — Part I, 1968.

இதம்பாடல்	முதுகுளத்தூர்
கூத்தாடியேந்தல்	,,
கூத்தமங்கோட்டை	,,
பாடுவாரேந்தல்	,,
பாடுவானேந்தல் (1)	,,
பாடுவானேந்தல் (2)	,,
புலவனேந்தல்	,,
வள்ளம்பாடல்	,,
புலவன் குட்டம்	பரமக்குடி
புலவர் வேலங்குடி	,,
கதைக்குளம்	இராமநாதபுரம்
கதைக்குளம் } கொடிக்குளம் }	,,
சித்தாலங்குடி } கூத்தாடியேந்தல் }	சிவகங்கை
கூத்தக்குடி	,,
கூத்தாண்டான்	,,
கூத்தணி	,,
கூத்தன் குடி	,,
பாணனேந்தல்	,,
பாணன் பரணன்	,,
பொய்யாமொழியேந்தல்	,,
புலவனேந்தல்	,,
புலவனேரி	,,
புலவன் வயல்	,,
புலவர் மருதங்குடி	,,
கல்லல்	திருப்பத்தூர்
கம்பனூர்	,,
கூத்தக்குடி	,,
கூத்தனூர்	,,

பாணன் வயல் (1)	,,
பாணன் வயல் (2)	,,
புலவ மங்கலம்	,,
புலவன் பட்டி	,,
அழியாமொழி (1)	திருவாடானை
அழியாமொழி (2)	,,
இலக்கணிவயல்	,,
கம்பன் குடி	,,
கூத்தகுடி	,,
கூத்தனேந்தல்	,,
பாணனேந்தல்	,,
பண்டிதன் வயல்	,,
பண்ணளம்	,,
பண்ணூரேந்தல்	,,
பெருமாள் கூத்தன் வயல்	,,
பொய்யாமொழி (1)	,,
பொய்யாமொழி (2)	,,
புலவன் வயல்	,,
வாயுள்ளானேந்தல்	,,
வாயுள்ளான் வயல்	,,
வடகூத்தன் பட்டி	,,
கூத்தப்பாடி	,,

திருவாடானை வட்டத்தில் இலக்கணிவயல் என்று ஓர் ஊர் இருப்பது இலக்கணத்தின் அருமை பெருமை காட்டும்.

அருப்புக்கோட்டை வட்டத்தில் குறையறவாசித் தான் மருதங்குடி என்று ஓர் ஊரின் பெயர் இருப்பது உள்ளம் உருக்குகிறது. கல்லே இல்லாத ஓர் ஊரின் பெயர் கல்லல் என்றிருப்பது கற்றலைக் காட்டும். கம்பனூர்

தமிழ்ப் பெரும் கவிஞர் பெயரைத் தாங்குகிறது. பொய்யாமொழி, தஞ்சைவாணனைப் பாடிய பொய்யா மொழியார் புகழைப்பாடுகிறது.

பேச்சு வழக்கு:

இம்மாவட்டத்தில் வழக்கொழிந்த இலக்கியச் சொற்கள் நின்று நிலவுகின்றன. விவரம் இந்நூலாசிரியர் எழுதிய 'செட்டி நாடும் தமிழும்' என்னும் நூலில் காண்க. மேலும் சில சொற்களைக் கீழே தருவோம். இவற்றை 'தென்மொழி' இதழ் வாயிலாகத் தொகுத்து அனுப்பியவர், திரு. சே. கோச்சடை, 45, பாரதி தெரு; கல்லல்.

நலியாமல்-பிறர் அறியாமல்-அமைதியாக. (in a silent way).
ஒச்சம்-குறைபாடு, கோளாறு.
கொளுகுதல்-திரட்டுதல், ஆயத்த மாக்குதல்.
தளுக்கு-நெல் மணிகளைப் பிரித்தபின் பிணையல் (கடா) விடாமல் உள்ள தாள்.
செண்டு - சூள்; குப்பை (நெற்றாள்களின் கழிவு)
ஆலாட்டுப்பதம்-அவித்த நெல்லைக் காய வைக்கவேண்டிய பதம்.
நோண்டுதல்-சீண்டுதல்.
ஏத்தனம்-ஏனம், பண்டம்.
ஏலுதல்-இயலுதல் (ஈழ வழக்கு)
மூண்டை-தாலியறுத்தவள்; போக்கிலி, அறிவிலி.
பேமாளம்-கிறுக்கு.
மினுங்குதல்-வளர்ச்சியுறல்; தெளிவுறல்; மிளிர்தல்.
பல்லயம்-தெய்வத்திற்குப் படைக்கப்படும் உணவு; தேவுறு படையல்.

கட்டாயம்-சுவர் கட்டும் பொழுது இடையிடையே தடுப் பாகச்சிறு தூண் போல், சுவரளவை விடக் கனமாகக் கட்டுதல்.

கொன்றை-சுவரெழுப்பும் பொழுது முன் கூட்டியே கட்டிவைக்கப்படும் சுவரின் மூலைக்கட்டு.

தொளி உழவு-நீர் பாய்ச்சி நீருடன் உழுதல்.

புழுதி (உழவு) - காய்ந்த மண்ணை உழுதல்.

பார்-பெரிய பாத்தி.

மிதியடி-செருப்பு; காலணி.

இம்மி-மிகச்சிறிய.

வெள்ளென-விரைவாக; அதிகாலையில்.

நிமிண்டுதல்-தூண்டிவிடுதல்; சீண்டுதல்.

நீரக்க-நீர்நிறையுமாறு; (Liqufying).

எலியோடி-(கூரை) வீடுகளில் தூண்களின் மேல் கை மரங்களைத் தாங்கிக் கொண்டு நிற்கும் மரம்.

இலிங்காவிட்டம்-கைமரங்கள் இணைக்கப் பெற்ற முகட்டுவளை.

மக்கிட்டுக்கட்டாக-இறுக, பறித்துக் கொள்ள இயலாத வாறு மார்புறக் கைகளால் கட்டிக்கொள்ளுதல்.

சொச்சம்-மிச்சம்; மீதி:

வாணம்-வீட்டின் அடித்தளத்திற்காக வெட்டப்படும் பள்ளம்-கடைக்கால்.

ஊமச்சி-நத்தை இனத்தைச் சார்ந்த சிறிய நீர்வாழ் உயிரி.

தூரி : மீன்பிடிக்கும் வலை. வாய் அகன்று அடி சிறுத்தும் அடிப்பாகம் திறக்க இயல்வதாகவும் உள்ளது. நீரோடும்பொழுது மீன்பிடிக்க உதவும்.

மூட்டுதல்-பொறுத்துதல்-தைத்தல்.

பரி-மீன்பிடிக்கும் கருவி. ஈர்க்குகளால் கட்டப்பெறுவது; வாய் அகன்றும் அடிமூட்டப்பெற்றும் உள்ளது தூரி போன்று மீன்பிடிப்பது.

ஊத்தா : தூரிபோன்ற அமைப்புடையது. பின்புறம் திறவையாக உள்ளது.

பாச்ச வலை-மீன் பாய்ந்து சென்று வலையில் மாட்டிக் கொள்வதால் பாய்ச்சல் வலை என்று பெயர் பெற்றுப் பின் பாச்சவலை என மருவியிருக் கிறது.

சன்னக் கெண்டைவலை-சன்னமான சிறு மீன்கள் பிடிக் கும் வலை; இரண்டும் ஒரே அமைப்பின.

பிசினாரி-கஞ்சன்; விடாக் கண்டன்.

சின்னங்கு, சல்லிசு-சவுகரியம்.

மணிக்கூடு-நாழிகை வட்டில் (ஈழ வழக்கு)

மணிக்கட்டை-வலை மிதப்பதற்காக மேலே கட்டப்படும் மரக்கட்டைத் துண்டுகள்; பெரும்பாலும் எருக் கிலைத்தண்டு கோக்கப்படும்.

மணிக்கால்-வலையின் அடிப்பகுதி நீரில் அமுங்குவதற் காகக் கோர்க்கப்படும் சுடப்பட்ட மண் உருண் டைகள்.

சரடு-கொடி, நூல் (தாலிச்சரடு).

கருகமணி-கரிசமணி-மணமாகாப் பெண்டிர் கழுத்தில் அணியும் மணிக் கோவை.

ஒண்ணப்பூ - காதின் மேற்பகுதியில் (S வடிவத்தில்) அணியப் பெறும் அணி. (ஒள் நற்பூ).

பூடி - காதின் மேற்புறத்தில் (குச்சிபோன்ற வடிவம்) அணியப்பெறும் அணி.

தோடு, தடுப்பு - காதின் அடிப்புறம் அணியப்பெறும் வட்டமான அணி. கடுக்கன் - ஆண்களது காதணி.

மாராயம் - பெண் பூப்பெய்தியதை அறிவிக்கும் மங்கலச் செய்தி.

பாக்கு மாற்றுதல் - பெண் வீட்டாரும் மணமகன் வீட்டாரும் திருமண ஒப்புதலுக்கு அறிகுறியாக வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ளும் சடங்கு [நிச்சய தாம்பூலம்] (நாள்வைத்தல்)..

கெட்டி மேளம் - இடைவிடாமல் தட்டப்பெறும் மேளம்

வீடு அறிதல் - மணமானபின் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்கள் பெண் வீட்டிற்கும், பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கும் வந்து வீட்டை அறிந்து கொள்ளல்.

கேதம் - இழவுச் செய்தி.

சடலை, சல்லை - துன்பம்; தொல்லை.

ஆக்கினை - சின்னு பின்னம் செய்தல்; தண்டனை.

முண்டு - மரக்கட்டை.

சிணுக்குதல் - புனைதல்;

சீப்பட - சீரழிய.

உடையடித்தல், காயடித்தல் - ஆடு மாடுகளுக்குள்ள விந்துப் பையைச் சிதைத்தல்.

பிளுத்துதல் - பிதற்றுதல்.

கடுப்பு - கவை போன்றது, உடையடித்தலுக்குப் பயன் படும்; பாளையை நசுக்கிப் பதநீர் இறக்க உதவும்.

கடுப்பு - எரிச்சல்,

கூட்டிக் கொண்டுவா என்று நெல்லை முதலிய மாவட்டங்களில் சொல்லுவதை, இங்கு 'கூட்டிவா' என்று சுருங்கக் கூறுவர்.

உடைமை எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள, உங்களுக்கு எத்தனை ஏக்கர் இருக்கிறது என்று மதுரை மாவட்டத்திலும், எத்தனை வேலி உண்டு என்று தஞ்சை மாவட்டத்திலும், எத்தனை கோட்டை விதைப்பாடு இருக்கிறது என்று நெல்லை மாவட்டத்திலும் கேட்பர். எத்தனு நடவு இருக்கிறது என்று இராமநாதபுர மாவட்டத்தில் கேட்பர். இது 'எத்தனை ஆள் நடவு' என்பதன் சிதைவு. ஓர் ஆள் நடக்கூடியது 15 சென்ட் நிலம்.

விருதுநகர்ப் பகுதியில் வழங்கும் தமிழ், பெரும் பாலும், நெல்லை மாவட்டத் தமிழே.

அங்கு சுண்ணும்புக் காளவாய் என்பதைச் சுண்ணும்புக்காளவாசல் என்றும் செங்கல் சூளை என்பதை செங்கல்மால் என்றும் கூறுவர்.

கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியில் பேச்சுத் தமிழில் யாழ்ப்பாண மணம் கமழும். பழந்தமிழ்ச் சொற்களும் விரவியிருக்கும். சான்று; 'என்ன தோழமை வாங்கிலே இரிங்கி வாங்கிலே' என்பது நீண்ட நாற்காலிப் பலகையைக் குறிக்கும். பெட்டகத்தைப் பொட்டுவம் என்பர்.

பிற சிறப்புக்கள்:

தாலாட்டும் ஒப்பாரியும் நாட்டுப் பாடல்களும் இம்மாவட்டத்துக்கு வருபவர்களின் மனத்தை ஈர்ப்பன.

காளையார்கோவில் போர் பற்றி 1800-இல் கிராமியப்பாடல்.

'காளையார் கோவிலின் கர்னல் துரையவன்
காட்டைக் கடந்து செங் கோட்டைவந்து
நீள வளர்ந்திட்ட நாணலுக் குள்ளே
நெருங்கிப் பதுங்கிக் கிடக்கிறுன்பார்!'

பழமொழிகள்:

(1) விருதுபட்டிக்குப் போகிற சனியனை வீட்டு வாசல்வரை வந்து விட்டுப்போ என்பானேன்? (வழியில் செல்லும் வம்பை விலைக்கு வாங்குவானேன்? என்ற பொருளில்.)

(2) ஊருக்குக் கடைசி உலகம்பட்டி.

(3) குன்றக்குடித் தேவடியாளுக்கு நின்றுப் போலே பயணம்.

(4) ராமேசுவரத்துக்குப் போகிறபோது பாம்பனுறு குறுக்கிட்டால் போல.

(5) வேற்றூர் அரிசியும் வேற்றூர் விறகும் உண் டானல் சாத்தூரைப் போல ஊராகுமா?

12. கல்வி நிலை

இம்மாவட்டம், இந்திய விடுதலைக்குப் பின்னரே கல்வித்துறையில் வளர்ச்சி பெற்று வருகிறது. 1947க்கு முன்பு இம்மாவட்டத்தில் கல்வி பெறவேண்டுமென்று விரும்பியவர்கள் மிகக்குறைவு. அவ்வாறு விரும்பியவர்கள் வெளிமாவட்டங்களிலும் இலங்கையிலும் ஏனைய வெளிநாடுகளிலுமே கல்வி கற்று வந்தனர்.

கல்வித் துறையில் இராமநாதபுரம் பிற்பட்ட மாவட்டமாக இருந்ததால் மருத்துவக் கல்லூரியிலும் பொறியியல் கல்லூரியிலும் இடம்பெற இராமநாதபுர மாவட்டத்திலிருந்து ஒரு சில மாணவர் மட்டுமே மனுச் செய்தனர். எனவே தஞ்சை, சென்னை, திருநெல்வேலி போன்று கல்வித்துறையில் முன்னேற்ற மடைந்த மாவட்டத்து மாணவர்கள், இடம் பெறுவதற்காக தங்களை இராமநாதபுர மாவட்டத்தார் என்று மனுக்களில் குறிப்பிட்டு வந்தனர்.

தொடக்கக் கல்வி:

காமராஜ் ஆட்சியில் தொடக்கக் கல்வி மாநில மெங்கும் பெரிதும் பரவிற்று. பிற மாவட்டங்களை நோக்க இன்னும் இம்மாவட்டத்தில் தொடக்கக் கல்வி போதிய வளர்ச்சியடையவில்லை. பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பகல் உணவுத் திட்டம் ஏற்பட்டுங்கூட, முறையாகப் பள்ளிக்குச் செல்வதில்லை. வேளாண்மை வேலை நடைபெறாத நாட்களில் மட்டுமே அவர்கள் பள்ளிக்கு வருகின்றனர்.

உயர் நிலைப்பள்ளி:

மாவட்டக்கழகத்தார் நூறு உயர் நிலைப்பள்ளிகளை நடத்தி வருகின்றனர். தனியார் பள்ளிகளும் ஏராளமாக உள்ளன. இராமநாதபுரத்திலுள்ள ஸ்குவார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி தமிழ் நாட்டிலேயே மிகவும் பழமையான உயர் நிலைப்பள்ளிகளுள் ஒன்று. கத்தோலிக்கர் நடத்தும் பள்ளிகள் ஒரு சிலவே: அவையாவன, தே பிரித்தோ உயர் நிலைப்பள்ளி, தேவகோட்டை; புனித மேரி மகளிர் உயர் நிலைப்பள்ளி, தேவகோட்டை; புனித் அருளானந்தர் உயர்நிலைப்பள்ளி, ஒரியூர்; சேக்ரட் ஹார்ட் உயர் நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் அரசர்கள் தொடங்கிய உயர்நிலைப்பள்ளிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. செட்டிநாட்டில் பல உயர் நிலைப்பள்ளிகளைச் செல்வர்கள் நடத்தி வருகிறார்கள். இவற்றுள் காலத்தால் பழமையானது 1913-இல் காரைக்குடியில் தொடங்கப் பெற்ற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர் நிலைப்பள்ளி. புகழ் பெற்ற பிற பள்ளிகள்: பள்ளத்தூர்—அருணாசலம் செட்டியார் உயர் நிலைப்பள்ளி; ஆ. தெக்கூர்—ஸ்ரீ விசாலாட்சி கலாசாலை (உயர் நிலைப்பள்ளி); காரைக்குடி—ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர் நிலைப்பள்ளி; காரைக்குடி அழகப்ப செட்டியார் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் நன்முறை உயர் நிலைப்பள்ளி.

கல்வித்துறையில் விருதுநகர் தலைசிறந்து திகழ்கிறது.

சாதி, சமய வேறுபாடின்றி, ஏழை- பணக்காரன் என்ற பேதமின்றி, உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி

யளித்துத் தனிப்பெருமை பெற்று விளங்கும் க்ஷத்திரிய வித்தியாசாலை 1889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விருதைப் பிரமுகர்கள் வே. வன்னிய நாடார், L P. S. சண்முக நாடார், S. P. பொன்னப்ப நாடார், SV. P. N. சிதம்பர நாடார், வடிவேல் முருக நாடார் ஆகியவர்களின் சிறந்த முயற்சியால் ஒரு சிறிய தொடக்கப் பள்ளியாகத் துவக்கப் பெற்றது. பள்ளியின் வளர்ச்சிக்காக மக்கள் தாராளமாக நன்கொடையளித்தனர். உண்டியல் மூலமும் நன்கொடை வசூலிக்கப் பெற்றது. மக்கள் பிடி அரிசி கொடுத்து கல்வி நிலையங்களை வளர்த்தனர், இப்பள்ளி 1892-இல் நடுநிலைப் பள்ளியாகவும் 1902-இல் உயர் நிலைப் பள்ளியாகவும் வளர்ந்தது. 1895-ஆம் ஆண்டு நகரின் நடுவே மாளிகை போன்றதோர் கட்டிடம் கட்டப் பெற்றது. மாணவர்களின் எண்ணிக்கை நாளடைவில் அதிகமானதால் சுப்பிரமணிய வித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாசாலை, க்ஷத்திரிய வித்தியாசாலை என்ற மூன்று தொடக்கப் பள்ளிகள் நிறுவப்பெற்றன. 1956-ஆம் ஆண்டு மதுரை நெடுஞ் சாலையில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கென ஒரு புதிய கட்டிடம் கட்டப் பெற்றது. இப்பள்ளியில் தென்னிந்தியாவிலே மிகப்பெரிய S. P. கொத்தாள நாடார் விளையாட்டு அரங்கு (Stadium) 1959-ஆம் ஆண்டு கட்டப்பெற்றது. க்ஷத்திரிய வித்தியாசாலை ஆட்சிக் குழுவினர் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்தி, அதிலிருந்து கிடைக்கும் லாபத்தைப் பள்ளியின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்பள்ளியில் திரு. M. M. நாகலிங்க நாடார் தொழிற் பயிற்சிக்கூடமும், திரு. M A. பழனிச்சாமி நாடார் திறந்தவெளி கலை அரங்கும்,

திரு. ஆ. பழனிச்சாமி நாடார் — அமிர்தம்மாள் கலைக்கூடமும் நிறுவப்பெற்றுள்ளன. க்ஷத்திரிய வித்தியாசாலை மானேஜிங் போர்டாரால் நடத்தப் பெறும் பள்ளிகளில் சுமார் 4000 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

ஆண்கள் மட்டும் படித்தால் போதாது. பெண்களும் சிறந்த கல்வி பெறவேண்டும். "மாதர் அறிவை வளர்த்தால், உலகம் பேதமை அற்றிடும் காணீர்" என்று உணர்ந்த விருதுநகர்ப் பெரியோர்கள் 1910-ஆம் ஆண்டில் பெண்களுக்கென தனிப் பள்ளிகள் ஏற்படுத்தினர். க்ஷத்திரிய மகளிர் உயர் நிலைப் பள்ளி, க்ஷத்திரிய மகளிர் உயர் தொடக்கப்பள்ளி, வெள்ளைச்சாமி நாடார்—அண்ணாமலையம்மாள் உயர் தொடக்கப்பள்ளி என்ற பள்ளிகள் சீரும் சிறப்புடன் விளங்குகின்றன, இப்பள்ளிகளில் சுமார் 3000 சிறுமிகள் படித்து வருகின்றனர். பெண் கல்வியின் முன்னேற்றத்திற்காக உயர்திருவாளர்கள் தி. அ. திருவாலவாய நாடார், அ. பு. சங்கரலிங்க நாடார், அ. ச. கு. மாரிமுத்து நாடார், V. V. ராமசாமி நாடார், V. A. M. ரத்தின நாடார், V. N. M. S. அய்யாச்சாமி நாடார், A. S. S. S. சங்கரபாண்டிய நாடார், பெ. சி. சிதம்பர நாடார், வ. அ. கந்த நாடார் முதலியோர் மிகவும் சேவை செய்திருக்கிறார்கள். இப்பள்ளியில் சுப்பிரமணிய— பழனியம்மாள் ஞாபகார்த்த மாணவர் விடுதியும்; கலை அரங்கமும், V. A. M. ரத்தின நாடார் சித்திரக் கூடமும் கட்டப் பெற்றுள்ளன.

விருதுநகர் நகராட்சியினர் சி. ச. சுப்பையா நாடார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியையும், தங்கம்மாள் பெரியசாமி நாடார் நகராட்சி மகளிர் உயர் நிலைப்பள்ளியை

யும், பல தொடக்கப் பள்ளிகளையும் நிறுவி திறம்பட நடத்தி வருகின்றனர்.

விருதுநகர் ஹாஜி சையத் முகம்மது அவர்கள் ஒரு இலவச உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் விருதுநகரிலுள்ள இந்துக்களும், கிருஸ்தவர் களும், முகமதியர்களும் மற்றும் தனிப்பட்டோரும் பல கல்வி நிலையங்களை நிறுவி, சாதி மத வேறுபாடின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதியளித்து வரு கிறார்கள்.

சிவகாசி, சாத்தூர் போன்ற ஏனைய நகர்களிலும் தங்கள் சமூகத்தார் வாழும் ஒவ்வொரு சிற்றூரிலும் நாடார்கள் உயர்நிலைப் பள்ளிகளை அமைத்துக் கொண் டிருக்கிறார்கள். இராஜபாளையத்தில் ராஜாக்களும் அருப்புக் கோட்டையில் தேவாங்கர்களும் நல்ல உயர் நிலைப்பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். சில ஊர்களில் செல்வர்களுக்குள் போட்டி ஏற்பட்டு தேவைக்கு மேற் பட்ட உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன.

நகராண்மைக் கழகங்களும் பல உயர்நிலைப் பள்ளி களை நடத்தி வருகின்றன. அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவும், மாவட்டக் கழகத்தார் தொடங்கி இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் பள்ளிகளும் உள்ளன. இவை அனைத்தையும் ஒரே அமைப்புக்குள் கொண்டுவர வேண்டியது இன்றியமையாதது.

கல்லூரிகள்

1947 வரை இம்மாவட்டத்தில் ஒரு கல்லூரியும் ஏற்படவில்லை. அக்குறையை அந்த ஆண்டில் வள்ளல் அழகப்பர் போக்கினார்.

அழகப்பா கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி—3.

3-7-1947இல் அடையாற்றில் பெசண்டு அம்மையார் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஆ. இலட்சுமண சாமி முதலியார் 'புதிய கல்லூரிகள் நிறுவப் பலர் முன்வர வேண்டும்' என்று ஆர்வத்தோடு வேண்டுகோள் விடுத்தார். உடனே டாக்டர் அழகப்பா எழுந்திருந்து 'இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு கல்லூரி நிறுவு வேன்' என்று உரைத்தார். ஒரு திங்களுக்குள் 11-8-1947-இல் காரைக்குடியில் காந்தி மாளிகையில் கல்லூரி தோன்றிற்று.

ஓராயிரம் ஏக்கர் பரப்புள்ள காடுகள் வாங்கப் பெற்றன. அழகப்பர் அவற்றைக் காடழித்து நாடாக் கியதை,

"நரியிசைத்த காடு நகராய்ச் சிலம்பின்
வரியிசைக்கப் பள்ளி வகுத்தான்;-உரியசைத்துப்
பாம்பா டிடமெல்லாம் பந்தா டிடமாகும்
தாம்பாடு கன்னியர்க்குத் தாம்."*

என்ற பாடலால் அறியலாம்.

அதைத் தொடர்ந்து காரைக்குடி இரயில் பாதைக்கு அருகாமையில் கட்டிடங்கள் அணியணியாக எழுந்தன. உமையாள் விடுதி, வீரப்ப அம்மான் விடுதி, விசாலாட்சி விடுதி ஆகியவையும் கட்டப் பெற்றன.

கட்டிடங்கள் விரைந்து உருவானதைப் பின்கண்ட பாடலால் உணர்க:

" வெள்ளி விடியுமுன் வீறுசால் கட்டிடங்கள்
உள்ளும் உயரம் உயர்த்துவான்—நள்ளிரவும்

மின்விளக்கம் வைத்து மிகவிரைந்து கட்டினன்
பொன்விளக்கங் கண்ட புதிர்."*

புகுமுக வகுப்பு, பி. ஏ., (அரசியல், பொருளாதாரம்); பி. எஸ்ஸி., (கணிதம், பௌதிகம், வேதியல், தாவரம், உயிரியல், நிலவியல்), பி. எஸ்ஸி., (ஸ்பெஷல்), பி. காம்., எம். காம். எம். ஏ., (தமிழ்) வகுப்புக்கள் உள்ளன.

2300 மாணவர்கள் இக்கல்லூரியில் பயின்று வருகின்றனர். 35,000 நூல்கள் கொண்ட நூலகம் உளது.

கல்லூரி வட்டத்தில் பவநகர் விளையாட்டரங்கு அமைக்கப் பெற்றிருக்கிறது. வள்ளல் அழகப்பர் விருப்பப்படி இவ்விடத்திலேயே அவரது உடல் எரியூட்டி அடக்கம் செய்யப் பெற்றது. வள்ளலின் மகள் திருமதி உமையாள் இராமநாதன் இக்கல்லூரியின் செயலாளராக இருந்து வருகிறார். இவ்வாண்டில் கல்லூரி வெள்ளி விழாக் காணுகிறது.

விருதுநகர் ஹிந்து நாடார்கள்
செந்திக்குமார நாடார் கல்லூரி

1947-இல் கோவில்பட்டியில் நாடார் மகாஜன சங்க மாநாடு கூடியது. விருதுநகரில் கல்லூரி தொடங்க இரண்டு லட்சம் தருவதாக ராவ்பகதூர் எம். எஸ். பி. செந்திக்குமார நாடார் அறிவித்தார். அந்த ஆண்டிலேயே கல்லூரி தொடங்கப் பெற்றது. கல்லூரியை நடத்துவதற்கு விருதுநகர் ஹிந்து நாடார்களுக்குப் பாத்தியமான செந்திக்குமார நாடார் உயர்தரக் கல்லூரி பரிபாலன சபை பதிவு செய்யப்பெற்றது. இதன் பிறகு நாடார் சமூகத்தைச் சேர்ந்த பலருடைய

---

* கொடை விளக்கு-டாக்டர் வ. சுப மாணிக்கம்.

நன்கொடைகள் குவிந்தன. அருப்புக் கோட்டைச் சாலையில் வானுயர பல கட்டிடங்கள் எழுந்தன.

2,603 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். நிர்வாகிகளின் விடாமுயற்சியால் இக்கல்லூரி விரிந்து வளர்ச்சி அடைகிறது. கீழ்க்கண்ட வகுப்புக்கள் உள்ளன: புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ். சி; பி. காம்; எம். எஸ்ஸி; (கெமிஸ்டிரி), பிஎச். டி. (கெமிஸ்டிரி).

இராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரி
சிவகங்கை

இக்கல்லூரி 1947-இல் சிவகங்கை அரசர் சண்முக ராஜாவால் அவர் தந்தையார் நினைவாகத் தொடங்கப் பெற்றது. மானாமதுரைச் சாலையில் கட்டிடங்கள் கட்டப் பெற்றிருக்கின்றன. சிவகங்கை அரசரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அன்றாட அலுவல்களைக் கவனித்து வருகிறது. ஜமீன் ஒழிப்பு நிதியிலிருந்தும் தேவஸ்தான நிதியிலிருந்தும் கல்லூரி நடைபெறுகிறது புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ்ஸி., வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

சிவகாசியின் தொழில் தந்தை அய்ய நாடார் 1963-இல் இக்கல்லூரியைத் தொடங்கினார். ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் மாடமாளிகைகளாக அழகிய கட்டிடங்கள் கட்டப் பெற்றுள்ளன.

1000க்கு மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். புகுமுக வகுப்பு; பி. ஏ, பி. எஸ்சி; பி. காம்; காந்தியக் கொள்கைகள் பற்றிய படிப்பு ஆகியவை இங்கு கற்பிக்கப்படுகின்றன.

ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர்

திருப்பத்தூர் வள்ளல் ஆறுமுகம் பிள்ளை கொடையால் இக்கல்லூரி 1965-இல் தொடங்கப் பெற்றது.

மதுரைச் சாலையில் கல்லூரிக் கட்டிடங்கள் கட்டப் பெற்றிருக்கின்றன. புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ்சி; பி. காம்; ஆகிய வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி
இராமநாதபுரம்

ஸ்ரீசண்முக ராஜேசுவர சேதுபதி அவர்களின் கொடையாலும் முயற்சியாலும், இராமநாதபுரம் அரண்மனைக் கட்டிடத்தில் இக்கல்லூரி 1965-இல் ஏற்பட்டது; பொதுமக்களின் விருப்பத்திற்கு இணங்க 1967-இல் காலஞ்சென்ற அந்தச் சேதுபதியின் பெயரைக் கல்லூரிக்கு வைக்க அரசினர் ஆணையிட்டனர். இராமநாத சேதுபதியின் இடைவிடா ஆர்வத்தால் மதுரைச் சாலையில் கல்லூரிக் கட்டிடங்கள் உருவாகி வருகின்றன.

புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ்சி; வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை

தேவகோட்டை வள்ளல் உ. ராம. மெ. சுப. சேவு. அண்ணாமலை செட்டியாரின் அறக்கட்டளையால் இக்கல்லூரி 1-9-1970-இல் தொடங்கப் பெற்றது. பின் தங்கிய திருவாடனைப் பகுதி இக்கல்லூரியால் பயன் பெறுகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தில் இணைந்த நிறுவனங்களுள் பொருள் வளம் மிக்க கல்லூரிகளுள் இதுவும் ஒன்று.

புகுமுக வகுப்பு; பி. ஏ; (பொருளாதாரம்) பி. ஏ; (தமிழ்) வகுப்புக்கள் உள்ளன. இராம் நகரில் கல்லூரிக்கு ஏழிலார் கட்டிடமும் விடுதியும் உருவாகி வருகின்றன. வளர்ச்சிக்கான திட்டங்களை இக்கல்லூரி தன்னகத்தே கொண்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, பசும்பொன்

தமிழ்நாட்டிலேயே மிகவும் பிற்பட்ட முதுகுளத்தூர் வட்டத்தில் இக்கல்லூரி அமைந்திருக்கிறது. அரசினரே அமைத்திருக்க வேண்டிய கல்லூரி இது. தேவர் விட்டுச் சென்ற பெரும் சொத்துக்களிலிருந்து முக்குலத்துப் பெருமக்களின் விடாமுயற்சியால் இக் கல்லூரி 1970-இல் ஏற்பட்டது. இவ்வட்டத்தில் வேறு கல்லூரி இல்லாமையாலும், கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வம் பின்தங்கியவர்களிடம் மிகுந்து வருவதாலும் இக்கல்லூரிக்கு மிகுந்த எதிர்காலம் உண்டு. உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் கல்லூரி நடைபெற்று வருகிறது. கட்டிடங்கள் கட்டவும் கல்லூரி பிற துறைகளில் வளரவும் உதவுவது அரசினர் கடமை.

புதிய கல்லூரிகள்

1971-இல் அருப்புக்கோட்டையில் நாடார் சமூகத் தாரும் தேவாங்கர் சமூகத்தாரும் ஆளுக்கொரு கல்லூரி நிறுவியுள்ளனர்.

திருப்பத்தூர் வட்டம் பூலாங்குறிச்சியில் வ. செ. சிவ லிங்கம் செட்டியார் நன்கொடையால் 1972-இல் ஒரு கல்லூரி ஏற்படுமென்று தெரிகிறது.

அரசினர் இம்மாவட்டத்தில் ஒரே ஒரு கல்லூரி மட்டுமே நடத்துவதும், கத்தோலிக்கக் கல்லூரி ஒன்றும்

மாவட்டத்தில் இல்லையென்பதும், இராஜபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பெருநகர்களில் கல்லூரிகள் இல்லையென்பதும் கூர்ந்து கவனிக்கத் தக்கன.

மகளிர் கல்லூரிகள்

சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்

நெடுங்காலமாக இவ்வூரில் உயர்நிலைப்பள்ளி நடத்திவரும் உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியார் கொடைவளத்தால் இக்கல்லூரி 1962-இல் ஏற்பட்டது.

புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ்சி; வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஏறத்தாழ 1, 000 மாணவிகள் கல்வி கற்கின்றனர். சிறந்த கட்டிடங்கள் கட்டப் பெற்றுள்ளன.

வி. வி. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி, விருதுநகர்

விருதுநகர் ஹிந்து நாடார்கள் பரிபாலன சபை 1962-இல் இக்கல்லூரியை நிறுவியது. மதுரைச் சாலையில் கவினுறு கட்டிடங்கள் கட்டப் பெற்றிருக் கின்றன.

புகுமுக வகுப்பு; பி. ஏ., பி. எஸ்சி. வகுப்புக்களில் ஓராயிரம் மாணவிகள் உள்ளனர்.

ஸ்டாண்டர்டு பயர்வர்க்ஸ் ராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

இக்கல்லூரி 1968-இல் தொடங்கப் பெற்றது. பட்டாசுத் தொழிலில் சிறந்து விளங்கும் ஸ்டாண்டர்டு பயர்வர்க்ஸின் கல்வி அறநிறுவனம் இதை நடத்தி வருகிறது.

புகுமுக வகுப்பு; பி. ஏ; பி. எஸ்சி. வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தமிழ்க் கல்லூரிகள்

இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி

இக்கல்லூரி, சிங்கப்பூர்ச் செல்வர் இராமசாமி செட்டியார் பெயரால் அவர் மகன் திரு. இராம. பெரிய கருப்பனால் 1967-இல் தொடங்கப்பெற்றது. இரு பாலரும் இங்கு தமிழ்ப்புலவர் வகுப்புப் பயில்கின்றனர்.

தமிழ்ப்புலவர் வகுப்பு என்பதையே நீக்கி ஆங்கிலத்தோடு கலந்து தமிழ் பி. ஏ. வகுப்பு மட்டுமே இருக்க வேண்டுமென்று மதுரைப்பல்கலைக் கழகம் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் துணைவேந்தராக இருந்தபோது போட்ட திட்டத்தை முறியடித்து, புலவர் படிப்பு நிலைக்கச்செய்தது இக்கல்லூரியே.

ஆர். சி. எம். கல்லூரி,
நயினாபுரம்

இக்கல்லூரி திருப்பத்தூரில் 1968-இல் தொடங்கப் பெற்று தமிழ் பி. ஏ. வகுப்புநடத்திற்று. பிறகு நாச்சியாபுரம் சாலையிலுள்ள நயினாபுரத்துக்கு இக்கல்லூரி மாற்றப்பெற்றுள்ளது. புலவர் வகுப்பும் இக்கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

பல்தொழில் கல்லூரிகள் (Polytechnics)

அண்ணாமலை பாலிடெக்னிக், செட்டிநாடு.

செட்டிநாடு இரயில் நிலையத்தை அடுத்துத் தோற்றப் பொலிவுடன் காணப்படும் கட்டிடங்கள் இக் கல்வி நிலையத்தைச் சேர்ந்தவை. சிறந்த தொழிற் கூடங்களும் இயந்திரங்களும் மாடல்களும் உள்ளன.

சர்வே பயிற்சிபெற இங்குள்ள சிறந்த வெளிவாய்ப்பாக இருக்கிறது.

எல். சி. இ; எல். எம்; இ; எல். இ. இ. வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ராஜா சர் அண்ணுமலை செட்டியார் நினைவாக இக் கல்லூரியை 1956-இல் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைத் தலைவராகவும் இந்நூலாசிரியரைச் செயலாளராகவும் கொண்ட குழு தொடங்கிற்று. 1972-இல் அரசினர் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அழகப்பா பாலிடெக்னிக், காரைக்குடி

வள்ளல் அழகப்பர் இதை 1955-இல் தொடங்கினர். இம்மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் பாலிடெக்னிக் இதுவே. இதை இப்போது தமிழக அரசு நடத்தி வருகிறது.

இராமசாமி ராஜா பாலிடெக்னிக்,
இராஜபாளையம்

பி. ஏ. சி. ஆர். குடும்பத்தார் இதை நடத்தி வருகின்றனர்.

வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக்,
விருதுநகர்

வெள்ளைச்சாமி நாடார் நன்கொடையால் இது நடைபெறுகிறது.

அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி—3
(Alagappa Chettiar College of Engineering & Technology)

தமிழ்நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட முதல் பொறியியல் கல்லூரி இதுவே. கட்டிட, இயந்திர

மின்சாரப் பொறியியல் துறைகளில் பட்டப்படிப்புக்கு இங்கு பயிற்றுவிக்கப்படுகிறது.

ஆய்வுக் கூடங்களும் தொழிற்கூடங்களும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. பலஉணவு விடுதிகள் கட்டப் பட்டுள்ளன. ஐந்து வகுப்புக்களிலுமாக 700 பேர் பயிலுகின்றனர்.

1952-இல் வள்ளல் அழகப்பரால் தொடங்கப்பெற்ற இக்கல்லூரி 1969முதல் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. Electronics and Communication என்ற பொறியியல் பிரிவு 1970-இல் தொடங்கப் பெற்றிருக் கிறது.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

டாக்டர் அழகப்ப செட்டியார்
ஆசிரியர் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி-3
(Dr. Alagappa Chettiar Training College)

இக்கல்லூரியில், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பி. டி.; படிக்க வசதி செய்யப்பெற்றிருக்கிறது ஆடவர் 70 பேரும் பெண்டிர் 30 பேரும் ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர். உணவு விடுதிகள் உள்ளன.

தமிழ், ஆங்கிலம், வரலாறு, பௌதிகம் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களைச் சிறப்பாகப் பயில இங்கு வாய்ப்பு உண்டு. நன்முறை உயர்நிலைப் பள்ளி, இக்கல்லூரியின் உறுப்பாக நடைபெற்று வருகின்றது.

பிற மொழிக்கல்வி:

தெலுங்கு வித்யாலயம்:

தெலுங்கு பேசும் மக்கள் மேற்கு இராமநாதபுர மாவட்டத்தில் தொகையாக உள்ளனர். இராஜபாளையத்தில் மணிமேகலை மன்றத்தின் ஆதரவில் மூ. கு. ஜகந்நாத ராஜா, கொ. மா. கோதண்டம், பி. ஏ. துரைராஜா ஆகியோர் தெலுங்கு வகுப்புக்கள் நடத்துகின்றனர். தமிழர்களுக்கும் தெலுங்கு கற்பிக்க இங்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர். தமிழ், தெலுங்கு கலாச்சார உறவுகளை இவர்கள் வளர்த்து வருகின்றனர். பன்மொழிப் புலவர் ஜகந்நாத ராஜா தமிழ் நூல்களைத் தெலுங்கிலும் தெலுங்கு நூல்களை தமிழிலும் மொழி பெயர்த்துள்ளார்.

இராமேசுவரம் தேவஸ்தானப் பாடசாலை:

இராமேசுவரம் தேவஸ்தானத்தார் வடமொழியிலும் தமிழிலும் உள்ள சமயநூல்களை கற்பிப்பதற்காக 915-இல் மதுரையில் இந்தப்பாடசாலையை நிறுவினர். 1921-இல் வியாகரண சிரோமணி வித்துவான் வகுப்புத் தொடங்கப் பெற்று இப்பாடசாலை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

இப்போது வித்துவான் 2-A என்ற வகுப்பு மட்டும் நடைபெறுகிறது. இப்படிப்பில் வடமொழி தென்மொழி இரண்டுக்கும் சம இடம் உண்டு. எனவே இதற்கு சமப்பிரதான வித்துவான் வகுப்பு என்று பெயர்.

மதுரைப் பல்கலைக் கழகம் ஏற்பட்டதும் இக் கல்லூரி மதுரையிலிருந்து இராமேசுவரத்துக்கு மாற்றப் பெற்றது.

மத்திய மின்சார வேதியல் ஆராய்ச்சி நிலையம்
அழகப்பாபுரம் காரைக்குடி-3
Central Electro-Chemical Research Institute

இது இந்திய அரசாங்கம் நடத்திவரும் தேசிய ஆராய்ச்சி நிலையங்களுள் ஒன்ருகும். டாக்டர் அழகப்ப வள்ளல் 300 ஏக்கர் நிலமும் 15 இலட்சம் ரூபாயும் வழங்கியதால், இந் நிலையத்தைக் காரைக்குடியில் அமைக்க, விஞ்ஞானி டாக்டர் பாட்நகரும் ஜவஹர்லால் நேருவும் இசைந்தனர். செல்வாக்குள்ள பலர் இந் நிலையம் காரைக்குடியில் அமைவதற்குத் தடையாயிருந் தனர்; விஞ்ஞான—தொழில் ஆராய்ச்சிக் கழகக் கூட்டத்திலும் இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பல் கலைக்கழகம் நிறுவும் முயற்சியில் அழகப்பருக்கு இது துணையாக இருக்குமாதலால் காரைக்குடியில் நிறுவு வதையே தாம் விரும்புவதாக ஜவஹர்லால் நேரு அக் கூட்டத்தில் தெள்ளத்தெளியக் கூறி, வள்ளல் அழகப் பரையும் அக்கழகத்து உறுப்பினராக நியமித்தார் 'சுதந்திரா' வார இதழில் எழுதி காசா சுப்பாராவ் முதலிய பலர் இந்நிலையத்தைச் சென்னையில் நிறுவ மேற் கொண்ட முயற்சிகள் நிறைவேறவில்லை. 25-7-1948-இல் இந்த நிலையத்திற்கு ஜவஹர்லால் நேரு கால்கோள் செய்தார்கள்.

இந்நிலையத்தை அமைப்பதற்குக் காரைக்குடியில் போதிய நீர்வசதியில்லை என்று ஒரு தடை உண்டா யிற்று. பெருங் கிணறுகள் தோண்டி நீருண்மையைக் காட்டினுர் அழகப்பர். இவ்வாறு எல்லாத் தடையை யும் விலக்கி காரைக்குடியில் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவிய அழகப்பரின் துணிவு பாராட்டுதற்குரியது.

அரசாங்கத்தார் 50 இலட்சம் ரூபாய்வரை செல விட்டு, சிறந்த கட்டிடங்களும், வீடுகளும் கட்டி

யும் இயந்திரங்கள். ஆராய்ச்சிக் கருவிகள் வாங்கியும், மக்னீசியம் மாதிரித் தொழிற்சாலை நிறுவி யும் உள்ளனர். மின்சார பாட்டரி கண்டுபிடிக்கப் பட்டதாலும் புதிய ஆராய்ச்சிகள் வாயிலாகவும் இந் நிலையமும் காரைக்குடியும் புகழ்பெற்று வருகின்றன.

இரசாயனத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்து வதே இந்நிலையத்தின் நோக்கம். மின்சார ஆற்றலை மேன்மேலும் பயன்படுத்த, புது முறைகளை இங்கு ஆய்கின்றனர்.

காஸ்டிக் சோடா, குளோரின், கால்ஸியம் கார் பைட், கார்பன் பைஸல்பைட், பாஸ்பரஸ், சூப்பர் பாஸ் பேட்ஸ், வார்ப்பிரும்பு, எஃகு, அலுமினியம், மக்னீசியம் கிராபைட், கார்பன் பொருள்களை உற்பத்தி செய்ய மின்சாரம் மாத்திரம் இருந்தால் போதாது; இவைகளை உற்பத்தி செய்யத் தேர்ச்சி பெற்ற வேலையாட்களும் தேவை. அவர்கள்தான் இந்தக் கச்சாப் பொருள்களை இராசயனப் பொருளாக மாற்றக் கூடியவர்கள்.

இரும்பை உருக்குவதற்கு நிலக்கரிக்குப் பதிலாக மின்சார இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறையும் இங்கு ஆராயப்படுகிறது.

நம் நாட்டில் அரிதாக உள்ள ஹைட்ரஸீன், பார்மால்டிஹைட் என்னும் அரிய பொருள்களை பல வகைச் சேர்க்கையாலும் மின்னல் தாக்கத்தாலும் இங்கு செய்கின்றனர்.

இந்தியாவில் நிக்கல் தாது கிடையாது. அதனால் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் என்ற 'எவர்சில்வர்' உலோகக் கலவை செய்ய நிக்கலுக்குப் பதிலாக, அல்லது நிக்க லின் அளவைக் கூடியவரையில் குறைக்கும் வகையில் மாற்றுப் பொருளாகப் பயன்படுவதற்கு உயர்தர

மாங்கனீஸ் உலோக உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சியும், 'மின்சார ரசாயன' முறையில் இங்கு நடைபெறுகின்றது.

செயற்கைப் பட்டு, செலபோன் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இருந்தும், ராஜஸ்தான் முதலிய இடங்களில் சுரங்கங்களிலிருந்தும் 'சோடியம் சல்பேட்' என்னும் உப்பு ஏராளமாகக் கிடைக்கிறது. இந்த உப்பை மின்சார ரசாயன முறையில் காஸ்டிக் சோடாவாகவும், கந்தக அமிலமாகவும் மாற்றும் வழிகளை இங்கு கண்டு பிடிக்கிறார்கள்.

உப்பு நீரில், எந்த உலோகமும் அதிகநாள் இருக்க முடியாது. கப்பலில் கடல் நீருடன் தொடர்பு கொண்டுள்ள உலோகப் பகுதிகள் துருப் பிடிக்காமல் இருப்பதற்காக அதில் சிவப்பு வர்ணம் பூசியிருப்பார்கள். இந்தச் சிவப்பு வர்ணத்துக்கு வேண்டிய இரசாயனப் பொடியைத் தயாரிப்பதற்கு பொடாஷியம் குளோரேட், பர்குளேரேட், பாரா அமினோபினல், தாமிர ஆக்சைடு முதலியவை வேண்டும். இந்தப் பொருள்களை இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தித் தயார் செய்கிறார்கள்.

டிரான்சிஸ்டர் ரேடியோ முதல் கை விளக்கு வரை எத்தனையோ பொருள்களுக்கு 'பாட்டரி' தேவைப்படுகிறது. பாட்டரி செய்வதற்கு இன்றியமையாது வேண்டுவது மாங்கனீசு டை ஆக்சைடு. வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் இத் தாதுப் பொருளை இந்த நிலையத்தில் செய்கிறார்கள். இந்திய இரயில்களில் இங்கு செய்த பாட்டரியைப் பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து வாங்கும் முலாம் பூச்சு (நிக்கல், தாமிரம், வெள்ளீயம், குரோமியம், தங்கம்) மருந்துகளை இங்கு செய்கின்றனர். இரயில் இயந்திரங்களிலுள்ள பிஸ்டன் வளையங்களில் குரோமிய முலாம் பூசி அவை நீண்டநாள் வேலை செய்ய உதவுகிறார்கள்.

உலோகப் பொருள்களின்மீது எழுத்துக்களையும் வடிவங்களையும் மின்சார முறையைப் பயன்படுத்தி, தெளிவாகவும் பொருளுக்குச் சேதமில்லா மலும் பொறிக்க உதவும் நுட்பமான கருவிகளை இங்கு செய்கிறார்கள்.

இந்தியாவின் புகழ் மிக்க அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்களுள் ஒன்றாக, காரைக்குடி நிறுவனம் இடம் பெற்றுவிட்டது. உலகத்திலேயே ஓரிரு, நாடுகள் மட்டுமே இத்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்கின்றன.

அழகப்பா பல்கலைக்கழகம்:

அழகப்பரின் தலையான வேட்கை தாம் நிறுவிய பல கல்லூரிகளையும் ஒன்றுபடுத்தி 'அழகப்பா பல்கலைக் கழகம்' என ஒரு தலைமைக்கழகம் அமைப்பது. அவர் தம் இவ்விருப்பத்தை எல்லோரும் அறிவர். தாம் வாழ்ந்த காலத்தே இந்திய அரசோடு கடிதப் போக்கு வரத்துச் செய்து அடிப்படை அமைத்திருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் தமிழ்நாடு அரசினரும் அவர் திட்டத்திற்கு அந்நாளில் இசைவு தெரிவித்தனர். அவர் முயற்சியை மேலும் தொடர்ந்து அழகப்பா பல்கலைக் கழகத்தைக் காண்பது தமிழர் கடனாகும்.

1968-இல் அழகப்பர் கல்லூரிகளுக்கு வருகை தந்த போது, தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாதுரை 'தமிழ் நாட்டில் அடுத்த பல்கலைக்கழகம் காரைக்குடி,

யில்தான் அமைக்கப்படும்' என்று உறுதி கொடுத்துள்ளார்.

நூலகங்கள்:

மாவட்ட ஆணைக்குழு இம்மாவட்டத்தில் ஏராளமாக நூலகங்களை, சிறந்த முறையில் நடத்தி வருகிறது. அலுவலகம் மதுரையிலும் மத்திய நூலகம் சிவகங்கையிலும் உள்ளன. பல்லாண்டுகள் திரு. எஸ். இராமசாமி நாயுடு, இக்குழுவின் தலைவராக இருந்தார். இப்போது வழக்குரைஞர் திரு. பில்லப்பன், எம். எல். சி. தலைவராக உள்ளார்.

சிவகங்கையில் மாவட்ட மத்திய நூலகம் பல்லாயிரம் நூல்கள் கொண்டு நன்கு நடைபெற்று வருகிறது. பிற மாவட்டங்களை நோக்க வரி வருவாய் குறைவாக இருப்பதால், ஆணைக்குழுவின் வளர்ச்சி விரும்பும் அளவுக்கு பெருக, அரசினர் முன்வர வேண்டும்.

தனியார் நூலகங்களில் சிவகங்கை வட்டம் பாகனேரியில், தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் காசிவிசுவநாதன் செட்டியார் நாற்பதாண்டுகளாக இந்தியாவிலும் பர்மாவிலும் பெரும் பொருள் செலவிட்டும் அரிதின் முயன்றும் சேகரித்த சிறந்த நூல்கள் உள்ளன. மாவட்ட நூலக ஆணைக்குழு, இந்நூலகத்தை ஒப்புக் கொண்டு பாகனேரியிலேயே காசிவிசுவநாதன் செட்டியார் பெயரால் தொடர்ந்து இருந்து வரவும் அனைவர்க்கும் பயன்படவும் ஆவன செய்யவேண்டும்.

குறிப்பிடத்தக்க பிற நூலகங்கள்:

காரைக்குடி அழகப்பர் கல்லூரி நூலகம்: இதில் தமிழ்க்கடல் 'ராயசொ' நூலகமும், ஆர். கே. சண்முகம் செட்டியார் நூலகத்தின் ஒரு பகுதியும் உள்ளன.

காரைக்குடி இந்துமதாபிமான சங்கம். நூலகத்திற்கு மு. ரா. கந்தசாமிக் கவிராயர் நூலகம் விலைக்கு வாங்கப் பெற்றிருக்கிறது.

காரைக்குடி சி. எஸ். ஐ. ஆர். நூலகம்: அறிவியல் துறையில் இது, இந்தியாவிலுள்ள சிறந்த நூலகங்களில் ஒன்று.

செட்டிநாடு அண்ணுமலை பாலிடெக்னிக் நூலகம்: நூலகம் சிறிது. எனினும் பிற இடங்களில் இல்லாத சில நூல்கள் உள்ளன. 'சோமலெ' நூலகத்தின் ஒரு பகுதி இங்கு உள்ளது.

இராமநாதபுரம் : சேஷாத்திரி மெமோரியல் லைபரரி.

விருதுநகர் : வெள்ளைச்சாமி நாடார் நகராட்சி நூலகம்.

சிவகங்கை: கோகலே நூலகம்.

பென்னிங்டன் நூல் நிலையம்
ஸ்ரீ வில்லிபுத்தூர்

இம்மாவட்டத்திலுள்ள சிறந்த நூலகங்களுள் இது ஒன்று. இது 1878-இல் தொடங்கப் பெற்றுச் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

இந்நூல் நிலையத்தை நிறுவியவர் அந்நாளில் ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டத்துத் தாசில்தாராக இருந்த சரவண முத்துப்பிள்ளை என்பவர் ஆவார். அவரது முயற்சியால் பெண்கள் பள்ளி ஒன்றும் இவ்வூரில் அமைக்கப்பட்டது. இந்நிலையங்கள் செம்மையாக நடப்பதற்காக அவர் பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூலித்து அவ்வாறு வசூலான தொகைகளைக்கொண்டு கடைகள் கட்டினர்; இக்கடைகளின் தொகுப்பே 'பென்னிங்டன் மார்க்கட்' என்ற பெயரில்

இருந்து வருகிறது. இதன் வாயிலாக ஆண்டுதோறும் பல்லாயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

அந்நாளில் (திருநெல்வேலி) மாவட்டக் கலெக்டராக இருந்த பென்னிங்டன துரை பெயரினை, இந் நூலகத்துக்குச் சரவண முத்துப்பிள்ளை சூட்டினர். ஆங்கில இலக்கியத்திலும் சட்டத்துறையிலும் சிறந்த நூல்கள் இந் நூலகத்தில் உள்ளன. 1962-இல் இந் நூலகத்துக்கு ஒரு புதிய கட்டடமும் கலைவிழாக்கள் நடத்துவதற்கேற்ற ஒரு மண்டபமும் ஒரு லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டிமுடிக்கப் பெற்றிருக்கின்றன. 35 ஆண்டுகளாக இராசபாளையம் பண்ணையார் இராமசுந்தரம்பிள்ளை, இந்நூலக ஆட்சிக் குழுவின் செயலாளராக இருந்து வருகிருர்.

விளையாட்டுக்கள்

இராமநாதபுர மாவட்டத்தில் சில பகுதிகள் விளையாட்டுக்களில் சிறந்து விளங்குகின்றன. விருது நகரில் கூடைப் பந்துக் கழகம், மாவட்டக் கால் பந்தாட்டக் கழகம் ஆகியனவும் சிவகாசியில் காரனேசன் ஸ்போர்ட்ஸ் கிளப்பும் செயற்பட்டு விளையாட்டுக்களை ஊக்குவிக்கின்றன.

சிவகங்கையில் தம்புதுரை, ஆர். எம். சுந்தரம் என்ற ஐ. சி. எஸ். காரர்கள் திவானக இருந்த நாளிலிருந்து விளையாட்டுககளில் இளைஞர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. புதிய அரண்மனை அருகே ஒரு ஸ்டேடியம் இருக்கிறது.

காரைக்குடி அழகப்பா கல்லூரி வட்டத்தில், பவநகர் ஸ்டேடியம் ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட விளையாட்டுக் கழகம் இந்நகரில் இயங்குகிறது. அனைத்திந்தியக் கால் பந்தாட்டப் போட்டிகள் நிகழ்ந்தன.

மண்டபத்தில் சர்வதேச நீச்சல்போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. இங்கு ஆண்டுதோறும் இத்தகைய போட்டிகளை நடத்த வேண்டும் என்று, நீச்சல்வீரர் மிகிர் சென் கூறியுள்ளார்.

இம்மாவட்டத்தினராகிய திரு. எம். ஏ. சிதம்பரம், இந்தியாவில் கிரிக்கட் முதலிய பல விளையாட்டுக்கள் பெருகப் பேருதவி புரிந்து வருகிறார். சென்னையில் சிறந்த ஸ்டேடியம் இவர் முயற்சியால் உருவாகி வருகிறது.

அழகப்பா உடற்கல்விக் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி-4
(Alagappa College of Physical Education)

சென்னை ஒய். எம். சி. ஏ. கல்லூரிக்கு அடுத்த படியாக, தமிழ்நாட்டில் ஏற்பட்ட உடற் கல்விக்கல்லூரி இதுவே ஆகும். இது 28—8—1956-இல் அழகப்பர் வள்ளன்மையால் தொடங்கி வைக்கப்பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகத்து உடற்கல்வி டிப்ளமா, தமிழ்நாடு அரசாங்கம் வழங்கும் உடற்கல்வி உயர்நிலை ஆசிரியர் சான்றிதழ், தமிழ்நாடு அரசாங்கம் வழங்கும் உடற்கல்வி இளநிலை ஆசிரியர் சான்றிதழ் ஆகியவை பெற இக்கல்லூரியில் பத்துமாதப் பயிற்சி தரப்படுகிறது. மொத்தம் 140பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு விடுதி உண்டு. இங்கு பயிலுபவர்க்கு, மாநில அரசு சில சிறு சலுகைகள் வழங்குகிறது.

சிறந்த நூலகம், உடற்பயிற்சிக் கூடம், கால் பந்தாட்ட மைதானங்கள் இரண்டு, ஹாக்கி மைதானங்கள் மூன்று, வாலிபால் முதலிய பந்துக்கு மேற்பட்ட ஆட்டங்களுக்கு ஏராளமான விளையாடுமிடங்கள் இவற்றுடன் கூடியது இந்தக் கல்லூரி.

உடற்பயிற்சிக் கல்வியில் தமிழ்நாட்டில் பட்டப் படிப்பு (B. P. E. D.) இக்கல்லூரியில்தான் முதலில் ஏற்பட்டது. இந்த ஆண்டில் பட்டமேற் (M. P. E. D) படிப்புக்கும் வசதி செய்யப்பட்டு வருகிறது. இரு பாலாரும் இங்கு பயிலுகின்றனர். இக்கல்லூரிக்கு; தொண்டியில் துறைமுகத்துக்கு அருகே 10ஏக்கர் இடம் உள்ளது. மாணவர் அங்கு, சில நாட்கள் தங்கி, பயிற்சி செய்கின்றனர்.

இங்கு படித்த மாணவர் தமிழ்நாடெங்கும் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

13. இசைக்கலை

இம்மாவட்டத்தில் இசைக்கலை தொன்று தொட்டு வளர்ந்து வருகிறது. தமிழ் இசை இயக்கம் இம் மாவட்டத்திலேயே, அரசர் அண்ணாமலைச் செட்டியாரின் மணிவிழா 1941-இல் கானாடுகாத்தானில் நிகழ்ந்த போது, 'கரு' வாகி அடுத்த ஆண்டில் சென்னையில் உருவம் பெற்றது.

மன்றங்கள்

தேவ கோட்டையிலும் காரைக்குடி அழகப்பர் கல்வி வட்டத்திலும் தமிழ் இசைப் பள்ளிகள் உள்ளன. சிவகாசியில் 13-4-1957இல் ஆரம்பிக்கப்பெற்ற இசைக் கலைப் பயிற்சிப்பள்ளி இசை, நாடக, நாட்டியக்கல்வி புகட்டி வருகிறது. இப்பள்ளி சில நூல்களையும் வெளி யிட்டிருக்கிறது. தமிழிசை அரங்குகளையும் தேசிய நாடகங்களையும் வில்லிசைமூலம் காந்திமகான்கதையை யும் நடத்தியிருக்கிறது. இராஜபாளையத்தில் காந்தி கலைமன்றம் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

செல்வர்களான நகரத்தார்களின் திருமணங்களில் பாடி, இசைப் புலவராகப் பயிற்சியும் ஆதரவும் புகழும் பெற்றவர்கள் மிகப்பலர். வானொலி தோன்றுவதற்கு முன், தமிழ்நாட்டு இசைவாணர்க்குச் செட்டிநாட்டில் தான் ஓரளவு உறுதியான நிலையான வருவாய் கிடைத்தது.

தமிழ் நாடெங்கும் இம்மாவட்டத்தினர், நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தேவாரப் பள்ளிகளை நடத்தி

வருகின்றனர். இதன் தொடர்ச்சியே, தமிழ் இசைச் சங்கம் நடத்தி வரும் பண் ஆராய்ச்சிப் பணி.

மாநாடுகள்

தமிழ் இசைக்கிளர்ச்சி நாட்களில் 1941 முதல் 1944 வரை இம்மாவட்டத்தில் ஏராளமான ஊர்களில் தமிழ் இசை மாநாடுகள் கூடின. இத்தகைய மாநாடுகளுள் ஒன்று தேவகோட்டையில் நடைபெற்றுத் தமிழ்நாட்டு மக்களை ஈர்த்தது. அந்நாளில் லெனின்கிராடு கோட்டையை ஜெர்மானியர் முற்றுகையிட்டனர். 'மக்கள் கண்களெல்லாம் லெனின்கிராடு கோட்டையிலும் தேவகோட்டையிலும் உள்ளன' என்று கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருந்தார்.

ஸத்குரு ஸ்ரீ தியாகப் பிரும்ம மஹோத்ஸவ ஸபா, தேவ கோட்டையில் 1942-இல் தோன்றிற்று. ஆண்டு தோறும் மாசிமாதத்தில் இங்கு நான்கு நாட்களுக்கு இசை விழாக்கள் நிகழ்கின்றன.

புரவலர்கள்

இசைப்புலவர்களுக்கு ஆதரவு தந்துவருபவர்களுள் இராமநாதபுரம் சேதுபதிகளும் சேற்றூர்க் குறுநில மன்னரும் நகரத்தார்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சேதுபதிகள் ஆதரவு பெற்றவர் பட்டியலைப் பின்னர் தருவோம். நவராத்திரி விழாவில் இராமநாதபுரத் திலும் புத்தாண்டுப் பிறப்பு அன்று காரைக்குடியிலும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

சேற்றூர்க் குறுநிலமன்னரான சிவபிரகாசத் திருவணுததுரை, இசைப்புலவராகவும் புரவலராகவும் விளங்கினார். இவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த வட மலைத் திருவணுத சேவகப் பாண்டியத் தேவர், சென்னை

மியூசிக் அகடமியைத் தொடங்கி வைத்தார். இவர் கஞ்சிரா வாசிப்பதில் சிறந்து விளங்கினர். தேவ கோட்டை ஜமீன்தாராக இருந்த அருணசலம் செட்டி யார் 'சுரகத்து' என்ற இசைக் கருவி வாசிப்பதில் சிறந்து விளங்கினர்; காளையார் கோவிலில் இசைப் புலவர் பலரை அடிக்கடி அழைத்து இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தார்.

புலவர்கள்

கவிக்குஞ்சரபாரதியார் இம்மாவட்டத்துப் பெருங் கரையினர்; இவர் அழகர் குறவஞ்சி போன்ற இசை நூல்களை ஆக்கியுள்ளார்:

வற்றுயிருப்பு கருப்பண்ணத் தேவர் (1874-1961) பிடில் வித்துவானுகவும் வாய்ப்பாட்டு வல்லுநராயும் விளங்கினர். 'கலையை விற்கலாகாது' என்று கருதி, இவர் இசைத்தட்டுகளுக்குப் பாட மறுத்தது குறிப் பிடத்தக்கது. இவருடைய மாணவர் பலர் வானெலி நிலையங்களில் பணிபுரிந்தும் பிற வகைகளில் கலை வளர்த்தும் வருகின்றனர்.

இராமநாதபுரம் சீனிவாச ஐயங்கார் என்ற பூச்சி ஐயங்கார் சிறந்த வாய்ப்பாட்டுப் புலவராகவும் இராம நாதபுரம் சமஸ்தான வித்துவானுகவும் விளங்கினர். இவரிடமே அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் பயிற்சி பெற்ருர்.

அரியக்குடி, இசைத்துறையில் இந்நூற்ருண்டில் பெரும் புலமை பெற்று, காரைக்குடி அருகேயுள்ள தம் சிற்றூருக்கும் இம்மாவட்டத்துக்கும் பெருமை தந்தார். இவருடைய வரலாறு நூலாக வெளி வந்திருக்கிறது.

மழவராயனேந்தல் என்னும் சிற்றூர் இசைப் புலவர்களை ஈந்திருக்கிறது. திருவிளையாடல் புராணத்

திற்குக் கீர்த்தனை வெளியிட்ட மழவை சிதம்பர பாரதியும் அவர் பேரனும் இசைப்புலவருமான மழவராயனேந்தல் சுப்பராம பாகவதரும் இவ்வூரினர்.

இம்மாவட்டத்தில் இசைப்பாடல் அமைத்த பலரும் உள்ளனர். சுவாமி சுத்தானந்த பாரதியாரும் கவியரசு கண்ணதாசனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

வற்றாயிருப்பைச் சேர்ந்த குற்றாலம் அண்ணாவி, அருப்புக்கோட்டை கணேசன் ஆகிய நாதசுவரப் புலவர்களும், பிடில் குன்னக்குடி வைத்தியநாதனும் மிருதங்கம் இராமநாதபுரம் முருகபூபதியும், காரைக்குடி வீணை சாம்பசிவ ஐயரும், வாய்ப்பாட்டுப் புலவர் சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியமும் இம்மாவட்டத்தினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழிசைக் கல்லூரியிலும் சென்னைத் தமிழிசைக் கல்லூரியிலும் பயின்று இம்மாவட்டத்து இளைஞர் பலர் இசை வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

14. மருத்துவ வசதிகள்

மாவட்ட மருத்துவமனை

மாவட்ட மருத்துவமனை இராமநாதபுரம் நகரில் இருந்து வருகிறது. பல்லாண்டுகள் இம்மனைக்கு வசதியான கட்டிடங்களோ போதிய இடமோ இல்லாதிருந்தது. இக்குறைகள் இப்போதுதான் நீங்கப் பெற்றிருக்கின்றன. அரசினரின் திட்டப்படி இம்மனை நன்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது.

பிற மருத்துவமனைகள்

வட்டத் தலைநகர்களிலும் நகராண்மைக் கழகங்களுள்ள நகர்களிலும் நெடுங்காலமாக மருத்துவமனைகள் இருந்தன. ஆனால் மக்கள் போய்ப் பிணி தீர்த்துக் கொள்ள அங்கு வசதி இல்லை. இந்த நிலை 1970-க்குப் பிறகு மிகவும் திருந்தியிருக்கிறது. பல நகர்களில் தொழிலாளர் நலத் திட்டத்தில் மருத்துவ மனைகள் ஏற்பட்டுள்ளன. இராஜபாளையம், விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி ஆகியவற்றில் அரசினர் மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டிடங்கள் அழகுறக் கட்டப் பெற்றிருக்கின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்களும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும் ஏற்பட்டுள்ளன. இவற்றை அரசாங்க மருத்துவமனைகளாக மாற்றி அமைப்பது மக்களுக்கு நலம் தரும்.

தனியார் மருத்துவ மனைகள் :

கானாடுகாத்தானில் ராஜா சர் அண்ணாமலை செட்டியாராலும் சா. அ. குடும்பத்தாராலும் தொடங்கப் பெற்ற மருத்துவமனைகளை இணைத்து அரசாங்கம் நடத்தி வருகிறது.

பள்ளத்தூரில் முருகப்பா மருத்துவமனை இயங்கி வருகிறது. இதுபோல மாவட்டம் எங்கும் ஏராளமான சிறு மருத்துவமனைகள் தனியார் கொடையால் நடைபெறுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பலவும் உள்ளூர் மக்கள் வழங்கிய கட்டிடங்களில் அமைந்திருப்பது இம்மாவட்டத்தில் ஒரு சிறப்பு.

தேவகோட்டை ரோடு இரயில் நிலையத்தை அடுத்த சோமநாதபுரத்தில் காசநோய் மருத்துவமனை, தேவகோட்டை குறுநில மன்னர் ஏ. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியாரின் நிலக்கொடையாலும் பெரு முயற்சியாலும் பொது மக்கள் உதவியுடனும் அரசாங்க உதவியுடனும் ஏற்பட்டிருக்கிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தனி T. B. மருத்துவ மனை இது ஒன்றே.

காரைக்குடி நகராண்மைக் கழகப் பூங்காவில் சொக்கலிங்கம் சுகாதார நிலையம் அமைந்திருக்கிறது. இது இந்தியாவிலேயே முதலாவது தோன்றிய சுகாதார நிலையம் ஆகும்.

கத்தோலிக்க மருத்துவ மனை :

சருகணி, புளியால் பகுதிகளில் கத்தோலிக்கப் பாதிரியார்கள் 24 லட்சம் செலவில் சிறந்த முறையில் இரு மருத்துவமனைகளை அமைத்திருக்கிறார்கள்.

சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை, திருப்பத்தூர் :

இது தமிழ் நாட்டிலுள்ள தலை சிறந்த மருத்துவ மனைகளுள் ஒன்று. 1909-இல் டாக்டர் கூகல்பர்க் என்ற சுவீடன் நாட்டு டாக்டர் இங்கு, 'கண் ஆஸ்பத்திரி' ஏற்படுத்தினார். கண் மருத்துவத் துறையில் அவர் ஒரு நிபுணர். அவரிடம் பயின்ற பலர் தமிழ் நாடெங்கும் கண் மருத்துவத்தில் புகழும் பொருளும் பெற்றுளர். இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு சென்னையில் ஏற்பட்ட முதல் அமைச்சரமையில் அமைச்சராக இருந்த டாக்டர் குருபாதம் இங்கு பணி புரிந்தவரே. கண் மருத்துவம் தவிர பிற துறைகளிலும் இம்மருத்துவமனை விரிந்துள்ளது. 300 படுக்கைகள் உள்ளன. மருத்துவமனை உள்ள இடம் வரலாறு உடையது. சிவகங்கையை ஆண்ட மருது சமாதிக்கு மக்கள் வாரந்தோறும் சென்று வழிபட்டு, விடுதலை உணர்வும் சிவகங்கைச் சீமையின் உரிமை மருது வழியினர்க்கே மீண்டும் வழங்கப் பெற வேண்டுமென்ற எண்ணமும் பெற்றனர். இவற்றைத் தடுக்க, மருதுவின் உடைமையைச் சட்ட விரோதமாகப் பெற்ற சிவகங்கை அரசர் சமாதியைச் சுற்றிய 17½ ஏக்கர் நிலத்தை மருத்துவமனைக்கு வழங்கினார். சமாதியை இன்றும் இம்மனையின் பரிசோதனைக் கூடத்திற்கு அருகே காணலாம்.

சிறந்த ஆப்பரேசன் தியேட்டர் இங்கு உளது. சுவீடிஷ் டாக்டர்களும் உள்ளனர். நர்ஸ் தொழிலுக்குப் பயிற்சி தரும் கல்வி நிலையமும் குருடர்களுக்காக ஒரு பள்ளியும் தொழிற்பயிற்சி நிலையமும் இயங்குகின்றன.

ஏழை எளியவர்க்கு இம்மருத்துவமனை செய்யும் பணி பாராட்டுக்குரியது. காந்தியடிகள் 1927இல் வருகை புரிந்து இம்மருத்துவமனையின் தொண்டினைப் போற்றியுள்ளார்.

1967 முதல் குட்ட நோய் ஒழிப்புப் பணியிலும் இம்மருத்துவமனை கவனஞ் செலுத்தி வருகிறது. வெளியூர்களில் இதற்கென நடமாடும் மருத்துவமனை பணி புரிகிறது. குட்ட நோய் மருத்துவத்துக்கெனத் தனிக் கட்டிடமும் வெளி நாட்டு உள் நாட்டு மருத்துவர்கள் உதவியும் புதிய கருவிகளும் இங்கு உள்ளன.

பல துறைகளில் மருத்துவப் பணியைப் விரிக்கவும் பெருக்கவும், நோயாளிகளுக்காகச் செய்யப்படும் உணவு தூய்மையாக இருப்பதற்காக இயந்திரச் சமையல் ஏற்பாடுகள் செய்யும், பேக்கரி அமைக்கவும் சுவீடன் நாட்டினர் 1969-இல் முப்பது லட்சம் ரூபாய் வழங்கியுள்ளனர்.

இம்மருத்துவமனையை அடிப்படையாக வைத்து மருத்துவக் கல்லூரி தொடங்கலாமென்று 1955-இல் டாக்டர் ஏ. எல். முதலியார், டாக்டர் பி. வி. செரியன் ஆகியோர் அரசினருக்கு அறிவித்தனர். அதையொட்டியே மருத்துவக் கல்லூரி நிறுவ வள்ளல் அழகப்பர் முனைந்தார்.

எக்ஸ்ரே பகுதியும், பிள்ளைப்பேறு மருத்துவமும் குறிப்பிடத்தக்கன. கார்டியக் சர்ஜரி எனப்படும் அறுவை மருத்துவத்தை சென்னையிலோ வேலூரிலோ செய்யப்படும் முன்னரே இங்கு டாக்டர் வால்டன் என்ற சுவீடிஷ் நிபுணர் செய்தார். இம்மருத்துவமனை நடத்த ஆண்டுதோறும் 15 லட்சம் ரூபாய் செலவாகிறது.

மருத்துவமனையில் பணிபுரியும் அனைவர்க்கும் வீடுகள் கட்டப்பெற்றுள. அவர் தம் குடும்பத்தினர்க்குக் கல்வி வசதியும் பிற பல சலுகைகளும் உண்டு. சுவீடிஷ் நாட்டினர்க்குக் கோடைக் கானலில் தங்குவதற்கு வீடுகளும் அவர்கள் குழந்தைகள் பயில அங்கு சுவீடிஷ் பள்ளி

யும் உள்ளன. டாக்டர்கள் வெளியூர்களிலும் வெளி நாடுகளிலும் சென்று குறிப்பிட்ட பகுதிகளில் பயிற்சி பெறுகின்றனர்.

பிணிபோக்குவதே இந்த மருத்துவமனையின் குறிக்கோள். எனவே, இறந்தபின் பிணத்தை அறுத்துப் பார்த்தல், குத்து வெட்டு பற்றி நீதிமன்றத்தில் சாட்சி சொல்லுவது, மருத்துவமனைக்கு வெளியே மருத்துவம் பார்ப்பது முதலிய வேலைகளில் இங்குள்ள டாக்டர்கள் ஈடுபடுவதில்லை.

லேபரட்டரி டெக்னிசியன்களுக்காக இந்த மருத்துவமனை நடத்தும் ஓராண்டுப் பயிற்சியை கிறிஸ்டியன் மெடிகல் அசோசியேசன் ஆப் இந்தியாவுக்குக் கட்டுப்பட்ட மருத்துவமனைகள் யாவும் ஏற்கின்றன.

1970-72 ஆம் ஆண்டுகளில் சுவீடன் நாட்டு உதவியுடன் இங்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு பல துறைகளில் இந்த மருத்துவமனை பெரு முன்னேற்றம் அடைந்த வண்ணமாய் இருக்கிறது. நெற்குப்பை, சிங்கம்புணரி காரைக்குடி போன்ற வெளியூர்களில் இம்மருத்துவமனையினர் குறிப்பிட்ட கிழமைகளில் சென்று சில நோய்களுக்கு மருத்துவம் செய்கின்றனர்.

புகழ் பெற்ற கண் டாக்டர் ஜோசப் இந்த மருத்துவமனையின் தலைவராக உள்ளார்.

நர்சிங் பள்ளி :

திருப்பத்தூர் சுவீடிஷ் மிஷன் மருத்துவமனையில் நர்ஸ் தொழிலுக்குப் பயிற்சி அளிக்க ஒரு பள்ளி நடைபெறுகிறது. தமிழ் நாட்டிலிருந்தும் கேரளத்திலிருந்தும் நங்கையர் இங்கு பயின்று Christian Medical Association of India நடத்தும் தேர்வு எழுதி நாடெங்கும் மருத்துவமனைகளில் பணிபுரிகின்றனர்.

குருடர் பள்ளி :

இம்மருத்துவமனையில் குருடருக்காக ஒரு பள்ளி இருக்கிறது. இவர்கள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வரை எழுதி, படிக்கும்போது இடது பக்கமிருந்து வலது பக்கமாகப் படிக்கிறார்கள். பிரெயில் முறைப்படி அச்சிட்ட நூல்கள் பாடமாக உள்ளன. முதல் வகுப்புக்குரிய நூல்கூட மிகக் கனமாக கையால் தூக்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

ஊமையர் செவிடர் பள்ளி :

இப்பள்ளி மானாமதுரையில் இருக்கிறது.

நாட்டு மருத்துவம் :

எலும்பு முறிவு, மூட்டுப் பிசகு, இளம்பிள்ளை வாதம் ஆகியவற்றுக்கு துளாவூர் வைத்தியர்கள் தலைமுறை தலைமுறையாகச் சிறந்த முறையில் குணப்படுத்துகிறார்கள். காரைக்குடியிலும் குன்றக்குடியிலும் தமிழ் நாட்டின் வேறு சில ஊர்களிலும் துளாவூர் வைத்தியர்கள் உள்ளனர். துளாவூர் குன்றக்குடிக்கு அருகேயிருக்கிறது.

திருக்கோட்டியூரில் சித்தவைத்தியம் புகழ் பெற்றது கீழச் சிவற்பட்டி எண்ணெய், குழந்தைகளுக்கு மிகவும் பயன்படுகிறது. வேர்களை நச்சுப் போட்டு இதைத் தயாரிக்கிறார்கள்.

மூலிகைகளைக் கொண்டு செய்த தைலங்களைப் பயன்படுத்தி பிள்ளையார் பட்டியில் பல நோய்களுக்கு மருத்துவம் செய்கின்றனர்.

15. ஊர்களைப் பற்றிய குறிப்புக்கள்

இப்பகுதியில், மாவட்டத்திலுள்ள ஊர்களைப் பற்றிய செய்திகளைத் தெரிவிப்போம்.

ஒவ்வொரு வட்டத்தையும் தனித்தனியே ஆராய்ந்து முதலில், வட்டத்தைப் பற்றிய பொதுவான விவரங்களைக் கூறுவோம். பிறகு, வட்டத்திலுள்ள நகரங்களைக் காண்போம். நகரியம் இருப்பின் அதையும் பார்ப்போம். பின்னர், ஊராட்சி மன்ற ஒன்றியங்களில் உலாவருவோம். ஒன்றியத்தின் தலைநகர், பேரூராட்சிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட பின்னர், ஊராட்சி மன்றம் உள்ள ஊர்களை தருவோம்.

இம் மாவட்டத்தில் 32 ஊராட்சி மன்ற ஒன்றியங்கள் உள்ளன. ஒவவோர் ஒன்றியமும் சாரசரி 380 சதுர கி. மீ. பரப்பும், ஏறத்தாழ 75,000 மக்களும் கொண்டது. அந்தந்த ஒன்றியம் செய்ய வேண்டிய வேலைகளை வரையறுக்க ஒரு கவுன்சில் உண்டு. கவுன்சிலின் தீர்மானங்களைச் செயலாற்றவும் அன்றாட வேலைகளைச் செய்யவும் அதிகாரம் படைத்த ஆணையர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கவுன்சில், அந்த ஒன்றியத்து ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்களைக் கொண்டது. இவர்களைத் தவிர, பெண்களும் அட்டவணையில் குறிப்பிட்ட சாதியினரும் மும்மூன்று பேரைக் கவுன்சில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆணையர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறார். அவருக்கு உதவியாக வேளாண்மை, கூட்டுறவு, தொழில், சமுதாயக் கல்வி

ஊராட்சி மன்றம் ஆகிய துறைகளுக்கு அலுவலர் உள்ள னர். கிராமங்களின் தொகுப்புகளில், கிராம சேவகரும் கிராம சேவகிகளும் பணிசெய்கின்றனர். சில ஒன்றி யங்களுக்குச் சேர்த்து, பொதுவாகக் கால்நடை மருத்துவர், கல்வித்துறை அலுவலர், மின்சாரம், சாலே மேற்பார்வை, பொதுபபணித் துறைகளுக்குத் தனித் தனியே பொறியியல் அலுவலர் ஆகியோர் உள்ளனர். விதைகளே வைத்திருந்து உழவர்களுக்கு வழங்க, பொது மக்களில் ஒருவர் ஒவ்வொரு ஊரிலும் 'கிராம சகாயக்' ஆக நியமிக்கப்பட்டிருக்கிறுர். ஒன்றிய அலுவலகங்களில் செய்தி நிலேயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; கிராம நல வேலேகளே விளக்கும் நூல்களும் படங்களும் இங்கு வைக்கப்படுகின்றன.

உயர்நிலேப் பள்ளிகளும், மாவட்ட நெடுஞ்சாலே களும், படுக்கை வசதியுள்ள மருத்துவ மனேகளும் ஒன்றி யங்களுக்குக் கட்டுப்பட்டவை அல்ல. இவை தவிர, மாவட்டக் கழகங்களின் அதிகாரிகள் அனேத்தும் ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்

1. இராமநாதபுரம் வட்டம்

இந்த வட்டம் இம்மாவட்டத்தில் தென்கிழக்குக் கோடியில் நாக்குப் போல் அமைந்தது. முப்புறம் கடலால் சூழப்பட்டது. இதனால் இங்கு கொடுமையான வெப்பம் கிடையாது. கடலில் புயல் உருவாகும்போது காற்றும் மழையும் இருக்கும்.

இங்கு மழை பெய்து வெள்ளம் ஏற்படுவது உண்டு. மதுரை மாவட்டத்தில் மழை பெய்வதால் பெரியாறு, வைகை ஆறுகளில் வெள்ளம் ஏற்படுகிறது. கலிங்கு இல்லாததால் கண்மாய்களில் உடைப்பு ஏற்படுகிறது. நீர்ப் பரப்புப் பகுதி எவ்வளவு என்பதைப் பற்றிய செம்மையான கணக்கு எடுக்கப்படாததால் சில கண் மாய்களின் அமைப்பு சரியான நிலையில் இல்லை. பல சிற்றூர்கள் அந்நாளில் தண்ணீரில் மூழ்குகின்றன. மிளகாய், மல்லிச் செடிகள் அழுகி விடுகின்றன. தீவு களுக்குச் செல்ல, போக்குவரத்துப் பாதிக்கப்படுகிறது. மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல இயலாமல் தவிக் கின்றனர். புயல் காற்றால் அவர்கள் தங்கள் வீடுகளை யும் இழந்து இராமேசுவரம் கோவிலில் பல நாள் தங்குவது வழக்கம்.

கடும் காற்று, அடை மழை, குளிர் இவற்றால் ஆடு மாடுகள் இறக்கின்றன. வாயில்லா உயிரினங்களின் நலம் பேணும் எஸ். பி. சி. ஏ. போன்ற அமைப்புக்கள் இவ்வட்டத்தில் பணியாற்றலாம்.

இவ்வட்டத்தில் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் முஸ்லிம்கள் உள்ளனர். கிறிஸ்தவர்களும் பல்லாயிரம் பேர் வாழ்கிறார்கள்.

பொதுவாக இது மறவர் நாடு. மறவர் போர்ப் பயிற்சி செய்யும் களரிகள் இவ்வட்டத்தில் உள்ளன.

இவ்வட்டத்தின் மக்கள் தொகை இரண்டு லட்சம். இம்மாவட்டத்தில் மிகக் குறைந்த மக்கள் தொகையுடையது இவவட்டமே. எட்டிவயலிலிருந்து ஆற்றங்கரை வரை இருபது மைலுக்கு வைகை ஆறு இவ்வட்டத்தில் பாய்கிறது. ஒரு சில பகுதிகளில் நன்செய் வேளாண்மையும் கீழ்காடு பகுதியில் புன்செய் வேளாண்மையும் நடைபெறுகிறது.

இராமேசுவரம் தீவு, குருசடைத் தீவு, முயல் தீவு, கச்சத் தீவு முதலிய பல தீவுகள் இவ்வட்டத்தில் உள்ளன.

பல பகுதிகளில் மண் உப்பாய் இருப்பதால், உப்புக் காய்ச்சுவது ஒரு தொழிலாக நடைபெற வில்லை, சுல்தான்கள், மரக்காயர்கள், சாமியார்கள் மிகுந்தது இவ் வட்டம். சாமியார்கள் என்பது பரம்பரைப் பட்டம்; அவர்கள் துறவிகள் அல்லர். இராமநாதபுரம் அரசரின் உறவினர் அக்காரணத்தால் ஆங்காங்கு செல்வாக்குப் பெற்றுள்ளனர். அவர்களை, மரியாதையாக 'சாமி' என்று பிறர் அழைத்தனர். சாமி ஆர் விகுதி பெற்றுச் சிறப்புப் பெயராய் வழங்கிவருகிறது.

பல ஊர்களில் சுல்தான்கள் உள்ளனர்.

சித்தார் கோட்டை சுல்தான்
சக்கரக்கோட்டை சுல்தான்
பனைக்குளம் சுல்தான்
மண்டபம் மரக்காயர்.

இவர்களுடைய செல்வாக்கு அளவுகடந்தது. இவர்களை மீறி இங்கு எச் செயலும் செய்ய இயலாது. சென்னைக் கோட்டையில் எந்த அரசு பதவியிலிருந்தாலும் அவர்கள் இங்கு வரிவசூலித்துக் கொள்ளலாம்; அந்த அளவோடு அந்த அரசின் அதிகாரம் முற்றுப் பெறுகிறது.

சில ஈற்றுச் சொற்களுடன் பல ஊர்கள் இருப்பது, இவ்விடத்தின் இயற்கை நிலையைப் புலப்படுத்தும் :

பட்டினம்	குளம்	தருவை
மரக்காயர் பட்டினம்	தாமரைக்குளம்	வாலாந்தருவை
பெரிய பட்டினம்	செம்படையார் குளம்	உத்தருவை
தேவிபட்டினம்	பனைக்குளம்	பத்திராதருவை
	அழகன் குளம்	தெற்குத்தருவை
	திணைக்குளம்	
	ஆலங்குளம்	
	பெருங்குளம்	

கோட்டை	ஊரணி	வலசை
சித்தார்கோட்டை	கழுகு ஊரணி	சாத்தக்கோன் வலசை
சக்கரக்கோட்டை	நெட்டை ஊரணி	பிரப்பன் வலசை
குதக்கோட்டை	இருட்டூரணி	

இராமநாதபுரம் வட்டத்தில்:

(1) இராமநாதபுரம் நகர்.

(2) இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம்.

(3) திருப்புல்லணை ஊராட்சி ஒன்றியம்.

(4) மண்டபம் ஊராட்சி ஒன்றியம்.

(5) இராமேசுவரம் நகரியம் ஆகியவை அடங்கியுள்ளன.

இராமநாதபுரம் நகரம் :

1959-இல் இங்கு ஒரு நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. மக்கள் தொகை 30,000.

ஊர்ப் பெயர்: இந்நகருக்கு முகவை என்றும் பெயர் உண்டு. இக்காரணத்தால் இராமநாதபுர மாவட்டத்தை "முகவை மாவட்டம்" என்று பலர் எழுதி வருகின்றனர்.

இராமநாதபுரம், வைகை ஆற்றின் முகத்தில் உள்ள ஊர். காவிரி புகும் இடம் புகார் ஆனாற்போல, நிலம் கடலினை முகக்கும் ஊர் முகவை ஆயிற்று என்பர். இராமநாதபுரமே கடல் துறைமுகமாக இருந்து பிறகு நிலப்பகுதி பெருகி கடல் பெரியபட்டினம் பகுதிக்குச் சென்று சுருங்கிவிட்டதாகவும் கூறுவர்.

நாரை பறக்காத 48 ஊர்களுக்குப் பாய்ந்த பிறகு வைகை ஆறு, இராமநாதபுரம் பெரிய கண்மாயில் சங்கமமாகி அந்தக் கண்மாயிலிருந்தவாறு கடலில் கலக்கிறது. இந்நகரிலிருந்து 5 கி. மீ. தொலைவில் முகவை ஊரணி என்னும் ஊரணி இருக்கிறது.

இராமநாதபுரம் என்ற பெயர் இராமேசுவரத்தில் கோவில் கொண்டிருக்கும் இராமநாத சுவாமியின் பெயரால் ஏற்பட்டது என்பர்.

அமைப்பு: இராமேசுவரம், தனுஷ்கோடி, தேவிபட்டினம், திருப்புல்லணை, திருஉத்தரகோசமங்கை ஆகிய தலங்களுக்குச் செல்வதற்கு இந்நகர் வாயிலாக இருக்கிறது. இந்நகரில் எப்போதும் கடற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது.

எங்கும் இராமநாதபுரம்: ஊர்ப்பெயர் மறவர்வீரத்தைக் குறிக்கிறது. இந்நாளில் எங்காவது கலகங்களை அடக்கு வதற்குப் படை தேவைப்பட்டால் சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் அல்லது மலபார் ஸ்பெஷல் போலீஸ் படையை அரசினர் அனுப்புகின்றனர். இது போல பல நூற்றுண்டு களாக தென்னிந்தியாவெங்கும் படையெடுக்கவும் அமைதியைப் பாதுகாக்கவும் ஆட்கள் தேவைப்பட்ட போது இராமநாதபுரத்திலிருந்து மறவர் படை அனுப் பப் பெற்றது. அந்த ஊர்களில் இவ்வீரர்கள் தங்கிய இடங்கள் இராமநாதபுரம் என்று பெயர் பெற்றன. எனவே இராமநாதபுரம் என்னும் சொல் படை வீடு அல்லது கண்டோன்மெண்டு என்று பொருள் படும்.

இராமநாதபுரம் என்னும் பெயருள்ள ஊர்கள் இருக்கும் இப்பகுதிகள் சிலவற்றைக் கூறுவோம்.

(1) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் வாசுதேவ நல்லூர் ஒன்றியம்.

(2) திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம் தூத்துக்குடி ஒன்றியம்.

(3) மதுரை மாவட்டம் திண்டுக்கல் அருகே வெ. இராமநாதபுரம்.

(4) செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டம் பென்னலூர்ப்பேட்டை அருகே.

(5) கோயமுத்தூர் நகரில் ஒரு பகுதி.

(6) மைசூர் மாநிலத்தில் குடகுப் பகுதியில் இராம நாதபுரம் என்று ஓர் ஊர் உண்டு. இது ஆதிசங்கரர் எந்திரம் பிரதிஷ்டை செய்த தலம்.

இன்னும் பல ஊர்களும் உள்ளன,

இம்மாவட்டத்தார் வெளி நாடுகளில் தாங்கள் குடியேறிய பகுதிகளிலும் இராமநாதபுரம் என்னும் பெயரில் ஊர் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். மலேசியாவில் நெகிரி செம்பிலான் இராச்சியத்தி லுள்ள ஒரு சிற்றூரின் பெயர் இராமநாதபுரம்; இங்கு வாழும் தமிழர்கள், வேறு (ரப்பர்த்) தோட்டங்களில் வேலை செய்து கொண்டு இங்கு தங்கள் சொந்த நிலங் களில் கலப்புப் பண்ணைகளை நடத்தி வருகின்றனர். இவர்களுடைய பொருளாதார நிலை பற்றி ஆஸ்தி ரேலியாவில் ஒரு பல்கலைக்கழகம் ஆராய்ச்சி செய்திருக் கிறது.*

வரலாறு: சேதுபதிகளின் உறைவிடமாய் இருப்பது இந்நகரின் சிறப்பு. சேதுபதிகளின் ஆதி வரலாறு தெளி வாகத் தெரியவில்லை. காலத்தால் அவர்கள் அவ்வளவு பழமையானவர்கள். காசி விசுவநாதரை வழிபடுபவர்கள் காசி மகாராஜாவையும் காட்மண்டு பசுபதிநாதரை வழிபடுபவர்கள் நேபாள மன்னரையும் வழிபடுவது போல இராமேசுவரத் தலயாத்திரையை மேற்கொண்ட வர்கள் இராமநாதபுரத்திற்கு வந்து சேதுபதிகளை வணங்கி வழிபடுவது பல நூறு ஆண்டுகளாக நேபாளத் திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வருபவர்களின் மரபு.

சில ஆண்டுகளுக்கு முன் வரை இராமநாதபுரம் ஒரு ஜமீன்தாரி, தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய ஜமீன் களில் ஒன்றாக இருந்தது. இதன் பரப்பு 2,014 சதுர

*இராமநாதபுரம் பரிசோதனை—மலேயாவில் தோட்டம் —பண்ணைத் தொழிற்சாலை சமூகத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு—K. R. ஜெயின், சமூகவியல் துறை, நியூ இங்கிலாந்து பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா.

மைல். இராமநாதபுரம், திருவாடானை, பரமக்குடி, திருச்சுழி, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் என்ற ஜமீன் வட்டங்கள் இருந்தன. இப்பகுதியில் ஆண்டுக்கு 40 லட்சம் ரூபாய் வரி வசூல் செய்யப் பெற்றது.

சிவகங்கை ஜமீன் இராமநாதபுரத்திலிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டதே. அதற்குமுன் இம்மாவட்டத்தின் கடற்பகுதி முழுவதும் இந்த ஜமீனிலேயே இருந்தது.

1772-இல் இராமநாதபுரம் நகரை ஜெனரல் ஸ்மித் என்பவர் கைபற்றிக் கொண்டார். 1792 வரை ஆங்கிலேயரின் இராணுவத் தளமாக இருந்தது.

கிழவன் சேதுபதி காலத்தில் கோட்டையும் படைகள் தங்க மூலக்கொத்தளமும் இருந்தன. இப்போது அவை மறைந்து விட்டன. உள்பட்டினம், வெளிப்பட்டினம்; பட்டினம் காத்தான் என்ற பெயர்கள் மட்டும் நிலவுகின்றன.

7-9-1949இல் இராமநாதபுரம் ஜமீன் தமிழக அரசால்எடுத்துக் கொள்ளப்பட்டது. நஷ்டஈட்டுத் தொகை 47 லட்சம் ரூபாயாக முடிவு செய்யப் பெற்றது. பிற ஜமீன்களைப் போலன்றி இந்த ஜமீனை ஆண்ட சேதுபதிகளின் மீது எப்போதும் மக்கள் பேரன்புடன் இருக்கிறார்கள். இதற்கு இவர்களுடைய தெய்வத்தன்மையும் ஈகையும் காரணம் எனலாம். "அரிச்சந்திர புராணம் குறிப்பிடும் லோலன் ஆறில் ஒரு பங்கு வாங்குவான், சேதுபதி பன்னிரண்டில் ஒரு பங்கு வாங்குவான்" என்பது பழமொழி.

சேதுபதிகள் எப்போதும் இராமநாத சுவாமியின் நினைவாகவே உள்ளவர்கள். இராமநாத சகாயம் என்று எழுதியே கையெழுத்து இடுவார்கள். திருவிதாங்கூர்

மகாராஜாவுக்குப் பத்மநாபதாசன் என்ற பட்டம் இருப்பதுபோல சேதுபதிகளுக்கு பர்வதவர்த்தினிதாசன் என்ற பட்டம் உண்டு.

சேதுபதியின் அரண்மனையும் அதனுள்ள கோவிலும் இராமலிங்க விலாசம் என்னும் மாளிகையும் காணத்தக்கன.

கோவில்கள்

இராஜராஜேசுவரி கோவில்

64 சக்தி பீடங்களுள் இராமநாதபுரம் ஒன்று. இக் கோவிலால் இந்நகர் இப்பெருமை பெற்றிருக்கிறது. அரண்மனையுள் உள்ள இக்கோவிலில் சேதுபதிகள் நாள் தோறும் வழிபடுவது மரபு. திருமலைநாயக்கருக்கு நெருக்கடியான ஒரு நேரத்தில் சேதுபதிகள் படை உதவினர். அதற்குப் பரிசாக திருமலைநாயக்கர் ஒரு துர்க்கையை சேதுபதிகளுக்குக் கொடுத்தார். துர்க்கைக்கு நரபலி கொடுக்க வேண்டியிருந்ததால் பிற்காலத்தில் சிருங்கேரி சங்கராச்சாரியாரின் ஆணையின் வண்ணம் இந்த உருவம் இராஜ ராஜேசுவரியாக மாற்றப் பெற்றது.

இராஜராஜேசுவரி உருவம் $1\frac{1}{4}$ அடி உயரம். சொக்கத் தங்கத்தினல் ஆனது.

நவராத்திரிவிழா இங்கு பெரிதாக நடைபெறுகிறது.

பிற கோவில்கள்

பாலசுப்பிரமணிய சுவாமிகோவில்: இது பாஸ்கர சேதுபதியால் கட்டப்பட்டது.

வனசங்கரி அம்மன் கோவில்: இக்கோவிலுக்கு விடப்பட்ட கிராமங்கள் சிவகங்கை ஜமீனில் உள்ளன.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்: இதில் பெரிய தண்டபாணி, வல்லப விநாயகர் உருவங்கள் உள்ளன.

முத்துராமலிங்க சுவாமி கோவில்; ஊரின் கிழக்குப் பகுதியில் வெளிப்பட்டினத்தில் உள்ளது.

கோட்டை வாசல் பிள்ளையார் கோவில்.

தாயுமான சுவாமி கோவில்

தாயுமானவர் அவருடைய கடைசி காலத்தில் இங்கே இருந்ததாக கூறுவர். லெட்சுமி புரத்தில் அவருடைய சமாதி இருக்கிறது. 1581-இல் தாயுமான சுவாமி பரிபூரணம் அடைந்ததாக அதில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. லெட்சுமி அம்மாள் என்பவர் இச்சமாதிக்கு அருகே ஊரணி வெட்டி படித்துறை அமைத்ததால் இப்பகுதிக்கு லெட்சுமிபுரம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இக்கோவில் நெடுங்காலம் துறவிகள் கையில் சிக்கிக் கிடந்த பின், தாயுமானசுவாமி சன்மார்க்க சங்கத்தின் ஆட்சியில் இருந்துவருகிறது. இப்போதைய சேதுபதி சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்திருக்கிறார். தைமாதம் குருபூஜை நடைபெறுகிறது. திருப்பனந்தாள் ஆதீனத் தார் இங்கு ஒரு நூல்நிலையத்தை நடத்தி வருகின்றனர்.

இராமலிங்க விலாசம்

இம்மாளிகையில் இராமநாதபுரம் சீமைக்கும் தஞ்சைச் சீமைக்கும் நடந்த போர்க் காட்சிகள் வண்ண ஓவியமாகத் தீட்டப் பெற்றிருக்கின்றன. 64 காமலீலைகளின் ஓவியங்களும் உள்ளன.

ஸ்ரீஇராமபிரானால் முதல் சேதுபதிக்கு மகுடம் சூட்டப்பெற்ற போது குகசேதுபதி அமர்ந்திருந்த கல் இங்கே இருக்கிறது. நேபாளம், பூட்டான், மைசூர்

மன்னர் முதல் சாமானியர்களான யாத்திரிகர் வரை அனைவரும் சேதுபதிகளை இங்குதான் வணங்குவது வழக்கம்.

சங்கர விலாசம்: இது விவேகானந்த சுவாமிகள் தங்கியிருந்த மாளிகை.

பஞ்சாங்கம்

இராமநாதபுரம் சமஸ்தான ஜோதிடர்கள் 1,000 ஆண்டுகளுக்குமுன் பஞ்சாங்கம் கணித்து ஏட்டில் எழுதியிருக்கின்றனர். இது இராமநாதபுரம் அசல் பஞ்சாங்கம் என்ற பெயரில் ஆண்டுதோறும் சேதுபதி அவர்களுடைய முத்திரையுடன் வெளியிடப்பெற்று, இம்மாவட்டத்தில் பெரும் புகழ் பெற்றிருக்கிறது.

இலங்கைத் தொடர்புடையவர்கள், சோதிடப் புலமையிலும் சோதிடக்கலைச் சண்டைகளிலும் வல்லுநர்களான யாழ்ப்பாணத்தார் வெளியிடும் யாழ்ப்பாணம் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பிறமதங்கள்

The Most Holy Rosary Christ Church என்ற கத்தோலிக்க தேவாலயமும் Christ Church என்ற தென்னிந்திய திருச்சபையின் தேவாலயமும் இந்நகரில் உள்ளன.

வாணிகம்-தொழில்

இவ்வூர்தான் தமிழ்நாட்டுக்கே மிகப்பெரிய மிளகாய்ச் சந்தை. ஆண்டு ஒன்றுக்கு 75 லட்சம் ரூபாய் வரை பங்குனி, சித்திரையில் மிளகாய் சாகுபடி செய்து ஆறு மாதங்களுக்கு விற்கிறார்கள். மாசி முதல் ஆடிவரை

எள், தட்டை, கருப்புக்கட்டி, பனைவெல்லம் முதலிய வியாபாரம் நடைபெறுகிறது. தீவுகள் உள்பட இவ் வட்டத்திலுள்ள அனைவரும் இங்கே பொருள்களை வாங்கு கிறார்கள். தேங்காய் வியாபாரம் இங்கு பெரிய அளவில் நடைபெறுகிறது. புதன்கிழமை தோறும் சந்தை கூடுகிறது. இங்கு மலிந்தவை கத்தரிக்காய், கீரை, மீன்.

அரசாங்க அலுவலகங்கள்

இராமநாதபுரம், முதுகுளத்தூர் ஆகிய இரு வட்டங்கள் அடங்கிய இராமநாதபுரம் கோட்ட அலுவலகம் இங்கு இருக்கிறது. இராமநாதபுர மாவட்டம் ஏற்படுமுன்பும் இங்கு வெள்ளைக்கார கலெக்டர்கள் இருந்தார்கள். முனிசீபின் நீதிமன்றம், மாவட்ட மருத்துவமனை, மாவட்ட மருத்துவர் அலுவலர் அலுவலகங்களும் இன்னும் பல அலுவலகங்களும் இங்கு உள்ளன.

இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம்

இது வடக்கே இராஜ சிங்கமங்கலம் ஒன்றியம், கிழக்கே கடலும் மண்டபம் ஒன்றியமும், தெற்கே திருப் புல்லணை ஒன்றியம், மேற்கே போகலூர் ஒன்றியமும் சூழ 102 சதுர மைல் பரப்பில் அமைந்து, 40,000 மக்களை உடையது. ஒன்றிய அலுவலகம் இராமநாதபுரம் இரயில் நிலையத்துக்கு அருகே இருக்கிறது.

இராமநாதபுரம் (மேற்கு), தேவிபட்டினம் பிர்க் காக்களைச் சேர்ந்த 25 ஊராட்சி மன்றங்கள் இவ்வொன் றியத்தில் அடங்கியுள. பேரூராட்சி ஒன்றும் இல்லை. இராமநாதபுரம் பெரிய கண்மாய், சக்கரக்கோட்டைக் கண்மாய் இரண்டும் இவ்வொன்றியத்தில் உள்ளன. இக் கண்மாய்களின் பாசனப் பகுதியில் மட்டும் இரண்டு

போகம் விளைகிறது. பிற பகுதிகளில் கம்பு, கேப்பை கேழ்வரகு, சோளம், மிளகாய், மல்லி, கொற்றமல்லி பயிரிடப்படுகின்றன. சில ஊர்களில் மா, எலுமிச்சை, பலாத் தோட்டங்கள் உள்ளன.

ஈக்கி நாரைக் கொண்டு பாய் மிடைதல் இங்கு ஒரு பெரிய தொழில். தேவிபட்டினத்தில் மீன்பிடி தொழில் நடைபெறுகிறது. பல ஆண்டுகளில், தீபாவளிச் சமயம் புயல் காற்று அடிக்கிறது.

பிசிர்குடி: இவ்வூர் இராமநாதபுரத்துக்கு அருகே இருக்கிறது. பிசிராந்தையார் இவ்வூரினர் என்பர்.

புல்லாங்குடி: இது காஞ்சி காமகோடி மடத்துக்கு உரிய ஊர்களுள் ஒன்று.

பெருவயல்: தேவகோட்டை—தேவிபட்டினம் சாலையில் இருக்கிறது. இங்குள்ள முருகன் கோவிலே, அருணகிரிநாதர் பாடல் பெற்ற வயலூர் என்பது சிலர் கருத்து.

சித்தார் கோட்டை: இராமநாதபுரத்திலிருந்து 7 மைல் தொலைவிலுள்ள சிற்றூர். பெரும்பாலும் முஸ்லிம்கள் வாழும் ஊர். பனையோலையால் பாய், குல்லா, கைப்பை ஆகியவற்றை அழகுபடச் செய்து இவ்வூரார் வெளி நாடுகளுக்கு விற்கின்றனர்.

சூரங்கோட்டை: இவ்வூரைச் சேர்ந்த முதுநா என்னும் சிற்றூரில் வண்ணான் ஒருவன் துணி துவைக்கும் போது, அவன் துவைத்துக் கொண்டிருந்த கல்லில் உளியின் ஒலி கேட்டதாகவும், விநாயகர் உருவம் இயற்கையாக உண்டானதாகவும் கூறுகிறார்கள்.

தேவிபட்டினம்: இராமநாதபுரத்துக்கு வட கிழக்கே 15 கி. மீ. தொலைவில் கடற்கரையிலுள்ள சிற்றூர். இவ்வழியாய் தேவகோட்டைக்குச் செல்லலாம்.

நவக்கிரகங்களைக் குறிக்கும் ஒன்பது தூண்கள் இவ்வூரில் கடலுக்குள் உள்ளன. இதனால் இவ்வூருக்கு 'நவபாசானம்' என்ற பெயரும் உண்டு. இராமபிரான் இங்கு வந்து வழிபட்டபோது இத்தூண்களை நிறுத்தியதாகக் கூறுவர். பயபக்தியுள்ள இந்துக்கள் இவ்வூரை, காசியைப் போலவே புனிதமாகக் கருதுகிறார்கள். இதனால் இவ்வூரில் வட இந்தியர்களும் பல மன்னர்களும் பல சமூகத்தினரும் சத்திரங்கள் நிறுவியுள்ளனர்.

கிரகசாந்தி செய்ய விழைவோரும் இராமேசுவரப் பயணிகளும் இங்கு வந்து சக்கரைத் தீர்த்தத்தில் நீராடுகிறார்கள். இந்தத் தீர்த்தத்தில் நீராடிய பிறகே கடலில் நீராடவேண்டுமென்பது மரபு. கடலை அசுத்தம் செய்வது குற்றம். எனவே கடலில் நீராடுமுன் தூய்மையாக இருக்க வேண்டுமென்று நம் முன்னோர் இவ்வாறு செய்தார்கள். ஓட்டமும் நடையுமாயிருக்கிற இந்நாளில் யார் இதையெல்லாம் பொருட்படுத்துகிறார்கள்? மைசூர் மகாராஜா போன்றவர்கள் விதிவிலக்கு.

ஊர் ஓரத்தில் உலகம்மன் கோவில் இருக்கிறது. இதில் கோவில் கொண்டுள்ள அம்மன் தானே தோன்றியது என்பர். எனவே இது தேவி பிறந்த ஊர், தேவிபட்டினம் என்பர். இந்த அம்மனுக்கு அபிஷேகம் கிடையாது. அபிஷேகத்தைத் தாங்கக்கூடிய பொருள்களால் அது உருவாகாததே காரணம். இந்த அம்மன் மிகப் பழமையானது; தொன்று தொட்டு அந்தணர் உள்பட பல இனத்தார்க்கு குலதெய்வம். இக்கோவிலில் மாணிக்கவாசகர் திரு உருவம் இருக்கிறது. திலகேசுவரர் கோவிலும் இவ்வூரில் புகழ் பெற்றது.

விசுவநாத நாயக்கன் மகனான குமார கிருஷ்ணப்பன் காலத்தில் கண்டி (சிங்கள) மன்னனை அடக்க, பாளையக்

காரர்கள் படையனுப்பினர். அப்படைகள் யாவும் இங்கிருந்து நாவாய் ஏறி இலங்கையிலுள்ள மன்ஞர் என்னுமிடத்தில் இறங்கினர். அக்காலத்திய கல்வெட்டுக் களில் இது காணப்படுகிறது.

20-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இலங்கை அரசினர் ஆண்டுதோறும் சில மாதங்கள் இவ்வூரில் குவாரண்டைன் 'காம்பு' நடத்தினர்.

தமிழ் நாடு அரசாங்க வேளாண்மைத் துறையினர் 1961-இல் நான்கு ஏக்கர்ப் பரப்பில் தென்னம் பண்ணை தொடங்கி தென்னம்பிள்ளைகளை வழங்கி வருகின் றனர்.

ஊராட்சி ஒன்றியத்தார் ஒரு பழத்தோட்டம் நடத்துகின்றனர்.

இவ்வூரில் வாழ்பவர்களில் பாதிப்பேர் முஸ்லிம்கள். மேலப்பள்ளி வாசல் என்ற பெரிய மசூதியும் கீழப்பள்ளி வாசல் என்ற சிறிய மசூதியும் இங்கு உள்ளன. கரை யோரமாக மீன் பிடிப்பதும் சங்கு குளிப்பதும் இங்கு நிலவும் தொழில்கள்.

திருப்புல்லணை ஊராட்சி ஒன்றியம்:

இது 110 சதுர மைல் பரப்பும், 70,000 மக்களும் கொண்டது. கீழக்கரைப் பேருராட்சியும் 32 ஊராட்சி மன்றங்களும் உடையது.

கீழக்கரை: இராமநாதபுரத்திலிருந்து 15 கி. மீ. தொலைவு. சிறு துறைமுகம். அருகேயுள்ள கரையோரப் பட்டினங்களுக்கு இங்கிருந்து படகுகளில் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. பாண்டியர்களின் பண் டைத் துறைமுகமான 'கொற்கை' என்பது இவ்வூரே என்றும் இவ்வூர் வழியாக கிரீஸ், ரோம், சீஞ முதலிய

நாடுகளுக்கும் பாண்டி நாட்டுக்கும் வாணிகம் நடந்ததாயும் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். வேறு சிலர் முத்து, பவளம், வாசனைப் பொருள் முதலியன இங்கிருந்து வெளி நாடுகளுக்குச் சென்றன என்பர். இக்காலத்தில் திசை தவறிவரும் சிறு கப்பல்கள் இத் துறைமுகத்தில் தங்குகின்றன.

இவ்வூர் சில காலம் டச்சுக்காரர்கள் கையில் இருந்தது. அவர்கள் நடத்திய பழைய தொழிற்சாலை ஒன்றின் அறிகுறிகளை இங்கு இன்றும் காணலாம். இவ்வூர்க் கடற்கரை அருகே தமிழ் மூவேந்தர்களின் நாணயங்களும் மேனாட்டு நாணயங்களும் அகப்பட்டிருக்கின்றன.

16-ஆம் நூற்றாண்டில், திருச்செந்தூரில் வாழ்ந்த பிராமணர் பலர் இவ்வூருக்குக் கொண்டு வரப்பட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவச் செய்யப்பட்டனர் என்பர்.

இந்நூற்றாண்டில் அரேபியாவிலிருந்து பல வணிகர்கள் மரக்கலங்களில் கடற்கரைப் பகுதிகளுக்கு வந்தனர். அவர்களே பிற்காலத்தில் மரக்காயர் ஆயினர். அவர்களில் சிலர் இங்கு தங்கி, சென்னையில் கிழக்கிந்திய கம்பெனியுடன் பெரிய அளவில் வியாபாரம் செய்தனர். இத்தகைய சிறப்புக்குரிய வணிகர்களில் ஒருவரான சையது ஜாதிர் என்ற பெரிய தம்பி மரக்காயர் நொண்டி நாடகம் என்ற இலக்கியத்தைப் பாடியுள்ளார். சென்னப் பட்டினம் என்ற பெயர் முதல் முறையாக தமிழ் நூல் ஒன்றில் காணப்படும் பழமையான தமிழ் இலக்கியம் இதுவே என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

செந்தமிழ் வளர்த்த சீதக்காதி வள்ளல் இவ்வூரினரே. சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவரோடு, நமச்சிவாயப் புலவர், கந்தசாமிப் புலவர், படிக்காசுப் புலவர் ஆகியோரையும் ஆதரித்தவர்.

முஸ்லிம்களில் பெருஞ்செல்வர் சிலர் உள்ளனர். அவர்களுள் நெடுங்காலமாகக் கடல் வாணிகத்தில் ஈடுபட்டும், இலங்கையில் தொழில் செய்தும் பொருளீட்டியவர் சிலர். வேறு சிலர் வெளி நாட்டு வாணிகத் தொடர்பு கொண்டும் தங்க வணிகம் செய்தும், தூத்துக்குடியில் போய் முத்துச் சிலாபம் எடுத்தும் தொழில் செய்து வருகின்றனர். இவர்களில் ஒரிருவர் தம் மாளிகைகளில் வலம்புரிச் சங்கையும் கடலின் கண்ணுள்ள பிற அரிய பொருள்களையும் காணலாம்.

இவ்வூரில் சங்கு மால்கள் உள்ளன. சங்குகளை அறுத்து மாலை, வளையல், மின்சார விளக்கு மூடி ஆகியவை செய்து இவ்வூரில் பலர் பிழைக்கின்றனர். இப்பகுதியிலிருந்து சங்குகளை வாங்கிப் போய் வளையல் செய்வதில் வங்காளிகள் சிறந்து விளங்குகின்றனர்; தம் தொழிலில் தமிழ் நாட்டவர்க்குப் பயிற்சி கொடுக்க அவர்கள் இசையவில்லை.

கிறிஸ்தவர் சிலரும் இங்கு வாழ்கின்றனர். முஸ்லிம்கள் பாய் நெய்தலில் சிறந்து விளங்குகின்றனர். மீன் பிடித்தல், படகு ஓட்டுதல், ஓடு, செங்கல், மண்பானை செய்தல்—இவ்வூரின் பிற தொழில்கள்.

இவ்வூரில் இருப்பவை: சுங்க அலுவலகம், பத்திரப் பதிவு அலுவலகம், சிமிண்டு குழாய் செய்யும் தொழிற்சாலைகள், 32 தெருக்களிலும் தெருவுக்கு ஒரு பள்ளிவாசல், காட்டு ஆஸ்பத்திரி என வழங்கும் குட்ட நோய் மருத்துவமனை.

இவ்வூரில் நினைத்தது முடித்த விநாயகர் கோவில் இருக்கிறது.

ஊராட்சி மன்றங்கள்:

களரி

இவ்வூர் உத்தரகோச மங்கைக்கு அருகே இருக்கிறது. களரிக் கண்மாய் மூன்று மைல் சுற்றளவினது. பழந்தமிழர் இசை நூலின் ஒன்றின் பெயர் களரியாவிறை

சேதுக்கரை:

இவ்வூருக்கு ஆதிசேதுக்கரை என்றும் பெயர் உண்டு. சுவையான இளநீராலும் இராமர் கட்டிய அணையாலும் இவ்வூர் புகழ் பெற்றது. இக்கடற் பகுதிச்கு ரத்ஞகரம் என்றும் அதற்கு அப்பாலுள்ள பகுதிக்கு மகோததி என்றும் பெயர்.

இங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் இராமபிரான் கட்டிய அணையின் பகுதிகள் கடலுக்குள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

திருப்புல்லணைக்கும் சேதுக்கரைக்கும் இடையே அகத்தியர் கோவில் ஒன்று இருக்கிறது. விக்கிரகத்தின் மேல் பகுதி வெண்மையாயும் கீழ்ப் பகுதி கறுப்பாயும் இருக்கிறது.

திரு உத்தரகோச மங்கை

'கடவுளுக்கு ஊர் எது?' என்ற வினவுக்கு விடையாக, உத்தரகோச மங்கையே என்று மாணிக்க வாசகர் விடை கூறுகிறார். அடியார்களெல்லாம், 'சிவபுரம் போலப் போற்றும் ஊர்' என்றும் அவர் கூறுகிறார். 38 இடங்களில் திருஉத்தரகோச மங்கையை மாணிக்க வாசகர் பாடியுள்ளார். நீத்தல் விண்ணப்பத்தில் இருபது பாடல்கள் 'உத்தரகோச மங்கைக்கு அரசே, என முடிகின்றன.

கட்டிடங்களாலும் பெரிய மாளிகைகளாலும் புகழ் பெறுவதைவிட, பெருமக்களாலும் சான்றோர்களாலும் ஊர்கள் புகழ் பெறுகின்றன. சான்றாக, சிற்றூராகிய சேவா கிராமமும் பிற சிறப்புக்கள் இல்லாத போரி பந்தரும் பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறுவது போல், காந்தி மகானால் நிலைத்த புகழ் பெற்றிருக்கின்றன. இவ்வாறே மணிவாசகப் பெருமானால் புகழ் பெற்றதலம் திருஉத்தரகோச மங்கை. பன்னிரு திருமுறைகளில் தலை சிறந்த பாக்கள், மணிவாசகர் பாடிய பக்திப் பாடல்களே. அவருக்கு மூலத்தானமுமே உற்சவ உருவமும் இங்கு உள்ளன. மார்கழியில் அவருக்குத் திருவிழா எடுக்கப் பெறுகிறது, அவருக்கு அஷ்டமாசித்தியான இடம் இதுவே.

இச்சிற்றூர் இராமநாதபுரத்துக்குத் தென்மேற்கே 10 மைல் தொலைவில் உள்ளது. உத்தரகோச மங்கை இரயில் ஹால்ட் என்று சிறு நிலையம் உளது; ஆனால் அங்கிருந்து, கோவிலுக்குச் செல்ல ஒரு வசதியும் இல்லை.

இவ்வூர் ஒரு காலத்தில் பாண்டியர் தலைநகரமாயிருந்தது என்பர். மதுரையை ஆண்ட நாயக்க மன்னர் கல்வெட்டுக்கள் இவ்வூர்க் கோவிலில் உள்ளன.

'மணவை' என்ற பெயரும் இவ்வூருக்கு வழங்கி வந்திருக்கிறது. இலங்கையை ஆண்ட பரராஜசிங்கம் தாயார் பிறந்த ஊர் இதுவே.

கோவிலின் பெயர் 'மங்களேசுவர சுவாமி' கோவில். இதன் பரப்பு 15 ஏக்கர் (மதுரை மீனாட்சி அம்மன் கோவில் 25 ஏக்கர். தில்லை நடராசர் கோவில் 40 ஏக்கர்.) இக்கோவில் கோபுரத்தின் உயரம் 124 அடி. (ஸ்ரீவில்லிபுத்தூர்—192 அடி).

'மங்கை முந்தியோ மண் முந்தியோ' என்ற வசனம் இத் தலத்தைப் பற்றி உண்டு. இறைவனும் இறைவி யும் இங்கு தாமே தோன்றிய உருவங்கள்.

இறைவி மங்களாம்பிகை, நான்கு கரங்களும் பத்மபீடமும் உடையது.

இத்தலத்துக்குரிய சிறப்பு மரம், இலந்தை. இது இராவணன் காலத்திலேயே இருந்ததாகக் கூறுவர். இக் கோவிலுக்கு இன்னும் பல சிறப்புக்கள் உள்ளன. சனீசுவரர் மட்டுமே இங்கு உள்ளார். ஏனைய நவக்கிர கங்கள் இல்லை. சகஸ்த்ரலிங்கத்துக்குத் தனிக் கோவில் இருக்கிறது. சகஸ்த்ரலிங்கம் என்பது ஒரே கல்லில் வரிக்கு 20 ஆக அமைந்து 1,000 லிங்கங்கள் உடையது. இவ்வாறு மாணிக்கவாசகருக்கு இறைவன் காட்சி கொடுத்ததாகக் கூறுவர்.

மரகதத்தில் இரண்டும் ஸ்படிகத்தில் ஒன்றுமாக மூன்று சிவலிங்கங்கள் உள்ளன. இவற்றுக்கு மட்டுமே உச்சிக்கால அபிஷேகம் செய்யப்படுகிறது.

இங்குள்ள சண்முகருக்கு அருணகிரிநாதர் திருப் புகழ் உண்டு.

நடராசருக்கு இங்கு ஆதிசிதம்பரம் என்ற தனிக் கோவில் இருக்கிறது. மூலவராக நடராசர் கோவில் கொண்டிருப்பது இங்கு மட்டுமே. அறையில் ஆடி, பதஞ்சலி, வியாக்ரபாதகர், காரைக்கால் அம்மையார் ஆகியோருக்கு ஆடிக் காட்டி பிறகு அம்பலத்தில் ஆடினார் என்பர்.

கூந்தப்பிரானுக்கு இங்கு ஒவ்வொரு மாதத்திலும் திருவாதிரை நாளில் அபிஷேகம் நடைபெறுகிறது.

கூத்தப்பிரானுக்கு இங்கு ஒவ்வொரு மாதத்திலும் ஆருத்திரா தரிசனத்தன்று கல்ரத மண்டபத்தில்

சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகளும் மறுநாள் வீதியுலாவும் நடை பெறுகிறது. உற்சவருக்கு ஆருத்ரா தரிசன நாள் தவிர ஏனைய ஐந்து நாட்களில் அபிஷேகம் நடைபெறுகிறது. அந் நாட்களாவன:— சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் பூர்வ பட்ச சதுர்த்தசி.

நடராசர் கோவிலில் விமானரூடராக மாணிக்க வாசகருக்கு உமாமகேசுவரர் காட்சி கொடுத்ததாகவும் அப்போது அவர் நீத்தல் விண்ணப்பம் பாடியதாக வும் ஐதீகம்.

இக்கோவிலின் பெரும் சிறப்பால், 'ஆதிசிதம்பரம்' என்ற பெயர் இத்தலத்துக்கு உண்டு. இங்கு இறைவன் சந்நிதியிலிருந்து சிதம்பரத் தலத்துக்குச் சுரங்கப் பாதை இருந்ததாகவும் இப்போது அடைபட்டிருப்ப தாகவும் கூறுவர்.

தமிழ் மக்களின் கலைப் படைப்பில் தலையாயது நடராசர் திருவுருவத்தைச் சமைத்தது. இதில் மயங்கிய ஏனைய சமயத்தார் திருடியாவது இதைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டு போகிறார்கள். இந்த அழகுத் திருமேனியை மரகதத்திலேயே அமைந்திருக்கிற அருஞ் சிறப்பை உத்தரகோச மங்கையில் காண்கிறோம்.

சிவகாமி அம்மனும் மரகதத்தில் இருக்கிறது. நடராசர் உருவத்தின் உயரம் ஐந்து அடி. இதன் காலம் 3,000 ஆண்டு. இதன் மதிப்பு ஐந்து கோடி ரூபாய். இதை 'போட்டோ' எடுப்பது தடை செய்யப்பட்டிருக் கிறது. பீடமும் மரகதத்தால் ஆனது. எனவே மருந்து சாத்துவதில்லை. உடைந்து விடாமலிருப்பதற்

காக இதை எப்போதும் சந்தனக்காப்பிட்டு வைத்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒருநாள் ஆருத்ரா தரிசனத்தன்று மட்டும் பழைய மெய்ப்பூச்சைக் காலை 10 மணிக்குத் தொடங்கி பகல் 2 மணி வரை களைவர். பிறகு அபிஷேகம் செய்கிறார்கள். இரவு 8 மணி வரை அடியார்கள், திருமேனியைக் கண்டு களிக்கலாம். இந்நேரத்தில் மட்டுமே மரகதத்தின் திருமேனியை வழிபடும் வாய்ப்பு நல்கப்படுகிறது. பிறகு குருக்கள் பதின்மர் இருந்து அறவைச் சந்தனத்தைப் பூசுகின்றனர். இரவு 2 மணி அளவில் சந்தனக் காப்பிட்டு முடிந்ததும் முதலில் பசுவுக்கும் பின்னர் கன்னிப் பெண்ணுக்கும் அதன் பிறகு வேதகனபாடிகளுக்கும் சேதுபதி அரசருக்கும் அதற்கப்புறம் ஏனைய அடியார்களுக்கும் மரகத நடராசர் காட்சி கொடுக்கிறார்.

மரகத நடராசர் திருவுருவம் செய்வதற்கு உரிய மரகதம், சேதுசமுத்திரத்தில் கிடைத்திருக்கக் கூடும். இக் கடலில் மைனாக பர்வதம், ரத்னாகரம் என்ற பகுதிகள் இருப்பதாயும் ஐதீகம். சீதக்காதி வள்ளலுக்கு இந்தப் பாறை அகப்பட்டதாகவும் ஒரு கப்பல் அளவு வெட்டிக்கொண்டு வந்தார் என்றும் அவற்றைக் கீழக்கரைக் கடற்கரையில் வைத்திருந்தபோது பேரொளியாக அவை ஒளி வீசின என்றும் கூறுவர்.

தாய்லந்து நாட்டின் தலைநகரான பாங்காக்கில் புத்தருக்கு மரகதத் திருமேனி இருக்கிறது. அதன் உயரம் ஓர் அடிதான். நூற்றுக் கணக்கான விளக்குகளின் ஒளி அதன் மீது விழ செய்கிறார்கள். அந்த உருவத்திற்கு அபிஷேகம் கிடையாது.

இம்மாவட்டத்திலுள்ள நகரத்தாரிடம் மரகத விநாயகர் இருந்ததாயும் அவ்விக்கிரகம் இப்போது

நாகர்கோவில் பகுதியில் இருப்பதாயும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

மங்களேசுவரசுவாமி கோவில் கோபுர வாயிலில், சுரேஷ் என்ற வடநாட்டு முனிவர் சில ஆண்டுகளாகத் தவமிருந்து வருகிறார். இவர் கல்வியும் இறைப்பற்றும் நிரம்பியவர்.

உத்தரகோச மங்கையிலிருந்து கீழக்கரைக்குச் செல்லும் வழியில் ஏர்வாடி என்னும் ஊரில் ஒரு தர்க்கா இருக்கிறது. இது முன்னாளில் சுப்பிரமணியத்தலமாக இருந்தது என்பர். ஏறுபடி என்ற முருகன் தலமாக இது இருந்தது. முருகன் மீனாக வந்து பரதவர் வலையில் அகப்பட்டு கரையேறிய இடம் ஏறுபடி ஆயிற்று. இன்று கத்தோலிக்கராகவுள்ள இப்பரதவர் வலையை இழுக்கும் போது ஓவேலா காவேலா என்று வேலவன் பெயரைச் சொல்லியே இழுக்கின்றனர்.

கோவில் மூலையில் வைக்கும் கரணைக்கால்கள் உத்தர கோசமங்கைக் கோவிலில் புதைத்து வைக்கப்பட்டிருக் கின்றனவாம். வெடித்து விடாமல் இருப்பதற்காகவும் பிற்காலத் தேவைக்காகவும் இவ்வாறு செய்வது மரபு. இவை ஒவ்வொன்றும் பல்லாயிரம் ரூபாய் பெறும் என்பர்.

திருப்புல்லணை: இராமர், புல்லைத் தலையணையாக வைத்து உறங்கிய இடம். எனவே திருப்புல்லணை என்பதே இவ்வூரின் சரியான பெயர். இதைத் தவறாக திருப்புல்லாணி என்று பலர் எழுதி வருகின்றனர். வடமொழியில் இவவூருக்கு தர்பசயனம் என்ற பெயர் உண்டு. இவ்வூர் இராமநாதபுரத்திலிருந்து ஏழுமைல் தொலைவில் இருக்கிறது.

இங்குள்ள ஜகந்நாதப் பெருமாள் கோவில் திருமங்கையாழ்வார் பாடல் பெற்றது. இக்கோவிலில்

14-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. 64 மனைவியர்களுக்கும் 64 அறைகள் வைத்து சேதுபதி ஒருவர் 18-ஆம் நூற்றுண்டில் இங்கு கட்டிய அரண் மனையின் பாழடைந்த பகுதிகளைக் காணலாம்.

ஜகந்நாதப் பெருமாள் கோவிலிலுள்ள இராமர் விக்ரகத்திற்கு, இரத்திஞகரம் கடலில் கிடைத்த விலை மிக்க மணிகளால் செய்த காதணிகளை அணிவிக்கின்ற னர். இவற்றை பாஸ்கர சேதுபதி வழங்கியுள்ளார். விபீடணனும் சமுத்திர ராஜனும், இராமபிரானிடம் இங்கு சரணடைந்ததாக இவ்வூர்த் தலபுராணத்தில் கூறப்படுகிறது. கடல்கோளுக்குமுன் தனுஷ்கோடியில் இருந்த ராமர் விக்கிரகம் இக்கோவிலில் வைத்து வழிபடப் பெறுகிறது.

திருக்குறள் அதிகாரங்களைக் கட்டளை கலித்துறைச் செய்யுட்களால் பாடி இங்கு கோவில் கொண்டுள்ள தெய்வச்சிலைப் பெருமாள் பேரில் ஒரு புலவர் பாமாலை பாடியுள்ளார் 'திருப்புல்லணைமாலை' என்பது இதன் பெயர். திருப்புல்லணை இறைவனுக்குத் 'தென்னக் தமிழான்' என்ற பெயர் உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராயிருந்த டி. சி. சீனிவாசன் ஐயங்கார் (1876—1951) இவ்வூரினர்.

இவ்வூரருகே பால்குளம், மோர்க்குளம் என்னும் ஊர்கள் உள. மோர்க்குளத்தில் உப்பளம் இருக்கிறது.

பெரியபட்டினம்: கடலோரமாக உள்ள ஊர். புதை பொருள் ஆராய்ச்சிக்குரியது. மீன் பிடிப்பது இங்கு பெரிய தொழில். மீனவர்களும் படகோட்டிகளும் செழிப்பாக வளர்ந்து தென்னந் தோப்புகளின் உரிமை யாளராகி மேலும் வளமாக உள்ளனர்.

மோட்டார்க்காரின் 'ஹெட்லைட்' போன்ற கண் விழிகளையுடைய மீனும் கணவாய் (Sapio) மீனும், கூரிய முள் உடைய ஆவிலியா மீனும் இங்கு பிடிபடுகின்றன.

நல்லிருக்கை: இவ்வூரின் பெயர் கூர்ந்து கவனிக்கத் தக்கது. சேதுபதிகள் கட்டிய கோவில் ஒன்று இங்கு இருக்கிறது.

முத்துப்பேட்டை: உச்சிப்புளிக்கு அருகு. இங்கு ஒரு கத்தோலிக்கத் தேவாலயம் இருக்கிறது.

மண்டபம் ஊராட்சி ஒன்றியம்

இது 115 சதுர மைல் பரப்புடையது. தமிழ் நாட்டிலேயே மிகவும் பிற்பட்ட ஒன்றியமென்று இதைக் குறிப்பிடலாம். தீவுப் பகுதிகளும், அவற்றில் காடுகளும் உடை, பனை, தென்னை, முந்திரிப் பயிர்களும் கொண்டது. பட்டணம்காத்தான், பனைக்குளம், அழகன் குளம், புதுமடம், ரெட்டை ஊரணி ஆகிய ஊர்களில் நெல்லும் ஏனைய ஊர்களில் புன்செய்த் தானியங்களும் பயிரிடப்படுகின்றன. தீவுப்பகுதியின் விளைபொருள்கள் புளி, தேங்காய், சீனுவுக்கு சிங்கப்பூர் வழியாக ஏற்று மதியாகும் கடல் அட்டை (Sea—Slugs)

கீழக்கரையில் ஜிப்சமும் இந்த ஒன்றியத்தில் சுண்ணும்புக்கல்லும் இருந்தும் சிமிண்டு ஆலை அமைக்க முடியாதிருப்பதை இந்நூலின் பிறிதொரு பகுதியில் குறிப்பிட்டிருக்கிறோம்.

தீவுப்பகுதியின் இறக்குமதி: உணவுப் பொருள்; குடிதண்ணீர், இராமேசுவரம் கோவிலுக்கு அபிஷேகத் திற்கு கங்கை நீர்.

தீவுப் பகுதியின் போக்குவரத்து: படகு, ஜீப், மாட்டு வண்டி.

தீவின் சில பகுதிகளில் கருவாவல், சீலா, விரால், சுவைமிகுந்த வெள்ளை வௌவால் மீன்கள் பிடிக்கப் படுகின்றன. உச்சிப்புளிப் பகுதியில் பனந்தும்பு மட்டையை நாராக்கி வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். கயிற்றுப் பொருள்கள், பனை ஓலை, ஈக்கி ஆகியவற்றையும் வெளிநாடுகளுக்கு விற்கிறார்கள்.

இவ்வொன்றியத்தில் முஸ்லிம்களும் கிறித்தவர்களும் சில ஊர்களில் பெரும்பான்மையோராக உள்ளனர்.

இவ்வொன்றியத்தில் சேர்ந்திருந்த இராமேசுவரம், ஒரு நகரியமாக இருந்து வருகிறது. தனுஷ்கோடி அழிந்து விட்டது. இப்போது 29 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. யாவும் சிற்றூர்களே.

அழகன்குளம் : இராமநாதபுரத்திலிருந்து 9 மைல். இவ்வூரில் மருதுபாண்டியர் கட்டிய விநாயகர் கோவிலும், அவரது தாயார் பெயரால் அமைந்த ஆனந்தாயிச் சத்திரம் (இன்று சிவகங்கைச் சத்திரம் என விளங்குகிறது) முதலியனவும் உள்ளன.

கோட்டை மேடு உளது. பழங்காலத்துச்செங்கல் கற்கள், பட்டா நிலங்கள் தோண்டும்போது எடுக்கப் பட்டுள்ளன. இங்கு அழகேசராஜன் ஆண்டதாகக் கூறுவர். நாலு மந்திரக்கும்மி என்ற கதையில் இதைப் பற்றிக் கூறப்படுகிறது.

ஆற்றங்கரை: வைகையாறு இங்கு கடலுடன் கலக்குகிறது. பரிபாடல் இவ்வூரை விவரிக்கிறது. உப்பு நீர், வாழக்காய், ஊத்துக்காய் ஆகியவற்றுக்கு இவ்வூர் பெயர் பெற்றது. வேனிற்காலத்தில் ஆற்றுநீர் சுவையாக இருக்கும்.

என்மனம்கொண்டான்: இராமநாதபுரத்துக்கும் உச்சிப் புளிக்கும் இடைப்பட்டது. இங்கு முஸ்லிம்

பெரியவர் ஒருவர் அடங்கியிருக்கிறார். நாகூரில் சந்தனக்கூடு எடுக்கும்போது இங்கும் எடுப்பர். இவ்வூரினர் பலர் மலேயாவில் 'தேத்தண்ணிக்கடை' வைத்திருக்கின்றனர்.

கிருஷ்ணனுக்கு எட்டு மனம் உண்டென்றும் எனவே இந்த ஊர்ப் பெயர் 'எண்மனம் கொண்டான்' என்று சிலர் எழுதுகிறார்கள்.

மண்டபம்: இரயில் நிலையமுள்ள ஊர். எல்லா மாதங்களிலும் தென்றல் வீசுகிறது. பல சிறு தீவுகள் தென்மேற்குக் காற்றின் கொடுமையிலிருந்து இவ்வூரைக் காப்பாற்றுகின்றன. குறிப்பாக வடகிழக்குப் பருவக் காற்றின்போது இங்கு பெரும்புயல் அடிக்கும். கடலுக்கும் கரைக்கும் இடையே அழுத்தமான பவளப் பாறை விரிந்தும் பரந்தும் கிடப்பதால் இப்பகுதி புயல் சேதத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது.

மரக்கலத் தொழிலை பல தலைமுறையாகச் செய்து வரும் மரக்காயர்களும் மீன்பிடிப்பவர்களும் இவ்வூரில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எல்லோரும் முஸ்லிம்களே.

சேதுபதிகள் இராமேசுவரத்துக்குக் கால்நடையாகச் செல்பவர்களுக்கு வசதியாக ஒரு கல்மண்டபமும் தெப்பக்குளமும் கட்டினார்கள். அதனால் இவ்வூருக்கு 'மண்டபம்' என்ற பெயர் ஏற்பட்டது; தெப்பக்குளத்தையும் மண்டபத்தையும் இன்றும் காணலாம். எஞ்சிய பகுதியெல்லாம் நூறு ஆண்டுகளுக்கு முன்வரை காடாகவே இருந்தது.

இரயில்பாலம் போட்டிருக்கும் இடம் கால்நடையாகவே செல்லக்கூடிய பகுதியாயும் படகுகள் தங்கும் தோணித்துறையாகவும் இருந்தது. ஒரு புயலின்போது

இரு கடல்களும் பொங்கி எழுந்து ஆழமான ஜலசந்தி உண்டாயிற்று.

சுற்றியிருந்த காடுகளை அழித்தபிறகு இங்கு குடியேறியவர்கள் வெற்றிலை பயிரிட்டனர். அதனால் இவ்வூருக்கு 'வெற்றிலை மண்டபம்' என்ற பெயரும் ஏற்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதிகளின் ஆதரவால் மரக்காயர்களில் ஒரு குடும்பம் பெரும்புகழ் பெற்றது 'மண்டபமரக்காயர்' என்ற பெயர் அக்குடும்பத்தாருச்கு வழங்கி வருகிறது.

மண்டப மரக்காயர் சென்னை மாகாணத்திலேயே கவர்ன்மெண்டைத் தவிர எவருக்குமில்லாத தனிப்பட்ட ஒரு தீவுக்குச் சொந்தக்காரர். தென்சமுத்திரத்திலே மண்டபத்துக்கு சுமார் 7 மைல் தூரத்திலுள்ள முயல் தீவு என்பது அதன் பெயர். அவர்களுக்கு ஏராளமான பாய்மரக் கப்பல்களும் தோணிகளும் படகுகளும் இருந்தன. இந்தப்பகுதிக்கே மீன்பிடி தொழில் உற்பத்திக்குப் பெரும் உதவியாக இருந்தார்கள். யாத்ரீகர்களைத் தம் படகுகளில் ஏற்றிப் பாம்பன், இராமேசுவரம் கொண்டுபோய் விட்டனர், நிலக்கரி, மரம், அரிசி போன்ற பல சாமான்கள் நீராவிக்கப்பல் மூலம் வருவதை மண்டபத்தில் இறக்குமதி செய்து கொடுப்பது போன்ற தொழில்கள் இவர்களால் நடத்தப் பட்டதால் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் மண்டபம் ஒரு துறைமுகமாக ஏற்படுவ தற்கும் உதவியாக இருந்தார்கள். இதனால் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட மண்டபம் மாநகருக்கு ஒரு கடல் அரசனாகவும் புகழப்பட்டார்கள்.

படகு கட்டும் துறை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. நார்வேயிலிருந்து வந்த இயந்திரக் கருவிகளைக்கொண்டு இங்கு படகுகள் கட்டப் பெறுகின்றன.

மீன்பிடித் துறையில் இங்கு மீனவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பெறுகிறது.

ஜப்பான் போர்க் காலத்தில் (1942—45) இது ஒரு கேந்திரமான இடமாயிற்று. இந்தியக் கப்பற்படை இங்கு ஒரு தளம் அமைத்தது. கடற்படை வீரர் மூவாயிரம்பேர் இங்கு தங்கினர். கப்பல்களை இங்கிருந்து 12 மைலில் நிறுத்தி ரோந்து சுற்றி வந்தனர். இங்கிருந்து சிங்கப்பூரைப் பிடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கடற்படையினருக்காக ஒரு மருத்துவமனையும் இங்கு அமைக்கப்பட்டது.

இங்குள்ள சிறு துறைமுகத்தில் கப்பலில் தென் இரயில்வேக்கு வேண்டிய நிலக்கரி வரவழைக்கப் படுகிறது.

மண்டபம் கேம்ப் :

இலங்கைக்குச் செல்லுபவர்கள் தங்குவதற்காக இலங்கை அரசாங்கத்தார் ஒரு சிறு நகரத்தை ஏற்படுத்தினர். மண்டபம் கேம்ப் இரயில் நிலையத்துக்கு அருகே இது இருக்கிறது. இட போது அது நமது நாட்டு அரசின் உடைமையாக இருந்து வருகிறது.

இந்தியாவிலிருந்து செல்லும் தோட்டத் தொழிலாளராலும் ஏனைய இந்தியப் பயணிகளாலும்தான் இலங்கையில் தொத்துநோய்கள் பரவுவதாக இலங்கை அரசினர் கருதினர். அதனால் இலங்கைக்குச் செல்லுபவர்களை எட்டுநாள்முதல் பதினைந்து நாள்வரை இங்கு

வைத்திருந்தனர். இலங்கை அரசின் டாக்டர்கள் அவர்களுடைய உடல்நிலையைச் சோதித்த பிறகே அவர்களை இலங்கைக்கு அனுப்ப அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தொத்துநோய் தடுப்பு நிலையம் 1917 முதல் 1964வரை சிறிய இலங்கையாக இந்தியமண்ணில் அமைந்திருந்தது. அதற்குமுன் தூத்துக்குடித் தட்டப்பாறையில் இந்த நிலையம் இருந்தது. 1963-இல் இந்த நிலையம் தலைமன்னாருக்கு மாற்றப்பெற்றது. இரயில் நிலையத்திலிருந்து கடற்கரை வரை 310 ஏக்கர் பரப்பில் 100 கட்டிடங்கள், 400 சிறுவீடுகள், பயணிகள் தங்கும் விடுதி; குடியேற்றக் கட்டுப்பாடு அதிகாரியின் அலுவலகம், திறந்தவெளி அரங்கு, நீச்சுக்குளம், பள்ளிக்கூடங்கள், தடுப்புநோய் வார்டுகள், 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, காலரா நோய்க்கு ஒரு மருத்துவமனை, பெரிய அம்மை நோய்க்கு ஒரு மருத்துவமனை, தபால் தந்தி அலுவலகம், இந்து புத்த புராட்டஸ்டண்டு கத்தோலிக்க மதத்தினருக்குத் தனித்தனியே வழிபடும் இடங்கள் கட்டப்பெற்றன. இரயில் பாதையும் இந்த நிலையத்துக்குள் போடப்பெற்றது. தண்ணீர் டாங்கும்; கெலனியா மாளிகை என்ற விருந்தினர் மாளிகையும் இருந்தன. ஐந்துமைல் நீளத்துக்கு இதனுள் சாலைகள் போடப்பெற்றன. இவை அனைத்தையும் நமது அரசு 19 லட்சம் ரூபாய்க்கு ஒப்புக்கொண்டது.

இந்த இடத்தில் வேனிற்காலத்தில் மிகக் கூடுதலான வெப்பம் 90° மிகக் குறைந்தது 75°.

சுகாதாரச் சான்றிதழ்களைத் தகுதியான மருத்துவர்களிடம் பெற்ற பயணிகள் போட் மெயிலிலிருந்து இறங்கியதும் மண்டபம் கேம்ப் இரயில் நிலையத்திலேயே இலங்கை டாக்டரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு

அந்த இரயிலிலேயே செல்வதற்கு வசதி செய்யப் பெற்றிருந்தது.

இந்த நிலையத்துக்குள் உள்ள கோவிலுக்கு ஆடி மாதத்தில் பத்து நாட்களுக்கு முளக்கொட்டுத் திருவிழா நடைபெறுகிறது.

இலங்கையர் இங்கு தனி மின்சார நிலையமும் தொத்துநோய்ப் பகுதிகளிலிருந்து வருபவர்களின் பொருள்களில் மருந்து அடிக்கும் நிலையங்களும் வைத்திருந்தனர்.

1953-இல் பாஸ்போர்ட் முறை ஏற்பட்டது. கங்காணிகள் மூலமாக மதுரை, திருச்சி, திருநெல்வேலி; முசிறி, துறையூர், நாமக்கல், சேலம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, விழுப்புரம் ஆகிய ஊர்களில் இலங்கைக்கு ரப்பர்த் தோட்டங்களுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் கங்காணிகள் மூலம் தொழிலாளிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இந்த ஊர்களில் இதற்காக தொழிலாளர் திரட்டும் அலுவலகங்கள் (Depots) இலங்கை அரசாங்கத்தாரால் நடத்தப் பெற்றன. இலங்கையில் ஒரு குறிப்பிட்ட தோட்டத்தின் பெயரில் பற்றுச் சீட்டு வாங்கிக் கொண்டதும் சாப்பாடு, இரயில் செலவு, சொந்தக்காரர் வீட்டுக்கு ஒரு வாரத்திற்கு திருமணத்திற்குப் போய் வருவது ஆகிய யாவும் அவர்கள் செலவில் செய்யப்பட்டன.

இங்கு இப்போது கீழ்க்கண்ட அலுவலகங்கள் உள்ளன.

1. P. W. D. Section Office, 2. P. W. D. Special Division. 3. P. W. D. Electric Dept 4. P. W. D.- I. N. P. 5. Marine Biology Research. 6. Deputy

Inspector of Schools. 7. Special Deputy Collector for Rehabilitation. 8. Spl. Dy. Tahsildar (Govt. Buildings) 9. B. D. O's office. 10. Protector of Emigration. 11. Post Office. 12. Port Health Office. 13. Dy. Director of Fisheries,, 14. Spl. Tahsildar for Ceylon Repatriates. 15. Employment Exchange for Repatriates. 16. Govt, Hospital. 17. Central Marine Fisheries.

புதிதாக ஏற்பட்ட அலுவலகங்கள்;—

1. I. N. P. (Indo-Norwegian Project) Training Centre for Students.
2. Boat yard
3. Fish Meal Plant
4. Ice Plant
5. Central Marine Salt and Algal Research Institute
6. Electro Chemical Research Institute

மண்டபம் கேம்பில் வடகரையில் மைக்குண்டு என்னுமிடத்தில் யாழ்ப்பாணத்து முருங்கை மரத் தோட்டம் இருக்கிறது.

மண்டபம் கேம்பின் கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் கடல் பாம்பு, (தரைப் பகுதியில் கிடைக்கும்) விரியன் பாம்பு, டார்ட்டாய்ஸ் என்னும் உயிரினம், பவளம், அதிசயப் பிறவிகள், ஆயிரம்கால் பூச்சிகள், மரவெட்டு, பூரான், ஆவுனியா கடற்கன்னித்தோல், பட்டுப்பூச்சி, வண்டுகள், பலநூறு வகையான பட்டாம் பூச்சிகள் ஆகியவை மீன் ஆராய்ச்சிக் கூட மியூசியத்தில் வைக்கப் பெற்றுள்ளன.

அங்குள்ள மீன் காட்சிக் கூடத்தில் உயிருள்ள மீன்கள் வகை வகையாக இருக்கின்றன. அழகுக்காக வண்ணத்துப்பூச்சி மீனும், ஆராய்ச்சிக்காக எலும் பில்லாத மீனும், இலங்கைக்கு விற்பனைக்கு அனுப்பப் படும் டர்ட்டில் மீனும் காணலாம். உலகில் இங்கு மட்டும்தான் உயிரோடுள்ள கடற்கன்னிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. இவை ஐந்து மணித்துளிக்கு ஒருமுறை நீரின்மேல் எழுந்து மூச்சு இழுத்துப் பிறகு நீருக்குள் மூழ்கும். புல்லை மட்டும் தின்பதும் குட்டிக்குப் பால் கொடுப்பதும் இயல்புகள.

மீனிலிருந்து செய்யப்படும் கேக்குகள், பிஸ்கட்டுகள் ஆகியவையும் கடற் பாசியிலிருந்து செய்யப்படும் பாரிட்ஜ் என்ற அவல் பாயச வகையும் இங்கு காண் பிக்கப்படுகின்றன.

மரக்காயர் பட்டினம்: மண்டபத்திலிருந்து ஒரு மைலில் இருக்கிறது. நுரைக்கல், மீன், தேங்காய், நார், மாறு மதுரை ஓடு ஆகியவை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

பாம்பன் கால்வாய்: இதைப்பற்றி ஏற்கெனவே குறிப் பிட்டிருக்கிறோம். இதன் நீளம் 4352 அடி; அகலம் 200 அடி, ஆழம் 11 அடி.

பாம்பன்: தனுஷ்கோடியில் புயலால் அழிவதற்கு முன் இது ஓர் இரயில் சந்திப்பாயிருந்தது. முந்நாளில் இங்கு டச்சுக்காரர் கோட்டையும் மாதுளை, எலுமிச் சைத் தோட்டங்களும் இருந்தன. திருவுடையார் தேவர் என்ற விஜயரகுநாத சேதுபதி (1711—1725) இங்கு ஒரு கோட்டை கட்டினர். 1,500 மீனவர்களும் கைத்தறி நெசவாளர் பலரும் இப்போது உள்ளனர். கூலிவேலை பார்த்தும் யாத்திரிகர்களுக்கு உதவியும் ஏழையோர்

வாழ்கிறார்கள். கலங்கரை விளக்கமும் கத்தோலிக்க தேவாலயமும் உள்ளன.

1897-இல் சுவாமி விவேகானந்தர் இங்கு வந்து இறங்கியதை நினைவூட்டும் தூண் நடப்பட்டிருக்கிறது. அதில் காணப்படும் வாசகம் வருமாறு:

SATHYAMEVA JEYATHA

This Monument erected by Bhaskara Sethupathy, the Rajah of Ramnad, marks the sacred spot where His Holiness Swami Vivekananda's blessed feet first trod on Indian soil together with the English disciples, on His Holiness's Return from Western Hemisphere where glorious and unprecedented success attained His Holinesss's philanthrophic labour to spread the religion of Vedanta.

பாம்பன் ஊரினரான பாம்பன் சுவாமிகள் (1850—1929) முருக பக்தர். அருஞ்செயல்கள் பலவற்றை நிகழ்த்தியவர். பெரும்புலவர். 6666 சிறந்த பாடல்களைப் பாடியவர். கடவுட் பற்றும் கன்னித் தமிழ்ப் பற்றும் நிரம்பியவர். எந்தக் கடவுளும் கந்தக் கடவுள்போல் இல்லை என்பது இவர் முடிவு. பாம்பன் குமரகுருபர தாச சுவாமி என்பது இவரது முழு பெயர். இவருடைய சமாதி சென்னையையொட்டிய திருவான்மியூரில் கடலோரமாகக் கலாச் சேத்திரத்தை அடுத்துள்ளது

'பாம்பனெனும் பதிமுளைத்த பவளக்குன்றே
பழம் பாண்டித் தமிழ்ப் பொழிலே"

என்று இவரைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. பாடியுள்ளார்.

பிரப்பன் வலசை: இது இராமநாதபுரத்திலிருந்து 16 மைல் தொலைவிலிருக்கிறது. வலசை என்பது கடலோரமாயுள்ள சிற்றூரைக் குறிக்கும். தஞ்சை மாவட்டம் திருமறைக் காட்டுப் பகுதியில் வலசை என்னும் ஈற்றுச் சீருடைய பல ஊர்கள் உள்ளன.

இவ்வூர் பால் வியாபாரத்தாலும் பனைமரத்தாலும் புகழ் பெற்றது. பாம்பன் சுவாமிகள் தவம் செய்த இடத்தில் 1970-இல் ஒரு முருகன் கோவில் கட்டப் பெற்றிருக்கிறது,

புதுமடம்: இவ்வூர் பால்குளம் புகழ் பெற்றது. மீன்பிடி தொழில் இங்கு பெரிய அளவில் நிகழ்கிறது. இந்துக்கள் நோய் நீக்க, இவ்வூர் சீனியப்பா தர்காவில் வேண்டுதலை செலுத்துகின்றனர்.

தங்கச்சி மடம்:

ஒரு கணவனுக்கு வாழ்க்கைப் பட்டு உயிர்நீத்த இரு பெண்கள்—அக்காளும் தங்கையும்—நினைவாக இரு சேதுபதிகள் சத்திரங்கள் கட்டினர். அவற்றையொட்டி உருவான ஊர்கள் தங்கச்சி மடம், அக்கா மடம் என்ற பெயர்களைப் பெற்றுள. கும்பகோணத்துக்கு அருகே அம்மா சத்திரம் என்ற ஊர் இருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

அக்காளும் தங்கையும் விஜயரகுநாத சேதுபதியின் மக்கள் என்பர். இவர்களுடைய கணவன் பாம்பனில் சேதுபதியின் ஆளுநராகப் பதவி வகித்தான். அவன் சேதுபதி ஆணையை மீறி, இராமேசுவரம் யாத்ரீகரிடம் வரி வசூலித்ததற்காக, மருமகன் என்றும் பாராமல் சேதுபதி அவனுக்குக் கொலை தண்டனை கொடுத்ததாக வரலாறு தெரிவிக்கிறது. அவனுடன் மனைவியர் இரு

வரும் உடன் கட்டை ஏறினர். இந்நிகழ்ச்சியின் காலம் கி. பி. 1720.

தங்கச்சி மடத்தைக் காட்டைய தேவரும், அக்காள் மடத்தை சிவகுமார முத்து விஜய ரகுநாத தேவரும் கட்டினர்.

500 மீனவர்கள் இவ்வூரில் உள்ளனர். தென் மேற்குப் பருவக்காற்று அடிக்கும்போது, நெல்லை மாவட்டத்தின் கரையில் மீன் பிடிக்க இயலாது. எனவே ஜூலை முதல் அக்டோபர்வரை 5,000 மீனவர் இங்கு மீன் பிடிக்க வருகிறார்கள். மீன் விற்பனைக்கு இவ்வூரில் குளிர்சாதன வசதி இருக்கிறது.

வெற்றிலை, வாழைக்காய், முருங்கை இங்கு பயிரிடப் பட்டுப் பெரிய அளவில் வியாபாரம் ஆகின்றன. பெரிய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.

தங்கச்சி மடத்திற்கு அருகே வில்லூண்டி என்னும் சிற்றூர் இருக்கிறது. இதன் சரியான பெயர் வில்லூன்றி. இராமர் வில் ஊன்றிச் சீதையின் தாகத்தைத் தணித்தாக நம்பிக்கை. கடற்கரையில் நீருக்குள்ளிலிருந்து உப்பில்லாத நல்ல தண்ணீர் பீறிட்டுக் கொண்டு வருகிறது. இந்த ஊரணி St. Theras of the Child Jesus church க்கு அருகே இருக்கிறது. இங்கு 3,000 கத்தோலிக்கர் வாழ்கின்றனர்.

ஏகாந்தராமர் கோவில், இராமர் அமைதியாக இருந்து மந்திராலோசனை நடத்திய இடம் ஆதலால் அவ்வாறு பெயர்பெற்றது. இங்கு ஒருவரும் நல்ல மாடுகள் வைத்துக்கொள்வதில்லை, ஏர் உழுவதில்லை, உரல் இடிப்பதில்லை.

காட்டுப்பிள்ளையார் கோவிலும், இவ்வூர் அருகே இருக்கிறது. கோதண்டராமர் கோவில் அருகே விபீடணர் சரண் அடைந்ததாகக் கூறுவர்.

வாலாந்தருவை:

கடலோரமாகக் கழிவுநீரும் மழை நீரும் தேங்கி நிற்கும் பகுதிகள் 'தருவை' எனப்படும். திருநெல்வேலி மாவட்டம் சாத்தான் குளம் பகுதியில் பல தருவைகள் உள்ளன.

அநுமன் லிங்கம் கொண்டுவரத் தாமதித்ததால், அவனுடைய வாலை இராமர் அறுத்தார் என்றும் அறுந்த வால் விழுந்த தருவை, வாலறுந்ததருவை எனப் பெயர் பெற்றதாயும் கூறுகிறார்கள். பாய் நெசவாலும், 1944-இல் ஏற்பட்ட ஆகாய விமான நிலையத்தாலும் இவ்வூர் புகழ் பெற்றிருக்கிறது.

வேதாளம் :

விக்கிரமாதித்தன் கதையுடன் இந்த ஊர் தொடர்பு படுத்திக் கூறப்படுகிறது. மேலைநாட்டார் இவ்வூரை வெடலை எனக் குறிப்பிட்டுள்ளனர். மண்டபத்திலிருந்து 5 கி. மீ. தொலைவிலும் பாம்பனிலிருந்து 11 கி. மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது. பம்பாய், பஸ்ரா துறைமுகங்களுடன் இவ்வூரார் வியாபாரம் செய்கிறார்கள்.

பனை வெல்ல உற்பத்தி, விதையில்லாக் கத்திரிக்காய் பயிரிடுவது, பாய் மிடைவது, பதநீர் வியாபாரம் செய்வது—இவை இவ்வூராரின் தொழில்கள். இங்கிருந்து 60 மைல் தூரம்வரை 60 அடி ஆழத்தில் முத்தும் பவளமும் கிடைப்பதாக மார்கோ போலோ என்ற அறிஞர் 1292-இல் இலங்கை வழியாக இங்கு வந்திருந்தபோது எழுதி வைத்திருக்கிறார். அவர் Bettelar என்று குறிப்பிடுவது இவ்வூரையே.

லங்காபுர தண்டநாயகா என்ற இலங்கைத் தளபதி சில காலம் இவ்வூரைப் பிடித்து, அதிகாரம் செலுத்தினான்.

இனி, இவ் வொன்றியத்தில் இருந்ததும் 1964-ஆம் ஆண்டில் புயலால் பெரும்பாலும் அழிந்துவிட்டதுமான தனுஷ்கோடியைப் பற்றிக் கூறுவோம்.

தனுஷ்கோடி :

இராமேசுவரம் தீவின் தென்கிழக்கு எல்லை. இராமேசுவரத்திலிருந்து 20 கி. மீ.

வில்லின் நுனியை இராமபிரான் இங்கு ஊன்றியதால் இப் பெயர் வந்ததென்பர். தனுஷ்—வில். கோடி—முனை.

இங்கு ஆண் கடலும் பெண் கடலும் சந்திப்பதாகச் சொல்லுவார்கள். "நீடுதனுக் கோடியினை நினைந்தாலும் புகழ்ந்தாலும் நேர் கண்டாலும் வீடு பெறல் எளிதாகும்" என்பது நிரம்ப வழகிய தேசிகர் அருளிய சேது புராணம்.

இங்கு நீராடுவது புண்ணியமான கடமை என்று இந்துக்கள் கருதுகின்றனர். கங்கைக் கரையில் உயிர் நீப்பதும், நர்மதைக் கரையில் நோன்பு இருப்பதும், குருக்ஷேத்திரத்தில் பிறருக்கு அன்பளிப்பாக எதையாவது வழங்குவதும் புண்ணியமான செயல்கள் என்றும் இம் மூன்றையும் ஒருங்கே செய்து பேறுபெறக்கூடிய இடம் தனுஷ்கோடிதான் என்றும் இந்துக்கள் நம்புகின்றனர். இலங்கையினின்றும் மீண்ட இராமன் இங்கேதான் நீராடியதாக ஐதிகம்.

அமாவாசை நாட்களில் குறிப்பாக ஆடி, தை அமாவாசைகளில் பல்லாயிரப் பேர் நீராடுவது வழக்கம். இப்போதும் தொல்லைகளைப் பொருட் படுத்தாமல் பலர் இங்கு செல்லுகிறார்கள். சொந்த ஜீப் அல்லது வேன் இருந்தால்தான் போய்வர இயலும்.

நெடுங்காலமாகவே கடல் அரிப்பு இங்கு ஒரு பிரச்சினையாக இருந்திருக்கிறது., கடலுக்குள் ஒரு தடுப்புச் சுவர் கட்டவேண்டும் மென்றும் துறை முகப் பலத்தையும் இரயில் நிலையத்தையும் 5 கி. மீ. மேற்கேயுள்ள அரியாங்குண்டு என்ற இடத்துக்கு மாற்ற வேண்டுமென்றும் யோசிக்கப்பட்டது. 1964-இல் துறை முகப்பாலத்தையும் இரயில் நிலையத்தையும் ஊரின் பெரும் பகுதியையும் கடல் கொண்டு விட்டது.

இலங்கையர் கப்பலில் இங்கு வந்து இறங்கியதும் இங்கு பேசப்படும் தமிழ் மொழி புரியாமல் அல்லற் பட்டனர். ஈழத்தமிழ் இங்குள்ளவர்களுக்கு மயக்கம் தந்தது. அந்நாளில் நிகழ்ந்த ஒரு சுவையான உரை யாடலைக் குறிப்பிடலாம்.

கப்பலிலிருந்து வந்திறங்கிய யாழ்ப்பாணத்தார்: (பசியுடன்) சோறு எங்கே விற்கும்?

இரயில்வே கூலி: சோறு, தொண்டையில் விக்கும்.

இராமேசுவரம் நகரியம்

தீவைப்பற்றிய பொதுக் குறிப்புக்கள்

இராமேசுவரம் தீவு ஒரு குறுகிய கடலால் பிரிக்கப் பட்டு இந்திய நாட்டின் தென்கோடியில் இருக்கிறது. இராமாவதாரம் எடுத்த விஷ்ணுவின் கைகளிலுள்ள இரண்டு ஆயுதங்களில் ஒன்முன சங்கு போன்ற வடிவத் தில் இத்தீவு அமைந்திருக்கிறது. தீவின் நீளம் 15மைல். இதில் 8 மைல் நீளத்துக்கு மட்டும் இந்தத் தீவு 6 மைல் அளவு அகலமாக இருக்கிறது. எஞ்சிய 9 மைல் நீளத் துக்கு தீவின் அகலம் ஒருமைல்தான்.

மீன் பிடிப்பது இந்த ஊரின் ஒரு முக்கியமான தொழில். சங்கு எடுப்பதும் படகு ஓட்டுவதும் இங்குள்ளவர்களின் ஏனைய தொழில். இத்தொழிலில் முஸ்லிம்கள் சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் பல்லாயிரம்பேர் இங்கு உள்ளனர். முத்துவாணிகம் எப்போதுமே இவ்வூரில் ஒரு பெரிய தொழிலாக இருந்திருக்கிறது. ஒரு தெருவின் பெயரே முத்துச் சாவடி. இந்தத்தீவில் புளி நிறையக் காய்க்கிறது. இராமேசுவரம் புளி இரண்டு பங்கு புளிப்புடையது. எனவே மக்கள் இந்தப் புளியை விரும்பி வாங்குகிறார்கள்.

கடலில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு வேலைப்பாடு நிறைந்த பல பொருள்களைச் செய்வதில் இத்தீவு மக்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

மணல்மேடுகளில் வெண்தாழை மரங்கள் ஏராளமாக உள்ளன. வெண்தாழம்பூ இப்பகுதியில் நிறைந்தும் மலிவாகவும் கிடைக்கிறது.

தனுஷ்கோடி அழிந்தபிறகு இங்கிருந்தே தலைமன்னாருக்குக் கப்பல் செல்லுகிறது.

1966 முதல் இங்கு ஒரு நகரியம் ஏற்பட்டிருக்கிறது. பரப்பு 20 சதுரமைல். ஊர்கள் 13, மக்கள் தொகை 11,000.

இத்தீவில் கேட்கும் ஒலி—பாரதநாட்டு மொழிகள் யாவும்.

ஏற்றுமதி—தீர்த்தம், தேங்காய், புளி, சரளைக்கல், சோழி, சங்கு, மீன்.

இருப்பவை—50 ஜட்கா, ஏராளமான சத்திரங்கள்.

இருப்பவர்—200 புரோகிதர், 1,000 மீனவர்,

புராணக்குறிப்புகள்

இராவணன் முதலியோரைக் கொன்றதால் ஏற்பட்ட பிரும்மகத்தி தோஷத்தை விலக்கும் பொருட்டு இராம பிரான் இங்கு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தார். இங்கு லிங்கம் ஸ்தாபிக்க அநுமார் வடக்கிலிருந்து ஒரு லிங்கம் கொண்டு வந்தார். அவர் கொண்டு வருவதற்குள் சீதா பிராட்டி ஒரு லிங்கத்தை அமைத்தார். அநுமார் கொண்டுவந்த லிங்கத்துக்கு விஸ்வலிங்கம் என்றும் காசுவிஸ்வநாதர் என்றும் பெயர். சீதாதேவி மணலில் பிடித்த லிங்கமே இராமேசுவரர், இராமலிங்கர், இராம நாதர். அதனாலேயே இவ்வூருக்கு இராமேசுவரம் என்று பெயர் வந்தது.

கந்தமாதன பர்வதம்: சீதாப்பிராட்டியாரைத் தேடிவந்த இராமபிரான் ஏறி நின்று இலங்கையைப் பார்த்த இடம். பெருமாளின் திருவடிகள் பட்ட மண்ணைப் பேணிக்காத்து தரிசனத்திற்கு வைத்திருக் கிறார்கள். இந்த கந்தமாதன பர்வதமான. மணல் மலை யைக் கண்டதும் இராமர் பாதங்களைச் சேவிக்கும் பக்தர்கள் மனம் புல்லரிக்கிறது.

வரலாறு

இக்கோவில் இலங்கை அரசர் ஒருவரின் முயற்சி யால் கட்டத் தொடங்கப்பட்டது என்றும், அது கட்ட 350 ஆண்டுகளாயிற்று என்றும் 17-ஆம் நூற்றாண்டில் கட்டிடவேலை முடிவடைந்தது என்றும் கூறுவர்.

பல தலைமுறைகளாக இலங்கை அரசர்களாலும், சேதுபதிகளாலும், தனிப்பட்ட பலராலும் இந்தக் கோவிலின் பல பகுதிகள் கட்டப்பட்டன. 12-ஆவது நூற்றாண்டிலிருந்தே இந்தக் கோவிலின் கட்டிட வேலைகள் தொடங்கியதாகச் சிலர் கூறுவர்.

இந்தக் கோயிலின் சிற்ப வேலைகள் யாவும்; திராவிடர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இங்கு முதலில் தோன்றிய சிற்பங்கள் தான் பிறகு இன்னும் நுண்ணிய முறையில் சிதம்பரத்திலும்கும்பகோணத்திலுமுள்ள கோவில்களில்கையாளப் பட்டிருக்கிறது. இராமேசுவரம் கோவிலைக் கட்டுவதற்காகத் திருநெல்வேலி மாவட்டத்து அம்பாசமுத்திரம் பகுதியிலிருந்து பலவகையான கற்கள் வரவழைக்கப் பட்டன. இந்தக் கோவிலில் கல்யாணமண்டபத்தின் அருகேயும் இரண்டாம் பிரகாரத்திலும் சேதுபதிகள் பலரின் உருவங்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன.

ஐந்து டிரஸ்டிகள் கொண்ட குழு இந்தக்கோவிலை நிர்வகித்து வருகிறது. இவர்களுள் இராமநாதபுரம் சேதுபதி குடும்பத்தாரும் தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தாரும் பரம்பரை டிரஸ்டிகளாக இருந்து வருகின்றனர். இக்கோயில் திருப்பணிக்கு இவ்விரு குடும்பத்தாரும் செலவு செய்துள்ள தொகை பல லட்சக் கணக்கினது. இந்நாள் விலையில் கோடிக்கணக்கினது. இந்த தேவஸ்தானத்து 76 கிராமங்கள் இராமநாதபுரம், தஞ்சை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளன. நேபாளம், திருவாங்கூர், புதுக்கோட்டை அரசர்களும் ஏராளமான கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்;

கருவறை கண்டியை ஆண்ட வரராச சேகரன் என்ற சிங்கள மன்னரால் கட்டப்பெற்றது என்றும் கல்வேலை கண்டியில் நடைபெற்றதாயும் கூறுவர். இதனினும் பழமையான பாண்டியர் காலத்து வேலைப் பாடும், விசயநகர அரசருக்குப் பிற்பட்ட வேலைப்பாடுகளும் இக்கோவிலில் உள்ளன,

அமைப்புச் சிறப்பு

இக்கோவில் நகரின் உயர்ந்த பகுதியில் அமைந்தது. கிழக்குமேற்கில் ஏறத்தாழ $1\frac{1}{2}$ பர்லாங்கும் தெற்கு வடக்கில் ஒரு பர்லாங்குமுள்ள பெரிய கோவில். கோபுரங்களில் புராண நிகழ்ச்சிகளை நினைவூட்டும் சிற்பங்களின் வேலைப்பாடு அவற்றைக் காண்பவரை ஈர்க்கும். திராவிடக் கட்டிடக்கலையின் மேம்பாட்டுக்கு இக்கோவில் எடுத்துக்காட்டாகக் கருதப்பெறுகிறது. இவ்வாறு கருதுவதற்குக் காரணம் இதிலுள்ள மூன்றுவது வெளிப்பிரகாரம் உலகத்திலேயே மிகப் பெரிய—மிக நீளமான—பிரகாரமாக இருப்பதாகும். இக்கோவிலுள்ள பிரகாரங்களின் மொத்தநீளம் 4,000 அடி. வெளிப்பிரகாரத்தில் மட்டும் 1,200 தூண்கள் உள்ளன.

சொக்கட்டான் மண்டபம் என்பது இக்கோவிலில் முக்கியமாகக் காணவேண்டிய பகுதி.

கோவிலின் வெளிச்சுற்றில் இருந்த கடைகளில் 1972-இல் தீப்பிடித்தது. அந்தப்பகுதியை மீண்டும் புதிப்பிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. கோவில் முழுவதையுமே புதுப்பிக்கும் பணியும் தொடங்கப் பெற்றிருக்கிறது. யூனெஸ்கோவும் இதில் ஓரளவு அக்கறை காட்டி வருகிறது.

இராமேசுவரத்துக்குப் பெருமை தரும் வகையில் காஞ்சிகாமகோடி பீடத்தார் சங்கரமடம் அமைத்து அதில் ஜெய்ப்பூர் சலவைக்கல்லில் ஆதிசங்கரர் திருவுரு வத்தைச் சமைத்திருக்கிருர்கள். இங்கு சரசுவதியின் திருவுருவமும் சரசுவதி நூலகமும் காணத்தக்கன.

தீர்த்தங்கள்

இராமேசுவர யாத்திரையில் தீர்த்தங்களில் நீராடுவது ஒரு முக்கியமான கட்டம். சில தீர்த்தங்கள் இராமாயணப் பாத்திரங்களின் பெயர்களில் ஏற்பட்டிருக்கின்றன.

கோவிலுக்கு வெளியே கந்தமாதன பருவதத்துக்கு அருகில் எட்டுத்தீர்த்தங்கள் உள்ளன. இவற்றிலும் இன்னும் அகஸ்திய தீர்த்தத்திலும் கடலிலும் நீராடுவது முக்கியம். கோவிலுக்குள் 22தீர்த்தங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் கிணறுகளே. இவற்றுள் முக்கியமானவை மகாலட்சுமி தீர்த்தம், பிரம்ம ஹத்தி விமோசன தீர்த்தம், சிவதீர்த்தம், சர்வ தீர்த்தம்.

எல்லாவற்றிலும் முக்கியமானது விசாலாட்சி அம்மன் சந்நிதிக்கும் ஜோதிர்லிங்கத்திற்கும் இடையேயுள்ள கோடி தீர்த்தம். ஏனைய தீர்த்தங்களிலெல்லாம் நீராடிய பிறகே கோடிதீர்த்தத்தில் நீராடவேண்டும். இராமேசுவரத்திலிருந்து புறப்படும்போதுதான் பெரும்பாலோர் இதில் நீராடுவர்.

காசிக்குப்போயும் கங்கையில் நீராடதவர்கள் இருப்பதுபோல இராமேசுவரத்துக்கு வந்தும் எந்தத் தீர்த்தத்திலும் ஆடாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தீர்த்தக்கரைப்பாவிகள் என்று பெயர்.

தலப் பெருமை :

இராமபிரான் தொடர்பால் இத்தலம் சைவர்களாலும் வைணவர்களாலும் புனிதமாகக் கருப்படுகிறது.

எளிதில் இங்கு போய்விட இயலாது. இந்நாளில் எத்தனையோ அல்லல்களுக்கிடையே தான் மன உறுதி காரணமாக மக்கள் நடந்தும் படகிலும் இங்கு சென்று

வந்தனர். இராமேசுவரம் யாத்திரை என்பது அறுபது ஆண்டுகளுக்குமுன் மூன்று மாதம் பிடிக்கும்.

போக்குவரத்து வசதி பெருகியிருந்தும் இப்போதும் புயலால் இராமேசுவர யாத்திரை சில சமயம் தடைப் படுகிறது. போய்ச் சேர்ந்த பிறகு குறிப்பிட்ட நாளில் திரும்பி விடுவோமென்று உறுதி சொல்ல முடியாது.

பல்லாண்டுகளாகக் குழந்தைப் பேறு பெருத கணவன் மனைவியர் இங்கு வந்து கடல் நீராடி, இராம லிங்கரை வழிபட்டு நாகப் பிரதிஷ்டை செய்து மீண்டும் ஒரு முறை இங்கு எல்லாச் சடங்குகளுடனும் புதிதாகத் திருமணம் செய்து கொள்கிருர்கள்.

இலக்கியங்கள் :

இத்தலத்தைப்பற்றிப் பல புராணங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமானது சேது புராணம். திருஞான சம்பந்தர், இராமேசுவாத்தைப் பற்றி 21 பாடல்கள் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் 11 பாடல்கள் பாடியுள் ளார். அருணகிரிநாதர், தாயுமானவர் போன்ற பெரும் புலவர்களும் இத்தலத்தைப் பாடியிருக்கிருர்கள். பர்வத வர்த்தனிப் பிள்ளைத் தமிழ் என்ற நூலும் வெளி வந்திருக்கிறது. கம்பராமாயணம் யுத்த காண்டத்தில் மீட்சி படலத்தில் சேதுவின் சிறப்பு சொல்லப் பெற்றிருக் கிறது.

வடமொழியில் பல புராணங்களிலும் இலக்கியங் களிலும் வேதங்களிலும் இத்தலம் சிறப்பிக்கப் பெற் றிருக்கிறது. துளசிதாஸ் இராமாயணத்தில், இராமே சுவரத்தை வழிபடுபவனே எனக்கு ஆப்தன் ஆவான் என்று இராமபிரானின் வாக்காகக்கூறப் பெற்றிருக் கிறது.

இறை உருவங்கள் :

இங்குள்ள இறைவன் இராமநாதசுவாமி. இவருடைய சந்நிதியே மூலத்தானம். இந்த லிங்கம் சீதாதேவியால் மணலால் ஆக்கப் பெற்று இராமபிரானால் புனிதமாக்கப் பெற்றது. இறைவி—பர்வத வர்த்தினி (மலைவளர்க்காதலி.)

மதுரையில் போல இங்கும் சுவாமி சந்நிதிக்கு வலது பக்கம் அம்பிகை சந்நிதி இருக்கிறது.

காசித் தொடர்பை நினைவூட்டும் விசுவநாதர் விசாலாட்சி சந்நிதிகளும் இங்கு உள்ளன. விசுவநாதர் உருவம் அநுமனால் கொண்டு வரப் பெற்றது. விசுவநாதருக்கும் விசாலாட்சிக்கும்தான் இக்கோவிலில் முதல் பூசை தொடங்குகிறது.

பெருமாள், சுப்பிரமணியர், சேது மாதவர், நடராசர், ஆஞ்சனேயர், மகாலெட்சுமி சந்நிதிகள் உள்ளன. அஷ்டலெட்சுமி விக்கிரகங்களும் உள்ளன.

இக்கோவிலிலுள்ள நந்திகேசுவர உருவம் அற்புத ஆச்சரியமானது. பெரியது. 23 அடி நீளம், 12 அடி அகலம், 17½ அடி உயரம் உடையது. உற்சவ நந்திகேசுவரரை அனுமாரும் தோன்றக்கூடிய விதத்தில் அமைத்த சிற்பியின் கூர்ந்த மதியும் கைத்திறனும் அபாரமானது. இரு கைகள் கூப்பியும் இருகைகளில் மான் மழுவுடனும் காட்சிதரும் அவ்வுருவம் மான் மழுக்களை மறைத்துவிட்டுப் பார்த்தால் அனும உருவம் போலத் தோற்றும். வால் குரங்கு வால் போலவும், அது தொடையுடன் சேர்க்கப்பட்ட இடத்தில் மாட்டு வால் குஞ்சம் போலவும் தலவரலாற்றிற்கேற்ப நந்தியும் அனுமனும் ஏகமாய்த் தோன்றும் கைவண்ணம் மலைப்பைத் தருகின்றது.

இக்கோவிலை முகமதியர்கள் அழிக்க வந்ததாகவும் அப்பொழுது இந்தக் கல் நந்தி புல் தின்றதாகவும் அதைக்கண்டு அதிசயப்பட்டுக் கோவிலை அழிக்காமல் விட்டு விட்டதாகவும் கூறுவதுண்டு.

விபீடணன் பிரதிஷ்டை செய்ததும் படிகத்தினால் ஆனதுமாகிய ஜோதிர்லிங்கம் இக்கோவிலில் இருக்கிறது. இந்தியாவிலுள்ள 12 ஜோதிர் லிங்கங்களுள் இது ஒன்றே தென்னிந்தியாவில் இருக்கிறது.

வழிபாட்டு முறைகள் :

இக்கோவிலில் நாள்தோறும் 16 வகை அபிசேகங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் கங்கை நீரைக் கொண்டு இராமநாதரை நீராட்டுகின்றனர்.

பிற தலங்களில் பள்ளி அறைக்குப் பாதத்தை மட்டும் கொண்டு போவார்கள். இங்கு இறைவனின் திருவுருவத்தையே கொண்டு போகிறார்கள்.

இவ்வாலயத்தில் தினசரி நடைபெறும் பூசை முறைகளும் மற்றுள்ள தலங்களைப் போலன்றிச் சற்று மாறுபாட்டையும் விரிவான நடைமுறையையும் கொண்டது. முதலில் வேதங்கள் ஓதப்படுகின்றன. அதனையடுத்துத் தேவார, திருவாசகத் தீந்தமிழ்ப் பாசுரங்கள் முழங்குகின்றன. தொடர்ந்து மேளங்கள் ஒலிக்கின்றன. இத்தகைய முறைகள் மக்களைப் பக்திப் பரவசப்படுத்துவன.

அர்த்தசாமப் பூசை முடிந்ததும் ஸ்ரீ இராமநாத சுவாமியைப் பள்ளியறைக்கு எடுத்துச் செல்லும் பொழுது, பாஸ்கர சேதுபதி தாமே, தங்கத் தீவட்டி தூக்கி, பள்ளியறையில் இறைவனைவிட்ட பிறகு கால பைரவரை வழிபட்டு இரவில் கோவிலைக் காக்கும் பொறுப்பைக் காலபைரவரிடம் ஒப்புவித்து, தீர்த்தக்

கரைக்கு வந்து கோவிலில் கொடுக்கப்படும். சம்பா சாதம், சுண்ட வற்றல் குழம்பு, இரண்டு வடை ஆகிய பிரசாதங்கள் சாப்பிட்ட பிறகு கோவிலை விட்டு வெளி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம். சேதுபதிகளுடைய பக்திச் சிறப்பை இது உணர்த்தும். இப்போது பட்டத்திலுள்ள இராமநாத சேதுபதியும் இவ்வாறே இராமநாதசுவாமியிடத்தில் அளவற்ற பகதி கொண்டிருக்கிறார்.

மண்டபம், பாம்பன், இராமேசுவரம் ரயில் நிலையம், இராமேசுவரத்தில் சேதுபதியின் மாளிகை, இராமநாத சுவாமி சந்நிதி ஆகிய ஐந்து இடங்களில் சேதுபதிக்குப் பரிவட்டம் கட்டி மரியாதை செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. இராமேசுவரம் கோவிலுக்குப் பல ஊர்களை வழங்கியுள்ள சேதுபதிகளுக்கு நன்றி கூறும் வகையில் இந்த வழக்கம் தொன்று தொட்டு நிலவி வருகிறது.

திருவிழாக்கள் :

மாசி மகம், மாசி சிவராத்திரி, வைகாசி வசந்த உற்சவம் மூன்றும் இங்கு பெரிய விழாக்கள். மாசி சிவராத்திரி 12 நாட்களுக்கு நடைபெறும். திருவாங்கூர் மகாராஜாவின் மண்டகப்படியாக இரண்டாம் நாள் தங்கரதமும், ஆறும் நாளில் நடைபெறும் சேதுபதி மண்டகப்படியும் காணத்தக்கவை. ஆடித்திருக்கல்யாண விழாவும் ஆனி மாதத்தில் இராமலிங்கப் பிரதிஷ்டை விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மாதந்தோறும் நடைபெறும் திருவிழாக்கள், 15 நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும் திருவிழாக்கள், வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் திருவிழாக்கள் இவ்வாறு எத்தனையோ திருவிழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் தங்க கேடகங்களில்

இறைவனைச்சுற்றுலா கொண்டு வரும் காட்சி சிறப்பாக இருக்கும். இக்கோவிலிலுள்ள தங்க, வெள்ளி ரதங்கள், ஊஞ்சல்கள், தேர்கள், நகைகள் முதலியவற்றின் மதிப்பு பலகோடி ரூபாய் இருக்கும்.

நாள்தோறும் நடைபெறும் வழிபாடுகள் :

நாள்தோறும் பல பூசைகள் இக்கோவிலில் நடைபெறுகின்றன. காலை 4-30 மணிக்கு நடைபெறும் மணி முத்து தரிசனம் இக்கோவிலுக்குச் சிறப்பாக உடையது.

பகல் 12 மணி முதல் மாலை 4-30 வரை கோவில் பூட்டப்பட்டிருக்கும்.

நாள்தோறும் ஆறு கால பூசைகள் நிகழ்கின்றன,
காலை 5 மணி—திருவனந்தல் (அபிஷேகத்துடன்.)
காலை 7 மணி—உதயகாலம்.
காலை 9 மணி—காலசந்தி
பகல் 12 மணி—உச்சிக் காலம்.
மாலை 6 மணி—சாயரட்சை.
இரவு 9 மணி—அர்த்தசாமம்.

வடநாடும் இராமேசுவரமும் :

வடநாட்டார் பெரும் திரளாக இந்தக் கோவிலுக்கு வருகிறார்கள். இமயமலையிலுள்ள பத்ரிநாதம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் பூரியிலுள்ள ஜகந்நாதம், இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் குஜராத்திலுள்ள சோமநாதம், தென்கோடி இராமேசுவரத்திலுள்ள இராமநாதம் ஆகிய நான்கையும் தொன்றுதொட்டு ஹிந்துக்கள் வழிபட்டு வருகிறார்கள். இந்தியாவின் ஒற்றுமைக்கு இதுவே அடிப்படை.

வடநாட்டு யாத்திரிகர்களுக்கு உதவ இராமேசுவரம் கோவில்களில் வடநாட்டு பண்டாக்கள் இருக்கிறார்கள்.

நேபாளமன்னருக்குச் சொந்தமாக ஒரு பண்டா இத் தலத்தில் இருக்கிறார்.

குஜராத்தியருக்காக ஒரு சத்திரமும் ஏனைய வட நாட்டினருக்காக மன்னர்களாலும் செல்வர்களாலும் நிறுவப்பட்ட பல சத்திரங்களும் காஷ்மீர்க் காரர்களுக் காக நிறுவப்பட்ட இரண்டு சத்திரங்களும் உள்ளன. ஆந்திரர்களுக்குப் பல சத்திரங்களும் யாழ்ப்பாணத் தாருக்கு ஒரு சத்திரமும் பிராமணர்களுக்கு மொழி வாரி யர்கத் தனித்தனிச் சத்திரங்களும் ஏனையோருக்கு எண்ணற்ற சத்திரங்களும் உள்ளன.

இந்திய நாட்டின் பெரும் செல்வராகிய பிர்லா குடும்பத்தார், மிக வசதியான தங்கும் விடுதிகளைக் கட்டி 1972-இல் தேவஸ்தானத்துக்கு வழங்கியுள்ளனர். இதுவே இராமேசுவரத்தில் மிக வசதியான விடுதி. இதற்கு மூன்று லட்சம் ரூபாய் வரை செலவாகியிருக்கு மென்று தெரிகிறது. இதைத் தேவஸ்தானத்தார் வாடகைக்கு விடுகின்றனர்.

இராமநாத சுவாமி கோவில் கருவறைக்குள் செல்லும் உரிமை,

1. தலைமை அர்ச்சகர்.
2. சிருங்கேரி சங்கராச்சாரியார் சுவாமிகள்
3. இராமநாதபுரம் சேதுபதி
4. நேபாள மன்னர்

ஆகிய நால்வருக்கு மட்டுமே உண்டு.

சீக்கியர்களுக்கும் இராமேசுவரம் புனிதமான தலம். சீக்கிய குருமார்களில் முக்கியமான ஒருவர் குரு கோவிந்த சிங். (அவர் வரலாறு தமிழில் வெளி வந் துள்ளது.) சீக்கியர்களுக்கு அவர் அமர்ந்த இடம் ஆலயம்; அவர் பாதம்பட்ட இடமெல்லாம் புனிதத்

தலம். குருகோவிந்த சிங் இங்கு வந்திருந்த போது தங்கிய இடத்தை, தமிழ் நாட்டு ஆளுநராயிருந்த சர்தார் உஜ்ஜல்சிங் பார்வையிட்டு அதில் நினைவுச் சின்னம் நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறார்.

காசி யாத்திரை :

காசியும் இராமேசுவரமும் ஒன்றுக்கொன்று 1, 500 மைல் தொலைவில் இருந்த போதிலும் இவற்றைச் சேர்த்து காசி இராமேசுவரம் என்று சொல்வது நம் நாட்டு மரபு. காசிக்குச் செல்பவர்கள் இராமேசுவரத் துக்கும் செல்ல வேண்டுமென்பதும் இராமேசுவரத் துக்குச் செல்லுவர்கள் காசிக்கும் செல்ல வேண்டும் மென்பதும் நியதி. காசி யாத்திரையோ இராமேசுவர யாத்திரையோ ஒன்றுடன் ஒன்று தொடர் பில்லாது செய்யப் பெறுவதில்லை.

வட நாட்டிலிருந்து இராமேசுவரத்துக்கு வருபவர் கள் கங்கை நீருடன் வருவார்கள்,

தென்னாட்டிலிருந்து காசியாத்திரை மேற்கொள் பவர்கள் யாத்திரையை இராமேசுவரத்தில் தொடங்கி, மீண்டும் இராமேசுவரத்துக்கு வந்து யாத்திரையை நிறைவு செய்வது வழக்கம்.

இராமேசுவரத்தில் கோடித் தீர்த்தமும் கடற்கரை மண்ணும் எடுத்துக் கொண்டு காசி யாத்திரை புறப்பட வேண்டும். இராமேசுவரத்து மண்ணைப் பிரயாகையில் கொட்டுவதும் கோடித் தீர்த்தத்தால் காசி விசுவநாதப் பெருமானை முழுக்காட்டுவதும் அவர்களுடைய கடமை; இவ்வாறே காசியிலிருந்து திரும்பியதும் கங்கை நீரால் இராமலிங்கப் பெருமானை முழுக் காட்ட வேண்டும்.

விவேகானந்தர் தொடர்பு :

1897-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் நாள் விவேகானந்தர் இராமேசுவரத்துக்கு வந்திருந்தார். அதன் நினைவாக, அவருடைய நூற்றாண்டு விழாவின் போது ஒரு கல் இங்கு பதிக்கப் பெற்றிருக்கிறது. 1897-இல் இங்கே குடகோபுர வாசலில் விவேகானந்தர் ஆற்றியஉரை அந்த இடத்தில் பொறிக்கப் பெற்றிருக் கிறது.

இராமேசுவரத்தில் சேதுபதிகளின் அரண்மனை இருக்கிறது. வீரத்துறவி விவேகானந்தர் இங்குத் தங்கி இருந்தார். இந்தக் கட்டிடத்துக்கு அன்று முதல் விவேகாநந்த பாஸ்கரம் என்று பெயர். இப்பொழுது இக்கட்டிடம் தேவஸ்தானம் மேற்பார்வையிலிருக்கிறது. ஒருபக்கத்துச் சுவரில் சுவாமி அரசரைப்பற்றிக் கூறிய பாராட்டுரையும் மற்றொரு பக்கத்தில் சுவாமிகளுடைய அறிவுரைகளும் கல்லில் பொறித்திருக்கிறார்கள். அரசரைப் பற்றிக் கூறி இருப்பதாவது: ''மாட்சிமை தங்கிய இராமநாதபுரம் ராஜா அவர்கள் என்னிடம் காட்டிய அன்புக்கு எனது நன்றியைத் தெரிவித்தல் எளிதல்ல, என்னாலோ என்மூலமாகவோ ஏதாவது நற் பணி செய்யப் பட்டிருக்குமாயின் இந்த நல்ல கனவானுக்கு இந்தியா கடமைப்பட்டுள்ளது. ஏனெனில், இவரே நான் சிகாகோவுக்குப் போக வேண்டுமென்ற எண்ணத்தைத் தோற்றுவித்தவர். அவ்வாறு செல்லப் பலமுறை தூண்டியவர். ஆத்மீகவழித் தொண்டு செய்ய வும் நம் அருமைத் தாய் நாட்டில் அக்கறை காட்டவும் இம்மாதிரி ஆறு ராஜாக்களாவது இருக்க வேண்டு மென்பது எனது விருப்பம். இந்நாடு முழுவதும் இவரை விட ஹிந்து மதத்தில் அதிக ஆர்வமுடையவர் இல்லை.''

இராமேசுவரத்தில் சுவாமிகள் பேச்சில் இன்னும் சில வரி, சுவர்களின் மற்றொருபக்கத்தில் படிக்கலாம். "அன்பே சமயத்திற்கு இருப்பிடம். பரிசுத்தமானவர் பிரார்த்தனைக்குப் பதில் கிடைக்கும். அழுக்கு மனத் தோடு கோவிலுக்குள் போகிறவன் அதிக கடைய ஞகத் தன் வீட்டுக்குத் திரும்புகிறான்."

தீவுகள்

இராமநாதபுர மாவட்டம் ஏராளமான தீவுகளை உடையது. அவற்றில் 17 தீவுகள் முக்கியமானவை. இராமநாதபுரம் வட்டத்தில் 12-ம் முதுகுளத்தூர் வட்டத்தில் 5-ம் உள்ளன. இராமேசுவரம் தீவைப் பற்றி ஏற்கெனவே கூறிவிட்டோம். ஏனைய 16-ஐப் பற்றிக் கூறுவோம்.

1. குருசடைத் தீவு: இத்தீவு பாம்பனிலிருந்து 4 கி. மீ. தொலைவிலும் இராமேசுவரத்திற்கு மிக அருகிலும் இருக்கிறது. இதன் சுற்றளவு 4½ கி. மீ. இங்கு தமிழக அரசின் மீன் ஆராய்ச்சி நிலையமும் உயிரியல் மாணவர்கள் பார்வையிடும் காட்சிக்கூடமும் சிறுவிடுதியும் முத்துச்சிப்பி வளர்ப்பு நிலையமும் உள்ளன. ஜெல்லி செய்ய உதவும் பாசி இங்கிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்படுகிறது. ஆலைத் தொழிலுக்கு உதவும் சில ஆஸிட்களில் சேர்க்கப்படும் Sargassum என்ற பொருளும் பெயிண்டு செய்ய உதவும் சில பொருள்களும் இங்கு கிடைக்கின்றன.

பட்டை சீவியதும் உள்ளே ரோஜாப்பூ நிறத்தில் உள்ள சூரியகாந்தி, தண்ணீர் நிறைய உள்ள நிக்கோபார் இளநீர், செவ்விளநீர் ஆகிய வகைகள் கிடைக்கின்றன.

2. சிங்களத் தீவு: குருசடைத் தீவிலிருந்து இரண்டு கி. மீ. தொலைவிலுள்ளது. சிங்களத்திலிருந்து மீன் பிடிக்க வருபவர்கள் இங்குத் தங்கும் வழக்கம் உண்டு. அதனுல், சிங்களத் தீவு என்று பெயர் பெற்றது. மீன் பிடித்தல் முக்கிய தொழில்.

3. பூமறிச்சான் தீவு: பாம்பனிலிருந்து ஏழு கி. மீ. தொலைவிலுள்ளது. மேட்டுப்பகுதி. பெரியகண்டத் தீவு, நடுத் தீவு. பூமறிச்சான் தீவு என்ற முப்பகுதியினைக் கொண்டது. இத் தீவுக்குப் பள்ளிவாசல் தீவு என்னும் ஒரு பெயருமுண்டு.

4. மணலித் தீவு: ஆழமில்லாக் கடலைக் கொண்ட இத்தீவு பாம்பனிலிருந்து ஏழு கி. மீ. தொலைவு இங்கு மீனவர்கள் மூங்கில் குச்சுகளைச் சதுரமாகக் கடலில் வரிசையாக நட்டு, வலைகளை அமைத்து மீன் பிடிப்பார் கள். இந்த முறைக்குக் களங்கட்டி மீன் பிடித்தல் என்று பெயர். இத்தீவில் சுண்ணும்புக் கல் படிவங்கள் உள்ளன. கருவாடும் தேங்காயும் ஏற்றுமதி ஆகின்றன.

5. முயல் தீவு: மண்டபம் கேம்பிலிருந்து 10. கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தீவில் ஏராளமான முயல்கள் இருப்பதால், முயல் தீவு என்று பெயர் பெற்றது.

6: முளித் தீவு: புதுமடத்திலிருந்து 10. கி. மீ. தொலைவு. இது குடியிருப்பு இல்லாத தீவு. சுண்ணும்புக் கல் வெட்டுவதற்கு மட்டும் சிலர் செல்லுகிருர்கள். இதுவெறும் பாறை; இங்கு மக்கள் யாரும் வசிப்ப தில்லை. இங்குச் சுண்ணும்புக் கல் வெட்டி எடுக்கிருர்கள்.

7. வாளைத் தீவு: (வாலித்தீவு, வலைத்தீவு) முளித்தீவி லிருந்து ஒன்றரைமைல் தொலைவிலுள்ளது. இங்கு மீன் கள் அதிகம் கிடைக்கின்றன. இங்கு ஒரு ரோமன்

கத்தோலிக்க மாதா கோவில் ஒன்றுண்டு. அதற்குக் கிட்டோரியம்மன் மாதா கோவில் என்று பெயர் உண்டு.

8. தலையாரித் தீவு: கீழக்கரைக்குத் தென் கிழக்கே 16. கி.மீ. தொலைவிலுள்ளது. இங்கும் சுண்ணும்புக்கல் பாறைகள் உள்ளன.

9. அப்பாத் தீவு: கீழக்கரையிலிருந்து 8. கி. மீ. தொலைவு. பவளப் பாறைகள் இங்கு உண்டு. மனிதர்கள் இங்கு வசிப்பதில்லை.

10. பூவரசன் ஹள்ளித் தீவு: கீழக்கரையிருந்து 9 கி. மீ. தொலைவு. பூவரசன் மரங்கள் நிறைந்தது.

1.. பிள்ளையார் முனைத் தீவு: பூவரசன் ஹள்ளித் தீவுக்கு அருகே உளது. இதற்குப் பாலயாமுனைத் தீவு என்றும் ஒரு பெயர் உண்டு. இங்கு மனிதர் குடியிருப்பு இல்லை.

12. ஆனைப்பாறைத் தீவு: பிள்ளையார் முனைத் தீவுக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ளது. இது பாறைகள் மிகுந்த தீவு.

13. நல்ல தண்ணீர்த் தீவு: வாலி நோக்கத்திலிருந்து ஐந்து மைல் தொலைவு. இத்தீவில் இடுப்பளவு தோண்டினாலே நல்ல குடி தண்ணீர் கிடைக்கிறது. சவுக்குத் தோப்புக்கள் இங்கு அதிகம்.

14. சுளித் தீவு: நல்ல தண்ணீர்த்தீவிலிருந்து 3. கி. மீ. தொலைவிலுள்ளது. மணற் பாங்கானது. பொட்டல் வெளிதான்.

15. உப்புத் தண்ணீர்த் தீவு; சுளித்தீவிலிருந்து இரண்டேகால் மைல் தொவிலுள்ளது. இங்கு கிடைக்கும் ஊற்று நீர் உப்புக்கரிப்பதால் உப்புத் தண்ணீர்த் தீவு என்று பெயர் பெற்றது.

16. கச்சத்தீவு: இந்தத் தீவின் பரப்பும் முக்கியத் துவமும் மிகக் குறைவு. ஆனால் செய்தித்தாளில் அடி பட்டு மிகவும் புகழ் பெற்றிருக்கிறது.

இது இராமேசுவரம் நகரியத்தில் ஒரு பகுதி. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடு மையமாகயுள்ள கடல் திட்டு. நீளம் ஒரு மைலுக்கும் குறைவு. அகலம் 300 கெஜம். இராமேசுவரத்துக்கு வடகிழக்கே 11மைல். தீவின் மொத்தப் பரப்பு 285 ஏக்கர். இங்கு மக்கள் யாரும் வசிப்பதில்லை. கசப்பான தண்ணீர் உடைய தீவு ஆதலால் கச்சத்தீவு என்று பெயர் ஏற்பட்டது.

இலங்கை அரசு இதில் உரிமை கொண்டாடுகிறது. வட இலங்கைத் தேர்தல் ஒன்றில் கச்சத் தீவும் சேர்க்கப் பட்டிருக்கிறதாம். இங்குள்ள புனித அந்தோனியார் மாதாகோவில் இலங்கையின் வடகோடியிலுள்ள ஒரு திருச்சபைப் பிரிவுக்கு உட்பட்டதாம்.

வாரம் ஒரு முறை ஒரு பாதிரியார் இந்தத் தீவி லுள்ள கோவிலுக்கு வந்து பூசை செய்கிறார்.

பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை இங்கு மீனவர் வரு கிறார்கள். ஆண்டுதோறும் மார்ச்சு மாதம் புனித அந்தோனியர் கோவிலில் மூன்று நாட்களுக்கு ஒரு திருவிழா நடைபெறுகிறது. திருவிழாக் காலத்தில் இராமேசுவரத்திலிருந்தும் யாழ்ப் பாணத்திலிருந்தும் அரை மணிக்கு ஒரு படகு—இயந்திரப்படகுகளும் நாட்டுப் படகுகளும்—கச்சத் தீவுக்குச் செல்லுகிறது. எனவே 5,000 பேர் இந்த சின்னஞ் சிறு தீவில் கூடு கிறார்கள். தெய்வ வழி பாட்டுக்காக வருவோரன்றி கள்ளக் கடத்தல் நடத்துவதற்கும் பலர் வருகின்றனர். இந்தியாவில் கிடைப்பதற்கு அரிதாக உள்ள ஹார்லிக்ஸ்; ட்ரான்சிஸ்டர், பிளேடுகள், நைலான் துணிகள் முதலியு

வெளி நாட்டுப் பொருள்களை இலங்கையரும். இலங்கையில் கிடைப்பதற்கு அரிதாக உள்ள பொருள்களை இந்தியர்களும் எடுத்துச் சென்று அங்கு பண்டமாற்றுதல் நடத்துவதாகவும் கூறப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கிறது.

1968-ஆம் ஆண்டில் இத்தீவு யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி பிறந்தது இலங்கை உரிமை கொண்டாடிற்று. தங்கள் கடற்படையினர் இங்கு வந்து பயிற்சி பெற்றிருப்பதாகவும் இலங்கை அரசு தெரிவித்தது.

ஒவ்வொரு திருவிழாவின் போதும் இலங்கை இராணுவம் கடற்படை ரோந்துக்குழுவினரி கப்பல்; மோட்டார் படகுகளில் கச்சத் தீவுக்கு வருகிறார்கள். ஆனால், இந்திய இராணுவம், போலீஸ் யாரும் போவது மில்லை, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது மில்லை, இதனால் கச்சத் தீவு கேட்பாரற்ற நாதியற்ற தீவு என்று இலங்கை அரசு கருதியது.

"கச்சத் தீவு பாத்தியதை உரிமை இலங்கையைத் தவிர வேறு யாருக்கும் இல்லை" என்றும் கச்சத் தீவிற்கு இராணுவம் அனுப்பப்படும் என்றும் இலங்கை அரசு கூறியிருக்கிறது.

தமிழ் நாட்டுக் கடற்கரைப் பகுதியிலேயே அதிக அளவுமீன் பிடிபடும் இடம் கச்சத் தீவுப் பகுதிதான். உலகிலேயே அதிக அளவு மீன் பிடிபடும் இடம் பால்கன் (ஐரோப்பா). இந்த இடத்திற்கு ஒப்பாக கச்சத் தீவை கூறுகிறார்கள். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கப்போய் 4 அல்லது 5 நாட்கள் கடலில் தங்கி மீன் பிடிக்கிறார்கள் அல்லவா? அவ்வாறு போகும் மீனவர்கள் கடலில் வலைகளைப் போட்டு விட்டு கச்சத் தீவில் தங்கி இருப்பார்கள். எனவே, கச்சத் தீவு மீனவர்களின் கேந்திரமாகும்

இந்தத் தீவு ஜமீன் காலத்தில் இராமநாதபுரம் மன்னர்களின் ஆளுகையின் கீழ் இருந்தது. இந்தத் தீவு இராமநாதபுரம் மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளும் பாத்தியதை உரிமைச் சாசனமும், செப்புப் பட்டயமும் உள்ளன. முன்பு இராமநாதபுரம் மன்னர்கள் கச்சத் தீவில் நில வரி, தீர்வை, குத்தகை முதலியவைகளும் வசூல் செய்து வந்தார்கள். ஜமீன் ஒழிப்பிற்குப் பின் தீவு இந்திய அரசின் உரிமைக்கு வந்தது.

ஆள் நடமாட்ட மில்லாத கச்சத் தீவில் கிறிஸ்தவ கோவிலான அந்தோணியப்பர் தேவாலயம் ஒன்றுள்ளது. இந்தக் கோவிலை இராமநாதபுர மாவட்டம் தொண்டி அருகேயுள்ள நம்புதாளை என்ற ஊரைச் சேர்ந்த தமிழர் ஒருவர்கட்டினார். அவர் சென்றபடகு புயலில் சிக்கியபோது அவர் அந்தோணியப்பரைப் பிரார்த்தித்துக் கொண்டதாகவும், அதன் காரணமாக அவர் புயல் அபாயத்திலிருந்து தப்பியதாகவும் அதனாலேயே அவர் அக்கோவிலைக் கட்டியதாகவும் வரலாறு.

சேதுபதியுடைய ஆட்கள் இத்தீவில் 1802 வரை முத்துக்குளித்து வந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் வேண்டுகோளைப் புறக்கணித்து, இஸ்து மீரார் சனத் உடன் பாட்டின்படி, ஆங்கில அரசு சேதுபதிகளின் உரிமையைத் தொடர்ந்து ஏற்றது; விக்டோரியா மகாராணி ஒரு பிரகடனத்தின் வாயிலாக இதனை உறுதி செய்துள்ளார்.

இரண்டாம் போர்க்காலத்தில் இலங்கை விமானப் படையினர் பயிற்சித் தளமாகப் பயன்படுத்த முயன்றனர். 1956-லும் 1960-லும் இதன்மீது உரிமை பற்றி இந்திய நாடாளுமன்றம் விவாதித்தது. ஆளில்லாததும்

ஒரு தகரக் கொட்டகை மட்டும் இருப்பதுமாகிய இந்தக் குட்டித்தீவு யாருக்குச் சொந்தம் என்பது பற்றி இது வரை முடிவாகவில்லை.

தீவில் இருப்பவை: அடர்ந்த செடிகள். ஒரு தகரக் கொட்டகையில் தேவாலயம்.

தீவில் இல்லாதது: மக்கள் குடியிருப்பு

தீவில் நிகழ்வது: கள்ளக்குடியேற்றத்திற்கு ஏற்பாடு, கத்தோலிக்கர் தேவாலயத் திருவிழா.

2. முதுகுளத்தூர் வட்டம்

இம்மாவட்டத்தின் கடலோரத்தில் அமைந்த இவ் வட்டம் தமிழ் நாட்டிலேயே மிகவும் பிற்பட்டது. இரயில் வசதி இங்கே கிடையாது. மிளகாய் சாகுபடியும் மீன் பிடித்தலும் தவிர வேறு தொழில் கிடையாது. சில ஆண்டுகளுக்குமுன் வரை அரசாங்கத்தாரால் மிகவும் புறக்கணிக்கப் பெற்ற வட்டம் இது.

அரசியல் பெருந்தலைவராகிய பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவரவர்களை இவ்வட்டம் தந்திருக்கிறது. அவருடைய ஊராகிய பசும்பொன் இவ்வட்டத்திலிருக் கிறது. அவர் முக்குலத்தோரின் தந்தையாகவும் தெய்வமாகவும் கருதப்படுகிறார். அவருடைய சமாதி இங்கு காணவேண்டியது. செவ்வாய், வெள்ளிக்கிழமை களிலும் அவர் மறைந்த அக்டோபர் 30 ஆம் நாளிலும் திரளான மக்கள் இங்கு கூடுகிறார்கள். இங்கு மொட்டை அடித்துக் கொள்பவர்களும் உண்டு.

தேவர் பெயரால் ஒரு கல்லூரி 1971-இல் தொடங் கப் பெற்றிருக்கிறது.

இவ்வட்டம் மறவர் நாடு. முஸ்லிம்கள் பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள், நாடார்களும் ஹரிஜனங்களும்

இருக்கிறார்கள். ஆயினும் தொன்று தொட்டு இது மறவரீப் பெருங்குடி மக்களுக்கேயுரிய வட்டம். மறவர் களுடைய ஆதரவுடன்தான் பல நூற்றாண்டுகளாக இவ்வழியாக சேது யாத்திரையை ஹிந்துக்கள் மேற் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை, பீஜப்பூர், மைசூர், திருவிதாங்கூர் அரசர்களுடன் நடத்திய போர்களில் மதுரை நாயக்க மன்னர்களுக்கு இங்கிருந்து மறவர் படை சென்று உதவியது. எனவே இங்கு ஒரு போதும் வரி வசூலிக்கப்பட்டதில்லை, மதுரை மன்னர்களும் இவர்களை அடக்க முயன்றதில்லை. முத்து வீரப்ப நாயக்கர் இவர்களை அடக்க முயன்றபோது அவருடைய ஆட்சி சீர்குலைந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் மறவர் நாட்டில் கொந்தளிப்பு இருந்தது. 1957-இல் காங்கிரஸ் ஆட்சியில் மறவர்கள் அடக்கப்பட்டனர். அதை எதிர்த்து அவர் கள் தேவர் தலைமையில் கிளர்ந்து எழுந்தார்கள். அரசாங்கம் இவ்வட்டத்தில் செயல்படவில்லை. கீழத் தூவல் என்ற ஊரில் மறவர் சிலர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. தமிழ் நாடெங்குமுள்ள மக்களின் அனுதாபத்தை மறவர் பெற்றனர். தமிழ் நாடு சட்ட மன்றத்திலும் இந்திய நாடாளு மன்றத்தி லும் முதுகுளத்தூர் கலகங்களைப்பற்றி பல நாட்கள் விரிவான விவாதம் நடைபெற்றது.

இந்தக் கலகம் தமிழ் நாட்டில் காமராஜரின் தலைமையும் செல்வாக்கும் குறைவதற்கு ஒரு காரண மாக இருந்தது.

இவ்வட்டம் இயற்கை வளங்கள் இல்லாதது. இவ்வட்டத்தினுடைய தேவைகளை 1961-க்குப் பிறகு

தான் தமிழக அரசு சிந்திக்கலாயிற்று. 1963 க்குப் பிறகு தான் செயலாற்றத் தொடங்கினர். 1967 க்குப் பிறகு ஓரளவு இவ்வட்டம் முன்னேறியிருக்கிறது. போலீசு நிலையங்கள் மட்டுமே மிகுதி என்ற நிலைமாறி வருகிறது.

வைகையிலிருந்து கிருதுமால் ஆறு, கூத்தாங்கால், பரளைக்கால்வாய் ஆகிய மூன்றையும் பிரித்து ரகுநாத காவேரித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது இவ்வட்டத்துக்குப் பயன் தரும்.

இவ்வட்டத்தில் பல ஊர்களின் பெயர்கள் இப்பகுதி யின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் நினை வூட்டுவன. தேவர் பிறந்த பசும்பொன் அவ்வூரின் புவி யியல் வளத்தை உணர்த்தும், செம்பொன்னூர் என்னும் ஊர் செம்பனூர் என்ற பெயரில் திருப்பத்தூர் வட்டம் கல்லல் பகுதியில் இருக்கிறது. வெண் பொன், கரும் பொன், செம்பொன், ஐம்பொன், பைம்பொன் எனப் பழந்தமிழர் பொன்னைப் பலவாறு வகுத்தனர். பைம் பொன்னே பசும்பொன்.

முரட்டுத்துணிக்கு உதவும் கீழ்காடு உப்பன் பருத்தி இவ்வட்டத்தில் பயிரிடப்படுகிறது. இதை ஜப்பானியர் வாங்கி, பிற பருத்திகளுடன் கலந்து பயன்படுத்து கிறார்கள்.

11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சரவணப் பெருமாள் கவிராயர் இவ்வட்டத்தினர்.

இவ்வட்டத்தில் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி என்ற மூன்று ஒன்றியங்கள் உள்ளன.

முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தின் பரப்பு 132 சதுர மைல். தமிழ் நாட்டிலேயே மிகவும் குறைவாக மழை பெய்யும்

ஒன்றியம் இது. இவ்வொன்றியத்தில் முதுகுளத்தூர் பேரூராட்சியும் 44 ஊராட்சி மன்றங்களும் உள்ளன.

முதுகுளத்தூர் :

இது இவ்வட்டத்தின் தலைநகராகவும் ஒன்றியத்தின் தலைநகராகவும் இருக்கிறது. அரசாங்க அலுவலகங்கள் ஏராளமாக உள்ளன.

பரமக்குடியிருந்து 25 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. ஊரின் பிறிதொரு பெயர் தென் குழந்தபுரி. தெற்கே கடலாடி, மேற்கே கமுதி, கிழக்கே கீழக்கரை ஆகிய ஊர்களுக்குச் சாலைகள் உள்ளன. ஊருக்கு வடக்கேயுள்ள குண்டாற்றைக் கடந்து சென்றால், பரமக்குடி அபிராமம் முதலிய இடங்களுக்குச் செல்லலாம். இங்கிருந்து கடற்கரை 12 மைல் தொலைவு.

முதுகளத்தூர் என்பதே இதன் சரியான பெயர் என்று சிலர் கூறுவர். ஆதாரமாக களக்காடு, பொன் விளைந்த களத்தூர், களப்பாழ், வைகளத்தூர் என்ற ஊர்ப் பெயர்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இவ்வூர் ஆப்ப நாட்டின் தலைநகராக இருந்தது. ஆப்ப நாட்டிலுள்ள ஆப்பனூர் புகழ்பெற்ற சிவத்தலம். அங்குள்ள கிணற்று நீர் சிறந்த தீர்த்தம் என்றும் அதை வீட்டுக்குக் கொண்டு போக இயலாது என்று கூறுவர். ஆப்பனூரில் கோவில் கொண்டிருக்கும் இறைவனின் பெயர்—ஆப்பனூர்க் காரணர். இக்காரணத்தால் இவ்வட்டத்து மறவருக்குக் காரண மறவர் என்று பெயர் உண்டு. ஆப்ப நாட்டு மறவர் சங்கக் கட்டிடத்தில் உயர்நிலைப் பள்ளியும் ஊர் நடுவே கிழவன் சேதுபதி திருப்பணி செய்த சிவன்கோவிலும் உள்ளன.

பெரிய புராணத்தில் வைகைக்கரை ஆப்பனூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இதையே என்பர்.

அலங்கானூர் : அலங்கா நல்லூர் என்பதன் மரூஉ.

கொடுமளூர் ; இங்குள்ள முருகன்கோவில் புகழ் பெற்றது. இக்கோவிலுக்கு, சவ்வாதுப் புலவர் பாட்டு உண்டு.

மேலக்காஞ்சிரங்குளம் : ஆயிரத்துக்கு மேற்பட்ட வண்ணப் பறவைகள் உறையும் ஏரி உளது. இவை இலங்கை, மலேயா, அந்தமான் தீவுகளிலிருந்து வருகின்றன.

திருவரங்கம் : வைணவர்கள் வாழும் சிற்றூர். அலங்கானூருக்கு அருகே இருக்கிறது.

இவ்வொன்றியத்து ஊர்களுள் பெயர்ச் சிறப்பால் குறிப்பிடத்தக்கன: ஆனைசேரி, நல்லூர், செல்லூர், சிறுகுடி, சிறுதலை, தேரிருவேலி, வளநாடு, வெண்கலக் குறிச்சி, விளக்கனேந்தல்.

கடலாடி ஊராட்சி ஒன்றியம்

இது கடலோரமாக அமைந்தது. இங்கு பேரூராட்சி ஒன்றும் இல்லை 59 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. கடலோரப் பகுதியாக இருந்தும் இங்கு உப்பளம் கிடையாது. ஆண்டில் ஐந்து மாதங்கள் மீன் பிடிக்கிறார்கள்.

கடலாடி : இவ்வூர் முதுகுளத்தூரிலிருந்து 15. கி. மீ. தொலைவில் இருக்கிறது. இங்கிருந்து சாயல்குடி 11. கி. மீ. கடலோரத்திலுள்ள ஒப்பிலான் என்னும் ஊரும் இங்கிருந்து 11 கி. மீ. தொலைவே. கடல் அலைகள் எப்போதும் இவ்வூரில் கேட்கின்றன. ஒருகால் இவ்வூர்ப் பெயருக்கு இது காரணமாக இருக்கக்கூடும்.

உப்பு நீரும் உப்பு மண்ணும் இவ்வூரின் இயல்பு. எனினும் பாலைவனத்தில் சோலைவனம் இருப்பது

போன்று, இங்கு ஒரு சில இடங்களைத் தோண்டினால் தெளிவிலும் நிறத்திலும் பால் போன்ற நீர் ஊறுகிறது.

கேப்பை வேளாண்மை மிகுதி.

ஒவ்வொரு நாளும் மாலையில், கடல் மீனும் நண்டும் இங்கு விற்பனையாகிறது. மக்களின் முக்கிய உணவும் ஏற்றுமதியும் இவையே.

சக்கிலியரின் தொழில் வளர்ச்சிக்குக் கடலாடி ஊராட்சி மன்ற ஒன்றியம் மிகவும் உதவியிருக்கிறது.

கடலாடி என்னும் பெயருள்ள ஊர் வட ஆர்க்காடு மாவட்டத்திலும் இருக்கிறது.

இதம் பாடல் : இசை நலம் பொருந்திய இப்பெயர் ஆராய்ச்சி குரியது.

உச்சி நத்தம் : கடலோரமாக அமைந்த இப்பகுதியில் ஊரருகே குடிதண்ணீர் இருப்பது ஒரு சிறப்பு. நெல்லை மாவட்டம் சீவலப் பேரியில் இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலை உண்டு. செக்குக்கு மாடு கொடுத்தாலும் சீவலப் பேரிக்குப் பெண் கொடாதே என்பது நெல்லைப் பழமொழி.

இவ்வூரைப் பற்றிய பின் வரும் பாடல் திரு. போத்தையா அவர்களால் சேகரிக்கப் பெற்று பேராசிரியர் வானமாமலை அவர்களுடைய 'தமிழ் நாட்டுப்பாமரர் பாடல்கள்' என்னும் நூலில் வெளி வந்துள்ளது;

ஊரைச்சுத்தி உப்புத் தண்ணி.
ஒரு கிணறு நல்ல தண்ணி.
தேங்காய்த் தண்ணி உச்சிநத்தம்.
தேடிவாங்க வாக்கப்பட!
ஊருண்ணு நம்ம ஊரு.
உலகமென்னு ராமேசுவரம்.

பேர் போன உச்சிநத்தம்.
பெரண்டடிக்கும் கலிங்குத் தண்ணி.

ஏர்வாடி : முஸ்லிம்கள் மிகுதியில் வாழும் ஊர். இங்குள்ள தர்கா தென்னிந்தியாவின் பெரிய பள்ளி வாசல்களுல் ஒன்றுகும் வெளி நாடுகளில் உள்ளவர்களும் ஏர்வாடி தர்காக்கு வந்து பயபக்தியுடன் பாத்திகா ஓதுவார்கள். ஆண்டுதோறும் வருபவர்களும் உள்ளனர்.

கடுகு சந்தை : சேதுபதிகளுடைய சத்திரத்தால் புகழ் பெற்றது.

சாயல்குடி : இது ஒரு சிறு ஜமீனுக இருந்தது. வெளி நாட்டு வாணிகத் தொடர்புடைய முஸ்லிம்கள் இங்கு மிகுதியாக வாழுகின்றனர்.

கீழக்கடாரம் : மலாய் நாட்டிலுள்ள Kedah கடாரம் என, தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பெற்றிருக்கிறது. எனவே கடலோரமாயுள்ள இவ்வூர்ப் பெயர் ஆராய்ச்சிக் குரியது.

சிக்கல் : இது ஒரு முன்னேற்றமான சிற்றூர்.

ப. கீரந்தை : இவ்வூர்ப் பெயர் கீரன் தந்தை என்பதன் மருவாக இருக்க வேண்டும். இவ்வொன்றியத்தில் மாரந்தை, பன்னந்தை என்ற ஊர்கள் இருப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது.

தனிச்சியம் : இவ்வூர் அருகே வாலி நோக்கம் என்ற ஊர் உளது. அவ்வூரிலிருந்து ஒரு கி. மீ. தொலைவில் நெல்லை மாவட்ட எல்லை உள்ளது. வாலிநோக்கத்திலிருந்து ஒரு கி. மீ. விலிருந்து தென்னந் தோப்புக்களும் தூய தண்ணீருள்ள நல்ல தண்ணீர்த் தீவு கடலுள் இருக்கிறது.

திருமாலுகந்தான் கோட்டை :

பெரு நாளிக்கும் சாயல்குடிக்கும் இடைப்பட்ட இவ்வூரில் சேதுபதிகள் கட்டிய சிவன் கோவிலிருக்கிறது.

கமுதி ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தில் முதுகுளத்தூர் வட்டத்தின் பெரு நகரான கமுதியிருக்கிறது. கமுதியும் அபிராமமும் பேரூராட்சி உள்ள ஊர்கள். இவை தவிர 54 ஊர்கள் உள்ளன. பல ஊர்களின் பெயர்கள் இயற்கை வளத்தையும், கோட்டை முதலியன இருந்த வரலாற்றையும் நீர் வளத்தையும், இசைத் தொடர்பையும், பல சமூகங்களின் உறவையும் குறிப்பன. அவையாவன:

ஆனையூர், பாப்பு ரெட்டிய பட்டி, பாப்பான் குளம், இடையன் குளம், நகரத்தார் குறிச்சி, கீழமுடி மன்னார் கோட்டை, மேலமுடி மன்னார் கோட்டை, புதுக் கோட்டை, மாவிலங்கை, பாக்கு வெட்டி, எருமைக்குளம், இடிவில்கி, கொம்பூதி முதலியன.

கமுதி : இந்நகர் மதுரையிலிருந்து 52 மைல் தொலைவிலும் அருப்புக் கோட்டையிலிருந்தும் மானா மதுரையிலிருந்தும் 24 மைல் தொலைவிலும் உள்ளது. கடற்கரை இங்கிருந்து 21 மைல். முதுகுளத்தூர் 12 மைல்

குண்டாற்றின் தென்கரையில் இவ்வூர் அமைந்திருக்கிறது. இந்த ஆற்றின்மீது 1957-இல் ஒரு ரெகுலேட்டர் கட்டப்பெற்று வேளாண்மைக்குத் தண்ணீரைப் பாய்ச்சவும் எஞ்சிய நீரை மலட்டாறு வழியாக கடலுக்கும் திருப்பிவிடப் பட்டிருக்கிறது.

இவ்வூர்க் கோட்டை புகழ் பெற்றது. திரு உடையப்பத் தேவர் என்ற சேதுபதி இதை பிரஞ்சுப்

பொறியியல் அறிஞர்கள் உதவியுடன் 18-ஆம் நூற்றுண்டு தொடக்கத்தில் கட்டியதாகக் கூறுவார்கள். சிலர் இதை பாண்டியர்கள் கட்டியதாகச் சொல்லுகிருர்கள். 1801-இல் கிழக்கிந்தியக் கம்பெனியார் இக்கோட்டையைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். பிறகு மருது பாண்டியர்கள் படை இதைக் கைப்பற்றியது. கட்டபொம்மனும் இக்கோட்டையை பயன்படுத்திக் கொண்டான். இக்கோட்டை இப்போது பாழடைந்த நிலையிலிருக்கிறது. கோட்டையில் மேல் விளிம்பிலிருந்து பார்த்தால் மருதியும் குண்டாறும் தெரியும். 1957-இல் கலகங்களை அடக்க இங்குதான் படை வகுக்கப் பெற்றிருந்தது. 1877-லும் 1925-லும் 1956-லும் வெள்ளத்தால் இவ்வூர் பெரிதும் சேதப்பட்டது.

கிறித்தவர்கள், முஸ்லிம்கள், நாடார்கள், மறவர்கள் ஆகியோர் இங்கு உள்ளனர். இங்குள்ள மீனாட்சியம்மன் கோவில் சுந்தர பாண்டியன் கட்டியதென்றும் பிற்காலத்தில் சேதுபதிகள் அதைப் புதிப்பித்தார்களென்றும் கூறப்படுகிறது. இக்கோவிலுக்குள் சென்று வழிபட 1898-99-இல் சாணூர்கள் விரும்பினர். அதையொட்டி கலகங்களும் வழக்குகளும் நடந்தன. அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் 1888-இல் முஸ்லிம்களுக்கும் நாடார்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டது. 17-9-1918-இல் நாடார்கள் கோவிலுக்குள் நுழைவதை எதிர்த்து மறவர்கள் பெரும் கலகம் செய்தனர். அது முதல் கோட்டையருகே ஆயுதம் தாங்கிய போலீசுப் படை இருந்து வருகிறது.

நாடார்களுக்குரிய மாரியம்மன் கோவிலும், கிறித்தவர்களுக்குரிய தேவாலயமும் உள்ளன. சந்தை செவ்வாய்க் கிழமை. முக்கிய வியாபாரம் பருத்தி.

அபிராமம் : முதுகுளத்தூரிலிருந்தும் கமுதியிலிருந்தும் 8 கி. மீ. தொலைவு. இம்மூன்று ஊர்களும் ஏறத்தாழ முக்கோண வடிவில் உள்ளன என்று சொல்லலாம்.

முஸ்லிம்கள் இராமநாதபுர மாவட்டத்தில் பெருந்தொகையினராக வாழும் 5, 6 ஊர்களில் இது ஒன்று இவ்வூரார் சிலர் கைலிவாணிபத்தில் உயர்நிலை அடைந்துள்ளனர். இங்குள்ள மசூதி, 120 அடி உயரமுள்ள கூண்டுடன் கூடியது. புகழ் பெற்றது.

உயர்நிலைப் பள்ளிக்குச் சிறந்த கட்டிடம் உண்டு.

இராணிசேதுபுரம் : இச்சிற்றூர் பெருநாழிக்கும் விளாத்திகுளத்துக்கும் இடையேயுளது. முதுகுளத்தூரிலிருந்து 19 கி. மீ. தொலைவு, நெல்லை மாவட்டத்தின் எல்லையருகே அமைந்தது.

இது, இராமநாதபுரம் சேதுபதியின் ஆட்சியில் இருந்த ஊர். இதனை நிலைநிறுத்தும் பொருட்டுச் சேதுபுரம் என்றும், பட்டத்தரசியை நினைவுகொள்ளும் முகத்தான் இராணி என்ற அடைமொழியும் இடப்பெற்றதாகவும் இவ்வூரார் கூறுவர். அம்மையையும் அப்பனையும் ஒருசேர இணைத்துப் பெயரிடுவதுபோல இவ்வூருக்கும் பெயர் வைத்திருக்கலாம் எனக்கருத இடம் உண்டு.

அகத்தாரிருப்பு : இது யாதவர்கள் செல்வாக்கு நிறைந்த ஊர்.

குறையற வாசித்தான் : இவ்வூர் கூடகுளத்துக்கு அருகே இருக்கிறது. இவ்வூரின் பெயர் குறைகுறச்சான் என்று வழங்கி வருகிறது. பழைய ஏட்டை நன்கு வாசித்து முடித்த ஒரு புலவருக்கு இவ்வூர் முற்றூட்டாக வழங்கப்பெற்றது.

பசும்பொன்: கமுதியிலிருந்து 5. கி. மீ. தொலைவிலுள்ளது. தேவர் சமாதியும் கல்லூரியும் உடையது.

மண்டல மாணிக்கம்: இது சேதுபதிகளால் பிராமணர்களுக்கு வழங்கப்பெற்ற ஊர். நெசவுத்துறையில் சிறந்து விளங்கும் முதலியார்களால் செழிப்படைந்திருக்கிறது. இராமேசுவரம் வெங்கோபராவ் சத்திரத்துக்கு இவ்வூரில் நிலங்கள் உள்ளன. சிவன் கோவிலும் பெருமாள் கோவிலும் இவ்வூரிலிருக்கின்றன. சித்திரைத் திருவிழா, மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகியவை இவ்வூரில் முக்கியவிழாக்கள்.

கண்டமாணிக்கம் என்னும் ஊர் இம்மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்திலிருக்கிறது. கூடல் மாணிக்கம் என்ற பெயரில் கேரளத்தில் கோட்டயம் மாவட்டத்தில் ஓர் ஊர் இருக்கிறது.

3. சிவகங்கை வட்டம்

இராமநாதபுரம் அரசர்க்கு அடுத்தபடி இம்மாவட்டத்தில் புகழ்பெற்ற சிவகங்கைக் குறுநிலமன்னர்களின் தாயகம் இவ்வட்டம். மக்கள் தொகை மூன்று லட்சம். வைகை பாய்வதாலும், பெரியாற்றுக் கால் சில பகுதிகளுக்கு வருவதாலும், வட்டத்தின் ஒரு பகுதி வளமாக இருக்கிறது. வெளிநாடுகளில் பொருளீட்டி இங்கு வாழ்வதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது. தொழில்கள் தொடங்கவும் வேளாண்மையில் முன்னிலும் கூடுதலாக ஈடுபடவும் இப்போது மக்கள் முன்வருகின்றனர். அரசாங்க அலுவலகங்கள் நிறைந்த நகரமாகச் சிவகங்கை இருந்து வருகிறது.

முக்குலத்தோரே இங்கு முக்கியமான சமூகம். கிறித்தவ சமயம் ஓரளவு பரவியிருக்கிறது.

சிவகங்கைச் சீமையின் சிறப்புக்கள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலமுதற்கொண்டு வேலும், வாளும், கோலும் குந்தமும், ஈட்டியும் மழுவும் தமிழ்நாட்டு மறவர் கையில் பல நூற்றாண்டுகளாக விளையாடி வந்திருக்கின்றன. இக்குலத்தினர் ஆண்ட சீமைகள் இரண்டு—இராமநாதபுரமும் சிவகங்கையும். இராமநாதபுரத்திலிருந்து பிரித்து ஒரு பகுதியைச் சேதுபதி தம் மகளுக்கு வழங்கியதால்தான் சிவகங்கை அரசு தோன்றிற்று. குருவை மிஞ்சின சீடர்போல, தாய்ச்சீமைக்கு இல்லாத பல சிறப்புகளை சிவகங்கை பெற்றிருககிறது.

இலக்கியத்திலும், வரலாற்றிலும் புகழ்பெற்ற "தொண்டி"த் துறைமுகம் சிவகங்கைக்கு உட்பட்டது இதனால் சிவகங்கை மன்னர்க்குத் "தொண்டியன்• துறையான்" என்னும் பட்டம் உண்டு. பாண்டியர் தலைநகரான மதுரை அவர்களுடைய துறைமுகமான தொண்டி இரண்டையும் இணைக்கும் சாலை சிவகங்கை வழியே செல்லுகிறது. இரு நகர்களும் சிவகங்கையிலிருந்து ஒரே தொலைவில் உள்ளன.

வரலாறு தொடங்கிய காலம் முதல் உரிமையோடு இருந்த வீரர்களைப் படைத்த கானநாட்டையும் கானப்பேர் என்ற கோட்டையையும் உடையது இந்தச் சீமை, 12-ஆம் நூற்றாண்டில் படையெடுத்த லங்காபுர தண்டநாயக, 18-ஆம் நூற்றாண்டில் படையெடுத்த (கிழக்கு இந்தியக் கும்பெனியின் கவர்னராக மதுரையிலும் திருநெல்வேலியிலும் இருந்த) ஜாக்சன், லுஷிங்டன், தளபதி அக்னூ ஆகியோர் போராட்டங்களையெல்லாம் சமாளித்தது இந்தச் சீமை.

வெள்ளையரை எதிர்த்து வீரப்போரிட்ட வீர பாண்டியக் கட்டபொம்மனுக்குப் படையும் துணையும் இடமும் தந்தது சிவகங்கைச் சீமை. இந்தியவிடுதலை இயக்கத்தின் முன்னோடித் தளபதிகளாகிய சின்னமருது, பெரிய மருது சகோதரர்களைத் தந்ததும் இப்பகுதியே. ஜான்சிராணிக்கு முன்னரே வேலுநாச்சியார் என்ற வீர நங்கையைத் தந்து பெண்ணின் பெருமையை அறிவுறுத்தியதும் இந்தச் சீமையே.

காளையார்கோவில் கோபுரத்தைக் கட்டியும்; சருகணி கத்தோலிக்க ஆலயத்துக்கும் எறும்புக்குடியிலும் நரிக்குடியிலும் பள்ளிவாசல்களுக்கும் திருக்கோட்டியூர் வைணவர் கோவிலுக்கும் மானியம் வழங்கி மருதிருவர் இன்றைய இந்தியாவின் சமயப்பொது நோக்கு ஆட்சிக்கு அடிகோலியது சிவகங்கைச் சீமையில் தான்.

உடல்வன்மை வேண்டுமென்று இப்போது பலர் அடிக்கடி கூறிவருகின்றனர். 70, 80 ஆண்டுகளுக்கு முன்னரே சிவகங்கையில் விளையாட்டுக்கள் சிறந்து விளங்கின. அரசர் பிறந்த நாளிலும் நவராத்திரி விழாவின்போதும் விளையாட்டுப் பந்தயங்கள் நடைபெற்றன. ஹாக்கி, கிரிக்கட், கால்பந்து, குதிரைமீதேறி ஆடும் போலோ இப்படிப்பல ஆட்டங்கள் நடந்த வண்ணமாக இருந்தன. அரசகுடும்பத்துப் பெண்டிரும் குதிரை சவாரி செய்த சிவகங்கையில், இன்று குதிரைகள் அரிது. விளையாடுவதற்கு ஆள் கிடைக்கவேண்டுமென்பதற்காக ஓர் உயர்நிலைப்பள்ளியைச் சிவகங்கை அரச குடும்பம் தொடங்கியது என்ற செய்தி வியப்பாக இருக்கலாம்; ஆனால், அதுவே உண்மையான காரணம்.

மகாத்மா காந்தியடிகள் ஹரிஜன இயக்கம் தொடங்குமுன்னரே, சிவகங்கை அரசகுடும்பத்தார்

"ஏழை மாணவர் இல்லம்" வைத்துச் சாதிமத வேறு பாடின்றி நாவிதர்க்கும் வண்ணருக்கும் ஏனைய வகுப்பினருடன் சேர்த்துச் சமபந்தி போஜனம் நடத்தி வந்திருக்கின்றனர். இதுவே இன்றைய சிவகங்கையில் மாநில அரசினர் நடத்திவரும் "பிற்பட்ட சமுதாய மாணவர் விடுதி" யின் அடிப்படை.

அரசியல் விழிப்போடுஅரசியல் அறிவும் நிறைந்தது சிவகங்கை. அன்னை பெசண்டு அம்மையார் மும்முறை இந்த ஊருக்கு வந்திருந்ததும் இராமநாதபுர மாவட்டத் தில் இது ஒன்றே அக்காலத்தில் படித்தவர் சிலரேனும் வாழ்ந்த ஊராக இருந்ததும் இவ்வூரார் பெருமைப் படத்தக்கன. 1856-இலேயே இங்கு உயர்நிலைப்பள்ளி ஏற்பட்டுவிட்டது. அதன் விளைவாகப் பிற்பட்ட சமூகத்தினரிலும் சிலர் உயர்நிலைப்பள்ளிப்படிப்பு வரை பயின்றனர். பிராமணரல்லாதர் யாராக இருந்தாலும் வேலைவேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கு ஜமீனில் உடனே வேலைகொடுக்க வேண்டுமென்று 1924-இல் யாழ்ப்பாணத்தாராகிய ஐ. சி. எஸ். காரரர் ஒருவர் ஆணை பிறப்பித்தார். நான்காம் படிவம் படித்தவர்க்கு "கிளார்க்" வேலை, ஆறும் படிவம் படித்தவர்க்கு "ரெவின்யூ இன்ஸ்பெக்டர்" வேலை; பி. ஏ. பட்டம் உடையவர்க்கு உதவித் தாசில்தார் வேலை; அவர்களுள் வயோதிகர்க்கு டிவிசனல் ஆபீசர் பதவி என்று படிப் புக்கும் அநுபவத்துக்கும் ஏற்றவாறு சிவகங்கைச்சீமையி லுள்ள பிராமணரல்லாதார் வேலை வேண்டுமென்று விண்ணப்பித்த அனைவர்க்கும் வேலைகொடுத்தது சிவ கங்கைச்சீமை. இவ்வாறு ஆணையிட்டவர் ஆல்பிரட் மக்கடல் ஜார்ஜ் குமாரசாமி தம்பு என்பவர். இவரைத் "தம்புத்துரை" என்று நாட்டு மக்கள் குறிப்பிட்டு வந்தனர். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில்

கணிதநூற்பேராசிரியராக இருந்தவர்; பேரறிஞர்; தம் ஆட்சிக்காலத்தில் சிவகங்கைச்சீமையில் செயற்கரிய செயல்களைச் செய்தவர்.

அந்நாளிலேயே சிவகங்கையில் பிராமணர் அல்லாதார் இயக்கம் வேரூன்றிற்று. நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தங்கும் அறையில், பிராமண வக்கீல் களுக்கு ஒரு பானையில் தண்ணீரும் ஏனைய வக்கீல்களுக்கு ஒரு பானையில் தண்ணீரும் வைக்கப்பட்டது. இதன் விளைவு பிராமணரல்லாத வழக்கறிஞர்கள் இம் மாவட்டத்தில் திராவிடக்கழகத்தையும் பிற்காலத்தில் தி. மு. க. வையும் வளர்த்ததாகும்.

தம்புதுரைக்கு முன்னரும் பின்னரும் 150 ஆண்டு களில் சிவகங்கைச் சீமையின் ஆட்சி, செம்மையாக நடைபெறவில்லை. அதன் பயனாக இந்த ஜமீனை, சென்னை யிலுள்ள பி. ஆர். அண்டு சன்ஸ் என்ற வணிகக்குழு குத்தகைக்கு எடுத்து Lessee ஆக, ஆட்சி நடத்தி வந்தது. அவர்கள் காலத்தில் சிவகங்கைக்குக் குடிநீர் கொண்டு வர 16மைல் நீளத்திற்கு 3அடி அகலமுள்ள கால்வாயை வைகை ஆற்றிலிருந்து வெட்டினர். அதற்கு 'லெஸ்ஸி. கால்வாய் என்று பெயர். 1918-இல் லெஸ்ஸி' ஆட்சி முடிவடைந்தது. கால்வாய் பிறகு தூர்ந்துவிட்டது. அதைப் புதுப்பித்துத்தான் 1958-இல் காங்கிரஸ் ஆட்சியில் இப்பகுதிக்கு வைகைநீர் வழங்கப்பெற்றது.

மருதிருவர் மரணத்திற்குப் பிறகு, சிவகங்கை அரச குடும்ப உரிமை யாருக்குச் சேரும் என்பது பெரிய குழப்பமாக உருவாயிற்று. 1830 முதல் 1929வரை லண்ட னிலுள்ள பிரிவிகவுன்சிலில் வழக்குகள் நடைபெற்றன' இதனால் சிவகங்கை அரசர் குடும்பத்தின் பணம் தீர்ந்தது. செட்டியார்கள் சிலர் அரசர்க்குக் கடன் வழங் கினர். அந்தக் கடன்களைக் கட்ட, சிவகங்கை

ஜமீன் 32 ஆண்டுகளுக்கு ஐரோப்பியத் துரைமார்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. இந்த வழக்கில் சில விசாரணைகள் செய்வதற்காக, சிவகங்கையிலேயே நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவிலுள்ள ஜமீன்களில் பட்டத்து உரிமை முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிய பொதுவான சட்டதிட்டங்கள், சிவ கங்கை வழக்கில்தான் பிரிவி கவுன்சிலால் வரையறை செய்யப் பெற்றன.

பாமரர் இலக்கியங்களில் சிவகங்கை வரலாறு பதியப்பட்டிருக்கிறது, சிவகங்கைச் சரித்திரக் கும்மி, முத்துச்சாமி என்பவரால் கும்மிபோல சந்தத்துடன் படிக்கும்படி சாதாரண நடையில் எழுதப்பட்டிருக் கிறது. முருகேசன் என்ற முருகப்பன் இயற்றிய சிவகங்கைச் சரித்திர அம்மானை என்ற அம்மானை நூலும் வெளிவந்திருக்கிறது. இந்நூலுக்கு கும் பெனியாரி அம்மானை என்ற பெயரும் உண்டு.

சிவகங்கைச் சீமையின் வரலாறு, கவியரசு கண்ண தாசனால், 1962-ஆம் ஆண்டளவில் திரைப்படமாக் கப்பட்டது.

பேராசிரியர் ந. சஞ்சீவி மருதிருவர் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் படைத் திருக்கிறார்.

இனி சிவகங்கை வட்டத்தைக் காண்போம். சிவ கங்கை நகராண்மைக் கழகமும் சிவகங்கை, காளையார் கோவில், மானமதுரை, திருப்பூவணம் ஆகிய நான்கு ஒன்றியங்களும் அடங்கியது இவ்வட்டம்.

சிவகங்கை நகரம் :

1964-இல் இங்கு நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. கோட்ட ஆட்சித் தலைநகராகவும் இருந்து வருகிறது.

இங்கிருந்து மானாமதுரை 18 கி. மீ. திருப்பத்தூர் 35, மேலூர் 26, மதுரை 48, தொண்டி 55.

ஊர்ப் பெயர்: வேங்கை மார்பன் முதல் வெள்ளையரை விரட்டியடித்த வீர பாண்டியன் வரை வீரத்திருமன்னர் பலர் வாள்மேலும் வேல்மீதும் விளையாடிய பாசறையாக, பறந்தலையாக விளங்கியதால் செவ்வேங்கை என்பது சிவகங்கை ஆயிற்று என்று சிலரும்

தில்லையிலுள்ள நடராசர் கோவில் சிவகங்கைக் குளம் போன்று இவ்வூரில் குளமும் அதன் உள்ளிடத்தே சிவ லிங்கமும் அமைந்துள்ளதால் சிவகங்கை என்று பெயர் ஏற்பட்டதென்று வேறு சிலரும்

சிவன் முடியில் திகழும் கங்கையை நினைவுறுத்த வேண்டி விசுவநாதர் விசாலாட்சி சமேதராய் வீற்றிருக்கும் சிவன் கோவிலுடைய ஊர் ஆதலின் சிவகங்கை என்னும் பெயருடன் இவ்வூர் விளங்கி வருகிறது என்று இன்னும் சிலரும் கூறியுள்ளனர்.

சிறப்புக்கள்: கௌரிமஹால் என்னும் அரண்மனையாலும் அரசாங்க அலுவலகங்களாலும் இந்நகர் புகழ் பெற்றிருக்கிறது. அரண்மனைக்குள் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி கோவில் இருக்கிறது. இது பாபநாசம் சிவனால் பாடப் பெற்றது. அரண்மனை தான் இந்நகரின் மிகப் பழமையான கட்டிடம். வீரபாண்டியக் கட்டப்பொம்மனுக்கு 1798—99-இல் சின்ன மருது அடைக்கலம் கொடுத்தது இந்த அரண்மனையில் தான்.

சிவகங்கையில் காணத்தக்கவை: ஒரு புறம் மயில்கள் தோகை விரித்தாட, பிற பகுதிகள் இடிந்து கொண்டிருக்கும் கௌரிமஹால் என்னும் பழைய அரண்மனை; அங்கே அரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் மண்டபத்திலுள்ள கருங்கல் சவுக்கை, அதன் நான்கு மூலைகளி

லுள்ள யாளிவடிவம், தங்கக் கலசம் உள்ள மணிக் கூண்டு, அரச குடும்பத்தினர் நீந்திக்குளிக்க (வெளிக் குளத்துடன் தொடர்புடைய) ஒரு குட்டை.

சிவகங்கையில் இருப்பவை: தியசாபிகல் லாட்ஜ், கோகலே மண்டபம், பிராடஸ்டண்டு ஆலயம், காசி விசாலாட்சி கோவில், மின்சார சப்ஸ்டேஷன், அரசர் பெயரால் கல்லூரியும் உயர்நிலைப்பள்ளியும், ஆங்கிலேய அம்மையார் பெயரால் பெண்கள் பள்ளி, 80 வழக்கறிஞர்கள், பல நீதிமன்றங்கள், ஏராளமான அரசாங்க அலுவலகங்கள், இராமநாதபுர மாவட்ட நூலகத்தின் தலைமை நூல் நிலயம், கத்தோலிக்கர்களுக்கு உரிய Church of ou rLady of Assumption.

சிவகங்கையில் இல்லாதவை: பெரிய வியாபாரம். தொழிற்சாலை.

சிவகங்கையின் ஏற்றுமதி: வெளிநாட்டுத் தொடர்புடைய சிக்கலான வழக்குகள் பற்றி முடிவு செய்யச் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு "அப்பீல்கள்."

சிவகங்கை மக்களின் விருப்பம்: மானா மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு ரயில் பாதை அமையவேண்டும் என்பது.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியம் 43 சிற்றூர்களை மட்டும் உடையது. அலுவலகம் சிவகங்கையில் இருக்கிறது. ஒன்றியத்து ஊர்கள் சிவகங்கைக்கும், மேலூர் (மதுரை மாவட்டம்) வட்டத்துக்கும் இடையேயுள.

அரசனூர்: கோமாரிப் பட்டிக்கும் மீனாட்சிபுரத்திற்கும் இடையே 5. கி. மீ. தொலைவுக்கு, காரியகப் படிவங்கள் உள்ள பாறைகள் இருக்கின்றன.

ஒக்கூர்: தமிழ் இலக்கியத்துக்கும் இவ்வூருக்கும் உள்ள தொடர்பை, முன்னரே குறித்துள்ளோம். ஒக்கை எனவும் இவ்வூருக்குப் பெயர் உண்டு. குறளுரை ஏட்டுப் பிரதிகளில் 'விரைத்தார் அலங்கல்' எனத் தொடங்கும் பாடலில் பரிமேலழகர் 'ஒக்கை காவலர்' என்று கூறப் பெறுகிறார்.

இவ்வூர்ச் செல்வரும் ஒன்றியத்தின் தலைவருமான இராமநாதன் செட்டியார் கொடையால் உயர் நிலைப் பள்ளி, ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, மருத்துவ மனை முதலியன ஏற்பட்டு இவ்வூர் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

சோழபுரம்: விஜயபுரம் என்பது இவ்வூரின் முன்னைப் பெயர். இவ்வூரில் விக்கிரமச் சோழன் ஆண்டிருந்த படியால் இது சோழபுரம் ஆயிற்று. காரைக்குடி சொக்கலிங்க ஐயா பாடியுள்ள சோழபுரப் புராணத்தில் சோழர் தம் பெண்ணைப் பாண்டிய மன்னர்க்குக் கொடுத்த வரலாறுகளைக் குறிப்பிட்டிருக்கிறார். கங்கை கொண்ட சோழபுரம், ஜெயங்கொண்ட சோழபுரம், பல்லவபுரம் (பல்லாவரம்), பாண்டிய (ராஜ) புரம் என்ற ஊர்ப் பெயர்களுடன் இதுவும் வைத்து எண்ணத் தக்கது.

நாலுகோட்டை: இது சிவகங்கை அரச குடும்ப வரலாற்றுடன் தொடர்புடையது.

வில்லிபட்டி: கிழப்பூங் குடிக்கும் சிவகங்கை மேலூர்ச் சாலையிலுள்ள இராமநாதபுர மாவட்டத்து மலம்பட்டிக்கும் இடையேயுள்ள சிற்றூர். சென்னையருகேயுள்ள வில்லிவாக்கம், புதுச்சேரியருகே யுள்ள வில்லியனூர் போன்று இங்கு ஒரு காலத்தில் வில்லியர் என்ற இனத்தார் வாழ்ந்திருக்கக்கூடும். இது ஆராய்ச்சிக்கு உரியது.

காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம்

சிவகங்கை வட்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள இவ்வொன்றியத்தின் பரப்பு 208 சதுரமைல். இதில் 74 ரெவினியூ கிராமங்கள் உள்ளன. நாட்டரசன் கோட்டையில் பேரூராட்சியும் 42 ஊராட்சி மன்றங்களும் உள்ளன. ஒன்றியத்து அலுவலகம் காளையார் கோவிலில் இருக்கிறது. இங்கு நீர் வளம் குறைவு. வானம் பார்த்த பகுதியாக இருப்பதால் மக்களுக்கும் ஒன்றியத்துக்கும் வருவாய் குறைவு. மக்கள் தொகை 75, 593.

தரமான செங்கற்களும் இன்சுலேட்டர்களும் செய்தற் கேற்ற மண்வளம் நாட்டரசன் கோட்டையில் காணப்படுகிறது.

முத்தூர் வாணியங்குடி என்னும் ஊர்ப் பெயர் ஒரு காலத்தில் இப்பகுதியினர் முத்து வாணிபம் செய்ததை நினைவூட்டுகிறது.

திருவாடானை வட்டத்தை ஒட்டிய பகுதிகளில் கிறித்தவ சமயம் பரவியிருக்கிறது. இவ்வொன்றியத்து வழியாகக் காரைக்குடி சிவகங்கை இரயில் பாதை செல்லுகிறது.

காளையார் கோவில்: சங்க இலக்கியத்திலும் சைவ சமய இலக்கியத்திலும், பாண்டியர் காலமுதல் 19-ஆம் நூற்றுண்டுவரை வரலாற்றிலும் நிலைத்த இடம் பெற்றது காளையார் கோவில். இது மதுரையிலிருந்து (தொண்டிக்குச் செல்லும் வழியில்) 61 கி. மீ. தொலைவில் அமைந்திருக்கிறது மாணிக்கவாசகர் திருவாதவூரிலிருந்து திருப்பெருந்துறைக்கு இவ்வழியே சென்றதாகக் கருதப்படுகிறது. நாட்டரசன் கோட்டை இரயில் நிலையத்திலிருந்து இவ்வூர் 10 கி. மீ. தொலைவு.

கி பி. முதலாம் நூற்றுண்டில் இவ்வூருக்குக் கானப்பேர் என்ற பெயர் நிலவிவந்தது. காளுடுகாத்தான் வரை பரவியிருந்த கான நாட்டின் தலைநகராக இது இருந்தது. சிங்களப் படையைப் புற முதுகிடச் செய்த வேங்கை மார்பன் இங்கிருந்து ஆட்சி செய்து வந்தான். அந்த அரசனை வென்று வாகைசூடியதால் உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி என்று புற நானூறு முதலிய சங்க இலக்கியங்களில் சிறப்பிக்கப்படுகிருன்.

கானநாட்டின் தலைநகர் காளையார் கோவில். எல்லைகள்—கானநாடு காத்தான் (காளுடுகாத்தான்); திருச்சுழி, நயினர் கோவில், திருப்பத்தூர். எல்லை வீரர்களில் வில்லும் அம்பும் வைத்துக் காவல் காத்தவர்களே இன்னும் வில்லம்பர் என்ற பெயரில் திருச்சுழியிலும் வல்லம்பர் என்ற பெயரில் பள்ளத்தூர்ப் பகுதியிலும் உள்ளனர். நயினர் கோவிலிலும் திருப்பத்தூரிலும் எல்லை வீரர்கள் மற்போரிலும் கல்லடியிலும் வீரர்களாக இருந்தனர் என்பர்.

இவ்வூரில் பண்டைக் காலத்தில் பாண்டியன் கோட்டை என்று பெயர் பெற்று ஒரு கோட்டை இருந்தது. இதன் அகழியும் மதிலும் அழிந்துவிட்டன. சதுரவடிவாகவும், சில இடங்களில் 25 அடி உயரமுள்ள மண் மதில்களுடனும் இக்கோட்டையின் இடிபாடுகள் இன்று காட்சி தருகின்றன. வீர பாண்டியக் கட்டப் பொம்மன் இக்கோட்டையில்தான் தங்கி ஆங்கிலேயரோடு போர் தொடுத்தான் என்பர்.

சிறப்பு : மூன்று சிவன் கோவில்கள், அடுத்தடுத்து அமைந்திருப்பது இவ்வூரின் சிறப்பு. இவற்றுள் பழமையானது சம்பந்தர், சுந்தரர் இருவரது தேவாரமும்

பெற்ற காளீசர் கோவில். இறைவன்—காளை ஈசுவரர். இறைவி சொர்ணவல்லி.

அம்பாளின் சாபத்தால் மற்ருெரு சிவன் கோவில் உண்டாயிற்று. இதுவே சோமேசுவரர்—சௌந்தர நாயகி கோவில்.

வரகுண பாண்டியனுக்குக் காட்சி கொடுக்க, மீனுட்சியம்மனும் சுந்தரேசுவரும் கானப்பேரெயிலுக்கே வந்து, காளைஈசுவரர், சொர்ணவல்லி கோவில்கட்கு இடையே தோன்றினராம், அதையொட்டிப் பாண்டியன் கட்டியது சுந்தரேசர் கோவில். இக்கோவில் பாண்டியன் கட்டிய நிலையிலும் அளவிலுமே இன்றும் உளது. பிறகோவில்கள் இரண்டும் பிற்காலத்தில் விரிவாகக் கட்டப்பட்டுள்ளன.

சுந்தரேசர் கோவில், மூன்று கோவில்களிலும் காலத்தால் பிந்தியது. நவக்கிரகங்கள் சுந்தரேசர் கோவிலில் மட்டுமே உள்ளன. நவக்கிரகங்களை வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் பரவியது என்பது தெளிவு.

காளீசுவரர் கோவிலில் இரண்டு சுற்றுக்கள் (பிரகாரங்கள்) உள்ளன. இதன் கருவறை முற்றிலும் கருங்கல்லால் ஆனது. சொர்ணவல்லி அம்மன் கோவில் பள்ளி அறையிலுள்ள கட்டில், தங்கத்தால் ஆனது. வாகனங்கள் விலை யுயர்ந்தவை.

ராஜ கோபுரங்களில் சிறிய கோபுரம் முதலாம் சுந்தர பாண்டியனுல் 12-ஆம் நூற்ருண்டில் கட்டப் பெற்றது. பெரிய கோபுரம் பெரிய மருதுவால் கட்டப் பெற்றது.

18-ஆம் நூற்ருண்டில் பெரியதொரு ராஜகோபுரம் கட்ட விழைந்த மருதுபாண்டியர், முன்னை ராஜகோபுரத் தில் கைவைக்க அஞ்சியும் தம் திருப்பணியைத் தனித்

துச் செய்ய விரும்பியும், புதிதாக ஒரு ராஜகோபுரம் அமைத்தார். இதுவே சோமேசர் கோயில் முன்பாக வானளாவ அமைந்து, மதுரைக் கோபுரம் தெரியக் கட்டிய மருது அரசர்' என்று கூறுமாறு அவர் புகழ் இன்றும் என்றும் நின்று நிலவச் செய்து வருகிறது. காளையார் கோயில் கோபுரத்தின் மீதேறி சிறந்த தொலை நோககி (Telescope with Powerful Lense) வைத்துப் பார்த்தால் மதுரைக் கோபுரம் தெரியும்.

இதற்கென மானுமதுரையிலிருந்து இவ்வூர் வரை 12 மைல் தொலைவுக்கு வண்டி முதலிய வாகனங்கள் வைக்காமல் வழி நெடுக மக்களை நிறுத்தி வைத்துக் கைச் செங்கலாகச் செங்கல்கள் மானுமதுரையிலிருந்து காளையார் கோவிலுக்கு வந்தன. ரஷ்யாவிலும் சீனு விலும் சில அணைகள் கட்ட இயந்திரத்தைப் பயன்படுத் தாமல் இவ்வாறே மக்களிடம் வேலை வாங்கப்பட்டிருப் பதும் குறிப்பிடத் தக்கது. இக்கோபுரத்தின் உயரம் 157 அடி, மதுரையில் மிக உயர்ந்த கோபுரத்தின் உயரம் 151 அடிதான்.

மூன்று கோவில்கள் ஒரே கோட்டை மதிலுக்குள் இருக்கும் காட்சியை வேறு எங்குமே காண இயலாது. இக்கோவில் சொத்துக்கள் யாவும் காளீசர் பெயரால் உள்ளன. திருவிழாக்கள் சோமேசர்க்கு மட்டுமே நிகழ் கின்றன. சுந்தரேசரும் மீனுட்சியும் மதுரையில் எவ் வளவுதான் பகட்டாக இருந்தாலும் இங்கு ஒதுக்குப் புறத்தில் தவம் செய்தவண்ணமாக, அடக்கமாக இருக் கிருர்கள். இதனுல் 'காளைதேட, சொக்கர் சுகிகக, சோமேசர் அழிக்க' என்ற பழமொழி வழங்கி வருகிறது.

இங்கு சோமாஸ்கந்தரின் திருவுருவமும், அருண கிரிநாதர் திருப்புகழ் பெற்ற முருகனின் திருக்கோல

மும் பெரிய மருது, சின்ன மருது, கிழவன் சேதுபதி ஆகியோர் சிலைகளும் காணத் தக்கவை.

மூன்று கோவில்களையும் சுற்றிப் பெரியதொரு மதிற் சுவரும், அகன்ற தெருக்களும் அவற்றின் தென் பகுதியில் யானை மடு என்ற மிகப்பெரிய தெப்பக்குளமும், அதன் நடுவே தோற்றப் பொலிவுடன்கூடிய நீராழி மண்டபமும் உள்ளன.

இவ்வூர்க் கோவில்களின் கரணைக் கால்கள் மட்டும் ஒவ்வொன்றும் 30,000 அல்லது 40,000 ரூபாய் ஆகும். 'பாதங்கள் இவை எனின் படிவங்கள்...' என்னுமாப் போல, இவற்றிலிருந்து கோயில் திருப்பணிகளுக்கும் மண்டபங்களுக்கும் ராஜகோபுரங்களுக்கும் இத்தலத்தில் எத்துணைப் பொருள் செலவிடப்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துக்கொள்க. இவ்வாறு பொருளை வழங்கியவர்கள் பாண்டிய மன்னர்கள், மருத பாண்டியர், அரண்மனைச் சிறுவயல் குறுநில மன்னரி, நாட்டுக் கோட்டை நகரத்தாரிகள் ஆகியோர் ஆவர்.

சோமேசர் கோவிலில் சகஸ்ரலிங்கம் உளது. இக் காட்சி ஒரு சில கோவில்களில் மட்டுமே காணற்குரியது.

இத்தலத்தில் நிகழும் பெரிய திருவிழாக்கள் மூன்று,

வைகாசி மாதத்தில் சோமேசர்க்குப் பிரம்மோற்சவம் இவ்விழாவில் ஏழாம் நாளில் பொய்ப் பிள்ளையை மெய்ப்பிள்ளையாக்கிய காட்சி சிறப்பாகக் காணத் தக்கது. வரகுண பாண்டியன் மனைவி வரம் கேட்டதற்கு இசைந்து இறைவன் அவருக்கு மகன் பிறக்கச் செய்த நிகழ்ச்சியை இது நினைவூட்டுகிறது.

நாட்டரசன் கோட்டையில் கண்ணுடைய நாயகி திருவிழாவுக்கு முதல்நாள் காளையாரி கோவிலில் திருவிழா

நிகழும். அங்கு வெள்ளித் தேரில் அம்மன் உலாவரும் நாளில் காளையார் கோவிலில் தெப்பத்திருவிழா நிகழும். வைகாசி பிரம்மோற்சவத்தை யொட்டிப் பெரிய மாட்டுத் தாவணி இங்கு கூடுகிறது. ஆடி மாதத்தில் பூரம் திருவிழா நடைபெறுகிறது. தை மாதத்தில் காளீசர்க்குப் பிரம்மோற்சவம் நிகழ்கிறது.

அறங்கள் 32-ம் இத்தலத்தில் செய்யப்பட்டுள்ளன. ஆகமப் பாடசாலைகள். தேவாரப் பாடசாலைகள் பரத நாட்டியச் சாலைகள் சிறப்புடன் மிளிர்நத தலம் இது.

இங்கு சுமை தாங்கிக் கற்கள் ஏராளம். கருவில் உருவான குழந்தையை முழுவடிவத்தில் உயிருடன் காண இயலாது கருச் சிதைநத பெண்கள் தாங்கள் சுமந்து பலன் தராமற் போயிற்றே என்ற எண்ணத் தில் இறைவனிடம் பிள்ளைப் பேற்று வரம் பெற சுமை தாங்கிக் கல் அமைப்பது பண்டைத் தமிழர் வழக்கங் களில் ஒன்று.

ஆவுறையும் கற்களும் இவ்வூரின் புறப் பகுதிகளில் மிகுதியாகக காணபபடுகின்றன. இரைம்தடி மேயும் மாடுகள் அரிப்பு ஒற்பட்டால் உரசிக் கொள்ள, இக் கற்கள் வைக்கப்பட்டுளளன. உயிர்களிடத்து அன்பு காட்ட இவ்வழக்கம் நிலவியது. இந்நாளில் SPCA— நிறுவி அதன் தலைவராக வந்து விழாக்களில் மாலை போட்டுக்கொண்டால் உயிர்களிடம் அன்பு காட்டுவ தாகப் பறை சாற்றப்படுகிறது.

இவ்வூரின் சிறப்பு இங்கு வேலையாக வருபவர்களுக் குத் திருமணம் நிகழ்வதாகும். திருமணம் தடைப் பட்டால் அதுவரை அவர்கட்கு வேற்றூருக்கு மாறுதல் கிடைப்பதில்லையாம்!

கோவில் வாயிலில் மிகப்பெரிய காலி இடம் உளது. ராஜகோபுரத்தின் உயரத்தை உணர்த்தவும், கூட்டங்கள் நடத்தவும் இது பயன்படுகிறது. காளீசர் சந்நிதியின் எதிரில் மருதுபாண்டியன் தெருக்கோடியில். மருது பாண்டியனுடைய சமாதிக் கோவில் உளது, அவரது இறுதி விருப்பப்படியே ஆங்கிலேயர் இதை அமைத்ததாகக் கூறுவர்.

காளீசர் பெயரால் கோவையில் ஏற்பட்ட பஞ்சாலை, தமிழ் நாட்டில் இந்தியர்களால் கட்டப்பட்ட முதல் பஞ்சாலை ஆகும். அதன் கிளை நூலாலை, இவ்வூரில் அமைக்கப்பட்டுளது.

கான நாட்டின் தலைநகராய் இருந்த இவ்வூரில் இன்றைய ஆட்சியின் சின்னமாக ஊராட்சி மன்ற ஒன்றிய அலுவலகம் உளது.

தொண்டிச் சாலை அருகே குளத்தின் வடகரையில் பாண்டியன் கோட்டை என்னும் இடம் உளது. இங்குத்தான் பாண்டிய மன்னர்களது நாணயச் சாலை இருந்தது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

இத்தலத்திற்கு வருபவர்கள் இங்கே தங்கி, அருகேயுள்ள கொல்லங்குடி (5. கி. மீ). வெற்றியூர் (10. கி. மீ.) திருவேம்பகத்து ஆகிய தலங்களுக்கும் செல்லலாம். திருவாடானை (33. கி. மீ.) தொண்டி (46. கி. மீ).

மானுமதுரை, இங்கிருந்து முடிக்கரைப் பாதையாக 13 மைல் (20 கி. மீ.) இது காட்டுப் பாதையாக உளது. மருதசரர் காலத்தில் இருந்த இச்சாலை மீண்டும் போடப்பட வேண்டும்.

இங்கு ஒரு சித்தாந்த மடம் இருந்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் உறவினர் ஒருவர் இம்மடத்தில் தங்கி, வகுப்புகள் நடத்தி வந்தார்.

வேதாந்த மடம் ஒன்று உளது. இது 1885 அளவில் தோன்றியது. கோவிலூரர்ப் பரம்பரையினர் இம் மடத்தில் பட்டத்திற்கு வருவது மரபு. தலைமையிடம் யானை மடுவின் தென்கரையில் உளது. இங்கு நூல் நிலைய மும் செல்லப்பசுவாமிகள், ஜமீன்தார் சுவாமிகள் சமாதிகளும் உள்ளன. காளீசர் முதலிய கோயில்களில் திருவிழாக்களில் பல மண்டகப்படிகள் இந்த ஆதீனத் தார் செலவில் நிகழ்கின்றன. துறவிகள் பலர் இம் மடத்தில் உள்ளனர்.

இதன் கிளைமடங்கள் மதுரையிலும் புதுவயல் அருகே யுள்ள சாக்கோட்டையிலும் உள்ளன. மதுரைக் கிளைமடம் தெற்கு வெளிவீதியில் உளது. இது குட்டைய சுவாமிகள் மடம் என வழங்குகிறது.

சிவரகசியம் பற்றிக் கோவிலூரர்த் துறவிகள் ஆராய்ச்சி நடத்திய போது வேம்பத்தூர்ப் பிச்சுவைய ரிடம் கிடைத்த ஏட்டுச் சுவடியின் அடிப்படையில் 25 மூர்த்திகளையும் வைத்துச் சிற்பம் செய்ய முடிவு செய் தனர். மீனுட்சியம்மன் கோவில் சுவாமி மண்டபத்தில் எட்டுத் தூண்களில் தூணுக்கு மூன்று ஆக 24 மூர்த்தி களையும் ஈசானிய பக்கம் கீழ்பக்கம் தூணில் ஏகபாத மூர்த்தியும் செதுக்கப் பெற்றன. இவ்வாறு செதுக் கப்பெற்றுள்ள இடம் நந்தி மண்டபம் ஆகும். மீனுட்சி யம்மன் கோயில் திருப்பணி வேலைகளிலும் மேற்கண்ட மூர்த்திகளைச் செதுக்குவதற்குமாக குட்டைய சுவாமி கள் அரிதின் முயன்று பல மடங்களிலிருந்தும் மைசூர் மாமன்னரிடமிருந்தும் நகரத்தார் பலரிடமிருந்தும் பெரும் பொருள் திரட்டினர். மேலும் பணம் போதா திருந்தமையால் பர்மா நாடெங்குமிருந்த நகரத்தார் கள் ஒரு மாதச் சம்பளம் சேகரித்து 1,40,000 ரூபாய் வழங்கினர்.

இந்த நூற்றாண்டில் தேவகோட்டை நகரத்தார்கள் இங்குள்ள கோயில்களைப் புதுப்பித்தும் தேவாரமடம்; சித்தாந்த மடம், பன்னீர்மடம், விபூதி மடம் முதலியன அமைத்தும் பணத்தை வாரி வழங்கியுள்ளனர்.

கோவிலுக்கு எதிரில், பெரிய மருது விரும்பியவாறு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருப்பத்தூர் மிசன் மருத்துவமனையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதாகவும் கூறுவர். இரண்டுமே நம்பத்தக்கன. இந்நாளில் காந்தியடிகள் அஸ்தி யமுனைக்கரையிலும் கன்னியாகுமரியிலும் பிற இடங்களிலும் கரைக்கப்பட்டு ஆங்காங்கு நினைவுமண்டபங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன அல்லவா?

முஸ்லிம் படையெடுப்பின்போது, திருவரங்கத்திலிருந்து இறையுருவங்கள், காளையார் கோவிலில் கொண்டு வந்து வைத்துப் பாதுகாக்கப்பட்டதாகவும், குறிப்புக்கள் உள்ளன.

இந்நாளில் இசைப்புலவர் பலர் காளையார் கோவிலில் தோன்றியிருக்கின்றனர்.

காளையார் கோவிலில்இருப்பவை: வேதபாடசாலை, ஆகமப் பாடசாலை, தேவாரப்பாடசாலை, வேதாந்தமடம், நந்தவனம், அன்னச்சத்திரம், பசுமடம், குருபூசைமடம், திருநீறுமடம், சந்தனமடம், பன்னீர்மடம், திருநடனமடம், நகரத்தார் விடுதி, சருவேசுவரர் ஆலயம், கங்கேசுவரர் ஆலயம், ருத்திரஜெப பிரமாலயம, பெருமாள்கோவில். சொக்கட்டான் காய்ச்சாரி மண்டபம்.

இலக்கியங்கள் : அப்பர் சுவாமிகளின் தனிப்பதிகம் இல்லாவிடினும் அவர் பாடல்கள் ஒன்பதில் இத்தலம் குறிக்கப்படுகிறது. சேக்கிழார், அருணகிரியார், குமர

குருபரர் ஆகியோரும் இத்தலத்தைப்பாடியுள்ளனர், சேதுபதி விரலிடுதூது,

"பொய்ப்பிள்ளை யாயிருந்த
பொற்பிள்ளை பாண்டியர்க்கு
மெய்ப்பிள்ளை யான வியன் நகரும்"

என்று இத்தலத்தைக் குறிப்பிடுகிறது.

பிற சிறப்புக்கள் : சேர, சோழ, பாண்டியர் மூவர் தொடர்பும் இத்தலத்துக்கு உண்டு. வீரசேனபாண்டிய னுக்குப் பிள்ளையில்லாக்குறை இத்தலத்தில் வழிபட்ட பின் நீங்கிற்று. சேரமான் பெருமாள் நாயனார் திருச் சுழியிலிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் இத்தலத் துக்கு வந்து வழிபட்டதாகக் கூறுவர்.

விக்கிரமச் சோழன் காளீசுவரரை வணங்கி புத்திரப்பேறு பெற்றதாகவும் கூறப்பெறுகிறது. இத் தலத்தில் வழிபடுபவர்கள் தங்கள் மக்களுக்கு காளை, காளையராஜன், காளையப்பன், காளியப்பன், காளிலிங்கம் காளீசுவரன், சொர்ணகாளீஸ்வரன், தங்கக்காளீசுவரன் ஆகிய பெயர்களை இடுகின்றனர்.

நாட்டரசன் கோட்டை

கம்பன் சமாதியாலும், கண்ணகி (கண்ணுத்தாள்) கோவிலாலும், நாட்டார் நகரத்தார் ஆகிய இரு சமூகத் தாராலும் மாடமாளிகைகளாலும் புகழ்பெற்ற சிறு நகரம்.

இவ்வூரிலுள்ள இறைவனுக்குக் கரிகாலன் கோவில் கட்டியதாகவும், அதனால் மற்றொரு சோழன் கரிகாலன் பெயரால் கரிகாலச்சோழீசர் கோவில் கட்டியதாகவும் கூறப்படுகிறது. கரிகாலச்சோழீசர் கோவிலை இப்போது நகரத்தார் பேணி வருகின்றனர்.

களவழிநாடு என்று இப்பகுதி பெயர் பெற்றிருந்தது. போர்க்களம் பல கண்ட மறவர் வாழும் நாடு அன்றோ? (களவழி நாற்பது) பாடும் களமும் பாண்டியர் முடிசூடும் அரண்மனையும் இருந்தமையால் இவ்வூர் முடிகொண்ட பாண்டியர்புரம் என்று பெயர் பெற்றிருந்ததாயும் கருதப்படுகிறது. 'களவழி நாடாள்வான் கண்ணன் கூத்தன்' என்ற கல்வெட்டுச் சொற்றொடர்க்கு ஏற்ப, இவ்வூர்த் திருவிழாக்களில் கள்ளர் வகுப்பினர்க்கு 'நாட்டரசன்' என்ற சொற்றொடரின் காரணம்கூறித் திருநீறு வழங்கப்படுகிறது. நாட்டரசன் என்ற குடும்பம் இன்றும் உளது. பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் களியாட்ட விழாவில் இக்குடும்பத்தார்க்குச் சிறப்பான பங்கு இருந்து வருகிறது.

கவியரசனான கம்பன் நாட்டரசன் கோட்டையில் இறுதிநாளில் வாழ்ந்து இங்கேயே உயிர்நீத்தார் என்பது அறிஞர் முடிவு. கம்பன்சமாதி (கமபன் கோவில் என்றும் இதைக் கூறுவர்) முன்பு, ஆண்டு தோறும் கம்பன் இராமாயணத்தை அரங்கேற்றிய பங்குனி ஹஸ்த நாளில் கம்பன்விழா இங்கு கொண்டாடப் பெறுகிறது. கம்பனைப்பற்றிய நடுகல்; கம்பன்செய், கம்பன்குளம், கம்பன் ஊருணி ஆகியவை இங்கு உள்ளன.

காசியில் துர்காமந்திர் அருகே 'ஸ்ரீ சத்திய நாராயண் துளசிமானஸ் மந்திர்' என்ற கோவிலில் துளசிதாஸ் இராமாயணம் முழுவதும் சலவைக்கல்லில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. கம்பர் காவியத்தின் உயிர்நாடியான பாடல்களையேனும் இவ்வாறு நாட்டரசன் கோட்டையில் பொறிக்க முயலலாம்.

கண்ணகியை இப்பகுதியினர் கண்ணம்மை; கண்ணாத்தாள் என்ற பெயர்களில் குறிப்பிடுகிறார்கள்.

நாட்டரசன் கோட்டையில் கண்ணுடைய நாயகிஅம்மன் கோவில் என்ற பெயருடன் கண்ணகிக்கு கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இப்பகுதியினர் அனைவரும் அவ்வம்மனைத் தம் குலதெய்வமாகக் கருதிப் பயபக்தி யுடன் வழிபட்டுவருகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் சதுக்கபூதங்கள்பற்றிய குறிப்புக் கள் இருப்பதற்கேற்ப இவ்வூரில் பூதகுடித்தெருஇருப்பது குறிப்பிடத்தக்கது. எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் 100க்கு 50 பேருக்காவது அப்துல்லா என்ற பெயர் இருக்கும்; அதுபோல இவ்வூரில் ஆடவரில் கண்ணப்பன்; பெண்டிரில் கண்ணாத்தாள் என்ற பெயர்கள் பரவி யுள்ளன. ஒரு வீதியில் நின்றுகொண்டு கண்ணப்பன் என்று கூப்பிட்டால் நான்கு பேராவது திரும்பிப் பார்ப் பார்கள்.

ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகளில் கண்ணாத் தாள் கோவிலில் கூட்டம் மிகுதி.

கண்ணாத்தாள் கோவிலில் முதல் மரியாதை நகரத் தார்க்கு. சிவகங்கை மன்னருச்கு, அடுத்த மரியாதை தான். திருப்பணி வேலைக்கு (பூங்குடியிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ள) திருமலையிலிருந்து கல் ஏற்றிவர; நாட்டரசன் கோட்டை நகரத்தார் அனைவரும் சோற்று மூட்டை கட்டிக்கொண்டு மூன்று நாள் இருந்தனர். சில கற்களும் தூண்களும் கயிற்றால் கட்டி இழுத்தும் அசையவில்லை. அப்போது, வேம்பத்தூர் சிலேடைப் புலி பிச்சுவையர்,

"சாக்கிரத்தும் சொப்பனத்தும் தாழும்
அடியார் காணச்
சீக்கிரத்துன் ஆலயம்போய்ச் சேர்"

என்று பாட, கற்கள் அசைந்தன என்பர்.

நாட்டரையூர் என்று இப்பகுதியில் ஓர் ஊர் இருக்கிறது என்று கேள்வி. முத்தரையர் போன்று நாட்டரையரும் சமூகத் தலைவர்களாக இருந்திருக்கக்கூடும்: அரையர் வாழ்ந்த ஊர்களில் குடவோலைமுறை நிலவியது.

மாருந்தை : மாறன் என்பது பாண்டிய அரசர்க்குரிய பெயர்களுள் ஒன்று. ஆதன் தந்தை என்பது ஆந்தை என்றாற்போல, மாறன்தந்தை மாருந்தை ஆயிற்று. நெல்லை மாவட்டத்தில் தென்காசி வட்டம் ஆலங்குளம் பகுதியிலும் மாருந்தை என்ற பெயருடன் ஓர் ஊர் திகழ்கிறது.

பாகநேரி: இவ்வொன்றியத்திலுள்ள பெரிய ஊர்களில் இது ஒன்று. அரசியல் விழிப்பு மிக்க ஊர். நாட்டார்களாலும் நகரத்தார்களாலும் புகழ்பெற்ற ஊர். இவ்வூர்த் தனவைசிய இளைஞர் சங்கத்து நூல் நிலையத்தில் அரியநூல்கள் உள்ளன. இவ்வூர்ச் சிவாலயம் பாண்டியர் காலத்தில் கட்டப்பெற்ற பெருமை உடையது.

இவ்வூரார் பலர் இந்த ஒன்றியத்தின் தலைவராகவும், சட்டமன்றம்—மேலவை உறுப்பினர்களாகவும் இருந்திருக்கின்றனர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. ஆர். வி. சுவாமிநாதன், எம். பி. இவ்வூரினர்.

ஏரி என்னும் ஈற்றுச் சொல்லுடைய ஊர்கள் தமிழ்நாட்டின் வடபகுதியில் மிகுதி. அருமையாக இம்மாவட்டத்தில் இவ்வூர்ப் பெயரில் அச்சொல்லைக் காணுகிறோம். ஊரணி, கண்மாய் என்ற ஈற்றுச் சொற்களே இம்மாவட்டத்தில் வழக்கு.

கிறித்தவ மதத்தைப் பரப்பியதற்காக, 17-ஆம் நூற்றுண்டில், டி பிரிட்டோ பாதிரியார், சேதுபதியின் ஆணைப்படி இவ்வூரில் சித்திரவதை செய்யப்பட்டார், அவர் அடிக்கப்பட்டார், விலங்கிடப்பட்டார். இவ்வூர் மக்கள் ஆயிரம் பேர் அவர்மீது எச்சில் துப்பினர். பழுக்கக் காய்ச்சிய இரும்பால் அவரை அடித்தனர்.

சொக்கநாதபுரம்: மதகுபட்டி-கல்லல் சாலையில் உள்ள ஊர். இவ்வூரைச் சார்ந்த கத்தப்பட்டில் கோயில் கொண்டுள்ள ஐயனர் மதுரை இராமநாதபுர மாவட்டங் களில் பல சமூகத்தாரின் குல தெய்வமாகும்.

உப்பாறு எனப்படும் திருமணிமுத்தாறு இவ் வூர்க்குச் சற்று தொலைவில் ஒடுகிறது.

சந்தனத்தேவன் மடம்: நாட்டரசன் கோட்டைக்கும் சிவகங்கைக்கும் இடையே உள்ள சிற்றூர். சந்தனத் தேவன் 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த கொள்ளைக் காரன், பணக்காரர்களிடம் கொள்ளையடித்து ஏழை களுக்கு வழங்கியவன். இவனைப்பற்றிப்பல நாட்டுப் பாடல்கள் பாடப்பெற்றுள.

புலியடி தர்மம்:

கத்தோலிக்கர் அதிகமாக உள்ளனர். நத்தம்படி யர்கள் பம்பு செட்டுகள் மூலம் புன்செய்த் தானியங்கள் பயிரிட்டுப் பெரிய வியாபாரம் செய்கின்றனர். பஸ் போக்குவரத்து மிகுதியாக இருக்கிறது. வாரச சந்தை செய்வாய் கிழமை கூடுகிறது. புலி அடர்ந்த காடு இருந்ததாகக் கூறப்படுகிறது.

கொல்லங்குடி: இதைச் சேர்ந்த அரியாக்குறிச்சி அழகாபுரியில் கோவில் கொண்டுள்ள வெட்டுடையார்

காளியம்மன் மிகவும் ஆற்றலுள்ள தெய்வம். ஒருவரால் ஏமாற்றப்பட்டவர், மனம் நொந்து பழைய காசு ஒன்றை இரண்டாக வெட்டி, வெட்டுடைய காளி யம்மனின் பின்புறம் போட்டால், பணத்தை எடுத்துக் கொண்டவரின் குடும்பத்தை அது பாதிக்கும் என்று அஞ்சுகிறார்கள். காளியம்மன் அவருக்குத் தண்டனை கொடுக்கும் என்பது நம்பிக்கை. இராம்நாதபுரம், நெல்லை மாவட்ட மக்கள் இங்கு மிகுதியாக வருகிறார்கள்.

சூசையப்பர் பட்டினம்: காளையார் கோவிலிலிருந்து ஒரு கி. மீ. கிறித்தவர் மிகுதி.

மானாமதுரை ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியத்தில் மானாமதுரை என்னும் நகரப் பஞ்சாயத்தும் 41 ஊராட்சிமன்றங்களும் அடங்கியுள.

மானாமதுரை: வைகைக் கரையின் இருபக்கமும் அமைந்தது. நான்கு திக்குகளிலிருந்து வரும் இரயில் களின் சந்திப்பாகவும், இராமநாதபுரம் பகுதிக்கும் இராமேசுவரம் தீவுக்கும் செல்ல வாயிலாகவும் இருப்ப தால் கேந்திரமான இடமாக விளங்குகிறது. இங்கிருந்து மதுரை 48 கி. மீ. எல்லாத் திக்குகளிலும் பஸ்போக்கு வரத்து உள்ளது.

இவ்வூரின் பெயர் மானவீர மதுரை என்பர். 14-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட மானவீரன் என்ற பாண்டியனால் உண்டாக்கப் பெற்றதாகக் கூறுவர். இவனைப்பற்றிய கல்வெட்டுக்கள் காஞ்சிபுரத்தில் இருக் கின்றன. அநுமார் சீதையைக் கண்டுபிடித்து வந்ததற் காக அனுமார்க்கு இராமர் இவ்வூரில் சேனாதிபதி வேலை வழங்கியதால் வானரவீரர் மதுரை என்று பெயர் வந்ததாகவும் ஒருசிலர் கருதுகின்றனர்.

சிவகங்கை அரசரின் ஆளுகையில் இருந்ததால் இப்பகுதியில் வேதமறிந்த பிராமணக் குடும்பங்கள் வாழ்கின்றன. வைகையின் மேல் கரையில் பஸ்நிலையமும் இரயில் சந்திப்பும் கடைவீதிகளும் ஆனந்தவல்லி அம்பாள் கோவிலும் கீழ்க்கரையில் பல வீடுகளும் விஷ்ணுகோவிலும் உள்ளன. கிறித்தவ சமயமும் இங்கு பரவியிருக்கிறது.

களிமண் பெரிய அளவில் பரவிக்கிடப்பதால் அதைப்பயன்படுத்தி மண்பாண்டம், ஓடு, செங்கல் ஆகியவை செய்யப்படுகின்றன. இத்தொழில்கள் இங்கு ஏற்றம் பெற்றுள. மானாமதுரைக் குடங்களும் (கடம்) கடங்களும் புகழ்பெற்றவை. வெண்கலப்பாத்திரங்களும் இங்கு செய்யப்படுகின்றன. சிமிண்டுக்குழாய் செய்யும் தொழிற்சாலையும் நூலாலையும் நடைபெற்று வருகின்றன.

ஊமை—செவிடர் பள்ளியும், தாயாபுரத்தில் குட்ட நோய் நிலையமும் உள்ளன.

கத்தோலிக்கர், முஸ்லிம்கள் ஆகியோரும் இங்கு தொகையாக வாழ்கின்றனர்.

இடைக்காட்டூர் : மானாமதுரையிலிருந்து ஒன்பது கி. மீ., சிவகங்கையிலிருந்து 10 கி. மீ. தொலைவில் வைகையின் வடகரையில் அமைந்தது. இடையர்கள் வாழ்ந்த காட்டூர் ஆதலின் இவ்வாறு பெயர் பெற்றது. பதினெட்டுச் சித்தருள் ஒருவரான இடைக்காடர் வாழ்ந்த பகுதி இது. எனவே பழமையானது. நவக்கிரகக் கோவில் ஒன்று இருக்கிறது. நெல், கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடப்படுகின்றன.

வேம்பத்தூர் : பரமக்குடிச்சாலையில் மானாமதுரையிலிருந்து 16 கி. மீ. தொலைவிலுள்ளது. புலவர்

பலர் தோன்றியுள்ளனர். அரசர்களிடம் பரிசுபெற்று மானியங்களில் வாழும் வழக்கம் இவர்களிடையே நிலவிவந்தது. நெல்லை மாவட்டத்தில் சில இடங்களில் 'வேம்பத்தூரரார்……' என்ற குடும்பங்களைக் காணலாம். இவ்வூர்ப் புலவர்களிடம் தங்கள் ஏட்டுப் பிரதியைக் காண்பித்த பிறகே அவற்றை வெளியிடும் வழக்கம் சில நூற்றாண்டுகளுக்குமுன் இருந்ததாக இவ்வூரார் கூறுவர்.

இராஜகம்பீரம் : கத்தோலிக்கர் மிகுந்தது. லூர்து மாதாகோவில் இங்கு கட்டப்பெற்றிருக்கிறது.

சவேரியார் பட்டினம் : மானாமதுரைக்கு அருகு. இங்குள்ள புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தில், சேவியர் திருவுருவத்தின் சிகரமாக உள்ள முடியைத் திருட ஒரு ஹிந்து நுழைந்ததாகவும் திருடும்போது அவன் கண்பார்வை இழந்து அங்கேயே தங்கிவிட்டதாகவும் மறுநாட்காலையில் தேவாலயத்தைத் திறந்தபோது உள்ளே நுழைந்த கிறித்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, புனித பிரான்சிஸ் சேவியர் அருளால் இழந்த கண்பார்வையைப் பெற்றான் என்றும் கூறப்படுகிறது.

கீழப்பசலை: இங்குள்ள ஒரு மரம் உயிரியல் ஆய்வாளர் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இந்த மரத்துக்குப் பெயர் கிடையாது. பல ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஒரு முனிவரின் சமாதியின்மீது இம்மரம் முளைத்திருப்பதாகக் கர்ண பரம்பரைக்கதை கூறுகிறார்கள். மரத்தின் உருவம் படுத்த முதலை போன்றது. இலைகள் உதிர்ந்து மீண்டும் தளிர்கின்றன. ஒரு கொத்தில் பலவேறுவகை இலைகள் உள்ளன. ஒரு கொத்திலேயே ஒரு காம்பில் மூன்று இலைகள், நான்கு இலைகள், என்றெல்லாம் பல எண்ணிக்கைகளைப் பார்க்கலாம்.

திருப்பூவணம் ஊராட்சி ஒன்றியம்

வைகைக் கரையில் அமைந்து வளம் கொழிக்கும் இந்த ஒன்றியம் திருப்பூவணம் பேரூராட்சியையும் 43 ஊராட்சி மன்றங்களையும் உடையது.

சிவகங்கை, மானாமதுரை அருப்புக்கோட்டை வட்டத்து நரிக்குடி, மதுரை மாவட்டத்து மதுரை கிழக்கு மேலூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் திருப்பூவணம் ஒன்றியத்தைச் சூழ்ந்துள்ளன. கஞ்சிராங்குளம்—பொட்டப் பாளையம் பகுதியிலும் பூவேந்தி அருகேயும் மதுரைமாவட்டத்தின் பகுதிகள் இவ்வொன்றியத்திற்குள் துருத்திக் கொண்டிருக்கிறன.

இவ்வொன்றியத்துச் சிற்றூர்கள் திருப்பூவணம் திருப்பாச்சேந்தி கொந்தகை பிர்க்காக்களைச் சேர்ந்தவை. திருப்பூவணம், திருப்பாச்சேத்தி இரயில் நிலையங்கள் வாயிலாக மானாமதுரைக்கும் மதுரைக்கும் இரயில்கள் செல்லுகின்றன.

வைகையாறு இவ்வொன்றியத்தில் 25 கி. மீ. தொலைவுக்குப் பாய்கிறது. ஆற்றின் இருபுறமும் ஒன்றியம் உள்ளது. ஆற்று வளத்தால் இப்பகுதி நெல் வேளாண்மையினும் கரும்பு தென்னை வாழை வேளாண்மையிலும் ஏற்றம் பெற்றிருக்கிறது. அதன் பயனாய், இவ்வொன்றியம், வருவாயில் முதல்தர ஒன்றியமாக விளங்குகிறது.

மதுரை மாநகர்க்கு அண்மையில் அமைந்திருப்பதால் இவ்வொன்றியத்திலிருந்து மதுரைக்குப் பாலும் வெற்றிலையும் காய்கறிகளும் செல்லுகின்றன. பல இடங்களில் செங்கற்சூளைகள் உள்ளன.

ஒன்றியத்து வட எல்லையிலுள்ள சிலைமானில் ஒரு பகுதி (மணலூர்) இராமநாதபுர மாவட்டத்திலும் பிறிதொரு பகுதி மதுரை மாவட்டத்திலும் உளது. இங்கு ஒரு நூலாலை இயங்கிவருகிறது.

ஏந்தல் என்ற இறுதிச் சொல்லுடைய பல இடங்கள் இவ்வொன்றியத்தில் காணப்படுகின்றன. சான்று: லாடனேந்தல், மழவராய னேந்தல், பெத்தனேந்தல், செம்பராய நேந்தல், தவத்தாரேந்தல், வீரனேந்தல்.

திருப்பூவணம்: (ம. தொ. 10, 229)

வைகையின் தென்கரையில், மதுரையிலிருந்து 19 கி. மீ. தொலைவில் அமைந்த சிறு நகர். மூவர் தேவாரமும் பெற்ற சிவதலம். இங்கிருந்து தென்மேற்கே 29 கி. மீ. தொலைவில் மானாமதுரை உளது. பாண்டியர் தலைநகரான மதுரையிலிருந்து துறைமுக நகரான தொண்டிக்குச் செல்லும் வழியிலிருப்பதால் இந்நகர் தொன்று தொட்டே புகழ் பெற்றிருந்தது. இங்கிருந்து வடக்கே திருவாதவூர் வழியாக மேலூர் 26 கி. மீ. தொலைவிலும், தெற்கே முக்குளம், நரிக்குடி வழியாக அருப்புக்கோட்டை 40 கி. மீ. தொலைவிலும் உள்ளன.

இவ்வூர்ப்பெயர் பலவாறுகத் தவறுக எழுதப்பட்டு வருகிறது. தவறுன பெயர்களுக்கு நாமும் விளம்பரம் தர விரும்பவில்லை. மூவர் தேவாரத்திலும் கல்வெட்டிலும் குறிப்பிடப்பெற்றுள்ளவாறு திருப்பூவணம் என்று எழுதுவதே பொருந்தும்.

கோட்டை, நெல்முடிகரை, பழையூர், புதூர் என்ற நான்கு சிற்றூர்களை இவ்வூர் உடையது. புதூர்மட்டும் பிரமனூர்க் கால்வாய்க்கு மறுபுறம் அமைந்திருக்கிறது. கோட்டை என்னும் பகுதி பாண்டியர் கோட்டைகளுள்

ஒன்றாக இருந்தது. இப்பகுதியிலேயே திருப்பூவண நாதர் கோவில் திகழ்கிறது.

நெல் முடிக்கரை என்னும் பகுதி திருப்பூவணம் இரயில் நிலையத்தைச் சூழ்ந்தது. பாண்டிய அரசர்க்குத் திருப்பூவண மக்கள் நெல்லால் கோட்டை கட்டி, கதிரை எடுத்து முடிசூட்டி வந்தனர். அதனால் இவ்விடம் இப்பெயர் பெற்றது. நெல்லால் கோட்டை கட்டுவரா? நெற் கதிரால் முடிசூட்டுவரா? என்ற வினாக்களை எழுப்புபவர்க்கு இந்நாளில் அமைச்சர் அல்லது வெளிநாட்டு அரசின் தலைவர் ஏலக்காய்த் தோட்டத்துக்குச் செல்லும்போது அவர்க்கு ஏலக்காய் மாலை போடப்படுவதை நினைவூட்டுக.

பாண்டி நாட்டுப் பதினான்கு தலங்களிலும் மூவர் பாடலும் பெற்றது திருப்பூவணம் மட்டுமேயாகும். இக்கோவிலில் உள்ள இறைவர்க்குத் திருப்பூவணநாதர் திருப்பூவணேசர், அடைவார் வினைதீர்ப்பவர் என்ற பெயர்களும், இறைவிக்கு அன்னபூரணி, அழகிய நாயகி, மின்னனையாள் என்ற பெயர்களும் வழங்கிவருகின்றன. கற்பக விநாயகர், மணிமந்திர விநாயகர், ஒட்டுக்கல் வெள்ளை விநாயகர் என்ற மூன்று விநாயகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. திருநந்தித் தேவர் திருவுருவம் சிறிது சாய்ந்திருக்கிறது.

ஆடிப்பூரமும் பங்குனி உத்தரமும் இங்கு கொண்டாடப்படுகின்றன. ஐப்பசி மாதத்தில் நிகழும் பத்து நாள் விழாவில் அம்பாள் கோலாட்டம் போடுவது கண்ணுக்கினிய காட்சியாகும். இக் கோவிலில் உள்ள உற்சவர் உருவங்கள் பத்தரை மாற்றுத் தங்கத்தால் ஆகியவை.

இறைவனின் அழகைக் கண்டு வியந்து, பொன்னனையாள் என்ற தாசி, திருப்பூவணநாதர் விக்கிர

கத்தையே கட்டித் தழுவியதாகக் கூறுவர். இது போன்ற செய்தி, தஞ்சை மாவட்டத்துச் செந்தலையி லும் வழங்கி வருகிறது.

சிவபெருமானே சித்தராக இத்தலத்துக்கு வந்த தாகத் திருவிளையாடற் புராணம் கூறும்.

திருப்பூவணத்தில் உயிர் நீத்தால் மோட்சம் கிடைக்கும் என்ற கருத்து நிலவி வருகிறது. வெளியூர் களில் இறப்பவர்களின் எலும்பைக் கரைக்க, உறவினர் இத்தலத்துக்கு வந்து, உரிய சடங்குகளை வைகைக் கரையில் செய்கின்றனர். இத்தலம் மாணிக்கவாசக ராலும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. திருப்புகழும் உடையது

இவ்வூரைப் பற்றிய சிறந்த இலக்கியம் திருப்பூவண நாதர் உலா என்பது. 18-ஆம் நூற்றாண்டினரான இவ் வூர்க் கந்தசாமிப் புலவரால் பாடப் பெற்று இவ்வுலா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரால் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. கருவூர்த் தேவர் இத்தலத்தைப் பாடி யுள்ளார். சோழ நாட்டுக்கு வெளியில் உள்ள தலங் களுள் இவர் பாடியது இவ்வூர் ஒன்றே.

இப்பகுதியில் முதல் போகத்தில் நெல்லும், அடுத்த போகத்தில் கரும்பு அல்லது வாழையும் மாறி மாறிப் பயிர் செய்கின்றனர். இந்த நன்செய் நிலங்கள் தஞ்சை மாவட்டத்து நிலங்களை விடக் கூடுதலான மதிப்புடையவை.

சந்தை நாள்: செவ்வாய்க்கிழமை.

இருப்பவை: சுப்பிரமணியர் கோயில், பெருமாள் கோவில், கோரச்சித்தர் கோவில், கத்திரிக்காய்ச் சித்தர் கோவில், ரோமன் கத்தோலிக்கர் தேவாலயம், காசிகா நந்த ஞானச்சாரிய சுவாமிகள் நிறுவிய வேதாந்த

மடம், மௌன குருசாமி மடம், போத குரு மடம், திருப்பூவண ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலகம்.

வரலாற்று ஆசிரியர்கள் புகழ் பாடும் திருப்பூவணம் பட்டயம் இவ்வூரில் அகப்பட்டது; 13-ஆம் நூற்றுண்டில் இது வெளியிடபபட்டது. சடாவர்மன் குலசேகரனுக்கு இராஜகெம்பீரன் என்ற புனை பெயர் பெற்றிருந்தாயும் பழைய ஊர்கள் பலவற்றைச் சேர்த்து இராஜ கெம்பீரம் என்ற ஊரைத் தோற்றுவித்ததாயும் இப்பட்டயம் தெரிவிக்கிறது. இராஜ கெம்பீரம் என்னும் ஊர் திருப்பாச்சேத்திக்கும் மானுமதுரைக்கும் இடைப் பட்டது.

தஞ்சை மாவட்டத்துத் திருவிடைமருதூர் அருகே ஒரு திருப்பூவணம் இருக்கிறது.

எடுத்தாயிரம் உடையார் கோயில்: திருப்பூவணத்தி லிருந்து 13 கி. மீ. தொலைவிலுள்ளது. இங்கிருந்த பெரிய கோவில் ஒன்றைப் பிரித்துத் திருப்பூவணத்தில் தாம் கட்டுவதாகக் கூன் பாண்டியன் கனவு கண்டதாக வும், ஓராயிரம் பேர் உதவியுடன் மறுநாளே இக் கோவிலைப் பிரித்துப் பிறகு திருப்பூவணத்தில் அமைத்த தாகவும் கூறப்படுகிறது. இதனல் ஓராயிரம் பேர் துணை இருப்பின் எச் செயலையும் நிறைவேற்றலாம் என்ற கருத்து இவ்வட்டாரத்தில் பழமொழி போலப் பரவி யுளது.

பூவந்தி : (ம. தொ. 1,937) வைகையின் வடகரையி லுள்ள இவ்வூரின் பெயர் பூவேந்தி. இராமநாதபுரம் அரசர்கள் மதுரைக்குச் செல்லும்போது இங்கு தங்கி வந்தனர். பூவந்திக் கண்மாய் 40,000 ஏக்கர் நிலத் திற்குநீர் வழங்குகிறது.

திருப்பாச்சேத்தி: (3,705) வைகைக் கரையிலிருந்து 1½. கி. மீ. தொலேவிலும் திருப்பூவணத்திற்கு 10. கி. மீ. தொலேவிலும் உள்ள ஊர். இரயில் நிலேயம் உண்டு. சேரைமாநகர் என்ற பெயரும் இருந்து வருகிறது.

இவ்வூர்ச் சிவன் கோவில், திருப்பூவண நாதர் கோவிலுடன் சேர்ந்தது. சிவகங்கை தேவஸ்தானத்தார் ஆட்சியில் இருக்கிறது. இது நளமஹாராஜாவால் கட்டப் பெற்றதாக இவ்வூரார் கூறுவர். இவ்வூர்ச் சுந்தரவல்லி அம்மன் கோவிலுக்கு மருது சகோதரர்கள் மரகதப் பச்சையில் சிவலிங்கம் செய்து வழங்கினர். அது இன் றும் வைத்து வழிபடப் பெறுகிறது.

இவ்வூர்த் திருநோக்கி அழகனூர் கோவிலும் பழமையானது இவ்வூரின் ஏற்றுமதிகள்—நெல், வாழை, வெற்றிலே, கரும்பு, வெல்லம், சுவையான கத்திரிக்காய், அழகாகவும் நீளமாகவும் உள்ள அரிவாள்.

வெட்டும் குத்தும் மிகுதியாதலால், அரிவாள் உற் பத்தி திருப்பாச் சேத்தியில் பெரிதும் பரவியிருக்கிறது.

மழவராயனேந்தல்: (1,000). வடக்கிலும் கிழக்கிலும் வைகை சூழ்ந்துள்ள வளமான பகுதி. கறுநிறமண் உடையது திருப்பாச் சேத்தியை ஒட்டிய சிற்றூர். மருதுபாண்டியர் இனத்துச் சேர்வைகாரர் மிகுதியாக வாழ்கின்றனர்.

மழு—ஓர் ஆயுதம். உழவர் பயன்படுத்துவது சிவபெருமானே தங்களது ஆயுதத்தை ஏந்த வைத்தவர் மழவர்.

மழவர் என்போர் பாண்டிய வீரர்கள். அவர் களுக்குப் பாண்டிய அரசரால் வழங்கப் பெற்ற ஊர் ஆதலின் மழவராயனேந்தல் என்ற பெயர் ஏற்பட்டது

17-ஆம் நூற்றுண்டினரான இயற் புலவர் மழவை மகாலிங்க ஐயரும், 20-ஆம் நூற்றுண்டினரான இசைப் புலவர் சுப்பராம பாகவதரும் இவ்வூரினர், 4. கி. மீ. தொலைவிலுள்ள வேம்பத்தூரிலும் பல தலை முறைகளாகப் புலவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மழவைக் கனபாடிகளில் தமிழ்ப் புலவர்கள் உள்ளனர்.

மழவையில் மருது பாண்டியன் காப்பாற்றப் பெற்ற நிகழ்ச்சியை வெல்ஷ் என்ற ஆங்கிலேய தளபதி தம் நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார். சிவகங்கை அரசர்கள் தமிழ்ப் புலவர்கட்கு இவ்வூரில் நில புலன்களை யும், (மானாமதுரையிலிருந்து 8. கி. மீ. தூரத்திலுள்ள) மிளகனூர் என மருவியிள்ள மேகநல்லூரில் சம்ஸ்கிருதப் புலவர்கட்கு நில புலன்களையும் வழங்கியுள்ளனர்.

புல் வாய்க்கரை: புல் வளர்ப்பதற்காக வாய்க்கரை உள்ள சிற்றூர்.

புலவச்சேரி: திருப்பாச்சேத்திக்கு தெற்கே 6. கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. இதன் வடக்கே 'தஞ்சாக்கூர் எனனும் சிற்றூர் ஒன்று உளது. அக் காலத்தே தஞ்சைவாணன் என்னும் கொடை வள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவருடைய பெரும் புகழைத் 'தஞ்சை வாணன் கோவை' என்னும் நூல் வாயாரப் பேசுகிறது. இந்தத் தஞ்சாக் கூருக்கு அடுத்தாற்போலப் புலவர்ச் சேரி என்னும் கிராமம் அமைந்துள்ளதால் இது பழங்காலத்தில் புலவர்கள் வாழ்ந்து வந்த புலவச் சேரி யாக இருக்கலாம் என எண்ணப்படுகிறது. இந்தக் கிராமம் முழுவதும் சேது காவலர்களின் ஒரு கிளையாகிய சிவகங்கை சமஸ்தான மன்னர்களால் ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்துக்கு ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர சுவாமி பூஜா பிராம்மண சந்தர்ப்பணத்துக்கு கொடுக்கப்பட் டிருக்கிறது.

கீழடி: சிலைமானுக்குக் அருகே இருக்கிறது. அர்ஜுனன் அசுவமேதயாகம் செய்து வரும்போது சித்தராங்கியைக் காந்தர்வ மணம் செய்த இடம். சித்தராங்கியை அல்லியாக மாற்றிப் புகழேந்திப் புலவர் பாடியுள்ளார். 6,000 பாண்டியர்க்கு அரியதோரு மகளாம் என்ற கட்டுக் கதையும் வழங்கிவருகிறது.

கொந்தகை: மதுரை மாவட்ட எல்லையில் சிலை மானுக்குத் தெற்கே உள்ளது. பஞ்சபாண்டவர் களின் தாயாரான குந்தி என்பவர் இங்கு தங்கியிருந்த தாகவும் அவர் பெயரால் வழங்கி வருவதாகவும் கூறுவர்.

தெய்வராயப் பெருமாள் கோவில் இருக்கிறது. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான மணவாளமாமுனி கள் பிறந்த பதி. குந்திநகர் சிறக்க வந்த வைணவப் பெருமகனை இவரைப் போற்றும் பாடல்கள் உள்ளன. திருவிழாக்களில் இவ்வூர்க் கோவிலுக்கும் திருமோகூர்க் கோவிலுக்கும் தொடர்பு உண்டு.

சிலைமான்: மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தது. இவ்வூரின் ஒரு பகுதி இம்மாவட்டத்திற்கு உரியது. இப் பகுதியில் நூல் ஆலை இயங்குகிறது.

4. பரமக்குடி வட்டம்

வைகை ஆற்றால் இவ்வட்டம் வளம் அடைகிறது. வட்டத்தின் குறுக்கே இந்த ஆறு பாய்ந்து, வட்டத்தை இருகூறாக்குகிறது. 1936-இல் இராமநாதபுர மாவட்டக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது இவ்வட்டத் தில் வைகையின் வடபக்கம் உள்ள பகுதி வட இராம நாதபுர மாவட்டக் கழகத்திலும் வைகையின் தென் பக்கம் உள்ள பகுதி தென் இராமநாதபுர மாவட்டக் கழகத்திலும் சேர்க்கப் பெற்றன.

இவ்வட்டத்தில் பயிர்த் தொழிலே தலையாய தொழிலாக உள்ளது. குறிப்பாக நெல், எள், மிளகாய் வேளாண்மை பெரிய வருவாய் தருகிறது. நெடுங்காலமாக, வைகைக் கரையிலும் சில கண்மாய்களிலும் உள்வாய் நிலங்களை உழுவர்களின் பட்டாப் பிரச்சினை 1970-இல் முடிவு செய்யப்பட்டது.

சரிகை வேட்டி நெசவு இங்கு ஒரு முக்கிய தொழில். இதில் சௌராஷ்டிரர் ஈடுபட்டிருக்கின்றனர். இளையாங்குடியில் முஸ்லிம்கள் பல்லாயிரவர் உள்ளனர்; முன் வெளிநாடுகளிலும் இப்போது உள்நாட்டிலும் தொழில் செய்கிறார்கள்.

இவ்வட்டத்தில் அடங்கியவை :

(1) பரமக்குடி நகர்
(2) பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்
(3) இளையாங்குடி ,, ,,
(4) போகலூர் ,, ,,
(5) நயினார் கோவில் ,, ,,

பரமக்குடி: இந்நகர் இவ்வட்டத்தின் தலைநகர். வைகை ஆற்றின் கரையில் வளமாக அமைந்தது. இரயில் நிலையமும் பெற்றிருக்கிறது. இங்கு வியாழக்கிழமை கூடும் சந்தை பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர் வட்டங்களுக்கு மிக முக்கியமானது.

இந்நகர் ஆயிர வைசியர், வெளியூர்களில் நகை வாணிகத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இந்நாளில் பிற தொழில்களிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். கிறித்தவர்களும் பல்லாயிரம் பேர் இந்நகரில் உள்ளனர்.

இந்நகர் சிவகங்கையிலிருந்து 26 மைல் தொலைவிலும், முதுகுளத்தூரிலிருந்து 16 மைலிலும், இராமநாதபுரத்திலிருந்து 23 மைல் தொலைவிலும் மதுரையிலிருந்து 47 மைல் தொலைவிலும் அமைந்திருக்கிறது. பல அலுவலங்களும், மரம்-ஓடு வணிக நிலையங்களும் கத்தோலிக்க தேவாலயமும் சுருக்கெழுத்துப் பள்ளிகள் பலவும் உள்ளன. சிவன் கோவில் எடுப்பான தோற்றம் உடையது.

வேளாண்மைப் பண்ணையையும் வேளாண்மைப் பள்ளியையும் அரசினர் இங்கு ஏற்படுத்தியிருக்கின்றனர். வைகை ஆற்றில் உறைக் கிணறுகள் ஏராளமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

வைகையின் மறுகரையில் பரமக்குடிக்கு எதிரே எமனேசுவரம் உள்ளது. நெசவுத்துறையில் வல்லவர்களாகிய சௌராஷ்டிரர் இங்கு வாழ்கின்றனர். தச்சுத்தொழிலாளரும் மிகுதி.

பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்

37 சிற்றூர்கள் உடையது. பேரூராட்சி மன்றம் ஒன்றேனும் இல்லை. இரயில் வசதியும் பஸ்வசதியும் உண்டு. பல ஊர்கள் வளமாக உள்ளன.

கமுதக்குடி இயிரல் நிலையத்துக்கருகில் கூத்தன்கால் அல்லது வேணுநாத உடைய பிள்ளைக்கால் என்ற கால்வாய், ஆற்றிலிருந்து பிரிகிறது. பரமக்குடியை அடுத்தும் இவ்வாற்றிலிருந்து பல கிளைகள் பிரிந்து சென்று பல கண்மாய்களை (ஏரிகளை) நிரப்புகின்றன. குறிப்பிடத்தக்க ஊர்கள் இல்லை.

இளையான்குடி ஊராட்சி ஒன்றியம்

இது இளையான்குடி பேரூராட்சியையும் 55 ஊராட்சி மன்றங்களையும் கொண்டது. வளம் நிறைந்தது.

குறிப்பிடத்தக்க ஊர்ப்பெயர்கள்:—ஆக்கவயல், அளவிடங்கான், ஆதிமதுரை, கலைக்குளம், கலங்காதான் கோட்டை, முனைவென்றி, மிருதங்க நல்லூர், புலியூர், சமுத்திரம், திருவள்ளூர், வர்ணி.

இளையான்குடி: பரமக்குடியிலிருந்து 11 கி. மீ. தொலைவு தொழில் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் உடைய பேரூர்.

பெரிய கண்மாய் உளது. நெல் இருபோகம் விளைகிறது. வெற்றிலைக் கொடிக்கால் மிகுதி. மணிபர்ஸ், கோரம்பாய், கான்வாஸ் பைகள் ஆகியவை இங்கு செய்யப்படுகின்றன. ஹிந்துக்கள், கிறித்தவர்கள், செல்வம் நிறைந்த முஸ்லிம்கள் ஆகியோர் இங்கு வாழ்கின்றனர். இங்கு இருப்பவை—தெய்வ புஷ்கரணி ஊரணி, வரிசை முகமது ஊரணி, கூட்டுறவு பேங்கு, ஆறு நூல்நிலையங்கள், கால்பந்து விளையாட்டத்தில் வல்லவர்கள், இரண்டு சிவன் கோவில்கள், இரண்டு பெருமாள் கோவில்கள், நான்கு பள்ளி வாசல்கள், ஒரு அம்மன் கோவில்; தேவாலயம், வாள்மேல் நடந்த அம்மன் கோவில்; வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும் அமணசாமி என்ற சமணத்திருவுருவம்.

இளையான்குடி என்பது இளையான் என்னும் பெயர் கொண்டுள்ள குடி என்று பொருள்படும். இளையான் குடியை இளையான்றன்குடி என்றும் வழங்குவது உண்டு. 'இளையான்றன் குடி மாறனடியார்க்கும் அடியேன்' என்ற சொற்றொடர் இதனை உறுதிப்படுத்தும்.

இறைவழிபாட்டில் சிறந்த நாயன்மாரில் ஒருவர் இளையான்குடி மாற நாயன்மார். திடீரென்று இவர் இல்லத்துக்கு. தவவேடத்தில் இறைவன் வந்தார். இறைவனுக்கு அமுது படைக்க, வயலிலே அன்று

விதைத்த நெல் முளைகளை வாரிவரச் செய்தார். இவர் பிறந்த பதியே இது. இளையான்குடி என்ற பெயருடைய ஊர்கள்: (1) காரைக்கால் பகுதி (2) செங்கற்பட்டு மாவட்டம் (3) திருநெல்வேலி மாவட்டம் ஆகியவற்றிலும் உள்ளன. ஆனால் இவ்வூரே, இந்த நாயன்மாரின் பதி என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன:

(1) மாறநாயனாரின் திருக்குடிசை, அடியார் வீட்டுத்தோப்பு, அடியார்க்கு அமுதளித்த 'முளைவாரி அமுதளித்த நாற்றங்கால் என்ற நிலம், கீரை பறித்த கொல்லை—ஆகியவை உள்ளன:

(2) மாறன் என்னுஞ் சொல் பாண்டியரைக் குறிக்கும். இந்நாயனார் பாண்டியச் சிற்றரசருள் ஒருவராக இருந்திருக்கக்கூடும்.

(3) முளைவாரியமுதளித்த விழா இவ்வூர்ச்சிவன் கோவிலில், நாயனார் திருநட்சத்திரமான ஆவணி மகத்தில் கொண்டாடப்பெறுகிறது.

(4) இவ்வூர் ஆயிரவைசியர்; மாறநாயனார்புகழைப் பரப்பி வருகின்றனர்.

சாலைக்கிராமம்: கத்தோலிக்கர் 5,000பேர் இப்பகுதியில் உள்ளனர்.

வேளுடன் என்ற பெரிய பிரபு இவ்வூரை நிறுவியதாகக் கூறுவர். இவனைப் புகழ்ந்து விக்கிரமசோழன் உலாவில் பாடல்கள் உள. இவ்வூரருகே பரத்தைவயல் என்று ஓர் ஊர் உளது.

போகலூர் ஊராட்சி ஒன்றியம்
நயினார் கோவில் ஊராட்சி ஒன்றியம்

போகலூர் ஒன்றியம், (1) போகலூர் (2) நயினார் கோவில் என்று இரு ஒன்றியங்களாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. இரண்டும் ஓரளவு வளமானவை.

போகளூர்: சத்திரக்குடி என மக்கள் நாவில் வழங்குகிறது. அரசினர் கணக்குகளில் போகளூர் என்று குறிப்பிடப் படுகிறது. பரமக்குடியிலிருந்து (இராமநாதபுரம் சாலையில்) 21 கி. மீ., பஸ், இரயில் வசதிகள் உடையது. இங்கிருந்து 13 கி. மீ. தொலை வில் வைகை ஆறும், 16 கி. மீ. தொலைவில் இராமநாத புரமும் உள்ளன.

சேதுபதிகளின் உறவினர் இப்பகுதியில் பல இடங் களில் வாழ்கின்றனர். அக்குடும்பத்துப் பெண்களுக்கு நாச்சியார் என்று பெயர்.

உத்தரகோசமங்கையில் கோவில் கொண்டிருக்கும் அம்மன் இங்கு முக்காணிப் பிராமணர் குடும்பத்தில் பிறந்ததாக ஐதீகம். எனவே திருச்செந்தூரிலிருந்து முக்காணியர், அம்பிகையின் திருக்கல்யாண உற்சவத் துக்கு ஆண்டுதோறும் உத்தரகோச மங்கைக்கு வந்து, ஏழாம் திருநாளில் தங்கள் வீட்டுத் திருமணம் முதலிய சடங்குகளைச் சத்திரக்குடியில் நடத்துகிறார்கள்.

காமன்கோட்டை

பாண்டிக் கண்மாய் இரயில் நிலையத்திலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ளது. மஞ்சக் கொல்லையிலிருந்து வடக்கே வரும் வைகை வாய்க்காலால் வளம்பெற்று நெல் விளைகிறது.

மாவட்டக் கழகத்தார் உயர்நிலைப்பள்ளி தொடங்க முன்னேற்பாடு செய்த இவ்வூர்ப் பள்ளிக்குழுவினர் ஆசிரியர்கள் அனைவர்க்கும் வீடுகட்டி வாடகைக்குக் கொடுத்து வருவது பாராட்டுக்குரியது.

நயினார் கோவில்: சேதுபதியின் குலதெய்வமான நாகநாதர் கோவில் உள்ள இவ்வூர் இராமநாதபுரத்தி லிருந்து 25 கி. மீ. தொலைவிலும், பரமக்குடியிலிருந்து

எமனேசுவரம் வழியாக 12 கி. மீ. தொலைவிலும் இருக்கிறது.

முற்காலத்தில் திருமருதூர் என்ற பெயர் வழங்கி வந்தது. வாய்பேசாத (ஊமை) ஒரு முஸ்லிம் பெண் இக்கோவிலில் வந்து வழிபட்டதாகவும், திடீரென இறையருளால் ஊமைப்பெண் பேசியதாகவும் இதையறிந்து அப்பெண்ணின் பெற்றோர்கள் கோவிலுக்கு ஓடோடி வந்து, இறைவனிடம் நீரே என் நயினார் என்று பேரார்வத்துடன் கூறி வழிபட்டனர் என்றும் அன்றுமுதல் திருமருதூர் என்ற பெயர்மாறி நயினார் கோவில் என வழங்கிவருவதாகவும் கூறப்படுகிறது. அந்த ஊமைப் பெண் கர்நாடகத்தை ஆண்ட முல்லா சக்கரவர்த்தியின் மகள் என்பர்.

நாமதேவர் என்ற வட இந்திய பக்தர் இங்கு வழிபட்டதாகவும் அவருக்காக இறைவன் மேற்குமுகமாகப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. முகமதியரும் இக்கோவிலில் வழிபடுகின்றார்கள். பள்ளி அறைக்குக் கீழே சுனை இருக்கிறது. கோவிலுக்குக் கீழே பெரியதொரு மண்டபம் இருக்கிறது. இராமநாதபுரத்துக்குச் சுரங்கப்பாதை இருந்ததாம்.

இக்கோவிலுக்கு இரண்டு தேர்கள் உள்ளன. வைகாசியில் பத்து நாள் விழாவும் ஆடியில் பதினைந்து நாள் உற்சவமும் தை மாதத்தில் பூசமும் கொண்டாடப் படுகின்றன. தைப் பூசத்துக்கு இறைவன் வைகையாற்றுக்கு எழுந்தருளுகிறார். வைகை இங்கிருந்து 5. கி. மீ. தொலைவில் செல்லுகிறது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இங்கு கூட்டம் மிகுதி.

இத்தலத்தைப் பற்றிய இலக்கியங்கள்—திருமருதூர்ப் புராணம், கணபதிதாசர் பாடிய நெஞ்சறி விளக்கம், தலைமலை கண்ட மருதுத் தேவர் பாடிய மருதூர் அந்தாதி.

5. திருவாடானை வட்டம்

முதுகுளத்தூர் வட்டத்துக்கு அடுத்தபடி; இம் மாவட்டத்தின் பிற்பட்ட பகுதி இதுவே. இதுவும் கடலோர வட்டம்; இங்கு, தீவுகள் இல்லை. இவ்வட்டத்தின் கடற்கரை 28 மைல் (45 கி. மீ.)

வட்டத்தின் தலைநகர் திருவாடானை; பெரிய நகரம் நகரத்தாரால் புகழ்பெற்ற தேவகோட்டை; துறைமுகப் பட்டினம் தொண்டி.

இவ்வட்டத்தில் எல்லா மதங்களும் இடம் பெற்றுள. பாடல் பெற்ற கோவில்கள் உள்ளன. சமணர் தொடர்புடைய அநுமந்தக்குடி இருக்கிறது. தொண்டி, நம்புதாளை, திருப்பாலக்குடி, வெள்ளையபுரம் ஆகியவற்றில் முஸ்லிம்கள் தொகையாக வாழ்கின்றனர்.

கிறித்தவர்கள்—குறிப்பாக, கத்தோலிக்கர்—இவ்வட்டத்தில் பல்லாயிரம்பேர் இருக்கிறார்கள். பெரும்பாலும் உடையார்கள் 200 ஆண்டுகளுக்குமுன் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். சருகணி, புளியால், ஓரியூர் மூன்றும் இச்சமயத்தினருக்கு முக்கியமான தலங்கள் மதுரை வீரப்பநாயக்கர், 17-ஆம் நூற்றாண்டில் சேதுபதிகளுடன் போர் தொடுக்க, கொச்சியிலிருந்தும் இலங்கையிலிருந்தும் போர்ச்சுகீசியப் படையை வரவழைத்தார். அதற்குப் பரிசாக, தொண்டியிலிருந்து தேவிபட்டினம் வரை கடலோரமாக ஏழு மாதா கோவில்கள் கட்டிக் கொள்ள அவர் அவர்களுக்கு இசைவு வழங்கினார்.

நாரை பறக்காத 48 மடைகள் கொண்ட இராஜசிங்கமங்கலம் கண்மாய், தமிழ்நாட்டின் பெரிய ஏரி

களுள் ஒன்று. அது இவ்வட்டத்தில் இருக்கிறது. அக் கண்மாய்ப் பகுதியிலும் எழுவன் கோட்டை அணைக் கட்டுப் பகுதியிலும் வேளாண்மை மிகவும் ஏற்றம் பெற்றிருக்கிறது. உப்பு எடுத்தல், மீன் பிடித்தல், படகோட்டுதல் ஆகியவை கடலோரத்தில் நிகழ்கின்றன. இவ்வட்டத்து மக்கள் பெரும்பாலோர் 1950 வரை வெளிநாடுகளை நம்பியே வாழ்ந்தனர். கடந்த சில ஆண்டுகளாகவே, உள் நாட்டில் பயிர்த் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றனர். சிலர் வெளிநாடுகளிலிருந்து பணம் வரவழைத்து, புன்செய் நிலங்கள் வாங்கி அவற்றை நன்செய்யாக மாற்றி வருகின்றனர்.

போக்குவரத்து வசதி இவ்வட்டத்தில் குறைவு. இரயில் பாதை கிடையாது. சேதுரஸ்தா எழுபது ஆண்டுகளாகப் பயன்படுத்தப் படவில்லை; அதனால் அது சீரழிந்தது. அதை அனுசரித்து இப்போது தேசிய நெடுஞ்சாலையாகக் கிழக்குக் கடலோரச் சாலை போடப்பட்டு வருகிறது.

இவ்வட்டத்தில் முக்கிய சாலைகளாக இருப்பவை டி. டி. ரோடும் மதுரை—தொண்டிச்சாலையும். இவற்றில் ஏராளமான விரைவு வண்டிகளும் நெடுந்தொலைவுக்குச் செல்லும் பேருந்துகளும் செல்லுகின்றன. டி. டி. ரோடு என்பது தேவகோட்டை—தேவிபட்டினம் சாலை. இவ்வழியே தேவகோட்டையிலிருந்து இராமநாதபுரம் 46 மைல் (75. கி.மீ); இச்சாலை வடக்கு இராமநாதபுர மாவட்டக் கழகத்தாரால் போடப் பெற்றது.

இவ்வட்டத்தின் பிற பகுதிகளில் தங்கள் செலவில் சாலை அமைத்துக் கொள்ள முன்வரும் பஸ் கம்பெனிகள் பத்து ஆண்டுகளுக்கு அச்சாலைகளில் நடத்தும் தனி உரிமை பெறும் என அரசினர் அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு மாநிலமெங்கும் ஒரு திட்டத்தை அறிவித்தால், அரசினருக்குச் செலவில்லாமல் புதிய சாலைகள் ஏற்படும்.

கல்வித் துறையில், கிறித்தவர்கள் வாழும் பகுதிகள் மட்டுமே முன்னேறியுள.

இவ்வட்டம் தேவகோட்டை நகராண்மைக் கழகமும் திருவாடானை, இராஜசிங்கமங்கலம், கண்ணங்குடி, தேவகோட்டை என்ற நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் உடையது.

தேவகோட்டையில் கோட்ட ஆட்சியாளர் அலுவலகமும், துணை வட்டத் தலைவராகிய டிப்டி தாசில்தார் அலுவலகமும் உள்ளன.

தேவகோட்டை நகராண்மைக் கழகம்:

காரைக்குடியில் இரயில் நிலையம் ஏற்படுவதற்கு முன்வரை, இராமநாதபுர மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் தேவகோட்டையே பெரு நகரமாக விளங்கிற்று. 1911-ஆம் ஆண்டில் அறந்தாங்கியிலிருந்து தேவகோட்டை வழியாக இராமநாதபுரத்துக்கு இரயில் பாதை போடவும் முடிவாகியிருந்தது. 1914-இல் உலகப் போர் ஏற்பட்டு 1923 வரை, புதிய இரயில் பாதை எதுவும் போடப்படவில்லை. அந்தச் சூழ்நிலையில் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் செல்வாக்கால், திருச்சி—செட்டிநாடு — சிவகங்கை — மானாமதுரை — இராமநாதபுரம் இரயில் பாதை திட்டமிடப்பட்டது.

தேவகோட்டை என்பது தேவர் கோட்டையைக் குறிக்கும் என்று சிலரும் தேவி கோட்டை என்பதன் மரூஉ என்று பிறரும் கூறுவர். பிந்திய கூற்றுக்கு ஆதாரவாகத் தஞ்சை மாவட்டத்தில் காவிரிப்பூம்

பட்டினத்துக்கு அருகே தேவிகோட்டை என்று ஓர் ஊர் இருப்பதையும், பூம்புகாரிலிருந்து நகரத்தார்கள் தேவ கோட்டைக்குக் குடி வந்ததையும் சுட்டிக்காட்டுவர்.

தேவகோட்டை நகரில் குறிப்பிடத்தக்க இனம் நகரத்தார் இனம், பிற எந்த ஊரிலும்விட இங்கேதான் மிகுதியாக வாழ்கின்றனர். பிற ஊராரைவிட, தேவ கோட்டை நகரத்தார் சமயப் பற்று மிக்கவர்கள். தமிழ் நாட்டில் பல கோவில்களைப் புதுப்பித்த பெருமை இவர் களையே சேரும். ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் காலத்துக்கு முன், இந்நகரினரான ஜமீன்தார் குடும்பம், மெ. நா. சித. குடும்பம், முத்து. கரு. குடும்பம், தி. ராம. தி. குடும்பம், ராம. அரு. அரு. குடும்பம் ஆகியவை பெரும்புகழ் பெற்றிருந்தன. தேவகோட்டை ஜமீன் தார்கள் இராமநாதபுரம் ஜமீனையும் மேற்பார்த்து வந்தனர்; இராமேசுவரம் கோவில் திருப்பணியில் இவர்கள் பங்கு பெரிது; அங்கு பரம்பரை டிரஸ்டிகளாகி இருந்து வருகிறார்கள்.

சிவ ஆகம பரிபாலனசபை, சேக்கிழார் கழகம், கந்தர் சஷ்டி விழாக் கழகம் ஆகியவை இந்நகரில் சிறப் பாக இயங்கி ஆத்திகத்தை வளர்க்கின்றன.

சேக்கிழார் திருவிழா நடப்பதற்கு ஒரு வரலாறு உண்டு. இவ்வூர் வன்றொண்டர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பயின்று பெரிய புராணத் தில் ஈடுபட்டு சேக்கிழாருக்குக் கோவில் கட்ட விரும் பினார். அதற்காக ஒரு இடம் வாங்கினார். குன்றத்தூரி லிருந்து கல் கொண்டுவந்து சேக்கிழார் திருவுருவம் சமைத்தார். சேக்கிழார் கோவில் கட்டுவதாக இருந்த இடத்திலேயே நகரச் சிவன் கோவில் ஏற்பட்டது. இதனால் கருவறையிலேயே சேக்கிழாருக்கு உட்கோவில் கட்டப்பெற்றது.

எடுத்துக்காட்டாக விளங்கும் முறையில் தேவ கோட்டை நகரச் சிவாலயம் நடத்தப்பட்டு வருகிறது. நகரைச் சுற்றி நான்கு சுயம்பு லிங்கங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (1) திருவாடானைச் சாலைக்குக் கிழக்கே வெளிமுத்தி. (2) இராம் நகரிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள எழுவன் கோட்டையில் செந்நெல் வனம். (3) சேரர், சோழர், பாண்டியர் வழிபட்ட இரவி சேரி. (4) கோட்டூர்.

கோட்ட ஆட்சி அலுவலகமும் ஏராளமான நீதி மன்றங்களும் இருப்பதால் இநநகரில் வழக்கறிஞர்கள் நூறுபேருக்குமேல் உள்ளனர். சேவு. அ. அண்ணாமலை செட்டியார் கல்லூரியும், பி. எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார் கொடையால் அரசினர் தொடங்கியுள்ள மருத்துவ மனையும் 1971 இலிருந்து இயங்கி வருகின்றன,

இந்நகரில் அரசியல் எழுச்சி மிகுதி. ஒரு சாலைக்கு தியாகிகள் ரோடு என்று பெயரிடப் பட்டிருக்கிறது.

இங்கிருந்து மதுரை 60 மைல். பல நகரங்களுக்கு பஸ் வசதி உண்டு.

திருவாடானை ஊராட்சி ஒன்றியம்:

வட்டத் தலைநகரான திருவாடானையும், டாலமி, அப்துல் பிடா, இப்ன்பதூடா, மார்க்கோ போலோ ஆகியோரால் குறிப்பிடப்பட்ட மூன்று துறைமுகங்களும் இவ்வொன்றியத்தில் உள்ளன. இந்தத் துறைமுகங் களாவன: தொண்டி. பாசிப்பட்டினம் (P A S A), வட்டாணம் (FATNI, FATTAN). இங்கு முஸ்லிம்கள் பல்லாயிரம்பேர் உள்ளனர். உப்புக் காய்ச்சுவதும் மீன் பிடிக்கும் வலைகள் செய்வதும் இங்குள்ள தொழில்கள்.

தொண்டி: பெயர்க்காரணம்: தொண்டி என்பது, துளை, துவாரம். துளைபோட்ட காது உடையவனைத் தொண்டு காதன் என்று குறிப்பிடுவது உண்டு. 'தொண்டுகாதன் குடும்பம்' என்ற பெயர் இன்னும் செட்டி நாட்டில் சில குடும்பங்களுக்கு உண்டு. இவ்வாறே முகத்துவாரம் என்பது துறைமுகத்தைக் குறிக்கும். அப்பொருளிலேயே இவ்வூருக்குத் தொண்டி என்ற பெயர் ஏற்பட்டது போலும். 'தொண்டு' என்பது நிலத்துள் புகுந்த கடற் பகுதி என்றும் பொருள்படும். இப்பொருளிலேயே தொண்டி என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

இங்குள்ள கடற்கரையை இவ்வூர் மக்கள் 'அலை வாய்க்கரை' என்று அழகுத் தமிழால் கூறுவதாக திரு. அப்துற்—றஹீம் 'தொண்டி மாநகர்' என்னும் நூலில் எழுதியுள்ளார்.

சங்ககாலத் துறைமுகம்: தொண்டி என்ற பெயரில் ஒரு துறைமுகம் பழந்தமிழ் நாட்டில் இருந்தது. அது எது என்பதைப் பற்றி கருத்து வேறுபாடு நிகழ்கிறது.

சேரர் தலைநகராயிருந்து கடல் தொண்டி எனப் புகழ் பெற்ற துறைமுகம் இன்று Quilandy என மருவி, கேரள நாட்டில் ஒரு சிற்றூராக இருக்கிறது. சேரர் துறைமுகமாயிருந்த தொண்டி, ஆலப்புழை யருகேயுள்ள தொண்டிப்பாயில் என்பர் சிலர்.

சோழர் துறைமுகம் இராமநாதபுர மாவட்டத்துத் தொண்டியே. சிலப்பதிகாரத்தில், 'ஓங்கிடும் பரபபின் வங்க விட்டத்துத் தொண்டியோர்' என்றுகுறிபபிடப் பட்டிருக்கிறது.

இத் தொண்டியும் சங்க காலத்தில் இருந்ததாகச் சிலரும், மேற்குக் கரைத் தொண்டியின் நினைவாகப் பிற் காலத்தில் அமைந்த துறை எனப் பிறரும் கூறுவர். இத்

தொண்டி, சோழரிடமும் பாண்டியரிடமும் இருந்ததாக வும் செய்திகள் உள்ளன.

இலக்கியத்தில் தொண்டி: தொண்டியில் விளைந்த நெல் குறுந்தொகையில் கூறப் பெற்றிருக்கிறது. இந் நாளிலும் தொண்டி நெல் சுவைமிக்கது. இத்துறை முகத்துக்கு வந்த அரபுநாட்டார், அரிசியையும் நுங்கை யும் கண்டு வியந்து "இஃது என்ன அரிசி? இஃது என்ன பானம்?" என்று கேட்டு மகிழ்ந்தார்களாம்.

அரபு நாட்டுத் தொடர்பு: இத்துறைமுகத்துக்கும் அரபு நாடுகளுக்கும் பல நூற்றுண்டுகளாக வியாபாரம் இருந்திருக்கிறது. அரபு நாட்டுக் குதிரைகள் மாணிக்க வாசகருக்கு இத்துறைமுகத்தில்தான் இறக்குமதி செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது அரபு நாட்டி லிருந்து வந்த அஞ்சு வண்ணத்தார் என்ற முஸ்லிம்கள் தொண்டிக்கு அருகே அஞ்சுமன் என்ற ஊரை ஏற்படுத் திக் கொள்ளப் பாண்டிய அரசர்கள் இசைந்ததாக வரலாற்று அறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் கூறி யுள்ளார்.

சென்ற நூற்றுண்டுவரை யானைகளும் முத்துக் களும் அரபு நாடுகளுக்கு இத்துறைமுகத்திலிருந்து ஏற்று மதி செய்யப் பெற்றிருக்கின்றன.

முஸ்லிம்கள் வாழ் நகர் தொண்டி. அவர்களில் பலர் அரபு நாட்டுத் தொடர்புடையவர்; எகிப்து, மொராக்கோ, மக்கா வாணிகத்துக்குத் தொண்டிக்கு வந்தவர்களின் வழித் தோன்றல்கள் சிலர்; அவருள் பல பிரிவுகள் உண்டு. மரக்காயர் தெரு, சோனகர் தெரு என்பன கடல் தொடர்பைக் குறிப்பன. கிழக்குத் தெரு வில் லெப்பைமார்கள் உள்ளனர். அரபு மொழியில்

புலமை பெற்ற முஸ்லிம் மகான்கள் தொண்டியில் அடங்கியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத் தொடர்பு: தொண்டியிலிருந்து யாழ்ப்பாணம் 30 மைல் (48 கி. மீ.).

தொண்டியிலிருந்து அதிகாலையில் புறப்பட்டு அங்குச் சென்று அலுவல்களை முடித்துக் கொண்டு மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து திருமபி வந்து விடுவது வழக்கமாக இருக்கிறது. 1890 வரை பாய்மரக்கப்பலில் தொண்டியிலிருந்து கொழும்புக்குச் செல்ல 25 காசு தான் கட்டணமாக இருந்ததாம். 1890 முதல் 1915 வரை தொண்டிக்கும் கொழும்புக்கும் நீராவிக் கப்பல் போக்குவரத்து இருந்தது. அதன் பின்னர் தூத்துக்குடித் துறைமுகம் விரிவடைந்தது. அதனால் கொழும்புக்குச் செல்லும் இராமநாதபுர மாவட்டத்தாரும் தூத்துக்குடி வழியாகச் சென்றனர். இதனால் தொண்டி வழியாக சரக்குகள் மட்டும் அனுப்பப்பட்டன. பின்னர் தனுஷ் கோடி வழி இலங்கைக்கு இரயில் தொடர்பு ஏற்பட்டுக் கோடிக்கரையில் போலவே தொண்டியிலும் வளம் குன்றிற்று. வாழ்வு நசித்தது. பொலிவு போயிற்று.

இங்கிலாந்துத் தொடர்பு: சென்ற நூற்றுண்டில் இங்கிலாந்திலிருந்து சிமெண்டும் பிறபொருள்களும் இத் துறைமுகத்துக்கு வந்தன.

பர்மாத் தொடர்பு: பர்மாவிலிருந்து நீராவிக் கப்பல் களிலும் 35 டன் வரை ஏற்றக் கூடிய லாஞ்சுகளிலும் அரிசி, மரம் ஆகியவை வந்தன. பிறகு இவ்வர்த்தகம் தூத்துக்குடி, நாகபட்டினம் துறைமுகங்களுக்கு மாறிற்று தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறு துறை முகங்கள் போலவே தொண்டியும் அதன் முக்கியத்து வத்தை இழந்தது.

1942க்குப் பிறகு: முறையாக வாணிகம் இல்லாத தால் பாய்மரக் கப்பல் காரர்களும் தரகர்களும் அல்லற் பட்டனர். மீன்பிடித்தலும் சங்கு எடுத்தலுமே முக்கியத் தொழில்களாக இருந்து வந்திருக்கின்றன. தனுஷ் கோடி மீன் மலிவு, தொண்டி மீன் சுவை மிக்கது.

6 கி. மீ. தொலைவிலிருந்து 15 கி. மீ. வரைக் கடலில் போய் மீன் பிடிக்கிறார்கள். சில சமயம் வலம்புரிச்சங்கும் கிடைக்கிறது. வலம்புரிச்சங்கு எடுத்தால் அரசினருக் குத் தெரிவிக்க வேண்டும்.

இலங்கையிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்யப் படுகிறது. இலங்கைச்கு கடல் ஆமை ஏற்றுமதி செய்யப் படுகிறது. புயல் காற்று அடித்தால் இரண்டு ஆண்டு களுக்குக் கடலில் கடல் ஆமை கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். பாம்பனிலிருந்து படகுகளில் சரளைக் கல் வரவழைக்கப் பட்டு இப்பகுதிகளில் சாலைகள் போடு கின்றனர்.

இலங்கைக்குக் கள்ளத்தனமாகச் செல்ல விரும்புப வர்களைப் பாஸ்போர்ட் இல்லாமல் ஏற்றிச் செல்லுவது 1952 முதல் 1960வரை ஒரு பெரிய தொழிலாக நடை பெற்றது. இலங்கையிலிருந்து பொருள்கள் கள்ளத்தன மாகக் கொண்டுவந்து விற்கப்பட்டன. இந்திய அரசின் கடுமையான நடவடிக்கைகளால் இவை ஒடுக்கப் பட்டன. கலங்கரை விளக்கமும் மீனவர்களுக்கு உதவ விண்டு இன்ஸ்டுருமெண்ட், பேரோமீட்டர் உள்ளன.

தொழில்கள்: 1785 முதல் இங்கு நெசவாளர் வாழ் கின்றனர். அவர்கள் பயன்படுத்தும் 'பாவோடி மைதானம்' உள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் புட்டிப் பால் செய்யும் தொழிற்சாலை இவ்வூரில் ஏற்பட்டது.

புவியியல் வளம்: வாழைக்குளத்தின் ஓரத்தில் 'கார்னட்' என்னும் புவியியல் பொருள் விளைகிறது. இது விலைமிக்கக் கறுஞ்சிவப்புக்கல்.

கல்வி: இவ்வூரிலுள்ள இஸ்லாமியக் கல்வி நிலையத்தில் அரபிய, பாரசீக மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. நூறு ஆண்டுகளாக இலங்கையரும் இங்கு வந்து பயில்கிறார்கள்.

மருத்துவ வசதி: 1915 வரை இராமேசுவர யாத்ரீகர் இவ்வழியே சென்று வந்தனர். தஞ்சை அரசியார் இவ் வழி சென்றபோது வயிற்றுவலியால் வருந்தினாராம், வைத்தியர் ஒருவரும் தொண்டியில் இல்லை என்பதை அறிந்து இவ்வூரில் மருத்துவநிலையம் தொடங்க மச்சூா, குமானி என்ற இரு ஊர்களைக் கொடையாக வழங்கினாராம். அந்த மானியத்தைக் கொண்டு நிறுவப் பெற்றதே இப்போது தொண்டியிலுள்ள மருத்துவ நிலையம்.

கங்கை நீர்: இராமநாதசுவாமிக்கு நீராட்ட, அலகபாத் பிரயாகையிலிருந்து இரயில் வழியாக இப்போது கங்கைநீர் வருகிறது. இராமேசுவரத்துக்கு இரயில் போக்குவரத்து ஏற்படுவதற்குமுன் ஒவ்வொரு நாளும் சேதுரஸ்தாவில் இவ்வூர்வழியே காவடி மூலம் இராமேசுவரத்துக்கு அபிஷேகத்துக்குச் சென்று வந்தது.

பள்ளி வாசல்கள்: தொண்டியில் பள்ளிவாசல்கள் பல உண்டு. அவற்றில் குறிப்பிடத்தக்கது கிழக்குத் தெருவிலுள்ள பள்ளிவாசல். முத்துச்சிலாபத்தில் பயன் பெறுவிடினும், இறை அருளால் காகத்தின் வாயிலாக எதிர்பாராது இரு பெரிய நன்முத்துக்கள் கிடைத்ததால் ஷெய்கு உத்மான் என்பார் இதைக் கட்டினார் என்றும் இப்பள்ளி வாசலிலேயே ஊழியம் செய்து தம்

பெயரை ஊழியம் பிள்ளை என்று மாற்றிக் கொண்டார் என்றும் கூறுகிறார்கள்.

சிவன்கோவில்: சுந்தரபாண்டியன் 8-ஆம் நூற்றாண்டில் சிவகாமி சமேத அம்பலவாணர் கோவிலைக் கட்டினான். இதைப் புதுப்பிக்கவும் அன்றாட வழிபாடுகள் நடத்தவும் இராமநாதசேதுபதி 1970-இல் முன்வந்துள்ளார்.

தொண்டியும் தமிழும்: திருச்சி பிஷப் ஹீப்பர் கல்லூரித் தமிழ்ப்புலவரான பிச்சை இப்ராஹிம் புலவரின் ஆசிரியர் இவ்வூர் மோனகுரு செய்கு மஸ்தான் இவர் அடக்கம் செய்யப்பெற்ற இடத்தில் தேவகோட்டை சுவாமிநாதன் செட்டியார் தர்கா கட்டியிருப்பது புலவரின் பெருமையையும் இப்பகுதியில் நிலவும் சமரச மனப்பான்மையையும் வெளிப்படுத்தும்.

தொண்டிக் கடற்கரைப் பகுதிகளில் படையாச்சிகளும் மீன்பிடித்து வாழ்கிறார்கள். இச்சமூகத்தினரான தொண்டி முத்துப் புலவருக்கு இவ்வூரின் "மீன் மகமை" நல்கிவந்தனர். ஒருமுறை புலவரை மீன்பிடிக்கும் படகில் அழைத்துச் சென்றனர். விளையாட்டாக அவரிடம் சிலர் "நீங்கள் பெரும்புலவராய் இருப்பது உண்மையாயின் மீன் தானாகவே வந்து வலையில் விழுமாறு பாடுங்கள்" என்று சொன்னார்களாம்.

வெங்கணமாய் ஓடுகின்ற கெள்ளலே இந்த
வலையிலே வந்துபடு துள்ளியே

என்று பாடிப் புலவர் பாடிய வாய் மூடுமுன் கெள்ளல் மீன் துள்ளிக்குதித்து வலையில் வந்துவீழ்ந்ததாம்.

பழமொழியில் தொண்டி: தொண்டியில் அரபுக் குதிரைகள் வந்து இறங்கின. இதையொட்டிச் சோழ

நாட்டில் ஒரு பழமொழி வழங்குகிறது. திமிராக நடந்து செல்லும் பெண்ணை "என்ன தொண்டிக் குதிரை மாதிரி நடக்கிறாய்?" என்று கேட்பார்கள். மேலும் அவள் திமிராகப் பதில் சொல்லுவாள் "பிறகு என்ன நொண்டிக்குதிரை மாதிரியா நடக்க?"

தொண்டியில் இருப்பவை: 150ஆண்டுகளாக முட்டின்றி நடந்துவரும் அரு. லெ. சத்திரம், உந்திபூத்த பெருமாள் கோவில்; சிதம்பரேசுவரர் சிவாலயம்; இராணிவேலு நாச்சியார் மானியம் வழங்கியுள்ள தொண்டியம்மன் கோவில், ஏராளமான சத்திரங்கள்.

தொண்டியின் சிறப்புக்கள்: வாழ்வதற்கேற்ற சுகாதார நிலை, 1888இலேயே ஊராட்சிமன்றம் ஏற்பட்டது.

தொண்டியின் மக்கள் தொகை: 11,000 முஸ்லிம்கள் உள்பட 14,000.

தொண்டியிலிருந்து கடலோரமாக இராநாதபுரம் 45 கி. மீ. புளியால் வழியாக தேவகோட்டை 35 கி. மீ.

திருவாடானை: வட்டத்தலைநகர், தொண்டி இங்கிருந்து 11 கி. மீ. இவ்வூர் வழியாகத்தான் தொண்டிக்குச் செல்லவேண்டும். இராமநாதபுரம் இங்கிருந்து 53 கி. மீ. சம்பந்தர் பாடல் பெற்ற ஆடானைநாதர்-அன்பாயியம்மை கோவிலால் இவ்வூர் புகழ்பெற்றிருக்கிறது. நீலரத்தினத்தால் சிவலிங்கம் செய்து சூரியன் வழிபட்ட தலம். வருணனுடைய மகன் வாருணி துருவாசருக்கு மரியாதை செய்யாமையால் அவரால் ஆட்டுத்தலையும் யானையின் உடலும் அடைந்து அந்தச் சாபம் இந்தத் தலத்தில் நீங்கப்பெற்றதாகப் புராணம் கூறும்.

தேவகோட்டை நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பெற்று, கோவிலும் அதன் நீடுயர்ந்த கோபுர

மும் (139அடி) அனைவரையும் ஈர்க்கின்றன. கோவில் உள்ள பகுதிக்குப் பிடாரனேந்தல் என்று பெயர்.

இக்கோவிலில் சொற்கேட்டான் சாரி (எதிரொலிக்கும்) மண்டபம் உள்ளது. சொக்கட்டான்போல நான்கு வாயில்களுடன் அமைக்கப்படுவதால் சொக்கட்டான் மண்டபம் எனச் சொல்லப்படுகிறது. சூரியனுக்குத் தனிச்சந்நிதியும் சூரியசண்டிகேசுவரர் சந்நிதியும் உண்டு. சூரியனும் அகத்தியரும் வழிபட்ட தலம். சூரிய தீர்த்தம் சிறப்புடையது. விழாக்கள்—வைகாசி விசாகம், ஆடித் திருக்கல்யாணம்.

1609 முதல் 1650 வரை, இது சேதுபதிகளின் தலைநகராக இருந்ததாக, நெல்சன் ரோமாபுரிக்கு எழுதிய ஒரு கடிதத்திலிருந்து தெரிகிறது.

இவ்வூரில் இசையறிவு மிக்கார் பலர் இருக்கின்றார்கள்.

அஞ்சுகோட்டை: இவ்வூர் அம்பலகாரர்களுக்கு இரட்டை மரியாதை உண்டு.

நம்புதழை: தொண்டிக்கு 2 கி. மீ. தெற்கேயுள்ளது. பெரிய படகுகள் ஓட்டியும் தென்னை பயிரிட்டும் இவ்வூர் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். சேதுபதியின் அமைச்சராக இருந்த தெய்வகன்னி என்பவர் இராமேசுவரம் யாத்ரீகர்க்கு சோமவார மடம் கட்டி, அதன் செலவுக்கு இவ்வூரைத் தானமாக அளித்துள்ளார்.

மாவூர்: தஞ்சை மாவட்டத்திலும் ஒரு மாவூர் இருக்கிறது.

திருவெற்றியூர்: சென்னையருகே உள்ள திருவொற்றியூர் பட்டினத்தாரால் புகழ்பெற்றது. இவ்வூருக்கும் பட்டினத்தார்க்கும் தொடர்பு உண்டா என்பது ஆராயத்தக்கது.

பாகம் பிரியாள் கோவில்: திருவாடானையிலிருந்து 8 கி.மீ. வெள்ளிக்கிழமையன்று தீர்த்தமாடி வழிபட்டால் பாம்புகடி, பூரான்கடி, வண்டுகடி முதலிய நச்சுக்கள் நீங்கும்.

உப்பூர்: திருவாடானையிலிருந்தும் தொண்டியிலிருந்தும் 16 கி.மீ. பழமையான விநாயகர் கோவிலுளது. இவ்வூரில் கடலில் நீராடி வெயிலுகந்த விநாயகரை வழிபட்டு, பிறகு தேவிபட்டினம் வழி இராமேசுவரத்தை அடைவது மரபு.

வட்டாணம்: தொண்டியிலிருந்து வடக்கே 8 கி. மீ. இராமநாதபுர மாவட்டத்தில் பெரிய உப்பளம் இங்கு இருக்கிறது.

இராஜசிங்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

இம்மாவட்டத்தின் வளமான ஒன்றியங்களுள் இது ஒன்று.

இராஜசிங்கமங்கலம்: திருவாடானை—இராமநாதபுரம் சாலையில், இராமநாதபுரத்துக்கு வடக்கே இருபது மைல் தொலைவில் அமைந்த ஊர், ஒரு காலத்தில் இலங்கைப்படைகள் இவ்வூரைப் பிடித்திருந்தன. கைலாசநாத சுவாமி கோவிலும் கரியமாணிக்கப் பெருமாள் கோவிலும் மசூதிகளும் உள்ளன.

இவ்வூருக்கு இப்போது பெருமை தருவது, இராஜசிங்கமங்கலம் கண்மாய். வீராணம் ஏரிக்கு அடுத்தபடி தமிழ்நாட்டின் பேரேரி இதுவே. வைகை ஆற்றுநீர் அனைத்தும் இந்தக் கண்மாயில் விழுந்தபிறகே கடலில் போய்ச் சேருகிறது. சருகணி ஆற்றுநீரும் இதில் வந்து விழுகிறது. கண்மாய்க்கரையின் நீளம் 14 மைல் (23 கி. மீ.) இதன் உள்வாயில் அரியக்கொட்டான்,

சாத்தனூர், செங்குடி, சேந்திடல், வரவனி என்ற ஊர்கள் உள்ளன. பல மாதங்கள் இந்த ஊர்கள் உள்ளன. பல மாதங்கள் இந்த ஊர்களுக்குப் படகில் தான் செல்ல வேண்டும்.

நேரடியாக 5, 200 ஏக்கர் நிலத்துக்கும் தொடர்புடைய 72 கண்மாய்கள் வழியாக மேலும் 5,000 ஏக்கர் நிலத்துக்கும் இந்தக்கண்மாய் பயன்படுகிறது. கண்மாயின் நீர்ப்பரப்புப் பகுதி 473சதுரமைல்.

பொதுப் பணித்துறை, இதை R.S. Mangalam tank என்று குறிப்பிடுகிறது. இதன் கொள் அளவு 871. 5. mcft, 28 லட்சம் ரூபாய் செலவில் இக்கண்மாயைச் செப்பனிடவும் சருகணி ஆற்றை மறித்து அணை கட்டி அதன் நீரின் போக்கை ஒழுங்கு படுத்தவும் 1971-இல் திட்டமிடப்பட்டது.

இக்கண்மாயில் தண்ணீர் வற்றிய காலத்தில், கண்மாய்க்குள் பரங்கி, பூசனி பயிரிட்டு பலர் அங்கே 'கூடம்' கட்டி காவலாகத் தங்கி விடுகிறார்கள்.

இப்பகுதியில் ஏக்கருக்கு 18 கலம் வரை (ஒரு கலம்— பட்டினம் பக்கா 90 படி) நெல் விளையும். ஏக்கருக்கு 14 கலம் கண்டால், சேதுபதிகள் தங்கள் ஜமீன் பகுதியில் ராஜமானியமாக 84 படி கொடுத்து வந்தனர். அந்தச் சலுகை இராஜசிங்க மங்கலம் தவிர ஏனைய பகுதிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது.

நீர் வளத் தொடர்பைக் குறிக்கும் கடலூர், ஜலவெளி என்னும் ஊர்கள் இப்பகுதியில் உள்ளன.

இராஜசிங்கமங்கலத்திலிருந்து நயினார் கோவிலுக்கு ஒரு சாலை பிரிகிறது.

அழகர்தேவன்கோட்டை: கோட்டை என்னும் இறுதிச் சொல்லுடன் இவ்வூரும் காவலக்கோட்டை, தும்

படைக்கா கோட்டை என்னும் ஊர்களும் உள்ளன மறவர் படை தங்கியதால் இப்பெயர்கள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

சித்தூர்வாடி: சித்தூர் ஆந்திர மாநிலத்திலும் வாடி மஹாராஷ்டிரத்திலும் உள்ளன!

செவ்வாய்ப் பேட்டை: சேலத்தில் ஒரு செவ்வாய்ப் பேட்டை இருக்கிறது.

கோவிந்த மங்கலம்: இவ்வூரில் சிதைந்த சிவன் கோவிலில் ஒரு கல்வெட்டில் இவ்வூருக்கு நாற்பத்தெண்ணாயிர நல்லூர் என்ற பெயர் குறிக்கப் பெற்றிருக்கிறது. ஆனந்தூர்ப் புலவர் சீ. இலட்சுமணன், கொங்கு என்னும் இதழில் இதைக் குறித்துப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

சமயத் தொண்டர்களை தொகைப் பெயரால் வழங்கும் பழக்கம் தமிழ் நாட்டில் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்துள்ளதை அறிவோம். தில்லை மூவாயிரவர், திருப்பெருந்துறை முன்னூற்றுவர்; திருவாக்கூர் ஆயிரவர், திருவீழிமிழலை ஐந்நூற்றுவர் என்பன அதற்கான சான்றுகளாகும். நாலடியார் இயற்றிய சமணர் எண்ணாயிரவர் மதுரையில் வாழ்ந்ததாகவும் இலக்கியச் செய்திகள் கூறுகின்றன.

இலக்கியங்களில் அகச்சான்றுகளிலிருந்து, மதுரையில் வாழ்ந்த சிவனடியார் நாற்பத்தெண்ணாயிரவர் என்பது தெளிவாகும், எனவே "நாற்பத்தெண்ணாயிர நல்லூர்" என்று கோவிந்த மங்கலம் அழைக்கப்பட்டது அவர்களை ஒட்டியதே ஆகலாம்.

மலரி: இராசசிங்கமங்கலத்துக்கு அருகு. ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர். இவ்வூர் காளிகோவில் புகழ்

பெற்றது. 'காளி ஓட்டக் கூத்தன்' என்ற வழக்கும் உண்டு. பேரளம் (தஞ்சை மாவட்டம்) அருகே மலரி என்ற ஊர் உளது.

மணக்குடி: உப்பூருக்கு வடக்கே உப்பளமுடைய ஊர். இப்பகுதி அளநாடு எனப்பட்டது. அளநாட்டுக்கு வடக்கிலும் தெற்கிலும் பல அளங்களிருந்ததால், இது இடையளநாடு என்று வழங்கப் பெற்றது.

இவ்வொன்றியத்தில் கூடலூர், செங்குடி, திருப்பாலைக்குடி என்னும் ஊர்களும் உள்ளன.

கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியம் தேவகோட்டைக்கும் தஞ்சை மாவட்டத்தின் எல்லையிலுள்ள கடலோரப் பகுதிக்கும் இடைப்பட்டது. உடையார்கள் இங்கு ஒரு முக்கிய மான சமூகம். அவர்கள் கத்தோலிக்கர்.

உஞ்சனை, கட்டிவயல், களத்தூர் நிலமழகிய மங்களம் என்னும் ஊர்ப் பெயர்கள் குறிப்பிடத்தக்கன. கண்டியூர் என்னும் ஊருக்கும் ஈழநாட்டுக் கண்டிக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது ஆராய்தற்குரியது.

அனுமந்தக்குடி: தேவகோட்டையிலிருந்து 8 கி. மீ. சமணர் கோவில் இன்றும் இருக்கிறது. இவ்வூர் ஒரு காலத்தில் செழிப்பாக இருந்தது. வட்டத் தலைநகராக வும் விளங்கியது.

ஓரியூர்: இவ்வூர் திருவாடானையிலிருந்து 16 கி. மீ. தொலைவில் இருக்கிறது. இங்கிருந்து 3 கி. மீ. தொலை வில் கடல் உளது.

திருவாசகத்தில் இவ்வூர் குறிப்பிடப் பெறுகிறது. திருவிளையாடல் ஒன்று நிகழ்ந்ததாகத் திருவிளையாடற்

புராணம் குறிப்பிடும் ஊரும் இதுவே. சிவன் கோவில் இருந்த இடத்திலேயே கத்தோலிக்கக் கோவில் கட்டப் பட்டிருப்பதாகச் சிலர் இந்நூலாசிரியரிடம் கூறினர். சிவன் கோவில் இருந்த இடம் என்று வேறு சிலர் ஒரு மேட்டைச் சுட்டிக் காட்டினர்.

சங்ககால வள்ளல் எழுவருள் ஒருவரான ஓரி வாழ்ந்த ஊர் இதுவே.

இவ்வூர் சேது நாட்டின் வட எல்லையாக இருந்தது. எனவே இங்கு சோழ மண்டலத்திலிருந்து சேது நாட்டைக் காக்கக் காவல் கோட்டையும் கொத்தளங் களும் அமைத்திருந்தனர். சேதுபதியின் நெருங்கிய உறவினர் ஒருவர் இங்கு அவருடைய பிரதிநிதியாக இருந்து வந்தார். இவ்வூரிலுள்ள கோட்டை என்னும் பகுதிக்குள் கொந்தகை வேளாளர் என்ற இனத்தார் (ஸ்ரீ வைகுண்டம் கோட்டைப் பிள்ளைமார் போல) வாழ்ந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்துக்குக் குடியேறி விட்டனராம்.

இராமநாதபுரம் ஜமீனில் ஓரியூர் ஒரு தாலுகாவாக இருந்தது. பழைய ஓரியூரில் மறவர்கள் வாழ்கின்றனர். ஏனைய பகுதிகளில் கத்தோலிக்கர் வாழ்கின்றனர்.

இங்கு கத்தோலிக்கம் பரவியது பற்றிக் கூறப்படும் செய்தியாவது:

கிறித்தவ சமயத்தைப் பரப்பிய அருளானந்தர் என்ற மேனாட்டுப் பாதிரியாரை வெட்ட, ஒரு பிரதிநிதி கிழவன் சேதுபதி ஆணைப்படி, பாம்பாற்றங்கரையில் அமைந்த ஓரியூருச்கு 1693-இல் அனுப்பப்பட்டார். சேது மன்னனின் ஆணைப்படி, சேதுபதியின் உறவின ரான ஓரியூர்த்தலைவன் ஓரியூர்க் கோட்டையின் மருங்கே அமைந்த பெரும் பரப்பில் அருளானந்தர் சிரத்தை

அறுத்து அவர் திருமேனியை விலங்குக்கும் பருந்துக்கும் விருந்தாக்கினான். அருளானந்தர் உயிர் வழங்கிய இடத்தில் நிகழ்ந்த செயல்களைக் கண்டும் கேட்டும் மக்கள் இயேசு மதத்தில் சேர்ந்தனர்.

அது முதல் இவ்வட்டத்திலும் இம்மாவட்டத்திலும் கத்தோலிக்கம் வேரூன்றிற்று. தேபிரித்தோவை நினைத்து வணங்கினால் நினைத்த காரியம் கைகூடும் என்ற எண்ணம் பரவிற்று. கத்தோலிக்கத்துக்கு ஏற்பட்ட பேராதரவைக் கண்டு 1734இல் சேதுபதி ஓரியூரில் ஒரு தேவாலயம் கட்ட 20 ஏக்கரை சர்வமானியமாக வழங்கினார். தேபிரித்தோ பெயரால் ஏற்பட்ட அந்த ஆலயம் அருளானந்தர் ஆலயமென வழங்கி வருகிறது.

பெரும்புகழ் பெற்றுவிட்ட இந்தத் தேவாலயம் பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. 1950-இல் தொடங்கி பல ஆண்டுகள் வேலை நடைபெற்றது. 120 அடி உயரத்தில் கோபுரம் அமைக்கப் பெற்றிருக்கிறது.

வரலாற்றுக் காரணங்களுக்காக பழைய தேவாலயம் முன்னிருந்த நிலை சிறிதும் குன்றாது பேணப்பட்டும் வண்ணம் முதலியன தீட்டப்பட்டும் பழுது பார்க்கப் பெற்றும் வருகிறது. ஆனால் அங்கு வழிபாடு கிடையாது. இவ்வாறு காட்சிப் பொருளாக இருக்கும் தேவாலயங்களுக்கு Basilica என்று பெயர். அருளானந்தர் வெட்டப்பட்ட இடம் இதுவே.

இங்கிருந்து 300 அடி தொலைவில் இராணி கல்லறை இருக்கிறது. இது சேதுபதி குடும்பத்து அரசிளங்குமரி ஒருத்தியின் கல்லறை. இந்தப் பெண்மணி தம் கணவனிடம் மன்றாடி அருளானந்தரின் உயிரைக்காக்க அரும்பாடு பட்டாளாம்.

„ தென்னிந்தியா முழுவதுமிருந்து கத்தோலிக்கர் ஓரியூருக்கு வருகின்றனர். பிள்ளை வரம் வேண்டுவோர் இத்தேவாலயத்தைச் சுற்றி தென்னம்பிள்ளை வைக்கிறார்கள். இவ்வூரில் புதன் கிழமைகளில் சந்தை கூடுகிறது. அருளானந்தர் தலை வெட்டப்பட்டது புதன் கிழமையில்தான்.

நாரை, கொக்கு போன்ற பறவைகளின் இயற்கை உரம் கிடைப்பதால் இவ்வூர் நிலங்கள் நல்ல மகசூல் கொடுக்கின்றன.

தேபிரித்தோ நினைவாக நடைபெறும் திருவிழாவும் உயர்நிலைப்பள்ளியும் இவ்வூருக்குப் புகழ் தருவன.

தேபிரித்தோ தேவாலயத்திற்கு வடக்கே பாம்பாறு செல்லுகிறது. அந்த ஆறு தஞ்சை-இராமநாதபுர மாவட்டங்களின் எல்லையாக அமைகிறது. ஆற்றின் எதிர்க்கரையில் பாடல்பெற்ற திருப்புனல்வாயில் உளது.

திருப்புனல் வாயில், கடற்கரையிலிருந்து 3 கி. மீ. தொலைவில் இருக்கிறது. பாண்டிய மன்னர்கள் இக்கோவிலைக் கட்டியபோது, கடற்கரை இவ்வூரருகே இருந்திருக்கலாம்.

திருப்புனல்வாயில், பாண்டி நாட்டுப் பழம்பதி. இறைவன் பழம்பதிநாதர். பாண்டி நாடே பழம்பதி என்பது மாணிக்கவாசகர் வாக்கு. பாண்டி 14 தலங்களின் மூர்த்திகளும் இங்கு நிறுவப் பெற்றுள்ளன. இது தேவார காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட செயலாக இருக்க வேண்டும்.

மூலத்தான மூர்த்தியின் பெரிய உருவம், கருவறையின் அமைப்பு, கோபுரத்தின் நிழல் சாயாத்தன்மை—

யாவும் தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்றவை; ஆனால் இது தஞ்சைக்குப் பல நூற்றாண்டு முற்பட்டது.

தீர்த்தாண்டதானம்: திருவாடானையிலிருந்து தொண்டி 8 மைல், தொண்டியிலிருந்து சேதுச்சாலையில் 8 மைல் சென்றால் தீர்த்தாண்டதானத்தை அடையலாம்.

இங்கு ஒரு பழமையான கோவில் இருக்கிறது. கோவிலுக்கு வடக்கே வருண தீர்த்தம் இருக்கிறது. இத்தீர்த்தத்திலும் கடலிலும் நீராடுவது மரபு. கடல் நீராடுவது இராமேசுவரம், தேவிபட்டினம், திருச்செந்தூர், தீர்த்தாண்டதானம் ஆகியவற்றில் என்றும் ஆடலாம். பிற இடங்களில் கடல்நீராடுவது அமாவாசை, பவுர்ணமி, அஷ்டமி, வியதிபதம், மாதப்பிறப்பு, கிரகணம் ஆகிய நாட்களில்தான் ஆடலாம். சர்வதீர்த்தங்களுக்கும் அதிபதியான வருண பகவான் வழிபட்டதால், இறைவனுக்கு சர்வ தீர்த்த ஈசுவரர் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. சோழமன்னன் இங்கு நீராடி, உடல்நலம் பெற்றதாக வரலாறு உண்டு. இக்கோவில் சேதுபதிகள் ஆட்சியில் இருக்கிறது.

மீன்பிடிப்பதும் உப்பளமும் இங்குள்ள தொழில்கள்.

தீர்த்தாண்டதானத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் தஞ்சை மாவட்ட எல்லை உளது. அங்கிருந்து 6 கி.மீ. சென்றால் மீமிசலை அடையலாம். தீர்த்தாண்டதானம், திருப்புனல்வாயில், சுந்தரபாண்டியன்பட்டினம் மூன்றும் முக்கோணவடிவில் அமைந்தவை.

இடையமடம்: தீர்த்தாண்டதானத்திற்கும் திருப்புனல்வாயிலுக்கும் இடைப்பட்டது. விஷ்ணுபாதம் எனப்படும் (இராமரின் பாதுகை உள்ள பழமையான) கோவில் இருக்கிறது. அகஸ்தியரும் பழம்பதிநாதரும் இராமருக்குக் காட்சிகொடுத்த இடம்.

சுந்தரபாண்டியன் பட்டினம் (S. P. பட்டினம்)

தீர்த்தாண்டதானத்திற்கு வடக்கே ஒரு மைல் தொலைவிலுளது. முஸ்லிம் மீனவர் வாழும் ஊர். பாண்டியமன்னன் சுந்தரபாண்டியன் ஏற்படுத்திய ஊர். அவன் கட்டிய கோட்டை, ஊருக்கு வடக்கே காட்டுக்குள் இருந்தது. இப்போது அங்கு சந்தனம்மா பள்ளிவாசல் இருக்கிறது. 60 ஆண்டுகளுக்குமுன் ஏராளமான சத்திரங்கள் இவ்வூரில் இருந்தன.

இராமநாதபுர மாவட்டத்தின் கடற்கரையில் கடைசி ஊர் (தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்தால் முதல் ஊர்) இதுவே. பாம்பாற்றுக்கு அப்பால் இருப்பது தஞ்சை மாவட்டம். இங்கிருந்து ஆவுடையார் கோவில் 20 மைல்.

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம்

தேவகோட்டை நகரைச்சுற்றிய பகுதிகளும் சிவகங்கை வட்ட எல்லை வரையுள்ள ஊர்களும் இந்த ஒன்றியத்தில் அடங்கியுள்ளன. பேரூராட்சி இல்லை. 42 ஊராட்சி மன்றங்கள் உண்டு.

மறவர்களே மிகுதி. மறவ வீரர்கள் தங்கியிருந்ததால் ஏற்பட்ட கோட்டைகளைப் பின்வரும் ஊர்களால் அறியலாம்: மாவிடுதிக் கோட்டை, மனைவிக்கோட்டை, பொன்னளிக்கோட்டை, திடக்கோட்டை, கண்ணங் கோட்டை, எழுவன் கோட்டை, உறுதிக்கோட்டை.

வேளாண்மையே இங்கு உள்ள தொழில். வேறு எவ்விதத் தொழிலும் இல்லை. எழுவன் கோட்டை அருகே 1962-ஆம் ஆண்டு ஓர் அணை கட்டப்பட்டு அப்பகுதி வளமாக இருக்கிறது. ஏனைய பகுதிகளின் தன்மையை வயல் என்னும் ஈற்றுச் சொல்லால் அறிய

லாம். கருமொழி சாஞன்வயல், தளக்காவயல், தாஞ வயல், திருமணவயல், தென்னீர்வயல், நெல்வயல், வெட்டிவயல், ஆருவயல்.

இப்பகுதியில் கிறித்தவர்களுக்கு முக்கியத்தலங் களான சருகணியும், புளியாலும் உள்ளன. ஹிந்துக்கள் புனிதமாகக் கருதும் கண்டதேவி, திருவேகம்பத்து என்ற ஊர்களும் முருகனைக்குறிக்கும் சண்முகநாதபுரம், திராணி ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த சண்முகநாத பட்டணம், உறுதிக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குமாரவேலூர் என்ற சிற்றூர்களும் இருக் கின்றன எழுவன் கோட்டையிலுள்ள ஐயனூர், மதுரை மாவட்டத்து வலையர்களுக்கும் வழிபடுதெய்வமாக இருக்கிறது. அவர்கள் இந்த இறைவன் பெயரால் எழுவன் என்று பெயர் வைக்கின்றனர்.

வெள்ளிக்கட்டி, என்மணக்குடி என்ற ஊர்களின் பெயர்கள் ஆராய்ச்சிக்குரியன. இவ்வொன்றியத்தி லுள்ள சண்முகநாத பட்டணம், சீனமங்கலம், குமார வேலூர், எஸ். சொக்கநாதபுரம், ஆரவங்குடி போன்ற ஊர்களில் வாழும் செட்டியார்கள் வெளிநாட்டு வாணிகத் தொடர்புடையவர்கள். இவர்களுக்குப் பொதுவான பிரபலமான சிவன்கோவில் எஸ். சொக்க நாதபுரத்தில் அவவூர் நகரத்தாரர்களால் கட்டப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வூரைச் சேர்ந்த திரு. ஆதிநாகப்பன் பினங்கில் 'ஜெய்ஹிந்த்' வார இதழ் ஆசிரியராயும், கோலாலம்பூரில் 'தமிழ்நேசன்' ஆசிரியராயும், லண்டனில் தமிழ்ச் சங்கத் தலைவராயும் இருந்திருக்கிருர். இவர் மலேயா அரசில் பட்டங்களும் பதவிகளும் பெற்றிருக்கிருர். சென்னையில்

1968-இல் நடந்த உலகத்தமிழ் மகாநாட்டிற்கு மலேசியா அரசு தூதுக்குழுவின் தலைவராக இருந்தார்.

சருகணி: தேவகோட்டை, சிவகங்கை, திருவாடானைச் சாலைகள் சந்திக்குமிடத்தில் இவ்வூர் அமைந்திருக்கிறது.

கத்தோலிக்கருக்கு, சருகணி ஒரு மாவட்டமாக இருந்துவருகிறது. 1736-இல் இங்கு போர்த்துக்கல் நாட்டுப் பாதிரிமார்கள் வந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். 1751-இல் தேவாலயம் கட்டப்பெற்றது. அதன் சுவர்களின் கனம் ஐந்து அடி என்பதிலிருந்து எவ்வளவு பக்காவாக அது கட்டப்பட்டது என்பதை அறியலாம். நாடார்கள், உடையார்கள், வேளாளர், கோனார், அகம்படியர் ஆகியோர் நெடுந்தூரத்திலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் மதமாற்றி இங்கு குடியேற்றப்பட்டனர். இப்பகுதியைச் சேர்ந்த மறவர், பள்ளர், ஆதி திராவிடர்களும் இந்த மதத்தைத் தழுவினர்.

1929-ஆம் ஆண்டில் புதிய தேவாலயம் கட்டப் பட்டது. கல்வி, மருத்துவ நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டு நன்கு இயங்கி வருகின்றன. தட்டெழுத்து சுருக்கெழுத்துப்பள்ளியும் தொடங்கப்பெற்றிருக்கிறது.

(1) The feast of St. Francis Xavier

(2) The feast of Most sacred Heart of Jesus and Immaculate Heart of Mary—Titular

என்ற இரு விழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

1780-ஆம்ஆண்டு ஆங்கிலேயர் மருதுபாண்டியரை விரட்டியபோது, அவர் குதிரைமீதேறிவந்து இந்த மாதாகோவிலில் அடைக்கலம் புகுந்தார்; பாதிரியார் தாம் உட்கார்ந்திருந்த பெட்டிக்குள் அவர் புகுந்து கொள்ள இசைந்தார். ஆங்கிலேயவீரர் இங்கு வந்து மருதுவைக்காண இயலாதவராய் வேறு திசைகளில் அவரைத் தேடி ஓடினர். தம்மைக் காப்பாற்றிய பாதிரியாருக்கு மருதரசர் நன்றிகூறுமுகத்தான் சருகணி கிராமத்தையே மாதாகோவிலுக்கு சர்வமானியமாக வழங்கினர்; மாதாகோவிலுக்கு ஒரு தேரும் செய்து கொடுத்தாராம்; தேரை இழுக்க பனக்கரை என்ற ஊரை மானியமாக வழங்கினராம். இன்றும் மருதரசர் வழியினரான உறுதிக்கோட்டை ஜமீன்தார் வந்து மரியாதை பெற்றபின்னரே சருகணித்தேர் நகருகிறது.

உறுதிக்கோட்டை: சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுசகோதரர்களின் வழியினர் இவ்வூர் குறுநில மன்னர் ஆவர். இவர்களுடைய அரண்மனை சென்ற தலைமுறைவரை இங்கு சிறப்பாக இருந்தது.

திராணி: இவ்வூராட்சியைச் சேர்ந்த சண்முகநாத பட்டணத்துக்கும் ஒத்தை வீட்டுக்கும் நடுவேயுள்ள கண்மாய்க் கரையில் உள்ள அணிக்குஞ்சு விநாயகர் கோவில் புகழ்பெற்றது.

புளியால்: இது தேவகோட்டை; திருவாடானைச் சாலையில் இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தால் சிறப்புப் பெற்றது.

திருவேகம்பத்து: சிவகங்கை ஜமீனில் இது ஒரு தாலுகாவாக இருந்தது. சிற்றூற்றைக் கடந்து

இவ்வூர்க் கோவிலை அடையலாம். பழமைப் பண் பாட்டுக்கு எடுத்துக்காட்டாகச் சென்ற நூற்றாண்டில் இவ்வூர் விளங்கியது. 1942-ஆம் ஆண்டுக்கிளர்ச்சியில் இங்குள்ள அரசாங்க அலுவலகங்கள் தீக்கொளுத்தப் பட்டன.

சங்கரபதிக் கோட்டை: இவ்வூர் அமராவதி புதூருக்கு அருகில் இருக்கிறது. சின்ன மருதுவும் பெரிய மருதுவும் இந்தக் காட்டில் கோட்டை கட்டிக்கொண்டிருந்த தாகவும் வேட்டையாடியதாகவும் கூறுவர். அவர்கள் வழிபட்ட கோவில் இப்போது அரசினரால் பேணப் பட்டு வருகிறது.

கண்டதேவி: இவ்வூர் காரைக்குடியிலிருந்து ஆறு வயல் வழியாகத் தேவகோட்டை செல்லும் சாலையில் தேவகோட்டையிலிருந்து 2 கி. மீ. தொலைவினது. தேவ கோட்டை நகர்த்தார்கள் கட்டிய சிவன் கோவிலும் சத்திரங்களும் உடையது. உமாதேவி இங்கு காளியாக தவம் செய்தபோது காளையார் கோவிலிலிருந்து காளீசு வரர் இங்கு எழுந்தருளி அவருக்குக் காட்சி கொடுத்த தாக காளையார் கோவில் புராணத்தில் கூறப்பெற்றிருக் கிறது.

தேவகோட்டை, நாட்டரசன்கோட்டை, கொல்லங் குடி ஆகிய ஊர்களிலும் உமாதேவி தவம் செய்ததாகக் கூறுவர்.

கண்டதேவி புராணத்தை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை எழுதியிருக்கிறார்.

6. திருப்பத்தூர் வட்டம்

இம்மாவட்டத்தின் பழமையான முக்கியமான
வட்டங்களுள் இது ஒன்று. இது சிவகங்கைச் சீமையின்
ஒரு பகுதியாக இருந்தது. சங்க கால முதற்கொண்டே
இங்கு தமிழும் கலைகளும் வளர்ந்திருக்கின்றன.
திருப்பத்தூர், பிரான்மலை (கொடுங்குன்றம்), திருக்
கோட்டியூர் ஆகிய பாடல் பெற்ற தலங்களும், பிள்ளை
யார் பட்டி, இளையாத்தக்குடி, குன்றக்குடி, அரியக்குடி
முதலிய பிற தலங்களும் இவ்வட்டத்தில் உள்ளன.

பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்ற வீர மரபின
ரான மறவர்கள் இங்கு பெரும்பான்மையினர். வெளி
நாடுகளில் பொருளீட்டி அந்தச் செல்வத்தை இவ்
வட்டத்தில் வீடுகள் கட்டியும் சாலைகள் போட்டும்,
கோவில்களை ஏற்படுத்தியும் எண்ணற்ற கல்வி மருத்துவ
நிலையங்களைத் தோற்றுவித்தும், சிறுபான்மையினரான
நகரத்தார் இவ்வட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருக்
கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து இவ்வட்டத்தில் பிற
இனத்தவரும் வெளிநாடுகளைப் பார்த்திருக்கிறார்கள்;
அங்கு சில காலம் வாழ்ந்திருக்கிறார்கள். எனவே, இவ்
வட்டத்தினரின் கண்ணோட்டம் ஒப்புமைக் கண்ணோட்ட
மாகத் திகழ்கிறது.

இவ்வட்டத்தின் பழங்குடியினர் முக்குலத்தோரே.
சில ஊர்களில் யாதவர் செல்வாக்குடன் உள்ளனர்.

வட்டத்தின் வழியே இரயில்பாதை செல்லுகிறது.
காரைக்குடியில் கல்விப் பயிர் வளர்கிறது. செட்டி
நாட்டில் நூல் ஆலையும், காரைக்குடியைச் சுற்றிலும்

பிற சிறு தொழில்களும் உள்ளன. சிங்கம்புணரியிலும் தொழிற் சாலைகள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வட்டத்தினர் வழக்காடுவதில் வல்லவர்கள். மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் முன்சீப் கோர்ட்டு ஏற்பட்டு அந்தந்த வட்டத்து வழக்குகள் அவ்வட்டத்திலேயே விசாரிக்கப்படுகின்றன. திருப்பத்தூர்வட்டத்தின் சில ஊர்களுக்குத் தேவகோட்டையிலும், ஏனைய ஊர்களுக்குச் சிவகங்கையிலும் வழக்குகள் விசாரிக்கப் படுகின்றன. வட்டத்திற்குள்ளேயே தனி முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த அரசினர் முன்வர வேண்டும்.

இவ்வட்டத்தில் காரைக்குடி நகராண்மைக் கழகமும் திருப்பத்தூர், சிங்கம்புணரி, சாக்கோட்டை, கல்லல் ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன.

காரைக்குடி: இது செட்டிநாட்டின் பெரியநகரம்; திருச்சி, மானாமதுரை, ஆறந்தாங்கி ஆகிய மூன்று திக்குகளில் செல்லும் இரயில்களின் சந்திப்பு. இந்நகரின் மக்கள் தொகை 40, 000. நகர் எல்லைகளைக் குறிப்பிட 'ஆர்ச்' வளைவுகள் போட்டிருப்பது இந்நகரின் தனிச் சிறப்பு.

காரைக்குடி என்னும் ஊர்ப்பெயர் காரைச் செடியால் ஏற்பட்டது

கி. பி 1700க்கு முன் இந்நகர் காரைச் செடி முளைத்த காடாக இருந்தது. குழி ஒரு பணம், இரண்டு பணம் (பணம்—6 புதுக்காசு) விலைக்கு காரைச்செடி முளைத்த இடங்களை வாங்கிச் செஞ்சையிலிருந்து நகரத்தாரும் பிறகு சேணியரும் குடியேறி முத்தாளம்மனையும் கொப்புடைய அம்மனையும் கொண்டு வந்து கோவில் கட்டினர்.

1891-இல் இவ்வூரின் மக்கள் தொகை 6,579. 1901-இல் 11,801. 1930 வரை காரைக்குடி சிற்றூ ராகவே இருந்தது. திருப்பத்தூரும் தேவகோட்டை யும் காரைக்குடியை விடப் பெரிய அளவில் இருந்தன. அதனால் திருப்பத்தூரில் வட்ட ஆட்சி அலுவலகமும் தேவகோட்டையில் கோட்ட ஆட்சி அலுவலகமும் ஏற் பட்டன. சிறு பொருள்கள் வாங்குவதற்குக்கூட காரைக்குடி மக்கள் திருப்பத்தூருக்குச் செல்ல வேண்டி யவர்களாய் இருந்தனர். காரைக்குடி இராமநாதபுரம் ஜில்லா என்று எழுதினால்தான் கடிதங்கள் வந்து சேரும் நிலையும் இருந்தது. இப்போது அஞ்சல் எண் உள்ள நகராக விரிவடைந்திருக்கிறது.

காரைக்குடியின் வளர்ச்சியில் முக்கியமான மாறு தல் 1930-ஆம் ஆண்டு அளவில் இரயில் பாதை போடப்பட்டதால், ஆரம்பமாயிற்று. 1947-க்குப் பிறகு கல்வித் துறையில் இந்நகரம் தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அரசியல் துறையில் காரைக்குடி எப்போதுமே விழிப்பான நகராக இருந்திருக்கிறது. 1942 போராட் டத்தில் ஆங்கிலேய அரசியலார் 50,000 ரூபாய் இந்நகருக்கு தண்டவரி விதித்தனர்.

வியாபாரத் துறையில் காரைக்குடி முன்னணியில் இருக்கிறது. ஏராளமான வங்கிகள் இந்நகரில் உள்ளன. இந்திய அரசினருக்கு வருமானவரி வசூலாகும் இடங் களில் காரைக்குடிக்கு முக்கியத்துவம் உண்டு. பங்கு மார்க்கெட்டும் இங்கு சுறுசுறுப்பாக நடைபெறுகிறது. தங்கம், வெள்ளி, வைரம் வியாபாரங்களில் ஈடுபடும் சேட்டுகள் ஏராளமாக உள்ளனர். வெளி நாடுகளில் விற்பனையாகும் பொருள்களையும் கலை அழகுடனும்

உறுதியுடனும் செய்யப்பெற்ற பழைய சாமான்களை யும் விற்கும் வணிகர் பலர் இருக்கிறார்கள்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று, இசை நிகழ்ச்சிகளும் இறைவழிபாடும் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. இந்நகரின் நடுநாயகமாக இருப்பது கல்லுக்கட்டி, அது நாற்புறமும் கல்லால் கட்டப் பெற்ற குளம். கல்லுக் கட்டிக்கரையில் இவ்வூரினர் சிறப்பாகப் போற்றும் கொப் புடையம்மன் கோவில் இருக்கிறது. காதில் கொப்பு என்னும் அணி சிறப்பாக இருப்பதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது. அருள் பொழிந்து நகர் காக்கும் நல் அன்னை கொப்புடையாள். இந்த அம்மனை உருவாக் கியவர் பல நூற்றாண்டுக்கு முன்னர் சிவகெங்கைச் சீமையை ஆண்ட மறவர்குலத்து மன்னர் ஒருவர். காரைக்குடி நகரின் தென்பால் விளங்கும் பழைய செஞ்சைப் பகுதியில் இந்த அம்மன் சிலையை கண்டார்.

அதற்கு இங்கு ஓர் ஆலயம் எழுப்பினார். இறை என்ற ஒன்று பால்காரணமாக இறைவன்-இறைவி என்று இரண்டாயிற்று. இறைவன் ஒன்றாக இருந்து பிரமன் விஷ்ணு, சிவன் என்று மூன்று ஆயிற்று. அப்படியே இறைவியும் பிராமி, வைஷ்ணவி, சிவை என்று மூன்று ஆயிற்று. இம் மூன்றில் சிவை என்பதற்கு பழங்காலத்தில் தமிழகத்தில் வழங்கி வந்த பழந்திருப் பெயர் "கொற்றவை" என்பதாகும்.

அப்பெயரே பிற்காலத்தில் துர்க்கை என்றாயிற்று. இக் கொற்றவைத் திருவுருவுக்குக் காதில் "கொப்பு" என்னும் அணி சிறப்பாக இருத்தல் மரபு. அம்மரபுப்படி மறக்குலத்து மன்னர் கண்ட அம்மைக்கும் காதில் கொப்புடையாள் என்னும் திருப் பெயர் ஏற்பட்டது.

சிவகங்கை செம்மல் கண்ட ஆலயம், முகம்மதிய படை எடுப்பின்போது சின்னா பின்னம் ஆகிவிட்டது.

ஆயினும் கொப்புடையாள் திருவுருவை ஒரு மரப் பொந்தில் மறைத்து வைத்துச் சென்றார் மன்னர். ஆண்டுகள் பலவாயின. பின்னர் ஆங்கில அரசு ஆளுங் காலத்தில் அம்பலகாரப் பெருமக்கள் குலத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டி கொப்புடையாள் திருவுருவைக் கண்டெடுத்தார்.

சிவகங்கை மன்னன் கண்ட திருக்கோவில் மீண்டும் கட்டப் பெற்று ஒரு காட்டம்மன் கோவில் உருவாயிற்று.

அதில் கொப்புடையாளின் மூல உரு கல்லில் வடிக்கப்பெற்றது. மன்னன் உருவாக்கிய செம்பினால் ஆன மூர்த்தியே இன்று கொப்புடையாளாகக் காட்சி தருகிறாள். வைகாசி மாதம் முதல் செவ்வாய் அன்று தேர்விழா நடைபெறுகிறது. புத்தாண்டு நாளன்று வணிகர்கள் குதிரை வாகனத்தில் அம்மனை உலாவரச் செய்கிறார்கள். நவராத்திரிக் கொலுவும் சிறப்பாக நடைபெறுகிறது.

இந்நகரில் சிறந்ததொரு சிவன் கோவிலும், பெருமாள் கோவிலும், கிருஷ்ணன் கோவிலும் உள்ளன. எல்லாக் கோவில்களின் இறைவர்களும் கொப்புடையம்மனும் காந்தி சதுக்கத்தில் மகார்நோன்பு அன்று அம்பு போடுவது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

கிறித்தவ சமயமும் சிறு அளவு பரவியிருக்கிறது. தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த தேவாலயம் செக்காலை அருகே இருக்கிறது. கத்தோலிக்கர்களும் ஒரு சிறு தேவாலயம் அமைத்திருக்கின்றனர்.

பஸ் போக்குவரத்து, தொலைபேசி வசதிகள் இந் நகரில் மிகவும் பெருகியுள்ளன.

அரண்மனை போன்ற கட்டிடங்கள், ஆயிரம் சன்னல் வீடு, நகராண்மைக் கழகம் நடத்தும் ஊமை-செவிடர் பள்ளி, மெ. செ. மெ. மெ.. குடும்பத்தார் சிறப்பாக நடத்திவரும் தர்ம உயர் நிலைப்பள்ளி; பாரதியார் பாடல் பெற்ற ஹிந்து மதாபிமான சங்கம் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்க்கத் தமிழ் நாடெங்கும் தூண்டுகோலாக இருக்கும் கம்பன் கழகம் இவற்றையுடையது காரைக்குடி.

திங்கட்கிழமை தோறும் இங்கு ஒரு பெரிய சந்தை கூடுகிறது. தேவகோட்டை ரோடு இரயில் நிலையத்துக்கு அருகே ஒரு பெரிய தொழிற்பேட்டை இயங்குகிறது.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்

இவ்வொன்றியம் இம்மாவட்டத்தின் வடகோடியில் திருச்சி மாவட்ட எல்லையில் அமைந்தது.

பாலாறு, மணிமுத்தாறு என்னும் சிற்றாறுகள் பாய்ந்து திருப்பத்தூர், நெற்குப்பை, மகிபாலன்பட்டி முதலிய பல ஊர்களை வளப்படுத்துகின்றன. குறிஞ்சி நிலப் பகுதிகளாய் காஞ்சாத்து மலையின் அடிவாரத்தில் பூலாங்குறிச்சி, செவ்வூர், திருக்கோளக்குடி என்னும் ஊர்களும் சிதறிய மலையையொட்டி வேலங்குடியும் உள்ளன. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற புற நானூற்றுப் புகழ் பெற்ற பூங்குன்ற நாடும் அதன் தலைநகராகிய பூங்குன்றமும் இவ்வொன்றியத்தில் உள்ளன. சரளைக்கல் உடைப்பதற்கேற்ற பாறைகள் பிள்ளையார்பட்டியில் இருக்கின்றன. ஆத்திக் காட்டுக்

கும் திருக்களம்பூருக்கும் இடையிலும், சுண்டக்காடு வேலங்குடிப் பகுதியிலும் ஓரளவு காடுகள் உள்ளன.

புகழ் பெற்ற பல கோவில்கள் உள்ளன. ஒரு கல்லூரியும், பல மருத்துவ மனைகளும், சிறந்த பஸ் போக்கு வரத்து வசதியும் இந்த ஒன்றியத்தில் உண்டு. வேளாண்மையே தலையாய தொழில். தொழிற் சாலைகள் அமைக்கும் சிந்தனை இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது.

ஒன்றியத்தின் பரப்பளவு 105.5. சதுரமைல். மக்கள் தொகை 75,000. 39 சிற்றூர்களும் திருப்பத்தூரிலும் நெற்குப்பையிலும் பேரூராட்சியும் உள்ளன.

திருப்பத்தூர்: திருப்பத்தூர், வட்டத் தலைநகராகவும், திருப்பத்தூர் ஊராட்சி மன்ற ஒன்றியத்தின் தலைநகராகவும் உள்ளது. மக்கள் தொகை 17,000. மதுரையிலிருந்து 63 கி. மீ. தொலைவிலும் காரைக்குடி இரயில் சந்திப்பிலிருந்து 20 கி. மீ. தொலைவிலும் அமைந்தது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு திருப்பத்தூர் இருக்கிறது. அது நகராண்மைக் கழகம் உடையது. எனவே மாவட்டம் கூறாது திருப்பத்தூர் என்று பேசுவதும் எழுதுவதும் அந்நகரையே சுட்டும். இவ்வூரைக் குறிக்க, இராமநாதபுர மாவட்டத்துத் திருப்பத்தூர் என்ற பொருளில் திருப்பத்தூர் (Ramnad) என்று எழுதுவது மிக மிக இன்றியமையாதது. வட ஆர்க்காடு மாவட்டத்துத் திருப்பத்தூர் பாடல் பெற்ற பதி அன்று. பாண்டிப் பதினான்கு பதிகளைச் சொல்லவந்த பாடல் ஒன்றில் 'தென் திருப்புத்தூர்' என்று கூறப் பெற்றிருக்கிறது. திருப்புத்தூர் என்பதே சரியான பெயர் என்பர் அறிஞர். தஞ்சைமாவட்டத்தில் மன்னார்

குடிக்கும் திருத்தருப்பூண்டிக்கும் இடையே ஒரு திருப் பத்தூர் உளது.

தமிழ் நாடு சட்டசபையில் 'கனம் திருப்பத்தூர் உறுப்பினர்' என்று அவைத்தலைவர் சொன்னவுடன் இருவர் எழுந்து பேச முயன்றதால், வேறுபாட்டைத் தெரிவிக்க, இந்தத் தொகுதி திருக்கோட்டியூர்த் தொகுதி என்ற பெயரால் 1957 முதல் 1967 வரை வழங்கி வந்தது.

பாடல் பெற்ற சிவன் கோவிலில் உள்ள இறைவன் பெயர் திருத்தளிநாதர், இறைவி சிவகாமி அம்மை. இவ்விறைவன் பெயரால் ஏற்பட்ட திருத்தளிநாத பட்டி என்ற ஊர், வாணியங்காடு ஊராட்சி மன்ற எல்லையுள் உளது. திருப்பத்தூரில் சித்திரை மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமையில் வயிரவர்க்கு நடைபெறும் திருவிழாவும் வைகாசிவிசாக விழாவும் காணத்தக்கவை. கோவிலின் வடக்குச் சுற்றில் மேற்கு நோக்கி அமைந் துள்ள வயிரவர் சந்நிதி சிறப்பாக விளங்குகிறது.

மதுரை மொட்டைக் கோபுர முனீசுவரரும் திருப் பத்தூரிலிருப்பது போன்று யோக வயிரவரே. திருப் பத்தூரில் வயிரவருக்குச் சிறப்பாக வழிபாடு நடக் கிறது.

இத்தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்தர் பதினொரு பாடல்களுள்ள ஒரு பதிகமும், திருநாவுக் கரசர் பத்துத் திருத்தாண்டகச் செய்யுட்களுள்ள ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இக்கோவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தாரின் ஆளுகைக்கு உட் பட்டது.

இரத்தின சபை என்று குறிப்பிடப்படுவது திருவாலங்காடு எனப் பலர் கருதுகின்றனர். இது

தவ்று. இரத்தினசபை இத்தலமே என்பது அறிஞர் முடிவு. பாண்டிநாட்டுத் திருப்புத்தூரிச் சிற்சபையில் சிவபெருமான் கௌரி தாண்டவம் ஆடினுர் என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி. 'எழுவகைத் தாண்டவம்'* என்ற நூலில் எழுதி யுள்ளார். திருப்பத்தூர்த் தலபுராணம் (கௌரி தாண்ட வச் சருக்கம்) இக்கருத்தை வலியுறுத்துகிறது.

திருமுறை ஆசிரியர்களின் படைப்புக்களில் சங்கத் தைப் பற்றிய முதற்குறிப்பு, திருப்பத்தூர்த் தேவாரத் தில்தான் காணப்படுகிறது. திருத்தளிநாதர் கோவிலில் வால்மீகியின் உருவம் உளது.

திருப்பத்தூர்க் கல் வெட்டில் 'ஓங்கு கோவில் புராணம்' என்ற ஒரு புராணம் இத்தலத்தைப் பற்றி இருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது.

சுந்தரர் பெயரால் 'திருத்தொண்டர் தொகை யான் மடம்' என்ற ஒரு மடம் இக்கோவிலுக்குள்ளேயே இருந்ததாகவும் அறிகிறோம். கோவிலுக்கு அருகே சீதளி என்ற பெரிய தெப்பக் குளம் இருக்கிறது.

அரசியல் வரலாற்றிலும் இவ்வூருக்கு முக்கியத் துவம் உண்டு. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238) காலத்திய நிகழ்ச்சிகளைத் திருப்பத்தூர்க் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. 18-ஆம் நூற் றுண்டின் இறுதியில் சிவகங்கைச் சீமையில் உரிமைக் குரல் எழுப்பிய மாவீரனாகிய மருது பாண்டியனுக்கும் (பெரிய மருது) இவ்வூர்க்கும் பல தொடர்புகள் உண்டு. அவரால் உழவர்க்கெனக் கட்டப் பெற்ற பெரிய கேணி கள் இவ்வூரைச் சுற்றிலும் உள்ளன. இவற்றுக்குக்

---

* பதிப்பாசிரியர் K. அண்ணாமலை, மயிலாப்பூர்.

'காராளன் கேணி' என்று பெயர் (காராளன்—உழவன்.)

இவ்வூரில் மருதுபாண்டியன் கட்டிய கோட்டை அழிந்துவிட்டது. கோட்டைக்கு வெளியே உள்ள 'அகில்' என்னும் குட்டை குளங்களையும் அகில் மனைத்தெருவையும் இன்னும் காணலாம். மருது பாண்டியன் தூக்கிலிடப்பட்டதும் அம்மாவீரனின் உடல் புதைக்கப் பெற்றிருப்பதும் இவ்வூரிலேயே. இவர்சமாதி சுவீடிஷ் மிசன் மருத்துவ மனைக்குள் இருக்கிறது. இச்சமாதியை மக்கள் மறக்கச் செய்வதற்காக இதைச் சுற்றிய பரந்த இடத்தையும் தோப்பையும் சிவகங்கை அரசர் சுவீடிஷ் மருத்துவ மனைக்கு வழங்கினார் என்பர்.

வாணிகத்துறையில் திருப்பத்தூரின் பெருமை 1930-இல் காரைக்குடிக்கு இரயில் வசதி ஏற்பட்டபின் குன்றிவிட்டது. எனினும் செட்டிநாட்டு ஊர்கள் சூழ இருப்பதால் ஓரளவு வாணிகம் நடைபெறுகிறது. குன்றக்குடி, பிள்ளையார் பட்டி, திருக்கோட்டியூர், பிரான்மலை ஆகிய தலங்களும் இவ்வூரைச் சுற்றியுள்ளன. இங்கிருந்து பல திக்குகளில் நெடுஞ்சாலைகள் செல்லுகின்றன. மதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, பொன்னமராவதி, திண்டுக்கல் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் சாலைகள் குறிப்பிடத்தக்கன. சனிக்கிழமைகளில் சந்தை கூடுகிறது.

ஒரு மசூதியும், கத்தோலிக்கர் தேவாலயமும், தென் இந்தியத் திருச்சபையின் ஆரோக்கியமாதா ஆலயமும் இங்கு உள்ளன. பூமாரி அம்மன் பூச் சொரியல் விழா ஆண்டுதோறும் பெரிய அளவில் கலை நிகழ்ச்சிகளுடன் சித்திரைத் திங்களில் நடைபெறுகிறது.

இவ்வூரின் ஒரு பகுதியான தென்மாப்பட்டில், மலாசிய நாட்டுடன் வாணிபத் தொடர்புள்ள வேளாளர் பலர் சிறப்புடன் வாழ்கின்றனர். கல்வித்துறையில் அறம் செய்த நாகப்பா-மருதப்பா, மலாய் நாட்டில் புகழ்பெற்ற வள்ளல் ரெங்கசாமி பிள்ளை ஆகியோர் தென்மாப்பட்டினர்.

இங்கு 1911 முதல் தாலுகா அலுவலகம் இருந்து வருகிறது. இது தவிர சிவகங்கை ஜமீன் தாலுகா அலுவலகமும் இருந்தது. ஜமீன் ஒழிப்பின் பயனாக இந்த அலுவலகம் அரசாங்கத் தாலுகா அலுவலகத்துடன் இணைந்தது. இதன்பின்னர் 1962-இல் காரைக்குடியில் ஒரு துணைத்தாசில்தார் அலுவலகம்ஏற்பட்டது. இதனால் இங்குள்ள அலுவலகத்தின் எல்லை குறுகியுள்ளது.

'கண் ஆஸ்பத்திரி' என்று புகழ் பெற்றுள்ள சுவீடிஷ் மிஷன் மருத்துவமனையையும் விழி இழந்தோர் பள்ளியையும் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியையும் ஏற்கெனவே விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அரசினர் ஒரு மருத்துவமனை அமைத்துள்ளனர். மருத்துவக் கல்லூரி அமையவும் இந்நகரில் வாய்ப்பு இருக்கிறது. டயர் தொழிற்சாலை ஏற்படக்கூடும் என்றும் தெரிகிறது. இந்நகரிலுள்ள கல்லூரியை அரசினர் மேற்கொள்ள வேண்டும் என்பது பொது மக்களின் பேரவா.

*நெற்குப்பை: இந்தப் பேரூராட்சி நீர் வளமும் நில வளமும் உடைய மூன்று ரெவின்யூகிராமங்கள் சேர்ந்தது.

---

*இந் நூலாசிரியரின் ஊர். ஆனந்தவிகடனில் 3-8-1969-இல் எங்களூர் வரிசையில் விரிவான கட்டுரை வெளி வந்திருக்கிறது.

ஊர்ப் பெயர் பழமையானது. இளம் பூரணர் உரையில் "எட்குப்பை, நெற்குப்பை; எள்ளொரு விராய அரசி" என்ற தொடர் வருகிறது. திருச்சி, தஞ்சை, செங்கை, தெ. ஆ. மாவட்டங்களில் நெற்குப்பை என்னும் பெயரில் பத்து ஊர்கள் உள்ளன. குப்பை, மேனி என்பன விளைவு அல்லது கண்டு முதலைக் குறிப்பன.

நெற்குப்பைச் சிவன் கோவிலில் 1936-இல் தோண்டி எடுக்கப்பெற்ற திருவுருவங்கள் 10-ஆம் நூற்றூண்டுக்கு முற்பட்டன என்று புதுவை பிரெஞ்சு இன்ஸ்டிட்டியூட்டில் முடிவு செய்துள்ளனர். மணிமுத்தாற்றின் கரையில் இவ்வூர் அமைந்திருக்கிறது. அந்த ஆற்றால் இவ்வூர் பெரிய கண்மாய் நிரம்புகிறது. இவ்வூரிலிருந்த ஒரு துர்க்கையின் திருவுருவம் சென்னை கன்னிமரா மியூசியத்தில் கொலுவீற்றுவருகிறது. இவ்வூர் நாட்டார் சமூகத் தலைவர்க்கு பாண்டிய மன்னர்கள் வழங்கிய பெரிய அம்பலகாரர் என்ற பட்டம் நிலவி வருகிறது. நூறு ஆண்டுகளாக நடை பெற்று வரும் ராம. சா. மடத்தின் ஆதரவில் சாத்தப்பா உயர் நிலைப்பள்ளியும், பழநியப்பசெட்டியார் கொடையால் ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்பட்டு அரசினரால் நடத்தப்பட்டு வருகின்றன. பல துறைகளில் இவ்வூர் முன்னேறி வருகிறது. திருவிழாக்களும் தமிழ்ப் பற்றும் அரசியல் உணர்ச்சியும் மிகுந்த ஊர்.

கண்டவராயன்பட்டி: நகரத்தார் வாழும் ஊர்களில் ஒன்று. கிணற்றடி காளியம்மன் கோவில் விழா சிறப்பானது. இங்கிருந்து பையூர் வழியாக வேலங்குடிக் குடிக்கு ஒரு சாலை செல்லுகிறது.

கீழச்சிவற்பட்டி: விராமதி என்னும் சிற்றூரையும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அழகாபுரியையும்

தன்னகத்துக் கொண்டது. செட்டி நாட்டின் பெரிய ஊர்களில் ஒன்று. பாடுவார் முத்தப்பசெட்டியார் என்ற பெரும் புலவர் பிறந்த ஊர். இவ்வூர் மீனாட்சி சுந்தரர் கோவில் பலவகைச் சிறப்புக்களை உடையது. சிவம் பெருக்குவதாலேயே இவ்வூருக்குச் சிவற்பட்டி என்னும் பெயர் உண்டாயிற்று. திருமதுரை கீழச்சிவற்பட்டி என்றும் கூறுவது உண்டு. இவ்வூரைப்பற்றி ஒன்பது பிரபந்தங்கள் எழுதப்பட்டுள்ளன.

கீரணிப்பட்டி: குருவிக் கொண்டான் பட்டியை அடுத்த சிற்றூர். சித்திரை மாதத்தில் சீராக நடக்கும் திருவிழாவால் புகழ் பெற்றது.

மகிபாலன்பட்டி: பூங்குன்ற நாட்டின் தலைநகர். மணி முத்தாறு சூழ்ந்திருப்பதால் நீர் வளம் மிக்கது. பண்டித மணி கதிரேசச் செட்டியாரால் புகழும் மலாய் நாட்டில் பொருளீட்டியவர்களால் செல்வமும் பெற்றது.

இளையாற்றக்குடி : வடக்கு இளையாற்றக்குடி, தெற்கு இளையாற்றக்குடி என்ற இரு ஊராட்சி மன்றங்கள் கொண்டது. முன்னாள் ஜமீன்.

தமிழ் நாட்டின் புகழ்பெற்ற கோவில் உடையது. நகரத்தார்க்குரிய ஒன்பது பிரிவுகளில் முதன்மை யானதும் மக்கள் தொகையில் கூடுதலானதும் ஆகிய இளையாற்றக்குடியாருடைய குலதெய்வம் கோவில் கொண்டுள்ள தலம். திருவெண்காடராகிய பட்டினத் தடிகள் இப்பிரிவினர். அவர் பெயரால் இளையாற்றக்குடி வழியினரில் ஓர் உட் பிரிவு உண்டு.

செல்வச் செழிப்பில் நகரத்தார்கள் திளைத்தபோது இங்கே கற்கோவில் பலவற்றை அழகுற அமைத்தும் குளம் பல வெட்டியும் பிற நிலையங்களை நிறுவியும் கோடிக் கணக்கில் செலவிட்டுள்ளனர். காவிரிப்பூம்

பட்டினத்திலிருந்து நகரத்தார்கள் வெளியேறியபோது பாண்டிய மன்னர் அவர்களுக்கு வழங்கிய முதல் ஊர் இளையாற்றக்குடி என்பர். அதனால் நகரத்தார் அனைவருக்குமே இளையாற்றக்குடியார் என்ற பொதுப்பெயர் வழங்கி வருகிறது.

இத்தலத்து இறைவன் கைலாசநாதர், இறைவி நித்தியகல்யாணி. சிறப்பான திருவிழா முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா.

இக்கோவிலில் காமாட்சி அம்மன் இறைவனைக் கட்டித் தழுவும் காட்சியைக் கல்விக்கிரகத்தில் காணலாம்.

ஆதிகேசவப்பெருமாள் கோவிலில் தசாவதாரம் பத்துத் தூண்களில் செதுக்கப்பெற்றிருக்கிறது.

இளையாற்றக்குடிப் பிரிவைச் சேர்ந்த காரைக்குடி அ. மு. க. குடும்பத்தார் தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் மட்டையந்திடலில் கைலாசநாதர் நித்திய கல்யாணிகோவில் கட்டியுள்ளனர்.

இளையாற்றக்குடியில் காஞ்சிகாமகோடி மடத்தைச் சேர்ந்த அதிஷ்டானம் ஒன்று இருக்கிறது. 19-ஆம் நூற்றாண்டில், 39 ஆண்டுகள் பீடத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ மஹாதேவேந்திர சரசுவதி சுவாமிகள் இங்கு சமாதி அடைந்தார்கள். நகரத்தார்கள் கருங்கல்லில் சிவாலயம் கட்டியிருக்கின்றனர். இந்த அதிஷ்டானம் இளையாற்றக் குடிநகர்க் கோவிலுடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.

இப்போது காஞ்சிகாமகோடி பீடத்தில் பட்டத்தி லிருக்கும் பெரியவர்கள் இளையாற்றக்குடி தலத்தில் ஈடுபாடு உடையவர்கள். 1961-62-ஆம் ஆண்டுகளில் இங்கு தங்கினார்கள். அப்போது ஆஸ்திகர்கள் அனைவரும்

வியச்கும்வண்ணம் வியாஸ வித்வத் ஸதஸ் என்ற பல்கலை மாநாட்டை வெகு சிறப்பாக நடத்தி அருள் பாலித்தார்கள்.

சிறுகூடல்பட்டி: சிறுகுடல்பட்டி என்னும் ஊர் வாலிகண்டபுரம் அருகே உள்ளது. இவ்வூர் சிறுகூடல் பட்டி. இது கவியரசு கண்ணதாசன் பிறந்த ஊர் இங்குள்ள தங்கமலை அரசி என்ற அம்மன் கோவிலைப் பற்றி, கவிஞர் பின்வருமாறு பாடியிருக்கிறார்.

ஆடும் மேகம்நதி ஆல்வளரும் காடுகளை
ஆசையுடன் நோக்குகின்றேன்
ஆயதமி ழோசைவரப் பாடுவதில் ஆசைவர
ஆனவரை பாடுகின்றேன்
கோடுகளில் ஏறியதில் குலவுபனிச் சாரலுடன்
கொஞ்சுவிளை யாடுகின்றேன்
கூவுகுயில் கிள்ளைமயில் குக்குவெனும் வெண்புறவின்
கூட்டத்தில் ஓடுகின்றேன்
கேடுசெயும் மானிடரைப் போலஅவை யில்லாமல்
கேண்மைகொள வைத்த மயிலே!
கெண்டைகரை யேறிவரும் சிறுகூடற் பட்டிவளர்
தங்கமலை யரசிஉமை யே!
பத்துவய தானவொரு பாலகன்உன் சந்நிதியில்
பாடியதும் நினைவிலிலை யோ!
பாதியிர வானதெனத் தாய்மனது வாடுகையில்
பக்திசெய வந்ததிலை யோ?
முத்துஎன இட்டபெயர் முத்தாக வேண்டுமென
முறையீடு செய்யவிலை யோ?
முற்றாகக் கேட்டபினம் நற்றாய்நீ தந்ததமிழ்
முறையாக வந்ததிலை யோ?

சக்திஎன வந்தவள்வி சாலாட்சி தேவியோரு
சாத்தப்பன் பெற்றமக னை
தமிழ்பாட வைத்ததொரு சிறுகூடற் பட்டிவ்வளர்
தங்கமலை யரசிஉமை யே!

திருக்கோளக்குடி : செவ்வூர்க்கும் மிதிலைப்பட்டிக்கும் இடையேயுள்ளது இவ்வூர். மூவுலகையும் பிரதிபலிக்கும் மலைக்கோயில் இங்கு இருக்கிறது. மலைமீது குடைவரை விநாயகர் என்று எழுதப் பெற்ற ஒரு கோவிலும் அதனருகே தான்தோன்றி ஈசுவரர்கோவிலும் அதன் பின்புறத்தில் மலைச்சரிவில் குகை போன்ற அறையில் குடையப் பெற்ற விநாயகரும் உள்ளன. இதன்மீது படிகளேறிச் சென்று மேல் நிலையிலுள்ள கோளஈசுவரர் திருவுருவம், மகாமண்டபம், வாகனங்கள் ஆகியவற்றைக் காணலாம். ஆனிமாதக் கேட்டை நாளில் இவ் விறைவர்க்குத் திருவிழா நிகழும்.

இதைவிட உயரமான நிலையில் ஒரு சுப்பிரமணியர் கோயில் உண்டு. இதை அடைய கோளஈசுவரர் கோயிலிலிருந்து இறங்கிச் சென்று அம்மன்கோயிலை வலம்வந்து கதவைத் திறக்கச் செய்து பாறை மீதேறிச் செல்ல வேண்டும். இங்கு ஆறுமுகப்பெருமான் மயில்வாகனத்தில், நின்றநிலையில் காணப்படுகிறார்.

இக்கோயில் முன்பு சமணர் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் மயிலை சீனிவேங்கடசாமி கருதுகிறார். பார்சவநாத சுவாமி என்ற சமணத் திருமேனி, வீற்றிருக்கும் கோலத்தில் இக்கோயிலில் உளது. வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இக்கோயில் பிரான்மலை வகையரு ஐந்துகோவில் தேவஸ்தானத்தைச் சேர்ந்தது; குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்துக்குட்பட்டது.

14-ஆம் நூற்றாண்டில் மதுரையில் முஸ்லிம் ஆட்சி நடைபெற்றது பற்றிய கடைசிச் செய்திகள் இங்குள்ள கல்வெட்டிலிருந்து தெரிகின்றன.

1820-வரை நகரத்தார் இவ்வூரில் வாழ்ந்தனர். கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, மிதிலைப்பட்டி, செவ்வூர், குழிபிறை முதலிய ஊர்களுக்குக் குடியேறினர்.

பூலாங்குறிச்சி: புதுக்கோட்டைத் தனியரசாக இருந்த பகுதிக்கும் இம்மாவட்டத்துக்கும் எல்லையாக அமைந்த காஞ்சாத்துமலையின் அடிவாரம், நாயக்க மன்னர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, சேதுபதி இவ்வூர் மறவர்களைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி குதுப்கான் படைகளை விரட்டியதாக வரலாறு கூறுகிறது.

நகரத்தார்கள் பொருளீட்டியும் அரசியல் செல்வாக்குப் பெற்றும் இவ்வூர்க்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர்.

பொறை தட்டவும் உரம் நீக்க உடல்சுளுக்கு எடுக்கவும் சுற்று வட்டார மக்கள் இங்கு வருகின்றனர்.

ஊர்ப்பெயர் பூலாஞ்செடியால் ஏற்பட்டது. அருகே பூலாம்பட்டி என்னும் ஊர் உளது. இவ்வூர் குறிச்சி திணையில் அமைந்ததால் பூலாங்குறிச்சி ஆயிற்று.

பிள்ளையார்பட்டி : இங்குள்ள கற்பக விநாயகர் கோவில் தமிழ் நாட்டிலுள்ள மிக முக்கியமான கோவில் களுள் ஒன்று. இத்தலத்தைப் பற்றி, திரு. சா. கணேசன் ஒரு நூல் எழுதியுள்ளார்.

குகைக் கோவிலுள், விநாயகர் உருவம் குடையப் பட்டிருக்கிறது. இந்தக் குகைக்கோயில் 5-ஆம் நூற்றாண்

டில் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டது. எனவே; இது பல்லவர் குகைக் கோவில்களுக்கு முற்பட்டது.

இவ்வூரின் பழைய பெயர் எருக்காட்டூர். இவ்வூர்த் தலைவன் பெருபரணன். அவன் பாண்டியருக்கு உட்பட்ட சிற்றரசன். அவன் காலத்தியது இக் குகைக் கோவில்.

எருக்காட்டூர், புறநாற்றூற்றில் 397-ஆம் பாடலை யாத்த தாயன் கண்ணனார் உட்படச் சங்ககாலப் புலவர் பலர் தோன்றிய ஊர். தமிழ்-பிராமி கல்வெட்டு ஒன்று இக்குகையில் இருக்கிறது. கி. பி. முதல் நூற்றாண்டில் தொடங்கி, ஆறும் நூ. வரை இவ்வெழுத்து பரவியது என்றும் இதன் இறுதிநிலை 4-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பிள்ளையார் பட்டியில் ஏற்பட்டது என்றும் ஆராய்ச்சி அறிஞர் ஐராவதம் மகாதேவன், ஐ. ஏ. எஸ். கருதுகிறார். உலகத் தமிழ் மாநாடுகள் மூன்றிலும் பிள்ளையார் பட்டிக் கல்வெட்டைப் பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது.

கற்பகவிநாயகர் தலையில் சடை (சடாமுனி) இருக்கிறது, கிரீடம் இல்லை. யோகநிலை. வயிறு (தொந்தி) குறைவு, வலது கையில் சிவலிங்கத்துடன் வலம்புரி விநாயகராகக் காட்சி தருகிறது. இடது தண்டி மூறிந்திருக்கிறது. இரு கரங்களே உள்ளன. வயிற்றில் மூன்று பட்டைகள் உள்ளன. வெள்ளை ஆடை மட்டுமே உடுத்துவது மரபு.

பிள்ளையாருக்கு உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுவது தமிழ்நாட்டில் இத்தலத்தில்தான் என்று உறுதியாகச் சொல்லலாம். மாதச் சதுர்த்திகளும் ஆவணியில் வளர்பிறைச் சதுர்த்தியுடன் முடியும் 10 நாள் பெருவிழாவும் நிகழ்கின்றன. சகஸ்ரநாம

அர்ச்சனைக்காக நாள்தோறும் 108 மோதகங்கள் (கொழுக்கட்டைகள்) படைக்கப்படுகின்றன. சதுர்த்தியன்று பெரிய மோதகம் (18 படி அரிசியில் ஒரே மோதமாகச் செய்து) படைக்கிறார்கள். அதைச் செய்ய மூன்று நாள் ஆகும். பத்துப்பேர் சேர்ந்து தூக்குவார்கள்; மறுநாள் அதைப் பிட்டு, அடியார்களுக்கு வழங்குவார்கள்.

அபிஷேகத் தீர்த்தம் காண்டா மிருகக் கொம்பின் வாயிலாக விழுகிறது.

நகரத்தார்கள் இக்கோவிலில் திருப்பணி செய்தும் பேணியும் வருகின்றனர். திருவீசருக்கும் வாடாமலர் மங்கைக்கும் சிவகாமி அம்மனுக்கும் கி. பி. 1900-இல் தொடங்கி இருபது ஆண்டுகள் தொடர்ந்து திருப்பணி வேலையில் ஈடுபட்டு, பெரிய கோவில் கட்டியுள்ளனர். அலங்கார மண்டபம், சுரங்கக் கிணறுகள்—காணத் தக்கன. திரயோதசியன்று சிவபெருமானுக்குப் பிரதோஷ விழாவும் மார்கழித் திருவாதிரையன்று வாடாமலர் மங்கைக்கு இறைவன் ஓலை முறி எழுதி சொத்துக்களை வழங்கும் 'ஊடல் விழாவும்' நடைபெறுகின்றன.

முஸ்லிம் படையெடுப்பின்போது புதைத்து வைக்கப்பெற்றிருந்த நடராசர் - சிவகாமி திருவுருங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. நடராசர் ஓர் உட்கோவிலில் வலது கையிலுள்ள உடுக்கை, உடுக்கையின் ஓசை தரக் கூடியது. அதற்கேற்ற உலோகத்தில் உடுக்கைப் பகுதி அமைந்தது. இந்த நடராசர் ஓர் அரிய படைப்பு.

இக்கோவிலில் கலைச் சிறப்பும் வேலைப்பாடும் உடைய பல வாகனங்கள் இருக்கின்றன.

கொங்கு நாச்சியம்மனுக்கு, காட்டுக்குள் கோவில் இருக்கிறது. வைகாசி 4-ஆவது செவ்வாயில் திருவிழா நடைபெறுகிறது.

பிள்ளையார்பட்டிப் பாறைக்கல் உறுதியானது. கல் வேலைக்கு ஏற்றது. மலையாள நாட்டுத் துறவிகள் இவ்வூரில் நடத்திவரும் நாராயண ஆசிரமம், வாதம் முதலிய நோய்களுக்குத் தைலம் லேகியம் வழங்கித் தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றிருக்கிறது.

வேலங்குடி : நகரத்தார் வரலாறு பற்றிய பழமை யான கல்வெட்டு உள்ள ஊர். காட்டுவளமும் மலை வளமும் உடையது, மலையின் உயரம் 54 மீட்டர். இவ்வூர் வழியே மதுரை—புதுக்கோட்டைச் சாலையை ராணி மங்கம்மாள் அமைத்தாள். அது ஆங்கிலேயர் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு, அண்மையில் புதுப் பிக்கப் பெற்றிருக்கிறது.

மிதிலைப்பட்டி : திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதியும் இம்மாவட்டத்தில் ஒரு பகுதியுமாக உள்ளது. கவிராயர் களால் புகழ்பெற்றது. விவரம் செட்டிநாடும் தமிழும் என்ற நூலிற் காண்க.

செவ்வூர் : மிதிலைப் பட்டிபோல இவ்வூரும் முன்னு ளில் கவிராயர்களாலும் இப்போது நகரத்தாராலும் புகழ்பெற்றது.

துவார் : சிவன்கோவில் புகழ் பெற்றது. இங்கு வழிபடுவோர், தம் மக்களுக்கு வள்ளியப்பன் என்ப் பெயரிடுவர்.

பரியாமருந்துபட்டி : சிவகங்கைச் சமஸ்தானத்தைச் சேர்ந்த மருந்தீசர் கோவில் உளது. மருதப்பர் என்ற வழக்கும் உண்டு. இது ஆற்றல்மிக்க தெய்வம். ஆனி மாதத்தில் தேர் விழா நிகழ்கிறது.

ஆ. தெற்கூர் : ஆத்திக்காட்டுக்கு வடக்கேயும் தெற்கேயும் உருவான ஊர்கள் வடக்கூர் தெற்கூர் என வழங்குகின்றன. இவ்வூரினரான தொழிலதிபர் கருமுத்து தியாகராசச் செட்டியார், தம் மனைவி பெயரால் விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி தொடங்கியுள்ளார். இதன் க்வினுறு கட்டிடங்களை, 1959-இல் ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார். விசாலாட்சி—தியாகராசர் மகளிர் உயர்நிலைப்பள்ளி 1962 முதல் நடைபெற்று வருகிறது. மின்சாரக் கிளை நிலையம் ஒன்று இவ்வூரில் இருக்கிறது.

அரசியல் கிளர்ச்சிகளாலும், 1971-இல் நடைபெற்ற பெரிய கொள்ளையாலும் இவ்வூரைப் பற்றிச் சட்ட மன்றத்தில் பலமுறை விவாதம் நடைபெற்றிருக்கிறது.

வஞ்சினிப்பட்டி : பழந்தமிழர்கள் வஞ்சி, தும்பை முதலிய பூக்களை அணிந்தனர். தும்பைப்பட்டி, மேலூர் அருகே உளது.

திருக்கோட்டியூர் :

நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் திருப்பல்லாண்டுக்கு அடுத்து முதற் பாசுரமான "வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்" என்ற பாடல் இத்தலத்துப் பெருமானைப்போற்றும். இந்த வைணவத்தலம் திருப்பதூர்க்குத் தென்மேற்கே 8 கி. மீ. தொலைவில் சிவகங்கைச் சாலையில் உளது. மக்கள் தொகை 2,500.

ஊர்ப்பெயருக்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. (1) கோவில் உள்ள ஊர் 'கோவிலூர்' என வழங்கும் வழக்குப் போன்று கோட்டம் (கோவில்) பெற்ற ஊர் கோட்டியூர் ஆயிற்று. (3) திருகு, திருக்கு என்றும் சொற்கள் மாறுபாடு என்னும் பொருளை உடையன. செய்த பாவம், செய்கின்ற பாவம் யாவும் இறையருளால் நீங்கும். எனவே இறைவன் 'திருக்கு

ஒட்டி' ஆகிறார். திருக்கு ஒட்டி உள்ள ஊர் திருக் கோட்டியூர். இங்குள்ள மாதவன் கோவில் அமைப்பா லும் வரலாற்றாலும் மங்கள சாசனம் பெற்றமையாலும் இலக்கியங்களாலும் இராமானுஜர் தொடர்பாலும் சிறப்புடையது.

அமைப்பு: கருவறை மீதுள்ள அஷ்டாங்க விமானம் தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்றது. இதன் நிழலும் ஒருபோதும் தரையில் விழுவதில்லை. மூலத்தானத்தி லுள்ள திருமால் உருவத்தை வழிபட, சிவபெருமான் சந்நிதி வாயிலாகவே செல்லவேண்டும்.

வரலாறு: கிருஷ்ண பகவான் இத்தலத்தில் பிறந் தார் என்பர் பெரியாழ்வார்.

ஸ்ரீ பெரும்பூதூரில் பிறந்து இன்றளவும் அறிஞர் கள் மெச்சும் தத்துவஞானியான இராமானுஜர் வாழ்க்கையுடன் இணைந்து திருக்கோட்டியூரும் பாராட்டப்பெற்று விளங்குகிறது. இராமானுஜர் திருவ ரங்கத்தில் தங்கி, நூல்கள் எழுதிக் கொண்டிருந்த போது திருக்கோட்டியூர் நம்பியின் பெரும்புலமையைக் கேள்விப்பட்டு இங்கு வந்தார்.

நம்பி, ஆளவந்தார் என்ற வைணவ ஆசிரியரிடம் கல்வி பயின்றனர். வைணவமந்திரம் என்று சிறப்பாகக் குறிப்பிடப்படும் திருமந்திரத்தின் சீரிய பொருளை அவர், தம் ஆசிரியப் பெருந்தகையிடமிருந்து தெரிந்து கொண் டிருந்தார். அதை உணர்ந்து கொள்ள விரும்பி இராமானுஜர் 18 முறை திருக்கோட்டியூருக்கு வந்து முயன்று இறுதியில் வெற்றி பெற்றார். வேறுயாருக்கும் இதைத் தெரிவிக்கக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டு நம்பி, இந்த மந்திரத்தின் உட்பொருளை இராமானுஜர்க்குக் காதோடு காதாகச் சொன்னார்.

வைணவ மந்திரத்தை அறிந்து தாம் மாத்திரம் பேரின்பம் அடைவதைவிட, மற்றவர்களுக்கும் மோட்ச மார்க்கத்தைக் காட்ட விரும்பினார். குருவின் சாபத்தால் தாம் நரகவேதனை அனுபவிக்கவும் இராமாநுஜர் உறுதி கொண்டார். எனவே மூடுமந்திரமாய் இருந்த வைணவத் திருமந்திரப் பொருளை, திருக்கோட்டியூர் மதில்மேல் ஏறி, எல்லோருக்கும் இராமாநுஜர் உபதேசித்தார். இவ்வாறு அவர் அருள் வழங்கியமையால் இத்தலம் 'திவ்ய தேசம்' ஆகக்கருதப் பெறுகிறது. அவர் உபதேசித்த இடத்தில் இராமாநுஜரின் திருவுருவத்தைக் காணலாம்.

நின்றும் இருந்தும் கிடந்தும் கூத்தாடியும் நடந்தும் சேவை சாதிக்கும் எம்பெருமான்களின் மூர்த்திகளை ஒருங்கே காணத்தக்க தலம் திருக்கோட்டியூர். அடித்தளத்தில் பள்ளிகொண்ட பெருமாள். (கிடந்த கோலம்) இரண்டாவது தளத்தில் சௌமிய நாராயணப் பெருமாள் (நின்ற திருக்கோலம்). மூன்றாவது தலத்தில் வைகுண்டநாதன் (இருந்த திருக்கோலம்).

மங்கள சாசனம்: திருமால் உறையும் பதிகளுள் 'கோட்டியூர் அரங்கம் மெய்யம்' என்று இத்தலத்தை நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலில் வைத்துச் சிறப்பிக்கிறது. பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஐவரும் பாடிய 39 பாசுரங்கள் இத்தலத்துக்கு உண்டு. கோட்டியூர்க் கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகிய சிற்றிலக்கியங்களும் இத்தலத்தைச் சிறப்பிக்கின்றன.

சங்ககாலப் புலவரான நல்லந்தையார் இவ்வூரினர். நற்றிணை இருபத்தோராம் பாடல் இவர் பாடியது.

பூர்வாசிகள் சோழியர் என்ற வைணவ அந்தண இனத்தார்இங்கு வாழ்கின்றனர். திருக்கோட்டியூர் நம்பி இவ்வினத்தவரே. அரசர்கள் அந்தணர்களுக்கு வழங்கிய பிரமாணப்பட்டி என்ற சிற்றூர் இவ்வூரருகே உள்ளது.

நரசிம்ம அவதாரம் உருவானது இத்தலத்தில்தான் என்று கருதப்படுகிறது.

பிரம்மனும் சிவனும் விஷ்ணுவும் இங்கே கோஷ்டியாகக் கூடி இரணியனின் கொடுமைகளை அடக்க முடிவு செய்ததாகக் கூறப்படுகிறது. வைகுண்ட வாசலாகிய கோவிலின் வடக்குக் கோபுரவாயிலில் இருமருங்கும் இரணியனோடு நரசிம்மமூர்த்தி போர்செய்யும் உருவம் ஒன்றும், இரணியனை மாய்க்கும் வடிவம் ஒன்றும் பெரிய உருவில் அழகாகச் சித்திரிக்கப் பெற்றுள.

சமயவரலாற்றில் கோட்டியூர்: இராமானுஜர் எல்லோரும் புரிந்து அனுபவிக்கக்கூடிய பக்தி மார்க்கத்தைப்போதித்தார். ஆழ்வார்கள் தமிழில் எழுதிய பாடல்களை அவர் வேத மந்திரத்திற்குச் சமமாகப் போற்றினார். இதனால் ஓரளவே கல்வியறிவுள்ள மக்களும் சமயக்கோட்பாடுகளை உணர வழி பிறந்தது. இந்தச் சீரிய கொள்கையின் அடிப்படையில் இராமானுஜர் நாராயண மந்திரம் என்னும் வைணவ மந்திரத்தை அனைவர்க்கும் தெரிவித்தார். எனவே வைணவ சமயத்தின் வளர்ச்சியில் திருக்கோட்டியூருக்குப் பெரும் பங்கு உண்டு.

வைணவம் வடஇந்தியாவெங்கும் பரவுவதற்கு இராமானுஜரே காரணமாவார். இவரைப்பின்பற்றி இவருடைய வைணவ சம்பிரதாயத்தையே ராமானந்தர்-கபீர் ஆகியோர் பரப்பினார்கள்.

இந்தக்கோவிலில் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. ராஜராஜ சோழன் கல்வெட்டு ஒன்று உளது, திருமெய்யம் கோவிலுக்கும் இக்கோவிலுக்கும் இருந்த வழக்கை ஹோய்சாள மன்னர் வீரசோமேசுவரன் தீர்த்து வைத்ததாகச் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இவற்றிலிருந்து இக்கோயில் ராஜராஜன் காலத்திற்கு முன்னரே புகழ் பெற்றிருந்தது தெரிகிறது. திருக்கோட்டியூர் மகாத்மியம் இக்கோவிலைப்பற்றி பல விவரங்களைத் தெரிவிக்கிறது.

சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம்

திருப்பத்தூர் வட்டத்து வளமான ஒன்றியம் இது. 1960-இல் தோன்றிய இந்த ஒன்றியம் 148 சதுரமைல் பரப்பு உடையது. மக்கள் தொகை 73, 155 (1961).

வடக்கே மருங்காபுரி (திருச்சி மாவட்டம்), மேற்கே கொட்டாம்பட்டி (மதுரை), தெற்கே சிவகங்கை, கிழக்கே திருப்பத்தூர், வடகிழக்கே பொன்னமராவதி (திருச்சி) ஒன்றியங்கள் சூழ இது அமைந்திருக்கின்றது. ஒன்றியத்துக்குள் பிரான்மலை உள்ளது.

ஒன்றியத்தின் அலுவலகங்கள் சிங்கம்புணரி சஞ்சீவி மலையில் பாலாற்றின் கரையில் கட்டப்பெற்றுள.

சிங்கம்புணரி பேரூராட்சி மன்றமும் 36 ஊராட்சி மன்றங்களும் அடங்கிய இவ்வொன்றியம் வாராப்பூர் ஜமீன் பிர்க்கா, சதுர்வேத மங்கலம் ஜமீன்பிர்க்கா; மாத்தூர் ஜமீன்பிர்க்கா, திருக்கோஷ்டியூர் ஜமீன் பிர்க்கா ஆகியவற்றின் ஊர்களை உடையது.

பறம்புமலை (பிரான்மலை)யைச் சுற்றி எல்லாத் திக்குகளிலும் இவ்வொன்றியத்து ஊர்கள் உள்ளன. இவ்

வொன்றியம் நான்கு பகுதிகளாக உள்ளது. அவை யாவன:

(1) பிரான்மலைக்கு வடக்கேயுள்ள பகுதி.

(2) பிரான்மலைக்கும் திருப்பத்தூர்—நத்தம் சாலைகளுக்கும் இடைப்பட்ட பகுதி.

(3) திருப்பத்தூர்—நத்தம், திருப்பத்தூர்—மதுரை இவ்விரு சாலைகளுக்கு இடைப்பட்ட பகுதி.

(4) திருப்பத்தூர்—மதுரைச் சாலைக்குத் தெற்கே யுள்ள பகுதி.

மதுரைச்சாலையைக் கடந்து ஏரியூர்க் கண்மாயை நிரப்பும் உப்பாறு எனப்படும் மணிமுத்தாறும், சிங்கம் புணரி—முறையூர் வழியாகச்செல்லும் பாலாறும் இவ் வொன்றியத்தின் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. ஏரியூர்ப்பகுதிக்குப் பெரியாற்றுநீர் பாய்கிறது. 15 கி. மீ. தொலைவுக்கு மாணிக்கம் கால்வாய் வெட்டப்பட்டிருக் கிறது.

இயற்கை வளமும் தலச்சிறப்புமுள்ள பிரான்மலை யும் வணிகத்தில் புகழும் அரசியல் முக்கியத்துவமும் உடைய சிங்கம்புணரியும் இவ்வொன்றியத்தில் முக்கிய மானவை.

சிங்கம்புணரி: கடலை, பருத்தி, தென்னை வேளாண்மை யால் சிறக்கும் நகர் இது. மதுரை மாவட்டத்தின் எல்லை இவ்வூர்க்கு மேற்கே ஒரு கி. மீ. தொலைவில் திருப்பத்தூர்—நத்தம் சாலையில் உளது.

இவ்வூர் இங்குள்ள இறைவியாகிய பிடாரிபெயரால் அமைந்தது. ஒரு சிங்கம் இவ்வூரில் காணப்பட்டது; அவ்விடம் 'கண்டகுளம்' என்ற பகுதியாகும். இதனால் ஏற்பட்ட சிங்கம் பிடாரி என்ற காரணப்பெயர், சிங்கம்

புணரி என்று தவறுதலாய் வழங்கப் பெற்றுச் சிங்கமும் நரியும் புணர்ந்ததாகக் கதையும் புனையப்பெற்றது.

இவ்வூர்ப்பெயர் சிங்கம்பிடவூர் என இருத்தல் வேண்டும் என்பது சிலர் கருத்து. சாத்தனுர்க்குக் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத் தில் காணப்படுகிறது. இத்தகைய கோயில்கள் உள்ள ஊர்களுள் பிடவூர் என்பது ஒன்ருகும். பிடவூரின் மரூஉ பிடாரி. சென்னை—ஆவடியருகே கோயில்பிடாரி என்னும் ஊர் இருக்கிறது. தென் ஆற்காடுமாவட்டத்து வீராணம் ஏரிக்கரையில் புடையூர் என வழங்கும் பிடவூர் உளது. தஞ்சை மாவட்டம் திருக்கடவூர் அருகே ஒரு பிடவூர் இன்றும் இருந்து வருகிறது. இராமநாதபுர மாவட்டத்தில் திருவாடானைக்கு உட்கிடையாக பிடார னேந்தல் உளது.

இவ்வூர் ஐயனுர் கோயில் புகழ் பெற்றது. இறைவன்—சேவுகப் பெருமாள், இதனுல் இப்பகுதியில் சேவுகன், சேவுகப்பெருமாள். சேவுகமூர்த்தி, சேவுகரத் தினம் என்ற பெயர்கள் இடப்படுகின்றன. இறைவி—பிடாரி. கோயில் சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. வைகாசியில் 10 நாள் திருவிழா நடை பெறுகிறது. இக்கோயிலுக்கு, நேர்த்திக் கடனுக விடப் பட்டுள்ள மாடுகளின் எண்ணிக்கை 500 இருக்கும். இவை கோவில் நிலங்களை உழுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. 30 மைல் சுற்று வட்டத்திலுள்ள மக்கள் இக்கோயிலில் பாக்கு வைத்து, கோயில் மாடுகளைத் தம் ஊர் மஞ்சிவிரட்டுக்கு அழைக்கின்றனர். இவ்விழாக் களில் மாடுபிடிப்பவர்கள் இவ்வூர்க் கோயில் மாடுகளைப் பிடிப்பதில்லை. அவற்றின் மீது கச்சையாகக் கட்டப்படும் வேட்டியை அவிழ்ப்பதுமில்லை. கோயில் மாடு இறந் தால் அதை மேள தாளத்துடன் புதைப்பது வழக்கம்.

இவ்வூர்க்குரிய சிவன்கோயில் உள்ள இடம் சிவ புரிப்பட்டி. திருப்பத்தூர்ச்சாலையில் சிங்கம்புணரித் தென்னை நாற்றுப் பண்ணைக்கு அருகே மங்கள கணபதி யின் திருவுருவம் சாலை ஓரமாக உளது. ஒரு கை பின்னப்பட்டபோதிலும், இவ்விநாயகரின் திருமேனி, பெரிய அளவினதாயும் காண்பாரை ஈர்க்கத் தக்கதா யும் உள்ளது. இவ்விடத்தில் ஒரு மண்டபம் இருந்த தற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. அதை யடுத்துப் பாலாறும், அவ்வாற்றின் வடகரையில் சிவன் கோயிலும், அதைச் சார்ந்த சிவபுரிப்பட்டியும் அமைந் திருக்கின்றன. இறைவன்—தான் தோன்றி ஈசுவரர். இறைவி—அறம் வளர்த்த நாயகி. சுற்றுமதிலுக்கு வெளியே இறைவிக்குத் தனிக் கோயில் கட்டப் பெற் றிருக்கிறது.

இக்கோயில் சிவகங்கை ஜமீனுக்கு உட்பட்டிருந்தது. ஜமீன் ஒழிப்புக்குப்பின் கோயிலின் வருவாய் குறைந்து கந்தர்சஷ்டித் திருவிழா நின்றுவிட்டது. கோயிலுள் வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர்க்கு ஓர் உட்கோயில் இருக்கிறது. இதுதவிர தனியே சுப்பிரமணியர் திருவுருவம் மட்டும் உள்ளது. இவ்வுருவம் கலையழகுடன் கூடியது. நந்தியம் பெருமான் உருவம் மிகப் பெரிய அளவினது. சித்திவிநாயகர் ஓர் ஆள் உயரம் அளவினது. பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர், மதுரை முக்குறுணி அரிசி விநாயகர் ஆகியவற்றோடு ஒப்பிடத்தக்கது. தோற்றப் பொலிவும் நுண்ணிய வேலைப்பாடுமுள்ள நவக்கிரகங்கள் இக்கோயிலிலுள்ளன. நான்கு காலப்பூசை உண்டு. மின்சார விளக்கு 1966-இல் போடப்பட்டிருக்கிறது.

இக்கோயில் சோழர்களால் கட்டப்பெற்று, 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரிவியூர் நகரத்தாரால் விரி

வாக்கித் திருப்பணி செய்யப் பெற்றதாய்க் கல்வெட்டுக் களிலிருந்து தெரிகிறது. அமைப்பாக உள்ள இக்கோயில் இருப்பதே பலர்க்குத் தெரியவில்லை. சாலையில், மங்கள கணபதி விக்கிரகத்துக்கருகே ஓர் அறிவிப்புப் பலகை போடுவது நன்று.

பொள்ளாச்சிக்கு அடுத்தபடி வேர்க்கடலை வாணி பத்தில் பெரிய சந்தை சிங்கம்பிடாரியே. இவ்வூர் முத்து வடுகு வாத்தியார் வாக்குப் பலிதம் உடையவராய் இருந்தாராம். அவர் அடங்கியுள்ள இடத்தில் வெள்ளிக் கிழமைதோறும் பூசையும் சித்திரா பவுர்ணமியன்று பெரிய விழாவும் நடைபெறுகின்றன. சிங்கம்புணரியில் இளமுகர் என்ற அம்பலகாரர் மிகுதியாக வாழ் கின்றனர்.

இருப்பவை: ஊராட்சி மன்ற ஒன்றியம், சஞ்சீவி மலையில் விநாயகர் கோயில், நாடார்ப் பேட்டை, கயிறு பின்னும் தொழில், கடலை அறைக்கும் ஆலைகள், சோமசுந்தரம் தியேட்டர், கூட்டுறவு மார்க்கட்டிங் சொசைட்டி, கால்நடை மருத்துவமனை, தொலை பேசி இணைப்பு நிலையம், ஆவணக்களரி, தச்சுத் தொழிற் சாலை, தென்னை நாற்றுப் பண்ணை.

இல்லாதவை: போலீசு நிலையம்.

இவ்வூரின் ஏற்றுமதி: மணிலாக்கடலை, கடலை எண் ணெய், கடலைப் பொட்டு (உமி), தேங்காய், கேரளத் துக்குப் பொறி, கயிற்றுப் பொருள்கள்.

சந்தை நாள்: வியாழக்கிழமை.

மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தேவ கோட்டை, ஆகிய நகர்கள் யாவும் சிங்கம்பிடாரியி லிருந்து 36 மைல் (58 கி. மீ.) தொலைவில் உள்ளன.

இவ்வூரினராகிய அமைச்சர் திரு. செ. மாதவன் முயற்சியால் 1968 முதல் இவ்வூர் முன்னேற்றமும் அடைந்திருக்கிறது. குடியிருப்பு வீடுகள் அடங்கிய சுந்தரம்நகர் என்ற புது நகரும், பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் வசதியும் மருத்துவமனையும் மகளிர் உயர் நிலைப் பள்ளியும், ஆடவர் உயர் நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடமும் ஏற்பட்டுள்ளன. தொழிற்பேட்டை அமைந்து வருகிறது. மதுரை ரோட்வேஸ் நிறுவனத்தாரால், நெடுங்காலமாக இவ்வூர் பஸ் போக்குவரத்து வசதி பெற்றிருக்கிறது.

கிருங்காக்கோட்டையிலும் மேலப் பட்டியிலும் மரமேறும் இனத்தவர் வாழ்கின்றனர். தென்னந்தோப்புக்களும் உள்ளன. பனை ஓலைகளைக் கொண்டு பல பொருள்கள் மிடையப் படுகின்றன.

சதுர்வேத மங்கலம்; இந்நாளில் மட்டியூர் என வழங்கும் இவ்வூர் நான்கு வேதங்கள் படித்த கோடி அந்தணர்க்கு மானியமாக விடப்பட்ட ஊர் என்பது பெயரிலிருந்தே தெரியும். இவ்வூர் வழியாகவே, பிரான்மலைக்குச் செல்ல வேண்டும். (10 கி.மீ.).

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த ருத்ரகோடீசுவரர் ஆத்மநாயகி கோயில் இவ்வூரில் இருக்கிறது. இந்த அம்மனுக்கு இந்நூலாசிரியரின் முன்னோர்கள் ராஜகோபுரம் கட்ட விரும்பினர். இறைவியின் இசைவு கிடைக்கவில்லை. எனவே அந்தத் தொகையைக் கொண்டு இறைவிக்குத் தங்கக் கவசம் செய்து வழங்கியுள்ளனர். விழாக்கள் - திருவாதிரை, மாசிமகம்.

சாம்பிராணி எடுக்க உதவும் மட்டிப்பால் தரும் மரங்கள் நிறைந்திருப்பதால் மட்டியூர் எனப் பெயர் பெற்றுள்ளதாகக் கூறுவர்.

மேல வண்ணாிருப்பு: பழங்கால மண்பாண்டங்கள் கிடைக்கின்றன. மலைமீது இச்சிற்றூருக்குச் சாலைப் போடப்பட்டிருக்கிறது.

மட்டியூர் திருக்களம்பூர்: முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (1190-1218) ஆட்சிக் காலத்தில் அவனுக்கும் மூன்றும் குலோத்துங்கச் சோழனுக்கும் நடந்த போரில் அவன் பாண்டி நாட்டிற்குத் தன் ஏழகப்படையினை அனுப்பிப் படையெடுத்தான். மட்டியூர்ப் போரில் பாண்டிப் படைகள் பேரழிவுக்குள்ளாகிப் புறங்காட்டி ஓடின. இதன் பிறகு குலோத்துங்கச்சோழன் மதுரையை அடைந்து சோழ பாண்டியன், திரிபுவன வீரதேவன் முதலிய பட்டங்களுடன் கி. பி. 1202-இல் வீராபிடேகம் செய்து கொண்டான்.

உலகன் பட்டி: உலகம் பட்டி என மருவி வழங்கும் இச்சிற்றூர், திருச்சி மாவட்டத்துப் பொன்னமரா வதிக்கு அருகே உளது. இறைவன்—இறைவி உலக நாதர், உலக நாயகி. ஊரெல்லையிலுள்ள ஞானியார் மடத்தில் முருகன் கோயில் ஒன்று உளது. நகரத்தார் வாழும் 96 ஊர்களுள் இது வடகோடியில் இருப்பதால், ஊருக்குக் கடைசி உலகம்பட்டி என்ற சொல்லாட்சி உண்டு.

மருதிப்பட்டி: திருப்பத்தூர்—சிங்கம்புணரி சாலையில், முறையூர்க்குச் செல்லும் சாலைச் சந்திப்பில் இவ்வூருளது. வடக்கே அரளிப் பாறைக்கு ஒரு சாலை பிரிகிறது.

இவ்வூர் பெரிய மருது பெயரால் ஏற்பட்டது என்றும், வடக்கே தேனம்மாள் பட்டிக்குச் சமீபமாக உள்ள சிறுமருதூர் என்னும் சிற்றூர் சின்னமருது பெயரால் அமைந்ததென்றும் கூறுவர்.

எருமைப்பட்டி: திருப்பத்தூர்—மதுரைச் சாலையில் மதுரை மாவட்ட எல்லையிலுள்ளது. புருக்கூட்டு மலை அடிவாரத்தில் 30 ஏக்கர்ப் பரப்பில் மட்டும், ஆண்டு தோறும் மூன்று போகம் விளைய வழி செய்து மழை பெய்கிறது.

மலையிலுள்ள ஐயனாரின் அருளால் அங்கு இவ்வாறு மழை பெய்வதாகச் சிலர் கூறுவர். அப்பகுதியில் இருக்கும் நீர்ச்சத்துள்ள ஒருவகைப் பூண்டில் காற்றுப்பட்டதும் அது மழையாகக் கொட்டுகிறது என்பர் வேறு சிலர். குறிப்பிட்ட 30 ஏக்கர் நிலம் மட்டும், இப்பயனைப் பெறுவது ஒரு விந்தையே.

ஏரியூர் : மாம்பட்டி ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்தது. உப்பாற்றின் கரையிலும் முருகன் கோயிலமைந்த குன்று ஒன்றின் அடிவாரத்திலும் அமைந்து வேளாண்மை வளம் கொழிக்கிறது. கீழவளவிலிருந்து 11 கி. மீ. தொலைவிலும் திருப்பத்தூலிருந்து 17 கி. மீ. தொலைவிலும் உளது. குன்றின் மீதுள்ள கோயில் விளக்கு, இரவில் 15 கி. மீ. தொலைவுக்கு தெரிகிறது.

கண்மாய் என்ற நீர் நிலைப் பெயர் இராமநாதபுர மாவட்டமெங்கும் வழங்க, இங்கு ஏரியூர் என அமைந்திருப்பதிலிருந்து, சோழர் காலத்தில் இவ்வூரோ ஏரியோ ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடந்தருகிறது. ஜெயங் கொண்டான் நிலை என்னும் ஊர் இவ்வூரருகே இருப்பது என் கருத்துக்கு மேலும் ஆதரவாகும்.

பெரியமருது இவ்வூருக்கு வந்ததாகவும் அன்று அவர் ஏற்படுத்திய கட்டளைப்படி இன்றும் பங்குனி உத்தர நாளில் மருதுவின் பெயரால் இவ்வூரிக் கழுகு ஐயனார் கோயில் அஷ்டோத்திர ஜபம் நடைபெறு

வதாகவும் கூறுகின்றனர். 38 கண்மாய் களுக்குப் பயன் படுமாறு இங்கு காங்கிரஸ் ஆட்சியில் மாணிக்கம் கால் வாய் ஒன்பது கி. மீ. நீளத்துக்கு வெட்டப் பெற்று இப் பகுதிக்குப் பெரியாற்று நீர் பாய்ச்சப் பெற்றது.

சத்துருசங்காரக் கோட்டை:

இது திருப்பத்தூர் மதுரைச் சாலையிலுள்ள சிற்றூர். பெயர்க் காரணம் செம்மையாகத் தெரியவில்லை. இந்நாளில் எஸ். எஸ். கோட்டை என வழங்குகிறது.

இங்கு முறையூர் வள்ளல் சண்முகனார் குடும்பத்தார் அமைத்த சத்திரம் உளது. டாக்டர் உ. வே. சா. ஐயரவர் களும் காஞ்சிகாமகோடி பீடம் பெரியவர்களும் தங்கிய பெருமையுடைய பெரிய சத்திரம் இது. புலவர் பலர் இங்கே தங்கிஇச் சத்திரத்தைப் பாடியுள்ளனர்.

கதலிக்கா யின்கறியும் கத்தரிக்காய்க் கூட்டும்
பதமான மாவடுவும் பாங்காய்—இதமாகும்
நுண்மையொடும் உண்டோம்—பொன் நூல் உணர் வாழ்முறைசைச்
சண்முகனார் சத்திரத்தில்தான்

அரளிப்பாறை: மருதிப்பட்டிக்கு அருகே ஒரு பாறை யின் அடிவாரத்தில் அமைந்த சிற்றூர்.

பாறைமீது சிறியதொரு முருகன் கோயிலுள்ளது. கார்த்திகை நாட்களில் இங்கு மக்கள் கூடுவர். பாறை செங்குத்தாக ஓங்கி உயர்ந்திருக்கவும் இல்லை: தட்டை யாகவும் இல்லை. மக்கள் ஏறிச்செல்ல வசதியாக அமைந்தது. தெற்கு வடக்கில் ஈராயிரம் அடிநீளம், கிழக்குமேற்கில் முந்நூறு அடி அகலம், நூறு அடி உயரம் உள்ளது. பாறையின் உச்சி யானையின் முதுகைப் போல இருபக்கமும் கரைவாக இருப்பதால், மழைநீர்

தேங்காமல் வழிந்தோடி விடுகிறது. பாறை எப்பொழுதும் தூய்மையாயும், வெள்ளை வெளே ரென்றும் காட்சி தருகிறது. பாறைக்குக் கிழக்கே ஆறு சதுரக்கல் பரப்புக்குப் பரந்த சமவெளி உண்டு. இச் சமவெளி முழுவதும் வானம் பார்த்த பூமியாதலால், மழைக்காலத்தில் மட்டும் புன்செய் வேளாண்மை நடை பெறும். கோடைக்காலத்தில் அது தரிசாகக் கிடக்கும். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில பனைமரங்கள் தென்படும். இப்பாறையையும் இச்சமவெளியையும் சேர்த்துப் பார்க்கும்போது, இயற்கையாக அமைந்த விளையாட்டரங்கைப் (Stadium) போலவே காட்சிதரும். இம்மாதிரி இயற்கை எழிலுடன் கூடிய ஒரு பாறையும், அதை ஒட்டிய பரந்த மைதானமும் ஐரோப்பாவிலோ அல்லது அமெரிக்காவிலோ இருந்தால், பிரபலமான சர்வதேச (Olympics) விளையாட்டிடமாக ஆக்கியிருப் பார்கள்; இராணுவ ஒத்திகைகளுக்கும் போலீசார் பயிற்சி பெறவும் பயன்படுத்தியிருப்பார்கள். 'பென்ஹர்' போன்ற வரலாற்றுப் புகழ்பெற்ற திரைப்படங்களை உருவாக்க ஏற்ற பந்தய மைதானமாகக்கூட, பட முதலாளிகள் தேர்ந்தெடுத்திருப்பார்கள்.

மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் ஏறு தழுவுதல் என்னும் மஞ்சிவிரட்டுத் திருவிழா புகழ் பெற்றது. இந்த விளையாட்டுக்கு மஞ்சிவிரட்டு என்றும், சல்லிகட்டு என்றும், வாடிவாசல் என்றும் மாவட்டங்கள் தோறும் பல பெயர்கள் உண்டு. வேளாண்மை முடிந்த பிறகு, பொழுதுபோக்க அமைந்த விழாக்களுள் ஒன்று.

மதுரை மாவட்டத்தில் வெள்ளலூர் அருகேயுள்ள உறங்காம்பட்டி மஞ்சிவிரட்டும், இராமநாதபுர மாவட்டத்தில் சிறுவயலிலும் அரளிப்பாறையிலும் நிகழும் மஞ்சிவிரட்டுக்களும் புகழ்பெற்றவை. புதுக்

கோட்டைப் பகுதியிலும் பெரிய மஞ்சிவிரட்டுக்கள் சில உண்டு; இவை புதுக்கோட்டை அரச குடும்பத்தாரின் ஆதரவில் நிகழும்.

உழவு வேலைகள் முடிந்து, ஒய்வாக இருக்கும் மாசி மாதம் வரும் மகநட்சத்திரத்தன்று இந்த அரளிப் பாறையில் ஆண்டுதோறும் மஞ்சிவிரட்டு நடைபெறு கிறது.

முல்லை மங்கலம், கன்னமங்கலம், சதுர்வேதமங்கலம்; சீர்சேர்ந்த மங்கலம், வேலமங்கலம் என ஐந்து குழுக்கள் சேர்ந்து அரளிப்பாறை மஞ்சிவிரட்டை ஆண்டுதோறும் நடத்துகின்றனர். ஐந்து மங்கலத்தாரையும் 'ஐந்துநிலை நாட்டார்' என்ற சொற்றொடரால் குறிப்பது மரபு. மாசி மகத்தன்று ஒவ்வொரு மங்கலத்தாரும் அந்தந்த மங்கலத்தின் தலைமையான ஊரில் ஒன்றுகூடி, தாரை தப்பட்டை, வாங்கா என்ற கொம்புகளை ஊதிக்கொண்டு ஆட்டபாட்டங்களுடன், காளைகளுக்குக் கழுத்திலும் கொம்பிலும் கட்டுவதற்காக புதுத்துணி மூட்டைகளைச் சுமந்துகொண்டு, கால்நடையாகவே நடந்து அரளிப் பாறையை அடைவார்கள். இப்படி ஐந்து மங்கலத் தாரும் வந்துசேர்ந்த பிறகே மஞ்சிவிரட்டு ஆரம்ப மாகும். பகல் ஒரு மணிக்கு மஞ்சிவிரட்டு ஆரம்பமாகி நான்கு மணிக்குள் முடிந்துவிடும்.

வாராப்பூர்—புதூர்: பொன்னமராவதி புழுதிப்பட்டிச் சாலையிலுள்ள சிற்றூர். வாராப்பூர் ஒரு ஜமீனாக இருந் தது. புதூரில் வெளிநாட்டுத் தொழில் தொடர்புள்ள கோனார்கள் செல்வாக்குப் பெற்றுளர்.

செட்டிக்குறிச்சி: பரம்புமலையின் அடிவாரத்தி லமைந்த செழிப்பான ஊரி. நாயக்கமார் இங்கு மிகுதி

யாக உள்ளனர். இரண்டு மைல் தொலைவில் திருச்சி—மதுரை நெடுஞ்சாலை இருக்கிறது.

அய்யாபட்டி: எஸ். எஸ். கோட்டைக்கும் முறையூர்க்கும் இடையேயுள்ள சிற்றூர். நெடுங்காலமாக இங்கு கேட்கும் கேள்விகளுக்கு விடைகூறி, நம்பிக்கை உள்ளவர்கள் வருங்காலத்தை அறிய கோடாங்கி அழைக்கும் போது வழிகூறும் பெரியவர் உள்ளார். அய்யாபட்டிச் சாமி என்று அவருக்குப் பெயர்.

ஐயனார் கோவிலும் முறையூர் தெவராயச் செட்டியார் அமைத்த ஆசிரமும் உள்ளன.

முறையூர் : பாலாற்றின் தென்கரையில் அமைந்த வளமான ஊர். இங்கு நகரத்தார்களும் வேறுபல சாதியினரும் வாழ்கின்றனர். இவ்வூர் நகரத்தார்கள் திருமணத்தில் ஒற்றைவடம் சங்கிலி அணிவர். இது ஒன்றே இவர்களுக்கும் ஏனைய நாட்டுக் கோட்டையாருக்கும் உள்ள வேறுபாடு.

வழக்குகளைத் தெரிவித்து நீதிதேடி வந்தவர்கட்கு இவ்வூரார், நியாயம்தவறாது முறையாக (நேர்மையாகப்) பஞ்சாயத்துத் தீர்ப்புச் சொன்னதால் முறையூர் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர்.

ஆற்று வளத்தாலும் வற்றாத கிணறுகளிலிருந்து பம்ப் செட்கள் வழியாகவும் இங்கு நெல்லும் கரும்பும் கடலையும் பெரிய அளவில் பயிரிடப்படுகின்றன. ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்பட்டிருப்பதால் இவ்வூர்க்குப் போக்குவரத்து எளிதாகும். மேலும், தெக்கூர் பொன்னமராவதி முதலிய ஊர்களிலிருந்து மதுரைக்குச் செல்ல ஒரு குறுக்குச்சாலை ஏற்பட்டிருக்கிறது.

முறையூர் ஒருகாலத்தில், போர்வீரர்களுக்கும் தளபதிகளுக்கும் புகழ்பெற்றிருந்தது. இவ்வூர்ச் சிவன்

கோயில் சுவர்மீது, வீரர்களின் உருவங்கள் பொறித்திருப்பதைக் காணலாம். இந்த மீனுட்சிசுந்தரப் பெருமான்மீது பாடப்பெற்ற பிரபந்தங்களையெல்லாம் திரட்டிக் கொட்டாம்பட்டிக் கருப்பையா பாவலர் இந் இந்நூற்ருண்டின் தொடக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

பெரு வள்ளலாய் விளங்கிப் புலவர்களை ஆதரித்த புழ. சண்முகம் செட்டியார் இவ்வூரினர் ஆவார். அவருடைய விரிவான வரலாற்றை இவ்வூரினரும் புகழ் பெற்ற பிரசுரகர்த்தருமான 'அரு சொ' வெளியிட்டிருக்கிருர். மதுரையில் இரும்பு வணிகத் தொழிலில் புகழ் பெற்ற தெவராயன் செட்டியார் இங்கும் சுற்றளவிலும் பல அறங்களை செய்துள்ளார்கள்.

பிரான்மலே

திருப்பத்தூர் — சிங்கம்பிடாரிச் சாலையிலுள்ள மட்டியூர் (இந்நாளில் சதுர்வேதமங்கலம் எனவழங்கும்) ஊருக்கு வடக்கே 10 கி. மீ. தொலைவில் இந்த மலையும் அடிவாரத்திலுள்ள ஊரும் உள்ளன. திருப்பத்தூரிலிருந்து 20 கி. மீ. தொலைவு. மக்கள் தொகை 2,000.

வரலாற்றுச் சிறப்பு: பெரு வள்ளலாகத் தோன்றி, பேரருளுக்கும் பெருங்கொடைக்கும் புகழ்பெற்று மக்கள் உள்ளங்களில் என்றும் வாழ்பவன் பாரி. பிரான்மலைச் சரிவில் உள்ள அருளகம் என்னுமிடத்திலிருந்து அவன் ஆட்சி செய்ததாகக் கூறுவர்.

பாரி ஆண்ட நாடு பரம்பு நாடு. பிற்காலத்தில் இது பிரம்பூர்நாடு என மருவி வழங்கிற்று. இன்றும் இப்பகுதியில் எழுதப்பெறும் சில ஆதாரங்களில் 'பிரம்பூர் நாட்டில்......' என்ற வாசகம் பயன்படுத்தப்பெறுகிறது. பரம்புநாடு திருவாதவூர்வரை பரவியிருந்ததாகத் தெரிகிறது.

புலவர்கட்கு இவன் பல ஊர்களை வாரி வழங்கிய தால், முன்னூறு ஊரும் கொடுத்து மூவாப் புகழ்பெற்ற வள்ளல் பாரி என இவன் சிறப்பிக்கப் பெறுகிருன்.

தலம் : இது கபிலரால் பாடப் பெற்றது. சம்பந் தர் தேவாரமும் பெற்றது. கொடுங்குன்றம் என்பது தேவாரப் பெயர்.

பிரான்மலையை அடுத்த தனிக்குன்றில் மூன்று நிலைகளில் மூன்று கோயில்கள் உள்ளன. இவற்றுள் முக்கியமானது அடிவாரத்திலுள்ள பெரிய கோயில். இதுவே பாடல்பெற்றது. இங்குள்ள இறைவன்—திருக் கொடுங்குன்றநாதர். இறைவி — குயிலமிர்தநாயகி. இங்குள்ள சுப்பிரமணியருக்கு அருணகிரியார் திருப்புகழ் பாடியுள்ளார்.

இக்கோயிலில் நடராசர், அறுபத்துமூவர், நவக் கிரகத் திருவுருவங்கள் அமைந்து வழிபடப் பெற்று வருகின்றன. திருமுறைக் கோயிலும் இங்கு உண்டு. வாகன மண்டபத்தில், ஆதீனத் தலைவர்களின் திருவுரு வங்கள் கல்லிற் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. சங்கிலிகளிலும் தூண்களின் இடையில் துவாரங்களி னூடேயும் சிற்பக் கலையின் சிறப்பை இக்கோயிலிற் காணலாம்.

குன்றின் நடுப் பகுதியில் வயிரவர் கோயில் அமைந் திருக்கிறது.

'வேல் வேல் மயில்' என்ற ஓசையுடன் பாதாள நடனம் ஆடும் ஓசை நள்ளிரவுக்குப்பின் இக்கோயிலின் சுற்று மதிலில் நந்தியின் அருகே கேட்பதாகக் கூறுவர்.

வயிரவர் கோயிலுக்கு 50 அடி மேலே, குன்றின் மிக உயர்ந்த பகுதியில் அம்மையப்பர் வடிவில் மங்கை

பாகன் கோயில் கொண்டுள்ளார். இத்திருவுருவம் மலையில் குடையப் பெற்றது. இறைவி தேனம்மை இடது பக்கத்திலும், இறைவன் மங்கைபாகன் என்ற மங்கை நாயகன் வலதுபுறத்திலும் காணப்படுகின்றனர் இங்கு தேனும் தினைமாவும் தோசையும் படைக்கப் பெறுகின்றன. தீபாவளி நாளில் மட்டும்தான் அபிஷேகம் செய்யப்படுகிறது.

இக்கோயில்கள் இப்போது குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆட்சியில் உள்ளன. 'பிரான்மலை வகையரு ஐந்து கோவில் தேவஸ்தானம்' என்ற பெயர் நிலவுவதால், இந்த ஆதீனத்தின் தலைமையிடம் முன்னர் பிரான்மலையில் இருந்திருக்கக்கூடும். ஆதீனத்துக்குப் பெருத்த வருமானம் இம்மலைப் பகுதியிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள சொத்துக்களின் வழியாகவே கிடைக்கிறது. இங்கு ஆதீனத்தார் ஓர் உயர்நிலைப் பள்ளியை நடத்தி வருகின்றனர்,

கோயில், ஆதீனம், நெடுஞ்சாலையிலிருந்து ஒதுங்கி உள்நாட்டில் இயற்கைச் சூழல்—இவற்றால் இங்கு இசையும் நடனமும் இன்ன பிற கலைகளும் வளர்ந்து வருகின்றன.

அருகேயுள்ள செல்லியம்பட்டி, வார்ப்பட்டி என்பவை இசைக் கருவிகளுக்கு வேண்டும் பொருள்களை வழங்கிய ஊர்களாய் ஒரு காலத்தில் திகழ்ந்திருக்கக்கூடும்.

தல விருட்சம்—உறங்காப்புளி. இரவில்கூட இதன் இலை மூடி இராது. பூப்பது மட்டும் உண்டு. ஆனால், புளியம்பழம் காய்ப்பதில்லை.

திருவிழாக்கள்: மலைமீது திருக்கார்த்திகையன்று ஏற்றப்படும் விளக்கு 20 கி. மீ. சுற்றளவுக்குத் தெரி

கிறது. அமாவாசைக்கு இங்கு திரளான மக்கள் வருகின்றனர்.

சித்திரை மாதத்தில் சித்திரைத் திருவிழா நடைபெறுகிறது. அழகர் ஆற்றில் இறங்கும் நாளில் இங்கு தேர்த்திருவிழா நிகழ்கிறது. 10 நாட்களில் நடைபெறும் இவ்விழாவை யொட்டி, குன்றக்குடி ஆதீனத் தலைவர் திரும் பெருந்திரு அருணசல தேசிக சுவாமிகள் அருளாட்சியில் பாரி விழாவும் கொண்டாடப் பெறுகிறது. 1969-இல் இவ்விழாவுக்குத் தமிழ் நாடு அரசின் முதல்வர் கலைஞர் கருணநிதி வந்திருந்தார்.

முஸ்லிம்கள் மே மாதத்தில் இங்கு வந்து மலையுச்சியில் கந்தூரி விழாக் கொண்டாடுகின்றனர்.

மனிதருக்குள்ள நீதி கன்றுக்கும் உண்டென்று ஒரு சோழன் நீதி வழங்கினன். மரங்களின் பாலும் கருணை காட்டிய பழந்தமிழர் நெறிமுறையை நிலை நிறுத்திய இடம் பிரான்மலை. ஒரு நாள் அந்திமாலையில் தென்றல் நுகரச் சென்ருன் பாரி. கொழு கொம்பு இன்றி ஒரு முல்லைக் கொடி துவண்டதைக் கண்டான். அவனுடைய இளகிய நெஞ்சம் துடித்தது. உடனே தன் தேரையே அக்கொடிக்குக் கொழு கொம்பாக நல்கினன்.

உடுக்கை இழந்தவன் கைபோல அந்த விநாடியிலேயே வாடிய முல்லைக்கு, துவண்ட அதன் கொடிக்கு, காலம் தாழ்த்தாமல் விரைந்து உதவினன் பாரி; மண்ணாண்ட மன்னனுக மட்டுமில்லாமல் அருளாளனுகவும் விளங்கினன்.

இந்நிகழ்ச்சி நடந்ததாகச் சொல்லப்படும் இடம் ஊரிலிருந்து ஒரு கி. மீ. தொலைவிலுள்ளது. அங்கு கல்லாலான நான்கு தேர்க் கால்களும் ஒரு சப்பரமும்

கருங்குண்டும் அருகே உயர்ந்த பாறைகளில் அபாய மான இடங்களில் தேன்ராட்டையும் உள்ளன.

இப்பகுதியில் ஆண்டுதோறும் மாசிச் சிவராத்திரி நாளில் நிகழும் வேட்டை, இன்றளவும் பாரிவேட்டை எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

இயற்கை வளம்; இம்மலையின் உயரம் 2,440 அடி (750 மீட்டர்). இராமநாத'புர மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அடுத்த உயர்ந்த மலை இதுவே.

ஊர், கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரத்தில் இருக்கிறது. ஊரிலிருந்து 2,040 அடி உயரத்துக்கு மலை அமைந்துளது.

"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும்" என்று கபிலர் இம்மலையைப் பாடியுள்ளார். மானாமதுரையிலிருந்து கல்லல் வரை இரயிலில் இம்மலையைப் பார்த்துக் கொண்டே செல்ல லாம். புறநானூற்றில் இம்மலையைப் பற்றிப் பல இடங் களில் கூறப் பெறுகிறது.

மலைச்சரிவுகளும் குகைகளும் சிறுத்தையும் காட்டுப் பன்றியும் வாழும் அடர்ந்த காடுகளும் உள்ளன. புலி கள் இப்பகுதியில் இருந்ததை அருகேயுள்ள வேங்கைப் பட்டி என்னும் ஊர் சுட்டுகிறது.

நீண்டு வளர்ந்த யானைக்காது போன்று, அணி அணியாக தேன்கூடுகள் இம்மலையில் தொங்குகின்றன. தேன் தவிர பலாப்பழம், மாம்பழம், சீத்தாப்பழம், காய்கறிகள் இங்கு கிடைக்கின்றன. அடிவாரத்தில் கம்பும் நெல்லும் நவதானியங்களும் பயிராகின்றன. இவற்றை இவ்வூரார் சிங்கம்புணரியில் விற்பதாலேயே அங்கே கூடும் சந்தை புகழ் பெற்றிருக்கிறது. வேங்கைப்

பட்டி வழியாகச் சிங்கம்புணரி இங்கிருந்து 5 கி. மீ. பெரும்பாலும் இந்த மலையே மதுரை இராமநாதபுரம் திருச்சி மாவட்டங்களின் எல்லையாக இருந்து வருகிறது என்று கூறலாம்.

மலையுச்சியிலுள்ள பீரங்கி ஊமைத்துரை காலத்தில் செய்யப்பட்டது. தளபதி அக்னூ, பானர்மன் போன்ற ஆங்கிலேயருக்கு எதிராக அது சுடப்பட்டதாகத் தெரிகிறது.

மலையுச்சியில் பாறைக்குள் ஒரு கோட்டை இருக்கிறது. உடைகல்லாலும் செங்கலாலும் கட்டப் பெற்ற இக்கோட்டைக்குள் இறங்க இரும்பு ஏணி போடப் பெற்றிருக்கிறது. இவை மருதுபாண்டியர் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பெரிய மலைக்கு மேற்கே அதனினும் சற்று சிறிய மலை இருக்கிறது. அதில் பெயர் சொல்லா மரம் என்னும் ஒருவகை மரம் உண்டு.

உழவர்கள் உழுது பயிரிடாது இயற்கையிலேயே விளையக்கூடிய பலாப்பழம், மூங்கில் நெல், வள்ளிக் கிழங்கு, தேன் ஆகிய நான்கும் பரம்பு நாட்டின் இயற்கை உணவுகள். மூங்கில் பூத்துக்காய்த்து முற்றிச் சிதருவதே மூங்கில் நெல்-மூங்கில் நெல்லுக்குக் கொல்லுதல், அறுப்பு, அடிப்பு இல்லை. வள்ளிக் கிழங்கும் அவ்வாறே பற்றிப் படரும் கொடிக்குச் சிதைவு இல்லாதது.

முற்றி வீழ்ந்த வள்ளிக்கிழங்குகளையே உண்கின்றனர். பரம்பு மலையில் புழங்கிய தேன் எடுத்த தேனன்று. பிடித்த தேன். அதாவது புகை மூட்டம் போட்டுத் தேனீக்களை வருத்தித் துரத்தி எடுத்ததன்று. மலைச் சரிவுகளிலும் ஓங்கி உயர்ந்த மரங்கள் ஆகியவற்றில்

தொங்கு தேனிருலிலிருந்து பொங்கி வழிந்து வீழ்ந்த தேனையே பரம்பு நாட்டு மக்கள் பயன்படுத்தினர்.

பிரான்மலையில் காணத்தக்கவை: 57 தீர்த்தங்கள், மலையுச்சியிலுள்ள பீரங்கி மேடை, வெள்ளைப் பிள்ளையார், பழமையான கல்வெட்டுக்கள், எண்ணி 108 எண்ணுமல் 108 நீர்ச்சுனைகள், புவியியல் ஆய்வாளர் நிலையம், எப்போதும் நிழல் நிறைந்த 'பொழுது விழுந்தான் சுனை' மஞ்சள் நிற நீருடையதும் ஊதினுல் மஞ்சள் ஒதுங்கி விடும் இயல்புடையதுமாகிய 'மஞ்சள் சுனை,' காசிச் சுனை.

பிரான்மலையில் கிடைப்பது: சுவையான குடிநீர், கார்த்திகை முதல் வைகாசி வரை பாலப்பழம், கொம்புத் தேன்.

பிரான்மலையின் தேவை: பொறியியல் மாணவர்கள் செய் முறையில் 'சர்வே' செய்யத் தெரிந்து கொள்ளச் சில நாட்கள் மலைப் பகுதிகளுக்குச் செல்லுவர். அதற்கு ஏற்ற இடம் பிரான்மலை. இத்தகைய மாணவர் தொகுப்பாகத் தங்குவதற்கு விடுதி கட்டி, ஏனைய நாட்களில் இறைவழிபாட்டுக்கு வருபவர்க்கு வாடகைக்கு விடலாம் அல்லது மலையேறும் பயிற்சியில் உயர் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்க இங்கு வரவழைக்கலாம். இத்தகைய ஏற்பாடுகள் செய்து, வரலாறும் இலக்கியமும் புகழ் பாடும் பிரான்மலைக்கு வாழ்வளிக்க வேண்டும்.

மல்லாக்கோட்டை: மருதரசர் காலத்தில் இன்றைய திருப்பத்தூர்த் தாலுகா, மல்லாக்கோட்டைத் தாலுகா என வழங்கப்பெற்று வந்தது.

அருவியூர்: பாலாற்றின் தென்கரையில் கண்ணமங்கலப்பட்டி முதலிய 18 ஊர்கள் கொண்டது கேரளசிங்க வளநாடு. இங்கு திசை ஆயிரத்து ஐநூறுவர்

கோவில் இருந்ததாகத் தெரிகிறது. அணைக்கரைப் பட்டியை அடுத்து 'விழுப்புணிக்களம்' என வழங்கும் விழுப்பரையன் நல்லூரில் சோழர் கோவில் 14-ஆம் நூற்றாண்டில் இருந்ததாயும் அதை இடித்து, கிழக்கிந்தியக் கும்பெனி பாலாற்றில் அணை கட்டியதாயும் தெரிகிறது.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

காரைக்குடி உள்வட்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள 5 பேரூராட்சிகளும் 26 ஊராட்சி மன்றங்களும் கொண்டது. முன்னேற்றத்திற்கு அறிகுறியாகச் சாலைகளும் மாளிகைகளும் ஆங்காங்கே காணப்படினும் வேளாண்மைத் துறையில்கூட பின்தங்கியிருக்கிறது.

திருச்சி—காரைக்குடி, அறந்தாங்கி—காரைக்குடி இரயில் பாதைகள் இவ்வொன்றியத்தின் வழியாகச் செல்லுகின்றன. ஒன்றியத்தின் அலுவலகம் சாக்கோட்டையில் இருக்கிறது.

அறந்தாங்கி (தஞ்சை மாவட்டம்), திருமெய்யம் (திருச்சி மாவட்டம்), திருப்பத்தூர், கல்லல் ஒன்றியங்களும் காரைக்குடி நகரமும் இவ்வொன்றியத்தைச் சுற்றியுள. பல கோவில்களும், ஒரு நூலாலையும்; பாத்திரத் தொழிற்சாலையும், கால்நடைப் பண்ணையும், மகளிர் கல்லூரியும், பல்தொழில் கல்லூரியும் இவ்வொன்றியத்தில் உள்ளன.

பாலை மரம் இவ்வொன்றியத்தில் மிகுதி. இம் மரத்துப் பழம், வேப்பம் பழம் போன்றது; இதில் பால் மிகுதியாக இருக்கும். இந்த மரம் இறை உருவங்கள் செய்ய ஏற்றது. செட்டி நாட்டு மாளிகைகளின் முகப்பில் காணப்படும் கலைப் புகழ் பெற்ற 'நிலை'கள் பெரும்

பாலும் இந்த மரத்தில் செய்யப்பட்டவை; பாலை மரம் நிறைந்த பதினறு ஊர்கள் பாலையநாடு எனப் பெயர் பெற்றுள. இவ்வூர்களுள் கானாடுகாத்தானும் பள்ளத் தூரும் அடங்கியன. 'பாலையநாடு எஸ்டேட்' உரிமை பற்றிப் பல்லாண்டுகள் வழக்கு நடந்தது.

ஒன்றியத்தின் மக்கள் தொகை 62,918. பரப்பு 175 சதுரமைல்.

சாக்கோட்டை: இது புதுவயலிலிருந்து ஒரு கல் தொலை விலுள்ள சிற்றூர். ஒன்றியத்தின் அலுவலகமும் வீர சேகரர்—உமையாம்பிகை ஆலயமும் இவ்வூரில் இருக் கின்றன. வீரவன புராணமும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய புராணமும் இவ்வூருக்கு உண்டு.

கானாடுகாத்தான்: கானாடு என்பது பழந்தமிழ் நாட்டுப் பகுதிகளுள் ஒன்று. இந்நாட்டு அரசர் காளை யார் கோவிலிலிருந்து ஆட்சி செய்தனர். அவர் களுடைய எல்லையில் இந்த ஊர் அமைந்திருந்ததால், தம் நாட்டைக் காப்பதற்குக் காவலர்களை இங்கு வைத்திருந்தனர். இதனால் இவ்வூர் கானாடு காத்தான் எனப் பெயர் பெற்றது.

இப்போது இவ்வூர் இராமநாதபுர மாவட்டத்து எல்லையூராக இருக்கிறது. இவ்வூர்ப் பெருமக்கள் அவ் வப்போது ஆட்சியிலிருக்கும் அரசினைக் காப்பவர்களாக வும் ஐக்கிய நாடுகள் அவையைக் காப்பவராகவும் உள்ளனர். கானாடு காத்தவர் வழித் தோன்றல் என்ப தில் தடையில்லை!

இந்நூற்றாண்டின் அரசியலில் இவ்வூரார் செல் வாக்குப் பெற்றுள்ளனர். சர் எம். சிடி. முத்தைய செட்டியார், அவர் மகன் சிதம்பரம் செட்டியார்,

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஆகியோர் (பிரிட்டிஷ் ஆட்சியில்), இந்திய சட்டசபையிலும் உரிமை பெற்ற இந்தியாவில் அரசியல் நிர்ணய சபையில் ராஜாமுத்தையா செட்டியாரும் இந்தியப் பாராளு மன்றத்தில் நாகப்ப செட்டியாரும் R. இராமநாதன் செட்டியாரும் உறுப்பினராக இருந்திருக்கின்றனர்.

அண்ணாமலை அரசர், பெத்தாச்சி வள்ளல், மு. ராம. இராமசாமி செட்டியார் ஆகியோர் முறையே காரைக்குடி, கரூர், சிதம்பரம் நகராண்மைக் கழகங்களின் தலைவராயும், சிவிசிடி வேங்கடசலனார் மாவட்டக் கழகத் தலைவராயும் இருந்தனர். சென்னையின் மேயரர்க ராஜா முத்தைய செட்டியாரும் அவர் தம்பிமார் இருவரும் கொழும்பு மாநகரத் துணை மேயராக நா. மு. சுப்பையா செட்டியாரும் இருந்தனர். ஐக்கிய நாடுகள் அமைப்பில் உயர் அலுவலராக உள்ள டாக்டர் ஏ. அழகப்பன் இவ்வூரினரே.

வங்கி, இன்சூரன்ஸ் கம்பெனி, வணிகர் மாமன்றங்கள் ஆகியவற்றை ஆக்கவும் வளர்க்கவும் வல்லார் பலர் இவ்வூரினரே.

கவியரசர் பாரதியாரால் பாராட்டிப் பாடப்பெற்ற வள்ளல் வை. சு. சண்முகனாரும் இவ்வூரினரே. மின்சாரக் குழுவின் பெரியதொரு அலுவலகமும் அரசினர் மருத்துவ மனைகள் இரண்டும், கால்நடைப் பண்ணையும் உள்ளன. ஊரருகே உள்ள பெரிய கோயில், மிகவும் புகழ்பெற்றது. சிறந்த முறையில் தெப்பத் திருவிழா நிகழ்கிறது.

பள்ளத்தூர்: காரைக்குடி - புதுக்கோட்டைச்சாலையிலுள்ள சிறு நகரம். அமைப்பால் - மேட்டூர்போல— இவ்வூர் பெயர் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு தெரு

விலும் ஒரு வீட்டின் தரைமட்டம் அடுத்தடுத்த வீடுகளின்மாடி மட்டமாக இருக்கும். இவ்வாறு ஒன்றை விட ஒன்று பள்ளத்தில் இருக்கும் காட்சி ஊரின் தள நிலையையும் பெயர்க்காரணத்தையும் உணர்த்தும்.

1921-இல் இவ்வூரில் பெரியார் ஈ. வே. ரா. தலைமையில் காங்கிரஸ் அரசியல் மாநாடு நடைபெற்றது. 1936-இல் பள்ளத்தூர்த் தொகுதியிலிருந்து இராமநாதபுர மாவட்டக் கழகத்துக்கு நடைபெற்ற தேர்தல் அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றது. தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பெரும் பணிபுரிந்த அ. மு. மு. முருகப்ப செட்டியார் இவ்வூரினர் ஆவார்.

இவ்வூர் எல்லையில் கொத்தடி என்னுஞ் சிற்றூர் இருக்கிறது. இது கொற்றவை என்ற சொற்றொடரின் மருஉவாக இருக்கலாம். அம்மைக்குக் கொற்றவை என்ற பொருள் பல நூற்றாண்டுகளாக வழங்கிவருகிறது. இங்குள்ள சோலையாண்டவர் கோயில் இப்பகுதி மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. தமிழ்ப் புத்தாண்டன்று இங்கு பூச்சொரிவிழா சிறப்பாக நடைபெறுகிறது. சுற்றுவட்டமெங்கும் சோலை, சோலையப்பன், சோலைச்சி என்ற பெயர்கள் இடப்படுகின்றன.

சித்திரைப் பவுர்ணமியன்று மூன்று கி.மீ. தொலைவிலுள்ள ஒரு சிற்றூரிலிருந்து 'குதிரை'களைச் சுமந்து வந்து, சோலையாண்டவர் கோவில் திருவிழா நடத்துவர்.

கொத்தடி ஐயனார் பிரமச்சாரி. பெண்கள் சந்நிதி முன்நின்று பார்ப்பதில்லை. வரதரான தெய்வம். வெள்ளிக்கிழமைகளில் அடியார்கள் நூற்றுக்கணக்கில் கூடி, வழிபடுகின்றனர். பழைய கோவிலைப் புதுப்பிக்க இறைவன் சந்நிதியில் உத்தரவு கொடுக்கவில்லை. முன்

னிருந்தபடி இருந்த இடம் போதுமென்றிருக்கிறார் கொத்தடி ஐயனார்.

கொத்தடி என்னும் பெயரொடு மதுரைமாநகர் எல்லையிலுள்ள அரசரடி, அனுப்பானடி என்பன ஒப்பு நோக்கத்தக்கன. அடி—வயல்.

சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரியும் பாத்திரத் தொழிற்சாலையும் பள்ளத்தூரின் பெருமைகள். இங்கு 1972-73-ஆம் கல்வியாண்டில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுமென்று தெரிகிறது.

கோட்டையூர்: பள்ளத்தூர்க்கும் காரைக்குடிக்கும் இடைப்பட்டது. பெருவணிகர் பலர் வாழுகின்றனர். வள்ளல் அழகப்பர் பிறந்த பதி. இங்கிருந்து அறந் தாங்கிக்கு ஒரு சாலை பிரிகிறது.

ஊரின் வட எல்லையில், நகரக்கோயிலாலும் வழிவழியாகச் செல்வாக்கும் ஆற்றலும் உடைய நாட்டார்களாலும் புகழ்பெற்ற வேலங்குடி இருக்கிறது. ஏழூர்ச் செவ்வாய்க்கு வேலங்குடி அம்மன் பள்ளத்தூருக்கும் கோட்டையூருக்கும் இடையேயுள்ள கண்மாய்க்கு எழுந்தருளும்.

திருவேலங்குடி சூரைக்குடி: செட்டிநாடு இரயில் நிலயத்திற்கு அண்மையிலும் குன்றக்குடிக்குச் செல்லும் வழியிலும் அமைந்த தலம். திருவேலங்குடி, ஆவுடைப் பொய்கை, மாலையிட்டார், ஆகியவை இவ்வூரின் உட்கடைச் சிற்றூர்கள்.

வன்னியர் சூரைக்குடிக்கோவில் தொன்மையும் சிற்பச்சிறப்பும் உடையது. 14-ஆம் நூற்றாண்டில் இவ்வூரை ஆண்ட விசயாலயத்தேவன் என்ற தலைவன் இக்கோவிலுக்குத் திருப்பணி செய்தான். ஏற்கெனவே இருந்த் கோயில் முகமதியரால் அழிக்கப்பட்டதால்,

விசயாலயத்தேவன் அதை மீண்டும் கட்டினுன். அவனுடைய திருவுருவமும் அவன் குடும்பத்தினரின் திருவுருவங்களும் கோயில் தூண்களில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. ஆடாத செக்கும் கூவாத சேவலும் ஈனுத வாழையும் வாழாத பெண்ணும் ஒத்தைக்கால் மண்டபமும் இவ்வூரில் புகழ்பெற்றவை.

இக்கோவிலே வழிபட்டு வந்த நகரத்தார்கள் தங்கள் விருப்பம்போலத் திருப்பணியும் அன்றுட ஆட்சியும் செய்ய வசதியாகத் தங்களுக்கென்று இங்கேயே ஒரு கோவிலேக் கட்டிக் கொண்டுள்ளனர். அக்கோயில் நகரச்சூரைக்குடி எனப்பெயர்பெற்று நகரத்தாருள் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினரின் கோயிலாக விளங்கிவருகிறது. இரு கோவில்களிலும் இறைவன் தேசிகநாதர். இறைவி ஆவுடைய நாயகி.

இத்தலத்துக்கு மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் யாத்த புராணம் உண்டு.

மாற்றூர்: இவ்வூர் காரைக்குடியிலிருந்து 11 கி.மீ. தொலேவு. மாத்தூர் என வழங்குகிறது. கண்டனூருக்கும் அரியக்குடிக்கும் இடையே அமைந்து, நகரக்கோவிலால் புகழ் பெற்று வருகிறது. சங்ககாலப் புலவரான மாற்றூர் கிழார் மகனுர் கொற்றங்கொற்றனுர் இவ் வூரினர்.

சங்ககால வணிகப் பெருமக்களான ஐந்நூற்றுவர் வழிபட்ட ஐந்நூற்றீசர் கோயில் இவ்வூரில் இருந்து வருகிறது. ஐந்நூற்றுவர் பற்றிய விவரம் இந்நூலாசிரியர் எழுதிய 'செட்டிநாடும் தமிழும்' என்னும் நூலிற் காண்க. இங்கு, இறைவன்-ஐந்நூற்றீசர், இறைவி—பெரியநாயகி.

கொங்கண மகரிஷி இங்கு தவமிருந்து தங்கத்துக்கு 500 மாற்றுக் கண்டறிந்தார் என்பர். இறைவன் அதனாலேயே ஐந்நூற்றீசர் எனப்பெயர் பெற்றார் என்று காரணம் கூறப்பெறுகிறது. சேலம் மாவட்டத்து ஏழு மாற்றூர் என்னும் ஊர்ப்பெயருக்கும் இவ்வாறே காரணம் கூறப்பெறுவது ஒப்புநோக்கத்தக்கது.

புதுவயல்: பேரூராட்சியும் ஊர் எல்லையில் இரயில் நிலையமும் உடைய ஊர். வாணிபத்தில் சிறந்த முஸ்லிம்களும் நகரத்தார்களும் வாழ்கின்றனர். சில சிறு தொழில்கள் இங்கு இயங்குகின்றன.

கண்டனூர்: கண்டனூர்-புதுவயல் இரயில் நிலையத்தை அடுத்த சிறு நகரம். கல்வித்துறையில் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது. சிவன்கோவில் சிறப்புச் சிறப்புடையது. ம. தொ. 6, 000.

இலுப்பைக்குடி: காரைக்குடி இரயில் நிலையத்திலிருந்து 3 கி. மீ. தொலைவு. நகரக்கோவில் உடையது.

அரியக்குடி: காரைக்குடியின் எல்லையிலுள்ளது. ம. தொ. 20:4. புகழ்பெற்ற வைணவத் திருப்பதி, வெள்ளித் தேரும் கருட வாகனமும் வயிரமுடியும் உடைய கோயில் இது. வைகாசியில் பிரமோற்சவம் நிகழ்கிறது. இசைமேதை இராமானுச ஐயங்கார் தோன்றிய ஊர் இதுவே.

அமராவதிபுதூர்; (2,351) 19-ஆம்நூ.-இல் தெய்வீகக் கோட்டையாகவும் 20 - ஆம் நூ.-இன் முற்பகுதியில் தேசியக் கோட்டையாகவும் விளங்கிய இவ்வூர் தேவகோட்டை ரோடு என்னும் இரயில் நிலையத்தருகே அமைந்துள்ள தொழிற்பேட்டையை அடுத்தமைந்தது. ஓட்டுத்தொழிற்சாலைகள், நுரையீரல் மருத்துவமனை; (T. B. Sanatorium) கோழிப்பண்ணை, 'குமரன்'

சொ. முருகப்பா-மரகதவல்லி தம்பதிகள் தொடங்கிய மகளிர் இல்லம் குருகுலம் ஆகியவை இங்கு உள்ளன. தேவகோட்டைக்கும் காரைக்குடிக்கும் இடையே இருப்பதால் இவ்வூர் வளர்ச்சியடைந்து வருகிறது.

இங்கிருந்து தெற்கே ஆருவயல், சண்முகநாதபுரம் வழி கண்டதேவிக்கும் வடக்கே கல்லுப்பட்டிக்கும் சாலைகள் செல்லுகின்றன. கைகாட்டி என்னும் இவ்விடத்திலிருந்து காரைக்குடியும் தேவகோட்டையும் ஒரே தொலைவு (8. கி. மீ.).

செங்காத்தான் குடி: ஒன்றியத்தின் பிற்பட்ட பகுதி. செம்பளாவயல், காரக்கொண்டான், பாணன்வயல், ஈஞ்ச திருப்பணியேந்தல், நாதன்வயல்; வெட்டிவயல், ஈஞ்ச வயல், கொம்புக்காரனேந்தல் முதலிய சிற்றூர்களைக் கொண்டது.

சாக்கவயல்: இதுவும் மித்திராவயல், சிறுகபட்டிப் பகுதிகளைப்போல அறந்தாங்கி எல்லையில் அமைந்து பிற்பட்ட நிலையிலுளது.

சிறுகபட்டி: நாட்டுவளம் குறைந்தும் காட்டுவளம் மிகுந்தும் இருப்பதைப் பீர்க்கலைக்காடு, சபாத்தியாங் காடு, முள்ளங்காடு, தாமரைச் செல்லங்காடு, கைத் திருப்பங்காடு, விளரிக்காடு என்னும் பெயர்களால் அறியலாம்.

நேமம்: கீழச்சிவற்பட்டி—பலவான்குடிச் சாலையி லுள்ள சிற்றூர். தொன்மைப்புகழுடையது. நகரக் கோவில் ஒன்பதில் ஒன்றான நேமம் கோவில் இங்கு இருக்கிறது; சிற்பச் சிறப்பு உடையது. காட்டு ஆத்தங் குடிக்கும் நேமத்துக்கும் நடுவேயுள்ள நாகப் பரப் பாமலை என்ற மண்மேட்டுக்குள், நேமங்கோயில் விக்கிர

கங்கள் திப்புசுல்தானின் படையெடுப்பின்போது புதைத்து வைக்கப்பட்டிருந்தன. 1950 அளவில் அவை மாடு மேய்ப்போரால் கண்டு பிடிக்கப்பட்டு, காட்டாத் தான்குடி ஐயனர் கோவிலில் வைத்து வழிபடப்படு கின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் திருமழிசை அருகே யும் நேமம் என்று ஓர் ஊர் இருக்கிறது.

செட்டிநாடு: செட்டிநாட்டரசர் என்னும் சிறப்பை அண்ணமலைச் செட்டியார்க்கு வழங்குவதற்காக 1929–இல் புதிதாக செட்டிநாடு என்னும் இரயில்நிலையம் அமைத்து அதையடுத்துச் சில வீடுகளும் ஒரு கோயிலும் கட்டப்பெற்றன. செட்டிநாடு ஆகாயவிமானநிலையம் சில ஆண்டுகள்மட்டும் பயன்பட்டது. அவ்விடத்தில் இப்போது மாவட்டக் கால்நடைப்பண்ணை உளது.

செட்டிநாட்டரசரின் அரண்மனைக்காக அடிக்கல் போட்ட இடத்தில் இப்போது அண்ணமலை தொழிற் கல்லூரி என்ற பாலிடெக்னிக்கு நடைபெற்று வரு கின்றது. ஜவஹர் மில் என்ற நூல் ஆலை இயங்கி வருகிறது.

கல்லல் ஊராட்சி ஒன்றியம்

காரைக்குடி உள்வட்டத்தில், வடக்கே ஆத்தங்குடி முதல் தெற்கே வெற்றியூர், A. கருங்குளம் ஆகிய ஊர் கள் வரை இவ்வொன்றியம் பரவியுள்ளது. திருமயம் (திருச்சி மாவட்டம்) சாக்கோட்டை, தேவகோட்டை, காளையார் கோவில், திருப்பத்தூர் ஒன்றியங்கள் இதைச் சுற்றியுள.

குண்டாறும் மணிமுத்தாறும் உப்பாறும் இவ் வழியே சென்று ஒன்றியத்தைத் தாண்டி தொண்டிக்கு

அருகே கடலில் கலக்கின்றன. காரைக்குடி—சிவகங்கை இரயில் பாதை இவ்வொன்றியத்தில் கல்லல், அரண் மனைச் சிறுவயல், பனங்குடி இரயில் நிலையங்கள் வழி யாய்ச்செல்லுகிறது.

ஒன்றியத்தில் 44 ஊராட்சி மன்றங்கள் அடங்கி யுள. ஒன்றேனும் பேரூராட்சி அன்று.

கல்லல்: ஒன்றியத்தின் அலுவலகம் இங்கு இருக் கிறது. செட்டிநாட்டின் முக்கியமான ஊர்களுள் இது ஒன்று. இரயில் வசதியும் காரைக்குடியிலிருந்து இவ்வூர் வழியாகத் திருப்பத்தூர், மதகுபட்டி போன்ற ஊர் களுக்குப் பஸ் வசதியும் இருந்து வருகின்றன. மணி முத்தாற்றின் கரையில் இவ்வூர் அமைந்திருக்கிறது. இங்கிருந்து காளையர் கோவிலுக்குச் செல்லலாம்.

கண்ட மாணிக்கம்: வடமா அல்லாத பிராமணர் களுள் (அதாவது தமிழ் நாட்டுப் பிராமணர்களுள்) அஷ்டசஹஸ்ரம், பிரஹசர்ணம் என்ற பிரிவுகள் உண்டு. பிரஹசர்ணம் பிராமணர்கள் அனைவருமே இவ்வூரி லிருந்து பிற்காலத்தில் குடியேறியவர்கள் ஆவர். இவ்வூர் திருப்பத்தூரிலிருந்து கல்லல் சாலையில் 8 கி.மீ. தொலைவிலுளது. ஊர்ப் பெயர் கண்டரமாணிக்கம் என வழங்குகிறது.

சிராவயல்: பிள்ளையார் பட்டியை அடுத்த சிற்றூர். ஆண்டுதோறும் தைத் திங்கள் மூன்றும் நாளில் பெரிய அளவில் நிகழும் மஞ்சுவிரட்டு இம்மாவட்டத்தில் பெரிய திருவிழா. நாச்சியாபுரம் என்னும் ஊர் இவ்வூராட்சி எல்லைக்குட்பட்டது.

அரண்மனைச் சிறுவயல் இது வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர். சேர சோழ பாண்டிய மன்னர் மூவரும் வழிபட்ட மும்முடியீசர்—கருணை நோக்கு அம்மை கோவிலையும்,

பாண்டியர் கோட்டையையும் உடையது. இவ்வூர், சின்ன மருதுவின் தலைநகராய் இருந்தது. அவனது அரண்மனை இங்கு இருந்ததால் அரண்மனையை உடைய சிறுவயல் என்னும் பொருளில் ஊர்ப் பெயர் அரண்மனைச் சிறுவயல் ஆயிற்று. இந்நகரைப் பாராட்டி, பிரிட்டிஷ் தளபதி அக்கினியூ 30-7-1800-இல் தம் நாட் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். முள் கோட்டைகள் அமைப்பதில் இவ்வூரினர் வல்லவர்களாம்.

மருது பாண்டியர், சிறுவயலைப் பட்டினமாக்கி அரண்மனை கட்டிய செய்தியை சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் என்ற நூலிற் காணலாம்.

கம்பனூர்: நாச்சியாபுரத்தை அடுத்த சிற்றூர்; கவிச்சக்ரவர்த்தி கம்பன் பெயரால் அமைந்த சிற்றூர். நாட்டரசன் கோட்டைக்குச் செல்லும் வழியில் புலவர் பெருமான் இங்கே தங்கியதாகக் கருதப்படுகிறது. இவ்வூர்க் கல்தச்சர்கள் இந்தியாவெங்கும் வெளிநாடுகளுக்கும் விக்கிரகங்கள் செய்து அனுப்புகின்றனர்.

துளாவூர்: குன்றக்குடிக்கு அருகே உளது. இவ்வூர் நுட வைத்தியம் புகழ் பெற்றது.

பட்டமங்கலம்: இவ்வூர் திருக்கோட்டியூர்க்கு அருகே அமைந்தது. கீழ்ப்பட்டமங்கலம் மேலப்பட்டமங்கலம் என்ற இரு ஊராட்சி மன்றங்கள் உள்ளன. இப்பகுதி அடைக்கலங்காத்த நாடு எனப்படும். இந்நாட்டு நாட்டார்களும் நகரத்தார்களும் இலங்கையை வளம் கொழிக்கும் நாடாகச் செய்துள்ளனர்.

"பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்"

என்று திருவாசகம் போற்றும் தலம் இதுவே. இவ்வாறு அட்டமாசித்திகளின் இயல்பை இறைவன் புகட்டிய இடம். இவ்வூர்க் கோவில் ஆலமரத்தின் கீழுள்ள இடமாகும். கோவிலும் ஆலமரமும் காணத்தக்கன. அமாவாசை நாட்களில் இங்கு திரளான மக்கள் தீர்த்தம் ஆடுகின்றனர்.

செம் பொன்னூர்; கல்லல் அருகே உள்ள சிற்றூர். செம்பனூர் என்று ஊர்ப் பெயர் வழங்கிவருகிறது.

மண்ணின் நிறம் அல்லது அப்பகுதியில் கிடைக்கும் புவியியல் பொருளை வைத்து ஊர்ப் பெயர்கள் உண்டாயின. பசும் பொன் என்ற ஓர் ஊரும் இம்மாவட்டத்தில் இருக்கிறது.

கன்னியா குமரி மாவட்டத்தில் குளச்சல் அருகே செம்பொன்விளை, புத்தன் துறையருகே செம்பொன்கரை என்னும் ஊர்களும், தஞ்சை மாவட்டம் மயூரம் பகுதியில் செம்பொன்னூர் கோவில் என்ற ஊரும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏழு செம்பொன் என்ற ஊரும் உள்ளன.

தளக்காவூர்: இது பழமையான ஊர். வடக்குப் பார்த்த அதளநாயகி அம்மன் கோவிலும் 1,000 ஆண்டுக்கு முற்பட்ட கண்டவனநாதர் கோவிலும் சீர் குலைந்த நிலையில் இருக்கின்றன: கத்தோலிக்கத் தேவாலயமும் கூட்டுறவு முறையில் நிகழும் செங்கல் சூளையும் உள்ளன. இவ்வூரின் சிறப்பு இங்கு, சலங்கை மணல் கிடைப்பதாகும்.

இப்பகுதியில் நிலக்கரிப் படிவங்கள் உள்ளன. 1965-இல் தோண்டிப் பார்த்தனர். விவரம் முன்னரே கூறியுள்ளோம்.

இவ்வூரின் ஒரு பகுதியான மாநகரி, மானகிரி என மருவி வழங்குகிறது. மாநகரியிலிருந்து திருப்பத்தூர், காரைக்குடி, தேவகோட்டை, கல்லல் பகுதிகட்குச் சாலைகள் பிரிகின்றன. தேவகோட்டை ரஸ்தா இரயில் நிலையம் இங்கிருந்து 5 கி. மீ. தொலைவு. இங்கு, ஓராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கோவில் இருப்பது அதன் கல்லின் அமைப்பிலிருந்து உறுதிப்படுகிறது.

கூத்தலூர்: காரைக்குடி—கல்லல் சாலையிலுள்ள ஊர் நகரத்தார் 96 ஊர்களில் ஒன்று. காரைக்குடிக்கு டவுன் பஸ் செல்லுகிறது. இவ்வூர்க் கத்தோலிக்கத் தேவாலயம் பழமையானது. 30 கி.மீ. சுற்றளவுக்கு, இங்கிருந்து கத்தோலிக்கம் பரவியிருக்கிறது.

பிளார்: இப்பகுதி கிறித்தவ மதத்திற்கு மையமான ஊர்.

பொய்யலூர்: அழகான பொய்கையுடைய ஊர். பொய்கையூர் பொய்யலூர் ஆயிற்று.

மாலைகண்டான்: மாளக்கண்டான் என்பதன் மரூஉ என்பர். சண்டாசுரன் என்ற ஓர் அசுரன் மாண்டு மடிந்த இடம் இது என்பது காளையார் கோவில் தலபுராணத்திலிருந்து அறியப்படுகிறது.

வெற்றியூர்: ஊர்ப் பெயருக்கு ஒரு புராண வரலாறு கூறப்படுகிறது. அம்மை சண்டாசுரனை வெற்றி கண்ட இடம் வெற்றியூர் என்பர்.

பூங்குடி: (கீழப்பூங்குடி) சண்டாசுரனோடு போரிட்டு வெற்றிபெற்ற தேவியைப் பூமாரி பெய்து தேவர்கள் வாழ்த்திய இடம் பூங்குடி என்பர்.

இளங்குடி: நாச்சியாபுரத்துக்கும் தளக்காவூர்க்கும் இடையேயுள்ள சிற்றூர். நந்தியின் வாயிலிருந்து

இரத்தம் கசிவது இவ்வூர்ச் சிவன் கோவிலின் சிறப்பு. வட ஆர்க்காடு மாவட்டம் திருவூறல் (தக்கோலம்) என்ற தலத்தில் நந்தியின் வாயிலிருந்து நீர் ஊற்றிய வண்ணமாகவே இருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

கோவிலூர்: காரைக்குடியின் மேற்கு எல்லையிலுள்ள சிற்றூர். பழைய பெயர் கழனிநகர். கழனி—வயல். இன்றும் இவ்வூர் வயல்கள் சூழவே காணப்படுகிறது.

18-ஆம் நூற்றாண்டில் ஆண்டவர் முத்துராமலிங்க சுவாமிகள் இங்கு ஒரு வேதாந்த மடம் நிறுவினார். அவரும் அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர்களும் இங்கு செய்த திருப்பணிகளால் இவ்வூர் புகழப்படுகிறது. கோவிலூர் மடத்தின் கிளைமடங்களாவன (1) சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடம் (2) பொருள் வைத்த சேரி மடம், சிக்கல், தஞ்சை மாவட்டம் (3) திருக்களர் மடம், திருக்களர், தஞ்சை மாவட்டம் (4) ஈசானிய மடம், திருவண்ணாமலை. விவரம், நெற்குப்பை வைகாசி விசாகப் பொன்விழா மலரில் காண்க.

கோவிலூரில் சிவலிங்கம் சுயம்பு. இதன் வாயிலாய் வீரசேகர பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் கொற்றவாள் (ராஜ கடகம்) என்ற அதிசய வாளைப் பெற்றதாகக் கூறுவர். கொற்றவனுக்கு வாள் வழங்கியதால் இங்குள்ள சிவபெருமானுக்குக் கொற்றவாளீசர் என்ற பெயர் நிலவிவருகிறது. 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் இங்கு காணப்படுகின்றன.

கீழ்த்திசையில் மூன்று கோபுரங்களும் தெற்கே ஒரு கோபுரமும் இருப்பது இக்கோவிலின் சிறப்பு. நடராச மண்டபமும் கம்பத்தாடி மண்டபமும் அவற்றின் தூண்களில் அழகிய வேலைப்பாடுடன் காணப்படும் சிற்பங்

களும் கோவிலூர்க்குப் பெருமை தருகின்றன. இக் கோவில் சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தது.

நகரத்தாரின் 96 ஊர்க்கூட்டங்கள் கோவிலூரில் கூடுவதே மரபு.

குன்றக்குடி: செட்டி நாட்டின் பகுதிகளுக்கு எல்லையாக அமைந்த மலையும், அதன்மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற முருகன் கோவிலும், தமிழகமெங்கும் புகழடைந்துள்ள ஆதீனமும் உடையது குன்றக்குடி; காரைக்குடியிலிருந்து 9 கி.மீ. தொலைவு.

மலையின் அமைப்பு மயில் போன்றது. மலைமீது முருகன் கோவிலும், மலையின்கீழ் சிவன் கோவிலும் இருக்கின்றன. மயிலின் வடிவத்தில் தோகை இருக்கும் இடத்தில் ஒரு விநாயகர் கோவில் இருக்கிறது. இதன் பெயர் "தோகையடி விநாயகர்". மலைமீது கோபுரமும் மண்டபமும் கட்டியவர் பெரிய மருது பாண்டியர். திருவிழாக்களில் முருகனுக்கு அணிவிக்கப்படும் பொற் கவசம் 'சின்ன மருது உபயம்'. மலையைச் சுற்றிப் பல சத்திரங்கள் உள்ளன. அடிவாரத்தில் மூன்று குடை வரைக் கோயில்களும் மலையிலேயே அமைக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்களும் குடைவரைச் சுவர்களில் செதுக்கப் பட்ட இறையுருவங்களும் உள்ளன.

வைகாசி விசாகமும் பங்குனி உத்தரமும் இங்கு பெரிய திருவிழாக்களாக நடைபெறுகின்றன. கார்த்திகை தோறும் திரளான மக்கள் வருகின்றனர்.

திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைமை மடம் இங்குதான் இருக்கிறது. குன்றக்குடி முருகன் கோவிலும் திருப்பத்தூர், திருக்கொடுங்குன்றம் என்ற தேவாரம் பெற்ற தலங்களும் திருக்கோளக்குடி, தேனாச்சியம்மன்

கோயில், ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களும் இந்த ஆதீனத்தின் ஆட்சிக்கு உட்பட்டவை.

முதற் குலோத்துங்கன் காலம் வரை பாண்டிநாடு சோழநாட்டோடு இணைந்திருந்தது என்பது இங்குள்ள கல்வெட்டின் வாயிலாய்த் தெரிகிறது.

குன்றக்குடியில் சமைத்து வைத்த பொருள்களைக் காக்கை கொட்டிக் கெடுப்பதில்லை.

பலவான்குடி: குன்றகுக்டியை அடுத்த சிற்றூர். 50 ஆண்டுகளுக்கு முன் 'சிவநேசன்' இதழும், சிவநேசன் திருக்கூட்டமும் இங்கிருந்து சைவசமயத்தைப் பரப்பின.

பாதரக்குடி: தேனாற்றின் தென்கரையில் குன்றக்குடியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ள சிற்றூர். கி. பி. 700-இல் இங்கு சுந்தரபாண்டிய மன்னன் பாதரக்குடி மடத்தை நிறுவினான். நகரத்தார்க்குச் சிவதீட்சை செய்யும் உரிமை இம்மடத்தின் தலைவருக்கு உண்டு. இம்மடத்தில் பழம்பதிநாதர்—பெரியநாயகி அம்மை கோவில் உள்ளது. தேனாற்றிப் காந்தியடிகளின் எலும்பு களில் ஒரு பகுதி கரைக்கப்பட்டது.

7. சாத்தூர் வட்டம்

சிறப்பு: இம்மாவட்டத்தில் மக்கள் நெருக்கமானது, சாத்தூர்வட்டம். நகராண்மைக்கழகம் உள்ள மூன்று நகரங்கள் இவ்வட்டத்தில் மட்டுமே உள்ளன. தொழில் வளர்ச்சியும், வியாபாரப் பெருக்கமும் மிகுதி.

இனங்கள்: தெலுங்கு பேசுவோர் பல ஊர்களில் உள்ளனர். அரசியல் செல்வாக்குடன் வணிகத்துறையில் முன்னேற்றமும் அடைந்துள்ள நாடார்கள், வேளாண்மையில் ஆர்வம் காட்டிவரும் நாயக்கமார்—ரெட்டியார்கள், புதிதாக விழிப்படைந்துள்ள மறவர்

கள், அரசியல் சலுகை பெற்றுள்ள ஹரிஜனங்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்க இனத்தார் ஆவர்.

பல சாதிகள் சேர்ந்து வாழும் ஊர்கள் மிகக் குறைவு. நாடார்கள் தங்களுக்குள் மகமை வசூலித்துத் தங்கள் இனத்தவர் நலங்கருதி நெடுங்காலமாகப் பல பொதுச் செயல்களுக்குப் பணம் திரட்டுகிறார்கள். பிறரும் இந்த முறையைக் கையாண்டு வருகின்றனர். சிற்றூரிலுள்ள நாடார்களும் தங்கள் ஊர்ப்பெயரால் சென்னை நகரில் முக்கியமான பகுதிகளில் இடம்வாங்கி, தங்கும் விடுதிகள் கட்டியிருக்கிறார்கள். இவற்றை வணிக அடிப்படையில் நடத்திவருகிறார்கள். அந்தந்த ஊர்க்காரர்களுக்கு அவ்விடுதிகளில் முன்சலுகை உண்டு.

நெல்லை உறவு: 1910க்குமுன் இவ்வட்டம் திருநெல் வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. எனவே இங்கு அம்மாவட்டத்து மக்களின் பேச்சு வழக்கும் பிற பழக்கங்களும் காணப்படுகின்றன. தூத்துக்குடியுடன் இப்பகுதிக்கு வணிகத் தொடர்பு மிகுதி.

ஆறுகள்: அர்ச்சுனை ஆறு, வைப்பாறு என்ற இரு ஆறுகள் இவ்வட்டத்தின் வழியாகச் செல்லுகின்றன. அர்ச்சுனை ஆறு, வற்றாயிருப்புப் பகுதியில் மலையடிவாரத் தில் தோன்றி, வடமலைக் குறிச்சி - கன்னிசேரி வழியாகச் செல்லுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்துச் சங்கரன்கோவில் வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சிமலையில் வாசுதேவ நல்லூர் அருகே நிட்சேப நதிஎன்ற பெயருடன் ஓர் ஆறு தோன்றுகிறது. கரிவலம்வந்தநல்லூருக்குக் கிழக்கே இந்த ஆறு வைப்பாறு என்று பெயர் பெற்று வேம்பக் கோட்டை, சாத்தூர், நென்மேனி, முத்தலாபுரம்,

விளாத்தி குளம் வழியாக வைப்பாறு என்ற ஊரருகே கடலில் கலக்கிறது. இவ்வாற்றின்மீது கொல்லப்பட்டி அருகே சிறு அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாற்றில் ஒராண்டில் ஐந்து மாதங்கள் தண்ணீர் இருக்கும்.

பருத்தி: இவ்வட்டத்தின் முக்கிய விளைபொருள் பருத்தி. நெடுங்காலமாக இங்கு பயிரிடப்பட்டு வருகிறது. கொட்டையை எடுக்க ராட்டினம் போன்ற ஒரு மரச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

19-ஆம் நூற்றுண்டால் தூத்துக்குடித் துறைமுகத்தி லிருந்து இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. அதற்காக அந்நாட்டு ஆலைகள் பருத்திக் கொட்டையை எடுக்க இயந்திரங்களை ஏற்படுத்தின. ஆங்கிலத்தில் ஜின்னிங்பாக்டரி என்ப தைச் சாதாரணமக்கள் 'பஞ்சு ஆபீஸ்' என்பர். இவை பருத்தி பயிரிடுபவர்களை ஊக்குவித்தன.

k6, கருங்கண்ணி என்ற பருத்தி வகைகள் பயிரிடப் படுகின்றன. 1961 முதல் லெட்சுமி என்ற ஹூப்ளி (மைசூர்) பருத்தி போட்டுப்பார்த்து இவ்வட்டத்தில் பலர் கூடுதலாக விளைவித்துள்ளனர். மழை, காலம் தவறிப் பெய்தால் k6 ராசி குறைந்து விடுகிறது. அதனுல், அதைப்பரப்ப, வேளாண்மைத்துறையினர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பலன் தரவில்லை.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பருத்தி விற்பனை நிலையம், விருதுநகரில் இயங்குகிறது. அது பம்பாயிலுள்ள கிழக் கிந்தியப் பஞ்சு சங்கத்தின் பிராந்திய நிறுவனம். பஞ்சின் தன்மையை ஆராய்ந்து தரம் பிரிக்கும் உரிமை இந்த நிலையத்துக்கு உண்டு. இந்த நிலையம் இந்திய

அரசின் ஜவுளி ஆணையரால் ஏற்கப்பட்டது. இந்த நிலையத்தின் உறுப்பினர்கள் அடிக்கடி கூடி, பலவகைப் பஞ்சுகளின் ஆகக் கூடுதலான விலைகளை வரையறுக்கிறார்கள்.

தொழில்கள்: இவ்வட்டத்தில் நூல் ஆலைத்தொழில் அவ்வளவாகப் பரவவில்லை. விருதுநகரில் ஒரு நெசவாலை உள்ளது.

1920 அளவில் பருப்பு உடைக்கும் தொழிற்சாலைகளும், எண்ணெய் ஆட்டும் இயந்திரங்களுக்கான தொழிற்சாலைகளும் மட்டுமே இவ்வட்டத்தில் இருந்த தொழிற்சாலைகள் எனலாம்.

1930 - இல் இங்கு தீப்பெட்டித் தொழில் ஏற்பட்டது. இப்போது 800 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. 1947க்குப் பின் பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படலாயின. தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு வேண்டும் இரசாயனப் பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகள், கவின்கலை (லித்தோ) அச்சகங்கள், சிமிண்டு ஆலை, எஃகு உருக்கு ஆலை முதலியன ஏற்பட்டுள்ளன. தொழிற்பேட்டைகளில் சிறுபொறியியல் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

வேளாண்மை: சாத்தூர் வட்டம் முழுவதும் சம்பா மிளகாய் புன்செய்யில் 12 மாதமும் பயிரிடப்படுகிறது. காற்று அடித்து மிளகாய்க்குச் சேதம் வருவதைத் தடுக்க, வயலைச் சுற்றிலும் ஆமணக்குப் பயிரிடுகின்றனர். ஏர் உழுவது நீங்கலாக வேளாண்மையின் பிறவேலைகள் அனைத்தையும் பெண்களே செய்கின்றனர். எல்லா ஊர்களிலும் மின்சாரவசதி இருப்பதால், ஓராயிரத்துக்கு மேற்பட்ட கிணறுகள் பயன்பட்டு வேளாண்மைக்கு உதவுகின்றன. கண்மாய்ப் பாசனமும் மிகுதி.

இருக்கும் நிலங்களை ஏதாவது ஒரு வேளாண்மைக்குப் பயன்படுத்துவது இங்குள்ள மக்களின் இயல்பு. தங்கள் தேவைக்கு மட்டும் நெல் பயிரிட்டு, எஞ்சிய நிலத்தில் கம்பு, கேப்பை, மிளகாய், பருத்தி முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். இப்பகுதியில் ஹரிஜனங்களும் முற்போக்காக இருக்கின்றனர். மின்சார உதவியால் கிணற்றுப் பாசனம் பரவியுள்ளது.

நாயக்க சமூகத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேளாண்மையில் ஆர்வம் காட்டி வருவதோடு, வேளாண்மைச் செலவுக்குக் கடன்பெறாமல் ஒரு சிறு வேலையையேனும் ஏற்று மாதச் சம்பளம் பெற்றுவருவது பாராட்டுக்குரியது, பின்பற்றத் தக்கது.

இவ்வட்டத்தில் புறம்போக்கு நிலம் கிடையாது. தரிசாகக் கிடக்கும் நிலமும் இல்லை. மலையோ காடோ கிடையாது. ஒரு சில சிறு பாறைகளை மட்டுமே காண இயலும்.

பருத்தி, மல்லி, உளுந்து மூன்றையும் சேர்ந்தாற் போலப் பயிரிடும் வழக்கமும் நிலவிவருகிறது.

உப்புத் தண்ணீர்தான் பெரும்பாலும் கிடைக்கிறது. ஊருணிக்குள் உள்ள கிணற்றிலிருந்து நீரை மொண்டு குடிக்கும் வழக்கம் பரவியிருக்கிறது.

வட்டம் முழுதும் கரிசல் மணற்பூமியாக இருக்கிறது.

தீப்பெட்டித் தொழிலால் பிழைக்கும் மக்கள் வட்டத்தில் உள்ள மொத்த ஊர்களில் பாதியில் உள்ளனர். இதனால் பிச்சை எடுப்பவர் எவரும் இங்கு இல்லை. சிறு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு தீக்குச்சி அடுக்கவோ, தீப்பெட்டி ஒட்டவோ இயலும்.

பள்ளிக்கூடங்களுக்கு ஒவ்வொருநாளும் வரும் மாணவர் எண்ணிக்கை இவ்வட்டத்தில் குறைவு. தீப்பெட்டித் தொழிலால், சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டும் வேலை போலீசாரின் முக்கிய அலுவலாக இருப்பதாகவும் தெரிகிறது. சாத்தூர் ஒன்றியத்தில் 300 தொழிற்சாலைகளும், சிவகாசி ஒன்றியத்தில் 100ம் ஏழாயிரம் பண்ணையிலும் அதன் சுற்றுப்புறத்தில் 200ம், விருதுநகரிலும் மன்னார் கோட்டையிலுமாக 100 தொழிற்சாலைகளும் உள்ளன. தொழிலாளருக்குப் பஸ் வசதி செய்து, வீட்டிலிருந்து தொழிற்சாலைகளுக்கும் கூட்டி போய் மீண்டும் கொண்டுவந்து விடுகின்றன.

தீக்குச்சி அடுக்கி வருவாய் பெறுவதால், ஆடவரை எதிர்பாராமல் பெண்கள் தாங்களே பணம் சம்பாதித்து திருமணம் செய்து கொள்கின்றனர்.

கடற்கரையிலிருந்து நெடுந் தொலைவிலிருப்பதும் மழையின்மையும் ஈரமில்லாக் காற்றும் தீக்குச்சித் தொழில் பெருகுவதற்கான சூழலை உருவாக்கியுள்ளன.

பவுண்டன்பேனு நிப்புகள் செய்வதில் இந்தியாவி லேயே சாத்தூர் நகரம் சிறந்து விளங்குகிறது. பைலட் பேனு கம்பெனியார்கூட இங்கு நிப்புகள் வாங்கு கின்றனர்.

கல்வி: கல்வித்துறையில் இவ்வட்டம் முன்னேறி யுள்ளது. அரசினர் உயர்நிலைப்பள்ளிகள் இவ்வட்டத்திற் போல்; அதிகமாக இம்மாவட்டத்தில் வேறு எங்கும் காண இயலாது. பள்ளிகளுக்குள் போட்டியிருப்பதால், தரமான கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் பெரும்பாலும் உள்ளூர் அல்லது சுற்று வட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இப்பகுதியில் பள்ளிகளின் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம்.

நூலக இயக்கம் பரவியிருக்கிறது. ஊர்தோறும் ஓர் நூலகத்தைக் காணலாம்.

ஆட்சி முறை: இவ்வட்டத்திற்குத் தமிழ்நாடு சட்டப் சட்டப் பேரவையில் மூன்று இடங்கள் இருப்பது குறிப் பிடத்தக்கது. மாவட்ட அதிகாரி அந்தஸ்து உள்ள பல அலுவலர்களின் அலுவலகங்கள் விருதுநகரில் இயங்கி வருகின்றன. விருதுநகரில் ஒரு துணைத் தாசில்தார் அலுவலகமும், சிவகாசியில் கோட்ட ஆட்சி அலுவலகமும் உள்ளன.

இவ்வட்டத்தில் விருதுநகர், சிவகாசி, சாத்தூர் என்ற நகராண்மைக் கழகங்களும், விருதுநகர். சிவகாசி, சாத்தூர், வெம்பக் கோட்டை என்ற நான்கு ஒன்றியங் களும் உள்ளன.

விருதுநகர் நகரம்:

ஊர்ப்பெயர்: ஒவ்வோர் ஊரின் பெயரையும் சுருக்க மாகக் குறிக்க இரயில் நிர்வாகத்தார் ஒரு (code) வைத் திருக்கின்றனர். விருதுநகருக்கு இரயில் டிக்கட்டில் "விபிடி" என்று குறிப்பிடப்பட்டிருக்கும். விருதுநகர் முன்பு 'விருதுபட்டி' என வழங்கி வந்தது.

விருதுபட்டி விருதுநகரானது ஒரு கதை. இந்த நகர், நாடார் சமூகத்தினரின் கோட்டை. இலவசமாகக் கல்வி புகட்டிய உயர்நிலைப்பள்ளி ஒன்றை முதலில் ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டில் விருதுநகர் நாடார் சமூகத்தினருக்கே உரியது. அதன் பயனாகக் கல்வி பரவி இளைஞர்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டது. "நம் ஊர் ஒரு நகராகிவிட வேண்டும், பட்டியாக இருக்கக்கூடாது" என்ற ஆசை அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்வூரின் சிற்பியாகிய செந்திக்குமார

நாடார் தலைமையில் கிளர்ச்சி தொடங்கினர். முதலாவது உலகப்போரில் இவ்வூர் வணிகர் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பெரிதும் ஆதரவாக இருந்தார்கள். அதற்கு நன்றி பாராட்டி, அப்போது சென்னை கவர்னரின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்த சர். பி எஸ். சிவசாமி ஐயரின் சிபார்சை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தார் இவ்வூரின் பெயரை விருது நகர் என்று மாற்ற இசைந்தனர். விருது என்ற சொல்லுக்கு 'தொண்டினைப் பாராட்டித் தரும் பரிசு' என்று பொருள்படும். விருதை ஈந்த ஊர் விருதுபட்டி.

அரசியல்: விருதுநகர் எப்போதுமே அரசியல் விழிப்பு நிறைந்தது. ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆணிவேராக இருந்த இடம் இது. சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் வேரூன்றிப் பரவியதும் இங்கிருந்துதான். பிரிட்டிஷ் வைஸ்ராய் ஒருவர்மீது வெடிகுண்டு வீசச்சதி செய்ததும் விருதுநகரில்தான். இளமையில் தலைவர் காமராஜுக்கு இந்நகரில் ஆதரவு இல்லை. எனினும் பிற்காலத்தில் இந்நகர் வளர்ச்சியும் புகழும் அடைந்தது அவரால்தான்.

நகராண்மைக் கழகம்: பல சிறப்புக்கள் விருது நகருக்கு உண்டு. 1915-இல் இங்கு 'நகரசபை' ஏற்பட்டது. முதல் தலைவராக எம். எஸ். பி. செந்திக்குமார நாடார் தேர்ந்தெடுக்கப்பெற்றார். தொடக்கப்பள்ளிகளும் கல்லூரியும் மருத்துவ நிலையமும் அமைத்த பெரியார் இவர். இவரது மகன், பேரன் ஆகியோரும் நகரசபைத் தலைவராக இருந்திருக்கின்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையினர் தங்கள் நகரத் தந்தையாக இருந்திருப்பது தமிழ்நாட்டில் இங்கு மட்டுமே. சிறையில் இருந்தபோது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒருவர், விடுதலையானதும் ஒரே ஒரு

நாள் மட்டும் தலைவராக இருந்துவிட்டுப் பிறகு விலகிக் கொண்டார்; அவர்தான் தலைவர் காமராஜ். நகராண்மைக் கழகத்தினர் சித்தாளம்பட்டியில் ஏற்படுத்திய "ஜூபிளிடவுன்" "காமராஜ் நகர்" என்று பெயரிடப் பெற்றிருக்கிறது. விருதுநகரின் வளர்ச்சிக்குப்பெரிதும் பாடுபட்டிருக்கும் ஒரு பெரியவர் அரசியலிலும் வாணிகத்திலும் பெரும் புகழ்பெற்ற 'வி. வி. ஆர்' என்ற வே. வே. இராமசாமி நாடார். இவர் பத்தாண்டுக்காலம் இந்நகராண்மைக் கழகத் தலைவராக இருந்திருக்கிறார். நாடார் சமூகத்தார் இவரது பணிகளைப் பாராட்டி இவருக்குச் செங்கோல் வழங்கியுள்ளனர்.

மாநிலத்திலேயே முதலாவதாகச் சிமெண்டு ரோடு போட்டது இந்த நகரிலேயே என்று சொல்லுகிறார்கள். எண்ணெயால் இயங்கும் இயந்திரம் மூலம் நகர் முழுவதும் மின்சார விளக்கு 1924லேயே போடப்பட்ட பெருமையும் விருதுநகரைச் சேரும்.

வாணிகம்: உணவுப்பொருள்களையும், மலைத்தோட்ட விளைபொருள்களையும், விருதுநகர் வணிகர் வியாபாரம் செய்து வருகின்றனர். தேங்காய் எண்ணெய் ஆலைகளும் உள்ளன. 1945 வரை இலங்கையிலிருந்து தேங்காய் எண்ணெய் வரவழைத்து விற்று வந்தனர். இறக்குமதி தடை செய்யப்பட்டபிறகு, தாங்களே அதைப்போல தயாரிக்க முன்வந்தனர். இவ்வாறு இங்கு செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கும் "கொழும்புத் தேங்காய் எண்ணெய்" என்றே பெயர் வழங்குகிறது. சிக்கரி என்னும் ஒருவகைக் காப்பித்தூள் விற்பனை உரிமை இந்தியா முழுவதற்கும் இந்நகரினரிடமே இருக்கிறது. இங்கிருந்து 110 கி. மீ. தொலைவில் போடி நாயக்கனூர்ப் பகுதியில் விளையும் ஏலக்காய்க்கு விருது

நகர்தான் மார்க்கட். விருதுநகர் வணிகர் வைத்தது தான் இந்தியாவில் ஏலக்காயின் விலை. இதைப்பற்றி இங்கு உள்ளவர்களிடம் கேட்டால் தென் ஆப்பிரிக்கா வைரத்துக்கும் இந்தியச் சணலுக்கும், இலங்கைத் தேயிலைக்கும் லண்டன் மார்க்கட்டில் வைத்ததுதானே விலை, அதுபோல எங்களூரில் விளையாத பொருள் களுக்கும் நாங்களே விலையை முடிவு செய்வதில் தவறு என்ன என்று கேட்பார்கள். ஏலக்காயை ஏல அரிசி ஆக்கியபின் எஞ்சும் தோலை வீணுக்காது பேல்போட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி அதையும் விற்றுப் பண மாக்கும் தனித்திறமை இவ்வணிகருக்கு உண்டு.

கடலை எண்ணெய்யுடன் தேங்காய் எண்ணெய் யைக் கலந்துவிட்டதாகவும், சிலவகைக் கிழங்கு களைக் காப்பித்தூளில் சேர்த்து விற்றதாகவும் உளுந்துடன் கறம்பை மண்ணை இரண்டறக் கலந்து வழங்கியதாகவும் உப்பில் எகல் ஆற்று மணலைக் கலந்த தாகவும், தேயிலைக் கொழுந்தோடு மஞ்சணத்தி இலை யைச் சேர்த்து விற்றதாகவும் சிலர் 1962 அளவில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகள்வரை தமிழ்நாடெங்கும் பொது வாழ்வில் விருதுநகருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. நம்நாட்டு வணிகர் அனைவரும் இப்போது தரமான பொருள்களைப்பயன் படுத்திவருவதும் அரசினரும் அதில் ஆர்வம் காட்டிக் கலப்படத்தை ஒழித்துவருவதும் மகிழ்ச்சிக்குரியது.

பொதுவாக இங்கு வியாபாரம் பெரிய அளவில் நடைபெறுகிறது. தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள கடைத்தெரு, பழைய டில்லியில் சாந்தினி சவுக்கைப் போலவே செல்வச் செழிப்பும் அசுத்தமும் நிறைந்தது. விருதுநகர் கடைகளின் முன்தோற்றம்-கல்கத்தாவில் மார்வாடிகளின் சலவைக்கல் அரண்மனைகளைப்போலவே

—மிகச்சிறிதாகவும் படாடோபமின்றியும் இருக்கும். வெற்றிலைப்பாக்குக் கடையோ என்று நினைக்க நேரும். உள்ளே இடப்பரப்பு பெரிதாக இருந்தாலும், பாதை குறுகியதாகவே இருக்கும்.

இரயில் நிர்வாகத்தினர்க்கு விருதுநகர் நிலையத்தின் மூலம் பிரயாணிகளால் கிடைக்கும் வருவாயைவிடப் பொருள்கள் போக்குவரத்தால்தான் கூடுதலான வருவாய் கிடைக்கிறது. தமிழ்நாட்டிலேயே மிக நீளமான இரயில் மேடை (பிளாட்பாரம்)யும் சரக்கு ஏற்றும் இரயில் வண்டிகளை இங்கு நிறுத்துவதற்கு மார்ஷலிங் யார்டும் அமைக்கப்பெற்றுள்ளன. இதற்கு ஒப்பாகப் பெரிய அளவில் சரக்கு ஏற்றுமதி இறக்குமதி நடைபெறும் சந்திப்பு மக்கள் நெருக்கமுள்ள உத்தரப் பிரதேசத்தில் கங்கையால் வளமடைந்துள்ள மொகால் சராய் ஆகும்.

விருதுநகரின் சுற்றுப்புறத்தில் அருப்புக் கோட்டை; சாத்தூர், திருமங்கலம் வரையிலும் கருங்கண்ணிப் பஞ்சு 20, 000 கண்டி விளைகிறது. தமிழ்நாட்டில் கருங் கண்ணிப் பஞ்சு கிடைக்கும் ஏனைய இடங்கள் கோயம் புத்தூர், கோவில்பட்டி, வடஇந்தியாவில் சூரத் ஆகிய பகுதிகள் தான். கருங்கண்ணி என்பது குறுகிய இழைப் பருத்தி (Short Staple Cotton) ஆங்கிலேயரும் ஜப்பானி யரும் விருதுநகரில் பருத்தி அறைக்கும் இயந்திரங்களை நிறுவி தங்கள் நாட்டுக்கு 1910 முதல் ஏற்றுமதி செய்து வந்திருக்கின்றனர்.

பஞ்சு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூலைச் சுற்றிவைப்பதற்குப் பயன்படும் அட்டைக்குழாய் செய் யும் இந்தியன் டெக்ஸ்டைல் பேப்பர் டியூப் கம்பெனி விருதுநகரில் நடைபெறுகிறது. இந்தத் தொழிற்

சாலையைப் பற்றி 14-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

விருதுநகருக்கு அருகே யுள்ள சூலக்கரையில் தமிழக அரசு ஒரு தொழில்பேட்டையைத் தொடங்கியுள்ளது. இங்கு'சிலவகையான தகரங்களும் ஆணிகளும் செய்யும் தொழிற்சாலைகள் நடந்து வருகின்றன. தொழில் பேட்டைக்கு அருகேயுள்ள தொழிற் பயிற்சிப் பள்ளியில் ஆறு தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. ஒருவர் ஒரு தொழிலில் மட்டுமே பயிற்சி பெறலாம். அந்தத்தொழிலிலேயே பல பொருள்களைச் செய்து பழக வேண்டும். மூன்று ஆண்டு படித்த பின் தேர்வு எழுதி; இந்தியத் தொழிற் கல்விக்குழுவின் சான்றிதழைப்பெற வேண்டும். விருதுநகர் தொழிற்பயிற்சிப் பள்ளிக்கு 2½ லட்சம் ரூபாய் செலவில் புத்தம்புதிய மரம் இழைக்கும் இயந்திரங்கள் ரஷ்யா முதலிய பல நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள.

இங்குள்ள படிப்புகளில் பொருத்தமைப்புக்கலை Fittings என்பது ஒன்று. Cutting Plier, Punch Plier, Screw Spanner, Cycle Spanner, Wind Compass ஆகியவற்றையும் சிலவகைக் குறடுகளையும் மாணவர்கள் செய்து பழகுகிறார்கள். தகுதியுள்ளவர்களுக்கு உதவிச் சம்பளம் உண்டு. பயிற்சி முடிந்ததும் பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, போப்பால் மின்சாரக் கருவித் தொழிற்சாலை ஆகியவற்றில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

விருதுநகரில் இருப்பவை: பருத்தி அறைக்கும் இயந்திரங்கள், கடலை எண்ணெய் ஆலைகள், 350 லாரிகள், 200 கைவண்டிகள், 6 உயர்நிலைப் பள்ளிகள், இரு கலைக்கல்லூரிகள், ஒரு தொழில்கல்லூரி;

போரிங் பம்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சுருட்டுத் தொழிற்சாலை, சோப்புத் தொழிற்சாலைகள், ஐதராபாத்திலிருந்து வெள்ளைத் துவரையை செம் மண்ணில் ஊறவைத்துக் களத்தில் காயப்போட்டு பருப்பாக உடைத்து மூட்டைபோட்டு விற்பனை செய்யும் 54 தொழிற்சாலைகள், இரண்டு இருப்புப்பட்டறைகள், 20 கெசட்டட் அதிகாரிகளின் அலுவலகங்கள், பெரிய தொரு மருத்துவமனை, மூன்றுமைல் தொலைவிலுள்ள சூலக்கரையில் ஒரு நெசவாலை.

இங்கிருந்து வெளிவருவது—உள்ளூர் மார்க்கட் பற்றிய 'டெய்லி ரிப்போர்ட்' என்ற நாளிதழ்.

கனமான நீர்: நகருக்கு மேற்கே கௌசிக நதி என்ற காட்டாறு செல்லுகிறது. இந்நகரில் குடிதண்ணீர் கனமாக இருக்கிறது.

மாரியம்மன் கோவில்: விருதுநகர் மக்களும், சுற்று வட்டத்திலுள்ள 96 சிற்றூர்களில் வாழும் மக்களும் குல தெய்வமாகக் கருதும் மாரியம்மன் கோவிலில் பங்குனி மாதத்தில் 21 நாள் திருவிழா நிகழும். தேர் புறப் பாட்டுக்கு முந்தின நாளில் நடைபெறும் தீச்சட்டிவிழா இந்தத் திருவிழாவுக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோலப் பெருஞ்சிறப்புடன் அமையும். அன்று மக்கள் அனைவரும் புத்தாடை உடுத்தி, தீபாவளித் திருநாளைக் கொண்டாடு வதுபோலக் கொண்டாடி மகிழ்வர்.

இந்நகர்பற்றிய பழமொழி: விருதுநகர் எதையும் உற்பத்தி செய்யவில்லை. ஆனால் எல்லாவற்றையும் கைக்குள் வைத்திருக்கிறது. Virudhunagar produces nothing. But Controls Everything)

இந்நகரின் பெருமை: இந்தியாவெங்கும் இந்நகரினர் பரவியிருப்பது.

இந்நகரின் ஏற்றுமதி: மிளகாய் வற்றல், சோடா தொழிற்சாலை வாயிலாகக் கனமான தண்ணீர், நல்லெண்ணெய், பல சரக்கு.

மக்கள் தொகை: 70,000.

சுற்று வட்டத்திலிருந்து வந்துபோகிறவர் உட்பட, இந்நகரில் பலவகைத் தொழில்களில் வேலை பார்ப்பவர் தொகை 50,000

பாராட்டுக்குரியது: பிறர் பேச்சையும் ஏச்சையும் பொருட்படுத்தாது விடாமுயற்சியுடன் தங்கள் முன்னேற்றத்துக்கு உழைக்கும் மனப்பாங்கு.

விருதுநகர் வாசிகளின் விருப்பம்: தங்கள் நகர், மாவட்டத்தின் தலைநகராக வேண்டும் என்பது.

சிவகாசி நகர்:

சிறிய ஜப்பான் என்று பெயர் பெற்று தொழில் துறையில் பெரிதும் முன்னேறியுள்ள நகரம் சிவகாசி. பல நூற்றாண்டுகளுக்குமுன் பாண்டியமன்னன் ஒருவன் தமிழ்நாட்டின் தென்கோடியில் சிவன்கோவில் நிறுவ, காசியில் சிவலிங்கம் எடுத்து வரும்வழியில் இங்கு எதிர் பாராத முறையில் அந்தச் சிவலிங்கத்தை நிலைநாட்டி அதற்குக் கோவில் எடுத்ததாயும் அதைச்சுற்றி அமைந்த நகர் சிவகாசி எனப்பெயர் பெற்றதாயும் கூறுகிறார்கள். இக்கோவில் நகரின் நடுவே அமைந்திருக்கிறது. திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

பிற்காலத்தில் பத்திரகாளியம்மன் கோவிலும், மாரியம்மன்கோவிலும் ஏற்பட்டு நாடார் சமூகப்பெரு மக்களின் பேராதரவால் புகழ்பெற்றுள்ளன.

மாசிமாதம் இவ்வூரிலிருக்கும் ஒவ்வொரு சின்னஞ் சிறு பூடத்துக்கும் விரிவான பூசைகள் நடத்தி சாமி

கும்பிடுவார்கள். இங்குள்ளவர்களும் இங்கு வாழ்ந்து விட்டு வெளியூர் சென்று பிழைக்கப்போனவர்களும்-தங்கள் தங்கள் குலதெய்வத்தைப் பூஜிப்பதற்காக ஜே ஜே என்று அந்த மாதம் கூடுவர். அப்போது ஒவ்வொரு தெருவிலும் கோலாகலமான விழா நடப்பது எந்த ஊரிலும் காணமுடியாத காட்சி.

சிவகாசியிலுள்ள விசுவநாதர் கோவிலுக்கு மானியமாக அரசர்கள் அளித்த ஊர்கள் விசுவநத்தம், விசுவநாதபுரம் என்ற பெயருடன் சிவகாசி அருகே உள்ளன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மறவர்களுக்கும் நாடார்களுக்கும் இப்பகுதியில் பெரியதொரு கலகம் ஏற்பட்டது. அதுமுதல் ஆங்கில அரசு இந்நகரில் கவனம் செலுத்தியது. மலபார் ஸ்பெசல் போலீசு என்னும் ஆயுதம் தாங்கிய படை சிவகாசியில் நிலையாகத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார்கள். இப்படையினரின் குடியிருப்பை இன்றும் காணலாம்.

சாத்தூரிலிருந்து உதவி கலெக்டர் அலுவலகம் 1914-இல் இங்குமாற்றப்பட்டது. சிவகாசி கோட்டாட்சித் தலைவராய் அனுபவம் நிறைந்த ஐ. சி. எஸ். காரர்களையே நியமிக்கும் வழக்கத்தை ஆங்கிலேயர் கைக் கொண்டிருந்தனர். இதைப்பற்றி 'The Steel Frame and I' என்ற நூலில் எஸ். கே. செட்டூர் எழுதியுள்ளார்.

1930 வரை சிவகாசியும் அதன் சுற்றுப்புறமும் பொருளாதாரத் துறையில் சீர்கெட்ட நிலையில் இருந்தன. வேறு சில வட்டங்களைப்போல இங்குள்ளவர்கள் கடல்கடந்து செல்லவில்லை. இங்கேயே வேளாண்மை செய்வதற்கும் வாய்ப்பில்லை, காரணம் மழை மிகவும் குறைவு. ஒரு சதுரமைலுக்கு, பத்து லட்சம் கன அடி

(1 m. cft. = 23 Acre Ft.) என்ற அடிப்படையில் இம் மாவட்டத்தில் மழை விவரம் வருமாறு.

வற்றாயிருப்பு—	15.00
நெற்குப்பை—	10.19
ஸ்ரீ வில்லிபுத்தூர்—	9.00
விருதுநகர்—	7.80
சாத்தூர்—	6.40
சிவகாசி—	5.40

மழை மிகவும் குறைந்திருப்பதையே பயன்படுத்தி அதற்கேற்ற தொழில்களை உண்டாக்கியிருப்பது இந் நகரப் பெருமக்களின் பெரிய சாதனை. இதனால் இந் நகர் பெரிதும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இரயில் வசதியோடு, பஸ், லாரி போக்குவரத்துகளும் பெருகி இருக்கின்றன. இங்கிருந்து பல திக்குகளிலும் சிறந்த சாலைகள் ஏற்பட்டுள்ளன.

சிவகாசி இரயில்நிலையம் 1970-இல் மிகவும் விரி வாக்கப்பட்டிருக்கிறது. அருகேயுள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு இங்கிருந்து பாதை பிரிகிறது. சிமெண்ட் மூட்டைகளை வைத்திருப்பதற் கான பெரிய கையிருப்பு கிடங்கு சிவகாசியில் கட்டப் படும் என்று தெரிகிறது.

இந்நகரின் தலையாய தொழில் தீக்குச்சி தயாரித்தல். ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. இவை ஆண்டு தோறும் அளவிலும் தரத்திலும் உயர்ந்து வருகின்றன. இந்தத் தீப்பெட்டி ஆபீசுகளுக்கு வேலையாட்களைக் கொண்டு வருவதற்காகப் பெரிய தொழிற்சாலைகள் தாங்களே பஸ்களை நடமாட விடுகிறார்கள். அதிகாலை இரண்டு மணிக்கே சுற்றுவட்ட ஊர்களுக்குச் சென்று

வேலைசெய்யும் பெண்களை அழைத்து வருகின்றனர். காலை 5 மணியிலிருந்து மாலை 5 மணிவரை, இவர்கள் தீப்பெட்டிகளில் குச்சிகளை அடைக்கிறார்கள். பிறகு மீண்டும் பஸ்களில் வீடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

கவர்ச்சிகரமான வண்ணங்களுடன் படங்களை அச்சிடும் லித்தோ அச்சகங்கள் இங்கு ஏற்பட்டு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் புகழ்பெற்றுள்ளன. இவற்றில் வியாபாரப் பொருள்களின் அடையாள லேபில்களும் சுவரொட்டிகளும் கண்ணைப் பறிக்கும் படங்களுடைய நாட்காட்டிகளும் அச்சிடப்படுகின்றன. பத்து ஆப்செட் இயந்திரங்கள் உள்ள பெரிய அச்சகங் களும் உள்ளன. Graphic Arts Technical Foundation, Pittsburg, U. S. A. என்பது போன்ற உலகப்புகழ் பெற்ற கவின்கலை நிறுவனங்களுடன் இணைந்துள்ள லித்தோ அச்சகங்களும் உள்ளன. இவற்றுடன் இவ் வகையில் சிறந்து விளங்கும் காரனேசன் லித்தோ அச்சகம் அச்சுத்துறையில் பல விருதுகளைப் பெற்றிருக் கிறது.

இத்தகைய அச்சகங்கள், இறையுருவங்கள், இயற்கைக் காட்சிகள், கட்டிடங்கள், அரசியல் தலைவர் கள் ஆகியோருடைய படங்களைத் தீட்டுவதிலும், அச்சிடு வதிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன. அச்சில் படிப்பதற்கேற்றவாறு அழகிய சித்திரங்களைத் தீட்டுவதற்கென கைதேர்ந்த ஓவியர் பலரைத் தாங்களே முழுநேர ஓவியராக நியமித்துக் கொண்டிருக்கின்றன. வீட்டிலிருந்தே சித்திரம் போடுவதைத் தொழிலாக உடையவர்களும் இருக்கிறார்கள். சித்திரத்துக்கு சிவகாசி என்பது பழமொழியாக வழங்கிவருகிறது.

போட்டோ ஆப்செட் வகையிலும் 1967க்குப் பிறகு சிவகாசி முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆறு

வண்ணங்களை ஒரே நேரத்தில் அச்சிடக்கூடிய இயந்திரங்களும் உள்ளன. இவ்வகையில் இந்தியாவின் பெரும் பான்மையான தேவையைச் சிவகாசி நிறைவேற்றி வருகிறது.

அச்சுத்தொழிலையொட்டி, பளபளப்பான தாள்கள் உட்படப் பலவகைக் காகிதங்கள், அச்சுமை, அச்சுக் கருவிகளின் பகுதிகள் ஆகியவற்றின் மொத்தவியாபாரம் இந்நகரில் பெருகியிருக்கிறது.

பட்டாசு முதலிய பொருள்களின் உற்பத்தியிலும் இந்நகர் சிறந்துவிளங்குகிறது. இதைப்பற்றி இந்நூலின் முற்பகுதியில் தொழில்கள் என்ற பகுதியில் விரிவாகக் கூறியிருக்கிறோம். அப்போலோ, ராக்கெட்டு என்ற வாணங்களும் சில ஆண்டுகளாகச் செய்யப்படுகின்றன.

திரு. அய்யநாடார் முயற்சியால் இங்கு தகரங்களின் மீது வியாபாரப் பெயர்களையும் விளம்பரங்களையும் அச்சிடும் மிகப்பெரிய அச்சகம் ஏற்பட்டிருக்கிறது. பம்பாயில் நிலவும் இவ்வகை அச்சகங்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் இத்துறையில் முன்னேற்றம் காண சிவகாசியில் அடிகோலப் பெற்றிருக்கிறது.

தகரப்புட்டிகள் செய்யும் இயந்திரங்கள் (Can making machinery) உள்ள தொழிற்சாலைகளும் ஏற்பட்டுள்ளன.

பாலிதின் கவர்களில் அடைக்கப்பட்ட மாட்டுத் தீவனம் செய்வதில் சிவகாசி வணிகர் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். மாடுகள், கூடுதலாகப் பால் சுரக்க உதவுமாறு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி இந்த உணவுகள் செய்யப்படுகின்றன.

தொழில் வளர்ச்சியால் இந்திய அரசாங்கத்துக்கு இந்நகரிலிருந்து மிகப்பெரிய தொகை மாதந்தோறும் வரியாகக் கிடைக்கிறது.

சென்னையில் நடைபெற்றுவரும் பிராந்திய அச்சுக் கல்லூரியுடன் இணைந்த ஒரு கல்லூரியை இங்கு அமைப்பது பயனுடையதாக இருக்கும். கவின் அச்சுக் கலை என்றநூல் இந்நகரிலிருந்து வெளிவந்திருக்கிறது. சிவகாசி இசைக்குழுவினர் ஆண்டுதோறும் சிவகாசி வழிகாட்டி என்னும் நூலை வெளியிட்டு வருகின்றனர். சிவகாசி முரசு என்ற இதழும் வெளிவருகிறது.

திரு கே. சி. ஏ. டி. ஞானகிரி நாடார், திரு. அய்ய நாடார், திரு. ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இராசரத்தின நாடார் ஆகிய பெருமக்களும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள பிறதொழில் தலைவர்களும் பலதுறைகளில் இந்நகரின் முன்னேற்றத்திற்கு உதவி வருகின்றனர். இவர்களுடைய முயற்சியால் நாடார் லாட்ஜ் என்னும் வசதியான விடுதி ஏற்பட்டு இந்தியாவெங்குமிருந்து வரும் வணிகர்களுக்குப் பயன்படுகிறது. மாநிலத்தில் வேறு எங்கும் இல்லாத முறையில், வணிகரின் முயற்சி யாலேயே கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஏற்பட்டிருக் கிறது. தனியார் கொடையால் இயங்கிவரும் கல்லூரி களைப் பற்றி இந்நூலின் பிறிதொரு பகுதியில் தெரி வித்திருக்கிறோம். முன்னேறிச் செல்லும் செல்வர் கள் வாழும் எடுத்துக்காட்டாக விளங்கும் நகரமென்று சிவகாசியைச் சொல்லலாம்.

இந்நகரம் 15-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது அதற்குமுன், இங்கு வில்வ மரங்களே இருந்தன. 1420 முதல் 1460 வரை தென்காசியிலிருந்து ஆட்சி செய்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன்

தென்காசியில் கோவில் கட்ட லிங்கம் கொண்டு வரக் காசிக்குச் சென்று திரும்பிவரும்போது, இங்கு தங்கினன். கோவில் அமைக்கும் நாள் வந்துவிட்ட காரணத்தாலும் தம் தேவி இங்கு பூப்பெய்தியதாலும் அந்த லிங்கத்தை இவ்வூரிலேயே பிரதிட்டை செய்து கோவில் எடுத்தான். அதன் விளைவாக, சிவகாசி என்ற பெயருடன் ஊர் உண்டாயிற்று. வடக்கே வட காசி, தெற்கே தென் காசி நடுவே சிவகாசி என்ற சொற்றொடரும் ஏற்பட்டது.

சிவன் கோவில் திருவிழா வைகாசி ரோகணியில் தொடங்குகிறது. மாரியம்மன் கோவில் விழா பங்குனி மாதத்தில் நிகழ்கிறது. பத்ரகாளியம்மன் விழா சித்திராப்பவுர்ணமி விழாவாகும். சுப்பிரமணியர் கோவில் பிரம்மோற்சவம் தை மாதம் நடைபெறுகிறது. செண்பகவிநாயகர் தெப்பத்தில் ஆடித்தபசு விழா எடுக்கப்படுகிறது.

இவ்விழாக்களுள் பத்ரகாளியம்மனின் சித்திரைத் திருவிழா மிகச் சிறப்பானது. அக்காலத்தில் சிவகாசி நகரம் புதுப்பொலிவும் தனிக் களையும் கொண்டு கல கலப்புடன் காட்சியளிக்கும். வெளியூர் வாழ் சிவகாசி நாடார்கள் குடும்பத்துடன் இங்கு வந்து இவ்விழாவை நடத்தி வைப்பர். நாடார்களின் வீடுகள் அக்காலத்தில் வெள்ளையடிக்கப்படுகின்றன. நாடார்களின் மகமைப் பணத்திலிருந்து இவ்விழா மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. விழாவை யொட்டி 10 நாட்களும் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

சித்திரை விழாவை யொட்டி 1945 முதல் ஒரு பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. இந்நாட்களில், பல ஊர்களிலிருந்து, இந்நகருக்கு கூடுதலான பஸ்கள் விடப்படுகின்றன.

தைப் பிரமோற்சவம் ஒன்பதாம் நாளில் வணிகரும் சிறுதொழில் உரிமையாளரும் உழவரும் தங்களுடைய தொழிற் பொருள்களை, சுப்பிரமணிய சுவாமியின் திருவுலாவுடன் எடுத்துச் செல்லுகின்றனர்.

கணக்குரெட்டிபட்டி, அம்மன் கோவில்பட்டி, பரையபட்டி, ராவுத்தர்பாளையம், தெப்பத்துப்பட்டி என்ற ஊர்கள் இணைந்து சிவகாசி நகர் உண்டானதாகக் கூறப்படுகிறது. திருமலை நாயக்கர், தம் பிரதிநிதியாக, அவருடைய இளவல் குமார முத்துவீரப்ப நாயக்கரை 1659-இல் நியமித்தார். இவர் சிவகாசி விசுவநாதர் கோவிலை விரிவாக்கி, தெப்ப விழாவும் ஏற்படுத்தினார். நாயக்கர் தெப்பம் என்ற மண்டகப்படி இன்றளவும் நடைபெற்று வருகிறது.

கோவிலுக்குள் நாடார்கள் நுழைவதை 1899-இல் மறவர்கள் தடுத்தனர். கலகம் நிகழ்ந்தது. 153 பேர் உயிரிழந்தனர். இதன் விளைவாக ஆயுதந் தாங்கிய படை தங்கும் இடமாகவும் கோட்ட ஆட்சித் தலை நகராகவும் சிவகாசி சிறப்புப் பெற்றது. விருதுநகர்-ஸ்ரீவில்லிபுத்தூர் இரயில் பாதை சிவகாசியை இணைக்குமாறு சுற்றி வளைத்து அமைக்கப்பட்டது. சிற்றூர்களில் வாழ்ந்த நாடார்கள் கலகங்களுக்கு அஞ்சி, தொகுப்பாக சிவகாசியில் குடியேறினர். சிறு தெருக்களில் சன்னல் இல்லாத வீடுகளை நெருக்கமாகக் கட்டிக் கொண்டனர். இதனால் ஏற்பட்ட ஒற்றுமையும் மன உறுதியும் அவர்களுடைய முன்னேற்றத்துக்கும் சிவகாசியின் வளர்ச்சிக்கும் அடிகோலின.

மெழுகுதிரி, வார்ணிஷ், வஜ்ரம், இரும்பு வார்ப்படக் கடசல் வேலைத் தொழிற்சாலைகளும் ஏற்

பட்டுவ்ளன. பம்ப் செட்டுகளும் சைக்கிள் சங்கிலிகளும் இந்நகரில் செய்யப்படுகின்றன. இந்நகரின் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள்:

தீப்பெட்டித் தொழில் தந்தை—திரு. அய்ய நாடார்.

வாண வெடித் தொழில் தந்தையர்—திரு. சண்முக நாடார், திரு. ராஜரத்தின நாடார்.

கேப் வெடித் தந்தை—திரு. கே. எம். கே. அண்ணாமலை நாடார்.

அச்சுத் தொழில் தந்தை—திரு. அருணகிரி நாடார்.

விசிறித் தொழில் தந்தை—திரு. கே. எம். சிந்தாஷா.

இந்நகரிலுள்ள சில சமூகங்களில் திருமணம், சாவு, கடவுள் வழிபாடு ஆகியவற்றுக்கு இன்ன இன்ன ஒலி இன்ன இன்ன தாளம் என்ற வரம்பு முறை நிலவிவருகிறது. பெண்கள் சில சமயம் உட்கார்ந்தும் சில சமயம் தங்களைத் தாங்களே சுற்றிக் கொண்டும் ஒலியெழுப்புகின்றனர்.

இப்போது சாத்தூர்ச் சாலையில் கோட்டைமேடு என வழங்கப்படும் ஊரின் பழைய பெயர் பேராயபட்டி. இது பேரார்பட்டி என்பதன் திரிபு. Berar என்பது ஆந்திரப் பிரதேசத்தின் வடிகோடியிலுள்ள ஊர்; ஐதராபாத் நிஜாமின் மூத்த மகனுக்கு பேரார் இளவரசர் என்று பட்டப்பெயர் உண்டு. நிஜாம் ஆட்சி ஏற்படுமுன் பேரார், விஜயநகர ஆட்சியில் இருந்தது. விசயநகர இளவரசர் பேராரில் வாழ்வது வழக்கமாக இருந்தது. திருமலை நாயக்கரிடம் கப்பம் வசூலிக்க, பேராரிலிருந்து படைகளுடன் விஜயநகர

இளவரசர் வேங்கடராயலு மதுரைக்கு வந்தார். அப்போது விசயநகரம் முகமதியரால் படையெடுக்கப்பட்டதால் அவர் திரும்பிச் செல்ல இயலவில்லை; அவர் சிவகாசி அருகே ஒரு கோட்டை கட்டிக் கொண்டு தம் படையுடன் தங்கினார். கோட்டை இடிந்தபிறகு, ஊர்ப் பெயர் கோட்டைமேடு ஆயிற்று. வேங்கடராயலு வழியினரே இன்றும் இவ்வூரில் நாட்டாண்மைக் காரராக உள்ளனர்.

சாத்தூர் நகரம்:

அமைப்பு: வைப்பாற்றின் வடகரையில் உப்போடைக்குத் தெற்கே சமசதுரமாக அமைந்த நகர். நகராண்மைக் கழகப் பகுதியின் மக்கள் தொகை ஏழத்தாழ 30,000. மதுரை 48 மைல் (74 கி. மீ.), விருதுநகர் 19 (30. கி. மீ.). சிவகாசி, கோவில்பட்டி இரண்டும் 12 (18 கி. மீ.) திருநெல்வேலி 50 மைல் (80 கி. மீ.).

ஊர்ப்பெயர்: இதன் உண்மைப் பெயர் சாத்தனூராகும். அப்பெயர்க்குக் காரணமான சாத்தனும் 1,100 ஆண்டுகளுக்குமுன் பாண்டி நாட்டை ஆண்ட பெருமன்னனும் ஆகிய மாறன் வல்லப தேவன் ஆட்சியில் சாத்தூருக்குக் கிழக்கிலும் வடக்கிலும் எருக்கங்குடியில் பெரிய ஏரி ஒன்றைப் புதுப்பித்தான். அதைக் கூறும் கல்வெட்டிலிருந்து இப்பகுதிக்கு இருஞ்சோழ நாடு அல்லது இருஞ்சோணாடு என்று பெயர் வழங்கிய தென்றும், இருக்கங்குடியின் பழைய பெயர் இருப்பைக்குடி என்றும் கரை செய்து மடை வைத்தவன் இருப்பைக்குடிக் கிழவன் என்றும் தெரிகிறது.

நகரின் பெயருக்கு வேறொரு காரணமும் கூறுவர். பலநூற்றாண்டுகட்குமுன் இப்பகுதி காடாக இருந்தது என்றும், காட்டின் இடையே அமைந்த ஐயனார்

(சாத்தன்) கோவிலைச் சுற்றி உண்டானதால் சாத்தூர் ஆயிற்று என்றும் கூறுவர். வைப்பாற்றின் வடகரையில் (நகரின் கிழக்கெல்லையில்) இருக்கும் சாத்தூரப்பன் கோவிலே, இக்கோவில் என்பர்.

கோவில்கள்: சிறப்புடன் நடைபெற்றுவரும் சிவகாம சுந்தரி-சிதம்பரேசுவரர் கோவிலும் வைப்பாற்றின் கரையில் நாயக்க மன்னர் காலத்தில் ஏற்பட்ட வேங்கடாசலபதிப் பெருமாள் கோவிலும் பொலிவுடன் விளங்குகின்றன.

வரலாறு: சாத்தூர் வரலாற்றுப் புகழ் பெற்றது. வைப்பாற்றுக்குத் தெற்கே இரயில் பாதையை அடுத்து நல்லம நாயக்கன் கோட்டைப் பகுதியில் ஒருநகரம் புதைந்து கிடப்பதாகப் புதை பொருள் அறிஞர் கருதுவர். புத்தரின் கல் உருவமும் நாணயங்களும் இங்கு எடுக்கப் பெற்றுள்ளன. வடக்கே ஏழு மைலில் சிமிண்ட் ஆலை ஏற்பட்டிருக்கும் பகுதி துலுக்கபட்டி எனப்படும். மேற்கே 16 மைலில் துலுக்கக்குறிச்சி என்னும் சிற்றூர் இருக்கிறது. இவை இவ்வட்டாரத்தில் இசுலாம் பரவியதற்குச் சான்று. மொகலாயப் பேரரசனை ஷாஜஹான் கட்டிய மசூதி மேல்கருப்பர் சாமி கோவில் அருகே காணப்படுகிறது. அவன் கட்டிய சத்திரமும் சாத்தூரில் உண்டு, சத்திரத்துக்கு முற்றூட்டாக அம்மன்னன் வழங்கியதே அருகேயுள்ள சத்திரப்பட்டி. ஷா ஜஹானின் படைகள் தங்கிய இடம் செவ்வாய்மடம். அவன் 300 முசுலிம் குடும்பங்களைக் குடி வைத்தான்.

மதுரையை ஆண்ட மங்கம்மாள் வைப்பாற்றின் மீது முதல் தடவையாக ஒரு பாலம் கட்டினாள். அதுவே சாத்தூரின் தென் எல்லையில் இருக்கும் பாலம். இதன்

பிறகு, திருநெல்வேலிச் சீமைக்கு ஒரு வாயிலாக, சாத்தூர் இருந்து வந்தது. மங்கம்மாள் இங்கு ஒரு பெரிய சத்திரத்தையும் விநாயகர் கோவிலையும் கட்டினுள். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்களுக்கு இந்தச் சத்திரமும் கோவிலும் பெரிதும் உதவின. போர் முடிந்ததும் ஆங்கிலேயர், இந்தச் சத்திரத்தில் தாலூகா கச்சேரியையும் விநாயகர் கோவில் இருந்த இடத்தில் திறைசேரி (Treasury)யும் ஏற்படுத்தினர். திருநெல்வேலி மாவட்டத்துக்குச் சாத்தூரில் ஒரு General Deputy Collector அலுவலகமும் உண்டாக்கினுர்கள். இது 1914-இல் "சப்கலெக்டர் ஆபீஸ்" எனப் பெயர் மாறி, சிவகாசிக்கு மாற்றப் பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில் சாத்தூரில் கிறித்தவ சமயம் பரவியது. தரங்கம்பாடி அருளப்பர், நாடார் குலத்தினரின் குறைகளை நீக்கி அவர்களைத் தம் மதத்தில் ஈர்த்தார். பிராடஸ்டண்டு, கத்தோலிக்க தேவாலயங்கள் கட்டப்பெற்றன. கன்னிமார் மடம், போதனுமுறைப் பள்ளி ஆகியவை கிறித்தவர்களால் ஏற்பட்டன.

களவுப் பயம் நீங்கிற்று. பருத்தி, மிளகாய் வற்றல் வியாபாரங்களில் மக்கள் ஈடுபடலாயினர். வில்வண்டிகள் வாயிலாகச் சங்கரன் கோவில், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பகுதிகளுடன் வியாபாரம் பெருகிற்று. 1886-இல் ஊராட்சி மன்றம் ஏற்பட்டது. தூத்துக்குடிக்கு இரயில் பாதை ஏற்பட்டு; சாத்தூர் முன்னேற்றப் பாதையில் விரைவாக அடியெடுத்து வைத்தது.

சாத்தூரை ஓர் இரயில் சந்திப்பாக ஆக்கி, இந்நகரிலிருந்து திருவனந்தபுரத்துக்கு இரயில் பாதை போட, ஆங்கிலேயர் திட்டமிட்டு ஏற்பாடனைத்தும் செய்து

விட்டனர். அந்நிலையில் விருதுநகர் மக்கள் பெரிதும் முயன்று. அந்தத் திட்டத்தை விருதுநகர்—திருவனந்த புரம் பாதையாக மாற்றினர். இவ்வாறே 1960-இல் மானாமதுரை — முதுகுளத்தூர் — தூத்துக்குடி இரயில் பாதைத் திட்டம், மானாமதுரை—விருதுநகர் திட்டமாக் கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியில் பருத்தி அறைக்கும் ஆலைகளை ஜப்பானியர் ஏற்படுத்தினர். அவை 1941-இல் 'எதிரிகளின் சொத்து' என ஏலம் போடப்பெற்று இந்தியர் கைக்கு மாறி 'ஈஸ்டு இந்தியா கார்ப்பரேசன்' என்ற பெயரில் நடந்து வருகின்றன.

கல்வி: கல்வித்துறையில் இந்நகர் முன்னேறி வருகிறது. நான்கு உயர்நிலைப்பள்ளி மாணவர் அனைவர்க்கும் பயன்படும் வண்ணம் வசதியாக நுரையீரல் (T. B.) மருத்துவமனை கட்டப்பட்டிருக்கிறது. கல்வித்தந்தை திரு. இராமசாமிநாயுடு பெயரால் ஒரு கல்லூரி அமைக்க இவ்வட்ட நாயுடு சமூகத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

தொழில்: ஆங்கிலேயர் ஆட்சியில் பருத்தி அறைக்க ஐந்து ஆலைகளும் தீப்பெட்டி ஆலைகளும் நிப் தொழிற் சாலைகளும் தொடங்கப்பெற்றன. 1886-இல் 3,000 மக்கள் வாழ்ந்த சாத்தூர் 1947-இல் 11, 000 பேர் உள்ள சிறு நகர் ஆயிற்று. சுதந்திர இந்தியாவில் இத்தொழில் கள் மேலும் விரிவடைந்தன. தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டும் சில இரசாயனப் பொருள்களும் செய்யப்படு கின்றன. சாலைப்போக்குவரத்து மிகவும் பெருகியிருக் கிறது. 'பை—பாஸ் ரோடு' போடப்பட்டிருக்கிறது. 'நாகர்கோவில்வரை விரைவுப் பேருந்துகள் அடிக்கடி செல்லுகின்றன.

பெருமக்கள்: தமிழறிஞர் டி. எஸ். கந்தசாமி முதலியார், சங்கீத பூஷ்ணம் சாத்தூரர், ஏ. ஜி. சுப்பிர மணியம், வில்லிசைப் புலவராகத் தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள ஹோமியோபதி மருத்துவர் பிச்சைக் குட்டி ஆகியோரை இந்நகர் வழங்கியிருக்கிறது.

சாத்தூரில் இருப்பவை: மாவட்ட முனிசீபின் நீதி மன்றம், மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலகம், பெரிய வியாபார நிலையங்கள்.

சாத்தூரின் பெருமை: (1) 1962-இல் அப்போதைய முதலமைச்சர் காமராஜ் இத்தொகுதியில் தேர்தலுக்கு நின்றபோது ஒருகோடி ரூபாய்ச் செலவில் தண்ணீர் வசதியும் புதை சாக்கடைத்திட்டமும் நிறைவேறியது. (2) சுவைமிக்க வெள்ளரிப்பிஞ்சு. (3) ஓலைப்பெட்டியில் அடைத்த (அ) சீனிமிட்டாய் (ஆ) கடலைமாவுச்சேவு.

சாத்தூரின் தேவை: விரிந்து வரும் நகருக்கேற்ற பெரிய மருத்துவமனை.

சந்தை நாள்: சனிக்கிழமை.

பழமொழி: வேற்றூர் அரிசியும், வேற்றூர் விறகும் உண்டானால் சாத்தூரைபோல சௌகரியமான ஊர் இல்லை.

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம்

57 சிற்றூர்களுடைய இவ்வொன்றியத்தின் வாழ்வு விருதுநகருடனும், துலுக்கப்பட்டி சிமிண்டு ஆலை, விருது நகர் ஸ்டீல் ரோலிங்மில்ஸ் ஆகிய தொழிற்சாலை களுடனும் இணைந்திருக்கிறது. இரயில் பாதையும் தேசிய நெடுஞ்சாலையும் இருப்பதால் போக்குவரத்து, பெரிய அளவில் நடைபெறுகிறது.

ஆமத்தூர்: விருதுநகரிலிருந்து 11கி. மீ. எள், துவரை உளுந்து, மொச்சை பயிரிடப்பெற்று வருகின்றன.

கன்னிசேரி: ஆனிமாதம் முழுவதும் மாட்டுச்சந்தை கூடுகிறது.

கோல்வார்ப்பட்டி: சாத்தூரிலிருந்து 8 கி. மீ. முன்னாள் ஜமீன் பகுதி. அருச்சுனை ஆறு பாய்ந்து, வேளாண்மை பெருகியிருக்கிறது. கலங்காத கண்டப்ப நாயக்கர் என்ற சிற்றரசர் வெட்டிய ஏரியும் அவர்கட்டிய மீனாட்சி அம்மன் கோவிலும் உள்ளன. இச்சிற்றரசர் வீர பாண்டிய கட்டபொம்மனுக்கு அடைக்கலம் கொடுத்த தற்காக இவருடைய குறுநிலப்பகுதியை ஆங்கிலேய அரசு எட்டையபுரம் ஜமீன்தாருக்கு ஒப்புவித்தது.

சங்கரலிங்கபுரம்: விருதுநகர்-திருத்தங்கல் இரண்டுக் கும் நடுவே 13 கி. மீ. தொலைவில், சங்கரலிங்கபுரம் இரயில் நிலையத்திலிருந்து 2 கி. மீ. தொலைவில் இவ்வூர் உளது.

தேவாங்கச் செட்டியார்கள் இங்கே குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் வீடுதோறும் ஒருவர் ஆசிரியர் வேலையில் இருப்பதைக் காணலாம். நெசவு இவர் களுக்குக் கைவந்த கலை. சங்கரலிங்கபுரம் துண்டு எனப்படும் குஞ்சம் கட்டிய சாயத்துண்டு இவ்வூரில் நெய்யப்படுவதே. கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இவ் வூரில் இயங்குகின்றன. இவற்றின் வாயிலாகச் சேலை நெசவு நடைபெறுகிறது.

காலத்தில் புன்செய்த் தானியங்களும் ஊடு பயிராக வெங்காயமும் பயிரிடுகின்றனர். இந்த வெங்காயம் சாத்துக்குடிப்பழ அளவினது; பெல்லாரி வெங்காயம் என்ற பெயருடையது. இதைப் பல மாதங்களுக்கும் பேணி வைத்திருந்து பிறகு விற்றுப் பொருளீட்டுவர்.

கோடையில் தினையும் அவுரிச் செடியும் பயிரிடுவர். அவுரிச்செடி உரத்தூளாகவும் வர்ணம் செய்ய மூலப் பொருளாகவும் உதவுகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகிறது.

சூலக்கரை: விருதுநகரையடுத்து! சாத்தூர்ச்சாலை —சிவகாசிச்சாலை இரண்டுக்கும் இடையே வளர்ச்சி யடைந்துள்ள தொழில் நகரம் இங்கு விருதுநகர் டெக்ஸ்டைல்ஸ் என்ற நெசவு ஆலையும் விருதுநகர் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் என்ற எஃகு இருட்டுக் கம்பித் தொழிற் சாலையும் பெரியதொரு தொழிற்பேட்டையும் உள.

சேடபட்டி: கைத்தறி நெசவாளர் மிகுதியாக உள்ளனர்.

துலுக்கப்பட்டி: விருதுநகர்க்குத் தெற்கே 15 கி.மீ. திருநெல்வேலிச் சாலையிலுள்ளது. அருகேயுள்ள எட்டூர் வட்டத்தில் சுண்ணாம்புக்கல் கிடைப்பதால் இங்கு சிமிண்டு ஆலை ஏற்பட்டிருக்கிறது.

பவானி: விருதுநகர்க்கு வடமேற்கேயுள்ள சிற்றூர், பழத்தோட்டங்கள் நிறைந்தது.

வடமலைக்குறிச்சி: விருதுநகர்க்கு வடமேற்கே 6கி.மீ. மக்கள் தொகை 1, 500. 19‸0 முதல் இங்கு 30 பேர் கொண்ட ஒரு கிராமசபையை ஆண்டுதோறும் தை மாதத்தில் கிராமத்தார் தேர்ந்தெடுக்கிறார்கள். அச் சபை தமிழ்த்திங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்தாம் நாளில் கூடி; ஊரிலுள்ள வழக்குகளை முடிவு செய்கிறது. இச்சபையின் உறுப்பினர்களும் தலைவர்களும் போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

பிரிட்டனின் வடபகுதியான ஸ்காட்லாந்துமக்களின் உதவியுடன் இவ்வூரில் பயிர்த்தொழில், சாலைகள், பள்ளி, மருத்துவநிலையம் ஆகிய யாவும் வளர்ச்சியடைந்துள.

மருளூத்து: வளமான ஊர். நெல், வாழை, காய் கறி முக்கிய பயிர்கள், இங்குள்ள பூங்கா பெயர் பெற்றது.

சிவகாசி ஊராட்சி ஒன்றியம்

விருதுநகர், சாத்தூர், வெம்பக்கோட்டை, இராஜ பாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஒன்றியங்கள் சூழ 302 ச. கி. மீ. பரப்பில் அமைந்த செழிப்பான பகுதி. இது திருத்தங்கல் பேரூராட்சியும் 54 ஊராட்சி மன்றங்களும் உடையது. மக்கள் தொகை 75, 000.

1952-இல் பிர்க்கா அபிவிருத்தி திட்டமும் 1954-இல் சமுதாயநலத்திட்டமும் இங்கு நிறைவேற்றப்பட்டன.

சிறு குன்றுகள் உள்ளன. காடுகள் அழிந்து விட்டன. மழை குறைவாக இருப்பதால், தீப்பெட்டித் தொழிற் சாலைகள் ஏற்பட்டு இப்பகுதி மக்களுக்கு வாழ்வு தருகின்றன. நடையனேரியில் கொல்லுப் பட்டறையும் பயிற்சிநிலையமும் மரத்தொழில் கூட்டுவுறச்சங்கமும் மாறநேரியில் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச்சங்கமும் அனுப்பங்குளத்தில் அரசினர் கோழிப்பண்ணையும் உள.

மல்லிநாடு என்பது இப்பகுதியின் தொன்மை யான பெயர். மதுரை நாயக்கர் ஆட்சியில் இங்கு கம்மவார் நாயுடுக்கள் குடியேற்றப்பட்டனர். ஏரிகள் வெட்டப்பெற்றன, புன்செய்த் தானியங்கள் பயிரிடப் பெற்றன. வாழை, சேனை, கருணை, சேம்பு, சீனிக்கிழங்கு வெற்றிலை ஆகியவை குறிப்பிடத்தக்க விளை பொருள் கள், 1930க்குமுன் புகையிலை நனைத்தும் கைமனை வாயிலாய் பருத்தி அரைத்தும் நெல் குத்தியும் மக்கள் வாழ்ந்தனர்.

விருதுநகர்—தென்காசி இரயில்பாதை இவ்வொன்றியத்தின் வழியாகச்செல்லுகிறது. மங்கலம், சுக்கிரவாரப்பட்டி, நமஸ்கரித்தான்பட்டி, வாடி; சல்வார்ப்பட்டி, நிறைமதி, ஆனையூர், ஆனைக்கூட்டம், கொத்தனேரி, தச்சக்குடி என்னும் ஊர்கள் உள்ளன.

ஒன்றிய அலுவலகம் சிவகாசிக்கும் செங்கமல நாச்சியார்புரத்துக்கும் இடையேயுள்ள சாட்சியாபுரத்திலும், சுகாதார நிலையம் மங்கலம் புதுப்பட்டியிலும் உள்ளன.

திருத்தங்கல் (ம. தொ. 6,000)

சிவகாசிக்கு வடக்கே 3 கி. மீ. தொலைவு, இரயில் நிலையத்தை அடுத்தது. இவ்வூரின் பழமை பற்றியும் இங்குள்ள கல்வெட்டுக்களைப்பற்றியும் ஆராய்ச்சியாளர் சதாசிவப் பண்டாரத்தார் 'பாண்டியர் வரலாறு' என்னும் நூலில் எழுதியுள்ளார்.

இங்குள்ள குன்றின் உயரம் எழுபது அடி. இதன் மீது ஒரு பெருமாள் கோவிலும் அதைச் சேர்ந்து குகைக்குள் கருநெல்லிநாதர் என்ற சிவன் கோவிலும் அதனருகே பழநியாண்டவர் கோவிலும் உள்ளன. திருமங்கைஆழ்வாரும் பூதத்தாழ்வாரும் இத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். இங்கு கோவில் கொண்டுள்ள இறைவனுக்கு நின்ற நாராயணப் பெருமாள் என்றும், தாயாருக்குச் செங்கமல நாச்சியார் என்றும் பெயர். தாயார் பெயரால் செங்கமலநாச்சியார் புரம் என்ற ஊரும், பெருமாள் தங்கியதால் திருத்தங்கல் என்ற பெயருடன் இந்த ஊரும் ஏற்பட்டன. திருத்தங்கல் பெருமாள் ஆடிப்பூரத்துக்கு ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எழுந்தருளுவார். திருத்தங்கல் என்பது திருத்

தண்கால் என்பதன் மரூஉ என்பர்; சிலப்பதிகாரம் இவ் வூரையே திருத்தண்காலூர் என்று குறிக்கிறது என்பர்.

தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் வார்ப்படத் தொழிற்சாலையும் அவித்த எலும்பிலிருந்து உரத்தூள் செய்யும் தொழிற்சாலையும் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும் கூட்டுறவு முறையில் அமைந்த வேளாண்மைப் பண்ணையும் உள்ளன.

இறையுருவங்களுக்கு வண்ணம் கொடுப்பது இரு வகைப்படும். ஒன்று தைலம் தடவுவது. மற்றொன்று உருவத்தை அகத்தில் வைத்து, புறத்தில் சுதை பூசி வண்ணத்துடன் அமைப்பது. பின்கூறிய அமைப்பைத் திருத்தங்கலிலும் ஸ்ரீ வில்லிபுத்தூரிலும் காணலாம்.

ஆனைக்கூடம்: சிவகாசி திருத்தங்கல் நகர்களுக் கிடையே அருச்சுனை ஆற்றின் வடகரையில் வரலாற்றுப் புகழுடன் கூடிய சிற்றூர்.

முதலாம் பராந்தகன் (கி. பி. 907-951) பாண்டிய நாட்டைக் கைப்பற்றியபோது அவனை விரட்ட, இராச சிம்ம பாண்டியன் ஈழநாட்டு மன்னனின் உதவியை நாடினான். ஈழ நாட்டிலிருந்து வந்த யானைப்படை வீடு கொண்ட இடம் யானைக்கொட்டம் என்றும் பாண்டி யரின் குதிரைப்படையும் ஈழ நாட்டுக் குதிரைப் படை யும் தங்கியிருந்த இடமே இரண்டு கி. மீ. வடக்கேயுள்ள 'மத்திய சேனை' என்றும் கூறப்படுகிறது.

காளையார்குறிச்சி: சிவகாசியிலிருந்து 10 கி. மீ. தொலைவு. அருச்சுனை ஆற்றின் கீழ்கரையில் ஒரு பாறை மீது, பூசையில்லாத பெரிய கோவில் இருக்கிறது. கடை முடை ஐயனார் கோவில் என்ற இக்கோவிலுள் பெரிய ஆலமரங்கள் உள்ளன. 1942 போராட்டத்தின்போது, தலைவர் காமராஜ் இக்கோவிலுள் தலைமறைவாய் இருந்

த்தூர் என்பர். இங்கு மறவர் மிகுதியாக வாழ்கின்றனர். கரிசல்காடு ஏராளம். விளைபொருள்கள்—நெல், கம்பு; கேழ்வரகு.

கிருஷ்ணபுரம்: சிவகாசியிலிருந்து 6 கி. மீ. தென் மாவட்டங்களில் கிருஷ்ணபுரம் என்ற பல ஊர்கள் உள்ளன. அவைபோல் இவ்வூரும் மதுரையை ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் அவர் பெயரால் ஏற்பட்டது.

கிருஷ்ணப்பேரி என்ற ஊரும் தெலுங்கு பேசுவோர் வாழும் கிருஷ்ணம நாயக்கன்பட்டியும் அருகே உள்ளன. கிருஷ்ணபுரம் பெருமாள் கோவிலாலும் வேளாண்மை யைப் பெருக்கும் மறவர்களாலும் புகழ்பெற்றிருக்கிறது.

சாட்சியாபுரம்; சிவகாசியை ஒட்டிய பகுதி. கோட்ட ஆட்சி அலுவலகம் இங்கு இருக்கிறது. மா, கொய்யா, இலுமிச்சைத் தோப்புகள் நிறைந்தது.

செங்கமலநாச்சியார்புரம்: திருத்தங்களிலிருந்து 3 கி. மீ. நாயக்கமார் செல்வாக்குள்ள ஊர். இவ்வூரினரான திரு. இராமசாமி நாயுடுவைப் பற்றி, இந்நூலில் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறோம்.

சொக்கம்பட்டி: சொக்கப்ப நாயக்கர் பெயரால் ஏற்பட்டது. கிருஷ்ணபுரம் இங்கிருந்து 5 கி. மீ.

வடமலாபுரம்: நீர்வளமும் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி யும் உடையது.

வாடி: (வாடியூர்) வெற்றிலை வாணிகம் மிகுதி. போடி எனச் சுருங்கக் கூறப்படும் போடிநாயக்கனூர் மதுரை மாவட்டத்திலும், வாடி என்னும் இரயில் சந்திப்பு மேற்கு இரயில் பகுதியிலும் இருக்கின்றன.

மேலாமத்தூர்: சிவகாசி-விருதுநகர்ச் சாலையிலுள்ள ஆமத்தூரிக்கு மேற்கே இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றது.

சாத்தூர் ஊராட்சி ஒன்றியம்

1957 முதல் அரசினர் இப்பகுதியின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வொன்றியத்தைச் சூழ்ந்து இம்மாவட்டத்தில் நான்கு ஒன்றியங்களும் நெல்லை மாவட்டத்துப் புதூர், விளாத்திகுளம், கோயில் பட்டி ஒன்றியங்களும் உள. கோயில்பட்டி நகரோரத்திலுள்ள அரசினர் வேளாண்மைப் பண்ணைவரை இவ்வொன்றியம் பரவியுள்ளது.

விருதுநகர்—கோயில்பட்டி இரயில்பாதை இவ்வழியே செல்லுகிறது. இப்பாதைக்கு மேற்கே ஒரு பங்கும் கிழக்கே இரண்டு பங்குமாக, ஒன்றியத்தின் பரப்பு உளது. நள்ளியில் இரயில்நிலையம் இருக்கிறது; கஞ்சம்பட்டியில் இரயில்நிலையம் ஏற்படக்கூடும்.

களிமண்களால் வெடிப்பு ஏற்படுவதால் கட்டிடங்கள் கட்ட அடித்தளத்திற்குப் பெரும்பணம் செலவிட வேண்டியதிருக்கிறது.

கொல்லம்பட்டியிலும் நென்மேனியிலும் முசுலிம்கள் வாழ்கின்றனர். பெத்துரெட்டிபட்டி, போத்துரெட்டிய பட்டி, ரெங்கப்பநாயக்கன்பட்டி என்பன ரெட்டியார்களும் நாயக்கமாரும் தொகுப்பாக வாழ்வதைக் குறிப்பன. பெரிய கொல்லப்பட்டியிலும் நடுச்சூரங்குடியிலும் கைத்தறி நெசவுத் தொழில் ஏற்றம் பெற்றிருக்கிறது.

முக்கிய பயிர், பருத்தி. பருத்தியுடன் சேர்ந்து ஒரு சால் உளுந்து போடுகிறார்கள். மல்லி, இங்கு பரவ

லாகப் பயிரிடப்படுகிறது. சோளம், மிளகாய் நிறையப் பயிரிடப்படுகின்றன. பந்துவாரிப்பட்டியிலும் சூரங்குடியிலும் கடலையும் பிற இடங்களில் கரும்பும் பயிரிடப்படுகின்றன. ஐந்தாறு ஊர்களில் மட்டும் நெல் வேளாண்மை பெருமளவில் நடைபெறுகிறது. நென்மேனிச் சாலையில் ஆட்டுப்பண்ணை இருக்கிறது.

சங்கரநத்தம், சுப்பிரமணியபுரம், உப்பத்தூர், அய்யம்பட்டு ஆகியவற்றில் சுண்ணும்புக்கல் சுரங்கங்கள் உள்ளன. ஆலபட்டியும் ஆறுகாபுரமும் அப்பனேரியும் மம்சாபுரமும் இலட்சியக் கிராமங்களாக விளங்குகின்றன.

ஒருவகைச் சீமைக் கருவை பரவியிருப்பதால்; விறகு தங்கு தடையின்றிக் கிடைக்கிறது. இதன் காயை ஆடும் மாடும் கழுதையும் தின்கின்றன. அவற்றின் சாணத்தால், மீண்டும் சீமைக்கருவை படர்கிறது. எரி விறகுக்கு இம்மரத்தைப் பச்சையாக எரிக்கலாம். எரிபொருள்சத்தும் மிகுதி. நடந்து செல்லுபவர் இதன் முள் குத்தி, துயரப்படுகிறார்கள். அவர்கள் வாயிலாக மருத்துவர் பலர் வருவாய் பெறுகின்றனர்.

ஆலம்பட்டி: சாத்தூரிலிருந்து 5 கி. மீ. அரசின் திட்டங்களில் பயனடைந்துள்ளது. செங்கற்சூளைகள் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன.

இருக்கங்குடி: சாத்தூரிலிருந்து 8 கி. மீ. அர்ச்சுனே, வைப்பாறு இரண்டாலும் வளமடைந்து வருவது. இத்தீவிலுள்ள மாரியம்மன் கோவில் புகழ்பெற்றது. ஆடி, தைத் திங்கள்களில் வெள்ளிக்கிழமைகளில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி மாரியம்மன் அருள் பெறுகின்றனர்.

உப்பத்தூர்: வேளாண்மை வளமும் ஆரம்ப சுகாதார நிலையமும் உடையது.

கொல்லம்பட்டி: கத்திரிக்காயாலும், மசூதியாலும், வைப்பாற்றில் அழகர் இறங்கும் திருவிழாவாலும் புகழ் பெற்றது.

சங்கரநத்தம்: இவ்வூரைச் சேர்ந்த கோபால்புரம் என்ற சிற்றூரில் வாழும் கம்பளத்து நாயக்கமாரில் மிகச் சிலரே திருமணம்செய்து கொள்கின்றனராம்.

சூரங்குடி: ஒன்றியத்தின் மேற்கு எல்லையிலுள்ளது. இங்கிருந்து மேல்மாந்தை, சக்கிலுபுரம், வேலாயுத புரம் வழியாக 16 கி. மீ. தொலைவில் வைப்பாறு என்னு மிடத்தில் வைப்பாறு கடலில் கலக்கிறது. அவ்விடத்தில் வைப்பாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் பெரிய பாலத்தின் வழியாகத் தூத்துக்குடிக்குச் செல்லலாம். 28 கி. மீ. வேலாயுதபுரம்-வைப்பாறு வழியாகக்கிழக்குக் கடலோரச்சாலை போடப்பெற்றிருக்கிறது. இங்கு இதை இராமேசுவரம் சாலை என்று கூறுவர்.

நள்ளி: நள்ளி இரயில்நிலையத்தருகே இராமேசுவரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கோயிலும் இராமேசுவரம் யாத்ரீகர்க்காக ஒரு சத்திரமும் உள்ளன.

நத்தத்துப்பட்டி: சாத்தூரிலிருந்து 10 கி. மீ. கட்ட பொம்மன் வரலாற்றுடன் தொடர்புடைய வெள்ளையத் தேவர் பிறந்த ஊர்.

நென்மேனி: வைப்பாற்றின் கரையில் அமைந்து இந்த வட்டத்திலேயே பெரிய கண்மாயை உடையது. வேளாண்மையின் ஏற்றம் பெயரிலிருந்தே உணரத் தக்கது. கைலாசநாதர் கோவிலும் கத்தோலிக்க தேவாலயமும் இருக்கின்றன.

வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

இது, இராமநாதபுர மாவட்டத்தின் தென்கோடியில் அமைந்தது. பலதுறைகளிலும் இப்பகுதி பின் தங்கியிருக்கிறது.

வடக்கே சிவகாசி, கிழக்கே சாத்தூர், மேற்கே இராசபாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஒன்றியங்களும் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்துக் கோயில்பட்டி, சங்கரன்கோயில் ஒன்றியங்களும் இவ்வொன்றியத்தைச் சூழ்ந்துள்ளன.

நெடுங்காலத்துக்குமுன் இப்பகுதிக்கு, 'கீழ ஆமர் நாடு' என்ற பெயர் இருந்தது. இப்பெயருள்ள ஊர் இந்நாளில் கீழான்மறை நாடு என்ற மருவிய பெயரால் குறிப்பிடப்படுகிறது.

இவ்வொன்றியத்தில் 42 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. விருதுநகரிலிருந்து தெற்கே செல்லும் இரண்டு இரயில்பாதைகளுக்கும் அப்பால் அவற்றிற் கிடையேயுள்ள நடுப்பகுதியில் அமைந்திருப்பதால் இவ் வொன்றியத்தின் வழி இரயில்பாதை செல்லவில்லை. பஸ் போக்குவரத்தும் குறைவு. ஓர் ஆவணக்களரிகூட இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தம் சொந்தத் தேவைக்குமட்டும் நெல் பயிரிடுவதும் விற்பனைக்கு மணிலாக்கடலை, பருத்தி, சோளம், மிளகாய்வற்றல் ஆகியவற்றைப் பயிரிடுவதும் இங்கு மரபு.

ஒன்றிய அலுவலகம் வெம்பக்கோட்டையிலும் அடிப்படை மருத்துவமனை கள்ளமநாயக்கன்பட்டியிலும் உள்ளன. பெரிய ஊர் ஏழாயிரம் பண்ணை.

வேளாண்மையே முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் சில இடங்களில் ஏற்பட்டுள்ளன.

வெம்பக்கோட்டை: 3,000 மக்கள்வாழும் இச்சிற்றூர் சிவகாசியிலிருந்து நேர்தெற்கே 19 கி. மீ. தொலைவில் வயல்காடுகள் சூழ உளது. சாத்தூரிலிருந்து 19 கி. மீ. ஏழாயிரம் பண்ணையிலிருந்து 16 கி. மீ.

குகன்பாறை: ஏழாயிரம் பண்ணைக்குத் தென்மேற்கே இருக்கிறது. இங்குள்ள குன்றின் உயரம் 50மீட்டர். கருங்கற்றூண் வேலைக்கு இக்குன்றில் கல் உடைக்கின்றனர்.

சிப்பிப்பாறை: ஏழாயிரம் பண்ணையிலிருந்து 6 கி. மீ. தொலைவு. சில தெருக்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தன. அம்மாவட்டத்துக்கே முற்றிலும் உரிய ஊரான மைப்பாறை, சிப்பிப்பாறையிலிருந்து 5 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

சிறு குன்றுகள் நிறைந்த சிப்பிப்பாறை, நாய்களால் புகழ்பெற்றது. சிப்பிப்பாறை நாய் கருமயிலை நிறமுடையது; இதன் உயரம் 3½ அடி; நீளம் வால் உட்பட மூன்றடி. முகம் ஊசியாகவும் காது மடிந்தும் இருக்கும். வேட்டைக்குச் செல்லுவோர் இந்த நாய்களை வளர்த்து உடனழைத்துச் செல்லுவர். கம்பஞ்சோறும் சோளச்சோறும் இந்நாய்கள் விரும்பி உண்ணும்.

பாறைமீது ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது. நாயக்கர்கள் செல்வாக்குப் பெற்ற ஊர்களுள் இதுவும் ஒன்றாகும். பருத்தி அறைக்கும் ஆலை ஒன்று இவ்வூரில் இருந்து வருகிறது.

1942 கலகத்தின்போது, கந்தசாமி என்ற புகழ் பெற்ற கொள்ளைக்காரன் வைத்தது இங்கே சட்டமாக இருந்தது. அவன் 1951-இல் பிடிபட்டுத் தூக்கிலிடப் பட்டான்.

ஜெகவீரம்பட்டி: இந்த ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த சுப்பிரமணியபுரம் மிகவும் முன்னேற்றமான கிராமம் ஆகும்; திலகவதி மாதர்சங்கம் நன்முறையில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தார் (ஆடவர் ஒரு கொத்து, ஒரு தச்சு மட்டும் சேர்த்துக் கொண்டு) தாங்களே சங்கக் கட்டடத்தை 1969-இல் கட்டி முடித்திருக்கின்றனர். செல்வக் குடும்பத்து மகளிரும் உடலுழைப்பு உதவினர். இத்தகைய சில செய்கைகளால் இவ்வூரின் வளர்ச்சி, வட்டார வளர்ச்சித் திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகத் திரைப்படமாக எடுத்துக் காட்டப்படுகிறது. இவ்வூர் சாத்தூர் —தாயில்பட்டிச் சாலையில் இருக்கிறது.

பனையடிப்பட்டி: இது ஏழாயிரம் பண்ணைக்கு 5 கி. மீ. வடக்கேயுள்ளது. கொய்யாத் தோட்டமும் எலுமிச்சைத் தோட்டங்களும் உள்ளன.

வலையபட்டி: இது 'கீழான் மறை நாடு' ஊராட்சி மன்றத்துக்கு உட்பட்டது. இச்சிற்றூரில் தாசரி என்ற சாதியார் வாழ்கின்றனர். இவர்கள் சோதிடம் சொல்ல ஆண்டுதோறும் ஆறு திங்கள் வெளியூர்களுக்குச் சென்று விடுவர். இவர்களிடம் வேடிக்கையான சமதர்மப் பழக்கங்கள் நிலவுகின்றன.

ஏழாயிரம்பண்ணை: வரலாற்றுப் புகழ்பெற்ற இவ்வூர் சாத்தூரிலிருந்து தென்மேற்கே 9 மைல் (14 கி. மீ.) தொலைவில் அமைந்தது. மக்கள்தொகை 4, 500 ஆகும். ஊராட்சிமன்ற எல்லையில் 6500 மக்கள் உள்ளனர். வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் இதுவே பெரிய ஊராக உளது. இங்கிருந்து இராஜபாளையம் ஏறத்தாழ 30மைல் (48கி. மீ.) தொலைவு இருக்கலாம். திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லை இவ்வூரிலிருந்து 3 கி.மீ. தூரத்தில்

உள்ளது. இவ்வூர்ப்பெயரிலிருந்து, இது ஏழாயிரம் பேர்க்கு வழங்கப்பெற்ற பண்ணையாக இருக்கவேண்டும் அல்லது ஏழாயிரம் பண்ணைகள் கொண்டதாக இருந்திருக்கலாம் என எண்ண வேண்டியதிருக்கிறது. (பண்ணை என்பது ஒருவகை நில அளவாக இருந்திருக்கக் கூடும்)

ஊர்ப்பெயர்கட்கு எண் வழங்கும் வழக்கம் நிலவியதற்குச் சான்றாக, திருநெல்வேலி மாவட்டம் தென்காசி ஒன்றியத்திலுள்ள ஆயிரப்பேரி, தென்ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள எண்ணாயிரம், தென்ஆர்க்காடு மாவட்டத்துச் சிதம்பரம் வட்டத்தில் எண்ணகரம்; அம்மாவட்டத்திலேயே திருக்கோவலூர் வட்டத்தில் ஏழு செம்பொன் என்பனவும், முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம், லட்சத்தீவு என்ற தீவுகளும் குறிப்பிடத்தக்கன. வணிகக் குழுக்கள் ஐநூற்றுவர், ஆயிரவைசியர் என அக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையால் குறிப்பிடப் பெற்றன.

ஏழாயிரம் பண்ணைக்கு 'இளஞ்சிராப்பண்ணை' என்ற பெயரும் வழங்கிவந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் 'ஏழாயிரம் புளி' என்று இவ்வூர்ப்பெயர் அஞ்சல்நிலையத்தில் பொறிக்கப் பெற்றது.

இவ்வூரின் ஒரு பகுதியான பழையூர் என்பதன் முழுப்பெயர் 'பழைய ஏழாயிரம்பண்ணை' ஆகும். சாத்தூரிலிருந்து செல்லும்போது, இப்பகுதியையே முதலில் காணுகிறோம். இங்குள்ள சிவன்கோயிலைச் சேர்ந்த தீபக்கிணற்று மதிலில் தொன்மையான கல்வெட்டுக்கள் உள்ளன.

இவ்வூரிலிருந்து ஒரு கி. மீ. தொலைவிலுள்ளதும் இளுந்துரைசாமிபுரம் ஊராட்சிமன்ற எல்லைக்குட்பட்டதும் ஆகிய சிவசங்குப்பட்டி என்ற சிற்றூரில் டி. எம். பி. நடராசர் தோட்டத்தில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் இன்றும் காணப்படுகின்றன.

நெடுங்காலமாக, இவ்வூரில் தமிழ்மொழியிலும் கலையிலும் புலமை பெற்ற பலர் வாழ்ந்திருக்கின்றனர். முயன்றால், இதைப்பற்றி விரிவான செய்திகளைத் தொகுக்க இயலும். பழையூரை அடுத்த செல்லியபுரத்திலுள்ள செல்லியம்மன்மீது, சைவத் தம்பிரான் ஒருவர் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

தனிப்பாடல் திரட்டில் பின்வரும் பாட்டுச் சேர்க்கப் பெற்றிருக்கிறது. இது கடிகை முத்துப் புலவர் இயற்றியதாகும்.

'சென்றலந்தார் சேர்முத் திருளப்ப பூபதியான்
மன்றலந்தார் வாங்கி வருமளவும்—குன்றமுலை
ஏழா யிரம்பண்ணை யில்லுடம்பு வாடாதே
ஏழா யிரம்பண்ணை யில்'

'முத்திருளப்ப பூபதியிடம் போய்ப் பரிசில் பெற்று வரும்வரை மேனி தளர்வடையாது, ஏழாயிரம் பண்ணை யூரில் மலை போன்ற முலையுடைய பெண்ணே இருப்பாயாக' என்று பொருள்படப் புலவர் இவ்வாறு பாடியுள்ளார். 'ஏழாயிரம்பண்ணையில்' என்பது இரட்டித்து வருதலால் ஓரிடத்தில் 'ஏழாய் இரு அம்பு அண்ணையில்' (மன்மத பாணம் அண்டி வரும்போது) என்று உரைகாரர் கூறுவர்.

சுபாநாயக்கர் மகள் ரெங்கம்மாள் தன் காதலனைக் காணச் சென்றபோது இவ்வூரில் தங்கிச் சென்றதாக, வரலாற்றுச் செய்தி ஒன்று உண்டு. (விவரம்—

கண்ணதாசன் எழுதிய ஊமையன் கோட்டையில் காண்க.)

தளவாய் அரியநாதர் ஏற்படுத்திய பாளையப் பட்டுக்களுள் ஏழாயிரம் பண்ணையும் ஒன்று; இப்பாளையக்காரக்கள் புலவர்களைப் போற்றியும் கலைகளை வளர்த்தும் வந்தனர். இசை அறிவு மிக்கார் பலர் இங்கே இன்றளவும் இருக்கின்றனர்.

இவ்வூர்ப் பாளையக்காரர்கள், 1799-இல் நடைபெற்ற முதல் பாளையக்காரப் போரில் வீரபாண்டியக் கட்டப் பொம்மனை ஆதரித்தனர். இதனால் ஆங்கிலேயர் இவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து, கோட்டையையும் அழித்தனர். பாளையப்பட்டு உரிமை 1801-இல் ரத்து செய்யப்பட்டது. பாளையக்காரர் தம் ஆயுட்காலத்துக்கு நாடு கடத்தப்பட்டுச் சென்னை நகருக்கு விரட்டப்பட்டார். ஏழாயிரம் பண்ணைப் பாளையப்பட்டுப் பகுதிகள் எட்டையபுரம் பாளையப்பட்டுக்கும் மணியாச்சி பாளையப்பட்டுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. ஏழாயிரம்பண்ணை பாளையக்காரர் வாழ்ந்த மாளிகை, சிறிது சிதைந்த நிலையில் 'அரண்மனை' என்ற பெயரோடு இன்றும் இருந்துவருகிறது.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறித்தவ மதம் இவ்வூரில் பரவிற்று. ரோமன் கத்தோலிக்கத் தேவாலயமும் தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்த தேவாலயமும் இவ்வூரில் உள்ளன. அதே நூற்றாண்டில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் சிலர் இங்கு தொழில் செய்தனர்; பிள்ளையார் கோயிலும் செட்டி தெப்பமும் அவர்களால் அமைக்கப் பெற்றவை.

இவ்வூரில் மழை குறைவு; வீனிங் குளத்துக்கு அருகே மட்டும் நன்செய் வேளாண்மை நடைபெறுகிறது. புன்

செய்ப் பயிர்களுள் மிளகாய், வெண்காயம், கருப்பட்டி யில் நனைத்துத் தின்பதற்காகக் கேரளமாநிலத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் புகையிலை ஆகியவை குறிப் பிடத்தக்கவை.

இவ்வூரில் இருப்பவை: நாடார் மகமை உயர்நிலைப் பள்ளி, 30 தீப்பெட்டி தொழிற்சாலைகள், ஒரு மத்தாப்பு வெடி தொழிற்சாலை, ஒரு தோல்பதனிடும் தொழிற் சாலை, கருட்டு பொடி தொழிற்சாலைகள், ஆண்டு தோறும் 15 லட்சம் ரூபாய் கலால்வரி வசூலிக்கும் அலு வலகம்.

இவ்வூரில் இல்லாதவை: வாரச் சந்தை.

இவ்வூரில் முக்கிய திருவிழா: சித்திரை மாதத்தில் மாரியம்மன் கோயிலில் நிகழும் 12 நாள் திருவிழா.

8. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்

மாவட்டத்தின் மேற்கு எல்லையில் அமைந்து, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் குறிஞ்சி மருதம் முல்லை வளங்களுடன் திகழ்கிறது.

வடக்கே (மதுரை மாவட்டத்து) உசிலம்பட்டி, திருமங்கலம், கிழக்கே சாத்தூர் தெற்கே, (திருநெல்வேலி மாவட்டத்துச் சங்கர நயினார் கோயில், மேற்கே கேரளத்துக்கும் தமிழகத்திற்கும் பொதுவாகவுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையும், (மதுரை மாவட்டத்து) உத்தமபாளையம் ஆகிய ஐந்து வட்டங்கள் இவ் வட்டத்தைச் சூழ்ந்துள்ளன.

பரப்பு 436 சதுரமைல், (1,100 சதுர கி. மீ.)

இராஜபாளையத்தில் துணைத் தாசில்தார் அலுவலகம் 1963-இல் ஏற்பட்டிருக்கிறது. இராஜபாளையம்,

சேத்தூர் சோழபுரம் பிர்க்காக்கள் அடங்கியுள்ள இராஜபாளையம் உள்வட்டம் தனி வட்டம் போன்றே இயங்கிவருகிறது.

வட்டத்தின் மக்கள் தொகை நான்கு லட்சம் ஆகும். 1801-இல் ஸ்ரீ வில்லிபுத்தூர், சாத்தூர் ஆகிய இரு வட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் 67,510 மக்கள் வாழ்ந்ததும், 1972-இல் இராசபாளையம் நகரில் மட்டும் 80,000 மக்கள் வாழ்ந்து வருவதும் நம் நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகத்தினை உணர்த்தும்.

சிறு தொழில்கள் வளர்ச்சியால் சாத்தூரும், இயற்கை வளத்தாலும் தொழில் பெருக்கத்தாலும் ஸ்ரீ வில்லிபுத்தூரும் மிகுதியான மக்கள் வாழும் பகுதி களாக உள்ளன. இவ்விரு வட்டங்களிலும் வாழ்பவர் களில் வேளாண்மை வேலை தேடித் தஞ்சை மாவட்டத் திற்கோ பொருளீட்ட வெளிநாடுகளுக்கோ எவரும் செல்லுவதில்லை.

மதுரைச் சீமைக்கும் தென்பாண்டி நாடாகிய திருநெல்வேலிச் சீமைக்கும் நடுவே அமைந்ததால் இப் பகுதி நடு மண்டலம் என்று நெடுங்காலம் பெயர் பெற்றிருந்தது.

வில்லி மல்லி என்ற அரசர்கள் ஆண்டதால் வில்லி நாடு, மல்லி நாடு என்று இவ்வட்டம் இருபகுதிகளாகப் பெயர் பெற்றிருந்தது. ஸ்ரீ வில்லிபுத்தூர்க் கோவிலி லுள்ள கல்வெட்டுக்களில் 'திரு வில்லிநாட்டு ஸ்ரீ வில்லி புத்தூர்,' 'திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர், திருமல்ல நாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூர்' என்ற சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

இவ்வட்டம் நெடுங்காலம் மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து 1838-இல் திருநெல்வேலி மாவட்டத்துடனும் 19 1-இல் இராமநாதபுர மாவட்டத்துடனும் சேர்க்கப் பெற்றது.

வைணவத் தலம் என்ற காரணத்தால் நாயக்கர் ஆட்சியில் முக்கியத்துவம் பெற்ற ஸ்ரீ வில்லிபுத்தூர், ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு டிப்டி கலெக்டரின் இருப்பிடமாயிற்று. சாத்தூர், சங்கரன் கோயில் வட்டங்களிலும் அதிகாரம் உடைய மாவட்ட முன்சீபின் நீதி மன்றமும் இங்கு ஏற்பட்டது. 1910 வரை இவ்வட்டம் திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. அரசியல் விடுதலைப் போரில் இவ்வட்டம் முழுமூச்சுடன் ஈடுபட்டது.

தொன்றுதொட்டு வாழும் மறவர்கள் எண்ணிக்கையால் மற்றவர்களைவிடப் பெரிய இனத்தார் ஆவர். நாயக்கர் ஆட்சியில் குடிவந்த தெலுங்கு பேசும் மக்கள் பல்லாயிரவர் இருக்கின்றனர். இவர்களுள் நாயக்கமார்களும் (நாயுடு சமூகத்தினர்), ராஜாக்களும் தம் பெருமுயற்சியால் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்து இவ்வட்டம் செல்வம் கொழிக்கச் செய்துள்ளனர். இவர்களுடைய முயற்சி திருவினையானதற்கு இரயில் போக்குவரத்து, மின்சார வளர்ச்சியும் துணை நிற்கின்றன. யாதவர்களும் பிள்ளைமார்களும் இவ்வட்டத்தில் குறிப்பிடத்தக்க பிற இனத்தவர் ஆவர்.

மேற்குத் தொடர்ச்சி மலையும் அதனின்று சிதறிய சிறு குன்றுகள் பலவும் உள்ளன. குறிப்பிடத்தக்க ஆறு ஒன்றும் இல்லை. எனினும் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சிற்றாறுகள் வழியாய் நீர் வருவதால் வேளாண்மை செழிப்பாக உள்ளது. இம் மாவட்டத்தில்

கூடுதலாக நிலவரி செலுத்தும் வட்டம் இதுவே. வட்டத்தின் வடகோடியிலுள்ள வற்றுயிருப்பும் தென்கோடியிலுள்ள சேத்தூரும் நெற் களஞ்சியங்களாக விளங்குகின்றன. உகண்டாப் பருத்தி பெரிய அளவில் பயிரிடப்படுகிறது.

மேற்கு எல்லையிலுள்ள மலைகளில் (அப்பாலுள்ள தேவி குளம்—பீர்மேடு மக்களைப்போல) இவ்வட்டத்தினர் இரண்டாம் உலகப் போர்க் காலத்திலிருந்து ஏலக்காய், கிராம்பு, சாதிக்காய், கொம்பரக்கு பயிரிடுகின்றனர். இதனுல் இம்மலைப் பகுதி நிலங்களின் விலை ஏக்கர் 200 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மாந்தோப்புக்களும் மலையடிவாரமெங்கும் உள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய சேத்தூர்—ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில்தான் மாவட்டத்திலேயே அடர்த்தியான வளமானகாடுகள் இருக்கின்றன.

சில இடங்களில் கைத்தறி நெசவும் நூல் ஆலைகளும் பருத்தி அறைக்கும் இயந்திரங்களும், சிறு பொறியியல் தொழில்களும் இவ்வட்டத்தில் குறிப்பிடத்தக்கன.

கூட்டுறவுத் துறையில் இவ்வட்டம் பெரு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. நெல், பருத்தி, மிளகாய் வேளாண்மையும், பல்வகைச் சிறு தொழில்களும் பஞ்சாலைகளும் கூட்டுறவு முறையில் நிகழும் சிறு நிறுவனங்களும் மக்களுக்கு வேலை தருகின்றன.

விருதுநகரிலிருந்து தென்காசிக்குச் செல்லும் இரயில் பாதையும், மதுரையிலிருந்து தென்காசி வழியாகக் கேரள எல்லைவரை செல்லும் நெடுஞ்சாலையும் ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் நகரங்களின் வழியாக இவ்வட்டத்தினூடே செல்லுகின்றன.

சப்பாணிப் பறம்பு, வாழைக்குளம் பறம்பு; கொத்தன்குளம் பறம்பு போன்று 'பறம்பு' என்ற ஈற்றுச் சொல்லுடைய ஊர்கள் இவ்வட்டத்தில் உள்ளன. இவையும் குன்னூர், சிங்கம்மாள் குரடு என்னும் ஊர் களும் மலைவளத்தின் சின்னங்களாக விளங்குகின்றன.

கல்வி நிலையங்கள் பிற வட்டங்களுக்கு முன்னரே இங்கு ஏற்பட்டன. ஆனால் இந்தியா விடுதலை பெற்ற பின்னர், பிற வட்டங்களில் ஏற்பட்டதுபோல இவ் வட்டத்தில் கல்லூரி ஏற்படாதது ஒரு குறைபாடே.

கேரளச் சீமையிலுள்ள கொல்லத்தை வென்றதால் ஏற்பட்ட சிறப்பை நினைவூட்டும் (கங்கை கொண்டான் போன்று) கொல்லம் கொண்டான்; வட்டத்தின் தென் எல்லையிலுள்ள சோழபுரம்; வற்றுயிருப்புக்கு அருகேயுள்ள சுந்தரபாண்டியம், சம்சிகாபுரம் அருகே யுள்ள சங்கரபாண்டியபுரம் ஆகிய இவ்வூர்கள் முறையே சேர, சோழ, பாண்டிய அரசுகளை நினைவூட்டுகின்றன. குறுநில மன்னர்களை நினைவூட்டுவது சேத்தூர்.

நாயக்க மன்னர் காலத்தில் ஏற்பட்டது அரியா நாதர் நினைவாக உருவான தளவாய்புரம், கிருஷ்ணன் கோயில், அழகர் கோயில், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகியவை வைணவ சமய மறுமலர்ச்சியால் புத்துயிர் பெற்றன; மங்கம்மாள் காலத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரம் வரை சாலை போடப்பட்டது.

1751-இல் லெப்டினன்டு இன்னிஸ் என்ற ஆங்கிலேய தளபதியின் படையுடன் நடந்த போரில், ஸ்ரீ வில்லி புத்தூர்க் கோட்டை, பூலித்தேவரது படையால் கைப் பற்றப்பட்டது. 1756 வரை இந்நகரும் சுற்றுவட்டமும் பூலித்தேவர் ஆளுகையிலேயே இருந்தன. பிறகு முகமது

யூசுப் கான் இப்பகுதியைப் பிடித்துக்கொண்டார். அந் நாளில் ஏற்பட்ட சூழலால் பழைய ஊர்கள் புதுப் பெயர்கள் பெற்றன. முகமதியரது செல்வாக்கின் நினைவாக ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு 5 கி. மீ. மேற்கே மகமத் சாகிப்புரம் என்னும் ஊர் உளது. இவ்வூர்ப் பெயர் இப்போது மம்சாபுரம் என மருவி விட்டது. கான்சாகிப் புரம், சம்சிகாபுரம் என்பவையும் முகமதியரது செல்வாக்கைக் குறிக்கும் ஊர்களேயாம்.

பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆறு பட்டாளங்கள் இப்பகுதியைக் காத்துவந்தன. அதைத் தொடர்ந்து கம்பெனி ஆட்சியும் பிறகு முறையான ஆங்கில ஆட்சியும் நிலவின.

ஸ்ரீ வில்லிபுத்தூர் இராஜபாளையம், ஆகிய இரு நகராண்மைக் கழகங்களும், இராஜபாளையம், ஸ்ரீவில்லி புத்தூர், வற்றுயிருப்பு என்ற மூன்று ஊராட்சி ஒன்றியங் களும் உள்ளன.

ஸ்ரீ வில்லிபுத்தூர் நகரம்

தலச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் உடைய நகரம் ஸ்ரீவில்லிபுத்தூர்; பாசன ஏரிகள் சூழவும் மேற்குச் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலும் அமைந் திருக்கிறது.

பாமாலையும் பூமாலையும் சூடிக்கொடுத்த ஆண்டாள் அவதரித்த நகரம் இது; பன்னிரு ஆழ்வாருள் ஒருவாரகிய பேயாழ்வார் வாழ்ந்த பதியும் எடுத்துக் காட்டாக விளங்கும் தலமும் இதுவேயாகும்.

3,000 பேர் சேர்ந்து இழுத்தால்தான் இழுக்கக் கூடிய முழுத்தேர் தமிழ் நாட்டில் இரு தலங்களில்

தான். இருக்கிறது. ஒன்று திருவாரூர், மற்றொன்று ஸ்ரீ வில்லிபுத்தூர்.

இந்நகர்க் கோயில்களைச் சுற்றிக் கோட்டைச் சுவர் கட்டப் பொற்கிழி வழங்கிய பாண்டியர் முதல் இங்கு தேரோடும் தெருக்களை உருவாக்கிய நாயக்கர் வரை பல அரசர்களின் வரலாற்றுடன் இந்நகரின் வளர்ச்சியும் பின்னிப் பிணைந்திருக்கிறது. விசயநகர நாயக்க மன்னர் இங்கு வந்து வழிபட்டு ஆண்டாள் திருப்பாவையைத் தெலுங்கு மொழியில் பெயர்த்தார். திருவிதாங்கூர் மன்னர்கள் வழிபடும் திரு அனந்தப்பத்மநாப சாமி தொடர்பும் இந்நகர்க்கு உண்டு. வெளிநாட்டுத் தொடர்பும் இவ்வூருக்கு உண்டு. பாவை நோன்பு இங்கு தொடங்கி தாய்லாந்துவரை பரவியிருக்கிறது.

அமைப்பு: திருவனந்த புரத்துக்கு (மதுரையிலி ருந்து) செல்லும் இரயில் பாதையும் நெடுஞ்சாலையும் ஸ்ரீ வில்லிபுத்தூர் வழியே செல்லுகின்றன. இராம நாதபுர மாவட்டத்தின் மிகப் பெரிய நகரமாகிய இராச பாளையம் இங்கிருந்து 10 கி. மீ. அந்நகரிலிருந்து இம் மாவட்டத்திலுள்ள எந்த இடத்திற்குச் செல்லவும் ஸ்ரீ வில்லிபுத்தூர் வழி ஒன்று மட்டுமே உண்டு.

மதுரைக்குத் தெற்கே இந்நகர் கல்லுப்பட்டி வழியாக 75 கி. மீ. (47மைல்) தொலைவு; மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் இந்நகரிலிருந்து 13 கி. மீ. இந்நகர்க்குரிய இரயில் நிலையம் 3 கி. மீ. தொலைவிலுள்ளது. சிவகாசி கிழக்கே 19 கி. மீ. விருது நகர் வடகிழக்கே 46 கி. மீ. தென்காசி தெற்கே 80 கி.மீ.

ஊர்ப் பெயர்; ஸ்ரீ வில்லிபுத்தூர், சீ வில்லிபுத்தூர், செருவில்லிபுத்தூர், திருவில்லிபுத்தூர், புதுவை, தென் புதுவை என்ற பெயர்கள் இவ்வூருக்கு உண்டு. வடபத்ர

சயனர் கோயில் கல்வெட்டில் மல்லிப் புத்தூர் என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது.

ஆடு மாடு மேய்ப்பவர்கள் அமைத்துக் கொண்ட புதிய ஊர் வல்லிபுத்தூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்கிறார் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.

வில்லியர் என்ற கூட்டத்தார் சங்ககாலத் தமிழகத் தில் வாழ்ந்தனர். அவர்கள் தங்கிய காரணத்தால் அவர் கள் பெயர் பெற்ற வில்லியனூர் (புதுச்சேரி), வில்லி வாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்) போல இவ்வூரும் பெயர் பெற்றிருக்கலாம்.

நான்மறைகளும் ஓதக்கூடிய அந்தணரைக் குடி யேற்றிய ஸ்ரீ வல்லப பாண்டியன் என்ற பாண்டிய அரசன் பெயரை இவ்வூர் பெற்றதாகவும் ஒரு சாரார் கூறுவர்.

மல்லியில் ஆண்ட வில்லி என்னும் வேடுவர் தலைவன் அமைத்த நகர் என்றும் சிலர் கருதுவர். புத்து ஊர் என்பதற்கு எறும்புப் புத்து இருந்த ஊர் என்று காரணம் கூறுவாரும் உளர். இதற்கு ஆதாரமாக ஸ்ரீ வில்லிபுத்தூர் காடாக இருந்ததாயும் அங்கு வேட்டையாடிய கண்டன் புலியடித்து இறந்ததாயும் அவன்சவத்தை எறும்புப் புத்துக்களின் வழியாகத் தடம் கண்டு, பார்த்தனர் என்றும் கூறுவர்.

கோயில்கள்: நாச்சியார் கோயில், வடபத்ரசயனர் கோயில், வைத்தியநாத சுவாமி கோயில் என்ற முப் பெரும் கோயில்கள் இங்கு உள்ளன.

நாச்சியார் கோயில்: திருப்பாவை முழுவதும் இக் கோயிலில் எழுதப்பட்டிருக்கிறது. 108 வைணவ தலங் களிலும் நின்றும் இருந்தும் கிடந்தும் உள்ள இறைவர்

களின் வண்ண ஓவியங்கள் இரண்டாம் சுற்றில் இருக்கின்றன.

கோயிலின் நெற்களஞ்சியம் திருக்கொட்டாரம் என்று பெயர் பெற்றிருப்பது. திருவிதாங்கூர்த் தொடர்பைக் குறிக்கிறது. இரண்டாம் பாளையக்காரப் போரின்போது, கி. பி. 1800-இல், தளபதி கான் சாஹிப் இக்கோயிலைக் கொள்ளையிட முயன்றதால், விக்கிரகங்கள் பாதுகாப்புக்காகத் திருவனந்தபுரத்திற்குக் கொண்டு போய் வைக்கப்பட்டன. கோயிலின் ஆட்சியும் 1850 வரை திருவிதாங்கூர் மஹாராஜாவின் பொறுப்பில் இருந்தது. மேல்தடாகத்தில் வடபத்திர சயனர் திருவுருவம், திருவனந்தை அனந்தபத்மனாபர் திருவுருவத்தைப் போலச் சமைத்துப் பிரதிட்டை செய்யப் பெற்றது.

இக்கோயில் திருப்பணி செய்தவர்களுள் திருமலை நாயக்கர் குறிப்பிடத்தக்கவர். அவர் கைவண்ணத்தை இங்குள்ள சிற்பங்களில் காணலாம். யாளிகள் உள்ள பெரிய தூண்களும் யாளி, சிங்கம், யானை மூன்றும் ஒன்றின்மேல் ஒன்று நிற்பதுபோன்ற சிற்பமும் இங்கு உள்ளன. முக்கோணங்களிலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய காட்சியை ஒருவகைக் கண்ணாடி அணிந்து பார்க்கக்கூடிய மூன்று டைமன்ஷன் படங்கள் இந்நாளில் வெளிவருகின்றன. இக்கோயில் சிற்பங்களிலும் இவ்வாறு நீளம், அகலம், உயரம் யாவும் ஒருங்கே தெரியும்படியான அமைப்பு உளது. ஒவ்வொரு மூலையிலிருந்தும் பார்த்தால் காட்சியில் சில வேறுபாடுகள் தெரியும்.

திரு முக்குளத்தில் ஆண்டாளுக்கு ஆடிப்பூரத்தில் எண்ணெய்க் காப்பு விழா நிகழும். அதற்காகச் சந்தனாதித் தைலம் தயாரிக்கின்றனர். இது சத்து நிறைந்தது. கோவிலில், விலைக்கு விற்கப்படுகிறது.

ஆண்டுதோறும் புரட்டாசி கருடசேவையில் ஆண்டாளுக்குச் சூட்டிய மாலையை, திருப்பதி ஏழுமலையானுக்கு அனுப்புகின்றனர். திருப்பதியிலிருந்தும் ஆண்டாளுக்கு வரிசைகள் வருகின்றன.

நாய்ச்சியார் கோயில் கட்டப்பட்டிருக்கும் இடத்தில் பெரியாழ்வாரின் திருமாளிகை இருந்ததென்பர். பாண்டியர், சோழர் முதலிய மன்னர்களால் விரிவாக்கப்பட்டிருப்பினும் பெரியாழ்வாரே இக்கோயிலைக் கட்டித் தம் காலமான 1?-ஆம் நூற்றுண்டு வரை நடைமுறைகளை மேற்பார்த்து வந்தாராம். இதன் நினைவாக இன்றும் ஆடிப் பூரம் ஏழாம் திருநாளில் நெல் அளப்பது என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மார்கழி மாதத்தில் திருப்பாவை ஓதப்படுகிறது. பகல் பத்து, இராப்பத்து என்ற திருவிழாக்கள் நிகழ்கின்றன.

பங்குனி உத்தரத்தில் ஆண்டாள் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

இக்கோயிலில் சுக்கிரவாரக் குரடு இருக்கிறது: இதில் வெள்ளி தொறும் ஆண்டாளும் ரங்கமன்னரும் ஊஞ்சலில் ஆடுவர். மாதவி பந்தல், கண்ணாடிக் கிணறு, நந்தவனத்தில் உள்ள திருப்பூர மண்டபம் ஆகியவையும் காணத் தக்கன.

வடபத்ர சயனர் கோயில்: இக்கோயில் கோபுரம் மிகவும் புகழ் பெற்றது. புகழுக்குக் காரணம் அது 192 அடி உயரம் இருப்பதாகும். 217 அடி உயரமுள்ள திருவண்ணாமலைக் கோபுரத்துக்கு அடுத்தபடி, தமிழ் நாட்டில் உயரமான கோபுரம் இதுவே. 1960 வரை ரூபாயின் பகுதிகளாக அணா, பைசா என்ற சில்லறை நாணயங்கள் இருந்தன. ஒரு ரூபாய்க்கு 16 அணா. ஒரு அணாவுக்கு

12 பைசா. எனவே ஒரு ரூபாய்க்கு 192 பைசா. ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோபுரம் 192 அடி உயரமுடைய தால், முழுரூபாயாக விளங்குகிறது என்று ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும்போது சொல்லிவந்தனர். இப்போது அணுவும் பைசாவும் மறைந்து விட்டன. அடி, கெஜம் என்பன போய் மீட்டர் என்ற நீட்டலளவை வந்து விட்டது. கோபுரமும் புதுப்பித்துப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுளது.

இக்கோபுரத்தின் நிலைக்கால் ஒன்றில் காணப்படும் கல்வெட்டுச் செய்யுள், இக்கோபுரத்தை மேரு மலை யுடன் ஒப்பிடுகிறது.

கோபுர வாயிலருகே பெரியாழ்வார் சந்நிதி இருக் கிறது. இக்கோயிலில் இந்தச் சந்நிதிக்கு முக்கியத் துவம் மிகுதி.

மூலஸ்தானம் உயர்ந்த மேடைமீது இருக்கிறது. இம் மேடையில் காணப்படும் பகல் பத்து என்ற மண்டபத் தில் மரவேலைப்பாடு அருமையானது. மூலவர் அருகே வில்லி, கண்டன் திருவுருவங்கள் உள்ளன. இங்குள்ள உற்சவர்கள் வருமாறு:

சக்கரத்தாழ்வார், வீதியாரவருவார், வில்லிபுத்தூர் உறைவார், அல்லல் விளைத்த பெருமாள். ஆண்டாளுக் குக் காதல் நோய் தந்து அல்லல் விளைத்ததால் பெரு மாளுக்கு இவ்வாறு பெயர் வந்தது. மூலவராகிய பெருமாள் சயனத் திருக்கோலத்தில் ஸ்ரீ தேவி, பூதேவி அடிவருடச் சேவை சாதிக்கிறார்.

இக்கோவிலுக்கும் நாச்சியார்கோவிலுக்கும் இடையே இரண்டையும் இணைப்பதாய் ஒரு நந்தவனம் இருக்கிறது. இங்கிருந்துதான் ஆண்டாள் எடுத்து வளர்க்கப் பெற்ற

தாக ஐதீகம். ஆண்டாளின் அவதார தலம் இதுவே என்பர்.

வட பாலீசுவரர் கோயில் என்ற பெயரில் வட பத்ர சயனர் கோயில் சிவன் கோயிலாக இருந்தது என்று சிலர் கருதுகிறார்கள். சயனத்திற்குப் பின் புறம் சுவரில் லிங்கம் மறைந்து இருப்பதாகக் கூறுவர். நாடகசாலைத் தெருவிலுள்ள கிருஷ்ணன் கோவிலே பழைய வைணவர் கோயில் என்பர்.

மடவார் விளாகம்: ஸ்ரீவில்லிபுத்தூரின் தென்பகுதி மடவார் விளாகம் எனப்படும். இங்கு ஒரு காலத்தில் பெண்கள் மட்டுமே வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். சமீப காலம்வரை சுற்று வட்டத்துக் குறுநிலமன்னர்களின் ஆதரவு பெற்ற விலைமகளிர் இங்கு வாழ்ந்து வந்திருக் கின்றனர். பெண்கள் நீராடும் குளம் இங்கு நன்முறை யில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

வைத்திய நாத சுவாமி கோயில்: மடவார் விளாகத்தில் வைத்திய நாத சுவாமி பெயரால் பெரியதொரு சிவன் கோயிலும், அதன் உட்கோயிலாகச் சிவகாமி அம்மன் கோயிலும் உள்ளன. இங்கு கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் காணப்படு கின்றன.

வைத்தியநாத சுவாமியை வழிபட்டு, திருமலை நாயக்க மன்னன் வயிற்றுவலி நீங்கப் பெற்றதால் இக் கோயிலுக்கு அவன் நன்முறையில் திருப்பணி செய்வித் ததாகக் கூறப்படுகிறது. இக்கோவில் மண்டபத்தில் இரு மனைவியருடன் திருமலை நாயக்கரது உருவச்சிலை உளது. தமிழ் நாட்டிலுள்ள உருவச்சிலைகளுள் இதுவே பெரியது என்பர். இங்கே பூசை நடந்த பிறகே திருமலை நாயக்கர் உணவு உண்பாராம். அதற்காக

இங்கு ஒரு நகரர் மண்டபமும் மதுரை வரை மைலுக்கு ஒரு மண்டபமாக 40 மண்டபங்களும் அமைத்திருந்தார். முத்து விசயரங்க சொக்கப்ப நாயக்கர் உருவச்சிலையும் இங்கு காட்சி தருகிறது.

வரலாறு; திருமலை நாயக்கர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டினர். மதுரையில் அவர் கட்டியுள்ள மஹாலின் பாணியில் பெரிய தூண்களுடைய சிறிய மாளிகை ஒன்றைத் தெற்கு ரத வீதியில் கட்டியுள்ளார். மாவட்ட முன்சீபின் நீதிமன்றமும், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்ட அலுவலகமும் இந்த மண்டபத்தில்தான் இயங்கிவருகின்றன. அருகேயுள்ள யானைக்கால் மண்டபம், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் அலுவலகமாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு சாதிக்கும் ஓரிரு தெருக்கள் உள்ளன. சான்று: தேவர் தெரு, சாத்தானியார் தெரு, பிள்ளைமார் தெரு, சாலியர், தரகனர், பன்னடி என்ற பெயருள்ள வகுப்பினர் ஐந்து பட்டிகளில் (தெருக்களில்) வாழ்கின்றனர்.

இந்நகர் வடக்குத் தெரு தேவார மடத்தில் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் ஆசிரியரான கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளின் படம் உளது. மனோன்மணிய நாடகத்தில் 'சுந்தரர்' என்ற பாத்திரமாக அப்படம் படைக்கப்பட்டிருக்கிறது.

1900-ஆம் ஆண்டுவரை ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு டிப்டி கலெக்டரின் இருப்பிடமாகவும் இருந்து. 1899 சூலையில் சிவகாசியில் நாடார்களுக்கும் தேவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு, பெரிய கலகமாக மூண்டது. அதை ஒடுக்குவதற்காக, ஆங்கிலேய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. அதன் பயனாக',

ஸ்ரீவில்லிபுத்தூர் டிப்டி கலெக்டர் பதவி ஒழிக்கப்பட்டு, ஐ. சி. எஸ். பட்டம் பெற்ற அசிஸ்டண்டு கலெக்டர் அலுவலகம் சிவகாசியில் ஏற்படுத்தப்பட்டு, அரசியல் முக்கியத்துவம் இழந்த ஸ்ரீவில்லிபுத்தூர் 1926-இல் இரயில் பாதை ஏற்பட்டதாலும், இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட கைத்தறித் தொழில் வளர்ச்சியாலும் மறுமலர்ச்சி பெற்றது.

நகரம் கடல் மட்டத்தைவிட 453 அடி உயரத்தில் உளது. அதைவிட 67 அடி உயரமான இடத்தில்; செண்பகத்தோப்பு என்னுமிடத்தில் ஓடும் பேயனாற்றின் நீர், ஊற்று மூலம் இவ்வூருக்கு வருகிறது. இதனால் குடிதண்ணீர் வசதி இருந்து வருகிறது. பெரிய குளம், வாழைக்குளம், வேலங்குளம் முதலிய குளங்கள் சூழ அமைந்திருப்பதும் ஸ்ரீவில்லிபுத்தூரின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்து வந்திருக்கிறது.

பித்தளைப் பாத்திரத் தொழிலும், சமக்காளம், வேட்டி, சட்டைத் துணி நெசவும் இந்நகரில் பெரிய அளவில் நடைபெறுகின்றன. பருத்தி ஆராய்ச்சி நிறுவனமும் வேளாண்மைப் பண்ணைகளும் உள்ளன. கூட்டுறவு நூலாலை ஒன்றும் இயங்கிவருகிறது.

நகரின் மக்கள் தொகை 55,000. நகராண்மைக் கழகத்தின் வருவாய் பத்து லட்சம் ரூபாய்.

இருப்பவை: கத்தோலிக்கச் சமயத்தைச் சேர்ந்த பெல்ஜியக் கன்னிமார் நடத்தும் கல்வி நிலையங்கள்; இலங்கை பெந்திகோஸ் கிறித்தவர் செயற்கைக் குன்றில் கட்டியுள்ள புராடஸ்டண்டு தேவாலயம், 3,500 கைத்தறிகள், 10 நெல் அறைக்கும் ஆலைகள், 6 சத்திரங்கள்; ஓராயிரம் ஐயங்கார் குடும்பங்கள்.

இல்லாதவை: வாரச் சந்தை, உயர்நிலைப்பள்ளி ஏற்பட்டு 120 ஆண்டாகியும் கல்லூரி.

இந்நகரில் பிறந்த பெருமக்கள்: பாவை தந்த ஆண்டாள், பிரபந்தம் பாடிய பெரியாழ்வார், தருமை ஆதீனம் நிறுவிய குருஞான சம்பந்தர்.

பாரதம் இயற்றிய வில்லிபுத்தூரரார் இவ்வூரார் அல்லர்; அவர் பிறந்த ஊர் சனியூர் என்பர், சிலர்.

பெரியதிருவிழா: ஆடிப்பூரம்.

இந்நகரின் பிற பெருமைகள்: 70 அடி உயரமும் 9 சக்கரங்களும் உடைய "ராஜா" தேர், பெனிங்டன் நூல் நிலையம், கூட்டுறவு பால்பண்ணை, சுவையான குடிநீர், 1856-இல் ஏற்பட்டு முதல் தலைமையாசிரியரான ஹவ்டன் பெயரால் உருவாகியுள்ள ஹவ்டன்புரத்தில் சிறந்து விளங்கும் கிறித்தவ மிசனரி சொசைட்டி உயர்நிலைப்பள்ளி, ஆண்டாள் கோவிலில் படைக்கப்படும் அரவணை (இது ஹல்வாவின் சுவையுடைய சர்க்கரைப் பொங்கல்) பிட்டு, அதிரசம், சர்க்கரைப் பொங்கல், தேன்குழல் இவையாவும் தூய நெய்யில் செய்யப்படுவது மரபு.

சுற்றுவட்டத்தில் காணத்தக்க இடங்கள்: முக்கனி மரங்களும் கமுகு மரங்களும் அடர்ந்த செண்பகத்தோப்பு நீர்வளம் நிறைந்த வழுக்கும் பாறை, முதலியார் ஊற்று.

இந்நகரில் செய்யப்படும் கைவினைப் பொருள்: தாழங்குடை.

இந்நகரில் நிலவும் கருத்து வேறுபாடு: சிவன் கோவிலாக, ஸ்ரீசெண்பகக் குழலாள் சமேத வடவால ஈசுவரன் கோவில் என்ற பெயருடன் இருந்த கோவிலில் வைணவர்

கள் செல்வாக்குப் பெற்றதாகவும், இன்று புகழ் பெற்ற பெருமாள் கோவிலாக உயர்ந்த கோபுரத்துடன் விளங்குவது சிவன் கோவிலே என்றும் இந்நகர் திருவருள் நிலயத் திருப்பணிக் கழகத்தாரின் வெளியீடு கூறுகிறது.

இராஜபாளையம்

இம்மாவட்டத்தின் பெரிய நகரம் இராஜபாளையம் இது தமிழ் நாட்டின் முன்னணி நகர்களுள் ஒன்று. புகழ் மிக்க வரலாறு, செழுமையும் கொழுமையும் நிறைந்த இயற்கைச் சூழல், விரிந்து வரும் தொழில்கள்; நாட்டுப் பற்று ஆகிய செல்வங்களைக் கவனிக்கும்போது; இந்நகருக்கு இணை இந்நகர்தான்!

ஸ்ரீவில்லிபுத்தூர் இங்கிருந்து 7மைல், சிவகாசி 19, விருதுநகர் 30, மதுரை 54, இரயில் நிலயம் பெரிது. மக்கள் தொகை விரைவில் ஒரு நூறாயிரம் ஆகிவிடக் கூடும்.

ஊர்ப் பெயர்: பாளையம் என்பது 'கண்டோன்மண்டு', அதாவது படை தங்கி நிலையூன்றும் இடம். 15,16-ஆம் நூற்றாண்டுகளில் நாயக்க மன்னர்களுடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசிலிருந்து தெலுங்கு பேசும் போர் வீரர்கள் தமிழ் நாடெங்கும் கலகங்களை அடக்குவதற்காக வந்து, பல இடங்களில் பாளையம் அடித்தனர். பாளையங்கள் அவற்றை உண்டாக்கியவர்கள் பெயரால் அமைந்தன. விஜயநகர அரசர்களின் வழியினரான ஒருவர் ஏற்படுத்தியதால் இங்கு அமைந்த பாளையம் ராஜபாளையம் எனப் பெயர் பெற்றது. இது ஒரு கருத்து.

பாளையக்காரர்கள் ஆற்றிய அரும்பணிக்குப் பரிசாக, அரசர்கள் அவர்களுக்கு நிலங்கள் வழங்கி ஆங்

காங்கே அவர்கள் குடியேறவும் நிலைத்து வாழவும் வழி வகை செய்தனர், சிலர் இடம் விட்டு இடம் மாறி புதிதாகக் குடியேறிய வண்ணமாக இருந்தனர். இராஜ பாளையத்திற்கு 10 கி. மீ. கிழக்கே ராஜ குலராமன் என்னும் சிற்றூரில் சின்னராஜா என்ற கிருஷ்ணம்ம ராஜா மேற்குத் தொடர்ச்சி மலைக்கு வேட்டையாடச் சென்றார். அவருடைய வேட்டை நாயும் உடன் சென்றது. வேட்டை நாயை ஒரு முயல் விரட்டியது. நாயை முயல் அச்சுறுத்தும் வியத்தகு நிகழ்ச்சியால் கவரப்பட்ட சின்னராஜா தம் ஆட்களுடன் அந்த இடத்தில் குடியேறி, இராஜபாளையத்தைத் தோற்று வித்தார். இது பிறிதொரு கருத்து.

ஆந்திர மாநிலத்திலிருந்து புறப்பட்டுப் பல ஊர் களில் தங்கி, கடைசியாக ராஜுக்கள் நிலையூன்றிய இடமே இராஜபாளையம் என்று தெரிகிறது. பழைய பாளையம் என இந்நாளில் வழங்கும் பகுதியிலேயே இவர்கள் இருந்தனர். இவர்களுடைய வீரச் செயல் களைப் பாராட்டி, சொக்கநாத நாயக்கர் ஓர் இனும் சாசனம் வழங்கியதாயும் பின்னர் புதுப்பாளையம் ஏற் பட்டதாகவும் கூறுகின்றனர். போர்த் தொழிலில் சிறந்து விளங்கிய இவர்கள் பின்னர் ஏர்த் தொழில் புரிந்து அதிலும் ஏற்றம் பெற்றனர்.

நாய்: இராஜபாளையம் நாய் என்ற சாதியை ராஜாக்கள் வளர்ந்து வந்தனர். இது காவலுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. வெள்ளை அல்லது சிவப்பு நிறத் தில்; நீண்ட முகத்துடன் இது அமைந்தது. மணலில் இதைப் படுக்கவிட மாட்டார்கள். நாள்தோறும் 'சோப்' போட்டுக் குளிப்பாட்டுவார்கள். இதை வளர்ப்பதற்குப் பெரும்பணம் செலவிட்டனர். இராஜபாளையம் நாய்க் குட்டி 150 ரூபாய் வரை விற்று வந்தது. பல தொழில்

களில் புகுந்தபிறகு, நாய் வளர்ப்பதை ராஜாக்கள் கைவிட்டனர். அது இப்போது அவர்கள் மறந்துவிட்ட கலை.

ஐயனார் அருவி: இராஜபாளையத்துக்கு மேற்கே 13 கி. மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. மலையேறவும் உல்லாசப் பொழுது போக்கவும் வேட்டையாடவும் ஏற்ற இடம். மலைத் தொடரின் உச்சி 5,000 அடி. அந்த உயரத்திலிருந்து வேனிற் காலத்தில் நடுப் பகலில் தேக்கடி நீர்த் தேக்கம் தெரியும்.

ஓங்கி வளர்ந்த மரங்கள், விரிந்து படர்ந்த பசுங் கொடிகள், தென்றல் காற்று—இந்தச் சூழலில் ஐயனார் அருவி உளது. இங்கு குடும்பத்துடன் சென்று வருவதை வனபோஜனம் போவது என்று இப்பகுதியினர் குறிப்பிடுவர். அருவிக்கு அருகே ஐயனார் கோவில் இருக்கிறது. ஹரிஜனங்கள் இங்கு நடத்தும் திருவிழாவில் ஏனையோரும் கலந்து கொள்கிறார்கள்.

சஞ்சீவிமலை: நகரின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. அநுமன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியபோது சிதறி விழுந்த மலையின் ஒரு சிறு பகுதி என்பர். மலைமீது எழிலார் தோற்றமுடைய முருகன் கோயில் உளது. குகைகளும் மூலிகைகளும் நிரம்பிய இம் மலையில் திருக்கார்த்திகையன்று தீபம் ஏற்றுகிறார்கள். அநுமன் இளைப்பாறிய இடம் என்று நம்பி, பக்தர்கள் இம்மலையில் சில இடங்களை வழிபடுகின்றனர்.

வேளாண்மை: இம் மாவட்டத்தில் இங்குதான் கூடுதலாக மழை பெய்கிறது. நெல்லும் கரும்பும் மணிலாக் கடலையும் மிகுதியாகப் பயிரிடப்பெறுகின்றன. இவ்வட்டாரத்தில் 20,000 டன் வெல்லம் காய்ச்சி வட இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அன்றாக்

கீரைக்கும் மிளகாய் வற்றலுக்கும் இவ்வூர் புகழ்பெற்றது. உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகியவையும் விளைகின்றன. தக்காளிப்பழத்தைப் பானையில் போட்டு வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். மாந்தோப்பு, தென்னந் தோப்பு, வாழைத்தோட்டம் முதலியன ஏராளம். புளியமரங்கள் பலாமரங்களுக்கும் குறைவில்லை. எலுமிச்சைப் பழத்தை ஊறுகாய் போட்டு, புகையிலைப் பொட்டலம் போலச் சிறு வடிவில் வாழைப் பட்டைகளில் கட்டி இங்கிருந்து நாள்தோறும் சென்னைவரை பல இடங் களுக்கு அனுப்புகிறார்கள். பேரிக்காயும் கொவ்வைப் பழமும் ஆவணி புரட்டாசியில் குவிந்து கிடக்கும். சித்திரை வைகாசியில் தெருவெல்லாம் பலாப்பழ மணம் மூக்கைத் துளைக்கும். மாம்பழச் சாதிகள் பல. அவற்றுள் சப்பட்டை அல்லது பங்கனப்பள்ளி சுவையானது. பஞ்ச வர்ணம் என்பது தோல் சுருங்கியதாகவும் பல நாட்களுக் குப் பின்னரும் சாப்பிடக் கூடியதாகவும் இருக்கும்; இதைப் பற்றிப் பழ ஆராய்ச்சித் துறையினர் ஆய்வு நடத்தியுள்ளனர்.

பருத்தி—பஞ்சு: கரிசல் மண் பூமியாக இருப்பதால்; பருத்தி பயிரிட ஏற்றது. உழைப்பின் செல்வர்களாகிய இப்பகுதி மக்கள் உகண்டா பருத்தியை விளைவிக்கின் றனர். இது வெள்ளையாயும் பட்டுப் போன்று மென்மை யாயும் நீண்டதாயும் இருக்கும். தமிழ் நாட்டின் தலையாய பஞ்சு வணிகக் கேந்திரங்களுள் இராஜபாளைய மும் ஒன்று.

தொழில்: பருத்தியிலுள்ள கொட்டையை நீக்கி, பஞ்சைப் பிரிப்பது இங்கு ஒரு முக்கிய தொழில்: இந்த வகையில் 25 தொழிற்சாலைகள் உள்ளன. நூல் ஆலை களும் நெசவாலைகளுமாக 15-ம் சாயத் தொழிற் சாலைகள், இரும்புக் கடசல் பட்டறைகள், துத்தநாகத்

தகடு தொழிற்சாலை, கல்பைை செய்யும் நிலையம் ஆகிய வையும் இயங்குகின்றன. இந்நூலின் முன்பகுதியில் விவரம் காண்க.

வாணிகம்: அருகேயுள்ள காடுகளில் கிடைக்கும் தேக்கு, தோதகத்தி மரங்களும் சந்தனக் கட்டையும் ஏலக்காயும் தேனும் இராஜபாளையத்தில் விற்பனை யாகின்றன. மரவாடிகள்' ஏராளமாக உள்ளன. வியாழக்கிழமை பெரிய சந்தை கூடுகிறது.

கல்வி: மாவட்டக் கழகம் முதலில் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தியது இந்நகரில்தான். இப்பள்ளியில் தெலுங்கு மொழியும், வணிக நிலையங்களில் சேர்ந்து வேலை பார்க்க உதவும் படிப்பும், பொறியியல் பாடங் களும் கற்பிக்கப்படுகின்றன. கல்லூரியில்லாக் குறை இந்நகரின் பெரிய குறைபாடு.

மொழி: தெலுங்கும் தமிழும் இந்நகரில் இணைந்து வளர்கின்றன. பொங்கலும் புதியலும் கொண்டாடப் படுகின்றன. தெலுங்கு, தமிழ் இரு புத்தாண்டுகளும் இந்நகரில் விழா நாட்கள்.

தேசியம்: இராஜபாளையத்திற்குப் பெருமை தந்தவர் தன்னலமற்ற பெரியாரும் அரசியல் தலைவரும் நேர்மை யான ஆட்சியாளருமாக விளங்கிய பூ. ச. குமாரசாமி ராஜா (1898-1957). அவர் தலைமையில் தேசிய உணர்ச்சி இந்நகரில் காட்டுத் தீ போலப் பரவிற்று. அகில பாரத சர்க்கா சங்கம் ஏற்படு முன்னரே, இந்நகரில் கதர் வேலை தொடங்கிற்று. கதர் என்றால் வங்காளம் சாக்குப்போல் முரட்டுத் துணியாக இருக்கும் என்று மக்கள் நினைத்த நாளில், மெல்லிய கதரை உற்பத்தி செய்தது இராஜ பாளையம்தான்.

வெளிநாட்டுத்துணி மறியலிலும் கள்ளுக்கடை மறியலிலும் இந்நகரில் பச்சிளம் பாலகரும் ஈடுபட்டுத் தங்கள் தந்தைமார் நடத்திய கடைகளுக்கு முன்னும் அறப்போராட்டம் நடத்தினர். 1942-இல் நிகழ்ந்த இறுதிக் கிளர்ச்சிகளில் இந்நகர் திரு. வசந்தம் முதலிய பலர் மனிதத்தன்மையற்ற சித்திரவதைக்கு ஆளாக்கப் பெற்றனர். சுருங்கக் கூறின், நாட்டு விடுதலை இயக்கத்தில் இராஜபாளையத்தின் பங்கு பெரிது.

இங்ஙகரின் பெருமைகள்: ஏர்த்தொழில் — போர்த் தொழில்—இய்ந்திரத் தொழில் ஆகிய மும்முனைகளிலும் ஏற்றம் பெற்றிருப்பது, பூபதி ராஜா கூட்டுறவு பேங்கு; காந்தி கலை மன்றம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம்

வில்லிபுத்தூர், மல்லி பிர்க்காக்களடங்கியது இவ்வொன்றியம். அலுவலகம் வில்லிபுத்தூரையடுத்த மடவார் விளாகத்தில் இருக்கிறது. ம. தொ. 75,000 பரப்பு 116 ச. மைல். மழை குறைவு. மம்சாபுரத்தில் பேரூராட்சியும் 28 ஊராட்சி மன்றங்களும் உள்ளன.

மம்சாபுரம் பகுதி வளமானது. கம்பு, சோளம் பருத்தி, கடலை, வாழை தவிர இருபோகம் நெல் பயிரிடுகின்றனர். இங்கும் அழகர் கோயிலிலும் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. செண்பகத் தோப்புப் பகுதி மா, பலா முதலிய பழத்தோட்டங்கள் நிறைந்தது.

வில்லிபுத்தூர்க்கும் இராஜபாளையத்திற்கும் இடையே வைத்திலிங்கபுரம், இராமகிருஷ்ணபுரம் இரயில் நிலையங்கள் உள. ஆறுகள் இல்லை. வில்லிபுத்தூர்ப் பெரிய குளம் மட்டுமே பெரிய ஏரி. கூட்டுறவு நூல் ஆலை, செங்கற் சூளைகள், கொத்தங்குளத்தில்

மத்தாப்பூ, வாணத் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. சில ஊர்களில் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. பனைவெல்லமும் கரும்பு வெல்லமும் காய்ச்சப்படுகின்றன.

கிருஷ்ணன் கோவில் அருகே பெரிய பெரிய தாழிகள் அகப்படுகின்றன. அச்சந் தவிர்த்தான், படிக்காசு வைத்தான்பட்டி என்னும் ஊர்கள் உள்ளன. நீண்ட இழைப் பருத்தி ஆராய்ச்சித் திட்டம் இவ்வொன்றியத்தில் அமல் செய்யப்பட்டிருக்கிறது.

அத்திகுளம்: ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து தென்கிழக்குத் திசையில் சுமார் இரண்டுகல் தொலைவில் உள்ளது. இவ்வூர்க் குளத்துக் கரையில் பெரிய அத்திமரம் இருந்ததால் இதற்கு அத்திகுளம் எனப் பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள். இவ்வூர்க்கு அருகில் உள்ள சிற்றாலம் புத்தூர் என்னும் சிற்றூரில் பெரிய ஆலமரம் இருப்பதும் இதற்குச் சான்றாகும். அத்திகுளத்தில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராமாநுச சுவாமிகள் என்ற துறவி ஒருவர் இருந்தார். இவர் பல மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பிரம்மச் சூத்திரத்தை விரிவுரையுடன் வடமொழியிலிருந்து தமிழில் பெயர்த்துள்ளார். இவர் சித்திரக் கவி பாடுவதில் வல்லவர். மதுராந்தகம் வட்டத்தில் உள்ள கெசப்பாக்கம் என்ற ஊரில் பரமபதமடைந்தார்.

அழகர்கோயில்: வில்லிபுத்தூரிலிருந்து 11 கி. மீ. தொலைவில் கண்மாய்களுக்கு நடுவே அமைந்தது. மலை மீது, திருமலை நாயக்கர் கட்டிய கோவில் இருக்கிறது. செண்பகத் தோப்பு, சறுக்கம்பாறை, மலையருவி, முதலியார் ஊற்று, சந்தன மரங்கள் ஆகியவை காணத்தக்கவை. செண்பகவல்லி அம்மனுக்கு வழங்கப்பெற்றதால் அவ்வாறு பெயர்பெற்ற தோப்பில், பளியர்

என்னும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களைப் போன்றே—ஆனால் பிளாஸ்டிக்கில்—குடிசை கட்டிக் கொண்டு ஓர் அமெரிக்கர் இங்கு இவர்களுடன் ஓராண்டுக் காலம் தங்கி இவர்களுடைய வாழ்க்கை முறைகளை ஆராய்ந்துள்ளார்.

ஆலங்குளம்: கீழராஜ குலராமனிலிருந்து 6 கி. மீ. தொலைவு. சுண்ணும்புப் படிவங்கள் நிறைந்தது. அரசினர் சிமிண்டு ஆலை தொடங்கியுள்ளனர். சுற்று வட்டத்தில் கரிசல் பூமியில் பருத்தி விளைவு சிறந்து நடைபெறுகிறது.

இராமச்சந்திரபுரம் (சென்னங்குளம்): தேசிய உணர்ச்சியாலும் உகண்டா விளைவாலும் புகழ்பெற்றது.

கிருஷ்ணன் கோவில்: வில்லிபுத்தூருக்கும் வற்ருயிருப்புக்கும் நடுவே அமைந்தது, பல சாலைகள் கூடும் இடம்.

கீழராஜகுலராமன்: ஆரம்ப சுகாதார நிலையம் உளது. வன்னியர்க்கும் நாயக்கமார்க்கும் ஏற்பட்ட பூசலைத் தவிர்க்க ராஜாக்கள் வரவழைக்கப்பட்டனராம். அவர்கள் பெயரால் இவ்வூரும் இராஜபாளையத்துக்கு அருகே மேலராஜகுல ராமனும் ஏற்பட்டன.

திருவண்ணுமலை: வில்லிபுத்தூருக்கு வடமேற்கே ஐந்து மைல் தொலைவு. குன்றின்மீது வேங்கடாசலபதி கோவில் என்ற சீனிவாசப் பெருமாள் கோவிலும் அடிவாரத்தில் சுற்றி கோனேரி என்ற அழகான குளமும் உள்ளன. குன்றில் புரட்டாசிச் சனிக்கிழமையில் கூட்டம் மிகுதியாகக் கூடுகிறது. துறவிகள் சிலர் வசிக்கின்றனர். இங்குள்ள விநாயகர் 12 அடி உயரமும் 8 அடி அகலமும் உடையது. உலகிலேயே பெரிய பிள்ளையார் திருவுருவம் இதுவே என்பர்.

படிக்காசு வைத்தான்பட்டி; மடவார் விளாகம் தல புராணத்தில் இவ்வூரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சம்பந்தருக்கு இங்கு படிக்காசு வைத்ததாகக் கூறுவர்.

மல்லி: 'மல்லி நாடாண்ட மடமயில்', 'மருவாரும் திருமல்லி வளநாடு' என்ற சொற்றொடர்களும் பிராட்டி பிறந்த பதி இதுவே என்று சிலர் கருதுவதும் இவ்வூர்ப் பெருமையைக் குறிக்கின்றன. கிழக்கிந்தியக் கம்பெனி யின் காலத்துக்கு முன், இது மல்லிவள நாட்டின் தலை நகராக இருந்தது. விழுப்பனூரில் பழமையான பெருமாள் கோவில் இருக்கிறது.

மம்சாபுரம்: வில்லிபுத்தூரிலிருந்து 5 கி. மீ. கர்நாடக நவாபுகள் ஏற்றம் பெற்றிருந்த போது, சந்தாசாஹிப் நினைவாக 'மகமது சாஹிப்புரம்' என்ற பெயரில் ஏற்பட்டது.

இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தின் தென்மேற்கில் அமைந்தது. மாவட்டத்திலேயே கூடுதலான மக்கள் வாழும் ஒன்றியம் இதுவே. நெல்லை மாவட்டத்துச் சங்கரன் கோவில், வாசுதேவநல்லூர் ஒன்றியங்களும் 20 மைல் நீளத்துக்கு மேற்குத் தொடர்ச்சி மலையும் இதன் எல்லையில் உள.

சேற்றூர், செட்டியார்பட்டி, முகவூர் மூன்றிலும் பேரூராட்சிகளும் மேலும் 34 ஊராட்சி மன்றங்களும் கொண்ட இவ்வொன்றியம் நன்செய் வளமும், விலை மிக்க தேக்கு நிறைந்த காட்டு வளமும் உடையது. ஆடி மாதம் சாரலும் புரட்டாசி—ஐப்பசியில் மழையும் பெய்கிறது. 3,000 ஏக்கர் பழத்தோட்டங்கள் போடப் பட்டிருக்கின்றன. மரம் அறுக்கும் ஆலைகளும் செங்கற்

குழிகளும் தளவாய்ப்புரம், முகவூர், சம்சிகாபுரம், சத்திரப் பட்டி என்னும் ஊர்களில் பெருந்தொகையினராக நெசவாளரின் தறிகள் உள்ளன,

தளவாய்புரத்தில் கூட்டுறவு முறையில் மருத்துவ மனை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் பத்து ரூபாய் செலுத்துபவர்களுக்கு, செலவில்லாமல் நடைமுறை வைத்தியம் செய்யப்படுகிறது. மருந்துகளை அவர்கள் விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும். உறுப்பினர் அல்லாதவர்கள் பணம் செலுத்தி மருத்துவ உதவி பெறலாம்.

சேற்றூர் (சேத்தூர்): தலபுராணத்தில் சேரையூர் என்று குறிக்கப்படுகிறது. இராஜபாளையத்திலிருந்து 10 கி. மீ. தொலைவு. ஒன்றியத்தில் இதுவே பெரிய ஊர்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருப் பதால், குற்றாலத்தில் பருவகாலத்தில் பெய்யும் சாரலை இங்கும் ஓரளவு அனுபவிக்கலாம். மேய்ச்சல் வசதியிருப் பதால் கால்நடைகள் நன்கு பேணப்படுகின்றன.

மலையோரமாக அமைந்த சிறு பகுதியின் குறுநில மன்னர்களான ஜமீன்தார்கள் அப்பகுதியின் வளத்தால் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர். பாண்டி நாட்டு மறவர் சிலர் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் குடியேறினர். அவருள் ஒருவர் சோழ அரசனின் கருவூலக் காவலராக இருந்தார். அவர் வழி யினரான சின்னைய தேவர் 16-ஆம் நூற்றாண்டளவில் மதுரை அரசரின் ஆதரவு பெற்று, சேற்றூர்ப் பாளையக் காரர் ஆனார். கிழக்கிந்தியக் கம்பெனியார் இவர்களுக்கு ஜமீன்தார் என்று பட்டம் வழங்கினர்.

19-ஆம் நூற்றாண்டில் இவர்கள் செல்வாக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் முழுவதும் பரவியிருந்தது.

இராஜபாளையத்தில் உயர்நிலைப்பள்ளியும் தந்தி அலுவலகமும் இவர்களாலேயே ஏற்பட்டன.

சைவத்தையும் தமிழையும் 17-ஆம் நூற்றுண்டு முதல் இவர்கள் போற்றிப் புரந்து வந்திருக்கின்றனர். மூன்ருவது பாளையக்காரரான சின்னையத் தேவர் தமிழ்ப் புலவர்கட்குப் பரிசிலும் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு நிலங்களும் வழங்கியுள்ளார். 1800-இல் குறுநில மன்னராக வாழ்ந்தபோது, இராஜபாளையம் சங்கர மூர்த்திக் கவிராயர் 'சேற்றூர்ப் பள்ளு' பாடியுள்ளார். சுந்தர் தாஸ் தேவர், காவடிச் சிந்து அண்ணுமலை ரெட்டியார், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், தனிச் செய்யுட் சிந்தாமணி ஆசிரியர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர், முகவூர் மு. ரா. அருணுசலக் கவிராயர் ஆகியோர் இவர்களுடைய ஆதரவு பெற்றவர்களில் சிலர் ஆவர்.

சேற்றூர்க் குறுநில மன்னர்களின் மாளிகையில் முப்பதடி சுற்றளவும் நான்கடி உயரமும் உள்ள சதுர வடிவான கருங்கல் காணத்தக்கது.

விக்கிரமச் சோழனுக்குக் கண்பார்வை வழங்கிய திருக்கண்ணீசுவரர் கோவில், சேற்றூரில் இருக்கிறது. இக்கோவிலும் தேவதானம் கோவிலும் சேற்றூர் மன்னர்கள் ஆளுகையில் உள.

காரைக்கால் பகுதியில் திருநள்ளாறு அருகே ஒரு சேத்தூர் இருக்கிறது.

தேவதானம்: இவ்வூர் மதுரை - தென்காசிச் சாலையில் இராஜபாளையத்திலிருந்து 13 கி. மீ. தொலைவில் சேற்றூர்க்குத் தென்மேற்கே அமைந்திருக்கிறது. இச்சாலையில் இராமநாதபுர மாவட்டத்தில் இதுவே கடைசி ஊராகும். மக்கள் தொகை 6,000.

தேவர்கள் அனைவரும் குடியேறிச் சிறப்பித்ததால் தேவதானம் என்ற பெயர் ஏற்பட்டதாக இவ்வூரார் கருதுகின்றனர். மேற்குத்தொடர்ச்சிமலை அடிவாரத்தை யடுத்திருப்பதால், நிலவளமும் நீர்வளமும் சிறந்து விளங்குகின்றன. அரசினர் விதைப் பண்ணை ஒன்றை நிறுவியுள்ளனர்.

சேற்றூர்க் குறுநில மன்னர்கட்கு உரிய நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவில் இவ்வூர்க்கு மேற்கே 3 கி. மீ. தொலைவில், தனியிடத்தில் அமைந்திருக்கிறது. இக் கோவில் சேற்றூர்க் குறுநில மன்னராக இருந்த சின்மயத் தேவரால் கட்டப்பெற்றது. அவர் வழியினர் இக் கோவிலுக்கு வளமலி நிலங்களும் அணிகலன்களும் வழங்கியுள்ளனர்; இன்றளவும் குறுநில மன்னரே இக் கோயிலின் அறங்காவலராக இருந்து வருகிறார்.

இறைவன் பெயர் நச்சாடை தவிர்த்தருளிய நாதர் என்றும் நச்சாடீசுவரர் என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது. மக்கள் வழக்கில் நிலவி வரும் பெயர் நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி என்பதாகும். பாண்டியனைக் கொல்லும் பொருட்டுச் சோழன் அனுப்பிய நச்சு கலந்த ஆடையின் வாயிலாக நேர இருந்த தீங்கைத் தவிர்த்தருளியதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். இறைவியின் பெயர் தவம் பெற்ற நாயகி என்பதாகும்.

கோவிலின் முதற் சுற்றில் மூலவர் கோவிலும் நாயக்கர் காலத்து மண்டபமும் இரண்டாம் சுற்றில் திருமலைக் கொழுந்தீசர் கோவிலும் உள்ளன. கோவிலருகே அரண்மனை மண்டபம், தேவர்கள் மண்டபம் முதலிய பல மாளிகைகளும் கோவிலுக்கு எதிரில் தெப்பக்குளமும், சற்று தொலைவில் (மேற்குத் தொடர்ச்சிமலையில் தோன்றும்) பச்சையாறு, கோரையாறு என்ற பெயர்களை உடைய சிற்றாறுகளும் உள்ளன. மாசி மகம்

கொண்டாடப்படுகிறது. வைகாசி விசாகம் 10 நாள் விழா: ஒன்பதாம் நாளில் தேரோட்டம் நிகழும்; அன்று சேற்றூர்க் குறுநில மன்னர் தண்டியல் சேவை சாற்று வது மரபு.

தளவாய்புரம்: தளவாய் அரியநாத முதலியாரின் பெயரால் 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிநாட்டில் ஏற்பட்ட ஊர்களுள் இதுவும் ஒன்று. சேற்றூர்ப் பாளை யப்பட்டு இவரால் உண்டாக்கப்பட்டதால், இந்தப் பகுதி யில் இவர் பெயர் தாங்கும் ஊர் இருப்பது இயல்பே.

இவ்வூர் சேற்றூரிலிருந்து தென்கிழக்கே 3 கி. மீ. தொலைவில் இருக்கிறது. நெசவுத் தொழில் இங்கே சிறந்து விளங்குகிறது.

ஐயனூர் கோயில்: இராஜபாளையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் மலைப்பகுதியில் இருக்கிறது; இங்குச் செல்ல நல்ல சாலை போடப்பட்டிருந்தும் பஸ் போக்கு வரத்துக் கிடையாது.

இங்கு நீரகத்து ஐயனூர் கோயிலும் இரண்டு ஆள் உயரத்திலிருந்து விழும் அருவியும் உள்ளன. அருவியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழுகிறது. பருவ காலத் தில் அதன் அளவு கூடுதலாக இருக்கும். சுற்றுலாச் செல்லுபவர்கள் தங்குவதற்குரிய விடுதிகள் கட்டப் படவேண்டும். இராஜபாளையம் நகருக்கு இங்கிருந்து குழாய்கள் வழியாகக் குடிதண்ணீர் செலுத்தப்படு கிறது.

ஜமீன் கொல்லங் கொண்டான்: இராஜபாளையத்துக்கும் தளவாய்புரத்துக்கும் இடையே இருக்கிறது. ஒரு பாளை யப்பட்டு இருந்தது. இப்பாளையக்காரர் ஆங்கிலேய ருக்கு எதிராகப் பூலித்தேவருக்குத் துணையாக இருந் தார்.

கொல்லம், கேரளத்தின் தலைநகரமாக இருந்தது. அந்நகரைப் போரில் கொண்ட ஒரு வீரனுக்கு இவ்வூர் மானியமாக விடப்பட்டிருக்கக்கூடும்.

இளந்திரை கொண்டான்: இவ்வூரின் பெயர் ஈழம் திரை கொண்டான் என்று இருந்திருக்கக்கூடும். ஈழம் என்பது இலங்கையின் மறு பெயர் ஆகும்.

இங்கே சமணர் பலர் இருந்தனர். இவருள் சிலர் பிராமணராகி, நீரகத்து ஐயனாரை வழிபடுகின்றனர். இவ்வூர்ப் பள்ளர்கள் பலர் 'நீர் ஆறு' (ஐயனார் பெயர்) என்று பெயரிட்டுக் கொள்ளுகின்றனர்.

புனல்வேலி: பொட்டல்பட்டிக்கு அருகேயுள்ள சிற்றூர். நெசவுத் தொழிலில் இவ்வூர்ச் சாலியர் சிறந்து விளங்குகின்றனர்,

கொங்கன்குளம்; இராசபாளையத்திலிருந்து 19 கி. மீ. தொலைவு. வில்லிபுத்தூராரைப் பாரதம் பாடச் செய்த கொங்கன் என்னும் சிற்றரசன் இவ்வூரினன்.

வற்றாயிருப்பு ஊராட்சி ஒன்றியம்

எல்லைகள்: ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தின் வட பகுதியில இது அமைந்தது. இவ்வொன்றியத்துக்கு வட மேற்கேயும் வட கிழக்கேயும் மதுரை மாவட்டத்துச் சேடபட்டி, கல்லுப்பட்டி ஒன்றியங்களும், கிழக்கே சிவகாசி ஒன்றியமும், தென் கிழக்கேயும் தெற்கேயும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியமும் மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையும் உள்ளன.

பரப்பு: 120 சதுரமைல் (300 சதுர கி. மீ.)

மக்கள் தொகை: ஒன்றியத்தின் மக்கள் தொகை 83,760 ஆகும். மறவர்களும் நாயடுகளும் இங்கு வாழும்

முக்கியமான சமூகத்தினர்கள் என்று சொல்லுவது பொருந்தும். நாயக்கர் ஆட்சியில் ஏற்பட்ட கிருஷ்ணா புரம், ரெங்கப்ப நாயக்கன்பட்டி, ரெங்கபாளையம் என்ற சிற்றூர்கள் இவ்வொன்றியத்தில் உள்ளன.

இவ்வொன்றியத்தில் 24 ரெவினியூ கிராமங்கள் உள்ளன. 28 ஊராட்சி மன்றங்கள் இயங்கிவருகின்றனர். இவற்றுள் வற்றாயிருப்பு, சுந்தர பாண்டியம், கொடிக்களம், வ. புதுப்பட்டி நான்கும் பேரூராட்சிகள்.

மலைகள்: இவ்வொன்றியம் மலைவளம் மிகுந்தது. கிழக்கேயுள்ள மதுரை—ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சாலை தவிர் ஏனைய மூன்று திக்குகளிலும் கொடிக்குளத்திலிருந்து கிருஷ்ணன் கோவில்வரை 16 கி. மீ. தொலைவுக்கு மேற்குத் தொடர்ச்சி மலை பரவியிருக்கிறது. இதன் ஒரு பகுதியான சதுரகிரி மலையின் உயரம் ஏறத்தாழ 3500அடி இருக்கலாம். மலைத் தொடர் தவிர சில குன்றுகளும் ஆங்காங்கே உண்டு.

ஆறுகள்: மலைப் பகுதியிலிருந்து மழை நீரைக் கொண்டுவரும் ஆறுகள் இருக்கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கன இரண்டு; இவற்றில் ஆற்றின் போக்கைக் காண இயலாது. ஆங்காங்குள்ள கண்மாய்களில் சேர்ந்து அவற்றின் நீர் செலவலாகிவிடுவதால், ஆறாக அவை காட்சி தருவதில்லை. இவ்வாறு மறைந்துள்ள ஆறுகள் அர்ஜுனா ஆறு, கல்லணை ஆறு என்பன. அர்ஜுனா ஆறு வற்றாயிருப்பிலிருந்து 3 கி. மீ. தொலைவிலுள்ள அர்ஜுனாபுரத்தில் தோன்றி 20 கி. மீ. தொலைவிற்கு இந்த ஒன்றியத்தில் மட்டும் பாய்ந்து கண்மாய்களில் கலந்துவிடுகிறது. கல்லணையாறு சாப்டூர் மலைகளில் தோன்றி 6 கி. மீ. நீளத்துக்குப் பாய்கிறது. ஏராளமான 'சிற்றாறுகளும்' இவ்வொன்றியத்தில் செல்லுகின்றன.

கண்மாய்கள்: வராகசமுத்திரம், பெரியகுளம்; நத்தம்பட்டிக் கண்மாய் ஆகிய பெரிய ஏரிகள் இங்கு இருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில், (வற்றாயிருப்பிலிருந்து 11 கி. மீ. தொலைவில்) உள்ள பிளவைக் கல் என்னுமிடத்தில் ஓர் அணை கட்டுவதற்கு வாய்ப்பு இருந்து வருகிறது. இதைப் பற்றி அரசாங்கத்தார் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இவ்வணை கட்டி முடிக் கப்பெற்றால், வற்றாயிருப்பு பிர்க்காவில் உள்ள வளமான நிலங்களுக்கு உறுதியான பாசனவசதி ஏற்படும், புதிதாக 5000 ஏக்கரில் பயிரிட இயலும்.

வேளாண்மை வளம்: தஞ்சை மாவட்டம் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாய் இருப்பதுபோல இவ்வொன்றியம் இராமநாதபுர மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது. வடகிழக்குப் பருவக்காற்றால் 34 அங்குலம் (850 கி. மீ.) மழை பெய்கிறது; காய்ந்து விளையும் இம்மாவட்டத்தில் மழை கூடிய பகுதி இதுவேயாகும். மலைப்பகுதிகளிலிருந்து வரும் மழை நீரும் இவ்வொன்றியத்து நிலங்களை வளப்படுத்துகிறது.

வற்றாயிருப்பு, கான்சாபுரம், மஹாராஜபுரம், புதுப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து அரசாங்கத்துக்குப் பெரிய அளவில் நிலவரி வசூலிக்கப்படுகிறது. வற்றாயிருப்புக்கும் மலைகளுக்கும் இடையேயுள்ள நிலங்கள் தமிழ் நாட்டிலுள்ள வளமான நிலங்களுடன் சேர்க்கத்தக்கவை, ஓர் ஏக்கர்க்கு 6000 ரூபாய் வரை இவை விலையாகின்றன. வண்ணான்குளம் காட்டில் மலைமீது விதைத்த கொழிஞ்சி போட்டு, இந்த நிலங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கோயம்புத்தூர்ச் சம்பா (CO 2), கார்த்திகைச் சம்பா என்ற சிறு நெல் வகைகள் இங்கு பயிரிடப்பட்டு நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. இரண்டு போகம் நெல்விளைவிப்பது வழக்கம்

வற்றுயிருப்பு பிர்க்காவுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் உள்ள நத்தம்பட்டி பிர்க்கா, புன் செய்த் தானியங்கள் விளையும் பகுதியாக இருக்கிறது. இவ்வொன்றியத்துப் புன்செய்த் தானியங்காளவன—சோளம், ஏள், சிறிதளவு கரும்பு. இரண்டாவது போகத்துக்கு நெல்லைப் போடாமல் உகண்டா பருத்தியைப் பயிரிடுவது கடந்த சில ஆண்டுகளாக வழக்கமாகிவிட்டது.

இவ்வொன்றியத்து வளமான நிலங்கள் பெரும்பாலும் அந்தணரின் உரிமையாக இருந்தன. கம்யூனிஸ்டுக் கட்சியின் கிளர்ச்சிகளின் விளைவாக, அந்தணர்கள் தம் நிலத்தை 1950 முதல் விற்றுக் கொண்டே வருகின்றனர்.

மேற்குப் பகுதியில் தென்னந் தோப்புக்கள் ஏராளமாக உள்ளன.

மாந்தோப்புக்களில் இராஜபாளையம் சப்போட்டா மாம்பழங்கள் பெரிய அளவில் காய்க்கின்றன.

அரசாங்கக் காட்டியல் துறையினர், இவ்வொன்றியத்திலுள்ள ரிசர்வுக்காடுகளில் மென்மையான மரங்களையும் முந்திரிச் செடிகளையும் பயிரிட்டுவருகின்றனர்.

இவ்வொன்றியத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் மாந்தோப்பு, புளியந்தோப்பு, தென்னந்தோப்பு ஆகியவற்றை உண்டாக்கியும் நாவல், மதுரம், வேம்பு, நெல்லி ஆகிய மரங்களை நட்டும் இருப்பது பாராட்டுக்குரியது.

போக்குவரத்து: மதுரை—ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சாலை இவ்வொன்றியத்தின்வழியே செல்லுகிறது. குறிப்பிடத்தக்க வேறு சாலைகள் இல்லை. பெரும்பாலான ஊர்கட்கு பஸ் வசதி உண்டு. மலைப் பகுதிக்குப் வண்டிப்பாதை

கள் மட்டுமே இருந்து வருகின்றன. காட்டுமரங்களைக் கொண்டு பார வண்டிகள் வற்றாயிருப்பில் நூற்றுக்கணக்கில் செய்யப்படுகின்றன.

இவ்வொன்றியத்தில் இரயில் பாதைகள் கிடையாது. அண்மையிலுள்ள நிலையம் ஸ்ரீவில்லிபுத்தூர் இரயில் நிலையம், இது வற்றாயிருப்பிலிருந்து 22 கி. மீ. தொலைவு.

வற்றாயிருப்பு: (ம. தொ. 14,000) இச்சிறு நகரம் அர்ஜுனா ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது. ஊரிப் பெயர் 'வாட்ராப்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிறது. தமிழில் வத்ராயிருப்பு என எழுதப்பட்டுவருகிறது. இது வற்றாயிருப்பு என்பதன் மரூஉ, 'வற்றியிரா இருப்பு' என்பதே தொன்மையான பெயர் என்று சொல்லுவாரும் உண்டு. எவ்வாறாயினும், இவ்வூர் வளம் கொழித்து, இராமநாதபுர மாவட்டத்துக்கு ஒரு வைப்பு நிதியாக இருந்து வருகிறது.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாயும் தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூடத் தலைவராயும் இருந்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் (இ. 1961) இவ்வூரினர்.

இயற்கை எழில் நிறைந்த சூழலில் இவ்வூர் அமைந்திருப்பது, இராமநாதபுர மாவட்டத்தில் வேறு எந்த ஊருக்கும் இல்லாச் சிறப்பாகும்.

இவ்வூரில் இருப்பவை—ஊராட்சி மன்ற ஒன்றிய அலுவலகம், ஆவணக்களரி, 1879 முதல் நடைபெற்று வரும் இந்து உயர்நிலைப்பள்ளி, சிவன் கோவில், பெருமாள்கோயில், அநுமார் கோவில், மதுரைத் தையற்காரர்கள் திருவிழா நடத்தும் நல்லதங்காள் கோவில், வேளாண்மை வங்கி, மூன்று முக்கியமான தெருக்களின் குறுக்கே உள்ள 'தலையணைத் தெரு'

இருந்தவை—டிப்டி தாசில்தார் அலுவலகம்.

சந்தை நாள்—வியாழக்கிழமை

முக்கியமான திருவிழா—புரட்டாசியில் நிகழும் முத்தாலம்மன் திருவிழா.

மதுரையிலிருந்து மஹாராஜபுரம் வழியே 43 மைல் (69 கி. மீ.) கிருஷ்ணன் கோவில் வழி 74 கி. மீ. ஸ்ரீவில்லி புத்தூரிலிருந்து 19 கி. மீ. திருமங்கலம் 48 கி. மீ. கல்லுப்பட்டி 30 கி. மீ. தொலைவுகளில் வற்றாயிருப்பு அமைந்திருக்கிறது.

அழகாபுரி: இது ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு வடக்கே 19 கி. மீ. தொலைவில், மதுரை மாவட்டத்து எல்லையருகே, அர்ஜுனா ஆற்றின் கரையில் அமைந்த சிற்றூர் ஆகும். மதுரை—தென்காசி நெடுஞ்சாலை இவ்வூர் வழியே செல்லுகிறது. இங்கிருந்து வற்றாயிருப்பு (17 கி. மீ.) விருதுநகர் (22 கி. மீ.) ஆகிய இரு நகர்களுக்கும் நேர் சாலைகள் உள்ளன.

அத்தியூத்து: வற்றாயிருப்பிலிருந்து 3 கி. மீ. இங்கு முகமதியத் துறவி ஒருவர் சமாதியருகே ஏழு மரங்கள் உள்ளன. ஒன்று பட்டுவிட்டால், பிறிதொன்று தோன்று கிறது. இயற்கை எழில், தெளிவான நீரோட்டம், காட்டுவளம்—இவை இச்சிற்றூரின் பிற சிறப்புக்கள்.

ஆயர்தர்மம்: இவ்வொன்றியத்தின் வட கோடியிலுள்ள இவ்வூர், மிகப் பழமையான ஊர்களுள் ஒன்று பழங்காலத்துக் கிணறுகள் இங்கு நல்ல நிலையில் உள்ளன.

கான்சாபுரம்: இவ்வூரின் முழுப்பெயர் கான்சாகிப் புரம் என்பதாகும்; இது அத்தியூத்துக்கும் குருவிப் பாறைக்கும் இடையே அமைந்த வளமான ஊர். மக்கள் தொகை 3, 512.

குருவிப்பாறை: வற்ருயிருப்பிலிருந்து 17 கி. மீ. தொலைவிலும் கான்சாபுரத்திலிருந்து 13 கி. மீ. தொலைவிலும் மலைமீது இவ்வூர் இருக்கிறது. இப்பகுதியில் யானைகள் ஏராளமாகத் திரிகின்றன. பளிஞர் என்ற மலைச் சாதியார் வாழ்கின்றனர். சிற்றண்ண வாயிலில் (சித்தன்னவாசல்) உள்ள காவற்காரன் படுக்கை போல இங்கு ஒரு பாறை நீட்டிக் கொண்டிருக்கிறது. அதன் கூரைக்குக் கீழ் 150 பேர் இருக்கலாம். பொழுது போக்குவதற்கு இது உற்ற இடம் ஆகும்.

இப் பாறையிலிருந்து 30 மீட்டர் தொலைவில் இரண்டு ஆள் உயரத்தில் ஓர் அருவி உளது; இவ்வருவியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழுகிறது.

குன்னூர்: வற்ருயிருப்பிலிருந்து 10 கி. மீ. தொலைவில் இவ்வூர் அமைந்திருக்கிறது. இவ்வூரில் ஆவணக் களரியும் இந்த ஒன்றியத்துக்குரிய அடிப்படைச் சுகாதார நிலையமும் உள்ளன. கிறித்தவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர்.

கூமாப்பட்டி: இவ்வூர் வற்ருயிருப்புக்கு மேற்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது. மக்கள் தொகை 8,926 ஆகும். பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள் ஆவர். பெரிய கண்மாய் ஒன்று இங்கு இருக்கிறது.

மலையடிவாரத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் இருப்பதால், நீர்வளம் மிகுந்த இவ்வூர் ஐப்பசி மாதத்தில் சுவிட்சர்லாந்து போல—ஆனுல் அசுத்தமாக இருக்கிறது. மலைமீது காப்பியும் ஏலக்காயும் பயிரிட்டுள்ளனர். இவ்வூரருகே பேச்சிக்கேணி, வெற்றிலைக்கேணி என்னும் இடங்கள் உள்ளன. பேச்சிக்கேணியில் யானையும் புலியும் மிகுதி.

கொடிக்குளம்: மலையடிவாரத்தில் அமைந்தது. இவ்வூரில் 8,926 மக்கள் வாழ்கின்றனர். இவ்வூருக்கு மேற்கே தூங்காத கிழவன் கோவில் என்ற கோவில் இருக்கிறது. இவ்வூர் சாப்டூர் ஜமீனுக்குட்பட்டிருந்ததால், எஸ். கொடிக்குளம் என்ற பெயர் இவ்வூர்க்கு உண்டு.

சதுரகிரி: மேற்குத்தொடர்ச்சி மலைமீது அமைந்து நாட்டுப் பாடலில் இடம் பெற்ற புகழ் மிகுந்த தலம்.

வற்றுயிருப்பிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ள தாணிப்பாறையிலிருந்து மலைமீது ஒற்றையடிப் பாதையில் 10 கி. மீ. நடந்து சென்று சதுரகிரியை அடைய வேண்டும். இப்பயணம் மிகச் சிக்கல் நிறைந்தது.

இம்மலையில் ஜோதி விருட்சம் எனப்படும் ஒளி காட்டும் மரம் உண்டு. சித்தர்கள் வாழ்கின்றனர். மூலிகைகள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. ஆடி அமாவாசைக்கு ஒரு லட்சம் மக்கள் இங்குச் செல்லுகின்றனர். இங்குள்ள மகாலிங்கம் கோவில் புனிததலமாகும்; மதுரை சவுராட்டிரர்களின் குலதெய்வமுமாகும். காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியர் சுவாமிகள் இங்கு வருகை புரிந்துள்ளார்கள்.

மேகத்தினை முட்டும் உன்னதமும் பாதாளம்வரை ஆழ்ந்து, அதற்கேற்ற பரப்பும் உள்ளதாய் இருக்கின்றது. மகந்துகள், தபோநிதிகள், கின்னரர், வித்தியாதரர்கள் இருப்பிடமாக விளங்கித் தேவதாருக்கள், சந்தனம், பாரிசாதம், அகில், மா, பலா, கொன்றை, கமுகு, வாழை முதலிய தோப்புகள் சோலைகள் நிறைவு பெற்று, காமதேனு போன்ற தெய்வீக மிருகங்கள், அன்னம் போன்ற பறவைகள் வாசம் செய்யும் சூரியனின் கதிர்பட்டு வெள்ளிக்கோபுரமென உயர்ந்து நிற்கும் பல குன்றுகளும், குகைகளும்

அடங்கப்பெற்று ஒப்புயர்வற்ற ஈசனுரி இருப்பிடமாக அமைந்தது.

மகாலிங்கம் கோயிலிலிருந்து மேலும் 3 கி. மீ. தொலைவு சென்றுல் சந்தன மகாலிங்கம் என்ற லிங்கம் உள்ள குகையை அடையலாம்.

சதுரகிரி என்பது சிதறிய கிரி என்பதன் மருஉ என்பர்.

தாணிப்பாறையில் அஷ்டலட்சுமி ஆசிரமம் இருக்கிறது. வழுக்குப் பாறையில் அகலமான சாலையும் அத்தியூத்து பசுக்கடை போன்ற இடங்களில் சத்திரங்களும் தேவைப்படுகின்றன.

சிறுமலை: கத்தோலிக்கம் முதலில் பரவிய இடங்களுள் இது ஒன்று. ஒரு சிறு குன்றின்மீது இவ்வூர் உளது. ஊரின் ஒருபகுதி கிறிஸ்தியான்பேட்டை என்ற பெயரை உடையது. கிறித்துவப் பெரியார் ஒருவர் இங்கு 17-ஆம் நூற்றுண்டில் அடங்கியுள்ளார். ஆண்டுதோறும் மே மாதம் ஒரு திருவிழா நடைபெறுகிறது.

சுந்தரபாண்டியம்: வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் என்ற இரு சகோதரர் இருந்தனர் என்றும் முஸ்லிம் அரசனுன கில்ஜி என்பாரி ஆதரவு பெற்று வீரபாண்டியன் சிற்றரசனுயினுன் என்றும் அவனுல் விரட்டப் பெற்ற சுந்தரபாண்டியன் ஒதுங்கி வாழ்ந்த இடம் சுந்தரபாண்டியம் என்னும் ஊராக உருவானதாயும் கூறப்படுகிறது. வீரபாண்டியபுரம் என்னும் ஊர் எட்டையபுரத்துக்கும் தூத்துக்குடிக்கும் இடையே இருக்கிறது.

இவ்வூரில் வேட்டி நெசவு மிகுதி. பெரியதொரு கண்மாய் தோண்டப்பட்டிருக்கிறது.

இவ்வூர்க்கு வடக்கே வைகுந்த மூர்த்தி கோயில் உளது.

பார்ப்பனத்தையனூர் கோவில்: இக் கோயில் மஹாராஜ புரத்திலிருந்து 8 கி. மீ. தொலைவில் கல்லணையாற்றுக் கரையில் உளது. ஒற்றையடிப் பாதையில் இங்குச் செல்ல வேண்டும்.

300 அடி (91 மீட்டர்) உயரமுள்ள ஆனந்தமடம் என்ற குன்று இருக்கிறது. உச்சியில் இது ஒரே கல்லாக உளது. அக் கல்லின்மீது நின்று பார்த்தால் சுற்று வட்டம் கவினுறு காட்சி தருகிறது.

புதுப்பட்டி: வற்றுயிருப்பிலிருந்து வயல்வழி ஒன்றரை கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. மக்கள் தொகை 9,008. நெசவுத் தொழில் இங்கு சிறப்பாக நடைபெறு கிறது. இந்திய விடுதலைப் போரில் இவ்வூரின் பங்கு குறிப்பிடத் தக்கது.

ஊரருகே சந்தனப் பெருமாள் கோவில் இருக்கிறது. அடிக்கடி வெள்ளம் வருவதால் இக் கோவில் திருவிழா வற்றுயிருப்பில் நிகழ்கிறது. இங்குள்ள கத்தோலிக்கத் தேவாலயத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள கத்தோலிக் கர் 8663 பேர் ஆவர்.

புதுப்பட்டியிலிருந்து நடந்து மலைமீது 11 கி. மீ சென்றால் (இராஜபாளையம் பகுதியான) அழகர்கோவிலை அடையலாம்.

துலுக்கப்பட்டி: துலுக்க ஆட்சியில் இச் சிற்றூர் ஏற்பட் டிருக்கக் கூடும். இப்போது இங்கு இம் மதத்தார் ஒருவருமில்லை. வளம் நிறைந்த இவ்வூர் முன்னர்ப் பேரையூர் ஜமீன் கிராமமாக இருந்தது.

மஹாராஜபுரம்: வற்றுயிருப்புக்கு வடக்கே 5 கி. மீ. தொலைவிலுள்ள இவ்வூர் 4,222 மக்கள் வாழும் வளமான

ஊராகும். வரலாற்றுத் தொடர்புள்ள ஊராகவும் இருக்கவேண்டும் என்பது ஊர்ப் பெயரிலிருந்து உணரலாம்.

இவ்வூரினர் இந்தியாவின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டுள்ளனர். இவ் வூரருகே 1958 முதல் சிலகாலம் காந்தி ஆசிரமம் என்ற நிறுவனம் சிறப்பாக நடைபெற்றது. இங்கும் ரெங்கப்ப நாயக்கன்பட்டியிலும் ராஜமன்னரீக க்ஷத்தி ரிய கம்மவர்கள் தங்கள் குலதெய்வமான எல்லையம்மனுக்கு கோவில் கட்டியுள்ளனர்.

மாவூத்துக் கோவில்: வற்றுயிருப்பிலிருந்து 6 கி. மீ தொலைவில் உள்ள குறிஞ்சிநில ஊர். சதுரகிரிக்குச் செல்லுபவர்கள் மாவூத்துச் சாமியார் அடங்கியுள்ள இக்கோவிலை வழிபடுகின்றனர்.

முதலியார் ஊற்று: மலைப்பகுதியிலுள்ள இவ்வூரி லிருந்து சின்னமனூர் தேனி முதலிய ஊர்களின் தோற் றத்தைச் காணலாம். வேட்டையாடவும் பொழுது போக்கவும் வெள்ளைக்கார அதிகாரிகள் வருவது வழக்க மாக இருந்தது. அழகர் கோயில் 8 கி. மீ. தொலைவு.

மூவரை வென்றான்: (ம. தொ. 2,000) அழகாபுரியி லிருந்து 5 கி. மீ. தொலைவில் இருக்கிறது. இங்கு வாழைத் தோட்டங்கள் மிகுதி. இவ்வூரில் கோவில் கொண்டுள்ள ஐயனார் வற்றுயிருப்பு வாழ் மக்கள் பலரின் குலதெய்வமாக இருந்து வருகிறது.

ஒரு கி. மீ. தொலைவில் 400 அடி உயரமான மொட்டைமலை இருக்கிறது. இம்மலையில் சுனையும் குகைக் கோயிலும் உள்ளன. நந்தியின் வாயினின்று நீர் ஊற்று கிறது.

இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. இவ்வூரைப் பற்றிச் செப்பேடு ஒன்று உண்டு. அரசர் மூவரை வென்ற ஒருவன் வரலாறு கூறப்படுகிறது. மூவறையன் என்ற சிற்றரசனைச் சூழ்ச்சியாக வென்று வற்றுயிருப்பு ஊரினர் கொன்றதாகப் பிறிதொரு வரலாறும் உண்டு.

9. அருப்புக்கோட்டை வட்டம்

வைகைக்கு மேற்கே அமைந்த வட்டங்களுள் இது நடுநாயகமானது. மதுரை மாவட்டத்துத் திருமங்கலம் நெல்லை மாவட்டத்துக் கோவில்பட்டி வட்டங்கள் இதன் அருகேயுள்ளன. மக்கள் தொகை மூன்று லட்சம்.

நாயக்கர் ஆட்சியில் குடியேறிய கம்மவர் நாயுடு, ரெட்டியார், தேவாங்கர் ஆகியோர் இவ்வட்டத்தில் குறிப்பிடத்தக்கவர்கள். தொன்றுதொட்டு இது மறவர் நாடு; இராமநாதபுரம் ஜமீனைச் சேர்ந்தது.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தின் வளம், சாத்தூரின் தொழிற் செழிப்பு, இராமநாதபுரத்தின் வரலாற்றுப் பெருமை, முதுகுளத்தூரின் பிற்பட்ட தன்மை ஆகியவை இங்கு இல்லை. மலையும் காடும் இல்லை. குண்டாறு, கிருதுமால் என்ற சிற்றாறுகளே பாய்கின்றன. புன்செய் வேளாண்மையும் நெசவுமே இங்குள்ள தொழில்கள்.

மதுரை—விருதுநகர் இரயில் பாதை இவ்வட்டத்தைத் தொட்டுக்கொண்டு செல்லுகிறது. விருதுநகர்—மானாமதுரை இரயில் பாதை இவ்வட்டத்தை, சமமான இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. தூத்துக்குடிக்கு அகல இரயில் பாதை ஏற்பட்டு இவ்வழியாக அமைந்தால் இவ்வட்டம் வளர்ச்சியடையக்கூடும்.

அருப்புக்கோட்டை நகராண்மைக் கழகமும் அருப்புக்கோட்டை, காரியாபட்டி, திருச்சுழி, நரிக்குடி என்ற நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் இவ்வட்டத்திலுள.

அருப்புக்கோட்டை நகர்

1948-இல் நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. 60,000 மக்கள் வாழ்கின்றனர். மதுரை 48 கி. மீ. எட்டையபுரம் 55, தூத்துக்குடி 86, விருதுநகர் 16, திருச்சுழி 13, விருதுநகர்—மானாமதுரை சந்திப்புக்களுக்கிடையே இதுவே முக்கியமான இரயில் நிலையம். வட்டத் தலைநகர்.

சுப்பிரமணிய சுவாமி கோவிலும், தோற்றப் பொலிவுடன் கூடிய நாடார் சிவன் கோவிலும் உள்ளன. மாரியம்மன் கோவில் தொடர்பாய் 1940-இல் தேவாங்கர்க்கும் நாடார்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டு, அரசினர் தண்ட வரி வசூலித்தனர்.

மணிலாக்கடலை, கருப்பட்டி, நல்லெண்ணெய் வியாபாரங்கள் பெரிய அளவில் நடை பெறுகின்றன. தேவாங்கராலும் சாலியராலும் நெசவுத்துறையில் இந்நகர் புகழ் பெற்றிருக்கிறது. வேட்டிகளும் சேலைகளும் இங்கிருந்து அசாமுக்கும் ஒரிசாவுக்கும் நெடுங்காலமாக விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. நெசவாளர் குடியிருப்புக்கள் கட்டப் பெற்றிருக்கின்றன.

தளவாய் அரியநாதர் இங்கு ஒரு கோட்டை கட்டியிருந்தார் என்பர்.

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

75,000 மக்கள் வாழ்கின்றனர். பெரும்பான்மைச் சமூகமாக மறவரும், முன்னேற்றம் பெற்றவர்களாக

நாயுடுக்களும் ரெட்டியார்களும் உள்ளனர். ஊராட்சி மன்றங்கள் 32. காடு, மலை இல்லை.

மதுரை, கமுதி, எட்டையபுரம், தூத்துக்குடி, விருது நகர் ஆகிய நகர்களுக்கு இவ்வொன்றியத்திலிருந்து, அடிக்கடி பஸ்கள் செல்லுகின்றன.

சில ஊர்களில் குட்டநோய் பரவியிருக்கிறது. குட்ட நோய் மருத்துவ மனைகளை அரசு அமைத்திருக்கிறது.

ஆத்துப்பட்டி: திருச்சுழி — அருப்புக் கோட்டைச் சாலையில் இருக்கிறது. இங்கிருந்து கமுதி முதுகுளத்தூர் சாயல்குடி ஆகிய ஊர்களுக்குச் செல்ல ஒரு சாலை பிரிகிறது. நூலாலை ஏற்பட்டிருக்கிறது. பயிர்கள்—பருத்தி, கடலை.

ஆமணக்க நத்தம்: இங்கு அவுரிச்செடி பயிரிடப் பெற்று, தூத்துக்குடியிலிருந்து ஏற்று மதியாகிறது.

கஞ்சநாயக்கன் பட்டி: புன்செய் வேளாண்மையில் சிறந்த சிற்றூர். அருப்புக் கோட்டை நகர் ஓரமாக அமைந்தது. வைக்கோலும் கழிவுத் தாள்களையும் கொண்டு அட்டை செய்யும் தொழிற்சாலை நடைபெறுகிறது.

கள்ளிக்குடி: மதுரைச் சாலையில் உள்ளது. சின்னக் கூடக் கோவில் புகழ் பெற்றது.

குல்லூர்ச் சந்தை: விருதுநகர்க்கு அருகு, தறிநெசவாளரான தேவாங்கரால் பிரபலமானது.

பந்தல்குடி: எட்டையபுரம் சாலையில் அமைந்தது. அருப்புக் கோட்டையிலிருந்து 13 கி. மீ. விளைபொருள்கள்—பருத்தி, துவரை, உளுந்து. பருத்தி அறைக்கும் ஆலைகளும் ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன.

பூங்கா நாடு என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதற் கேற்ப, இன்றும் வயல்களில் நூற்றுக்கணக்கான மயில் களைக் காணுகிறோம். பெருமாள் கோவிலும் கத் தோலிக்கர் ஆலயமும் உள்ளன. இந்நூற்றுண்டின் தொடக்கம் வரை பெரிய அக்கிரகாரம் இருந்தது.

பாலவநத்தம்: விருதுநகர்க்கும் அருப்புக்கோட்டைக் கும் இடையே சமதொலைவில் இருக்கிறது. நன்செய் புன்செய் வளங்கள் உடையது. கைலாசநாதர் கோவி லும் மசூதியும் தேவாலயமும் இருக்கின்றன. பாண்டித் துரைத் தேவரால் இங்கு நிலவிய ஜமீன் இந்நூற் ருண்டின் தொடக்கத்தில் புகழ் பெற்றிருந்தது.

பாளையப்பட்டி: அருப்புக்கோட்டை இரயிலடி அருகே உளது. குளமும் கோவிலும் ஊர்ப் பழமையைப் பறை சாற்றுகின்றன. பாளையப்பட்டிக் குறுநில மன்னர்கள் இராமநாதபுரம் சேதுபதிகளுடன் கொள்வினை கொடுப் பினை உறவு கொண்டிருந்தனர்.

தொழில்கள்—சீனிக்கிழங்கு, மிளகாய் பயிரிடல், மல்லிகைப் பூத்தோட்டம் போடுதல், நெசவு.

வைகாசியில் வேணுகோபால சுவாமி கோவில் திருவிழாவுக்கு மாட்டுத் தாவணி கூடுகிறது.

மலைப்பட்டி: பாலவநத்தத்திற்கு அருகே ரெட்டி யார்கள் ஒரு குன்றின்மீது பெருமாள் கோவில் கட்டியி ருக்கின்றனர். குருசாமி கோவிலால் புகழ்பெற்ற கூத்திப் பாறை இவ்வூருக்கு அருகு.

மந்திஓடை: ஓடையை அடுத்த ஊர். ஓடைமீது கட்டிய பாலத்தை, மந்திரி பனகல் அரசர் திறந்தார். அதனால் மந்தி ஓடை; மந்திரி ஓடை ஆயிற்று!

காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம்

அருப்புக் கோட்டை வட்டத்தின் வடகோடியில், மதுரை மாவட்ட எல்லையில் இந்த ஒன்றியம் அமைந் துளது. இவ்வொன்றியத்துக் கிழக்கே நரிக்குடி. தென் கிழக்கே திருச்சுழி; தென்மேற்கே அருப்புக்கோட்டை, மேற்கே விருதுநகர், வடமேற்கே கள்ளிக்குடி (மதுரை) வடக்கே திருமங்கலம் (மதுரை) ஒன்றியங்கள் உள. தலை நகரான காரியாப்பட்டி மதுரையிலிருந்து 28 கி. மீ. தொலைவு. அருப்புக்கோட்டையிலிருந்து 19 கி. மீ.

ஒன்றியத்தின் பரப்பு 171·34 சதுரமைல். மக்கள் தொகை 55,373. ஊராட்சி மன்றங்கள் 38.

குண்டாறு; திருமங்கலம் பகுதியிலிருந்து இவ்வொன் றியத்தின் வழியாக நரிக்குடிப் பகுதிக்குச் செல்லுகிறது. இது மழை பெய்தால் மட்டுமே நீர் தங்கி ஓடும் சிற்றாறு எனவே இப்பகுதியில் வளம் குறைவு. வேளாண்மை மிகுதி. 400க்கு மேற்பட்ட பம்ப் செட்டுகள் ஏற்பட்டு, அவற்றின் வழி வேளாண்மை நடைபெறுகிறது. இறைவைக் கிணறுகளும் உள்ளன. கண்மாய்கள் பெரிய அளவின.

மதுரைச் சாலைக்கு மேற்கேயுள்ள 12 ஊர்கள் வளமாக உள்ளன. எஞ்சிய 26 ஊர்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. மழை மிகக் குறைவு. 1959 முதல் 1962 வரை சேர்ந்தாற்போல் வானம் பொய்த்தது. காடுகள், மலைகள் இங்கு இல்லை. இரயில் போக்குவரத்தும் இல்லை. மிக அண்மையிலுள்ள இரயில் நிலையம், ஒன்றியத்து எல்லையிலிருந்து 15 கி. மீ. தொலை விலுள்ள கள்ளிக்குடி ஆகும்.

முக்கிய பயிர்—நெல். பிற விளை பொருள்கள்—கேப்பை, கடலை, மேற்குப் பகுதியில் பருத்தி.

சில ஊர்களில் குட்டநோய் பரவியிருக்கிறது.

துலுக்கன்குளம், தாமரைக்குளம் அருகே சுண்ணாம்புக்கல் ஓரளவு உண்டு. செவல்பட்டி, சின்னக் கல்லுப்பட்டி, மந்திரி ஓடைப் பகுதிகளிலிருந்து சென்னை மாநகர் வரை பல நகரங்களுக்கு மல்லிகைப் பூ விற்பனையாகிறது.

காரியாபட்டி: மதுரை—அருப்புக் கோட்டைச் சாலையில் உள்ள ஊர். ம. தொ. 4,293. ஒன்றிய அலுவலகம், ஆரம்ப சுகாதார நிலையம், ஆவணக்களரி, தச்சுப் பயிற்சி நிலையம், கத்தோலிக்கர் தேவாலயம், மருதி ஆகியவை உள்ள ஊர். ஒன்றியத்தில் இங்கு மட்டுமே போலீஸ் நிலையம் உண்டு. இங்கிருந்து திருச்சுழி குறுக்குச் சாலை வழி 19 கி. மீ.

அழகிய நல்லூர்: (3,743) ஒன்றியத்தின் மேற்குக் கோடியில் உள்ள ஊர். இவ்வூரின் பழையபெயர் குட்டலோட்டி. மிளகாய் பருத்தி கடலை வேளாண்மையாலும் மயில்களின் கூட்டத்தாலும் புகழ்பெற்றது.

அல்லாலப்பேரி: ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியில் முடக்கன் குளத்திற்கு அருகேயுள்ள சிற்றூர். அல்லா வின் பேரிகை கேட்டதால் ஊர்ப்பெயர் இவ்வாறு யிற்று. இவ்வூரைச் சேர்ந்த ஒரு சிற்றூரின் பெயர் வெற்றிலை முருகன்பட்டி என்பதாகும்.

ஆவியூர்: கரியாபட்டியிலிருந்து வடக்கே 8 கி. மீ. தொலைவிலுள்ள ஊர். புராணத் தொடர்புடையது.

ஜோகில்பட்டி: கல்குறிச்சியிலிருந்து ஒரு கி. மீ தொலைவு. இப்பகுதியில் பாறை, கல் உடைக்கின்றனர், விசயநகரப் பகுதியிலிருந்து குடியேறிய ரெட்டியார்கள் வாழ்கின்றனர்.

கல்குறிச்சி: நெசவாளர் மிகுந்த ஊர். இங்கிருந்து மதுரை 37 கி. மீ; மல்லாங்கிணறு வழி விருதுநகர் 16 கி.மீ.

தே. கடம்பன்குளம்: இது ஆவியூருக்கு அருகு. இதைச் சேர்ந்த புல்லூரில் அரசாங்க விதைப்பண்ணை நிறுவப் பட்டிருக்கிறது.

தோப்பூர்: ஜமீன் பகுதியாக இருந்தது. தோப்புக்கள் அழிந்துவிட்டன. புளிய மரங்கள் வைக்கப்பட்டிருக் கின்றன.

வரலொட்டி: விருதுநகரிலிருந்து 6 கி. மீ. இவ்வூர் வழியே மங்கம்மாள் அமைத்தசாலை பாலவனத்தத்துக்கு உண்டு. இவ்வூர்க் கண்மாய்க்குள் செங்கற் கட்டிடங் களின் சின்னங்கள் காணப்படுகின்றன. சக்கிலியர் குடியிருப்புக்கு அருகே புதைந்த சிவன் கோயிலின் அடையாளங்கள் தெரிகின்றன. 15 அடி நீளம் 12 அடி அகலம் அளவில் 5 கிணறுகள் உள்ளன. இவற்றுக்குப் பாண்டியன் கிணறு என்று பெயர் வழங்கிவருகிறது. கிணற்றுச் சுற்று மதிலில் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள.

மல்லாங்கிணறு: (5,956) வளமான ஊர். வரலொட் டிக்கு அருகே சூரம்பட்டியில் எலும்புமுறிவு சரிக்கட்டப் படுகிறது. நெடுங்காலமாக மல்லாங் கிணற்றில் நாடகக்கலை ஆதரிக்கப் பெற்று வந்திருக்கிறது.

வயிரவ நாங்கூர்: அருப்புக்கோட்டை—மதுரைச் சாலையின் கிழக்கேயுள்ள சிற்றூர். இங்கு ஒரு மருதி இருக்கிறது. இவ்வூரின் உட்கிராமங்கள்—ஆண்மை பெருக்கி, விட்டிலே ரேந்தல், திருமேனியேந்தல்.

பாம்பாட்டி: காரியாபட்டிக்கு மேற்கேயுள்ள சிற்றூர். இதன் உட்கிராமம் ஒன்று புலவன் குண்டு என்ற பெய ருடையது.

சத்திரம் புளியங்குளம்: காரியாபட்டியிலிருந்து 8 கி. மீ. திருச்சுழியல், திருப்பூவணம் என்னும் பாடல் பெற்ற தலங்களுக்கிடையே ராணிமங்கம்மாள் சாலையமைத்துச் சத்திரமும் கட்டியிருந்தார்.

முடுக்கன்குளம்: காரியாபட்டிக்கு 13 கி. மீ. கிழக்கே சீரழிந்தநிலையில் உள்ள இவ்வூர்ச் சிவன்கோயில் 15-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டது என்பர்.

பாப்பனம்: காரியாப்பட்டிக்கு வடகிழக்கே 5 கி. மீ. பழமையான ஊர். அழிந்துவிட்ட இவ்வூர்க் கோயில் அமைப்பில் மதுரை மீனுட்சியம்மன் கோயிலின் சிறு வடிவம் ஆகும். சிற்றூர்கள்—பல்லவரேந்தல், சக்கரக் கோட்டை.

மாங்தோப்பு: மேற்கு எல்லையிலுள்ள சிற்றூர். மான்களுக்கு அடைக்கலமான ஊர். மான்தரப்பு என்பதன் மரூஉ.

புதுப்பட்டி: இவ்வூரின் முழுப்பெயர் பெருஞ்சாளி புதுப்பட்டி. ம. தொ. 1500. 1962 வரை திருச்சுழி ஒன்றியத்தில் இருந்தது. மந்திரி ஓடை ஆறும் குண்டாறும் இங்கு சேருகின்றன. அதனுல் வளமடைந்துள்ள ஊர். இவ்வாறுகள் சேருமிடத்தில் பாலம் கட்டி திருச்சுழிக்கும் மதுரைக்கும் நேர் சாலை போடப்பட்டிருக்கிறது. இங்கிருந்து திருச்சுழி 10 கி. மீ.

குருநாதன் கோயில் என்ற பாழடைந்த கோயிலருகே 1955-இல் முதுமக்கள் தாழி அகப்பட்டது, 17ஆ-ம் நூற்றுண்டில் ஏற்பட்ட வரதராசப் பெருமாள் கோயிலும் இவ்வூரில் இருக்கிறது. சனிக்கிழமைகளில் மட்டும் பூசை நடைபெறுகிறது.

கிருஷ்ணபுரம்: கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் ஏற்பட்டது. கல்குறிச்சியிலிருந்து 11கி. மீ.

திருச்சுழி ஊராட்சி ஒன்றியம்

இராமநாதபுர மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகள் அடங்கிய இந்த ஒன்றியம் அருப்புக்கோட்டை, மானாமதுரை இரயில்பாதை ஏற்பட்டிருப்பதால் முன்னேற்றப்பாதையில் ஓர் அடி எடுத்து வைத்திருக்கிறது. ஆயினும், இரயில் வசதி உள்ள ஊர் திருச்சுழி மட்டுமே.

திருச்சுழி, மண்டபசாலை, பரளச்சி பிர்க்காக்களைச் சேர்ந்த 40 ஊராட்சி மன்றங்களைக் கொண்டு இவ்வொன்றியம் 1961-இல் திருச்சுழியில் ஏற்படுத்தப்பட்டது. 1962-இல் ஒன்றியத்தின் தலைநகரம் மண்டபசாலை ரெட்டியாபட்டிக்கு மாற்றப்பட்டது; இவ்வூர் அருப்புக்கோட்டை—கமுதிச்சாலையில் 16 கி. மீ. தொலைவில் இருக்கிறது. சத்திரங்களுக்காக சேதுபதிகளால் விடப்பட்ட பல சிற்றூர்கள் இப்பகுதியில் உள்ளன. கரிசல் பூமியாக இருப்பதால் மிளகாய், பருத்தி, கம்பு முதலிய புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. பருத்தி அறைக்கும் ஆலை ஒன்று இயங்கி வருகிறது. மல்லம்பட்டி என்ற சபாஷ்புரத்தில் சிற்பவேலைக்கு உதவும் உயர்தரமான கல் உடைக்கிறார்கள்.

மறவர் பெருங்குடி, தமிழ்ப்பாடி, பொம்மைக்கோட்டை, கல்லூரணி, பண்ணை மூன்றடைப்பு, புலிக்குறிச்சி, சுத்தமடம் என்னும் ஊர்கள் உள்ளன.

திருச்சுழியல்: தேவாரம் பெற்றுச் சமய வாழ்விலும்; அலுவலகங்கள் ஏற்படவும் மாற்றப்படவும் இருப்பதால் அரசியல் வாழ்விலும் புகழ்பெற்ற ஊர் திருச்சுழி.

இவ்வூர் மதுரையிலிருந்து புதுப்பட்டி, காரியாப்பட்டி வழியாக 48 கி. மீ; விருதுநகரிலிருந்து 32கி. மீ. அருப்புக்கோட்டையிலிருந்து 13 கி. மீ. கமுதியிலிருந்து

25 கி. மீ; மானாமதுரையிலிருந்து நரிக்குடிவழியில் 40கி.மீ. திருப்பூவணத்திலிருந்து (அழிந்துவிட்ட மங்கம்மாசாலை வழியாக 35 கி. மீ.) நரிக்குடி வழியாக 53 கி. மீ. தொலைவுகளில் உளது. திருச்சுழியில் 3,000 மக்களும், சுற்றுவட்டமும் சேர்ந்த திருச்சுழி ரெவினியூ கிராமத்தில் 6,000 மக்களும் வாழ்கின்றனர். குண்டாறு என்னும் ஆற்றின் கரையில் இவ்வூர் அமைந்திருக்கிறது. இந்த ஆறு, ஊரின் வடகிழக்கு எல்லையாக விளங்குகிறது. இவ்வாற்றின் குறுக்கே இரயில் போக்குவரத்துக்கும் சாலைப் போக்குவரத்துக்குமாகப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

சுந்தரர் தேவாரத்தால் புகழ்பெற்ற இவ்வூர் பாண்டி பதினான்கு தலங்களுள் ஒன்று.

இவ்வூரைச் சுற்றி வடமேற்கே பெருஞ்சாளி புதுப்பட்டியில் மாருதேசம், வடகிழக்கே சந்திர சேன பாண்டியன் ஏற்படுத்திய லிங்கம், தென்மேற்கே குலசேகரநல்லூர் (நிருதிலிங்கம்) ஆலடிபட்டி முதலிய எட்டு லிங்கங்கள் உள்ளன.

திருச்சுழியலில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானுக்குத் திருமேனிநாதர் என்று பெயர். இறைவி—துணைமாலையம்மன். இவ்விறைவி பெயரால் பிள்ளைத் தமிழ் ஒன்று வெளிவந்திருக்கிறது.

திருமேனிநாதர்-துணை மாலையம்மன் கோயில் பாண்டியர் காலத்தில் ஏற்பட்டு, 19-ஆம் நூற்றாண்டில் சேதுபதிகளால் விரிவாகக் கட்டப்பெற்றது. 36 கிராமங்களைச் சேதுபதிகள் இக்கோயிலுக்கு வழங்கியிருக்கின்றனர், 20-ஆம் நூற்றாண்டில் நகரத்தார் திருப்பணி செய்திருக்கும் கோயில்களுள் இதுவும் ஒன்று. இக்கோயில் இராமநாதபுரம் அரசர்களின் சீரிய மேற்பார்வையில் இருந்து வருகிறது. மருதுபாண்டியர்கள் கட்டிய மண்டபங்களும் உள்ளன,

மகாபாரத வீரனாய அர்ஜுனன் இக்கோயிலுக்கு வந்ததாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. அவன் நீராடிய இடம் என்று ஒரு கிணறு சுட்டிக் காட்டப்படுகிறது.

பச்சிலை மூலிகைகளால் ஆன நடராசர் திருவுருவம் இக்கோயிலில் இருப்பது குறிப்பிடத்தக்கது. சைவ சமயத்தினரே இங்கு பூசை செய்கின்றனர். வைணவர் சுயம்பாகியாக மட்டுமே உளர். அம்மன் சந்நிதியில் தாசிமண்டபம் இருக்கிறது. முத்துத்தாசி என்பவளின் விக்கிரகம் காணப்படுகிறது. மூச்சுப்பிடிப்பு உள்ளவர்கள் மஞ்சள் எண்ணெய் சார்த்தி நலம் பெறுவதாகக் கேள்விப்பட்டேன். ஆடியில் தபசு, மார்கழியில் மணி வாசகர் விழா, பங்குனியில் உத்திரம் ஆகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

திருச்சுழியல் தலபுராணம் ஆறுமுத ஆச்சாரியார் இயற்றியது; இலக்கிய மணம் கமழ்வது. மாணிக்க வாசகர் திருக்கோவையாரில் இவவூரைப்பற்றி ஒரு பாடல் பாடியுள்ளார். திருவிளையாடற் புராணத்திலும் இவ்வூர் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. மகாபாரத வீரனான அர்ஜுனன் இவ்வூருக்கு வந்ததாகவும் கூறப் படுகிறது. அர்ச்சுன தீர்த்தம் இவ்வூரில் உளது.

ரமணமஹரிஷி இத்தலத்தில்தான் பிறந்தார். (ப. 82-83.)

1911 வரை பள்ளிமடம் தாலுகா (இன்றைய அருப்புக்கோட்டை தாலுகா) அலுவலகம் திருச்சுழியில் இருந்தது. 1962-இல் இங்கிருந்த ஊராட்சிமன்ற ஒன்றிய அலுவலகம் ம. ரெட்டியாபட்டிக்கு மாற்றப் பட்டதால் இவ்வூரார் கிளர்ச்சி செய்தனர். அவர்களை அமைதிப்படுத்தும் வகையால், துணைவட்டம் ஒன்று

ஏற்படுத்தப்பட்டுத் தனித்தாசில்தார் தலைமையில் இயங்கிவருகிறது. வணிகத்துறையில் நாடார்கள் சிறந்து விளங்குகின்றனர், பாசன வசதி போதியதாக இல்லை. நெல்லும் புன்செய்ப்பயிர்களும் பூசனிக்காயும் முக்கிய விளைபொருள்களாம்.

பிரளய விடங்கர் கோயிலும், பழநிக்குமாரசாமி கோயிலும், தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயமும், மண்வளப் பாதுகாப்பு அலுவலகமும், 1862 முதல் ஆவணக் களரியும் உள்ளன.

புலியூரான்: (2,500) திருச்சுழியலுக்கு மேற்கே 6 கி. மீ. தொலைவு. ஆடி, தை வெள்ளிக்கிழமைகளில் இவ்வூர்ச் சித்தநாதன் கோயிலுக்கு மக்கள் செல்லுவர். வயற்காட்டில் புத்தர் விக்கிரகம் இருக்கிறது. இறைக்க இறைக்க வற்றாத கிணறு ஒன்று உளது.

முத்துராமலிங்கபுரம்: சேதுபதிகள் பெயரால் ஏற்பட்ட ஊர்களுள் இதுவும் ஒன்று. இங்கு ரெட்டியார் சமூகத்தார் செல்வாக்கு மிகுதி.

குலசேகரநல்லூர்: குலசேகர பாண்டியன் கட்டிய பிள்ளையார் கோயிலும், பிரதிட்டை செய்த சிவலிங்கமும் வெட்டிய கல்வெட்டுக்களும் இங்கு உள. திருச்சுழியிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் 8-வது கிலோ மீட்டரில் இவ்வூர் இருக்கிறது. இவ்வூர்க்கு அருகே முதுகுளத்தூர்ப் பகுதிக்கு ஒரு சாலை பிரிகிறது.

பரளச்சி: இது ஒரு பிர்க்காவின் தலைநகர். மேலையூர்க்கும் பரளச்சிக்கும் இடையேயுள்ள பரளச்சிக் கண்மாய் இவ் வட்டத்தின் பெரிய கண்மாய்களுள் ஒன்றாகும்.

தமிழ்ப்பாடி: தமுக்காடி எனத் தவறாக வழங்கும் இவ்வூர் திருச்சுழியிலிருந்து 3 கி. மீ. தொலைவில் அமைந்

திருக்கிறது. மாணிக்கவாசகர் இவ்வழியே திருவாதவூரிலிருந்து உத்தரகோச மங்கைக்குச் சென்றார் என்பர்.

கீழைக்கண்ட மங்கலம்: ஓர் கண்மாயின் உள்வாயில் உளது.

பண்ணை மூன்றடைப்பு: வளமான ஊர். வாழை; கரும்பு, கொடிக்கால் வேளாண்மை மிகுதி. பாலையம் பட்டிக் குறுநில மன்னரின் பண்ணைகள் இங்கு உள.

கிருஷ்ணபுரம்: பெருஞ்சாளி புதுப்பட்டியிலிருந்து 3 கி. மீ. தொலைவு. கிருஷ்ணப்ப நாயக்கர் கட்டிய பெருமாள் கோவிலையொட்டி ரெட்டியார்கள் குடியேறி உண்டான ஊர்.

பள்ளிமடம்: திருச்சுழிக்கு எதிரே, குண்டாற்றின் மறுகரையில் உள்ள சிற்றூர். இராமநாதபுரம் சமஸ்தானத்தின் பிரிவாக பள்ளி மடம் என்ற தாலுகா இருந்து வந்தது. ஆற்றங்கரையில் காளையார்கோவில் நினைவாகக் காளைநாதர் சொர்ணவல்லி அம்மன் கோவில்கள் நெடுங்காலமாக உள்ளன. சமணர் பள்ளி ஒன்று இங்கு இருந்ததாகக் கூறுவர். காட்டுக் காளையார் கோவில் என்ற பெயர் இவ்வூருக்கு உண்டு. கோட்டை ஒன்று இருந்ததன் அறிகுறிகள் காணப்படுகின்றன.

பள்ளி மடம் என்பது பள்ளிபடை என்ற சொற்றொடரின் மருஉ என எண்ணவேண்டியிருக்கிறது. காளைநாதர் கோவில் கல்வெட்டுகள் 10-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியவை. இவற்றிலிருந்து பள்ளி மடம், திருச்சுழியல் என்ற பெயருடன் பருத்திக்குடி நாட்டைச் சேர்ந்த ஒரு தேவதானமாக இருந்ததாகத் தெரிகிறது.

காளைநாதர் கோவிலே, அக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் சுந்தர பாண்டிய ஈச்சுவரம் என்று கருதலாம். சுந்தர பாண்டியன் நினைவாக அவ்வீச்சுவரம் கட்டப்

பெற்றது உறுதி. ஆனால் அவன் ஓர் அரசனா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இறந்த அரசர்களை வழிபடு கடவுளராக மதித்து அவர்கள் சமாதியின்மீது சிவலிங்கத்தை வைத்துக் கோவில் எடுப்பது வழக்கம். பள்ளி படை என்ற சொல் இப்பொருள் தருகிறது. இத்தகைய கோவில்கள் சோழ மன்னர்களால் தங்கள் தந்தையார்களுக்கு திருக்காளத்தி (சித்தூர் மாவட்டம், ஆந்திரா) மேல்பாடி (சித்தூர் மாவட்டம், ஆந்திரா), இராமநாதன் கோவில் (கும்பகோணம் வட்டம்) ஆகிய ஊர்களுக்கு அருகே கட்டப்பட்டு அவையும் பள்ளிபடை என்ற பெயருடன் நிலவுகின்றன.

அரசுக் கட்டில் ஏறுமுன் இறந்த இளவரசர்கட்குப் பள்ளிபடை அமைக்கும் வழக்கம் இருந்திருக்கலாம். சுந்தர பாண்டியனைப் பற்றிச் சில கல்வெட்டுக்களும் சிவகாசிப் பட்டயங்களும் கூறுவதிலிருந்து இவன் பெரும் புலவன், அறிஞர்களின் உறைவிடம், துறவு உள்ளத்தினன் என்று தெரிகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருகானப்பேர் இறைவன் காளை வடிவத்துடன் காட்சியளித்தது இத்திருக் கோவிலிலேயே ஆகும்.

நரிக்குடி ஊராட்சி ஒன்றியம்

இம்மாவட்டத்திலேயே பிற்பட்ட ஒன்றியங்களுள் ஒன்றாக இதைக் கூறலாம். உவர்மண் பகுதியாக இருக்கிறது. பாசன வசதிகள் மிகக் குறைவு. 1955-க்குப் பிறகே போக்கு வரத்து வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. திருச்சுழியிலிருந்து மானாமதுரை வரை இவ்வொன்றியம் பரவியது. இங்குப் பெரும்பான்மைச் சமூகமாக வாழ்பவர்கள் மறவர்கள் ஆவர். மணிலாக் கடலைதான் இப்

பகுதியின் முக்கிய விளைபொருள். 47 ஊராட்சி மன்றங்கள் இதில் அடங்கியுள்ளன. ஒன்றியத்தின் அலுவலகம் நரிக்குடியில் இருக்கிறது. இப்பகுதியிலுள்ள பல ஊர்களுக்கு முக்கியமான ஊர் திருப்பூவணம்.

நரிக்குடி: மானாமதுரையிலிருந்து 24 கி. மீ. (மேற்கே) திருச்சுழிக்குக் கிழக்கே 16 கி. மீ. தொலைவிலும் திருப்பூவணத்திற்குத் தென்கிழக்கே 38 கி மீ. தொலைவிலும் ஒரு சிற்றாற்றின் கரையில் அமைந்த சிற்றூர். மக்கள் தொகை ஓராயிரம் இருக்கலாம்.

இவ்வூர் மருது பாண்டியர் தொடர்புடையது. அவர் நிறுவிய அன்னதான மருது விநாயகர் கோவிலும், அழகிய மீனாம்பிகை கோவிலும் பாண்டியன் கிணறும், சத்திரமும் இங்கு உள்ளன.

சத்திரம் மருது பாண்டியரால் 1786-இல் ஏற்படுத்தப்பட்டு இன்றளவும் நடைபெற்று வருகிறது. என்றென்றும் தடைப்படாது இந்த அறம் நடைபெறுவதற் (1) நரிக்குடி, (2) ஆதித்தநேந்தல், (3) முக்குளம், (4) வீரக்குடி, (5) நாலூர், (6) நண்டு நாச்சி, (7) கருமான் ஏந்தல், (8) அத்திகுளம், (9) மானூர், (10) தருமம், (11) த. ஆலங்குளம், (12) மேலப் பசலை என்னும் 12 ஊர்களை மருது பாண்டியர் தானமாக வழங்கியுள்ளார்.

சத்திரத்திற்குள் ஒரு தர்ம தேவதை உள்ளது. இத்தேவதைக்கு முறையாகப் பூசைகள் செய்யப்படுகின்றன. மருது பாண்டியரிடம் அமைச்சர்களாக இருந்த சின்னச்சாமி, முத்தழகு ஆகியோரின் உருவச் சிலைகளும் சத்திரத்தில் உள்ளன.

சத்திரத்தில் நாள்தோறும் ஆறு பேருக்கு அரிசி, உப்பு, பருப்பு, புளி, வற்றல் ஆகியவை வழங்கப்படுகின்றன. நரிக்குடி சத்திரத்து நிர்வாகிகள் முத்தனேந்

தல், பாம்பன் ஆகிய ஊர்களிலும் நாள்தோறும் இத்தகைய அன்னதானம் செய்து வருகின்றனர். வேனிற் காலத்தில் தண்ணீர்ப் பந்தர்களும் நடத்தி வருகின்றனர்.

மருது பாண்டியர்க்கு இவ்வூரில் திருவுருவம் எடுக்கப்பட்டு, குருபூசை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நரிக்குடியின் பெயர்க் காரணம் தெரியவில்லை. ஊர்ப் பெயர் பெருமை தருவதாயில்லை என்பதாலும் மருது பாண்டியர் தொடர்பு இருப்பதாலும் மருது பாண்டிய நகர் என்று நரிக்குடியின் பெயரை மாற்றவேண்டுமென ஊராட்சி மன்ற ஒன்றியத்தார் அரசினரை வேண்டியுள்ளனர்.

வேட்டையாட மருது பாண்டியர் இங்கு வந்ததாகச் சிலரும், மருது பாண்டியரின் அரசியார் ஒருவர் இவ்வூரினரென்று பிறரும் கூறுவர்.

ஆதித்தநேந்தல்: இவ்வூரில் மருதுபாண்டியர் நிறுவிய கஞ்சித்தொட்டி உளது. இது கல்லால் ஆனது.

ஆனைக்குளம்: அருப்புக்கோட்டை வட்டத்திலேயே பெரிய குளம் ஆனைக்குளம். அளவு கருதி, யானையின் பெயர், குளத்திற்கு ஏற்பட்டது போலும். அந்த நீர் நிலையை யொட்டி உருவான ஊருக்கும் அதுவே பெயராயிற்று.

மானூர்: இங்குள்ள சுப்பிரமணியர் கோவிலில் பங்குனி உத்தரத்தன்று தேரோட்டமும், 7-ஆம் நாள் திருவிழா நரிக்குடியிலும் நடைபெறும்.

கண்டுகொண்டான் மாணிக்கம்: மாணிக்க வணிகர் ஒருவர் இங்கு மறதியாக வைத்துவிட்டுச் சென்ற

மாணிக்கங்களை மீண்டும் கண்டுகொண்ட இடம் என்று ஊர்ப் பெயருக்கு விளக்கம் கூறுவர்.

வீரசோழம்: இவ்வூர், சோழர் தொடர்பை நினைவூட்டுகிறது. நரிக்குடியிலிருந்து 5 கி. மீ. மக்கள் தொகை 5,000.

சுற்றியுள்ள காடுகளிலிருந்து மயில்கள் கூட்டம் கூட்டமாக இங்கு வந்து உலவுகின்றன. இசுலாமிய உறவின் முறைச் சங்கம் நடத்தும் பள்ளிவாசலில் இவற்றுக்குக் கேப்பை, கம்பு, நெல், முதலிய உணவுகளை வழங்குகிறார்கள். இதற்கு ஒரு பணியாளும் நியமிக்கப் பட்டுள்ளார். அவருடைய சம்பளமும் மயில்களுக்குப் போடப்படும் உணவுப் பொருள்களின் விலையும் பர்மாவில் வாழும் இவ்வூராரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அரசினரும் ஆண்டுதோறும் சிறு மானியம் கொடுக்கின்றனர்.

கோரிக்கைகளின் பேரில் இரண்டு மயில்களுக்குப் 'பிடி கூலி' யாக 10 ரூபாயும் அனுப்பும் செலவும் பெற்றுக் கொண்டு, மயில்களைப் பிடித்து அனுப்புகிறார்கள்.

கிண்டியிலுள்ள தமிழக ஆளுநர் மாளிகை, விழுப்புரம், கரூர் நகராண்மைக் கழகத்தார்கள், எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி கோவில், சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும், செல்வர்களுக்கும் மயில்கள் அனுப்பியுள்ளனர். மயில்கள் தேவையென நாள் தோறும் கடிதங்கள் வந்தவண்ணமிருக்கின்றன.

மயில்கள் அக்டோபர்—நவம்பர் மாதங்களில் முட்டையிடுகின்றன. ஒவ்வொரு தடவையும் 9 முதல் 11 முட்டைகள் வரை இடுகின்றன. மூன்று மாதம்

மயில் அடை காப்பதாகவும், குஞ்சு பொரித்ததும் மயில் அதனைத் தன் சிறகுக்குள் வைத்துத் தாங்கிக்கொண்டு பறந்து செல்லும் என்றும், பொரித்த சிறு குஞ்சை நாம் கையால் தொட்டால் அல்லது பிடித்தால் அக்குஞ்சு இறந்துவிடும், சிறு அதிர்ச்சியைக் கூட அதனால் தாங்கிக் கொள்ள முடியாது என்றும் கூறுகிறார்கள்.

பிள்ளையார் தொட்டியங்குளம்: நேர்த்திக் கடனாகப் பிள்ளையார் திருவருவங்களைப் புதைக்கும் வழக்கம் இப் பகுதியில் நிலவுகிறது. இவ்வூரில் சில நூறு பிள்ளை யார்கள் புதைந்து கிடக்கின்றன.

சேதுபுரம், ரகுநாத மடை; இராமநாதபுரம் சேதுபதி களின் தொடர்பைக் குறிக்கும் ஊர்கள்.

திருவளர் நல்லூர்: திருவிடை நல்லூர் என்பதன் மரூஉ.

பூம்பிடாகை : பூமிநாதன் கோவில் இருக்கிறது பிடாகை—சமாதியுள்ள கோவில்.

அழகாபுரி முக்குளம்: அழகாபுரியை அடுத்த ஊர். முக்குலத்தோர் பெயரால் ஏற்பட்டது. 'முக்குலம்' முக்குளம் என்று தவறாக விளங்குகிறது.

பிற்சேர்க்கை

அமைச்சர்கள் : (பக்கம் 166)

ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி 1952 முதல் 1954 வரை ராஜாஜி அமைச்சரவையில் வீட்டு வசதி விளையாட்டுத் துறை அமைச்சராகவும், 1954 முதல் 1957 வரை காமராஜ் அமைச்சவையில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, மின்சார அமைச்ச ராகவும் பதவி வகித்தார்.

தங்கத் தமிழகத்தில் எங்கள் இராமநாதபுரம் மாவட்டம்

கவிஞர் ஜகன்

இக் கவிதை 1963-இல் திருச்சி தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நடைபெற்ற கவியரங்கத்தில் பாடப் பெற்றது. 'எழுத்தாளன்' இதழிலும் வெளி வந்தது. எழுத்தாளர் தலைவர் கவிதாமணி அ. வ. ர. கிருஷ்ண சாமி ரெட்டியார் அவர்களின் இசைவுடன் இந் நூலில் இடம் பெறுகிறது.

நினைத்ததும் மனத்தில் இனித்திடும் பனித்தேன்
தனித்தமி ழினிற்கவி யியற்றும்
வினைத்திற மனைத்தும் தனக்கெனக் குவிக்கும்
தனிப்பெருந் தலைவ! நல் வணக்கம்!
தினத்தெழு மலர்ந்தண் புனற்படு வனத்தில்
திளைக்குவண் டெனப்புகழ் மணக்கும்
கனிச்சுவை யெனப்பண் ணிசைத்திடும் கலைப்பெண்
ணிணைத்தவர் தமக்கும்என் வணக்கம்!

(வேறு)

சந்தமிகும் செந்தமிழில்
சிந்துகவி பாடியிவண்
வந்தபுல வோர்களை யான் வாழ்த்துவேன்!—
அவர்தாம்
தந்ததமி ழுக்குமுடி தாழ்த்துவேன்!—தூய
சிந்தையில் நிறைந்ததமிழ்
உந்திடவு வந்தவையின்
வந்தவர்தம் அன்பையெண்ணிப் போற்றுவேன்-
எனக்குத்
தந்தபணி யைச்சிறிதே ஆற்றுவேன்!

. . . . . . Ph : 657 60 80, Res : 65 34 601

திங்கட் பிறையொடு
கங்கைச் சடையணி
செங்கட் பொறிநுதல் சிவராம

லிங்கத் திறைவனை
வங்கக் கடல்மகள்
பொங்கத் திரைகொடு புகழ்பாட

அங்கக் கதிரவன்
கங்குட் பகைபட
தங்கக் குடமென தனுஷ்கோடி

துங்கத் துறைதொழு(து)
அங்கட் புவிமிசை
யெங்கும் ஒளிவிடும் எழில்தூவும்!

(வேறு)

ஆதவன் முதலாய்
கேதுவின் ஈறாய்
ஓதிய கோள்கள் ஒன்பதையும்

தீதறக் கூட்டிச்
சேதுவில் நாட்டிக்
கோதண்ட ராமன் கும்பிட்டு

ஏதமறச் சகந்
நாதனெனப் புவி
மாதவள் புல்லனை மடிமீதில்

சீதையைப் பிரிந்த
வேதனை மறந்து
மாதுயில் வளர்ந்த மாவட்டம்!

ஞானவொளி யானபர மோனவெளி யானவனை
நாதாந்த போதாந்தமாய்—விரித்து
வேதாந்த வித்தாந்தமாய்—உரைத்த

தேனமுத மான தமிழ்க் கானமொழி தானிசையச்
சித்தாந்த வானந்தமாய்—பாடி
முத்தாந்தப் பேரின்பமாய்—தாயு

மானவர்தம் மோனநிலை தான்முகவை மாநகரில்
பாருங்கள்! வாருங்க ளேன்! களி
கூருங்கள் தேறு ங்களேன்!—உயர்

வானதிரு வாசகமு ரைத்தமணி—வாசனைப்
பாடுங்கள்! பாடுங்க ளேன்—பொன்னூசல்
ஆடுங்களேன்!

(வேறு)

மாணிக்க வாசகர்க்கு
மறையருள் புரிந்து மேலாம்
ஆணிப்பொன் னூசல் ஆடி
ஆட்கொண்ட வள்ளல் தன்னைக்
காணக்கண் கோடி வேண்டும்!
கைலையில் ஆதியென்னச்
சேனுற்றுப் பொழில் நிறைந்து
சிறந்துநின் றிலங்கு மெங்கள்

உத்தர கோச மங்கை
ஊர்புகழ் உரைக்கப் போமோ?
சத்துடைத் தமிழ் கொணர்ந்து
தந்தநற் புலவனுக்குச்
செத்தபின் பொன்கொடுத்த
செந்தமிழ்ச் சீதக்காதி
உத்தமன் சேது நாட்டில்
உறைவ தோர் உண்மை காணீர்?

மாரிதான் பொய்திட் டாலும்
வளர்தமிழ்ச் செழுமை கொண்ட
வாரிபோல் வாரி வாரி
வழங்கிய எங்கள் வள்ளல்
பாரிதான் பிறந்து வாழ்ந்து
பழந்தமிழ் பண்ணைக் காத்த
சீருயர் மாவட்டத் தின்
சிறப்பினை மறப்பார் யாரே!

காவிய நயங்க ளெல்லாம்
கனிந்திடப் பாடுவார் செந்
நாவுயர் யோகி சுத்த
னந்தரும்—"யாதும் ஊரே
யாவரும் கேளிர்" என்னும்
அருந்தமிழ் நாட்டுப் பண்பின்
ஆவியை அமுத மூச்சை
அளித்ததும் எம்மின் வந்த

கவிஞர்பூங் குன்றன்! ஞானக்
கடல்மடை விவேகா நந்தர்
தவப்புகழ் நாட்டின் சீர்த்த
தத்துவச் சமய மாண்பை
புவித்தலம் போற்று மாறு
புத்துல கமெரிக் காவின்
செவிப்புலம் பருகச் செய்த
தெம்முயர் சேது மன்னன்!

(வேறு)

முத்தமிழ்க்குச் சங்கம்வைத்து முறைவகுத்து
மொழிவளர்த்த மூதூர் என்றே
சித்தரித்த தென்மதுரைத் திருநகரில்
திருக்குறளைத் தேடித் தேடி

அத்தினத்திற் கிடைக்காத அவலமிகும்
இழிநிலையின் அவமா னத்தால்
இத்தினத்திற் பொலியுதமிழ்ச் சங்கம்வைத்துத்
துயர்துடைத்துத் திகழ்ந்தான் எங்கள்

தென்பாண்டித் துரைத்தேவன்! சேதுபதிப்
பரம்பரையின் செம்மல் அன்னோன்
பொன்னுண்ட திருநாமம் பூந்தமிழின்
உலகமெலாம் போற்றக் காண்மின்!
தென்பாண்டித் திருநாட்டின் திலகமெனச்
சிவகங்கைச் சீமை யின்கண்
மண்ணுண்ட விறல்மருது பாண்டியர்கள்
மாவீரம் வழுத்தக் கேண்மின்!

மற்போரும் விற்போரும் மாதமிழில்
வல்லறிஞர் வாதப் போரும்
பொற்பாரும் மத்தகங்கள் பொருப்பெனவே
எதிடர்ந்து பொருதும் போரும்
தெற்காரும் பாஞ்சாலத் திறல்மறவன்
கட்டபொம்மன் செருத்த போரில்
நிற்பாரோ வெள்ளையரிங் கென்றவர்க்குத்
தோள் கொடுத்து நிமிர்ந்துநின்று

அந்நியரின் வெந்தலைகள் அடுக்கடுக்காய்ச்
சிதறிவிழ அடுத்த போரும்
துன்னலரின் செங்குருதி தோயவுடன்
மாமலையாய்ச் சுதந்தி ரத்துச்
சின்னமெனத் திகழநெடுஞ் சிவகங்கைச்
சீமையெலாம் செம்மண் மேடாய்
இன்னமுநாம் காணுமொரு எழில்நிறைந்த
காட்சியுற எடுத்த மேடும்

இவ்வாறு யாம்பெற்ற இடையற்ற
போர்கள்பல இணையற் றோங்க
அவ்வாறப் புகழ்பரவ அருந்தமிழில்
பாடல்பல அடுக்கடுக் காய்ச்
சவ்வாதுப் புலவரொடு சார்ந்ததமிழ்க்
கவிஞர்பலர் தழைக்கத் தந்தார்!
எவ்வாறின் றதையிசைப்பேன் என்றெண்ணி
ஏங்கிடுதே ஏழை நெஞ்சம்!

(வேறு)

கலைசொரிந்து நிற்குமுயர் காளைலிங்கர் கோவில்!
நலம்புரிந்து புகழ்மணக்கும் நாகலிங்கர் கோவில்!
குலக்குமரன் தமிழ்க்குன்றக் குடியமர்ந்த கோவில்!
நிலைத்தபெரும் புகழனைத்தும் நிகழ்த்திடயார்
[வல்லார்,

(வேறு)

காடெல்லாம் சுற்றிவந்த
கவிக்கம்பன் செந்தமிழ்த்தாய்
நாடெல்லாம் போற்றுமுயர்
நாட்டரசன் கோட்டையிலே
ஏடெல்லாம் தமிழ்மணக்க
எழிற்கோவில் கொண்டருளும்
ஈடில்லாப் புகழ்மணக்கும்
எங்களது மாவட்டம்!

(வேறு)

புவியோங்கு செந்தமிழின்
புவனேந்தி ரன்கதையைச்
சுவையோங்கச் சொன்னவனுஞ்
சொற்சரவ ணப்பெருமாள்!

கவிஞோங்கு முகவைநகர்
கவிராயர் பற்பலருள்
செவியோங்கப் பெருந்தொகைநூல்
செப்பியமு. இராகவனார்!

படியேறி இறையவனும்
பசிக்குணவு கேட்க,வுடன்
பிடிசெந்நெல் வடித்தெடுத்து
பெட்புறவே தருமிளையான்
குடிமாறனோடு கவி
குஞ்சரமும், வில்லிப்புத்தூர்
அடியாராம் பெரியாழ்வார்
அவதரித்த புனிதமொடு

எல்லையறும் பரம்பொருளாம்
எழிற்கண்ணன் கணவரெனச்
செல்வியெங்கள் ஆண்டாளும்
திருப்பாவை நோற்றதுவும்
வில்லெடுத்த இராமனுக்கு
விரிஞான வாசிட்டம்
வெல்லுதமிழ் மொழியினிலே
விளக்கிவைத்த பெருமையுடன்

தண்டமிழின், சுவைமணக்கச்
சௌந்தர்ய லகரிதனை
எண்டிசையும் புகழ்மணக்க
இசைத்தளித்த கவிராஜ
பண்டிதரும், சிலேடைமிகப்
பாடுபுலி வேம்பத்தூர்
மண்டுபுகழ்ப் பிச்சுவையர்,
மற்றுமிங்கு தாய்நாட்டின்

: 657 60 80, Res : 65 34 601

(வேறு)

விடுதலைக்கு விதைவிதைத்து
வெள்ளைமேனிக் கொக்குகள்
வெடவெடக்கக் கலைகொடுத்த
விஸ்வநாத தாசனும்
இடிமுழக்கம் எங்கள்சிங்கம்
முத்துராம லிங்கமும்
கொடைகொடுக்க வள்ளல் காரைக்
குடிகொடுத்த அழ கனும்

நாடுபோற்ற வாழ்வதெல்லாம்
நானுரைக்க நாவிலேன்!
தேடிநின்ற பதவிதன்னைத்
திரணமென்ற தியாகியாய்
கோடிகோடி மக்கள் நெஞ்சில்
குடிமை கொண்ட காமராஜ்
ஈடிலாத எங்கள் செல்வன்;
இந்தியாவின் செல்வமே!

செட்டிநாட்டுச் செந்தமிழும்
சிவகாசிக் கைத்தொழிலும்
திட்டமிட்டுத் தொழில்வளர்க்கும்
திறன்மிக்க பாளையத்தார்
வட்டியிட்டுத் தமிழ் வளர்த்த
வளமிக்க பரம்பரையின்
பட்டியலும் நீட்டியிங்கே
பாடுதற்கு நேரமில்லை!

தெருவெல்லாம் தமிழ்முழங்கத்
தித்திக்கப் பாட்டெழுதித்
தருமெங்கள் கவி கண்ண
தாசனுக்கு நிகருண்டோ?

விரிபுகழ்வின் ஞானியென
    விளங்கிவரும் எம் டாக்டர்
கிருஷ்ணனுக்கு நிகரெங்கும்
    கேட்டதுண்டோ தமிழ்நாட்டில்

(வேறு)

சாத்தூர் மிளகாயில்
    சார்ந்திருக்கும் காரத்தைச்
சேர்த்து நான் பாடவில்லை
    தித்திக்கப் பாட்டெழுதிச்

வேறு

சொல்லவி   ழைந்தது   பலகோடி
சொல்லமு   டிந்தது   ஒரு 'கோடி'
நல்லதை   நாடித்   தமிழ்பாடி
வெல்லுவம்   உவப்பத்   தலைக்கூடி!

நன்றி

1971 இல் மக்கள் தொகைக் கணிப்பு—புள்ளிவிவரம்

மொத்தம் 28, 57, 424

ஆடவரைவிடப் பெண்கள் 60, 000பேர் கூடுதலாக உள்ளனர்.

பெருநகர்களிலும் சிறு நகர்களிலும் ஏழரைலட்சம் பேரும் சிற்றூர்களில் 21 லட்சம் பேரும் உள்ளனர்.

நகரங்களில் மக்கள் தொகை

இராஜபாளையம்	86,946
அருப்புக்கோட்டை	62,227
விருதுநகர்	61,904

. 657 60 80, Res : 65 34 601

காரைக்குடி	55,450
ஸ்ரீ வில்லிபுத்தூர்	53,859
பரமக்குடி	48,884
சிவகாசி	44,868
இராமநாதபுரம்	36,123
தேவகோட்டை	28,989
கீழக்கரை	23,797
சாத்தூர்	22,222
சிவகங்கை	20,809
இளையாங்குடி	20,654

மாவட்டத்தின் மக்கள் தொகை தமிழ்நாட்டில் 7./. அதாவது தமிழ்நாட்டு மக்கள் நூறுபேரில் இராம நாதபுரத்தினர் எழுவர்.

ஒரு சதுரமைலுக்கு 227 பேர்தான் இராமநாதபுர மாவட்டத்தில் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில் குளிரின் கடுமையால் 193 வீதம்தான் வாழ்கின்றனர். மலைகளும் காடுகளும் மிகுந்த தருமபுரி மாவட்டத்தில் 174 பேர் விகிதமே வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏனைய மாவட்டங்களில் இராமநாதபுர மாவட்டத்தை விட மக்கள் நெரிசல் மிகுதி. (சான்று கன்னியாகுமரி 729, தஞ்சாவூர் 394.)

சில முக்கிய நிகழ்ச்சிகள்

11-ஆம் நூற்றாண்டு—இராமாநுஜர் திருக்கோட்டியூர் வருகை.

1170- இலங்கை மன்னன் பராக்கிரமபாகு படையெடுத்தல்.

1310- அலாவுதீன் கில்ஜி மாலிக்காபூர் படையெடுப்பு.

1371 - 93 சுல்தான்கள் ஆட்சி.

1604 - 1621 சடைக்கத் தேவர் (சேதுபதி) ஆட்சிக்காலம்.

1621 – 1635 கூத்தன் சேதுபதி ஆட்சிக்காலம்.

1635 - 1646 தளவாய் சேதுபதி ஆட்சிக் காலம்.

1646 - 1647 தம்பித் தேவர்.
1647 - 1672 திருமலை சேதுபதி
1672 ராஜ சூரிய சேதுபதி
1672 - 1673 ஆதன ரகுநாத சேதுபதி
1674 - 1710 கிழவன் சேதுபதி
1710 – 1725 விஜய ரகுநாத சேதுபதி.
1726 – 1729 சுந்தரேசுவர ரகுநாத சேதுபதி.
1729 – 1735 சடையப்ப தேவர் சேதுபதி
1735 - 1748 சிவகுமார முத்து விஜயத் தேவர்(சேதுபதி)
1748 – 1749 ராக்கத் தேவர் சேதுபதி.
1749 – 1762 செல்லத் தேவர் சேதுபதி.
1754 டச்சுக்காரர்கள் கீழக்கரையில் ஒரு பண்டகச் சாலை அமைக்க அனுமதி பெறுதல்.
1762 - 1795 (மைனர்) முத்துராமலிங்கத் தேவர் சேதுபதி.
1794 இராமநாத புரத்தில் கலகம்-ஜாக்ஸன் கலெக்டர்.
1795 – 1803 ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் இராமநாதபுரம் ஜமீன் இருந்தது.
1801 மருது சகோதரர்கள் தூக்கிலிடப்படுதல்.
1803 - 1807 ராணி மங்களேசுவரி நாச்சியார்.
1807 - 1820 அண்ணுசாமி சேதுபதி.
1820 - 1829 விஜயரகுநாத சேதுபதி.
1829 – 1830 ராணி முத்து வீராயி நாச்சியார்.
1830 - 1845 மங்களேசுவரி நாச்சியார். துரை ராச நாச்சியார்.
1846 - 1862 ராணி பர்வத வர்தினி நாச்சியார்.
1862 - 1873 முத்து ராமலிங்க சேதுபதி.
1873 - 1888 பாஸ்கர சேதுபதி மைனராக இருந்தார். கோர்ட் ஆப் வார்ட்ஸ் பொறுப்பில் இராமநாதபுரம் ஜமீன் இருந்து வந்தது.
1886 ஐரோப்பிய குத்தகைக் காரர்களால் சிவகங்கை ஜமீன் நிர்வாகம் எடுத்துக் கொள்ளப்பட்டது.
1889 - 1903 பாஸ்கர சேதுபதி.
1893 அருப்புக் கோட்டை வட்டம் பாளையம் பட்டியில் ஜமீன்தாருக்கும் நாட்டாருக்கும் இடையே கலகம்.
1897 சுவாமி விவேகாநந்தர் பாம்பன் வருகை. இராம நாதபுரத்தில் தங்கல்.
1900 திருவாடானைக் கோவில் கும்பாபிஷேகம்.
1901 மதுரை பாம்பன் இரயில் பாதை போடப்பட்டது.

1903 சிவகாசியில் கலகம்.
1903 - 1909 குத்தகைதார் ஆட்சி (Lessees)
1904 பாஸ்கர சேதுபதி மரணம்.
1906 பாம்பன் இராமேசுவரம் இரயில் பாதை போடப்பட்டது.
1910 இராமநாதபுர மாவட்டம் ஏற்பட்டது.
1910 இராமநாதபுரம் ஜமீன் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.
1910 - 1928 முத்து ராமலிங்க சேதுபதி தன் மைனர் வயது முடிந்து தானே பொறுப் பேற்று ஆட்சி செய்தது.
1911 சிவகங்கையில் சப் கோர்ட் ஏற்பட்டது.
1912 விருது நகரில் நாடார்களுக்கும் பள்ளர்களுக்கும் கலகம்.
1914 தனுஷ்கோடியில் சுங்கவரி அலுவலகம் ஏற்பட்டது.
1914 பாம்பன் பாலம் கட்டப்பட்டது.
1916 தனுஷ்கோடி தலைமன்னார் கப்பல் போக்குவரத்து தொடக்கம்.
1918 கமுதியில் கலகம்.
1918 திருவாடானை வட்டத்தில் பஞ்சம்.
1920 வைகை ஆற்றில் பெரு வெள்ளம்.
1923 அருப்புக் கோட்டைப் பங்குனிப் பொங்கல் மாரியம்மன் ஊர்வலத்தில் நாடார்களுக்கும் முகமதியர்களுக்கும் கலகம்.
1925 வைகையில் பெரு வெள்ளம்.
1927 மானாமதுரையில் வைகையின் குறுக்கே பாலம் போடப்பட்டது.
1927 குருசடைத் தீவில் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது. இராமநாதபுர மாவட்டத்தில் மகாத்மா காந்தி சுற்றுப் பயணம்.
1928 - 1967 சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி.
1928 முத்து ராமலிங்க சேதுபதி மரணம்.
1928 அருப்புக் கோட்டைப் பங்குனிப் பொங்கல் ஊர்வலத்தில் நாடார்களுக்கும் தேவர்களுக்கும் கலகம்.
1928 காரைக்குடி நகராண்மைக் கழகம் ஏற்பட்டது.
1930 திருச்சி மானாமதுரை இரயில் பாதை கரைக்குடி-புதுக்கோட்டை வழியாக ஏற்பட்டது.
1930 கீழக்கரையில் கொள்ளை.
1930 விருதுநகரில் வைசிராய் மீது குண்டு வீச்சு.
1930 மணி முத்தாற்றில் பெரு வெள்ளம்.

1932 தனுஷ்கோடியிலும் மண்டபத்திலும் புயல் காற்ருல் கடல் நீர் ஊருக்குள் ஏறி பாலாங்களும் சாலைகளும் சேதப்பட்டன.

1932 நெல் விலை ரூபாய் 1க்கு 32 பட்டணம் படியாக இருந்தது.

1933 சாத்தூரில் வெள்ளம்.

1933 மகாத்மா காந்தியடிகள் சுற்றுப் பயணம்.

1934 இராமநாதபுரம் ஜமீன் நிர்வாகத்தை அரசாங்கத்தார் ஏற்றனர்.

1936 பள்ளத்தூர், நெற்குப்பை தொகுதிகளில் அனைத்திந்திய முக்கியத்துவம் நிறைந்த ஜில்லா போர்டு தேர்தல்—வடக்கு, தெற்கு இராமநாதபுரம் ஜில்லா போர்டுகள் ஏற்பட்டன.

1938 முதுகுளத்தூர் சப் மாஜிஸ்ரேட் கொலை.

1938 தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாடு இராஜபாளையத்தில் கூடிற்று.

1040 இராமேசுவரம் கோயில் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது.

1942 இலட்சக்கணக்கானவர்கள் பர்மாவிலிருந்து கால் நடையாகத் தாயகம் திரும்பினர்.

1942 ஆகஸ்டில் திருவாடானை, தேவகோட்டை, பூலாங்குறிச்சி, ராஜபளையம் ஆகிய இடங்களில் "வெள்ளையனே வெளியே போ" கிளர்ச்சி.

1944 இளையாங்குடி அருகே விமான விபத்து.

1946 முதுகுளத்தூர் வட்டத்தில் இந்து முஸ்லீம் கலகம்.

1947 அபிராமத்தில் இந்து முஸ்லீம் கலகம்.

1947 காரைக்குடியில் அழகப்பா கல்லூரி தொடக்கம். ராஜா சர் அண்ணமலைச் செட்டியார் மரணம்.

1948 டில்லியிலிருந்து வள்ளல் அழகப்பர் கொண்டு வந்த காந்தியடிகளின் அஸ்தி தேனுற்றில் கரைக்கப்பட்டது.

1949 இராஜபாளையம் பூ. ச. குமாரசாமி ராஜா மாநில முதமைச்சா ஆதல்.

1649 ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட்டு, இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்கள் அரசினரால் எடுத்துக் கொள்ளப் பட்டன.

1952 இராமநாதபுரம் ராஜா, நாகநாத சேதுபதி மாநில அமைச்சர் ஆனுர்.

1952 உணவுப் பஞ்சம்—வறுமை—இலங்கையில் கள்ளப் குடியேற்றம்.

1953 மின்சார ரசாயன ஆராய்ச்சிக்கூடம் காரைக்குடியில் தொடங்கியது.

1953 காரைக்குடி அறந்தாங்கி இரயில் பாதை ஏற்பட்டது.

1954 திரு. காமராஜர் மாநில முதலமைச்சர் ஆனார்.

1954 இராமநாதபுரம்-மண்டபம் பஸ் போக்குவரத்து ஆரம்பம்.

1955 நவ. 30 இராமநாதபுரம் வட்டத்தில் பெரும் புயலால் வெள்ளம் ஏற்பட்டது.

1955 இலங்கை அகதிகள் வருகை.

1956 காரைக்குடியில் அழகப்பர் உடற் பயிற்சிக் கல்லூரி தோற்றம்.

1957 வள்ளல் அழகப்பர் மரணம்.

இலங்கையிலிருந்து மேன்மேலும் இந்தியர் தாயகம் திரும்பிவர மண்டபம் முகாமிலிருந்து உச்சிப்புளி வரை சதுப்புக் கடாகக் கிடந்தது, பனையோலைத் தொழில், சுண்ணாம்புக் காளவாய்கள் உப்பளங்கள் ஏற்பட்டன.

1957 காரைக்குடியில் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த சென்னை சட்டசபைத் தேர்தல்.

1957 முதுகுளத்தூர் வட்டத்தில் மறவர்—ஹரிசனங்கள்-கலகம்.

1958 இலங்கையில் கலகங்கள்—அகதிகள் வருகை.

1969 ஆ. தெற்கூரில் பள்ளிச் சீர்திருத்த மாநாடு—ஜவஹர்லால் நேருவால் தொடங்கி வைக்கப்பட்டது.

1959 இராமநாதபுரத்தில் நகராட்சி மன்றம் ஏற்பட்டது.

1959 விருதுநகரில் தொழிற்பேட்டை தொடக்கம்.

1959 சுவீடன் தலைமையமைச்சர் எர்லாண்டர் திருப்பத்தூர் வருகை.

1962 சிவகங்கை கோட்டம் ஏற்பட்டது.

1964 காமராஜர் அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவரானார்.

1964 புயலால் தனுஷ்கோடி அழிந்தது.

1967 பொதுத் தேர்தல்—சட்டமன்றத் தொகுதி ஒன்றிலேனும் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை—விருதுநகரில் காமராஜர் தோல்வி.

1967 தி. மு. க. அமைச்சரவையில் திரு. மாதவன் அமைச்சர் ஆனார்.

1967 திரு. இராமநாத சேதுபதி பட்டத்திற்கு வந்தார்.

நாடாளுமன்றத் தொகுதிகள்-3

1. இராமநாதபுரம்
2. சிவகங்கை
3. சிவகாசி

தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகள்-17.

1. திருப்பத்தூர்
2. காரைக்குடி
3. திருவாடானை
4. சிவகங்கை
5. மானாமதுரை
6. இளையாங்குடி
7. பரமக்குடி
8. இராமநாதபுரம்

9—10. முதுகுளத்தூர்
11. அருப்புக்கோட்டை
12. சாத்தூர்
13. சிவகாசி
14. ராஜ பாளையம்
15-16. ஸ்ரீவில்லிபுத்தூர்
17. விருதுநகர்

கிழக்கு இராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்

(தேவகோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் கோட்டங்கள்)

வட்டம்		அதைச் சேர்ந்த ஊராட்சி மன்ற ஒன்றியங்கள்
திருப்பத்தூர்	—	கல்லல், சிங்கம்புணரி, திருப்பத்தூர், சாக்கோட்டை.
சிவகங்கை	—	காளையார்கோவில், மானாமதுரை, திருப்பூவணம், சிவகங்கை.
திருவாடானை	—	கண்ணங்குடி, திருவாடானை, ரா. சி. மங்கலம், தேவகோட்டை.
பரமக்குடி	—	இளையாங்குடி, போகலூர் பரமக்குடி.
முதுகுளத்தூர்	—	கமுதி, கடலாடி, முதுகுளத்தூர்.
இராமநாதபுரம்	—	இராமநாதபுரம், திருப்புல்லணை, மண்டபம்.

மேற்கு இராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்
(சிவகாசிக் கோட்டம் மட்டும்)

சாத்தூர்	—	விருதுநகர், சிவகாசி, சாத்தூர், வெம்பக் கோட்டை,
ஸ்ரீவில்லிபுத்தூர்	—	ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், வற்றுயிருப்பு.
அருப்புக்கோட்டை	—	அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி.

அம்பிகைக்குரிய சிறப்புத் தலங்கள்

இராமநாதபுரம், சிவகங்கை		இராஜ ராஜேசுவரி
இருக்கங்குடி, ஏழாயிரம் பண்ணை, சாத்தூர், இராஜபாளையம், செங்குன்றபுரம், வற்றுயிருப்பு, சிவகாசி		மாரியம்மன்
அருப்புக்கோட்டை, விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், தளவாய்புரம், சொக்கநாதபுரம்—கத்தப்பட்டு, கொல்லங்குடி: வேட்டுடையார் – கோவில்		காளியம்மன்
அருப்புக்கோட்டை	—	சௌடாம்பிகை (சாமுண்டேசுவரி)
காரைக்குடி	—	கொப்புடையநாயகி
இளையாற்றக்குடி	—	நித்தியகல்யாணி அம்மன்
நாட்டரசன் கோட்டை	—	கண்ணுடையநாயகி.